சங்க கால அரச வரலாறு



முனைவர் வ. குருநாதன்



தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005.

சங்ககால அரச வரலாறு

முனைவர் வ. குருநாதன்
இணைப் பேராசிரியர்
இலக்கியத்துறை



தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

ISBN: 81-7090-284-3

திருவள்ளுவர் ஆண்டு 2032 மாசி – பிப்ரவரி 2001
தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண்: 224

நூல்	:	சங்ககால அரச வரலாறு
ஆசிரியர்	:	வ. குருநாதன்
மொழி	:	தமிழ்
பொருள்	:	இலக்கியம்
பதிப்பு	:	முதற்பதிப்பு
பக்கம்	:	12+410 = 422
தாள்	:	டி.என்.பி.எல். கிரீம்லூவ்
அளவு	:	1/8 திம்மி
நூற்கட்டு	:	சாதாரணக் கட்டு
விலை	:	உரூ. **210-00**
படிகள்	:	500
அச்சு	:	தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்-1

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 005

முனைவர் கதிர்.மகாதேவன்
துணைவேந்தர்

அணிந்துரை

தமிழக வரலாறு இரண்டாயிரம் ஆண்டுக்காலத் தொன்மை மிக்கது. சீன சுமேரிய எகிப்திய கிரேக்க நாடுகளின் வரலாற்றோடு ஒரு சீராக வைத்து எண்ணத்தக்க வரலாறு தமிழ்நாட்டிற்கு உண்டு. எனினும், தமிழக வரலாற்றைக் கோவையாக வடிக்கும் நிலை இக்காலத்திலேயே எழுந்துள்ளது. கனகசபைப்பிள்ளை, பி.டி.சீனிவாச ஐயங்கார், கிருட்டிணசுவாமி ஐயங்கார், கே.ஏ.நீலகண்ட சாத்திரியார், கே.என்.சிவராசபிள்ளை முதலியோர் தமிழக வரலாற்றுக் கூறுகளை வகையும் தொகையுமாக்கி மொழிந்தோரில் குறிப்பிடத்தக்கவராவர். தமிழக அரச வரலாறு பல சிக்கல்களைக் கொண்டது. அத்தகைய சிக்கல்மிக்க அரச வரலாற்றைத் தெளிவு பயக்கும் வகையில் ஆராய்ந்துள்ளார் தமிழ்ப் பல்கலைக்கழக இலக்கியத்துறையின் இணைப்பேராசிரியர் முனைவர் வ.குருநாதன் அவர்கள்.

இந்நூலகத்துச் சங்க காலத்தே வாழ்ந்த வேந்தர், குறுநில மன்னர், வேளிர், சீறூர்த்தலைவர் ஆகிய ஆள்வோர் குறித்த வரலாற்றுச் செய்திகள் ஆராயப்பெற்றுள்ளன. வேந்தரும் மன்னரும் வேறு வேறு குடியமைதி உடையவர் என்பதை ஆசிரியர் புலப்படுத்தியுள்ளார்.

சீறூர் மன்னன் நெருநை ஞாங்கர்
வேந்துவிடு தொழிலொடு சென்றனன் *(புறம். 319)*

எனச் சீறூர் மன்னனையும் வேந்தனையும் அவர்தம் தகுதி புலப்படத் தமிழ் இலக்கியம் காட்டுகின்றது.

கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை ஒருவனே எனத் துணிவதும், செங்குட்டுவன் ஆட்சியாண்டு கி.பி.130 முதல் கி.பி.185 முடிய எனக் கொள்வதும், நெடுஞ்செழியருள் தலையாலங்கானத்துச் செருவென்றவன் முன்னவன் என முடிப்பதும், சங்ககாலக் கரிகால் வளவன் ஒருவனே என ஆய்ந்து குறிப்பதும், முந்நாட்டு வேளிரையும் தனித்தனி விளக்குவதும் இந்த ஆராய்ச்சியிற் குறிக்கத்தக்க பகுதிகளாகும். குறுநில மன்னர் வரலாற்றையும் சீறூர் மன்னர் வரலாற்றையும் அறியத் தனித்தனியே ஆய்ந்துள்ளமை சிறப்பாகும்.

வரலாறு காலத்தடத்தைச் சுட்டிக்காட்டுவது; கிடைக்கும் தடயங்களைக் கொண்டு நுண்மாண் நுழைபுலத்தால் பற்பல செய்திகளைக் கண்டறியத்தக்கது. சேரவேந்தர் குடிவழியைத் துவக்கும் ஆறுநாட்டார் மலைக் கல்வெட்டும், தஞ்சைப் பெரிய கோயிற் சுவரோவியங்களும், இக்காலத்து அறிஞர் கண்ட புதிய தடயங்கள் ஆகும். இவற்றால் அற்றை வரலாறு தெளிவுபடுகிறது. எதிர்காலத்தில் கிடைக்கத் தக்க சான்றுகளால் சங்க கால அரச வரலாற்றில் மேலும் தெளிவுகள் கிடைக்கக்கூடும். இந்நிலையில் தொண்மம்மிக்க அரசவரலாற்றை இலக்கியச் சான்றுகளைத் துருவி வெளிப்படுத்தியுள்ள நூலாசிரியரின் முயற்சி பாராட்டத்தக்கது

கதிர். மகாதேவன்

தஞ்சாவூர்
21-02-2001

முன்னுரை

தமிழ்ப் பல்கலைக்கழக இலக்கியத் துறையின் குழுத் திட்டப்பணியாய் நடைபெற்ற சங்க இலக்கியப் பொருட்களஞ்சிய உருவாக்கத்தின் முதல் நான்கு தொகுதிகளுக்குத் துணைப் பதிப்பாசிரிய நிலையில் பணிபுரிந்த பின், விரிவுரையாளராய் நியமனம் பெற்று நான் மேற்கொண்ட தனித்திட்ட ஆய்வே சங்ககால அரச வரலாறு என்று இந்நூலாய் வெளிவருகின்றது. 1990ஆம் ஆண்டில் நிறைவு செய்து அளிக்கப்பெற்ற இந்த ஆய்வு நூல் பத்தாண்டுகள் கடந்தும் இன்று வெளிவருவது உவப்பிற்குரியதே.

இந்நூல் வெளிவரும் இந்நல்வேளையில் அன்று என்னை ஆட்கொண்டு இப்பணியில் ஈடுபடுத்திய அந்நாள் துணைவேந்தர் முனைவர் ச.அகத்தியலிங்கம் அவர்களை நன்றிப் பெருக்குடன் நினைவு கூர்கின்றேன். இன்று இந்நூலை அச்சிட்டு வெளியிடுவதற்கு ஆவன செய்து, சிறந்த அணிந்துரையும் வழங்கியுதவிய இந்நாள் துணைவேந்தர் பேராசிரியர் **முனைவர் கதிர். மகாதேவன்** அவர்களுக்கும் நன்றி பாராட்டுகின்றேன்.

இந்நூலின் ஆய்வுத்திட்டத்தை எனக்கு முதலில் வரையறை செய்து வழங்கியதோடு, தொடர்ந்து இதன் செம்மைக்குச் செழுமையூட்டும் கருத்துக்களை வழங்கியுதவிய அந்நாள் இலக்கியத்துறைத் தலைவரும் என் ஆசிரியப் பெருந்தகையுமான பேராசிரியர் **முனைவர் சோ.ந.கந்தசாமி** அவர்களுக்கும் என் நன்றி. சங்க இலக்கியங்களில் தமக்குள்ள ஆழ்ந்த நுட்பத்தோடு இந்த ஆய்விற்கு ஏற்புடைய செய்திகளை அவ்வப்போது எடுத்துரைத்த அன்றைய இலக்கியத்துறைப் பேராசிரியரும் இன்றைய தலைவருமான **முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன்** அவர்களுக்கும் நன்றி.

சங்ககால அரச வரலாற்றுச் செய்திகளை என்னுடன் கலந்துரையாடி இந்நூலின் ஆக்கத்திற்குப் பல்லாற்றானும் துணைபுரிந்த நண்பர், கல்வெட்டியல் துறை இணைப்பேராசிரியர் **முனைவர் கா. இராசன்** அவர்களுக்கும் நன்றி.

இந்நூலை அழகிய முறையில் திருத்தமுற அச்சிட்டு உதவிய பதிப்புத்துறைப் பொறுப்பாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் என் உளங்கனிந்த நன்றி உரியது.

தஞ்சாவூர்-5
22-02-2001

வ. குருநாதன்

பொருளடக்கம்

0. முகவுரை 01–22

0.1. வரலாற்று இலக்கியங்கள்-1; 0.2. சங்ககால அரச வரலாறு-3; 0.3. சங்ககாலம்-4; 0.4. மாமூலனார் காலம் மோரியர் காலமாகாது-6; 0.5. முன்னைய ஆய்வுகள்-10; 0.6. ஆய்வின் நோக்கம்-19; 0.7. ஆய்வுரையின் அமைப்பும் போக்கும்-19; 0.8. காலக்குறிப்பு-20

1. சங்ககாலத் தமிழகமும் தமிழக அரசுகளும் 23–58

1.1. சங்ககாலத் தமிழக எல்லைகள்-23; 1.2. சேரநாட்டின் அகநாடுகளும் தமிழகத்தின் மிகுபரப்பும்-28; 1.3. பாண்டிய நாட்டின் அகநாடுகள்-40; 1.4. சோழநாட்டின் அகநாடுகளும் தமிழகத்தின் வடபரப்பும்-43; 1.5. சங்க காலத் தமிழ்அரசர்-45; 1.6. மூவேந்தர் தொன்மைமுறை-45; 1.7. மூவேந்தர் ஆட்சிமுறை-48; 1.8. வேந்தரும் வேளிரும்-50; 1.9. வேந்தரும் குறுநில மன்னரும்-51; 1.10. வேந்தரும் சீறூர் மன்னரும்-51

2. சேர வேந்தர் வரலாறு 59–142

2.0. சேரர் பெயர்கள்-59; 2.1. சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன்-60; 2.2. சேரமான் கருவூர் ஏறிய ஓள்வாள் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை-61; 2.3. சேரமான் முதியர்ப் பேணிய உதியஞ்சேரல்-62; 2.4. சேரமான் அந்துவஞ்சேரல் இரும்பொறை-67; 2.5. சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை-69; 2.6. சேரமான் பெருஞ்சேரலாதன்-71; 2.7. இமையவரம்பன் நெடுஞ்சேரலாதன்-73; 2.8. சேரமான்

செல்வக்கடுங்கோ வாழியாதன்-80; 2.9. பல்யானைச் செல்கெழுகுட்டுவன்-83; 2.10. மாந்தரம் பொறையன் கடுங்கோ என்னும் கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை-90; 2.11. களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்-98; 2.12. கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன்-103; 2.13. தகடூர் எறிந்த சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை-121; 2.14. பாலைபாடிய பெருங்கடுங்கோ-123; 2.15. ஆடுகோட்பாட்டுச்சேரலாதன்-124; 2.16. இளஞ்சேரல் இரும்பொறை என்னும் சேரமான் குடக்கோச்சேரல் இரும்பொறை-128; 2.17. சேரமான் குட்டுவன் கோதை என்னும் கோக்கோதை மார்பன்-133; 2.18. சேரமான் கணைக்கால் இரும்பொறை-135

3. பாண்டிய வேந்தர் வரலாறு 143–192

3.1. நிலந்தரு திருவின் பாண்டியன்-143; 3.2. பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி-153; 3.3. பாண்டியன் கருங்கை ஒள்வாள் பெரும்பெயர்வழுதி-157; 3.4. முடத் திருமாறன்-158; 3.5. ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்-160; 3.6. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியன்-162; 3.7. பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி-177; 3.8. பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன்-179; 3.9. பழையன்மாறன்-182; 3.10. இளம்பழையன்மாறன்-183; 3.11. பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்-184; 3.12. பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன்வழுதி-185; 3.13. பாண்டியன் அறிவுடைநம்பி-186; 3.14. பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன்-187; 3.15. பாண்டியன் கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி-188; 3.16. பாண்டியன் பன்னாடுதந்த மாறன்வழுதி-189

4. சோழ வேந்தர் வரலாறு 193–252

4.1. தித்தன்-193; 4.2. சோழன் போர்வைக்கோப் பெருநற் கிள்ளி-195, 4.3. சோழன் முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளி-196; 4.4. சோழன் உருவப் பல்தேர்

இளஞ்சேட்சென்னி என்னும் நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி-197; 4.5. சோழன் கரிகால் பெருவளத்தான்-202; 4.6. சோழன் வேற்பல்தடக்கைப் பெருவிறற்கிள்ளி-221; 4.7. சோழன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளி-222; 4.8. சோழன் நலங்கிள்ளி-223; 4.9. காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி-230; 4.10. கோப்பெருஞ்சோழன்-232; 4.11. சோழன் நலங்கிள்ளி தம்பி மாவளத்தான்-236; 4.12. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்-237; 4.13. பெரும்பூட்சென்னி என்னும் சோழன் செங்கணான்-250

5. வேளிர் வரலாறு 253–292

5.0. வேளிர்-253; 5.1. சேரநாட்டு வேளிர்கள்-258; 5.1.1. நெடுவேளாவி-258; 5.1.2. வேளாவிக்கோமான் பதுமன்-259; 5.1.3. வையாவிக்கோப் பெரும்பேகன்-260; 5.1.4. நன்னன் வேண்மான்-261; 5.1.5. வெளியன் வேண்மான் ஆய் எயினன்-263; 5.1.6. வெளிமான்-266; 5.1.7. எருமையூரன்-267; 5.2. பாண்டியநாட்டு வேளிர்கள்-267; 5.2.1. ஆய் அண்டிரன்-268; 5.2.2. பொதியிற்செல்வன் திதியன்-269; 5.2.3. பாரிவேள்-270; 5.2.4. இருங்கோவேள்-275; 5.3. சோழநாட்டு வேளிர்கள்-279; 5.3.1. நெடுங்கை வேண்மான்-280; 5.3.2. நெடுவேளாதன்-281; 5.3.3. செல்லிக்கோமான் ஆதனெழினி-281; 5.3.4. வாட்டாற்று எழினியாதன்-283; 5.3.5. அழுந்தூர்வேள் திதியன்-284; 5.3.6. வேளெவ்வி-286; 5.3.7. வீரைவேண்மான் வெளியன் தித்தன்-289; 5.3.8. நன்னன்சேய் நன்னன்-290; 5.3.9. பொருநன்-291

6. குறுநில மன்னர் வரலாறு 293–369

6.1. சேரநாட்டுக் குறுநில மன்னர்கள்-293; 6.1.1. அறுகை-294; 6.1.2. கடலன்-295; 6.1.3. மூவன்-296; 6.1.4. குமணன்-296; 6.1.5. கழுவுள்-298; 6.1.6. தாமான் தோன்றிக்கோன்-300; 6.1.7. வல்வில் ஓரி-301; 6.1.8. அதியமான் நெடுமானஞ்சி-304; 6.1.9. அதியமான் பொகுட்டெழினி-316; 6.1.10. மலையமான் திருமுடிக்காரி-317; 6.1.11. மலையமான் சோழியவேனாதி

திருக்கண்ணன்-322; 6.1.12. மல்லிகிழான் காரியாதி-325; 6.1.13. ஏறைக்கோன்-326; 6.1.14. பிட்டங் கொற்றன்-326; 6.1.15. பிண்டன்-328; 6.1.16. கொண்கானங்கிழான் நன்னன் உதியன்-329; 6.2. பாண்டிநாட்டுக் குறுநில மன்னர்கள்-332; 6.2.1. நாஞ்சில்பொருநன் வல்வேல் கந்தன்-333; 6.2.2. மோசூர்மன்னன் பழையன்-334; 6.2.3. கண்டீரக்கோப் பெருநள்ளி-336; 6.2.4. வேங்கைமார்பன்-339; 6.2.5. கடியநெடுவேட்டுவன் என்ற பண்ணி-339; 6.2.6. அதிகன் -340; 6.3. சோழநாட்டுக் குறுநில மன்னர்கள்-342; 6.3.1. அழிசி-343; 6.3.2. விச்சிக்கோ-344; 6.3.3. விச்சிக்கோ நன்னன்-346; 6.3.4. அன்னி-347; 6.3.5. பொறையாற்றுகிழான் நற்றேர்ப்பெரியன்-349; 6.3.6. பரதவர் கோமான் மத்தி-350; 6.3.7. கண்ணன்எழினி-352; 6.3.8. அகுதை-352; 6.3.9. அவியன்-353; 6.3.10. கரும்பனூர்கிழான்-354; 6.3.11. ஓய்மான் நல்லியக்கோடன்-355; 6.3.12. ஓய்மான் வில்லியாதன்-358; 6.3.13. தொண்டைமான் இளந்திரையன்-358; 6.3.14. ஆதனுங்கன்-364; 6.3.15. கள்வர்கோமான் புல்லி-365; 6.3.16. கட்டி-367

7. சிறூர் மன்னர் வரலாறு 371-386

7.0. சிறூர் மன்னர்-371; 7.1. அம்பர்கிழான் அருவந்தை-375; 7.2. அருமன்-375; 7.3.அள்ளன்-376; 7.4.ஈர்ந்தூர்கிழான் தோயன்மாறன்--377; 7.5. ஓல்லையூர்கிழான் மகன் பெருஞ்சாத்தன்-378; 7.6. கொடுமுடி-378; 7.7. சிறுகுடிகிழான் பண்ணன்-379; 7.8. தழும்பன்-381; 7.9. நாலைகிழவன் நாகன்-382; 7.10. போர்கிழவோன் பழையன்-382; 7.11. முசுண்டை-383; 7.12. வயவன்-384; 7.13. வல்லங்கிழவோன் நல்லடி-384; 7.14. வல்லார்கிழான் பண்ணன்-385; 7.15. வாணன்-385; 7.16. விரான்-386

8. முடிவுரை 387-393

நூலடைவு 395-402

பெயரடைவு 403-409

குறுக்க விளக்கம்

அகத்திணை.	-	அகத்திணையியல்
அகம்.	-	அகநானூறு
அடியார்.	-	அடியார்க்கு நல்லார்
இராச.	-	இராசபாரம்பரியம்
இராசராச.	-	இராசராச சோழன் உலா
இளம்.	-	இளம்பூரணர்
ஐங்.	-	ஐங்குறுநூறு
கலி.	-	கலித்தொகை
கலிங்க.	-	கலிங்கத்துப்பரணி
களவழி.	-	களவழி நாற்பது
குலோத்துங்க.	-	குலோத்துங்க சோழன் உலா
குறள்.	-	திருக்குறள்
குறு.	-	குறுந்தொகை
சிலம்பு.	-	சிலப்பதிகாரம்
சிறு., சிறுபாண்.	-	சிறுபாணாற்றுப்படை
தகடூர்.	-	தகடூர் யாத்திரை
திருவாலவாய்.	-	திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்
தொல்.	-	தொல்காப்பியம்
நச்சி.	-	நச்சினார்க்கினியர்
நற்.	-	நற்றிணை
நூ.	-	நூற்பா
ப.	-	பக்கம்
பக்.	-	பக்கங்கள்
பட்.	-	பட்டினப்பாலை
பத்து.	-	பத்துப்பாட்டு
பதி., பதிற்று.	-	பதிற்றுப்பத்து

பதிய., பதிபதி.	-	பதிற்றுப்பத்துப் பதிகம்
பரஞ்சோதி.	-	பரஞ்சோதி முனிவர்: மதுரையறுபத்து நான்கு திருவிளையாடற்புராணம்
பழமொழி.	-	பழமொழி நானூறு
பா.	-	பாடல்
புறம்.	-	புறநானூறு
பெரும்பாண்.	-	பெரும்பாணாற்றுப்படை
பேரா.	-	பேராசிரியர்
பொரு.	-	பொருநராற்றுப்படை
பொருள்.	-	பொருளதிகாரம்
மணி.	-	மணிமேகலை
மது.	-	மதுரைக்காஞ்சி
மலை.	-	மலைபடுகடாம்
விக்கிரம.	-	விக்கிரமசோழன் உலா.

P.	-	Page
PP.	-	Pages

0. முகவுரை

01. வரலாற்று இலக்கியங்கள்

சங்க இலக்கியங்களாகிய பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் அகமும் புறமுமாகிய இருபொருட்பாகுபாட்டிலேயே இயன்றுள்ளன. அகமாவது ஆடவர் பெண்டிர் தனியொழுக்கமாதலால் அதிலே வரலாற்று நோக்கிற்கு நேரிய முறையில் வழியில்லை. புறமென்பது பொது ஒழுகலாறாதலின் மன்பதையின் வரலாறு அதன்கண் மல்கிவரக் காணலாம்.

அம்முறையில் பத்துப்பாட்டிலே பொருநராற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம் ஆகியனவும் எட்டுத்தொகையில் புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகியனவும் நேரிய வரலாற்று இலக்கியங்களாய் வருகின்றன.

மற்று, அகவிலக்கியங்கள் தாம் நுதலிய பொருளாக வரலாற்றுக் கூறுகளைக் கொண்டிருக்கவில்லையாயினும், புறவிலக்கியங்களையும் மீறிய நிலையில் வரலாற்றுக் குறிப்புக்களைப் பிறிதுமொழிதலாக அவை பேசக் காண்கிறோம்.

தலைவர், தலைவியரின் அகவொழுக்கங்களில் எழுகின்ற அலர்மொழியின் ஆரவாரத்தைக் காட்டுதற்கு அவ்வக் காலங்களில் அரசர்களிடையே நிகழ்ந்த போர் ஆரவாரங்களை எடுத்து மொழிகின்ற முறையில் பற்பல போர் நிகழ்ச்சிகள் விளக்கம் பெறுகின்றன.

அலரே, கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழியன்
ஆலங் கானத்து அகன்றலை சிவப்பச்
சேரல் செம்பியன் சினங்கெழு திதியன்
போர்வல் யானைப் பொலம்பூண் எழினி
நாரரி நறவின் எருமை யூரன்
தேங்கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின்
இருங்கோ வேண்மான் இயல்தேர்ப் பொருநனென்று
எழுவர் நல்வல மடங்க ஒருபகல்
முரசொடு வெண்குடை அகப்படுத்து உரைசெலக்
கொன்றுகளம் வேட்ட ஞான்றை
வென்றிகொள் வீரர் ஆர்ப்பினும் பெரிதே (அகம்.36)

எனவரும் அகப்பாடலடிகள் புறப்பாடல்களையும் விஞ்சிய நிலையில் ஆலங்கானத்துப் போர் பற்றிய விளக்கத்தை அளிக்கின்றது. இதுபோல் இன்னும் பலவுள.

தலைவியைப் பிரிந்து தலைவன் சென்ற நாட்டின் தொலைதூரத்தைக் குறிக்கின்ற முறையில் பல நாடுகளும் மலைகளும் காடுகளும் ஆறுகளும் அவ்வவற்றினையுடைய அரசர்களோடே எடுத்துமொழியப்படுகின்றன.

மாஅல் யானை மறப்போர்ப் புல்லி
காம்புடை நெடுவரை வேங்கடத்து உம்பர்
அறையிறந்து அகன்றன ராயினும் (அகம்.209)

நேரா வன்தோள் வடுகர் பெருமகன்
பேரிசை எருமை நன்னாட்டு உள்ளதை
அயிரியாறு இறந்தன ராயினும் (அகம்.253)

கான மஞ்ஞைக கமஞ்சூல் மாப்பெடை
அயிரியாற்று அடைகரை வயிரின் நரலும்
காடிறந்து அகன்றோர் (அகம்.177)

குல்லைக் கண்ணி வடுகர் முனையது
பல்வேற் கட்டி நன்னாட்டு உம்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும் (குறு.11)

என்ற பாடலடிகள் புல்லியென்பானுக்குரியதாய் வேங்கடமலையையும் எருமையென்பானுக்குரியதாய் அயிரியாற்றையும் அதனையொட்டிய காட்டையும் பல்வேற் கட்டியின் நன்னாட்டையும் எடுத்துக் காட்டுகின்றன.

தலைவியின் அழகுநலத்திற்கும் இன்பச் சிறப்பிற்கும் உவமை கூறுகின்ற முறையில் அரசர் பலருடைய நாடும் நகரும் எடுத்துமொழியப்படுதலும் இங்கே காணப்படும்.

நுண்பூண் எருமை குடநாட் டன்னவென்
ஆய்நலம் (அகம்.115)

நிரைய ஒள்வாள் இளையர் பெருமகன்
அழிசி ஆர்க்காடு அன்னவிவள்
பழிதீர் மாணலம் (குறு.258)

என்பன இம்முறைக்கு எடுத்துக்காட்டுக்களாம்.

ஈரெழு வேளிர் இயைந்தொருங்கு எறிந்த
கழுவுள் காமூர் போலக்
கலங்கின்று மாதவர்த் தெளிந்தவென் னெஞ்சே
(அகம்.135)

மண்ணிய சென்ற ஒண்ணுதல் அரிவை
புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு
ஒன்பதிற் றொன்பது களிற்றோடு அவள்நிறை
பொன்செய் பாவை கொடுப்பவும் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரையத்துச் செலீஇயரோ அன்னை
(குறு.292)

என்பனபோல் இன்னும் பலப்பல செய்திகள் இயைபுறக் கூறப்படுவனவற்றையும் குறித்து நோக்கலாம்.

ஆக, சங்க இலக்கியங்கள் முழுமையும் பொதுப்படவே வரலாற்று இலக்கியங்களாக வளர்ந்துள்ளன.

0.2 சங்ககால அரச வரலாறு

அகப்பொருளல்லாத அனைத்தையும் பொதுவுறத் குறிக்கும் புறப்பொருளில் அரசவரலாறும் அடங்கும். சங்க இலக்கியங்கள் சங்ககாலத் தமிழக அரசர்களின் வரலாற்றுச் செய்திகள் பலவற்றையும் பரவலாகவே பாடியுள்ளன. அவற்றை மூலச்சான்றுகளாகக் கொண்டு சங்ககால அரசவரலாறு அமைகின்றது.

முடிகெழுவேந்தர், வேளிர், குறுநில மன்னர், சீறூர் மன்னர் ஆகிய பலநிலையுற்றோர்க்கும் பொதுவாய் வருவதோடு அவரையும் அவருடைய நாட்டையும் ஆட்சியையும் குறிப்பதாக அரசென்ற ஒருபெயர் அறியப்படுகின்றது. ஆகவே, , தமிழக நாடுகளையும் அவற்றையாண்ட அரசர்களையும் அவர்தம் ஆட்சிகளையும் பற்றிய இவ்வரலாற்றாய்விற்கு அரச வரலாறென்ற பெயரே அமைவுடையதாம். அரசு என்ற மரம் அரசமரம் ஆனாற்போல் அரசு பற்றிய வரலாறும் அரசவரலாறு ஆயிற்று.

0.3. சங்ககாலம்

இனி இந்த அரச வரலாற்றின் காலமாகிய சங்க காலத்தை வரையறுத்துக்கொள்வது நலம்.

தமிழில் இன்றுள்ளவற்றுள் மிகப் பழமை வாய்ந்த சங்க இலக்கியங்களின் காலமே இந்த அரச வரலாற்றின் காலமாகும்.

பதிற்றுப்பத்தினுள் பாடப்பெறுகின்ற கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவனே சிலப்பதிகார வஞ்சிக்காண்டத் தில் வருகின்றான், அவன் கண்ணகி தேவிக்கு இமையத்தி லிருந்து கல்லெடுத்து வந்து கடவுள் மங்கலம் செய்தபோது கடல் சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும் வந்திருந்து வரம்பெற்றுச் சென்றானாகச் சிலப்பதிகாரம் செப்புகின்றது. (சிலம்பு 30: 160.164). இலங்கை அரச வரலாற்றில் இந்தக் கயவாகு முதலாமவனென்றும் இவனது ஆட்சிக்காலம் கி.பி.173க்கும் 195க்கும் இடைப்பட்டதென்றும் வரையறுக்கின்ற வரலாற்றுப் பேராசிரியர் சத்தியநாதையர், சங்ககாலச் சேரவேந்தரின் காலமுறையில் செங்குட்டுவனை நடுவுற்றவனென்று நாட்டி அம்முறையில் கி.பி.முதல் மூன்று நூற்றாண்டுகளையே தமிழக வரலாற்றில் சங்க காலமெனக் குறிக்கலாம் என்று முடிவு கூறுவார்.[1]

தமிழ் இலக்கியத்தின் பொற்காலம் கிறித்துவக் கணக்கில் முதல் மூன்று நூற்றாண்டுகளில் அமைதல் வேண்டுமென்று மேனாட்டு அறிஞர் சுமித்தும்,[2] முதல் நான்கு நூற்றாண்டுகளே சங்ககாலமாக வரலாற்றறிஞர் நீலகண்ட சாத்திரியாரும்[3] கி.மு. ஐந்து முதல் கி.பி. ஐந்து முடிய இடைப்பட்ட பத்து நூற்றாண்டுகளே சங்க காலமென வி.ஆர்.

இராமச்சந்திர தீட்சிதரும்[4] அதனையே கே.ஆர். சீனிவாச ஐயங்காரும்[5] கூறுவர். இவரெல்லோருடைய கூற்றுக்களையும் எடுத்துமொழிந்து ஆய்ந்து முடிக்கும் வரலாற்றுப் பேராசிரியர் ந. சுப்பிரமணியனும் செங்குட்டுவன் கயவாகு காலத்தை மையப்படுத்தி கி.பி., முதல் மூன்று நூற்றாண்டுகளையே சங்க காலமெனச் சாற்றுகின்றார்.[6]

இவ்வாறே வரலாற்றிஞர் பலருடைய கூற்றுக்களையும் பிற சான்றுகளையும் கொண்டு கணக்கிட்டுச் சங்ககாலம் என்ற ஆங்கில நூலை எழுதிய வரலாற்றுப் பேராசிரியர் மங்களமுருகேசன், கி.மு.500 க்கும் கி.பி.250க்கும் இடைப்பட்ட காலமாக இதனைக் கூறுவர்.[7]

சங்கத்தொகை நூல்களுள் பரிபாடலை மட்டும் எடுத்துக்கொண்டு அதன் பல்வேறு பொருளமைதிகளையும் நுணுகி ஆராய்ந்த பேராசிரியர் சோ.ந. கந்தசாமி, முடிபாக அத்தொகைநூற் பாடல்கள் கி.மு.100 முதல் கி.பி.200 முடியவுள்ள மூன்று நூற்றாண்டுகளுக்குள் தோன்றியனவென்று துணிந்து கூறுவார்.[8] ஆதலால், அப்பரிபாடல் உள்ளிட்ட சங்கநூற் பாடல்களின் காலமும் பொதுவாக அம்மூன்று நூற்றாண்டுகளை ஒட்டியதாகலாம்.

சங்க காலமென்பது கி.மு. 4ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.2 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி முடியவுள்ள 600 ஆண்டுகளின் மேற்பட்ட இடைவெளியைக் கொண்டதெனினும், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களிலுள்ள பெரும்பாலான பாடல்கள் கி.மு.முதல் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து கி.பி.மூன்றாம் நூற்றாண்டின் இடைப்பகுதி முடியவுள்ள 300 ஆண்டுக்காலத்தில் தோன்றியவையே என்று தமிழ்நாட்டு வரலாறு என்ற நூலின் ஆசிரியரான வரலாற்றுக் குழுவினரும் வரைந்துள்ளனர்.[9]

இனி, சங்க இலக்கியங்களில் பாடப்பெற்ற அரசருள் செங்குட்டுவன் காலம் மட்டும் தெளிவாய்த் தெரிதலால் அவனையும் அவனோடே தொடர்புடைய அரசரையும் புலவரையும் இடைநிறுத்தி முன்னும் பின்னும் நோக்க ஏனையோர் காலம் கி.மு.50 முதல் கி.பி.250 முடியவுள்ள இடைவெளிக்குட்பட்டதேயென்று 'சங்க கால அரச வரலாறு' எனவரும் இந்த ஆய்வுரையால் அறியப்படும். ஆதலால்,

அவர்களைப் பாடிய சங்க இலக்கியங்களின் காலமும் அதுவேயென்று அறுதியிடலாம்.

ஆயினும், கடைச்சங்க காலத்தவரல்லாத பாண்டியன் நெடியோனென்ற நிலந்தரு திருவிற் பாண்டியனும் சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனும் போன்ற ஒருசிலர் மட்டும் இம்முந்நூறாண்டுக் கால அளவிற்கு மிகமுற்பட்டவர்களாய்த் தெரிகின்றனர். தெரியவே, கி.பி.முதல் நூற்றாண்டினும் முந்தைய தலைச்சங்க இடைச்சங்ககாலத் தமிழக அரசருள் சிலருடைய வரலாற்றுக் குறிப்புக்களும் இன்றுள்ள கடைச்சங்க காலத்து இலக்கியங்களோடே விரவி விளங்குகின்றன என்பது உணரப்படும்.

0.4 மாமூலனார் காலம் மோரியர் காலமாகாது

இனி, கி.பி. முதல் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்து, அக்காலத்து அரசர் பலரை நேரிற்பாடிய சங்கப்புலவர் மாமூலனார் பாடல்களில் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிற்கும் இரண்டாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட நந்தர், மோரியர் குறிப்புக்கள் காணப்படுபவை கொண்டு அப்புலவரைக் கி.மு. மூன்று அல்லது இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராதல் வேண்டுமென்றும் அவருடைய பாடல்கள் மட்டுமன்றிச் சங்கப் பாடலகளில் பெருமளவும் கி.மு. இரண்டு அல்லது மூன்றாம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்க வேண்டுமென்றும் சங்ககால மன்னர் காலமுறை வரலாற்றை அண்மையில் எழுதிய வழக்கறிஞர் புருடோத்தமன் வரைவார்.[10] நந்தருடைய செல்வத்தைப் பற்றி மாமூலனார் குறித்துள்ளதை முன்னமே வரலாற்றுப் பேராசிரியர் சத்தியநாதையரும் காட்டியுள்ளார்.[11] ஆயினும், அவர் மாமூலனாரை நந்தர் காலத்தவராகக் கருதவில்லை; சங்க காலத்தவராகவே கருதியுள்ளார்.[12] சங்க காலமென்பதும், அவர் கருத்துப்படி கி.பி. முதல் மூன்று நூற்றாண்டுகளே.[13] அது மேலேயும் காணப்பட்டது.

இன்னும் மாமூலனார் பாடல்களில் நந்தர் மோரியர் குறிப்புக்கள் வந்துள்ளவற்றைக் கருதி அவர் காலத்தைக் கி.மு. இரண்டு மூன்றாம் நூற்றாண்டுகளுக்குக் கொண்டு செல்வதில் தடைகள் பலவுமுள.

1. நாடுகண்ணகற்றியவனும் முதியரைப் பேணியவனுமான உதியஞ்சேரலையும் (அகம்.65, 233) அவன் மகன் இமையவரம்பன் நெடுஞ்சேரலாதனையும் (அகம்.127,347) அவனுக்குத் தமையனெனக் கருதத்தக்க பெருஞ்சேரலாதனையும் (அகம்.55) பாடியவர் மாமூலனார். இமையவரம்பன் நெடுஞ்சேரலாதனே குடக்கோ நெடுஞ்சேரலாதன் என்பதும் அவனே கடல்பிறக்கோட்டிய சேரன் செங்குட்டுவனுக்குத் தந்தையென்பதும் தெளிந்த உண்மைகளாம். ஆகவே, கி.பி. முதலிரு நூற்றாண்டினரான இச்சேரமான்களைப் பாடிய மாமூலனார் கிறித்துவுக்கு முற்பட்ட காலத்தவராகார்.

2. மோரியர் தென்திசைப் படையெடுப்பிற்கு மலைப் பாறைகளையுடைத்துத் தேர்வழியமைத்த செய்தியை மாமூலனார் குறிப்பிட்டுள்ளார் (அகம்.251,281). அவரைப்போலவே, அச்செய்தியைக் குறிப்பிடுகின்ற மற்றொருவர் உமட்டூர் கிழார் மகனார் பரங்கொற்றனார் (அகம்.69). அவர் பாடிய அவ்வொரே பாடலில் ஆய் அண்டிரனையும் குறித்துள்ளார். ஆய் அண்டிரன் உறையூர் ஏணிச்சேரி முடிமோசியார் (புறம்.127.135, 241, 374, 375), காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் (நற்.237), பரணர் (அகம். 152, 198) ஆகியோராலும் பாடப்பெற்றவன். அவருள் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் சேரமான் அந்துவஞ்சேரல் இரும்பொறையையும் சோழன் முடித்தலைக்கோப் பெருநற் கிள்ளியையும் (புறம்.13) பாடியவர்; காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறனையும் (புறம்.57) சோழன் குராப்பள்ளித்துஞ்சிய பெருந்திருமாவளவனை (கரிகால் வளவனை)யும், பாண்டியன் வெள்ளியம்பலத்துப் பெருவழுதியையும் (புறம்.58) பாடியுள்ளவர்; பரணர் இமையவரம்பனென்ற குடக்கோ நெடுஞ்சேரலாதனையும் (புறம்.63) அவன் மகனான கடல்பிறக்கோட்டிய சேரன் செங்குட்டுவனையும் (பதிற்று 41-50; புறம்,369), சோழன் உருவப்பல்தேர் இளஞ்சேட் சென்னியையும் (புறம்.4) அவன் மகன் கரிகாற்பெருவளத்தானையும் (அகம்.125, 246, 376) சோழன் வேற்பல் தடக்கைப் பெருநற்கிள்ளியையும் (புறம்.63) பிறரையும் பாடியுள்ளார். இவரெல்லோரும் கி.பி. முதலிரு நூற்றாண்டினரேயென்பது அவரவர் வரலாறுகளால் அறியவருகின்றது. ஆகையால், மோரியர் வரவைக்குறித்த பரங்கொற்றனார் அம்மோரியர் தென்திசை வந்த அதே காலத்தவராகாமை அறியப்படும். படவே, அவரையொத்து

மோரியர் வருகையை மொழிந்த மாமூலனாரும் முந்தைய காலத்தவராகத்தான் இருக்கவேண்டுமென்ற எண்ணத்தின் மீண்டாமை விளங்கும்.

3. மாமூலனாரால் மட்டுமே குறிக்கப்பெறுகின்ற நந்தர் செய்தியும் அவரோடு பரங்கொற்றனாராலும் பாடப்பெறுகின்ற மோரியர் செய்தியும் தாம் நிகழ்ந்த காலங்களிலேயே பாடப்பட்டவை என்பதற்குமில்லை.

நாம்படர் கூரும் அருந்துயர் கேட்பின்
நந்தன் வெறுக்கை எய்தினும் மற்றவண்
தங்கலர் வாழி தோழி (அகம்.251)

பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதற் கரந்த நிதியங் கொல்லோ
செந்நுதல் யானை வேங்கடந் தழீஇ
வெம்முனை அருஞ்சுரம் இறந்தோர்
நம்மினும் வலிதாத் தாகிய பொருளே (அகம்.265)

என்பனவே நந்தர் செய்தி குறித்தனவாம். தலைவியைப் பிரிந்து பொருள்தேடச சென்ற தலைவன் அவளது பிரிவுத் துயரைக் கேட்பானாயின், அதன்பின் தான் தேடும் பொருள் நந்தனுடைய செல்வத்தின் அளவு பெரிதாயினும் அதனை விரும்புதல் விட்டு அங்கே தங்காது மீள்வானென்பதே தோழி கூற்றில் அமைந்த முதற்பாடலடிகளின் கருத்தாகும். வேங்கடமலையையொட்டிச் சுரநெறியிற் கடந்து சென்ற நம் தலைவர் நம்மினும் பெரிதாக மதித்துத் தேடும் பொருள், நந்தர் பாடலி நகரில் குழுமிக கங்கையாற்றின் கீழே புதைத்து ஒளித்த நிதியம் போன்ற பெரும் பொருளோ என்பது பிரிவிடையாற்றாத தலைவியின் கூற்றில் அமைந்த இரண்டாவது பாடலின் கருத்தாகும். கி.மு. நான்காம் நூற்றாண்டின் பிற்பகுதியில், அஃதாவது கி.மு.325 அளவில் மகதத்தையாண்ட கடைசி நந்தனான தனநந்தன், மக்களிடமிருந்து மிகையாகப் பெற்ற வரிப் பொருட்குவையினை வெளிநாட்டாரின் (அலெக்சாந்தரின்) படையெடுப்பிற்கு அஞ்சிக் கங்கைப் படுகையில் அமைந்த கற்பாறையில் குழியெடுத்துப் புதைத்து வைத்த வரலாற்றுச் செயதியே இங்குக குறிக்கப்படுவதாம்.[14] இவ்வாறு தனநந்தன் செலவத்தைப புதைத்தது அக்காலத்து வெளிப்படையாக

நாடறிய நடைபெற்றிருத்தலும் இயலாது. பொருளைப் புதையலிடுவோர் அதனை மறைவாகவே புதைப்பர். புதைய லிட்ட நந்தனாட்சியும் அடுத்த ஓரிரு ஆண்டுகளிலேயே மோரியரால் கைப்பற்றப்பட்டது.[15] கைப்பற்றிய மோரியரும் உடனே அறிந்து அப்புதையலைக் கண்டெடுத்தார்களா அல்லது காலப்போக்கிலேயே அது கண்டெடுக்கப்பட்டு நந்தன் இட்டதாய் அறியப்பட்டதா என்பதும் தெரியவில்லை. உடனே கண்டெடுக்கப்பட்டு அச்செய்தி நாடு முழுதும் பரவியிருப்பினும் கி.மு. நான்காம் நூற்றாண்டின் இறுதியில் நிகழ்ந்த அவ்வரலாறு முந்நூற்றைம்பதாண்டு இடைவெளியில் கி.பி. முதல் நூற்றாண்டிலிருந்த மாமூலனாரால் பாடப்படக் கூடாததும் அன்று.

அடுத்து, மோரியர் செய்தியாவது: தமிழகத்திற்கும் வடக்கேயிருந்த கோசர் தமிழக நாடுகளுள் சிலவற்றை வென்று வந்தபோது அவர்க்குப் பணியாத மோகூரைப் பணிவிக்கும் பொருட்டுப் பகைமேற்கொண்டு வந்த புதியோரான வடநாட்டு மோரியர் தம் தேராழி தடையின்றி உருளும்படி மலைப்பாறைகளை உடைத்து வழியமைத்து வந்தனர் என்பதாம்.

துனைகால் அன்ன புனைதேர்க் கோசர்
தொன்மூ தாலத்து அரும்பனைப் பொதியில்
இன்னிசை முரசம் கடிப்பிகுத்து இரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்
பணியா மையின் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி உருளிய குறைத்த
இலங்குவெள் அருவிய அறைவாய் உம்பர்...
நிரம்பா நீளிடைப் போகி
அரம்போழ் அவ்வளை நிலைநெகிழ்த் தோரே
(அகம்.251)

என்று அகத்திணைத் தலைவன் பொருள்தேடச் சென்ற வழியைக் குறித்துத் தோழி கூறுகின்ற முறையில் இம்மலைப் பாதை வரலாற்றைப் பாடுவார் மாமூலனார்.

தமிழ்நாட்டிற்கும் வடநாட்டிற்கும் இடையே நிகழ்ந்த படையெடுப்புக்களில் இம்மோரியர் படையெடுப்பே முதலாவதாகலின், தமிழகத்தின் வடவெல்லையான

வேங்கடமலைத் தொடரினூடே பாறைகளையுடைத்து வழியமைக்கும் பணி அவர்க்கே வாய்த்தது. அம்முறையில் அவா அமைத்த மலைப்பாதையே தமிழகத்து வடக்கு வாயிலும் ஆனது. ஆகவே, தமிழகத்திலிருந்து வடநாடுகட்குச் செல்வோரும் அவ்வழியே சென்றனர்.

முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்றிசை மாதிரம் முன்னிய வரவிற்கு
விண்ணுற ஓங்கிய பனியிருங் குன்றத்து
ஒண்கதிர்த் திகிரி உருளிய குறைத்த
அறையிறந்து அவரோ சென்றனர் (அகம்.281)

எனவரும் மாமூலனாரின மற்றோர் அகப்படலிலும் தலைவன் இவ்வழியே ஏகினன் என்று இயம்பப் பெறுகின்றான்.

விண்பொரு நெடுவரை இயல்தேர் மோரியர்
பொன்புனை திகிரி திரிதரக் குறைத்த
அறையிறந்து அகன்றன ராயினும் எனையதூஉம்
நீடலர் வாழி தோழி (அகம்.69)

என்ற பரங்கொற்றனார் படிலிலும் இம்முறையிலேயே இது பாடப்பெறுகின்றது.

விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர்
திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த
உலக இடைகழி அறை (புறம்.175)

எனக் கள்ளில் ஆத்திரையனார் இவ்வழியை, உலக இடைகழி (வாயில்) என்றே குறிப்பது காணலாம். இவ்வாற்றால் இவ்வழியைக் குறிப்பிடுவோர் எவரும் மோரியர் வரவை மொழிந்து குறிப்பிடுவதே முறையாகக் காண்கிறோம். இவவாறு மோரியரை மொழிந்து குறிப்பதனால் மொழிவோரையெல்லாம் மோரியர் காலத்தவராகக் கொள்ளுதல் கூடாது; கொள்ளினும் பொருந்தாது.

எனவே, மாமூலனாரையும் அவர் காலத்து அரசர்களையும் கி.பி. முதல் நூற்றாண்டிற்கு முன் கொண்டு மொழியக கூடாமை விளங்கும்.

0.5 முன்னைய ஆய்வுகள்

இனிச், 'சங்ககால அரச வரலாறு' என்னும் இவவாயவினைத் தொடங்குமுன் இதற்குத் தொடர்புடைய

பொருளில் முன் வந்த ஆய்வுகள் சிலவற்றைக் குறித்து அறிந்து செல்வது அமைவாகும்.

1. 'ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழர்' (The Tamils Eighteen hundred years ago) என்ற தலைப்பில் அறிஞர் வெ. கனகசபையார் ஆங்கிலத்தில் எழுதிய நூலே இப்பொருள் தொடர்பான முதல் ஆய்வு நூலாகும். முன்னுரை முடிவுரைகளோடு சேர்ந்து பதினாறு இயல்களில் இயன்ற அந்நூலில் சோழர், பாண்டியர், சேரர், சிற்றரசர் என்னும் நான்கு தலைப்புக்களின்கீழ் வரும் இயல்கள் நான்கே இப்பொருள் பற்றிப் பேசுகின்றன. ஆயினும் சங்ககால அரசர் அனைவருடைய வரலாற்றுக் குறிப்புக்களையும் அவ்வியல்கள் பேசவில்லை. சோழ வேந்தருள் உருவப்பல்தேர் இளஞ்சேட்சென்னி, கரிகாலன், சேட்சென்னி நலங்கிள்ளி, குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆகிய ஐவர் வரலாறுகளே இடம்பெற அவற்றுள்ளும் கரிகாலன் வரலாறே பெருமளவு பேசப்படுகின்றது. அவ்வாறே பாண்டியர், சேரர், சிற்றரசர் வரலாறுகளுமாம். ஆயின், வரலாற்று நிலையில் அந்நூலாசிரியர் சங்ககாலக் கரிகாலனை ஒருவனாகவே கொண்டது[16] ஒவ்வும்; மற்று, நெடுஞ்செழியனின் இருவராக எழுதுதல்[17] இசையாது. சங்ககால வேந்தர்களை அவர் கி.பி. முதலிரு நூற்றாண்டுகளில் நிறுத்துவது[18] ஓரளவு ஒத்ததே.

2. அடுத்து மு. இராகவையங்கார் எழுதிய, 'வேளிர் வரலாறு' தொடக்கத்தே வேளிரனைவரின் பொது வரலாற்றைக் கூறித் தொடர்ந்து, ஆய் அண்டிரன் முதலிய சங்ககால வேண்மாள்களின் சிறப்பு வரலாற்றைச் செறிவுறச் செப்புகின்றது. அவற்றுள், வேளிர் அனைவரும் வடநாட்டுத் துவாரகையிலிருந்து அகத்திய முனிவரோடே வந்தேறிய குடியினரெல்பதும் அவரெல்லோரும் கண்ணன் குலத்தவரான யாதவரென்பதும் போன்ற பொது வரலாறு[19] தமிழக வேளிரெல்லோர்க்கும் தகையப் பொருந்துவதன்று.

3. மூன்றாவதாக, மு. இராகவையங்காரே எழுதிய, 'சேரன் செங்குட்டுவன்' என்ற நூல் அச்சேரமான் தொடர்பான வரலாறுகளை மட்டும் ஆழ்ந்தும் அகன்றும் ஆய்ந்து செல்கின்றது.

4. பின்னர்ப் பி.தி. சீனிவாச ஐயங்கார் 1928-29-ஆம் ஆண்டுகளில் எழுதிய, 'தமிழர் வரலாறு' (History of the Tamils) என்ற ஆங்கில நூலில் மிகப்பெரிய முயற்சியின் பயனாய்த் தொல்பழங்காலம் தொட்டுக் கி.பி. 600 வரையிலான தமிழக வரலாற்றையும் தமிழர் வரலாற்றையும் காட்ட முயன்றுள்ளார். ஆயினும், தமிழ்ப் பண்பாட்டின் ஒவ்வொரு கூறும் ஆரியப் பண்பாட்டின் அடியாக வந்ததே எனக் காட்டுவதில் அவர் கொண்ட அக்கறை[20] உண்மை வரலாற்றின ஒளியை மழுக்கிவிடுகின்றது. அகநானூற்றையும் புறநானூற்றையும் கூட அவர் வரலாற்று நோக்கிலன்றி ஆரியக் கருத்துகளுக்காகவே ஆய்ந்துள்ளதை[21] அறியுங்கால் வியப்பே விஞ்சுகின்றது. மூவேந்தருள் கரிகாலன்,[22] முதுகுடுமிப் பெருவழுதி,[23] பெருஞ்சேரலாதன்[24] போன்று தம்மால குறிப்பிடத்தக்க சிலருடைய வரலாறுகளை மட்டும் வரைந்து மொழிகின்ற அவர் அவற்றிலும் தம்முடைய எதிரிடைக் கருத்துக்களையே இட்டு நிரப்பியுள்ளார். கரிகாலன ஒருவனே யென்ற அளவில் உண்மையோடு ஒட்டிவந்த அவர், அவன் ஆண்டிருந்த காலத்தைக் கணிக்கும்போது கி.பி.4-5 ஆம் நூறறாண்டாக மிகப்பின்னே கொண்டு வருவதும்[25] போரிலே புறப்புண் பெற்ற வேந்தன் போர்க்களதில் தன்வாளால் தானே கழுத்தையரிந்து தற்கொலை செய்து மாள்வதே, 'வாள் வடக்கிருத்தல்' என்னும் குறியீடடினால வழங்கப்பெற்றதாகச் சேரமான் பெருஞ்சேரலாதன் வடக்கிருந்ததைக் குறித்துப் பேசுவதும்[26] அவருடைய அரும்பெரும் முரண்பாடுகளாய அமையக் காண்கிறோம். 'பி. தி. சீனிவாக ஐயங்கார் தமிழர் வரலாறறில மிக விரிவான முயற்சியை மேற்கொண்டார்; ஆயினும், அவா மிகவும் வள்ளற பண்போடு ஒருதலையான கூற்றுக்களை வாரி வழங்குவோராய், வரலாற்றுச் சான்றுகள் இல்லாதபோது கற்பனை விளக்கங்களையும் தர முற்பட்டார்' எனறு அவரது நூலைக்குறித்துக் கூறுவார் வரலாற்றப பேராசிரியா ந சுப்பிரமணியன்.[27]

5. அடுத்து, அறிஞர் கே. என். சிவராசபபிள்ளை எழுதிய, 'பண்டைத் தமிழர் காலமுறை' (The Chronology of the Early Tamils) என்ற ஆங்கில நூல், சங்ககால அரசர்களைப் பத்துத தலைமுறையினராக நிறத்தி வரலாறு கூற முனைந்தது. அஃது அழகிய முயற்சியே யாயினும் ஒரு சில ஒழியா பெருமபாலும் அவா அமைத்த தலைமுறையமைப்பும் கூறிய வரலாறும தக்க ஆதாரங்களைக கொண்டிருககவிலலை

சேரவேந்தருள் செல்வக் கடுங்கோ வாழியாதனையே மாந்தரம் பொறையன் கடுங்கோ வென்றும்[28] பாண்டிய வேந்தருள் பசும்பூட் பாண்டியனையே நிலந்தரு திருவிற் பாண்டியன், பன்னாடு தந்த பாண்டியன், வடிம்பலம்ப நின்ற பாண்டியன் எனவும்[29] பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியையே வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியென்றும்[30] இவ்வாறெல்லாம் ஒருங்கிணைத்துக் காண்பது ஒட்டுமொத்தத்தில் ஆசிரியரின் தலைதடுமாற்றத்தையே உணர்த்துகின்றது. சங்க இலக்கியங்களில் நெடுஞ்செழியனென்ற பெயரோடு தெளிவுறத் தெரியவருகின்ற பாண்டிய வேந்தர்கள் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனும் என்ற இருவரேயாக, இவ்வறிஞர் அவ்விருவருள் பின்னோனை எண்ணாது விட்டுமே, நெடுஞ்செழியர் மூவரென்று மொழிவதும்[31] (அட்டவணை-2) முரணுறு முடிபாகும். இத்தகைய முரணுறு முடிவுகளால் இவருடைய நூல் நேர்மையற்ற ஆராய்ச்சியாகவே கற்போரால் நினையப்படுகின்றது. வரலாற்றுப் பேராசிரியர் ந. சுப்பிரமணியனும் இவர் நூலைக் குறிக்கையில், 'சிவராசப்பிள்ளை செய்த முயற்சி போற்றத் தக்கதாயினும் அவர் கொண்டிருந்த சில முரணான கருத்துக்களைத் தவிர்க்க முடியாத நிலையில் நேர்மையான முடிவுகளை அவரால் காண முடியவில்லை என்று சுழறுவார்.[32] சிவராசப்பிள்ளை கணித்த தலைமுறைக் கணிப்பின் தவறுகளைக் குறிக்கின்ற முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியனும், 'சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன் கி.பி.25 முதல் 50 முடிய ஆண்டிருந்தவனென்றும் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை கி.பி.125 முதல் 150 முடிய ஆண்டிருந்தவனென்றும் அவர் கணித்துக் கூறுகின்ற தலைமுறைக் கணிப்பினை ஏற்றால் இருவர் காலத்தும் இருந்தவனான மலையமான் திருமுடிக்காரியென்ற தேர்வண் மலையனை நூற்றைம்பதாண்டுகள் அரசு செய்தவனாகத் தவறுபட எண்ண வேண்டிவரும்' என்று எடுத்துக் காட்டுவார்.[33]

6. எல். உலகநாதப்பிள்ளை எழுதிய, 'முதலாம் கரிகாலன் என்ற சோழன் கரிகாற் பெருவளத்தான்' என்னும் ஆராய்ச்சி நூல், சங்க காலக் கரிகாலனை வேறுபடுத்தாமல் ஒருவனாகவே கொண்டு அவனே முதலாம் கரிகாலனென்றும்[34] அவன் காலம் கி.மு.முதல் நூற்றாண்டின் இடைப்பட்டது

என்றும்[35] சுருக்கமும் தெளிவும் அமையக் காட்டி, அவன் வரலாற்றுச் சிறப்புக்களையும் வரைந்து செல்கின்றது.

7. முனைவர் மா. இராசமாணிக்கனார் எழுதிய சோழர் வரலாற்றின் முதற்பாகம் சங்ககாலச் சோழ வேந்தர்களின் அரச வரலாற்றை அளிக்கின்றது. ஆயின், அதன் காலக்கணிப்பும் வரலாற்று வரைவும் கற்பனைப் பூச்சோடே காட்சி தருகின்றன. எடுத்துக்காட்டாகச், சோழன் செருப்பாழியெறிந்த இளஞ்சேட்சென்னியின் வரலாற்றில் அவன் காலத்தில்தான் தமிழகத்தின் மேல் மோரியர் படையெடுத்தாரேன்றும் அவரை வென்றோட்டிய போதுதான் அவன் பாழியரணையெறிந்து செருப்பாழி யெறிந்த இளஞ்சேட்சென்னி யெனச் சிறப்புப் பெயர் பெற்றானென்றும் கூறுகின்ற புனைந்துரையைக்[36] காணலாம். துளுநாட்டுப் பக்கமிருந்து கோசர் படையெடுத்து வந்தபோது, மோகூர் பணியாமையால் அக்கோசர்க்குத் துணையாக மோரியரும் பகைத்து வந்தனர் என்பதும் (அகம்.251), அவர்கள் வடுகரை முன்விடுததுத் தாம் பின்தொடர்ந்து தென்திசைமேல் படையெடுத்துப் பாய்ந்தனர் என்பதுமே (அகம்.281) சங்க இலக்கியங்களில் மாமூலனார் பாடல்களால் அறியவருகின்ற மோரியர் படையெடுப்புப் பற்றிய தெளிவான செய்திகளாம். ஆயின், அந்நூலோ மோரியர் படையெடுப் பினை மிகைப்படுத்தியும் துளுநாட்டுக் கோசர் மட்டுமன்றித் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்த கோசர் குழுக்களின் பலவேறு படட செய்திகளையெல்லாம் திரட்டி ஒன்றாகத் திரிததுக் கொண்கான நன்னன், பிட்டங்கொற்றன், வாடடாற்று எழினியாதன், அழுந்தூர்வேள் தித்தியன் ஆகியோருடனெல்லாம் அக்கோசர் பேரிட்டனரென்று புனைந்தும அப்போர்களையெல்லாம் மோரியர் படையெடுப்பினோடே மொழிந்தும் அவ்வளவில் நில்லாது அம்மோரியரையே சோழன் இளஞ்சேட்சென்னி பாழியரணிடதது வெனறு அவ்வரணையும் அழித்தானென் றும், ஆதலால அவன் கி.மு. மூன்றாம் நூற்றாண்டுச் சோழனென்றும் கூறி ஒவ்வொரு செய்தியையும் கற்பனைப் போககிலேயே காட்டக காணலாம்.

8. துடிசைகிழார் அ சிதம்பரனாரின், 'சேரர் வரலாறு' சேரவேந்தர் எல்லோரையும் குறித்தெழுந்த முழு நூலாயினும் அதிலும் கற்பனை வரலாறு மிகமிகக் கலந்துள்ளது. சேரமான் நெடுஞ்சேரலாதனுக்குரிய

இமையவரம்பனென்ற பெயரையே பிரித்து அதற்குரியோன் தனியொருவனெனக் கொள்வதோடு அவன் கி.மு.30,000 ஆண்டுகளுக்கு முன்னிருந்தவனென்று கூறுவதும்[37] அந்துவஞ்சேரல் இரும்பொறையென்னும் பெயரிலேயே குலமுதல்வனாக ஒருவனையும்[38] பின்னோனாக ஒருவனையும்[39] பேசுவதும் போல் ஏராளமான கற்பனை வரலாறுகளை இந்நூலினால் அறியலாம். அரசர்களுடைய பெயர் வேறுபாடுகளை அவ்வவ்வாறே கொண்டு ஒவ்வொருவரையும் பற்பலராகக் காட்டுவதும் ஒரே பெயரையுடைய அரசரையும் நிகழ்ச்சிகளால் பலராகப் பகுப்பதும் சான்றுகளில்லாமலேயே வரலாற்றை வரைந்து காலத்தைக் கணிப்பதும் இந்நூலின் சிறப்புத் தன்மைகளாகக் காணப்படுகின்றன. சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறை, மாந்தரம் பொறையன் கடுங்கோ, மாந்தரஞ்சேர அரசன் என்றவாறு ஒருவனுக்குரிய பல பெயர்களால் அவனைப் பலராகப் பகுப்பதையும்[40] பார்க்கலாம். குடிப்பெயரால் குறிக்கப்பெறுவோரின் இயற்பெயர் இன்னதெனக் காணாது அக்குடிப்பெயரையே இயற்பெயராகக் கொண்டு அப்பெயருக்கே வரலாறு கூறுவதும் வருகின்றது. சேரலனென்ற குடிப்பெயரிலேயே கி.மு.6045-6000 ஆண்டுகளில் உதியன் குடும்பத்தில் ஒருவனும்[41] கி.பி. 510-570 ஆண்டுகளில் பொறையன் குடும்பத்தில் ஒருவனுமாய்[42] இருவர் இருந்தனரென்று எழுதுவதை இவ்வகையில் காணலாம். இவ்வாறாக அந்நூலின் நம்பகப்பண்பு நலிந்துள்ளது.

9. அடுத்து, ஔவை சு. துரைசாமிப்பிள்ளை எழுதிய, 'பண்டைநாளைச் சேரமன்னர் வரலாறு' அம்மன்னருள் ஒவ்வொருவர் செய்திகளையும் விரிவாகவே விளக்குகின்றது. சேரமான் யானைக் கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையினும் மற்றொருவனாகச் சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறையை அந்நூல் வேறுபடுத்துதல்[43] வேண்டாததாம்.

10. புலவர் கா. கோவிந்தன் தொகுத்த, 'சங்ககால அரசர் வரிசை' என்னும் தொடர் அகரநிரலில் அரசர் வரலாறுகளை வரைந்து செல்கின்றது. ஒவ்வோர் அரசருடைய செய்திகளையும் ஒருங்கு திரட்டிப் பெரும்பாலும் நிரல்பட கூறியது அந்நூலின் நோிய முயற்சியாம். ஆயினும், சோழநாட்டு அழந்தூர் வேளும் பாண்டிய நாட்டுப் பொதியிற் செல்வனும் ஆகிய இருவேறு திதியரைத் தனித்தனியே எண்ணுவதுபோல் காட்டித் தெளிவின்றி ஒருவனாக்கியதும்[44]

கொண்கானங் கிழானாகிய நன்னன் உதியன், கடம்பின் பெருவாயில் நன்னன் வேண்மான், செங்கண்மாத்து வேள் நன்னன்சேய் நன்னன், விச்சிக்கோனாகிய பெண்கொலை நன்னன் எனவரும் நால்வேறு நன்னருள் நன்னன்சேய் நன்னனொழிந்த ஏனை மூவரையும் ஒருவனேயென்று நன்னன் வேண்மானாக நவின்றதும்[45] போன்ற சிற்சில முரண்பாடுகள் அந்நூலின் கண்ணும் அமைந்துள்ளன.

11 அடுத்து, வரலாற்றுப் பெரும் பேராசிரியர் ந. சுப்பிரமணியன் வரைந்த 'சங்ககால வாழ்வியல்' (Sangam Polity) சங்கம், சங்ககாலம் ஆகியவற்றைக் குறித்ததோர் அழகிய தோற்றுவாயையும் சங்ககால அரசு, சமூகம் ஆகியவற்றின் பல்வேறு கூறுகள் பற்றிய பரந்துபட்ட, நம்பகமான செய்திகளையும் ஆய்வுநெறிமாறாதே தொகுத்தளிக்கின்றது. தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் இல்லாததும் திரித்துக் கூறாததுமான கருத்தாய்வு நூலுக்கு அதனையோர் சிறந்த எடுத்துக்காட்டாக அறியலாம். 'போரும் படையமைப்பும்' என்ற இயலில் சங்ககால அரசர்களின் போர் வரலாற்றைத் தெளிவுறுத்துகின்ற போக்கில் அவ்வரசர்களின் வரலாற்றையும் ஆசிரியர் ஒருவாறு உணர்த்திப போகின்றார்.

12. பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார் தொகுத்தும் பகுத்தும் எழுதிய 'தென்னாட்டுப் போர்க்களங்கள்' சிறந்த தலைப்பினில் சிறப்புற எழுதப்பட்டதொரு நூலே ஆயின், அதிலும் கற்பனைப் புனைவு கலக்காமலில்லை. மேலே இராசமாணிக்கனாரின் சோழர் வரலாற்றில் கண்ட மோரியர் படையெடுப்புப் பற்றிய புனைவை அபபடியே எடுத்துக்கொண்டு அதனினும் மேலாக நரம்புகளை முறுக்கேற்றுகின்ற மொழிநடையில் வரலாற்றுக் கதைபோல் புனைந்து, நேரிலே பார்த்த நேற்றைய நிகழ்ச்சிபோல் எழுதுவதில் அந்நூல் சிறந்தே விளங்குகின்றது.[46]

13. அடுத்தது, வரலாற்றுப் பேராசிரியர் மங்கள முருகேசன், 'சங்ககாலம்' (Sangam Age) என்று ஆங்கிலத்தில் எழுதிய நூல், தமிழக நிலவமைப்பு முதலான பல்வேறு கூறுகளுக்கிடையே, தமிழக மூவேந்தர்களும் குறுநில மன்னர்களுமாகிய அரசர்களின் வரலாறுகளைச்

சிக்கல்களுக்கு உட்புகாது சிற்றளவில் செய்தி படிப்பதுபோல் செப்பிச் செல்லுகின்றது.

14. தமிழக வரலாற்றுக்குழு எழுதிய தமிழ்நாட்டு வரலாறு, சங்ககால அரசியல் குறித்ததொரு பெருநூல், அது சங்க இலக்கியக் காலக்கணிப்பினையும் சங்ககால அரசர்களின் வரலாறுகளையும் விரிவாகவே தொகுத்தும் பகுத்தும் விளக்கியுள்ளது. காலக்கணிப்பினில் மேலே எடுத்துக் காட்டியபடி, சங்ககாலமென்பது கி.மு.4-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.3-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரையுள்ள 600 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட இடைவெளியைக் கொண்டதெனினும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களிலுள்ள பெரும்பாலான பாடல்கள் கி.மு. முதல் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரையுள்ள 300 ஆண்டுக காலத்தில் தோன்றியவையே என்று ஏற்புடைய அளவில் இயம்புவதும்[47] அரசர் வரலாற்றிலே முதியரைப் பேணிய உதியஞ்சேரலையும் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதனையும் தனித்தனியே கொண்டு தெளிவுற வேறுபடுத்திக் காட்டியிருப்பதும்[48] சோழன் கரிகால் பெருவளத்தானை ஒருவனாகவே கொண்டு வரலாறு கண்டிருப்பதும்[49] அந்நூலின் அறுதியிட்ட போக்கிற்குக் குறிப்பிடத்தக்க சில அரிய சான்றுகளாம். ஆயினும், அரசருள் முன்னோர் பின்னோர் காலமுறை காட்டாமை அந்நூலில் ஒரு குறையாகவே அமைந்துள்ளது.

15. பேராசிரியர் சி. பாலசுப்பிரமணியனின் ஆய்வு நூலான சேரநாட்டுச் செந்தமிழ் இலக்கியங்கள், பதிற்றுப் பத்துப் பாட்டுடைத் தலைவர்களான சேரவேந்தர்களின் அரசியல் வரலாறுகளைத் தொடக்கத்தில் வேண்டுமளவு தொகுத்துக் கூறிச் செல்கின்றது.[50]

16. முனைவர் அரங்க. இராமலிங்கம் அளித்த, 'சங்க இலக்கியத்தில் வேந்தர்' என்ற ஆய்வுரை நூல் வரலாற்று நோக்கிலே வரையப் பெறாததாயினும், அது தன்போக்கிலே முடிவேந்தர் பற்றிய செய்திகளை மொழிந்து செல்லுமுறையில் இவ்வாய்வினுக்கு ஏற்புடையதாய் வேந்தர்-மன்னர் பெயர் வேறுபாடுகளையும் விளக்கிக் காட்டுகின்றது.[51]

17. சிவராசப்பிள்ளையின், 'பண்டைத் தமிழர் காலமுறை', நூலையே பெருந்துணையாகக்கொண்டு

அண்மையில் சென்னை வழக்கறிஞர் வி.பி. புருடோத்தமன் எழுதியுள்ள, 'சங்ககால மன்னர் காலநிலை வரலாறு' முன்னதைப் போலவே ஒரு நல்ல முயற்சி. பகுப்பாய்வு என்ற முறையில் அந்நூலும் பாராட்டத்தக்கதே. ஆயினும் பெரும்பான்மை கற்பனையாகவும் தன்னான் ஒருபொருள் கருதிக் கூறலாகவுமே வருகின்ற அந்நூற் கருத்துக்களை உண்மையின்பாற் பட்டனவாக ஒத்துக்கொள்ள இயலாது.

"பதினான்கு பாண்டியர்களைச் சங்க இலக்கியத்தில் காண்கிறோம். இவர்களில் காலத்தினால் முந்தியவன் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்".[52]

"பூதப்பாண்டியன் மகனான நெடியோன்
கொற்கையிலிருந்து தன் நாட்டை விரிவாக்கும்
பணியில் ஈடுபட்டான்"[53]

"நெடியோன் மகனான பசும்பூட் பாண்டியன்
பாண்டியநாட்டை மேலும் விரிவாக்கினான்"[54]

"பசும்பூட் பாண்டியனின் மகன் கருங்கை ஒள்வாள்
பெரும்பெயர் வழுதியாவான் ..... இவன்மகன்
பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி"[55]

எனத தொடரும் கூற்றுக்கள் அந்நூலின் ஒவ்வாத கற்பனைக்கும் தனிமைக் கருதுகோளுக்கும் தக்க சில சான்றுகளாம். இவை போல் இன்னும் எண்ணற்றவை உளளன.

"தொல்காப்பியம், எட்டுத்தொகை நூல்களை,
கி.பி. எட்டாம் நூற்றாண்டில் படித்த
நீலகண்டன் என்பவரால் கடடிவிடப்பட்ட கதையே
முச்சங்கக் கதையாகும்"[56]

"இளங்கோவடிகள் செங்குட்டுவன் தம்பியென்பது
ஒரு கட்டுக்கதை"[57]

என்பனபோல் முன்னைக் கருத்துக்களை எடுத்தெறியும் கூற்றுக்களையும் அந்நூலில் ஏராளமாகப் பார்க்கலாம்.

0.6. ஆய்வின் நோக்கம்

மேற்கண்ட முறைகளில் சங்ககால அரசர்களின் வரலாறுகளை வரைந்தோர் பலரும் பரவலாகவே கற்பனைப் புனைவுகளையும் திரிபுச் செய்திகளையும் கலந்து வரலாறுகளென்று வடித்துள்ள நிலையில் ஓரளவுக்கு உண்மை வரலாற்றை உணரவேண்டுமென்ற உந்துதல் காரணமாகவே இவ்வரலாற்றாய்வு எழுகின்றது.

எனவே, சங்க கால அரச வரலாற்றை உண்மை நிலை மாறாது ஆய்ந்து காண்பதே இதன் அடிப்படை நோக்கமாய் அமைகின்றது. வரலாற்றைப் புனைந்துரையாக வடிவு மாற்றம் செய்யாமல், நிகழ்ந்தவற்றை மட்டுமே நேரிய முறையில் சான்றாதாரங்களோடு சாற்றுதற்குரிய முயற்சியே இவ்வரலாற்று ஆராய்ச்சியில் மேற்கொள்ளப்படுகின்றது.

சங்க கால அரசர் பெயர்களும் வரலாற்று நிகழ்ச்சிகளும் பலவாறு வேறுபட்டு விளங்குவதானால் அவற்றை உரிய முறையில் நெறிப்படுத்தி, உண்மை நிலையில் அவரவர் வரலாற்றை வகைப்படுத்துவதும் இங்கு நோக்கமாய் வருகின்றது.

0.7. ஆய்வுரையின் அமைப்பும் போக்கும்

ஆய்வின் தொடக்கத்தில், 'சங்ககாலத் தமிழகமும் தமிழக அரசுகளும்' எனவரும் தலைப்பு அக்காலத் தமிழகத்தின் எல்லைப் பரப்பையும் அகநாடுகளின் அமைப்பையும் காண்பதோடு, முடிகெழு வேந்தர், வேளிர், குறுநில மன்னர், சீறூர் மன்னர் ஆகிய அரச நிலைகளையும் தொடர்புகளையும் அறிய முனைகின்றது.

அடுத்து, முடிவேந்தர் வரலாறுகள் சேர, பாண்டிய, சோழர் என்ற தொன்மைமுறையில் தொடர்கின்றன.

முடிவேந்தர் வரலாறுகளைத் தொடர்ந்து வேளிர் வரலாறு, குறுநில மன்னர் வரலாறு, சீறூர் மன்னர் வரலாறு ஆகியவை தனித்தனியே வருகின்றன. அவற்றுள் முன்னிரு வரலாறுகளும் சேர, சோழ, பாண்டிய நாடுகளின் முறையில் தெற்கு வடக்காக நோக்கி வரையப்படுகின்றன.

முடிவுரையில் ஆய்வின் சிறப்பு முடிவுகள் தொகுத்தளிக்கப்படுகின்றன.

08. காலக்குறிப்பு

முடிவேந்தர்களின் வரலாற்றில் காலம் கணிக்கப்பட இயலாத தலைச்சங்க இடைச்சங்க வேந்தர்கள் சிலர்க்கொழிய ஏனையோர்க்கெல்லாம் இவ்வரலாற்றிலே ஒருவாறு காலங் கணித்துக் குறிக்கப் பெறுகின்றன. இவை, செங்குட்டுவன்-கயவாகு தொடர்பினால் தெளிவாக அறியப்பட்ட அச்சேரமான் காலத்தை மையமாகக் கொண்டு முன்னும் பின்னும் தொடர்ந்து கணிக்கப்பட்டவை. ஆகவே, கூடியமட்டில் இக்காலக் கணிப்புப் பொருந்தியமையும்; வேறுபாடுகள் இருப்பினும் அவை மிகையாகமாட்டா.

அடிக்குறிப்புக்கள்

1. R. Sathianathaier- History of India, Vol.I.P.237
2. V.A. Smith-Early History of India, P.445
3. K.A.Nilakanta Sastri-Pandian Kingdom, p.24
   - The Colas, p.3
   - History of South India, p.110
4. V.R. Ramachandra Dikshiter-Studies in Tamil literature and History, pp.4, 21
5. K.R. Srinivasa Iyengar - The Age of Imperial Unity, p.293
6. N. Subramanian - Sangam Polity, pp.25-30
7. N.K.Mangala Murugesen - Sangam Age, p.26
8. முனைவர் சோ. ந. கந்தசாமி - பரிபாடலின் காலம், ப.106
9. தமிழக வரலாற்றுக்குழு - தமிழ்நாட்டு வரலாறு: சங்ககாலம் - அரசியல் ப.132
10. வி.பி. புருடோத்தமன் - சங்ககால மன்னர் காலநிலை வரலாறு ப.43-49

11. R.Sathianathaier- History of India, Vol.I, p.97
12. Ibid, p.97
13. Ibid, p.237
14. வி.பி. புருடோத்தமன் - சங்ககால மன்னர் காலநிலை வரலாறு ப.43
15. மேலவர் - மேலது, ப.43
16. V. Kanakasabhai - The Tamils Eighteen hundred years age, pp.64-72
17. Ibid, pp.80-85
18. Ibid, pp.64-65, 80-88
19. மு. இராகவையங்கார் - வேளிர் வரலாறு, பக.3-26
20. P.T. Srinivasa Iyengar - History of the Tamils,pp.55-58, 207-213, 353-355, 463-486
21. Ibid, pp.463-486
22. Ibid. pp.335-382
23. Ibid, pp.436-443
24. Ibid, pp.487-489
25. Ibid, pp.372-382
26. Ibid, pp.336-337
27. N. Subramainain- Sangam Polity, Preface, p. xiii
28. K.N. Sivaraja Pillai - The Chronology of the Early Tamils, p.116.
29. Ibid, pp.120-124
30. Ibid. pp.131-133
31. Ibid, Table - ii
32. N. Subramanian -Sangam Polity, Preface, p.xiii
33. முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன் - சங்க இலக்கியத்தில் புறப்பொருள், ப.120
34. எல். உலகநாதப்பிள்ளை - முதலாம் கரிகாலன், பக்.19-20
35. மேலவர்-மேலது., ப.18
36. முனைவர் மா. இராசமாணிக்கனார் சோழர் வரலாறு, பக்.32-33
37. துடிசைசிழார் அ. சிதம்பரனார் - சேரர் வரலாறு, பக். 1-8
38. மேலவர் - மேலது, பக். 129-130
39. மேலவர் - மேலது, பக். 163-165
40. மேலவர் - மேலது, பக். 175-178, 183-192
41. மேலவர் - மேலது, பக். 10-14
42. மேலவர் - மேலது, பக். 195-197

43. ஔவை. சு, துரைசாமிப்பிள்ளை - பண்டை நாளைச் சேர மன்னர் வரலாறு, பக். 269-288
44. புலவர் கா. கோவிந்தன் - சங்ககால அரசர் வரிசை 5, பக்.109-119
45. மேலவர் - சங்ககால அரசர் வரிசை - 6, பக்.28-39
46. கா. அப்பாத்துரை - தென்னாட்டுப் போர்க்களங்கள், பக். 40-43
47. தமிழக வரலாற்றுக்குழு - தமிழ்நாட்டு வரலாறு: சங்ககாலம்- அரசியல், ப.132
48. மேலவர் - மேலது, பக்.137-139, 226-228
49. மேலவர் - மேலது, பக்.287-301
50. முனைவர் சி. பாலசுப்பிரமணியன் - சேரநாட்டுச் செந்தமிழ் இலக்கியங்கள், பக்.17-72
51. முனைவர் அரங்க. இராமலிங்கம், சங்க இலக்கியத்தில் வேந்தர், பக்.27-30
52 வி.பி. புருடோத்தமன் - சங்ககால மன்னர்.காலநிலை வரலாறு, பக்.37
53. மேலவர் - மேலது, பக்.37
54. மேலவர் - மேலது, பக்.38
55. மேலவர் - மேலது, பக்.39
56. மேலவர் - மேலது, பக்.30
57. மேலவர் - மேலது, பக்.71

1. சங்ககாலத் தமிழகமும் தமிழக அரசுகளும்

11. சங்ககாலத் தமிழக எல்லைகள்

சங்ககாலத் தமிழகம் வடக்கே வேங்கடமலையையும் தெற்கே பின்னாளில் கடல்கோட்பட்ட குமரியாற்றையும் கிழக்கிலும் மேற்கிலும் கீழ்கடல் மேல்கடல்களையும் எல்லைகளாகக் கொண்டிருந்தன என்று பொதுப்படக் காணலாம். சங்க இலக்கியங்களுக்கு முழுமுதல் இலக்கணமாயும் இன்றுள்ள தமிழ் நூல்களுள் முதல்நூலாயும் விளங்குகின்ற தொல்காப்பியத்திற்கு அமைந்த பாயிரமும் இவ்வாறே தமிழ்வழங்கும் நாட்டிற்கு எல்லைகளை வரையறுக்கின்றது.

வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறும் நல்லுலகம்[1]

என்று அப்பாயிரத்தடிகள் அமைகின்றன.

111. அகப்பாட்டு எல்லைகள்

தமிழகத்து நாலெல்லைகளுள் கீழ்கடல், மேல்கடல்களாகிய நீரெல்லைகள் இரண்டுமொழிய வடவேங்கடமும் தென்குமரியுமாகிய நிலவெல்லைகள் இரண்டும் அகப்பாட்டு எல்லைகளென்று அறியப்படும். உரையாசிரியராகிய இளம்பூரணரின் வழியில் இவற்றை அகப்பாட்டு எல்லைகளென்று அறியக்கூறும் நச்சினார்க்கினியர், குமரியாற்றின் தெற்கே நாற்பத்தொன்பது நாடுகள் இருந்து கடல்கோட்பட்டதை

எடுத்துரைத்து அத்தெற்கெல்லைக்கு மட்டும் அமைதி கூறுவார்.[2]

மற்று, வடக்கெல்லையாகிய வேங்கடமும் ஆட்சியுட்படத் தமிழகத்தின் அகப்பாட்டு எல்லையே என்பதைச் சங்க இலக்கியச் சான்றுகளால் அறியலாம்.

பனிபடு சோலை வேங்கடத்து உம்பர்
மொழிபெயர் தேஎத்தர் (அகம்.211)

என மாமூலனாரும்

வினைநவில் யானை விறற்போர்த் தொண்டையர்
இனமழை தவழும் ஏற்றரு நெடுங்கோட்டு
ஓங்குவெள் ளருவி வேங்கடத்து உம்பர் ....
வால்நிணப் புகவின் வடுகர் தேஎத்து (அகம்.213)

எனத் தாயங்கண்ணனாரும் வேங்கடத்திற்கு அப்பாற் பட்டதாகவே மொழிபெயர் தேயமாகிய வடுகர்நாட்டினைக் கூறக்காண்கிறோம். ஆதலால், வேங்கடம் மொழிபெயராத் தேயமாகத் தமிழகத்தின் உட்பட்டதாக அறியப்படும்.

இனி, இவ்வேங்கடம் தமிழக மன்னர்களின் ஆட்சியில் அமைந்திருந்தமைக்கான சான்றுகளையும் காணலாம். மேலே காட்டப்பட்ட தாயங்கண்ணனாரின் அகப்பாடலில் தொண்டையர்க் குரிய வேங்கடம் என்ற தொடர்பு காணப்பட்டது. அத்தொண்டையருள் ஒருவனான திரையனோடும் அது சார்த்திக் கூறப்படுவதை,

வெண்வேல் திரையன் வேங்கட நெடுவரை (அகம்.85)

என்ற காட்டூர்கிழார் மகனார் கண்ணனாரின் பாடலடியால் அறியலாம்.

கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான்
மழபுலம் வணக்கிய மாவண் புல்லி
விழவுடை விழுச்சீர் வேங்கடம் (அகம்.61)

என மாமூலனாரும்.

புல்லிய, வேங்கட விறல்வரை (புறம். 385)

கல்லா இளையர் பெருமகன் புல்லி
வியன்தலை நன்னாட்டு வேங்கடம் (அகம்.83)

மாஅல் யானை மறப்போர்ப் புல்லி
காம்புடை நெடுவரை வேங்கடம் (அகம்.209)

எனக கல்லாடனாரும் கள்வர்கோமான் புல்லிக்குரியதாகவும் வேங்கடத்தை விளம்புகின்றனர். ஆயின்,

நிரைபல குழீஇய நெடுமொழிப புல்ல
தேன்தூங்கு உயர்வரை நன்னாட்டு உம்பர்
வேங்கடம் (அகம்.393)

என்ற மாமூலனார் பாடலில், ''புல்லி நன்னாட்டு உம்பர் வேங்கடம்' என்றமைந்த தொடர், புல்லியின் நாட்டிற்கு அப்பாற்பட்ட வேங்கடமெனப் பொருள்படுவதுபோல் தோன்றினும் அதற்கு அது பொருளாகாதென்பதைப் புல்லி யினுடைய வேங்கடமெனத் தெளிவுறத் தெரிவிப்பதாய் மேலே காட்டப்பட்ட அப்புலவரின் பாடல் கொண்டே அறியலாம். ஆக, இத்தொடர்க்குப் புல்லி நாட்டின்கண்ணே அப்பக்கத்து எல்லையாய் அமைந்த வேங்கடமென்பதே பொருளாக இசையுமென்க.

ஒலிவெள் ளருவி வேங்கட நாடன் . . . .
கரும்ப னூரன் காதல் மகனே (புறம்.381)

எனக் கரும்பனூர்கிழானும்,

கல்லிழி யருவி வேங்கடங் கிழவோன்
செல்வுழி யெழாஅ நல்லோர் முதியன் (புறம்.389)

என நல்லோர் முதியனும் வேங்கடநாட்டு மன்னர்களாகவே உரிமையுறக் கூறப்படுதலும் அடுத்த நிலையில் அறியத்தகும்.

இவ்வாற்றால், தமிழகத்தின் வடவெல்லையாகிய வேங்கடமும் அகப்பாட்டெல்லையே என்பதனோடு அதன் ஆட்சிநிலையும் அறியப்படும்.

112. முத்தமிழ் நாட்டு எல்லைகள்

சங்ககாலத் தமிழகத்தை மூன்று பகுதிகளாகக் கொண்டு அவற்றைச் சேரர், பாண்டியர், சோழர் என்ற

மூன்று குடிததமிழ் வேந்தர்கள் முறையின் ஆண்டனர். அம்முறையே சேரநாடென்றும் பாண்டிய நாடென்றும் சோழநாடென்றும் தமிழகம் முத்தமிழ் நாடாய் மொழியப்பெற்றது.

தமிழகத்து முந்நாடுகளின் எல்லைகள் குறித்துப் பின்னாட்களில் சில வெண்பாக்கள் எழுந்துள்ளன. அவை வருமாறு:

வடக்குத் திசைபூழி வான்கீழ்தென் காசி
குடக்குத் திசைகோழிக் கோடாம் - கடற்கரையின்
ஓரமே தெற்காகும் உள்ளெண் பதின்காதம்
சேரநாட் டெல்லையெனச் செப்பு

வெள்ளா றதுவடக்காம் மேற்குப பெருவழியாம்
தெள்ளார் புனற்கன்னி தெற்காகும்-உள்ளார
ஆண்ட கடல்கிழக்காம் ஐம்பத் தறுகாதம்
பாண்டிநாட் டெல்லைப் பதி

கடல்கிழக்குத் தெற்குக் கரைபுரளவெள் ளாறு
குடதிசையில் கோட்டைக் கரையாம்- வடதிசையில்
ஏணாடடு வெள்ளாறு இருபத்து நாற்காதம்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல் [3]

இவவெலலைகளைச் சங்ககால முத்தமிழ் நாடடெல்லைகளாகக் கருதலாகாது. காரணம் முதலாவது, சங்க இலக்கியங்களில தமிழக நாடுகளுக்கு இவ்வாறு தெளிவான எல்லை வரையறைகள் குறித்த சான்றுகளெவையும இல்லை. அடுத்து, இவ்வெண்பாக்களில் கூறப்படுமு தென்காசி, கோழிக்கோடு, கோட்டைக்கரை போன்ற ஊர்பபெயர்கள சங்ககால ஊர்ப்பெயர்களாகவும தோன்றவிலலை. ஆதலால் இவை பிற்கால வரையறைகளென்பதில ஐயமிலலை.

சங்ககாலச் சேரபாண்டிய சோழ வேந்தருள் ஒவவொருவர் ஆட்சியிலும அவரவர் ஆற்றலின் வன்மை மென்மைக்கேற்ப அவரவருடைய நாடுகள் அகன்றும் குறுகியும் இருந்தனவென்றே கருதவருகின்றன.

நினகடற் பிறந்த ஞாயிறு பெயர்ததுமநின்
வெணடலைப் புணரிக் குடகடற் குளிக்கும
யாணர் வைப்பின் நனனாடடுப் பொருந (புறம்.2)

என்று சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனை முரஞ்சியூர் முடிநாகராயர் பாடுவதிலிருந்து அவனாட்சியில் அவன் நாடு கீழும் மேலும் இரு கடல்களையுமே எல்லைகளாகக் கொண்டு இடைப்பட்ட நிலமுழுதும் பரந்திருந்ததாகக் காண்கிறோம்.

தென்குமரி வடபெருங்கல்
குணகுடகட லாவெல்லை
குன்றுமலை காடுநாடு
ஒன்றுபட்டு வழிமொழிய . . .
இனிதுருண்ட சுடர்நேமி
முழுதாண்டோர் வழிகாவல! (புறம்.17)

என்று யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறையைக் குறுங்கோழியூர்கிழார் பாடும் பாடலிலும் அவன் முன்னோருடைய ஆட்சிப்பரப்பின் அகலம் விரிவாகவே கூறப்பட்டுள்ளது.

வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும் ...
உருவும் புகழும் ஆகி விரிசீர்த்
தெரிகோல் ஞமன்ன் போல ஒருதிறம்
பற்றல் இலியரோ நிற்றிறம் சிறக்க (புறம்.6)

எனப் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் பாடும் பாடலில் அவனது ஆணையெல்லையின் விரிந்த அகலம் காணலாம். இவ்வாறு மூவேந்தருள் அவ்வக்காலத்து ஆற்றல் மிக்கவருடைய நாட்டெல்லை அகன்று விளங்கியதென்பதே சங்ககாலத்திற்கு அமையும்.

நாகத் தன்ன பாகார் மண்டிலம்
தமவே ஆயினும் தம்மொடு செல்லா
வேற்றோர் ஆயினும் நோற்றோர்க்கு ஒழியும்
(புறம்.367)

என்று எக்காலத்திற்கும் ஏற்றதோர் பொதுவுண்மையை அக்காலத்து ஔவையார் கூறியுள்ளது இங்கே உணரத்தகும்.

மற்றுச் சங்ககாலத் தமிழக நாடுகளுக்குத் தெளிவான எல்லைவரையறைகள் இல்லையென்றாலும் முக்கோர்ண வடிவில் அமைந்த தமிழகத்தின் மேற்குப்பகுதி சேரநாடாகவும் தெற்குப்பகுதி பாண்டிய நாடாகவும் கிழக்குப் பகுதி சோழநாடாகவும் சொல்லப்பட்டன. அம்முறையே அவை குடபுலம், தென்புலம், குணபுலம் என்றும் குறிக்கப்பெற்றன.

தென்பாண்டி குட்டம் குடம்கற்கா வேண்பூழி
பன்றி அருவா அதன்வடக்கு - நன்றாய
சீதம் மலாடு புனல்நாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநாட்டு எண்[4]

என வரும் செந்தமிழ்சேர் பன்னிருநாடுகளுள் மேல் கடற்பக்கத்து நாடுகளான வேணாடு, குட்டநாடு, சீதநாடு, கற்காநாடு, குடநாடு, பூழிநாடு என்ற ஆறும் தெளிவாகச் சேரநாட்டுள் அடங்கும். அடுத்து, மலையமானாட்டையும் சேரநாட்டினதாகக் கருத இடமுண்டு பாண்டிநாட்டிலே செந்தமிழ் நாடும் அதன் தெற்கே அமைந்த தென்பாண்டிநாடும் அடங்கியிருந்தன. சோழநாடென்பது பன்றிநாடு, புனல்நாடு, அருவாநாடு, அருவாவடதலைநாடு ஆகியவை அடங்கிய பெருநாடாய் இருந்ததென்று எண்ணக் கிடக்கின்றது.

இம்மூன்று நாடுகளுக்கும் இடைப்பட்ட எல்லைகள் அவவக்காலத்து மாறிமாறி இருந்திருத்தல் கூடுமென்பதை இங்கே மறந்து விடலாகாது.

1.2 சேரநாட்டின் அகநாடுகளும் தமிழகத்தின் மிகுபரப்பும்

இனி, பண்டைய சேரநாடடின் அகநாடுகள் அமைபபினைக் காணும் முறையில் அன்றைய தமிழகத்தின் அகற்சிமிகு பரப்பளவையும் பார்க்கலாம்.

சேரநாட்டின் அகவமைப்பினைத் தேவநேயப் பாவாணர் ஒருவாறு தெளிவுறக் காட்டுவார். சேரநாட்டில் குட (மேலைத் தொடர்ச்சி) மலைக்கு மேற்கிலுள்ளது கடலமலைநாடென்றும் கிழககிலுள்ளது கொங்கு நாடென்றும் பெயாபெற்றிருந்தன எனப் பகுத்துக்காட்டி, அவற்றுள் கடல்மலைநாட்டின் வடபாகம் குட்டநாடு, குடநாடு,

துளுநாடு, கொங்கணநாடு என்னும் பல பகுதிகளைக் கொண்டிருந்ததென்றும் கொங்குநாட்டின் மேல்பாகமாகிய குடகொங்கு குடகுநாடு, கருநாடு, கங்கநாடு, கட்டியநாடு முதலிய பலநாடுகளை உள்ளடக்கியிருந்ததென்றும் அவர் உணர்த்துவார்.[5] குடகுநாட்டை ஆண்டிருந்தோரும் கொங்கரே என்ற முறையில் அவர்களைக் குடகக் கொங்கர் (சிலம்பு.30:159) எனக் கூறிய இளங்கோவடிகள் பின்னும் அவர்களையே 'கொங்கிளங்கோசர்' (சிலம்பு. உரைபெறு கட்டுரை) என்றும் குறித்தலால் குடகுநாடும் கொங்குநாடேயென்பதும் அந்நாட்டையாண்ட கொங்கராவார் கோசரென்பதும் விளங்கும். கங்க நாட்டையாண்ட கங்கர் தம்மைக் கொங்கு நாட்டரசர் எனக்கூறிக் கொண்டனராதலால் அக்கங்கநாடும் கொங்குநாடேயெனக் குறிப்பிடுவார் பாவாணர்.[6] ஆயினும், கடைச் சங்க காலத்து இறுதியிலேயே சேரநாட்டின் வடபாகத்தில் இருந்த துளுவம், கொங்கணம், குடகம், கருநாடகம் முதலிய நாடுகள் மொழிபெயர் தேயமாகத் திரியத் தொடங்கிவிட்டனவென்றும் ஒன்பதாம் நூற்றாண்டளவில் கருநாடு, கங்கநாடு, கட்டியநாடு ஆகியவை முழுதும் கன்னடநாடாயினவென்றும் அவர் கணித்துக் கூறுவார்.[7]

மற்றுப் பாவாணர் பகுத்துக் காட்டும் கடல்மலை நாட்டின் தென்பால் வேணாடும் கொங்குநாட்டின் கீழ்பாகமாகிய குணகொங்கு நாட்டிலே சீதநாடும் கற்காநாடும் பூமிநாடும் மலையமானாடும் அடங்கியிருந்தன வாக அறியலாம்.

ஆக, சங்கத்தமிழ்ச் சேரநாடு இன்றைய திருவாங்கூர், கொச்சி, மலபார் ஆகியவற்றோடே குடகு, மைசூர், தென்கன்னட நாடுகளையும் உள்ளடக்கியிருந்தமை உணரப்படும்.

இனி, இச்சேரநாட்டின் அகநாடுகளுள் பலவும் சங்க இலக்கியங்களில் வருமாறு காணலாம்.

121. கொங்குநாடு

சங்கப் பாடல்களில் கொங்குநாடு (கொங்கர்நாடு) பரவலாகவே பேசப்படுகின்றது. அந்நாட்டினர் கொங்கரெனக் குறிக்கப்பெறுகின்றனர். இயற்கை

அமைப்பிலே இக்கொங்கர்நாடு மலைசார்ந்த பாறைநிலமாகவே சங்க இலக்கியங்களில் புனையப் பெறுகின்றது (பதி.22,77). இந்நாடு பசுவளம் மிக்கது (பதி.22,77;அகம்.79).

இக்கொங்கரைச் சேர, பாண்டிய, சோழரென்ற மூவேந்தருமே தனித்தனிப் போரிட்டு வென்றிருக்கின்றனர்.

ஆகெழு கொங்கர் நாடகப் படுத்த
வேல்கெழு தானை வெருவரு தோன்றல் (பதி.22)

எனப பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாடும் பாலைக் கௌதமனார் பாடலடிகளால் அச்சேரவேந்தன் இக்கொங்கர் நாடடை வென்று கைப்பற்றினமை விளங்கும்.

வாகைப்பறந்தலை என்னும் போர்க்களத்தே இககொங்கரொடு பொருதபோரில் பசும்பூட்பாண்டியனின் படைததலைவனான அதிகனென்பான் தான் ஏறிப்போரிட்ட யானையோடே மாண்டானாக அவனைக கொன்ற கொங்கர் பெரிய வெற்றியாரவாரம் புரிந்தனர் (குறு.393). அதனைத் தொடர்ந்துதான் போலும் அபபசும்பூட் பாண்டியன் இக்கொங்கரைப் போரிலே தோற்றோடச் செய்து, இவாகளுரிய நாடுகளைத் தன் பாண்டிநாட்டோடே சேர்த்தானென்றும் அறிகிறோம் (அகம்.253).

சோழர் இக்கொங்கரை வென்று பணிவிப்பதற்காகச் செயத போரில் அசசோழர் மறவனான பழையன் குறிதவறாது வேலெறிந்து வினைபுரிந்தான (நற்.10). சோழன் குராபபள்ளித்துஞ்சிய கிளளிவளவன் கருவூரெறிந்த நிலையில், 'கொங்குபுறம் பெற்ற கொற்ற வேந்த'னாகக கோவூர் கிழாரால பாடபபெறுகின்றான் (புறம.373).

மறறும் ஆய அண்டிரன் ஒருமுறை இக்கொங்கரை வெனறு குடகடற்பக்கம் ஓடடினானென்று உறையூர் ஏணிசசேரி முடமோசியாரா பாடலொன்று கூறுகின்றது (புறம்130).

இவவாறு மூவேநதராலும் பிறராலும் வெல்லபபட்ட இக்கொங்கர்நாடு அவவேந்தர் நாடுகளுக்கும் வேறானதோர் தனிநாடோ என்ற எணணம் தோனறலாம; ஆயின,

நாரரி நறவின் கொங்கர் கோவே (பதி.88)
கட்டிப் புழுக்கின் கொங்கர் கோவே (பதி.90)

என்றெல்லாம் சேரமான் இளஞ்சேரவிரும்பொறையை விளித்துப் பெருங்குன்றூர்கிழார் பாடுகின்றாரே! இவற்றுள் சேரமானே கொங்கர் கோவாகக் குறிக்கப்பெறுவதன் கருத்தென்னோ? கொங்கரை வென்றதனால் அவ்விளஞ்சேரல் மட்டும் கொங்கர்கோ எனப் பெற்றானோ? எனின், அவன் கொங்கரை வென்ற செய்தி கூறப்படவில்லையே! மற்றுக் கொங்கர் நாட்டை அகப்படுத்திக் கொண்ட பல்யானைச் செல்கெழுகுட்டுவன் கொங்கர் கோவாகக் குறிக்கப் பெற்றிலனாயினும் அவனுக்கும் அப்பெயர் அமையுமோ? அடுத்து,

வில்லவன் கொங்கன் வஞ்சி
வேந்தனே போந்தின் தாரோன்
கொல்லிவெற் பன்கு டக்கோக்
குட்டுவன் குடகன் கோதை
மல்லல்சேர் உதியன் வான
வரம்பனே மலய மானே
செல்லல்தீர் பொருநை யாற்றோன்
சேரலன் சேரன் பேரே.[8]

எனவரும் சூடாமணி நிகண்டுப் பாடலில் கொங்கன் எனும் பெயரே சேரனுக்குரியதாகச் சொல்லப்படுகின்றதே! அதன் குறிப்பென்ன? இவை நிற்க.

கொங்குநாட்டில் உள்ளதொரு மலை கொல்லிமலை. சங்க காலத்தே இக்கொல்லிமலை சேரர்க்குரியதாகப் பல சான்றுகள் காணப்படுகின்றன.

வெல்போர் வானவன் கொல்லி மீமிசை (அகம்.33)

களிறுகெழு தானைப் பொறையன் கொல்லி (அகம்.62)

வெல்போர் வானவன் கொல்லிக் குடவரை
(அகம்.213)

மறமிகு தானைப் பசும்பூட் பொறையன் . . . .
மாயிருங் கொல்லி யுச்சி (அகம்.303)

துனைனருந் துயபின் வென்வேற் பொறையன்
அகலிருங் கானத்துக் கொல்லி (அகம்.338)

இரவலர் மெலியாது ஏறும் பொறையன்
உரைசால் உயர்வரைக் கொல்லிக் குடவயின் (நற். 185)

நிறையுறு மதியின் இலங்கும் பொறையன்
பெருந்தண் கொல்லி (நற்.346)

பெரும்பூட் பொறையன் பேஎமுதிர் கொல்லி (குறு.89)

என்று அச்சான்றுகள் அமைகின்றன. அன்றியும் கொல்லி மலைக்குரியோர் என்ற முறையிலும் சேர வேந்தர்கள் தனித்தனியே,

ஓங்கு கொல்லியோர் அடுபொருந (புறம்.22)
கொல்லிப் பொருந கொடித்தேர்ப் பொறைய (பதி.73)

எனக் குறித்துவிளிக்கவும் பெறுகின்றனர். மேலே காட்டப்பெற்ற சேரன் பெயர்களைக் குறித்த சூடாமணி நிகண்டுப் பாடலிலும் கொல்லிவெற்பன் என்ற பெயர் சேரனுக்குரியதாக வருதலும் இங்கே கருதத் தக்கதாம்.

மற்று, இதே கொல்லிமலையை வல்வில் ஓரிகுரியதாகவும் சங்க இலக்கியங்களே சான்றுகள் பகாகின்றன. அவை:

கொல்லி யாண்ட வல்வில் ஓரியும் (புறம்.158)

ஓரி, பல்பழப் பலவின் பயங்கெழு கொலலி
(அகம்.208)
முளஎூர் மன்னன் கழல்தொடிக் காரி
செலலா நல்லிசை நிறுத்த வல்வில்
ஓரிக் கொன்று சேரலர்க்கு ஈத்த
செவ்வேர்ப பலவின் பயங்கெழு கொல்லி
(அகம்.209)
மாரி வணமகிழ் ஓரி கொல்லி (நற்.265)
வலவில் ஓரிக் கொல்லிக் குடவரை (குறு.100)

எனவரும் இன்னும் வலவில் ஓரியை, 'ஓங்கிருங் கொல்லிப் பொருநன்' (புறம்.152) எனறே குறிப்பர் வன்பரணர். இவற்றால் கொல்லிமலை முதலில் ஓரிக்கேயுரியதென்றும் அவனை மலையமான் திருமுடிக்காரி கொன்று அம்மலையைச்

சேரர்க்குரியதாக்கினானென்றும் கருதப்படலாம். ஆயினும், முடிவுகாண மேலும் சிலவற்றை ஆராய்வோம்.

சங்க இலக்கியங்களிலே நற்றிணைப் பாடலொன்றில் (நற்.52) ஓரி, மழவர் பெருமகன் எனக் குறிக்கப்பெறுகின்றான். இம்மழவரென்பார் ஒரு தனியினத்தவராக, வீர மரபினராகக் காணப்படுகின்றனர். இம்மழவர்க்குப் பெருமகனாக ஓரி குறிக்கப்பெறுவது போலவே அதியமானும் புறப்பாடல்கள் இரண்டிலே (புறம்.88,90) ஔவையாரால் மழவர் பெருமகன் எனப் பாடப்பெறுகின்றான். அன்றியும் பல்யானைச் செல்கெழு குட்டுவன் (பதி.21), ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் (பதி.55) ஆகிய சேரவேந்தரும் மழவர் மெய்ம்மறை (மழவர்க்குக் கவசம் போன்றவன்) என்று சிறப்பித்துக் குறிக்கப் பெறுகின்றனர்.

இவ்வாற்றால் கொல்லிமலையுரிமையில் சேரரோடே ஓரியும் சேர்ந்துவர, மழவர்க்குத் தலைமையேற்பதில் அச்சேரரோடே ஓரி மட்டுமன்றி அதியமானும் இணைந்து வருகின்றான். எனவே, இவர்கட்கிடையிலான தொடர்பு இங்கே ஆராய்ந்து அறியப்படுதல் வேண்டுவதாகின்றது.

அதியமானைச் சேரம்பரினனென்று புறநானூற்றிலே உள்ள ஔவையார் பாடல்களாலும் அவற்றுள் ஒன்றிற்கு அமைந்த பழையவுரையாலும் அறியலாம்.

ஈகையங் கழற்கால் இரும்பனம் புடையல்
பூவார் காவிற் புனிற்றுப்புலால் நெடுவேல்
எழுபொறி நாட்டத்து எழாஅத் தாயம்
வழுவின் றெய்தியும் அமையாய் (புறம்.99)

எனவும்,

வட்கர் போகிய வளரிளம் போந்தை
உச்சிக் கொண்ட ஊசி வெண்தோடு
வெட்சி மாமலர் வேங்கையொடு விரைஇச்
சுரியிரும் பித்தை பொலியச் சூடி (புறம்.100)

எனவும் வருகின்ற பாடல்களில் அதியமான் பனம்பூமாலை அணிந்தானாகப் புனையப்பெறுதல் காண்கிறோம். இவற்றிற்கு உரையெழுதிய பழையவுரைகாரர் முதற்பாடலின் கீழ் இவனுக்குப் பனந்தார் கூறியது சேரமாற்கு உறவாதலின்

(பாடம்: உதிய வேந்தாதலின்) எனச் சிறப்பு விளக்கம் தருவார். இவ்விளக்கத்தில் சேரமாற்கு உறவு என்பதிலும் உதியவேந்து என்ற பாடம் அதியமானை நேர்படவே சேரர் குடியினனாகச் செப்புகின்றது.

> கால வெகுளிப் பொறையகேள் நும்பியைச்
> சாலுந் துணையுங் கழறிச் சிறியதோர்
> கோல்கொண்டு மேற்சேறல் வேண்டா [9]

என்று, அதியமானின்மேல் படையெடுத்த பெருஞ்சேரலிரும் பொறையைத் தடுத்துக் கூறுவதுபோல் அமைந்த தகடூர் யாத்திரைப் பாடலும் அச்சேரமானின் தம்பியென்றே அதியமானை மொழியக் காண்கிறோம். ஆதலால் சேரரும் சேரர் குடியினனான அதியமானும் பொதுவாகவே மழவர் தலைவராயினரென்பது விளங்கும்.

இனி, மற்றொருவனான ஓரியும் மழவர் பெருமகனென்ற அம்முறையே சேரரைச் சார்ந்தவனாகின்றான். ஆகவேதான், அவனாண்ட கொல்லி மலையைப் புலவர்கள் சேரர்க்குரியதாகச் செப்புவதோடு அவனைப்போலவே சேரனையும் கொல்லிப் பொருநனெனக் குறிக்கின்றனர். அதனால் மலையமான் திருமுடிக்காரி இவ்வோரியைக் கொன்று இவனுடைய கொலலி மலையைச் சேரர்க்குக் கொடுத்ததாக வரும் குறிப்பினைக்கொண்டு அதன்பின்னர்தான் அம்மலை சேரர்க்குரியதாயிற்று எனகருதுதல் பொருந்தாதென்பது புலனாம்.

ஆக, ஓரியின் ஆட்சியிலிருந்த கொல்லிமலை சார்ந்த இடங்களும் அதியமானின் ஆட்சியிலமைந்த தகடூர்ப் பகுதிகளும் பிறவுமடங்கிய கொங்குநாடு முழுமையும் சேரநாட்டுப் பேரெல்லைக்குட்பட்டதென்பதை இங்கே முடிபாகக காணலாம். கொங்கு நாடு சேரநாட்டின் உடபடடதனால்தான அக்கொங்கு நாட்டை உட்கொண்ட சேரநாடடு வேந்தன கொங்கர்கோ (பதி.88,90) எனக் குறிகபபெறுவதோடே, கொங்குநாட்டுச் சிற்றரசர்களாகிய அதியமானையும் ஓரியையும் போலவே அந்நாட்டு மக்கள் தலைவனாக, 'மழவர் மெய்ம்மறை' (பதி.21, 55) எனவும் பாடபபெறுகின்றான்

மறறு, ஓரி சேரரைச் சேர்ந்த சிற்றரசனாயின், கொல்லிமலை சேரநாட்டுப் பேரெல்லைக்குட்பட்டதாயின்

அவ்வோரியைக் கொன்று அவனாட்சியிலிருந்த கொல்லி மலையைச் சேரர்க்குக் கொடுத்தான் காரி என்ற குறிப்பு முரண்படாதோவெனின், படாது. சேரவேந்தனுக்கு அடங்கிய சிற்றரசனாய், அச்சேரநாட்டுக்கு உட்பட்ட கொல்லிமலைப் பகுதியை ஆண்டிருந்த ஓரி, தன் பேரரசனாகிய சேரனின் மேலாண்மையை இகழ்ந்து அவனுக்கடங்காது ஒழுகிய போதுதான் அச்சேரன் தன்னைச் சார்ந்த மலையமானை ஏவி அவ்வோரியைக் கொல்வித்து, அவனாட்சியிலிருந்ததும் தன் பேரெல்லைக்குட் பட்டதுமான கொல்லிமலையைத் தான் கையகப்படுத்திக் கொண்டானாதல் வேண்டுமென்று இதனைக் கருதலாம். பல்யானைச் செல்கெழுகுட்டுவன் கொங்கர்நாட்டை வென்று அகப்படுத்தானாகப் பாலைக்கௌதமனார் பாடியதன் (பதி.22) கருத்தும் இதுவேயாகலாம். ஆகவே, கொங்குநாடு சேரநாட்டுப் பேரெல்லைக்குட் பட்டதேயாயினும் அக்கொங்குநாட்டை ஆண்ட குறுநில மன்னர்கள் சேரப்பேரரசர்க்கு அடங்கியவர்களேயாயினும், வாய்ப்பு நேர்ந்த காலங்களிலெல்லாம் அச்சிற்றரசர்கள் தம் பேரரசரின் மேலாண்மையை மீறித் தனியாட்சி நடத்தத் தலைப்பட்டனரென்பது புலனாம். அவ்வாறு அவர்கள் சேரப்பேரரசரின் மேலாண்மையிலிருந்து விலகித் தனியாண்மை செலுத்திய காலங்களில்தான் அச்சேரரேயன்றி ஏனை வேந்தரும் வேளிரும் அவர்களைத் தனித்தனி வென்றும் ஓட்டியுமிருக்கின்றனர் என்றும் எண்ணலாம்.

இனி, அதியமான் ஓரி ஆகியோர் ஆட்சிக்குட்பட்ட கீழ்க்கொங்கநாடே மழவர்கள் வாழ்ந்தமையால் மழகொங்கம் என வழங்கப்பட்டதென்பதைப் பிற்கால,தே பாண்டியன் நெடுஞ்சடையனுடைய வேள்விக்குடிச் செப்பேட்டில் வருகின்ற,

> பூவிரியும் பொழிற்சோலைக் காவிரியைக் கடந்திட்டு
> அழகமைந்த வார்சிலையின் மழகொங்கம்
> அடிப்படுத்தும் [10]

என்னும் பகுதியால் தெளியலாம். கொங்கு நாட்டின் மேற்பகுதி குடகொங்கமெனவும் மீகொங்கமெனவும் வழங்கப்பெறறது.

> குடகொங்கத்து அடல்மன்னனைக்
> கொல்களிற்றொடும் கொண்டுபோந்து [11]

எனவரும் நெடுஞ்சடையன் பராந்தகபாண்டியனது சீவரமங்கலச் செப்பேட்டடியும்,

மீகொங்கில் அணிகாஞ்சிவாய்ப்
பேரூரர் பெருமானை [12]

எனவரும் சுந்தரர் தேவாரப பாடலடியும் இவற்றிற்குச் சான்றுகளாம்.

122 மலையமான் நாடு

இனி, திருகோவலூரைத் தலைநகராக் கொண்டு ஆண்ட மன்னர் மரபினர் மலையமான் எனக் குறிக்கப்பெற்றனர். மற்று, மலையமானென்பதே சேரர்க்குரிய பெயர்களுள் ஒன்றாகவும் சூடாமணி நிகண்டில் காணப்படுவதை மேலே கண்டோம்.

மலையமானென்ற குடிப்பெயர் மலைநாட்டு மன்னனென்று பொருள்படும். திருக்கோவலூர் நாடு மலைநாடேயாதலால் அந்நாட்டு மன்னர் மலையமானெனப் பெயர்பெற்றனர்.

மலையமானென்ற பெயரின் குறுகிய வடிவமே மலையனென்பதாம். மலையமான் திருமுடிக்காரி பலவிடங்களில் மலையனென்றே குறிக்கப்பெறுதல் காணலாம் (புறம் 123-125, 158; நற். 77, 100, 170, 291; குறு. 198, 312). இப்பெயரும் சேரர்களுப் பொதுவாகி வந்துள்ளதை,

சேரன பொறையன் மலையன் திறம்பாடிக்
கார்செய் குழலாட ஆடாமோ ஊசல்
கடம்பெறிந்த வாபாடி ஆடாமோ ஊசல்
(சிலம்பு 29:24)

எனவரும் சிலப்பதிகாரத்துப் பாடலடிகளால் அறியலாம்.

ஆகவே, திருக்கோவலூர் மலையமான்களும் சேரர் குடியைச் சேர்ந்த சிற்றரசர்களேயென்றும் அவராண்ட குறுநிலமும் சேரநாட்டுப் பேரெல்லைக்குட்படுமென்றும் கருதலாம்.

123. குடநாடு

சேரநாட்டின் வடபால், தமிழகத்தின் வடமேற்கில் அமைந்தது குடநாடு. அது சேரவேந்தரின் பேராட்சியில் அடங்கியிருந்தது.

விசிபிணி முழவின் குட்டுவன் காப்பப்
பசியென அறியாப் பணைபயில் இருக்கைத்
தடமருப் பெருமை தாமரை முனையின்
முடமுதிர் பலவின் கொழுநிழல் வதியும்
குடநாடு (அகம் 91)

எனக் குட்டுவனாகிய சேரவேந்தனே அந்தக் குடநாட்டின் பெருங்காவல் மேற்கொண்டிருந்ததை மொழிவார் மாமூலனார்.

இவ்வாறு சேரவேந்தரின் பேராட்சியில் அடங்கியிருந்த குடநாட்டை அவரது மேலாண்மைக்குச் கீழ்ப்பணிந்த குறுநிலமன்னர் சிலரும் அவ்வக்காலங்களில் ஆண்டிருக்கின்றனர். அம்முறையில் அக்குடநாட்டு மன்னனாக முதலில் எருமையென்பானொருவன் அறிய வருகின்றான். குட்டுவனாட்சியில் பட்டதாகக் குடநாட்டைக் காட்டிய மாமூலனார் தாமே அதனை இந்த எருமையென்பானுக்குரியதாகவும் இயம்புகின்றார்.

நுண்பூண் எருமை குடநாட் டென்னவென்
ஆய்நலம் தொலையினும் தொலைக என்றும்
நோயில ராகநம் காதலர் (அகம் 115)

எனத் தலைமகள் கூற்றில் அமைந்த இவ்வகப்பாடலில் எருமையின் குடநாடென்ற உரிமை காணலாம்.

ஆயின், இந்த எருமையென்பான் வடுகமன்னனென்பதும் இவனாட்டிலே அயிரியாறு ஓடியதென்பதும் நக்கீரரின் அகப்பாடல் ஒன்றால் அறியவருகின்றன.

நேரா வன்தோள் வடுகர் பெருமகன்
பேரிசை எருமை நன்னாட்டு உள்ளதை
அயிரியாறு இறந்தன ராயினும் மயரிறந்து
உள்ளுப தில்ல தாமே (அகம 253)

எனவரும் இப்பாடலடிகளில் எருமை நன்னாடென்று குறிக்கப்படுவது மாமூலனாரால் குறிப்பிடப்பட்ட எருமை குடநாடேயென்பதும் உய்த்துணரப்படும்.

இனிச் சேரநாட்டுப் பேரெல்லைக்குட்பட்ட சிறுநாடான குடநாட்டை ஆண்ட எருமையென்பானை வடுகர் பெருமகனெனக் குறிப்பது இங்கே நினையப்படவேண்டுவதாம். தமிழகத்தின் வடக்கிலும் வடமேற்கிலும் வாழ்ந்த தெலுங்கர், கன்னடர் ஆகிய இருசாராருமே சங்க இலக்கியங்களில் வடுகரென்று பொதுபபட வழங்கப்பெற்றனராகக் கருதவருகின்றனர். வடுகர் பெருமகன் எருமையென்றவிடத்தே இவ்வடுகரைக் கன்னடரென்று காட்டுவார் மு. இராகவையங்கார்.[13] மைசூர் நாட்டின் வடபாலும், பல்லாரி, அனந்தபுரப் பகுதிகளும் படகநாடு (வடுகநாடு) எனவும், அந்நாட்டினர் படகவாரு, படகநாட்டிவாரு எனவும் இன்றும் வழங்கப்படுதலையும் காடடுவார் அவர். வடுகர் பெருமகனான எருமையென் பானுக்கு உரியதும் அயிரியாறு ஓடுவதுமாக மாமூலனாரும் நககீரரும் கூறுகின்ற குடநாடு இப்படகநாடே ஆமென்றும் இந்நாடடில ஓடுவதாக நககீரர் நவிலும் அயிரியாறு இக்காலத்து அகிரியென்ற பெயருடன் துங்கபத்திரையில் கலக்கும் சிற்றாறென்றும் அவர் செப்புவார்.

இவ்வாற்றாலும் சங்கத்தமிழ்ச் சேரநாடு இன்றைய கருநாடாகப பகுதிகளையும் உள்ளடக்கியிருந்தமை உணரப்படும்.

124 துளுநாடு

நேரநாடடின் வடமேற்கில் அமைந்த துளுநாடு கோசர்க்குரியதென்று மட்டுமே மாமூலனாரின் அகபபாடலொன்றினால அறிய வருகின்றது.

மெயமமலி பெரும்பூண் செம்மற் கோசர்
கொம்மையம் பசங்காய்க குடுமி விளைந்த
பாகல ஆர்கைப் பறைக்கண் பீலித்
தோகைக் காவின் துளுநாடு (அகம்.15)

என்று இது கூறபபடுகின்றது. கொங்கு நாட்டுக் கோசரைக்

'கொங்கிளங் கோசர்' (சிலம்பு உரைபெறு கட்டுரை) எனக் குறிப்பதோடு அவரையே 'குடகக் கொங்கர்' (சிலம்பு 30:159) எனவும் இளங்கோவடிகள் கூறுதலால், அன்னோர் குடகு நாட்டை ஆண்டிருந்தமை கொள்ளப்படும். ஆகவே, குடகினையடுத்த துளுநாடும் அக்கோசராட்சியில் அமைந்திருந்ததென்று இங்கே மாமூலனார் குறிப்பிடுவது இனிதே இசைகின்றது.

125. கொண்கான நாடு

சேரநாட்டின் வடமேற்கிலேயே அமைந்த மற்றொரு நாடு கொண்கானம். இது பொன்வளம் மிக்கதென்ற குறிப்புடனே, 'பொன்படு கொண்கானம்' எனக் கூறப்படுகின்றது.

> பொன்படு கொண்கான நன்னன் நன்னாட்டு
> ஏழிற் குன்றம் (நற். 391)

எனவரும் பாலைபாடிய பெருங்கடுங்கோன் பாடலடிகளால் இக்கொண்கான நாட்டை நன்னன் ஆண்டிருந்தானென்றும் இந்நாட்டகப் பட்டதே எழிற்குன்றமென்றும் அறியலாம். ஏழில்மலையென்பது மேலைக்கடலருகேயுள்ள கண்ணனூரி லிருந்து வடக்கே பதினெட்டுக்கல் தொலைவில் உள்ளதென்றும் அப்பெயரோடே இக்காலத்துப் புகைவண்டி நிலையமொன்று இருக்கிறதென்றும் அதனைப் பலரும் சத்தசைலமென்று வழங்குவரென்றும் கூறுவார் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்.[14]

இக்கொண்கான நாடே கொங்கணமென்றும் கூறப்படும்.

126. கட்டியநாடு

சேரநாட்டின் வடபால் தமிழகத்தின் வடமேற்கு எல்லையாய் அமைந்தது கட்டியநாடு. இதனை ஆண்டிருந்தோர் கட்டியர்.

இந்தக் கட்டியநாட்டிற்கு அப்பாற்பட்டதே மொழிவேறுபட்ட வடுகர்தேயம்.

குல்லைக் கண்ணி வடுகர் முனையது
பல்வேற் கட்டி நன்னாட்டு உம்பர்
மொழிபெயர் தேஎத்தர் ஆயினும் (குறு.11)

என்ற மாமூலனாரின் குறும்பாடலொன்றினால் அக்குறிப்பினை அறியலாம். இதனுள், 'பல்வேற்கட்டி நன்னாட்டு உம்பர் மொழி பெயர் தேஎம்' என்பதனால், இக்கட்டியநாடு மொழிபெயராத் தேயமே, தமிழ் வழங்கும் உள்நாடே என்ற உண்மை உணரப்படும்.

13. பாண்டிய நாட்டின் அகநாடுகள்

செந்தமிழ் நாடும் அதன் தெற்கே அமைந்த தென் பாண்டிநாடும் அடங்கியதே பாண்டியநாடு. இதன் அகநாடுகளாகச் சங்க இலக்கியங்களால் அறியவருவன சிலவே. அவை நாஞ்சில்நாடு, பறம்பு நாடு, ஓல்லையூர் நாடு ஆகியனவாம்.

131 நாஞ்சில் நாடு

தமிழகத்தின் தென்கோடியில் குமரிமுனைக்கும் நாகர் கோயிலுக்கும் இடையே பொதிகைமலைத்தொடர்களுள் ஒன்றாய் இக்காலத்தே மருந்துவாழ் மலையென வழங்குகின்ற பண்டைய நாஞ்சில் மலையைச் சூழ்ந்த நாடே நாஞ்சில் நாடாம் இக்காலத்துக் குமரி மாவட்டத்தில் அகத்தீசுவரம், தோவாளை ஆகிய இரு வட்டங்களும் இணைந்த நாடு இனறும நாஞ்சில் நாடென்றே வழங்கக் காணலாம்.

இந்நாஞ்சில் நாட்டைச் சங்க காலத்தில் பாண்டிய வேந்தனின் ஆணைக்கடங்கி ஆண்டிருந்தவன் நாஞ்சில் பொருநன (புறம்.137, 139, 140, 380) என்ற வல்வேல்கந்தன் (புறம் 380) இவனே நாஞ்சில் வள்ளுவனென்றும் குறிக்கப் பெறுவான் (புறம் 137.140, 380 பாடற்குறிப்பு)

132. பறம்பு நாடு

பாண்டிய நாட்டில இக்காலத்துப் பிரான்மலையென வழங்கும் பண்டைப் பறம்புமலையைச் சூழ்ந்த முந்நூறு ஊர்களைக் கொண்டது பறம்பு நாடு. இதனைப

பாண்டியனின் ஆணைக்கு அப்பாற்பட்டு ஆண்டிருந்தவன் பாரிவேள்.

பாரியின் இந்தப் பறம்புநாட்டிற்குப் பற நாடென்ற பெயர் வழக்கமும் உண்டென்பதை,

> நறுநீல நெய்தலும் கொட்டியும் தீண்டிப்
> பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி
> பறநாட்டுப் பெண்டிர் அடி [15]

எனவரும் பழம்பாடலால் அறியப்படும். ஆதலின் அம்முறையே பறம்புமலைநாடு பறமலைநாடென்றாகி, அப்பறமலைநாடே காலப்போக்கில் புறமலைநாடானது என்பதையும் அந்நாட்டுத் திருப்புத்தூர்ச் சிவன்கோயில் கல்வெட்டு ஒன்றில் காண்கிறோம்.

> "புறமலைநாட்டுப் பொன்னமராவதி யூருடையான்
> திருக்கொடுங்குன்றூருடையான்" [16]

என்று காணப்படுகின்ற இத்தொடரினால், பொன்னமராவதியையும் திருக்கொடுங்குன்றூரையும் தன்னகத்துக் கொண்டதாகப் புறமலை நாடென்ற இப்பறமபுமலை நாட்டைப் பார்க்கலாம்.

இனிப் பறம்புநாடென்ற பெயர் வழக்கும் காலப்போக்கில் பிரமநாடென்று மருவியதைப் பொன்னமராவதிக்கும் கொடுங்குன்றூருக்கும் அண்மையில் உள்ள கொட்டாம்பட்டி மலைசார்ந்த வட்டாரவழக்கில் காண்கிறோம். அம்மலைசார்ந்த நாட்டுப்புறத்தில் இக்காலத்தும் பிரமநாடென்ற பெயர் வழக்கம் காணப்படுகின்றது.

ஆக, இப்போது பிரான்மலையென வழங்கும் கொடுங்குன்றமே பாரியின் பறம்புமலையென்றும் இங்கே குறிப்பிடப்பட்ட இவ்வூர்களையெல்லாம் அப்பறம்புநாடு அகப்படுத்தி இருந்ததென்றும் அறியலாம்.

1.3.3 ஒல்லையூர் நாடு

பாண்டிய நாட்டின் வடவெல்லையான வெள்ளாற்றின் தென்கரைநாடே ஒல்லையூர் நாடாம்.

இவ்வொல்லையூர் நாட்டின் தலைநகரான ஒல்லையூர் இக்காலத்துத் திருமயம் வட்டத்தில் ஒலியமங்கலமென வழங்கி வருகின்றது.

இவ்வொல்லையூரைக் குறித்துக் கூறுகின்ற உ.வே. சாமிநாதையர், "இது கோனாட்டிலுள்ள ஒலிய மங்கலமென்னும் ஊர்"[17] என்பார். எனவே, இப்பகுதி கோனாடென்பது அவர் கருத்தாகின்றது. இதன் வழிமொழியாக ஔவை துரைசாமிப் பிள்ளையின் விளக்கங்கள் சிலவும் அறியவருகின்றன. பாண்டிய நாட்டிற்கும் சோழநாட்டிற்கும் எல்லையாய் ஓடுகின்ற தென்வெள்ளாற்றின் இருகரைமருங்கும் பரவிநின்றது முற்றுமே கோனாடென்றும் அதில் தென்கரை சார்ந்தது தென்கோனாடென்றும் வடகரை சார்ந்தது வடகோனாடென்றும் வகுத்துக்காட்டித் தென்கோனாட்டிலே இவ்வொல்லையூர் நாடும் உள்ளடங்கியிருந்த தாய் உரைப்பார் அவர்.[18] ஆயின், இது பிற்கால நிலையென்பதை அவரது மற்றொரு கூற்றினாலேயே அறியலாம். சங்ககாலத்தில் வெள்ளாற்றின் வடகரைப் பகுதியே கோனாடென்றும் தென்கரைப் பகுதி ஒல்லையூர் நாடென்றும் பெயர் பெற்று, ஒலலையூர் நாடு பாண்டியர்க்கும் கோனாடு சோழர்க்கும் உரியனவாய் இருந்தனவென்று தம்முடைய, 'மதுரைக்குமரனார்' என்னும் நூலிலே அவர் தெளிந்து கூறுவார்.[19]

ஆகவே, பாண்டிய நாட்டின் வடகோடிக் குறுநிலமாக இவ்வொல்லையூர் நாட்டை உணரலாம். ஒல்லையூர்கிழான் மகன் பெருஞ்சாத்தன் என்பானொருவன் இக்குறுநிலத்தை ஆண்டிருந்து மாண்டானாக,

> ஆண்மை தோன்ற ஆடவர்க கடந்த
> வலவேற் சாத்தன் மாய்ந்த பின்றை
> முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே
>
> (புறம். 242)

எனக குடவாயிறகீரத்தனார் பாடிய கையறுநிலைப் பாடல் ஒன்று புறநானூற்றிலே காணப்படுகின்றது. ஆதலின், அவன் மரபினரே இதன் அரசரென்பது அறியப்படும்.

மற்றுப பாண்டிய வேந்தருள் ஒருவனான பூதபபாண்டியன் இவ்வொல்லையூரை வென்று தன

நாட்டொடு சேர்த்த சிறப்பினால் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் எனப் பெயர்பெற்றதைக் காண்கிறோம் (புறம் 71). ஆதலால், இவ்வொல்லையூர் சிலகாலம் பெருஞ்சாத்தன் மரபினரின் தனியாட்சியில் இருந்ததென்றோ அன்றிச் சோழவேந்தரால் கைப்பற்றப்பட்டு அவர் நாட்டோடு இணைந்திருந்ததென்றோ எண்ணக்கிடக்கின்றது.

1.4. சோழநாட்டின் அகநாடுகளும் தமிழகத்தின் வடபரப்பும்

பன்றிநாடு, புனல்நாடு, அருவாநாடு, அருவாவடதலைநாடு ஆகிய நால்நாடுகளும் அடங்கிய பெருநாடு சோழநாடு.

சங்க இலக்கியங்களில் சோழநாட்டின் தென்பால் கோனாடும் வடபால் ஓய்மானாடு, வேங்கடநாடு ஆகிய இரண்டும் கூடிய மூன்றுமே எடுத்துமொழியப்பெறுகின்றன.

1.41. கோனாடு

சோழநாட்டின் தெற்கெல்லையாகிய வெள்ளாற்றின் வடகரையில் அமைந்தது கோன்நாடு. இஃது, இன்றைய புதுக்கோட்டை மாவட்டத்து ஆலங்குடி, குளத்தூர் ஆகிய இரு வட்டங்களின் இணைந்த நிலப்பரப்பாம் என்று காண்கிறோம்.

இக்கோனாடே சோழநாட்டின் தென்கோடியில் அமைந்த உள்நாடாகும். இதற்குத் தெற்கே வெள்ளாற்றின் தென்கரை சார்ந்து அமைந்த ஒல்லையூர் நாடு பாண்டியநாட்டின் பேரெல்லைக்குட்பட்டிருந்தது. அது மேலே காணப்பட்டது.

1.42. ஓய்மானாடு

ஓவியர்குடி மன்னனான ஓவிமான் பெயரே ஓய்மான் என மருவியதாதலின், அந்த ஓய்மானாட்சிக்கு உட்பட்ட நாடே ஓய்மானாடாயிற்று என்று உணரலாம். இஃது இக்காலத்துத் திண்டிவனம் வட்டத்தையும் மதுராந்தக வட்டத்தின் தென்பாலையும் உள்ளடக்கியிருந்ததாய் உணரப்படுகின்றது.[20]

மற்று, இவ்வோய்மானாடே மாவிலங்கையென்றும் (புறம்.176: சிறுபாண்.120), இலங்கையென்றும் (புறம்.379) மறுபெயர்களைப் பெறுகின்றது. ஆயின், மாவிலங்கை முதற்கண் ஓர் ஊரின் பெயராய்ப் பின்னர் அவ்வூரைச் சூழ்ந்த நாட்டிற்குப் பெயராயிற்று என்று எண்ணலாம். இக்காலத்துத் தென்னார்க்காடு மாவட்டம் திண்டிவனம் வட்டத்தில் மேன்மாவிலங்கை, கீழ்மாவிலங்கை என்று இருகூறுற்றதாய் ஆழ்ந்த அகழியும் நீண்ட மதிலுமாகிய அறிகுறிகளோடே இவ்வூர் திகழ்கின்றது என்பார் ஔவை துரைசாமிப்பிள்ளை (புறம்.379 உரை). இனி, நாடென்ற அளவில் இம்மாவிலங்கையென்பதைப் புனல்நாட்டுக்கு வடக்கிலுள்ள அருவாநாடு, அருவாவடதலைநாடு என்ற இரண்டும் சேர்ந்த இடமென்பர் என்று எடுத்துமொழிவார் உ. வே. சாமிநாதையர்.[21] அவரே, இவ்வோய்மானாட்டில் அமைந்ததாகச் சிறுபாணாற்றுப் படையில் பாடப்பட்ட வேலூர் இக்காலத்தே உப்புவேலூரென வழங்குவதே என்பார். எனின், அது விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நலலூருக்கும் தெற்கே கெடிலவாற்றின் வடகரையில் உள்ளது. அஃது அருவாநாடேயாதலால் அந்நாடு ஓய்மானாட்டின் உட்பட்டதேயென்பது உணரப்படும். ஆகவே, மேற்குறித்த திண்டிவனம், மதுராந்தக வடடங்களேயன்றியும் அவற்றின் தெற்கேயும் வடக்கேயும் அகனறு திகழ்ந்ததாக இவ்வோய்மானாட்டை அறியலாம். ஓயமான நல்லியக்கோடனும் ஓய்மான் வில்லியாதனும் இநநாடடை ஆண்டிருந்தாராய் அறிய வருகின்றனர்.

14.3. வேங்கடநாடு

தமிழகத்து வடவெல்லையாய் விளங்கிய வேங்கடமலை, தொண்டையர், கள்வர்கோமான்புல்லி, கருமபனூர்கிழான் மற்றும் ஆதனுங்கன ஆகியோர் ஆட்சியில் இருந்ததாய அறிந்தோம். அவருள் கரும்பனூர்கிழான் வேஙகடநாடனென்றே விளம்பப் பெறுதலால், வேஙகடமலையை உளளிடடு அதன தெனபால் அமைந்த நாடு வேஙகடநாடென்ற பெயரோடே விளங்கியதை உணரலாம்.

ஆகவே, இனறைய ஆந்திரமாநிலத்தின் தென் மாவடடமாகிய சித்தூர் மாவட்டத்தில் திருவேங்கடமாகிய திருமலைததிருப்பதியை உள்ளிட்டு அதன் தென்பால் வடடஙகளும தமிழகத்து வடமாவட்டங்களாகிய

திருவண்ணாமலை, வேலூர், செங்கற்பட்டு, சென்னை மாவட்டங்களும் சேர்ந்த நிலப்பரப்பே பண்டைய வேங்கடநாடு என்பது விளங்கும்.

15. சங்ககாலத் தமிழ் அரசர்

சங்ககாலத் தமிழகத்தின் முப்பெருநாடுகளையும் ஆண்ட பெருநிலமன்னர்கள் சேர, பாண்டிய, சோழர் என்ற மூவேந்தர்களே

வேந்தரென்ற சொல் சிறப்பாக இம்மூவர்க்கே உரியது. வேறெவரும் இச்சொல்லால் விளம்பப்பெறுவதில்லை.

வேந்தரையடுத்த நிலையில் வேளிரும் குறுநில மன்னரும் வருகின்றனர்.

வேளிரெல்லோரும் குறுநிலமன்னரேயாயினும் குறுநில மன்னரெல்லோரும் வேளிராகார். எனவே, வேளிரைக் குறுநில மன்னரினும் சற்றே மேம்பட்ட சிறப்புடையோராகக் காணலாம்.

குறுநில மன்னரையடுத்த நிலையில் சீறூர் மன்னரை அறிகிறோம்.

வேளிர், குறுநில மன்னர், சீறூர் மன்னர் ஆகியோர் தத்தம் ஆட்சியிடங்களை உள்ளடக்கிய பெருநில வேந்தர்தம் பேராட்சிக்குக் கீழ்ப்பணிந்து ஆண்டனர்.

16. மூவேந்தர் தொன்மை முறை

முத்தமிழ் நாட்டு மூவேந்தர் குடிகள் மிகப்பழங்குடிகளாம்.

வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரிதல் இன்று (குறள். 955)

எனவரும் திருக்குறளின்கீழ், "பழங்குடி - தொன்றுதொட்டு வருகின்ற குடி; தொன்றுதொட்டு வருதல், சேரசோழ பாண்டியரென்றாற் போலப் படைப்புக் காலந்தொடங்கி

மேம்பட்டு வருதல்" என உரைக்கும் பரிமேலழகரின் சிறப்புரை இங்கே குறிக்கொண்டு நோக்கத்தகும். எனவே, பழந்தமிழ் நாட்டில் மக்கள் தோன்றிய காலந்தொட்டே மேம்பட்டு விளங்கிய பழங்குடிகள் மூவேந்தர்குடிகள் என்பது போதரும்.

இனி, தமிழ் மூவேந்தருள்ளும் சேரவேந்தரே முதற்கண் குறிக்கப் பெறுவர். இன்றுள்ள தமிழ்நூல்களுள் தொன்மை வாய்ந்ததான தொல்காப்பியத்தில், போர்வேந்தரின் அடையாளப் பூக்கள் குறிக்கப்பெறுமிடத்து,

போந்தை வேம்பே ஆரென வரூஉம்
மாபெருந் தானையர் மலைந்த பூவும்[22]

என்று சேரரின் பனம்பூ முதலிலும் பாண்டியரின் வேப்பம்பூ இடையிலும் சோழரின் ஆத்திப்பூ கடையிலுமாகக் குறிக்கப் பெற்றுள்ளன. இவற்றின் முறைவைப்பினை மிக நுட்பமாக உளங்கொண்ட இளம்பூரணர் தொல்காப்பித்திலேயே பின்னர், வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு[23] என்ற நூற்பாவடிக்கு உரைவரையுங்கால், "வளவிய புகழையுடைய சேரன் பாண்டியன் சோழன் என்னும் மூவரது தமிழநாடாகத்து" என்றெழுதுவார். இவற்றால் மூவேந்தருள் முதல்வர் சேரரென்ற தொன்மை புலனாகும்.

எட்டுதொகை நூல்களுள் பழையதான புறநானூறறிலும் கடவுள்வாழ்த்துப் பாடலையடுத்துப் பதினைந்து பாடல்கள் முறையே சேர பாண்டிய சோழ வேந்தர்களைப பற்றியனவாக மும்மூன்றாய் ஐந்து சுறறுகளில் அமைந்துள்ளன. அவற்றை நோக்க அததொகையைத் தொகுத்த புலவர் முதலில் மூவேந்தரின் தொன்மை நிலையை உளத்துட்கொண்டு தொகுக்கத் தொடங்கினார் என்று கருதலாம்.

பத்துபபாடடுள ஒன்றாகிய சிறுபாணாற்றுப்படையில மூவேநதரும்.

குடபுலங் காவலர் மருமான் (சிறு.47)
தென்புலங் காவலர் மருமான (சிறு.63)
குணபுலங் காவலர் மருமான் (சிறு.79)

எனற முறையிலேயே குறிகபப பெறுகின்றனர். திசையடைவு கருதிக் குணபுலம குடபுலம் தெனபுலமென்றோ எழுத்தடைவு

கருதிக் குடபுலம் குணபுலம் தென்புலமென்றோ கூறாது குடபுலம் தென்புலம் குணபுலமென்று குறித்துள்ள அடைவு சேரபாண்டிய சோழரின் தொன்மை முறையைக் கருதியதாகவே இருத்தல் வேண்டுமென்று எண்ணலாம்.

புறப்பொருள் வெண்பாமாலையும் வேந்தர் போர்க்குப் புறப்படும்போது அணியும் பூக்களைக் கூறுமிடத்துச் சேரன் பூ, பாண்டியன் பூ, சோழன் பூ என்னும் முறையிலேயே கூறுகின்றது.

சிலப்பதிகாரத்து மதுரைக்காண்டத்தில் ஆய்ச்சியர் ஆடும் குரவைக் கூத்தினிடையே, வேந்தரைத் திருமாலாகக் கண்டு பாடும் பூவைநிலைப் பாட்டுக்களான உள்வரி வாழ்த்திலே பாண்டியன், சோழன், சேரன் என்ற முறையில் மூவேந்தரும் பாடப்பெறுகின்றனர். ஆயின், அவற்றிற்கு உரைவரையும் அடியார்க்கு நல்லார், "இவற்றுள் சேரனை முற்கூறாது பாண்டியனை முற்கூறியது என்னையெனின்..."[24] என்று வினாவெழுப்பி அமைதி கூறுதலாலும் இயல்பிலே மூவேந்தருள் சேரரை முற்கூற வேண்டுமென்ற மரபுமுறை புலனாம்.

சேர சோழ பாண்டியரென்னும் மரபு மாறிய வழக்குப் பிற்காலத்தே எழுத்தடைவு கருதி ஏற்பட்டதாகலாம்.

ஆகவே, தொன்மைநிலையில் சேரர் முதல்வராகவும், பாண்டியர் இரண்டாமவராகவும் சோழர் மூன்றாமவராகவும் அமைகின்றனர்.

தமிழ் மூவேந்தர் தொன்மை குறித்த இந்த அடைவிற்குத் தமிழகத்து முந்நில அமைப்பும் அவற்றின் மக்கள் தோற்றமும் காரணமாதல் கூடும். நிலத்தோற்றத்தில் குறிஞ்சியாகிய மலைநிலம் தோன்றி, அதைச் சார்ந்து முல்லையாகிய காட்டுநிலமும் அதனையடுத்து மருதமாகிய வயல்வெளியும் அதன்பின் நெய்தலாகிய கடற்கரையும் வந்தனவாகலாம். கல்சிதைந்து மண்ணாகிய முறையும் இங்கே கருதப்படும்.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு
முன்தோன்றி மூத்த குடி[25]

என்ற பாடலும் கல்தோற்றத்தின்பின்னே மண்தோற்றத்தைக் கூறுதல் காண்க. இந்தக் கல்தோன்றி மண்தோன்றாக் காலமென்பதற்கு உரையெழுதும் பெருமழைப்புலவர் சோமசுந்தரனாரும், குறிஞ்சி நிலம் தோன்றி மருதம் முதலிய ஏனைய நிலங்கள் தோன்றாத அப்பழைய காலமென்றே பொருள்கூறுவார். ஆக, கல்தோன்றி அதன்பின் மண்தோன்றாத இடைக்காலத்தே முதன்முதல் தோன்றிய மூத்த குடிமக்கள் மலைநாட்டினரென்பது விளங்கும். விளங்கவே, அம்மலைநாட்டு வேந்தனே தொல்வேந்தனென்பதும் தெளிவாம்.

முத்தமிழ் வேந்தர் தொன்மை முறையில் உள்ளிட்டுச் சேரர் தொன்மை மேலே காணப்பட்டது. இனித் தனிநிலையில் அன்னோர் தொன்மையையும் காணலாம். வடமொழி ஆதிகாவியமாகிய வான்மீகராமாயணத்தே, சீதையைத் தேடிவரும்படி வானரவீரரைச் சுக்கிரீவன் ஏவியபோது, அவளைத் தேட வேண்டிய இடங்களாக அவன் குறிப்பிட்டவற்றுள் கேரள நாடும் முரசீபத்தனமும் உள்ளன.[26] அம்முரசீபத்தனமென்பது சேரநாட்டில் மேல்கடற் கரையிலுள்ள முசிரிப்பட்டினமாகக் கருதப்படுகின்றது.[27] எனவே, அம்முசிறியை உடைய சேரரின் தொன்மை விளங்கும்.

இனி, மோரியப் பேரரசனாகிய அசோகனின் கலவெடிலே சேரளபுத்திரரென்ற சொல்லாட்சியும் அவரைபபறிய குறிப்பும் காணப்படுதலால்[28] அதுகொண்டும் சேரரின தொன்மையை உணரலாம்.

அடுத்து, மாபாரதப் போரிலே இருதிறப் படைகட்கும் பெருஞ்சோறளித்த சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனைப் பாடிய முரஞ்சியூர் முடிநாகராயரின் புறப்பாட்டும் (புறம்.2) அதன் வழிமொழியான இளங்கோவடிகளின் சிலப்பதிகாரப் பாடலும் (சிலம்பு.29:24) காணபபடுவன கொண்டும் அப்பாரத காலத்திலேயே சிறந்து விளங்கிய சேரர் தொன்மையை அறியலாம்.

17 மூவேந்தர் ஆட்சிமுறை

முத்தமிழ் நாடுகளைச் சேரபாண்டிய சோழரென்ற முக்குடி வேந்தரே ஆண்டனராயினும் ஒரு நாடு முழுவதையும்

ஒரு காலத்து ஒரு குடியில் வந்த ஒருவரே ஆண்டனரெனக் கருதுதற்கில்லை. சேரநாட்டையாண்ட சேரருள் ஒருவர் வஞ்சியிலிருந்து ஆளும்போதே மற்றும் ஓரிருவர் தொண்டியிலிருந்தும் மாந்தையிலிருந்தும் ஆண்டு வந்த வரலாறுகளைக் காண்கிறோம். அதேபோல் சோழநாட்டையாண்ட சோழருள் ஒருவன் உறையூரிலிருந்து ஆளும்போதே ஆவூரிலிருந்தும் புகாரிலிருந்தும் மற்றும் சிலர் ஆண்டிருந்தமையினையும் அறிகிறோம். அவ்வாறே பாண்டிய நாட்டை மதுரையிலிருந்தும் கொற்கையிலிருந்தும் பாண்டியவேந்தர் ஆண்டிருந்தனராகக் காணலாம்.

சேரவேந்தரை முறையே சிறப்பித்துப் பாடும பதிற்றுப்பத்தின் பதிகங்களில் அவ்வவ்வேந்தரின் உறவுமுறையும் ஆட்சியாண்டுகளும் குறிக்கப்பெற்றுள்ளன. இரண்டாம்பத்தின் தலைவனான இமையவரம்பன் நெடுஞ்சேரலாதன் ஐம்பத்தெட்டாண்டுகள் ஆள, அவன் தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவன் இருபத்தைந்தாண்டு கள் ஆண்டான்; இமையவரம்பனின் மக்கள் மூவருள் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் இருபத்தைந்தாண்டும் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் ஐம்பத்தைந்து ஆண்டும் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் முப்பத்தெட்டாண்டும் ஆண்டனர்; எனவே, இன்னோரெல்லாம் ஒருவர்பின் ஒருவர் ஓரிடத்தேயிருந்து முறைப்படி ஆண்டனரெனக் கொள்வதற்கு ஆட்சியாண்டுகளும் அகவைகளும் பொருந்தாவென்பது போதரும். இமையவரம்பன் ஐம்பத்தெட்டாண்டுகள ஆண்டு முடியும்வரைப் பல்யானைச் செல்கெழு குட்டுவன் இளவரசனாய் இருந்தானென்றோ, அவன் இருபத்தைந் தாண்டுகள் ஆண்டு முடியும் வரை இமையவரம்பனின் மகன் இளவரசனாயிருந்தானென்றோ கருதவியலாது. மற்றும், நார்முடிச்சேரல் இருபத்தைந்தாண்டுகள் ஆண்டபின் செங்குட்டுவன் ஐம்பத்தைந்தாண்டுகள் ஆளும்வரை நார்முடிச் சேரலின் தம்பி ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் இளவரசனாயிருத்தலும் இயலாது. ஆதலால், இன்னோரில் ஒருவர் ஆட்சிக்காலத்திலேயே மற்றொருவரும் வேறொரு பகுதிக்கு வேந்தராகி ஆண்டனராதல் வேண்டும். ஆயினும், குடியொற்றுமை காரணமாக வேற்றுமையின்றி விளங்கினரென்றும் சேரமானென்ற குடிப்பொதுப்பெயரைக் கொண்டனரென்றும் கருதலாம்.

18. வேந்தரும் வேளிரும்

சங்க இலக்கியங்களின் பலபாடல்களில் (பதி.30,49,88; அகம்,246; மது.55) வேந்தரோடே உடன்படுத்தி வேளிர் மொழியப் பெறுகின்றனர். வேந்தருக்கு அடுத்தநிலையில் சிறப்பிற்குரியோராய் வேளிர்களை அறிகிறோம். பெருநில வேந்தரின் பேராட்சிக்கு உட்பட்ட சிற்றரசர்களாய் விளங்கிய இவ்வேளிர் அவர்தம் அரசியற் செயற்பாடுகளிலும் போர்ச்செயல்களிலும் துணைநின்று வினைபுரிந்தனர்.

பல்யானைச் செல்கெழுகுட்டுவனும் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனும் ஆகிய சேரவேந்தர்களுக்கெதிராக சோழ பாண்டியராகிய ஏனை இருபெருவேந்தரும் அவ்வக்காலங்களில் படையெடுத்தபோது அவ்வேந்தர்களுடனே வேளிர்களும் கூடி வஞ்சினங்கூறி வந்தனராகக் காண்கிறோம் (பதி.30,49). மற்றொருகால் சேரபாண்டியர் இருபெருவேந்தரும் தத்தமக்குப் பணிந்து துணைவந்த பதினொரு வேளிரொடும் கூடி வெண்ணிவாயில் என்னுமிடத்தே போர்புரிய வந்தபோது சோழன் கரிகாற் பெருவளத்தான் அவர்களை எதிர்த்துப போரிட்டு மடிந்ததை அறிகிறோம் (அகம்.246). தமிழ் மன்னரெலலோரும் தலைமயங்கிப் பொருத தலையாலங்கானத்துப் போரிலே சேரல், செம்பியன் ஆகிய இருபெருவேந்தரொடும் இருங்கோவேண்மான், எருமையூரன், எழினி, திதியன், பொருநன் என்ற ஐம்பெருவேளிரும் கூடிவந்து பாண்டியன் நெடுஞ்செழியனை எதிர்த்துப் போரிட்டு மடிந்ததும் புலப்படப் பார்க்கிறோம் (அகம்.36; மது.55-56). இம்முறையில் இவர்களுக்கிடைப பட்ட போர்வினைக் கூட்டுறவு புலப்படக் காணலாம்.

இனி, வேநதர்கள் மணத்தொட்ர்பு கொள்ளும் மாண்பினராகவும் வேளிர்கள் சிறந்து விளங்கினர் எனக் காணலாம். வெளியன்வேள் மகள் நல்லினி என்பாளைச் சேரமான் உதியஞ்சேரலும், வேளாவிக்கோமான் பதுமன் மகளிர் இருவருள் ஒருத்தியை இமையவரம்பன் நெடுஞ்சேரலாதனும் மற்றொருத்தியைச் செல்வக் கடுங்கோ வாழியாதனும், மையூர் கிழானாகிய வேளின் மகள் அந்துவஞ்செள்ளையைப் பெருஞ்சேரல் இரும்பொறையும் மணந்து மக்களைப் பெற்றனராகப் பதிற்றுப்பத்தின் பதிகங்கள (2,4,6,8,9) பகர்கின்றன. சோழவேந்தருள் உருவப்

பல்தேர் இளஞ்சேட்சென்னி அழுந்தூர்வேள் மகளையும் அவன் மகன் கரிகாற்பெருவளத்தான் நாங்கூர்வேள் மகளையும் மணந்தனரென்று நச்சினார்க்கினியர் எடுத்துரைப்பார்.[29] இவ்வாற்றால் வேந்தருக்கும் வேளிருக்கும் இடையிலான மண உறவுமுறை உடன்பாடுகள் உணரப்படும்.

19. வேந்தரும் குறுநிலமன்னரும்

பெருநிலவேந்தரின் பேரெல்லைக்கு உட்பட்ட குறுநில மன்னர்களும் வேளிர்களைப் போலவே தத்தம் வேந்தருடைய பேராட்சியின் கீழ்ப்பணிந்து அவர்தம் அரசியல் செயல்பாடுகளிலும் போர்ச் செயல்களிலும் துணைநின்று வினைசெய்தனர்.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் அவைக்களத்தில் அவனுக்கு உட்பட்ட குறுநில மன்னர்கள் நிறைந்து அவனைப் புகழ்ந்தேத்தியிருந்த நிலைமையை மதுரைக் காஞ்சியில் காண்கிறோம்.

மறமிகு சிறப்பின் குறுநில மன்னர்
அவரும் பிறரும் துவன்றிப்
பொற்புவிளங்கு புகழவை நிற்புகழ்ந் தேத்த
(மது. 776-778)

என்று இதனை எடுத்துக் கூறுவார் மாங்குடி மருதனார்.

இனிக், குறுநில மன்னர்கள் பலர் தத்தமக்கு மேலுள்ள பெருநில வேந்தர்களின் படைத்தலைவர்களாகியும் விளங்கியமை காணலாம். அம்முறையில் குதிரைமலைக்கிழவன் பிட்டங்கொற்றன் சேரன் மறவனாயும், அதிகன், கோடைப்பொருநன் பண்ணியென்ற கடியநெடுவேட்டுவன், நாஞ்சில் பொருநன் வல்வேற் கந்தன் ஆகியோர் பாண்டியன் மறவர்களாயும் மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணன் சோழன் மறவனாயும் அறிய வருகின்றனர்.

110. வேந்தரும் சீறூர் மன்னரும்

தமிழகத்து அரசநிலைகளில் பெருநில வேந்தரும் சீறூர் மன்னரும் முறையே உச்சிப்படியிலும் கீழ்ப்படியிலும் நிற்பவர்களே. ஆயினும், ஆட்சியளவில்

பெருநில வேந்தரிடத்துச் சீறூர் மன்னர் இன்றியமையாச் சிறப்புப் பெற்று விளங்கினர் என்பதை அறியலாம்.

சீறூர் மன்னரெல்லோரும் முதுகுடி மன்னரென்று புறநானூற்றின் வழியில் பின்னர்க் காணப்படும். அம்முறையில் மறமாண்புமிக்க இச்சீறூர் மன்னர் தத்தம் சீறூரை உள்ளடக்கிய பெருநில வேந்தர்க்குப் போர் மறவர்களாய்ப் பகைமுனையில் துணைநின்று வினையாற்றினர். தம் வேந்தனுகுப் பகைவேந்தரால் போர்த்துன்பம் நேருங்கால் அதனைத் தாங்கிப் பகைப்படையைத் தடுத்து நிறுத்துதற்கு இச்சீறூர் மன்னர்களே முனைந்து நின்றிருக்கின்றனர்.

மனைக்குவிளக் காகிய வாணுதல் கணவன்
முனைக்குவரம் பாகிய வென்வேல் நெடுந்தகை
நடுகல் பிறங்கிய உவலிடு பறந்தலைப்
புன்காழ் நெல்லி வன்புலச் சீறூர்
குடியும் மன்னும் தானே கொடியெடுத்து
நிறையழிந்து எழுதரு தானைக்குச்
சிறையும் தானேதன் இறைவிழு முறினே
(புறம்.314)

எனற ஐயூர் முடவனாரின் பாடலில் பகைவேந்தன படைமிகுதியினால தன்வேந்தன் தானைவலி கெட்டுப பின்வாங்க நேருமாயின், மண்டிவரும் பகைப்படைக்குத் தடையாய் நினறு தாங்குபவன் தானேயென்று சீறூர் மன்னனொருவன் சிறப்பிக்கப் பெறுதல் காண்கிறோம். அதனாலேயே அவன் முனைக்கு வரம்பாகிய வென்வேல் நெடுந்தகை யென்றும் மொழியப பெறுகின்றான்.

இனி, இவ்வாறு தன் வேந்தனுக்கு வரும் பகைத் துன்பதனைத் தாங்கி நிறகும் போர்க்களத்தில் விழுப்புண் பெறறுக கிடக்கும் சீறூர் மனனனொருவனை அரிசில் கிழார் பாடலொனறில் அறியலாம.

காககம வம்மோ காதலந் தோழி
வேந்துறு விழுமம் தாங்கிய
பூம்பொறிக கழற்கால் நெடுந்தகை புண்ணே
(புறம்.281)

என்று, இவன் பெற்ற விழுப்புணணை மறமாண்புடைய இகுகுடியின் மகளிரும் மதித்துப் பேசுதல் காணத்தகும்.

இச்சீறூர் மன்னர் போர்முனையில் தம்முடைய வேந்தர்க்கு உள்ளமொன்றிய உயிர்த்துணைவர்களாய் விளங்கினரென்பது ஆலந்தூர் கிழாரின் பாடலொன்றால் அறியவருகின்றது.

புன்புலம் தழீஇய அங்குடிச் சீறூர் . . . .
பாணரொடு இருந்த நாணுடை நெடுந்தகை
வலம்படு தானை வேந்தர்க்கு
உலந்துழி உலக்கும் நெஞ்சறி துணையே
(புறம்.324)

எனவரும் இதனுள், பகைமுனையில் தன்வேந்தன் வீழ்ந்து மடிய நேர்ந்தால் தானும் அவனோடே மடியும் தறுகண்மைமிக்க நெஞ்சறி துணைவனாக இச்சீறூர் மன்னன் எடுத்துப் பாராட்டப் பெறுதலைக் காண்கிறோம்.

சீறூர் மன்னர்கள் தத்தம் பெருநில வேந்தர்க்குப் படைத்துணைவர்களாய் அவர்களோடே பகைமுனைக்குப் போதலன்றி அவர்களின் ஏவலையேற்றுத் தாமே படைத்தலைவராய்ப் பகைமேற் செல்வதுமுண்டு.

சீறூர் மன்னன் நெருநை ஞாங்கர்
வேந்துவிடு தொழிலொடு சென்றனன் (புறம்.319)

என்ற ஆலங்குடி வங்கனாரின் புறப்பாடலடிகளில் இது புலனாம்.

இவ்வாறு தம்பொருட்டுப் போர்த்தொழில் புரியும் சீறூர் மன்னர்க்கு வேந்தர் பொருள் வழங்கிச் சிறப்பிக்கும் வழக்கத்தையும் பாடல்களில் பார்க்கிறோம்.

வேந்துதரு விழுக்கூழ் பரிசிலர்க்கு என்றும்
அருகாது ஈயும் வண்மை
உரைசால் நெடுந்தகை ஓம்பும் ஊரே (புறம்.320)

என்ற வீரைவெளியனார் பாடலடிகளில் வேந்தன் தந்த விழுப்பொருள்களையே பரிசிலர்க்கு ஈயும் வண்மையாளனாய் இச்சீறூர் மன்னன் புகழப்பெறுகின்றான்.

பெருநில வேந்தர்கள் தமக்கடங்கிய சீறூர் மனனர்களிடத்து வேற்றுமையின்றி நல்லுறவை வளர்த்துக

கொள்ளும் நாட்டத்தோடு அவ்வக் காலங்களில் அவர்களுடைய சீறூர்க்குச் சென்று அவருடனே உணவுண்டு வந்தமையும் காண்கிறோம்.

அருமிளை இருக்கை யதுவே வென்வேல்
வேந்துதலை வரினும் தாங்கும்
தாங்கா ஈகை நெடுந்தகை ஊரே (புறம். 325)

என்று வேந்தர்களே சுற்றத்தோடு கூடித் தம்மிடத்து வரினும், அவர்களை வரவேற்றுச் சிறப்பிக்கும் வல்லாண்மையனாய்ச் சீறூர் மன்னன் பாடப்பெறுவதனாலும்,

வரகும் தினையும் உள்ளவை யெல்லாம்
இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தெனக்
குறித்துமா றெதிர்ப்பை பெறாஅ மையின்
குரலுணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து
சிறிது புறப்பட்டன் றோவிலள் தன்னூர் . . . .
வம்பணி யானை வேந்துதலை வரினும்
உண்பது மன்னும் அதுவே (புறம். 333)

எனச் சீறூர் மன்னனின் மனைவி விருந்தோம்பற் சிறப்புடையளாய்ப் பாடப்பெறுமிடத்து வேந்தன் வந்து உண்பது கூறப்படுதலாலும் இதனை விளங்கக் காணலாம்.

இவ்வாறெல்லாம் பெருநிலவேந்தர்க்கு அடங்கி நடக்கும் சீறூர் மன்னர் சிற்சில காலங்களில் அவ்வேந்தர்க்கு அடங்காது எதிர்த்து நிற்கும் இயல்பினராயும் இருந்தனர். பொருளியல் நிலையில் மிகக் கீழிருந்தாலும் போராற்றலில் சீறூர் மனனர் மேம்பட்டுச் சிறந்திருந்தனராதலால் அந்த மறமாண்பு காரணமாக அவர்களுக்கு வேந்தரொடு மாறுபாடு ஏற்படுதல் இயல்பேயெனலாம்.

ஒகல் ஒற்கம் சொலியத் தன்னூர்ச்
சிறுபுல் லாளர் முகத்தவை கூறி
வரகுகடன் இரக்கும் நெடுந்தகை
அரசுவரின் தாங்கும் வல்லா ளன்னே (புறம்.327)

ன்னச் சுற்றத்தாரின் வறுமையை ஒழித்தற்குத் தன்னூரில் செல்வம் படைத்த சிறுபுல்லாளரிடம் போய் வரகு கடன் இரக்கும் நெடுந்தகையாகிய சீறூர் மன்னனொருவன்,

அரசனே தன்மேல் படையெடுத்துவரினும் அவனையெதிர்க்கும் ஆற்றல் வாய்ந்தவனாகப் பாடப்பெறுதலைப் பார்க்கிறோம்.

பிறர்வேல் போலா தாகி இவ்வூர்
மறவன் வேலோ பெருந்தகை யுடைத்தே . . . .
இருங்கடல் தானை வேந்தர்
பெருங்களிற்று முகத்தினும் செலவு ஆனாதே
(புறம்.332)

என்று, வேந்தரிடத்துப் பாய்வதற்கும் தயங்காத இவர்தம் வேலாற்றலின் வெளிப்பாடும் காணத்தகும்.

இனிச் சில காலங்களில் சீறூர் மன்னரிடத்துப் பெருநில வேந்தர் பெண்கேட்டு வருதலும், அவர்களுக்குத் தம் முதுகுடி முறைமைகடந்து பெண் கொடுத்தற்கு அஞ்சிச் சீறூர் மன்னர் மகள் மறுத்தலும் இருசாராரார்க்கிடையே போர் மூளுதற்கு ஏதுவாயிருந்தமையும் காணலாம். இதனைத் தொல்காப்பியம் மகட்பாற்காஞ்சி எனக் குறிப்பிடும்.[30] புறநானூற்றில் மகட்பாற்காஞ்சித்துறையில் அமைந்த பாடல்களெல்லாம் (புறம். 336-354) இவ்வகைப் போர்நிலைகளையே புனைகின்றன.

வேம்பும் ஆரும் போந்தையும் மூன்றும்
மலைந்த சென்னியர் அணிந்த வில்லர்
கொற்ற வேந்தர் வரினும் தற்றக
வணங்கார்க்கு ஈகுவ னல்லன்வண் தோட்டுப்
பிணங்குகதிர்க் கழனி நாப்பண் ஏமுற்று
உணங்குகலன் ஆழியின் தோன்றும்
ஓரெயில் மன்னன் ஒருமட மகளே (புறம். 338)

என்ற குன்றூர்கிழார் மகனாரின் புறப்பாடலில் ஓரெயிலையுடைய சீறூர் மன்னன் மகளை மணக்க வருவோர் வேந்தரேயாயினும் அவர் அவனைத் தக்க முறையில் வணங்கவேண்டுமென்றும் அவ்வாறு வணங்காராயின், அவன் அவர்க்குத் தன் மகளைக் கொடுக்க மாட்டானென்றும் கூறப்படுகின்ற உறுதிப்பாட்டை உணரலாம். ஆயின், வேந்தர் தம் நிலை தாழாதே, சீறூர் மன்னனையும் வணங்கிக் ள்ளாதே, போர்முனையில் அவன்மகளை அடைய

முனையுங்கால் அவனும் சினமொழி பேசிப் பணியாமை பார்க்கிறோம்.

நுதிவேல் கொண்டு நுதல்வியர் துடையாச்
கடிய கூறும் வேந்தே: தந்தையும்
நெடிய வல்லது பணிந்துமொழி யலனே (புறம். 349)

எனவரும் மதுரை மருதனிளநாகனார் பாடலடிகளில் இவ்வாறான இருபேராண்மையைக் காணலாம்.

இனி, இவ்வாறன்றி வேந்தன் பணிந்து வேண்டவும் சீறூர் மன்னன் அவனுக்கு மகட்கொடை நேராமையோடு நில்லாது, அவனுக்கெதிராகச் சினந்தெழுந்து போருக்குச் சித்தமாவதையும் பார்க்கிறோம்.

வேந்துகுறை யுறவும் கொடாஅன் ஏந்துகோட்டு
அமபூந் தொடலை அணித்தழை அல்குல்
செம்பொறிச சிலம்பின் இளையோள் தந்தை .....
புலிக்கணத் தன்ன சுடுங்கண் சுற்றமொடு
மாற்ற மாறான் மறலிய சினத்தன்
பூக்கோள் எனஏஎய்க் கயம்புக் கனனே:
விளங்கிழைப் பொலிந்த வேளா மெல்லியல்
சுணங்கனி வனமுலை அவளொடு நாளை
மணம்புகு வைகல் ஆகுதல் ஒன்றோ
ஆரமா உழகிய மறங்கிளர் முன்பின்
நீளிலை எஃக மறுத்த வுடம்பொடு
வாரா வுலகம் புகுதல் ஒன்றெனப்
படைதொட் டனனே குருசில்: ஆயிடைக்
களிறுபொரக் கலங்கிய தண்கயம் போலப்
பெருங்கவின் இழப்பது கொல்லோ
மென்புனல வைப்பின்இத் தண்பணை ஊரே
(புறம். 341)

என்ற பரணர் பாடலில், வேந்தன் குறைவேண்டியும் மகட்கொடை மறுத்த மன்னர், போருக்குப் பூக்கோள் ஏவித் தானும் புறப்படச் சித்தமாகி நீராடப் புகுந்ததும், அவனால் மகள் மறுக்கப்பட்ட வேந்தன் அவளை மணப்பதொன்று, அல்லது போரிலே மாள்வதொன்று என வஞ்சினங்கூறிப் படைதொட்டதுமாகிய இரண்டும் எடுத்துமொழியப் படுதலை அறியலாம்.

இவ்வாறாகப் பெருநில வேந்தருக்கும் சீறூர் மன்னருக்குமிடையே போர் மூளுங்காலத்துச் சீறூர் மன்னரே வெற்றித்திறத்தில் வீறுபெற்று விளங்கினர் (புறம். 299, 308). அம்முறையில் சீறூர் மன்னனொருவன் தன்னிடம் தோல்வியுற்ற வேந்தர்க்குத் துயிலைக்கெடுத்துக் கவலை கொடுப்போனாகத்,

தண்பணை ஆளும் வேந்தர்க்குக்
கண்படை ஈயா வேலோன் (புறம்.322)

என்று ஆவூர்கிழாரால் சிறப்பித்துப் பாடப்பெறகின்றான்.

அடிக்குறிப்புக்கள்

1. தொல்காப்பியம் - சிறப்புப் பாயிரம்
2. நச்சினார்க்கினியர் - தொல்காப்பியம், எழுத்ததி காரம், சிறப்புப்பாயிரவுரை
3. கம்பர் தனிப்பாடல்கள் - தனிப்பாடல் திரட்டு; நோக்கு: துடிசைகிழார் அ. சிதம்பரனார்- சேரர் வரலாறு, தோற்றுவாய், பக்.6-7
4. பழம்பாடல்: நோக்கு: அ. சிதம்பரனார்- சேரர் வரலாறு, தோற்றுவாய், ப.21
5. ஞா. தேவநேயப் பாவாணர்-பழந்தமிழாட்சி, பக்.4-5
6. மேலவர்-மேலது, ப.5
7. மேலவர் - மேலது, பக்.6,7
8. சூடாமணி நிகண்டு, மக்கட்பெயர்த்தொகுதி, பா.18
9. தகடூர் யாத்திரை, பா.6; புறத்திரட்டு, பா.776
10. நோக்கு: கோவைகிழார், கோ. ம. இராமச்சந்திரன் செட்டியார்-கொங்குநாட்டு வரலாறு, பக்.24-25
11. நோக்கு: புலவர் பெ. இராமலிங்கம் - கருவூரே வஞ்சி, ப.24
12. சுந்தரர் தேவாரம்: 7:90:10
13. மு. இராகவையங்கார்-சேரன் செங்குட்டுவன், ப.113
14. பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்- நற்றிணை: பாடப்பட்டோர் வரலாறு, ப.79
15. யாப்பருங்கலக்காரிகை, 26- உரை மேற்கோள்

16. நோக்கு: மு. இராகவையங்கார்-வேளிர் வரலாறு, பக்.60-61
17. உ.வே.சாமிநாதையர்-புறநானூறு, 242. அடிக்குறிப்பு
18. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை- புறநானூறு, 242, 394 - முன்னுரை
19. மேலவர் - மதுரைக்குமரனார் - பக்.67-68
20. புலவர் கா. கோவிந்தன் - சங்க கால அரசர் வரிசை - 5, ப.81
21. உ.வே. சாமிநாதையர்-பத்துப்பாட்டு, புறநானூறு: பாடப்பட்டோர் வரலாறுகள்
22. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூ.63
23. மேலது, மேலது, நூ.384
24. அடியார்க்கு நல்லார்- சிலப்பதிகாரம், 17:31-உரை
25. புறப்பொருள் வெண்பாமாலை, 2 :14
26. வால்மீகிராமாயணம், கிட்கிந்தா காண்டம், சருக்கம் 43, பா.12
27. நோக்கு: மு. இராகவையங்கார்-சேரன் செங்குட்டுவன், பக்.6-7
28. V.A.Smith--Early History of India, p.173
29. நச்சினார்க்கினியர் - தொல்காப்பியம், பொருளதிகாரம், நூ.30 உரை
30. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூ.77

2. சேரவேந்தர் வரலாறு

2.0. சேரர் பெயர்கள்

சேரர் என்பதே குடியின் பொதுப் பெயர். இதுவே முதன்மையும் தலைமையும் அமைந்த பெயராய் ஆட்சிப்பட்டுள்ளது. சேரன் மாந்தரஞ்சேரலிரும்பொறை என்பது போன்றும் சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன் என்பது போன்றும் இனச்சுட்டுக் குறிக்கும் சிறப்புப் பெயராக இதுவே அமைந்துள்ளது. குடக்கோ நெடுஞ்சேரலாதன் என்ற பெயரில் குடக்கோவென்று வந்தும் பின்னர்ச் சேரலென்னும் சொல் வாராமல் பெயர் முற்றுப் பெற்றிலதென்பது குறிக்கொண்டு நோக்கத்தகும். கோட்டம் பலத்துத் துஞ்சிய சேரமான் என்ற பெயரில் இயற்பெயரேயில்லாத நிலையில் சேரமானென்ற சிறப்புப் பெயரே நின்று குறிக்கின்றது.

மற்று, இச்சேர வேந்தர் குட நாட்டையாண்டமையால் குடக்கோ, குடவர்கோ, குடவர்கோமானென்றும், குட்ட நாட்டையாண்டமையால் குட்டுவனென்றும் பொறை (மலை) நாட்டையாண்டமையால் பொதுப் படப் பொறையனென்றும் ஏனை நாடுகளிலும் அவரது மலைநாடு உயர்ந்தமை பற்றி வானவனென்றும் வானவரம்பனென்றும் பெயர் பெற்றனர்.

இன்னும் உதியனென்ற ஒருமைப்பெயரைப் பன்மைப்படுத்தி உதியரென்பதையும் சேரரைக் குறித்த பொதுப்பெயராகக் கொள்வர். ஆயினும் அது பொதுநிலையில் ஆட்சிப் பெற்று வாராமல் உதியன், உதியஞ்சேரலென்று குறிப்பிட்ட ஒருவன் பெயராகவே

வந்துள்ளமையால் அதனை உதியென்னும் மரப் பெயரடியாய் ஒருவனுக்கமைந்த இயற்பெயராகக் கொள்வதே பொருந்தும்: கடம்பனென்பது போல்.

இனி, ஆதனென்னும் பெயரொன்றும் சேரர் பெயரோடே சேர்ந்துவரக் காண்கிறோம். சேரலாதன், வாழியாதன் என்பன போலப் பின்னொட்டாகவும், ஆதனவினி என்பதுபோல முன்னொட்டாகவும் இச்சொல் இணைந்த பெயர்களைக் காணலாம்.

21. சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன்

இன்று அறியப்படும் அளவில் சேரர் குடியின் முன்னோனாக வருபவன் சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனே. உதியஞ்சேரலாதனென்பதே இவனது இயற்பெயர். பாரதப்போரில் பாண்டவர் ஐவருடனே பகைத்துச் சினந்த துரியோதனன் முதலிய கவுரவர் நூற்றுவரும் போரிட்டுக் களத்திலே மடியுமளவும் இருதிறத்துப் படைகளுக்கும் பெருஞ்சோறு வழங்கிய சிறப்புப் பற்றி இவன் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதனென்று பெயர் பெற்றான். இச்செயதி குறித்து இவனை நேரில் பாடியவர் முரஞ்சியூர் முடிநாகராயர்.

அலங்குளைப புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதினமரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோறறு மிகுபதம் வரையாது கொடுத்தோய்!
(புறம். 2)

என்று அபபுலவா இசசெய்கையை வைத்தே இவனை நேர்பட விளிப்பார்.

"பாண்டவர் ஐவருடனே சினந்து .... துரியோதனன் முதலாகிய நூறறுவரும் பொருது போர்க்களத்தின்கட் படுந்துணையும் பெருஞ்சோறாகிய மிகவுணவை இருபடைக்கும் வரையாது வழங்கினோய்"

எனபது இப்பாடலடிகட்கு அமைந்த பழையவுரையாம். ஆகவே,இப்பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனைப் பாரத காலத்தவனென்று அறியலாம்.

ஓரைவர் ஈரைம் பதின்மர் உடன்றெழுந்த
போரில் பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன் பொறையன் மலையன் திறம்பாடிக்
கார்செய் குழலாட ஆடாமோ ஊசல்
(சிலம்பு 29:24)

எனச் சிலப்பதிகாரமும் இவன் செய்தியைப் பேசிப்புகழும்.

2.2. சேரமான் கருவூர் ஏறிய ஒள்வாள் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை

சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனுக்குப் பின் நெடுங்காலம் கழிந்த நீண்ட இடைவெளியையடுத்துக் கடைச்சங்ககாலச் சேரவேந்தருள் முதல்வனாக அறிய வருபவன் சேரமான் கருவூரேறிய ஒள்வாள் கோப்பெருஞ்சேரலிரும்பொறையேயாவான். இவனே முதன் முதலில் கருவூரைத் தலைநகராகக் கொண்டு அரசு கட்டில் ஏறியவனென்பது இவன் பெயர்க்குமுன் அமைந்த கருவூரேறிய என்ற அடைமொழியால் அறியப்படும்.

ஒள்வாள்கோ என்ற மற்றோர் அடைமொழியும் ஒளிபடைத்த வாளையுடைய அரசனென்ற பொருளுடன் இவன் பெயரோடே இணைந்துள்ளது. இங்கே ஒளியென்பது வாளுக்குச் சிறப்பாகிய வெற்றிப்புகழ் ஆதலால் இவன் வாள்முனையின் வெற்றியினால் வேந்தனாகிக் கருவூரில் அரசு கட்டில் ஏறிய அருமுயற்சி விளங்கும்.

கருவூரேறிய ஒள்வாள்கோவாகிய பெருஞ்சேரலிரும் பொறையை நரிவெரூஉத்தலையார் பாடியதொரு பாடல் புறநானூற்றிலே (5) உள்ளது. அப்பாடலுக்கு அமைந்த அடிக்குறிப்பும் இவனுடைய தனிச் சிறப்பினை எடுத்து மொழிகின்றது.

"சேரமான் கருவூரேறிய ஒள்வாள் கோப்பெருஞ்
சேரலிரும்பொறையைக் கண்டஞான்று நின் உடம்பு
பெறுவாயாக என அவனைச் சென்று கண்டு
தம்முடம்பு பெற்றுநின்ற நரிவெரூஉத்தலையார்
பாடியது"

எனவரும் அக்குறிப்பினால், நரியும் கண்டு வெருவுமாறு வேறுபட்ட தலையமைப்புக் கொண்டிருந்த அப்புலவர் தாம் அறிவுறுத்தப் பெற்றபடி இப்பெருஞ்சேரலை நேரில் சென்று கண்டபோது தமக்குத் தலைவேற்றுமை மாறி நல்லுடம்பு வாய்த்த நிலையில் இவனைப் பாடினாரென்பது படுகின்றது.

எருமை யன்ன கருங்கல் இடைதோறு
ஆனிற் பரக்கும் யானைய முன்பின்
கானக நாடனை நீயோ பெரும (புறம்.5)

என்ற விளிப்பகுதியில் இவனாட்டின் நிலவமைப்பினை அவர் நன்கு புனைந்து புலப்படுத்துதல் காணலாம். மற்றப்படி, அவர் பாடலில் இவன் அரசியல் அறவுரைகளை அறிவுறுத்தப் பெறுவது பொதுவாகவே அமைந்துள்ளது.

புறநானூற்றுத் தொகைநூலில் கால அடைவினை முழுமையுறக் காணமுடியவில்லையாயினும் தொகையின் தொடக்கத்தில் காலமுறைக் கருத்து ஓரளவு காணப்படுகின்றது. அம்முறையில் சேர பாண்டிய சோழர் எனவரும் முறைவைப்பேயன்றியும் ஒவ்வொரு குடியினருள்ளும் கிடைத்த மட்டில் முன்னவர்களின் பாடல்களையே முதன்மையுற நிறுத்தியுள்ள நிரலும் கருதத்தகும். அவ்வாறு கருதுமளவில், சேரமரபிலே பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதனை முரஞ்சியூர் முடிநாகராயர் பாடிய பாடல் முதன்மை பெற்றதையடுத்து, இக்கருவூரேறிய ஒள்வாள் கோப்பெருஞ்சேரலிரும்பொறையை நரிவெரூஉத்தலையார் பாடியுள்ள பாடல இடம்பெற்றுள்ளது எண்ணத் தகுவதாகும்.

23 சேரமான் முதியர்ப்பேணிய உதியஞ்சேரல் (கி.பி.25-65)

சேரமான் கருவூரேறிய ஒள்வாள் கோப்பெருஞ்சேரல் இரும்பொறையை அடுத்துக் கருதத்தக்கவன் முதியர்ப்பேணிய உதியஞ்சேரல இவன் முதியர்ப்பேணிய உதியஞ்சேரலென்றும் நாடுகண் அகற்றிய உதியஞ்சேரலென்றும் மாமூலனாரால் குறிப்பிடப் பெறுகின்றான்.

தலைச்சங்கப் புலவராகிய முரஞ்சியூர் முடிநாகராயரால் பாடப்பெற்ற பாரத காலத்துப் பெருஞ்சேற்று உதியஞ்சேரலாதனுக்கும் கடைச்சங்கப்

புலவராகிய மாமூலனாரால் பாடப்பெறுகின்ற இம்முதியர்ப் பேணிய உதியஞ்சேரலுக்கும் இடைப்பட்ட காலவேற்றுமையைக் கருதுவோமாயின் இருவரும் வெவ்வேறானவரென்பது விளங்கும்.

ஆயினும், பாரதப்போரில் இருபடைகளுக்கும் பெருஞ்சோறு கொடுத்த அவனைப் போலவே இவனும் மற்றொரு காரணத்திற்காகப் பெருஞ்சோறு கொடுத்த செய்தி இருவரையும் ஒருவனென்று எண்ணி மயங்குதற்கு ஏதுவாயிற்று. மகாவித்துவான் இரா. இராகவையங்காரும் அவ்வாறு மயங்கியெழுதியுள்ளார்.[2]

> மறப்படைக் குதிரை மாறா மைந்தின்
> துறக்க மெய்திய தொய்யா நல்லிசை
> முதியர்ப் பேணிய உதியஞ்சேரல்
> பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை இரும்பல்
> கூளிச் சுற்றம் குழீஇயிருந் தாங்கு (அகம்.233)

என்று மாமூலனார் பாடலில் இவன் பெருஞ்சோறு கொடுத்த நிகழ்ச்சி விளக்கமாகவே பேசப்படுகின்றது. 'மறப்படைக் குதிரைகளையும் மாறாத வலிமையினையுமுடையராய், அவ்வலிமையால் செய்த போரிலே மாண்டு துறக்கமெய்திய தொய்யாத நற்புகழாளர்களாகிய தன் குலத்து மூத்தோரைத் தென்புலத்தார்க்குரிய கடன்களால் பேணிச் சிறப்பித்த உதியஞ்சேரல் அம்மூத்தோர்க்குப் பெருஞ்சோற்றுப்பலி கொடுத்தபோது பெரிய பல கூளிச் சுற்றங்கள் (பூத கணங்கள்) குழுமியிருந்தன' என்றவாறு இதனை விரித்துக் காணலாம்.

இதிலமைந்த முதியரென்னும் சொல் சேரர் குடியின் மூத்தோரையே குறிக்குமென்பதும், மூத்தோரைப் போற்றுதல் அக்குடியின் வழித்தோன்றல்களுக்குச் சிறப்புடை வழக்கமே யென்பதும் பின்வரும் சான்றுகளால் உறுதிப்படும்.

> மதியுறழ் மரபின் முதியரைத் தழீஇக்
> கண்ணகன் வைப்பின் மண்வகுத்து ஈத்து
> (பதி.பதி.3)

என்பது பதிற்றுப்பத்திலே பல்யானைச் செல்கெழு குட்டுவனைக் குறித்த மூன்றாம் பத்தின் பதிகச் செய்தி.

"முதியரை மதியுறழ் மரபின் தழீஇ மண்வகுத்து
ஈத்தெனைக் கூட்டித் தன்குலத்தில் தனக்கு முதியாரை
மதியோடொத்த தன் தண்ணளியால் தழிஇக்
கொண்டு அவர்க்குத் தன்னாட்டைப் பகுத்துக்
கொடுத்து என உரைக்க"

என்பது இதற்கமைந்த பழையவுரையாம். முதியரை அவருடைய வாழ்நாளிலே மதித்துப் போற்றும் இதுவேயன்றி, அவர்களை மாண்டபின்னும் தென்புலத்தார்க்குரிய கடனகளாற் சிறப்பித்துப் போற்றுவதைச செல்வக் கடுங்கோ வாழியாதன் செயல்களில் காணலாம்.

இளந்துணைப் புதல்வரின் முதியர்ப் பேணித்
தொல்கடன் இறுத்த வெல்போர் அணணல்
(பதி.70)

என்று அவனைக குறித்து வரும் பாடலடிகளில், இளந்துணையாகிய புதல்வர்களைப் பெற்றமையால் அவன் தன்குலத்து முன்னோர்களான தென்புலத்தார்களைக் காபபாற்றி இல்லறத்தார்க்குரிய பழைய கடனகளைச் செய்து முடித்தானாகப் பாடப்பெறுகின்றான். இம்முறையிலேயே உதியஞ்சேரலும் தன்குலத்து முதியரைப்பேணித் தென்புலத்தார்க்குரிய கடன்களால அவர்க்குப் பெருஞ்சோற்றுப் பலிகொடுத்தானென்று உறுதியோடே துணியலாம் ஆகவே, இவன பெருஞ்சோறு கொடுத்த செயலைப பாரதப்போரில் இருதிறப படைகளுக்கும் பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்த முதலவனான உதியஞ்சேரலாதனின செயலோடு ஒருங்கிணைத்தல் ஒட்டாதாம். அகநானூற்று வேங்கட விளக்க உரையாசிரியரும் மேற்கண்ட (233) அகப்பாடலுரையில் இவ்வுதியஞ்சேரல் பெருஞசோறு கொடுத்ததைத் தென்புலத்தார் கடனுக்காகவே எனக் கொண்டு இவனைப் பாரதகாலத்துப பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனினும் வேறானவனென்றே விளம்புவர்.

இனி, இவவாறு பெருஞசோறு கொடுத்து முதியரைப் பேணிய உதியஞ்சேரலே நாடுகண் அகற்றிய உதியஞ்சேரலாகவும் மாமூலனாராலேயே மறறொரு பாடலில பாடபபெறுகின்றான்

நாடுகண் அகற்றிய உதியஞ்சேரற
பாடிச் சென்ற பரிசிலர் போல
உவவினி வாழி தோழி (அகம்.65)

எனவரும் அப்பாடலடிகளில் தன்னைப் பாடிவரும் பரிசிலர்க்கு மிக்க பரிசளித்து அவருவக்குமாறு அவரை நன்கு பேணும் இவனது பண்பு பேசப்படுகின்றது. மற்று, அப்பாடலில், நாடுகண் அகற்றிய உதியஞ்சேரல் எனவரும் அடைமொழியின் சிறப்பினால் இவன் அண்டை நாடுகள் பலவற்றை வென்று தன்னாட்டின் எல்லையை அகலப்படுத்தினானென்பதும் அறியப்படும். அவ்வாறு இவ்வுதியஞ்சேரல் நாடுகண் அகற்றுதற்குப் பலபோர்களைப் புரிந்து வெற்றி கண்டிருந்ததலும் வேண்டுமன்றோ?

உதியன் மண்டிய ஒலிதலை ஞாட்பின்
இம்மென் பெருங்களத்து இயவர் ஓதும்
ஆம்பலங் குழலின் ஏங்கி (நற்.113)

என்ற இளங்கீரனார் பாடலடிகள், அவ்வகையில் இவன் இயற்றிய போர்களின் சிறப்பினைப் புலப்படுத்தும்.

இன்னும், முதியர்ப்பேணிய உதியஞ்சேரல் அம்முதியர்க்குப் பெருஞ்சோற்றுப் பலிகொடுப்பதற்காக மட்டுமன்றித் தனனை நாடிவரும் இரவலர்கு உணவுக்கொடை வழங்குதற்காகவும் தன் அடடிற் சாலையில் ஓயாது ஒலியெழும்படி உணவமைத்த செய்தியும் அறிய வருகின்றது. கோட்டம் பலத்துத் துஞ்சிய சேரமானென்ற தன்குடிப் புலவரே இவனது அப்புகழ்ச் செய்தியைப் போற்றிக குறித்துள்ளார்.

பல்லான் குன்றிற் படுநிழற் சேர்ந்த
நல்லான் பரப்பிற் குழூமூர் ஆங்கண்
கொடைக்கடன் என்ற கோடா நெஞ்சின்
உதியன் அட்டில் போல ஒலியெழுந்து
அருவி ஆர்க்கும் பெருவரைச் சிலம்பு (அகம்.118)

என்று மலையருவியின் ஓயாத ஒலியெழுச்சிக்கு இவ்வுதியனது அடடிறசாலையின் ஒலியெழுச்சியை அப்புலவர் உவமை கூறியுள்ளார். கொடையையே ஓர் கடமையாக ஏற்றுக கொண்ட கோடாத நெஞ்சினையுடைய உதியனெனக குறிகக பெறுதலால் இவனது வள்ளண்மை விளங்கும்.

கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமானின் இப்பாட்டிலிருந்து பல்லான்குன்று என்னும் மலையையடுத்த குழுமூரென்பதை இவனூராகக் காணலாம். நல்லான் பரப்பின் குழுமூரெனப் பெறுதலால் அவ்வூரின் பசுவளம் உணரப்படும். ஆதலால் சங்க இலக்கியங்களிலே பல பாடல்களில் (பதி.22, 77, அகம்.79) பசுவளம் மிக்கதாகப் பாடப்பெறுகின்ற கொங்குநாட்டில் இக்காலக் கோயம்புத்தூர் மாவட்டத்தில் பெரியதாராபுரம் பொள்ளாச்சி இருநகரங்களுக்கும் இடையேயுள்ள கொழுமம் (< குழுமம் < குழுமூர்) என்ற ஊரே இவ்வுதியஞ்சேரல் தங்கியாண்ட குழுமூராய் இருந்திருக்க வாய்ப்புண்டு எனலாம்.

இனி, பதிற்றுப்பத்தின் இரண்டாம்பத்து, மூன்றாம் பத்துக் களின் பாட்டுடைத் தலைவர்களான இமைய வரம்பன் நெடுஞ்சேரலாதனும் பல்யானைச் செல்கெழு குட்டுவனும் இவ்வுதியஞ்சேரலின் மக்களென்பது தெளிவாம்.

மன்னிய பெரும்புகழ் மறுவில் வாய்மொழி
இன்னிசை முரசின் உதியஞ்சேரற்கு
வெளியன் வேண்மாள் நல்லினி ஈன்றமகன்
இமைய வரம்பன் நெடுஞ்சேர லாதன் (பதி.பதி.2)

இமைய வரம்பன் தம்பி ..
பலயானைச் செல்கெழு குட்டுவன் (பதி.பதி.3)

என்று அப்பதிற்றுப்பத்திலே அவர்களைக் குறித்த பதிகங்களால இதனை அறியலாம.

மேலே கண்ட பாடல்களால் இவ்வுதியஞ்சேரலைப் பாடியுள்ள மாமூலனார் தாமே இவன் மக்களான இமையவரம்பன் நெடுஞ்சேரலாதனையும் (அகம்.127, 347) பலயானைச செல்கெழுகுட்டுவனையும் (அகம்.91 நற்.14) பாடியதோடு, சேரமான் பெருஞ்சேரலாதனையும் (அகம்.55) பாடியுள்ளார். ஆதலால், அவர்களோடே இவனுக்குள்ள அணுக்கமான கால அடைவு கருதப்படும்.

இவவாற்றால தலைச்சங்க காலத்தோடு ஒட்டிய பாரத காலத்துப பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனை விடுத்து, இவ்வுதியஞ்சேரலை வேறுபடுத்திக் காட்டவே இவனை முதியாபபேணிய உதியஞ்சேரலென்றும் நாடுகண் அகற்றிய

உதியஞ்சேரலென்றும் மேற்று அடைமொழிகளோடே விதந்தெடுத்துக் கூறினார் மாமூலனார் என்பது வெளிப்படை விளங்கும்.

இனி, பதிற்றுப்பத்திலே இரண்டாம் பத்தும் மூன்றாம் பத்தும் இவன் மக்கள்மேல் பாடப்பட்டுள்ளமையால், காணப்படாத முதற்பத்தின் பாட்டுடைத் தலைவன் இவ்வுதியஞ்சேரலேயெனக் கருதுவர் அறிஞர்.

2.4. சேரமான் அந்துவஞ்சேரல் இரும்பொறை (கி.பி. 35-75)

சேரமான் முதியர்ப்பேணிய உதியஞ்சேரலுக்கு ஒத்த காலத்தவனாகவும் உடன்பிறப்பு முறைமையனாகவும் உணர வருபவனே அந்துவஞ்சேரல் இரும்பொறை ஆவான்.

உதியஞ்சேரலின் மகன் இமையவரம்பன் நெடுஞ்சேரலாதனென்று பதிற்றுப்பத்தின் இரண்டாம் பதிகம் கூறுவதை முன்னர்க் கண்டோம். அவ்வாறே இந்த அந்துவஞ்சேரலின் மகன் செல்வக் கடுங்கோ வாழியாதனென்று அதே நூலின் ஏழாம் பதிகம் எடுத்துக்கூறுவதைப் பின்னர்க் காண்போம். அந்த இமையவரம்பனும் செல்வக்கடுங்கோ வாழியும் ஒத்த காலத்தவரன்பதும் உடன்பிறப்பு முறையினரென்பதும் இருவருமே வேளாவிக்கோமான் பதுமனின் மகளிர் இருவரை மணந்தவர் என்றமையால் (பதி.பதி 4.8) அறியப்படும் ஆதலால், அவர்களின் தந்தைமாராகிய இவ்வுதியஞ்சேரலையும் அந்துவஞ்சேரலையும் ஒத்த காலத்தவர் மற்றும் உடன்பிறப்பாளரென்று உணரலாம்.

இனி, அந்துவஞ்சேரல் இரும்பொறை சங்க இலக்கியங்களில் நேர்முறையில் பாடப்பெற்றிலன். மற்று, சோழன் முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளியை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடுதற்குக் காரணமாய் அவரோடிருந்த முறையிலே இவன் அறிய வருகின்றான.

கருவூர் வேண்மாடத்தின்மேல இவ்வேந்தன் தன்னோடே உறையூர் ஏணிசசேரி முடமோசியார் அனபுற்று

அளவளாவியிருக்கையில், சோழன் முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளி ஏறியிருந்த களிறு மதமுற்று, அம்மாளிகையின் முன்னே ஓடியதாக, அவனை யாரெனத் தெளியாத இவன் தன்னருகிலிருந்த புலவரை வினவ, அவர் அவனை இன்னானெனக் கூறுவதோடே பகைப்புலத்து வந்த அவனுக்குத் தீங்கு நேராதவாறும் வாழ்த்துவதாய்ப் புறநானூற்றிலே அப்பாடல் அமைந்துள்ளது (புறம்.13). அதில் இவவந்துவஞ்சேரல் அப்பெருநற்கிள்ளியை அறியாதே அடுத்தவரிடம் வினவுவதால் அவன் இவனுக்கு அறிமுகமாகாதவனென்பது விளங்கும். அன்றியும் அக்காலத்தே இவன் ஆட்சியிலிருந்து நீங்கிய முதியவனென்பதும் இவனுக்குப் பின்னவனான சேரவேந்தனே அச்சோழனுகுப் பகைவனென்பதும் விளக்கமாம். ஆகவே, இவனை அப்பெருநற்கிள்ளிக்குப் பகைவனென்பதோ அவனோடொத்த காலத்தவனென்பதோ ஆகாமை அறியப்படும்.

அடுத்து, பதிற்றுப் பத்தின் ஏழாம் பதிகம்,

மடியா வுள்ளமொடு மாற்றோரை பிணித்த
நெடுநுண் கேளவி அந்துவற்கு ஒருதந்தை
ஈனறமகள் பொறையன் பெருந்தேவி ஈனறாகன்
செலவக் கடுங்கோ வாழி யாதன் (பதி.பதி.7)

எனக் கூறுவதால் இவனுக்கு ஒருதந்தையென்பான மகளாகிய மனைவியின் வயிறறில் பிறந்த மகனே செல்வக கடுங்கோ வாழியாதனென்று காணப்படும். இப்பதிகத்தடிகளில் மாறறாரைப பிணித்த இவனுடைய ஊக்கமும் நெடிய நுண்ணிய நூறகேள்வியுணர்வும் குறித்த பாராட்டினை அறியலாம்

இனி, செல்வக் கடுங்கோவுக்குத் தந்தையாகிய இவவந்துவஞ்சேரலைப் பதிற்றுப் பத்திலே காணபபடாத ஒரு பதிற்குரிய பாடடுடைத் தலைவனென்றும், அப்பத்து உணமையில ஏழாம் பத்தாய் இருந்திருத்தல வேண்டுமென்றும், அதனையடுதத எடடு, ஒன்பது, பத்தாம் பத்துக்களாகவே செலவகடுங்கோ, பெருஞ்சேரலிரும்பொறை, இளஞ்சேரல் இரும்பொறை ஆகியோர் பத்துகள் அமைந்திருத்தல கூடுமெனறும் ஆய்ந்து கூறுவார் அறிஞர் மார்.[3]

25. சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை (கிபி50-75)

சேரமான் முதியர்ப்பேணிய உதியஞ்சேரலின் காலத்திலேயே அறியவருகின்ற மற்றொருவன் சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை. இவன் தான் பாடிய அகப்பாடலில் (அகம்.168) அவ்வுதியஞ்சேரலைப் பாராட்டிக் குறித்துள்ளது கொண்டு இவ்வாறு கருதுகிறோம். அது முன்னர்க் காணப்பட்டது.

கோட்டம்பலம் என்பதோர் கோயிலின் பெயரென்று கருதப்படுகின்றது. கோயிலின் பெயராகிய கோட்டம்பலமே அஃதமைந்த ஊரின் பெயராக வழங்கியிருத்தலும் கூடும். கோட்டம் பலமென்ற இவ்வூர்ப்பெயரே இக்காலத்துக் கேரள நாட்டில் கோட்டயமெனக் குறுகியும் திரிந்தும் வழங்குகின்றதென்பார் துடிசைகிழார்.[4] கோட்டயம் வட்டத்திலுள்ள அக்கால குன்னம் பாகுட்டி என்னுமிடத்தே 1945ஆம் ஆண்டு தொல்பொருள் அகழ்வாராய்ச்சியில் நூற்று எண்பத்தெட்டு வெள்ளி நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டு, அவை யாவும் கி.மு. 321 முதல் கி.மு. 297 முடிய மகத நாட்டில் ஆண்ட சந்திரகுத்த மோரியன் காலத்தவையாகக் கணிக்கப்பட்டுள்ளன.[5] எனவே, கி.மு. மூன்று, நான்காம் நூற்றாண்டுகளில் மோரிய நாட்டோடே சேரநாடு வாணிகத் தொடர்பு கொண்டு விளங்கியதென்பதும் அக்காலங்களில் கோட்டயமும் அதனைச் சார்ந்த இடங்களும் சிறந்து திகழ்ந்தனவென்பதும் புலனாகின்றன. ஆதலால் இப்பழமைச் சிறப்புக் கொண்டு கோட்டயமே பண்டைய கோட்டம்பலமாய் இருந்திருத்தல் கூடுமெனக் கருதலாம்.

ஆயினும் இக்கோட்டம்பலமென்பதை இக்காலத்து அம்பலப்புழையென்னும் இடமாகக் கூறுவார் ஔவை துரைசாமிப்பிள்ளை.

> "கடற்கோட்டிலுள்ள அம்பலமாதலின் இது
> கோட்டம்பலமெனப் பண்டைநாளில்
> பெயர்பெற்றுப் பிற்காலத்தே
> அம்பலப்புழையென மாறிற்றாதல் வேண்டும.
> இன்னும் இது தொன்மைச்
> சிறப்புடைய ஊராகவே விளங்குவதும
> இப்பகுதியில் மாக்கோதை மங்கலமென

ஒளூர் இருப்பதும் இக்கருத்தை
வலியுறுத்துகின்றன" (புறம்.245 முன்னுரை)

என்பார் அவர்.

அஃது எவ்வாறாயினும் மாக்கோதையென்ற பெயரையுடைய இச்சேரமான் தன் முதுமையில் கோட்டம்பலம் என்னுமிடத்தே துறவு பூண்டிருந்து துஞ்சினமையால் சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதையென்று பின்னாட்களில் பெயர் குறிக்கப்பெற்றான். இவன் துறவு பூண்பதற்கு ஏதுவான நிகழ்ச்சியொன்றும் இவனது இல்வாழ்வில் நிகழ்ந்தது. அந்நிகழ்ச்சியைக் குறித்து இவன்தானே நொந்து பாடிய பாடலொன்றும் புறநானூற்றிலே இடம் பெற்றுள்ளது. இவன் தன் விருப்பமிக்க காதலியாகிய பெருங்கோப்பெண்டு முதுமைக்கு முன்பே இறந்தாளாக, அக்காலத்தே அவளது இறப்பினை ஆற்றமாட்டாத இவன் மிகப்பெருந் துன்பம் எய்தினான். அவளுடைய உடலைத் தானே ஈமப்படுக்கையில் கிடத்தி எரியை மூட்டுமாறு நேர்ந்தது கண்ட அந்நிலையில் இவன் பெரிதும் உள்ளமழிந்து உருகினான். தன் உள்ளத்தின் உருக்கம் உயிரைப் போகக வேண்டுமென்று விரும்பிய இவன், அவ்வாறு உயிரினைப் போக்காத உள்ளுருக்கத்தை வலிமை யில்லாததாக இகழ்ந்துரைத்தான்.

யாங்குப்பெரிது ஆயினும் நோயளவு ஏனைத்தே
உயிர்ச்செகுக் கல்லா மதுகைத்து அன்மையின்:
கள்ளி போகிய களரியம் பறந்தலை
வெள்ளிடைப் பொத்திய விளைவிறகு ஈமத்து
ஒள்ளழற் பள்ளிப் பாயல் சேர்த்தி
ஞாங்கர் மாய்ந்தனள் மடந்தை
இன்னும் வாழ்வல் என்னிதன் பண்பே (புறம்.245)

என்பது இவன் பாடல். 'யானும் இவளும் ஈருடல் ஓருயிர் என்றே எண்ணியிருந்தோம். இப்போது இம்மடந்தை மாய்ந்தாள். இவளோடே சேர்ந்து மாயவேண்டிய யான் மாயாது இன்னும் உயிர்வாழ்கின்றேன். இஃதென்ன உலகியற்கை! இந்நிலையில் இவளையிழந்து புலம்பும் என் தனிமை நோய் எனதுயிரைப் போக்கியிருந்தால் அதனைப் பெரிதென்று பேசலாம். அவ்வாறு என் நோய் என்னுயிரைப் போககமாட்டாமையால், உயிரைப் போக்கும் வலிமை

இந்நோய்க்கு இல்லாமையால், இதுதான் எவ்வளவு பெரிதாகித் தோன்றினும் பெரிதன்று' என்பது இவன் பாடல் கருத்தாகும். ஆதலால் இவன் தன் பெருந்தோப்பெண்டின் பிரிவினால் மிகவும் நொந்து இரங்கினமை புலனாம். இந்நிகழ்ச்சிக்குப்பின் இவனுள்ளம் முந்தைய பற்றோடே அரசியலில் முனைந்திருந்ததாகக் கொள்ள முடியாது. எனவே, இறுதிக் காலத்தில் இவன் ஒருவாறு துறவுபூண்டு கோட்டம்பலத்தேயிருந்து துஞ்சினனாதல வேண்டுமெனக் கருதலாம்.

இவன் இயல்பிலேயே புலமையுள்ளத்தன் என்பது அகநானூற்றில் இடம்பெற்று அமைந்த இவனது பாடலால் (அகம்.168) அறியப்படும். அப்பாடலின் கீழ் இவனுக்கு இயற்பெயரே வேண்டாமல் கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான் என்று குறிக்கப்பெறுமளவு இவன் சிறந்து விளங்கினமையும் கருதப்படும்.

2.6. சேரமான் பெருஞ்சேரலாதன் (கி.பி.65-100)

சேரமான் முதியர்ப்பேணிய உதியஞ்சேரலைப் பாடிய மாமூலனாராலேயே பாடப்பெற்று அவன் காலத்தோடே ஒட்டிய காலத்தவனாய் அறியவருபவன் சேரமான் பெருஞ்சேரலாதன். இப்பெருஞ்சேரலாதன் பெயரை அவ்வுதியஞ்சேரலின் மகனான இமைய வரம்பன் நெடுஞ்சேரலாதன பெயரோடே ஒப்பிட்டு நோக்க, இவனைபும் உதியஞ்சேரலுக்கு மகனென்றும் அம்முறையே இமையவரம்பனின் தமையனென்றும் எண்ணுதற்கு இடமுண்டு. இப்பெருஞ்சேரலாதனைப் பாடியுள்ள புலவர்கள் கழாத்தலையார் (புறம்.65), மாமூலனார் (அகம்.55) இருவருமே இமையவரம்பன் நெடுஞ்சேரலாதனையும் பாடியுள்ளமையால் (புறம்.62,368, அகம்.127,347) இவர்தம் அண்மைக்காலமும் அறியப்படும்.

இச்சேரமான் பெருஞ்சேரலாதன் தன் காலத்துச் சோழன் கரிகாற் பெருவளத்தானொடு பகைமையுற்று அவன்மேல் படையெடுத்துப்போய் அவனுடைய நாட்டு வெண்ணிப் பறந்தலையிலே போருடற்றியபோது, அவனெறிந்த வேல் தன்மார்பிலே பாய்ந்து முதுகினைத

துளைத்ததைப் புறப்புண்ணென நாணி வாளோடு வடக்கிருந்து உயிர்துறந்ததாகிய ஒரு செய்தியே இவனுடையதாக அறியப்படுகின்றது. புறநானூற்றில் இருபாடல்களாலும் (புறம்.65,66) அகநானூற்றில் ஒரு பாடலாலும் (அகம்.55) இதனையறியலாம்.

'தன்போல் வேந்தன் தன்னெதிர் நின்று தன்னைக் குறித்து எறிந்தவேல் தன் மார்பிலே பாய்ந்து புறத்தைக் கிழித்த புண்ணுக்கு நாணி, மறக்கூறுபாட்டையுடைய மன்னன் வாளோடு வடக்கிருந்தான்; உவாநாளிலே ஞாயிறும் திங்களுமாகிய இருபெருஞ்சுடரும் எதிரெதிர் நின்று தம்முள் பகைத்து நோக்கி, மாலைப்பொழுதிலே ஞாயிறாகிய ஒரு சுடர் மலையுளே சென்று மறைந்தாற்போல் அவன் வடக்கிருந்து மாண்டான்; முழவு மார்ச்சனையிடுதலொழியவும், யாழ் பண்ணையொழியவும், பெரிய பானை பாலின்றிக் கவிழ்ந்து நெய்கடைதலையொழியவும், உழவர் உழுதொழில் ஓசையையொழியவும், அகன்ற தெருக்களையுடைய சீறூர்கள் விழக்களையொழியவும் அவன் மாண்டானாதலால், இனி எமக்கு அவனின்றித் தனித்து வாழும் நாட்கள் முன்னார்க் கழிந்த நாட்களைப் போலக் கழிய மாட்டா' (புறம்.65) என்று இவன் மாண்டதைக் குறித்து இரங்கிப் பாடுவார் கழாத்தலையார்.

இவனையெதிர்த்துப் போரிட்டு இவன் மார்பிலே வேலெறிந்து வென்ற கரிகாலனைப் பாடும் வெண்ணிக்குயத்தியாரும் அவனிடத்து இவன் சிறப்பினையே எடுத்துப் பேசுகின்றார்.

களியியல் யானைக் கரிகால் வளவ!
சென்றமர்க் கடந்தநின் ஆற்றல் தோன்ற
வென்றோய் நின்னினும் நல்லன் அன்றே!
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப்புகழ் உலக மெய்திப்
புறபுண் நாணி வடக்கிருந் தோனே (புறம்.66)

என்று அவர்பாடல் அமைகின்றது. 'கரிகால் வளவனே, வெண்ணிப் பறந்தலைப் போரிலே சென்று பகைவனை வஞ்சியாதே எதிர்நின்று பொருத நின்னாற்றல் வெளிப்பட்டு விளங்குமாறு வென்றோய! நீ மிக நல்லவனே. ஆயினும் அப்போரில் நினனால தான் பெற்ற புறப்புண்ணிற்கு நாணி,

இவ்வுலகத்தே மிகப்புகழெய்திப் பின்னும் வீரசுவர்க்கமாகிய அவ்வுலகத்தைப் பெற வடக்கிருந்தோன் நின்னினும் நல்லவன் அல்லனோ?' எனறு, வென்றவனிடமே வெல்லப்பட்ட இவனது சிறப்புப் பேசப்படுதல் காணலாம்.

இனி, இவன் வடக்கிருந்தது தொடர்பான மற்றொரு செய்தியை மாமூலனாரின் அகப்பாடலொன்றால் அறியலாம்.

> கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்
> பொருதுபுண் நாணிய சேர லாதன்
> அழிகள மருங்கின் வாள்வடக் கிருந்தென
> இன்னா இன்னுரை கேட்ட சான்றோர்
> அரும்பெறல உலகத்து அவனொடு செலீஇயர்
> பெரும்பிறி தாகி யாங்கு

எனவரும் இப்பாடலடிகளால், இவன் வாள் வடக்கிருந்த செய்தி கேட்ட சான்றோர் பலரும் இவனோடே தாமும் வடக்கிருந்து உயிர் துறந்தனரென்று அறிகிறோம். இவன் உயிர் துறத்தல் இன்னாததாயினும், தான் மார்பிடைப் பெற்ற புண்ணே முதுகிடைப் பாய்ந்ததால் அதனைப் புறப்புண்ணென நாணி வடக்கிருத்தல் இவ்வுலகத்தே மிகப் புகழெய்தும் செயலாதலால் அஃது இன்னா இன்னுரையெனச் சான்றோரால் கேட்கப்பட்டது. இவ்வாறு இவன் வடக்கிருந்தது கேட்ட சான்றோரெல்லாம் இவனோடே தாமும் வடக்கிருந்து உயிர் துறந்தமையால் இவனது சிறப்பு விளங்கும்.

இவையன்றி இவனுடைய வேறு செய்திகளொன்றும் விளங்கவில்லை.

27. இமையவரம்பன் நெடுஞ்சேரலாதன் (கி.பி72-130)

குடக்கோ நெடுஞ்சேரலாதன் (பதி.பதி.6) குடவர் கோமான் நெடுஞ்சேரலாதன் (பதி.பதி.5) சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன் (புறம்.62,63,368) சேரலாதன் (பதி.11,15,18, பதி.பதி.4; அகம்.127,347) நெடுஞ்சேரலாதன் (பதி.20) என்றெல்லாம் சங்க இலக்கியங்களில் குறிக்கப்பெற்றும் பாடப்பெற்றும் விளங்குபவன் இமையவரம்பன் நெடுஞ்சேரலாதனே. இவன் சேரமான் பெருஞ்சேரலாதனை

ஒட்டிய காலத்தவனென்பது அவனைப் பாடிய கழாத்தலையார் (புறம்.65) மாமூலனார் (அகம்.55) இருவருமே இவனையும் பாடியுள்ளமையால் (புறம்.62,368, அகம்.127,347) விளங்கும். இந்நெடுஞ்சேரலாதன் பெயரை அப்பெருஞ்சேரலாதன் பெயரோடே ஒப்பிட்டு நோக்க, இவனை அவனுக்கு இளவலென்று எண்ணவும் இடமுண்டு.

முதியர்ப் பேணிய உதியஞ்சேரலுக்கு வெளியன் வேண்மாள் நல்லினியென்பாள் வயிற்றிற் பிறந்த மகனே இமையவரம்பன் நெடுஞ்சேரலாதன். இவன் தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவன். இவனுக்கு வேளாவிக்கோமான் பதுமனென்பான் மகளொருத்தியும் சோழன் மகள் மணக்கிள்ளி யொருத்தியுமாக மனைவியர் இருவர். அவ்விருவருள் பதுமன் மகள் ஈன்ற மக்கள் களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரலும், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனுமாவர்; மணக்கிள்ளி ஈன்ற மக்கள் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனும் சிலப்பதிகாரம் செய்த இளங்கோவுமாவர். இவ்வுறவு முறைகள் பதிற்றுப்பத்திலே இவர்களைக் குறித்து அமைநத பதிகங்களாலும் சிலப்பதிகார வஞ்சிக்காண்டத்தாலும் அறியவருகின்றன.

இமையவரம்பன் நெடுஞ்சேரலாதன் குமட்டூர்க் கண்ணனாரால் பத்துப் பாடல்களிலே சிறப்பித்துப் பாடப் பெற்றுள்ளான். அப்பாடல்கள் பதிற்றுப்பத்திலே இரண்டாம் பத்தாக இடம் பெற்றுள்ளன. அவற்றால் இவனுடைய வெற்றி முதலான சிறப்புக்கள் விளங்குகின்றன.

271. முதல் வெற்றி: இமையத்தில் விற்பொறிப்பு

நெடுஞ்சேரலாதனின் சிறப்பிற்குரிய முதல் வெற்றி இவனது வடநாட்டுப் படையெடுப்பாகும். வட நாட்டின்மேல் படையெடுத்துச் சென்று அந்நாட்டு அரசரை வென்று இமையமலையிலே தன் விற்பொறியைப் பொறித்து அதனையே தன் வடவெல்லையாக வரம்பமைத்து வந்தமையால் இவன் இமைய வரம்பனென்னும் சிறப்புப் பெயர் பெற்றான்.

'போரிசை மரபின் ஆரியர் வணக்கி' (பதி.பதி.2)
'அமைவரல் அருவி இமையம் விற்பொறித்து'
(பதி.பதி.2)

என்று, இவன் வடபுலத்து ஆரிய மன்னரை வென்று வணக்கியதையும் இமையத்தில் விற்பொறித்ததையும் பதிற்றுப்பத்தின் பதிகம் குறிப்பிடுகின்றது. இவ்வாறு ஆரியரை வென்று அடிப்படுத்தி இமையத்தில் விற்பொறித்துக் குமரி முதல் இமையம் வரை இவனொருவனே மேலாண்மை செலுத்தினானென்பதை,

ஆரியர் துவன்றிய பேரிசை யிமயம்
தென்னங் குமரியொடு ஆயிடை
மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே (பதி.11)

என வரும் குமட்டூர்க் கண்ணனார் பாடலடிகளும் உணர்த்துகின்றன. "குமரியொடு வடவிமயத்து ஒருமொழி வைத்து உலகாண்ட சேரலாதன்" (சிலம்பு.29 உரைப்பாட்டு) என்று இவன் மகனாரான இளங்கோவடிகளும் தாம் இயற்றிய சிலப்பதிகாரத்தில் குறிப்பார்.

இவன் காலத்தில் இந்நாவலந்தீவில் பிற நாடுகளையாண்ட மன்னரெல்லாம் இவனுக்கு அஞ்சி நடுங்குமாறு விளங்கிய இவனது மறப்புகழைக் குறித்து,

அரிமான் வழங்கும் சாரல் பிறமான்
தோடுகொள் இனநிரை நெஞ்சதிர்ந் தாங்கு
முரசுமுழங்கு நெடுநகர் அரசுதுயில் ஈயாது
மாதிரம் பனிக்கும் மறம்வீங்கு பல்புகழ் (பதி.12)

என்று உவமையோடே பாடுவார் குமட்டூர்க் கண்ணனார்.

இமையத்தில் விற்பொறித்து அதனையே தன் மேலாண்மைக்கு வரம்பாக்கியதனால் இந்நெடுஞ்சேரலாதன் பெற்ற இமையவரம்பனென்னும் சிறப்புப் பெயரே இவனுக்குப் பின்னும் இவன் குடித்தோன்றல்களுக்கும் பெயராகி வழங்கியது. சிலப்பதிகாரத்தில் இவன் மகனான செங்குட்டுவன் அம்முறையில் இமையவரம்பனென விளிக்கவும் குறிக்கவும் பெறுகின்றான்.

இமைய வரம்ப! நின் இகழ்ந்தோர் அல்லர்:
அமைகநின் சினமென ஆசான் கூற
(சிலம்பு.26:23-24)

குடகக் கொங்கரும் மாளுவ வேந்தரும்
கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்
எம்நாட் டாங்கண் இமைய வரம்பனின்
நன்னாட் செய்த நாளணி வேள்வியில்
வந்தீ கென்றே வணங்கினர் வேண்ட
(சிலம்பு.30:159-163)

எனவரும் அடிகளை இங்கே காணலாம்.

272. கடற்கடம்ப வெற்றி

வடநாட்டு வெற்றியையடுத்துக் கடற்கடம்பரை வென்ற இவனது வெற்றி இவனுக்குப் பெரிதும் புகழ்சேர்த்தது. கடம்பரென்போர் மேல் கடல்தீவுகளில் தங்கிச் சேர நாட்டினர்க்கும் அந்நாட்டிற்கு வரும் மேனாட்டு வாணிகர்க்கும் தொல்லைகள் கொடுத்துக் கொண்டிருந்த கொள்ளைக் கூட்டத்தினராவர். கடற்கொள்ளையராகிய அக்கடம்பரின்மேல் இமையவரம்பன் பலை யெடுத்து அவராகளை வென்றடக்கினான். கடலுக்கு நடுவே அவுணர்களால் காக்கப்பட்டதும் அவுணர்கோனாகிய சூரனுக்குரியதுமான மாமரத்தின் அடியை முருகப் பெருமான் வெட்டியதுபோல், இவன் கடம்பர்கள் பலரும் மொயத்துநின்று காத்திருந்த கடம்பமரத்தின் அடியை வெட்டுமாறு தன் படை மறவரை ஏவி, அவ்வாறு வெட்டப்பட்ட கடம்பின் அடிமரத்தினால் தனக்கு வெற்றி முரசு செய்வித்தானென்று இவனது இவ்வெற்றியைப் புனைந்து பாடுவார் குமட்டூர்க் கணணனார்.

நளியிரும் பரப்பின் மாக்கடல் முன்னி
அணங்குடை அவுணர் ஏமம் புணர்க்கும்
சூருடை முழுமுதல் தடிந்த பேரிசைக்
கடுஞ்சின விறல்வேள் களிறுரர்ந் தாங்கு .....
பலர்மொசிந் தோம்பிய திரள்பூங் கடம்பின்
கடியுடை முழுமுதல் தமிய ஏஎய்
வென்றெறி முழங்குபணை செய்த வெல்போர்
நாரரி நறவின் ஆர மார்பின்
போரடு தானைச் சேர லாத! (பதி.11)

எனபது இவன்பெற்ற இவ்வெற்றி குறித்து அவர் பாடும் பாடலடிகளாம். இன்னும் பகை மறவர்கள் உயிரிழந்து

வீழுமாறு அவர்களோடே வாட்போரினைச் செய்து அவர்களுக்குரிய இடங்களைக் கவர்ந்து கொள்ளும் படைச்சுற்றத்தினையுடையவர்கள் கடம்பரென்றும். அத்தகைய கடம்ப மன்னரும் அஞ்சித் தலைநடுங்கும்படியாக அவர்களை எதிர்த்துப் பொருது, அவர்களுடைய காவல் மரமான கடம்பின் அடியை வெட்டிய கடுஞ்சின வேந்தன் இமையவரம்பனென்றும் பாடுகின்ற (பதி.12) அப்புலவர் பின்னும்,

நுங்கோ யாரென வினவின் எங்கோ
இருமுந்நீர்த் துருத்தியுள்
முரணியோர்த் தலைச்சென்று
கடம்பு முதல் தடிந்த கடுஞ்சின முன்பின்
நெடுஞ்சேர லாதன் வாழ்கவவன் கண்ணி! (பதி.20)

என்று இவ்வெற்றியைக் குறித்தே இவனைப பாராட்டி வாழ்த்துவார்.

இமையவரம்பனின் இவ்வெற்றிகளைக் குறித்து இளங்கோவடிகளும் சிலப்பதிகாரக் காப்பியத்தின் பலவிடங்களில் பாடியுள்ளார்.

கடற்கடம் பெறிந்த காவலன் வாழி
விடர்ச்சிலை பொறித்த வேந்தன் வாழி
(சிலம்பு 23: 81-82)

மாநீர் வேலிக் கடம்பெறிந்து இமயத்து
வானவர் மருள மலைவிற் பூட்டிய
வானவர் தோன்றல் வாய்வாட் கோதை
(சிலம்பு 25:1-3)

கடற்கடம் பெறிந்த கடும்போர் வார்த்தையும்
விடர்ச்சிலை பொறித்த வியன்பெரு வார்த்தையும்
(சிலம்பு.25: 187-188)

கடற்கடம் பெறிந்த காவல னாயினும்
விடர்ச்சிலை பொறித்த விறலோ னாயினும
(சிலம்பு.28:135-136)

கடம்பு முதல்தடிந்த காவலனைப் பாடிக்
குடங்கைநெடுங் கண்பிறழ ஆடாமோ ஊசல்
கொடுவிற் பொறிபாடி ஆடாமோ ஊசல்
(சிலம்பு.29:23)

கடந்தடுத்தார்ச் சேரன் கடம்பெறிந்த வார்த்தை
படர்ந்த நிலம்போர்த்த பாடலே பாடல்
(சிலம்பு.29:28)

எனவரும் இவையேயன்றி இன்னும் பல சான்றுகளையும் காணலாம்.

இமையவரம்பனால் கடலுட்சென்று வெல்லப்பட்ட இக்கடம்பர், கடப்பமரத்தினைத் தம் குலதெய்வமாகக் கொண்டு மைசூர் நாட்டின் மேலைப்பகுதியை ஆண்ட கதம்ப வேந்தராகவும் கருதப்படுகின்றனர்.[6] இக்கருத்து மேலும் ஆராயத்தகும்.

இனி, இந்நெடுஞ்சேரலாதன் கடற்கடம்பரை வென்று அவரது காவல் மரமான கடம்பினையறுத்த போதும் வடவரை வென்று வடவிமயத்தே விற்பொறித்த போதும் அவ்வப்போர்களின் முடிவில் இவனால் வெல்லப்பட்ட வேந்தர்கள் இவனுக்குப் பணிந்து வந்து இவனுடைய நகரான மாந்தையின் முற்றத்தில் பெருமைசான்ற நல்ல அணிகலன்களையும் பொற்பாவைகளையும் வயிரங்களையும் பெருமளவு திறைப்பொருள்களாகத் தந்து குவித்தனரென்ற செய்தியை,

வலம்படு முரசிற் சேர லாதன்
முந்நீர் ஓட்டிக் கடம்பறுத்து இமையத்து
முன்னோர் மருள வணங்குவில் பொறித்து
நன்னகர் மாந்தை முற்றத்து ஒன்னார்
பணிதிறை தந்த பாடுசால் நன்கலம்
பொன்செய் பாவை வயிரமொடு ஆம்பல்
ஒன்றுவாய் நிறையக் குவைஇ அன்றவன்
நிலந்தினத் துறந்த நிதியத் தன்ன (அகம். 127)

எனவரும் மாமூலனாரின் அகப்பாடலடிகளால் அறியலாம்.

இவன் கடற்கடம்பரை வென்றோட்டி வெட்டிய அவரது காவற் கடம்பினால் வெற்றி முரசு

இயற்றினானென்பதையும் பண்ணமைந்த அம்முரசின் கண் அடிக்கப்படும்போது மிகப் பேரொலி எழுப்பி அதிருமென்பதையும்,

சால்பெருந் தானைச் சேரலாதன்
மால்கட லோட்டிக் கடம்பறுத் தியற்றிய
பண்ணமை முரசின் கண்ணதிர்ந் தன்ன
கவ்வை தூற்றும் வெவ்வாய்ச் சேரி (அகம். 347)

என்று அம்மாமூலனாரே மற்றோர் அகப்பாடலில் அழகுறப் பாடியுள்ளார்.

27.3. யவன வெற்றி

இமையவரம்பனின் வெற்றிகளுள் மூன்றாவதாகக் குறிக்கத்தக்கது இவன் யவனரை வென்று பிணித்த வெற்றியாகும்.

நயனில் வன்சொல் யவனர்ப் பிணித்து
நெய்தலைப் பெய்து கைபிற் கொளீஇ
அருவிலை நன்கலம் வயிரமொடு கொண்டு
பெருவிறல் மூதூர்த் தந்துபிறர்க் குதவி (பதி.பதி.2)

என்று இவனது யவன வெற்றியைப் பதிகம் விளக்கிப் புனைகின்றது. யவனராவார் கிரேக்கர் முதலியோர். அவர்கள் வாணிகத்தின் பொருட்டு இந்நாட்டிற்கு வந்து, பின் மேல் கடலோரத்தே ஒரு பகுதியை ஆண்டிருந்தோராதல் வேண்டும். அப்பகுதி இமைய வரம்பனின் நாட்டையொட்டியே வடபால் இருந்திருக்கலாம். தக்காணத்தின் மேற்குக் கரைப் பக்கமாகச் சில ஊர்களை அந்த யவனர் ஆண்டிருந்தனரென்பார் வரலாற்று அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி[7] 'நயனில் வன்சொல் யவனர்' என்பதனால் அவர்கள் இமையவரம்பனை மதியாதே இகழ்ந்து வஞ்சினமொழி பேசி இவனது பகைமையை வலிந்து ஏற்படுத்திக் கொண்டனரென்பது புலனாம். அவ்வாறு இவனையிகழ்ந்து நயனில் வன்சொல் பேசிய யவனரை இவன் வென்று பிணித்து அவர் கைகளைப் பின்கட்டாகக் கட்டி நெய்யைத் தலையிலே பெய்து இழுத்து வந்ததுடன் அவருடைய விலை மதிப்பரிய நன்கலன்களை வயிரங்களோடே கவர்ந்து

கொண்டு வந்து தன் பெரிய வெற்றித் திருநகரில் வைத்து எல்லோர்க்கும் உதவினான்.

பதிற்றுப்பத்தின் பதிகத்தில் இவ்வளவு விளக்கமாகக் குறிக்கப்பட்ட இச்செய்தி அந்நூலில் இவனைப் பற்றிய இரண்டாம் பத்துப் பாடல்களில் ஒன்றிலும் பேசப்படவில்லை. ஆதலால், குமட்டூர்க் கண்ணனார் இரண்டாம் பத்தைப் பாடிய பிறகே இமையவரம்பன் யவனரொடு தொடுத்த போர் நடைபெற்றிருக்க வேண்டுமென்பார் முனைவர் சி. பாலசுப்பிரமணியனார்.[8]

இமையவரம்பன் நெடுஞ்சேரலாதன் தன்னைப் பத்துப்பாடலகளால் பாடிய குமட்டூர்க் கண்ணனார்க்கு உம்பற்காட்டுள் ஐந்நூறு ஊர்களைப் பிரமதாயமாகக் கொடுத்துத் தன் சேரநாட்டின் தென் பகுதி வருவாயிலும் முப்பத்தெட்டாண்டுகள் பாகம் கொடுத்தானென்றும், தான் ஐம்பத்தெட்டாண்டுகள் அரசு வீற்றிருந்தானென்றும் பதிற்றுப்பத்தின் பதிகம் கூறும்.

முடிவில், இமையவரம்பனாகிய இச்சேரமான் குடகுகோ நெடுஞ்சேரலாதனுக்கும் சோழன் வேற்பல் தடக்கைப் பெருநற் கிள்ளிக்குமிடையே திருப்போர்ப்புறம் எனுமிடத்தே பெரும்போர் மூண்டது. மிகக் கடுமையான அப்போரில் இருதிறப்படைகள் முற்றும் மடிய இருபெருவேந்தர் தாமும் இகலோடு பொருது மாண்டனர். இப்போரின் முடிவில் புலவர் கழாத்தலையாரும் பரணரும் போர்க்களஞ்சென்று கண்டு பெரிதும் இரங்கி நெஞ்சம் நெகுருகிப பாடியுள்ளனர். (புறம்.62, 63, 368)

28 சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதன் (கி பி75-100)

சேரமான் அந்துவஞ்சேரல் இரும்பொறைக்கும் ஒருதந்தையென்பான் மகளுக்கும் பிறந்த மகன் செல்வக கடுங்கோ வாழியாதனென்று பதிற்றுப்பத்திலே இவனைக் குறிதது அமைந்த ஏழாம்பத்தின் பதிகம் இயம்பும்.

இச்சேரமான் செல்வக் கடுங்கோவின் பெருங்கோப் பெண்டு வேளாவிக்கோமான் பதுமனின் மகளென்று அறிய

வருதலால் (பதி.பதி.8), அப்பதுமனின் மற்றொரு மகள் கணவனான இமையவரம்பன் நெடுஞ்சேரலாதனும் இவனும் ஏறத்தாழ ஒத்த காலத்தவரென்பதும், தமையன் தம்பி முறையுற்ற தாயத்தினரென்பதும் புலனாம்.

செல்வக் கடுங்கோ வாழியாதன் செந்நாப்புலவர் கபிலராலும் குண்டுகட் பாலியாதனாராலும் சிறப்பித்துப் பாடப்பெற்றுள்ளான். பறம்பிற்கோமான் பாரியின் நண்பராய் அவனுடன் இருந்த கபிலர், அவன் மாண்டபின் இவன் புகழ் கேட்டு வந்து, இவனை முதலில் பாடிய பத்துப் பாடல்கள் பதிற்றுப் பத்திலே ஏழாம் பத்தாக இடம் பெற்றுள்ளன; அவரே அடுத்துப் பாடிய இரு பாடல்களும் குண்டுகட் பாலியாதனார் பாடிய ஒரு பாடலும் புறநானூற்றிலே (8,14;387) அமைந்துள்ளன.

'பாணனே, நீ கல்லுயர் நேரிப்பொருநன் செல்வக் கோமானைப் பாடிச் செல்வையாயின் பந்தரென்னும் பெயரையுடைய பெரும்புகழ் வாய்ந்த மூதாரிடத்துக் கடலிலிருந்து எடுக்கப்பட்ட முத்துக்களோடே கொடுமணமென்னும் ஊரிற் செய்யப்படும் நல்லணிகளை அவன் பரிசில் தரப் பெறுவாய்' (பதி.67) எனவரும் பாணாற்றுப் படைப் பாடலால் இச் சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதனின் ஆட்சிப் பகுதியில் நேரிமலை, கொடுமணம், பந்தர் ஆகிய இடங்கள் அடங்கியிருந்தமை விளங்கும்.

ஊழி வாழி பூழியர் பெருமகன்
. . . . . .
செல்வக் கடுங்கோ வாழி யாதன்
. . . . . .
புல்லிலை வஞ்சிப் புறமதில் அலைக்கும்
கல்லென் பொருநை மணலினும் ஆங்கண்
பல்லூர் சுற்றிய கழனி
எல்லாம் விளையும் நெல்லினும் பலவே (புறம்.387)

எனவரும் குண்டுகட் பாலியாதனாரின் பாடலடிகளால் இவன் பூழி நாட்டையும் உள்ளடக்கி வஞ்சிமாநகரிலிருந்தே ஆண்டமை தெளிவாகின்றது.

இனி, இச்சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதன் சிறந்த போராற்றல் வாய்ந்தவன்.

வையங் காவலர் வழிமொழிந் தொழுகப்
போகம் வேண்டிப் பொதுச்சொற் பொறாஅது
இடஞ்சிறிது என்னும் ஊக்கம் துரப்ப
ஒடுங்கா உள்ளத்து ஓம்பா ஈகைக்
கடந்தடு தானைச் சேர லாதன் (புறம்.8)

என்பதுபோல் இன்னும் பலவாறாக இவனுடைய போர்ச் சிறப்பும் மற மேம்பாடும் புலவரிருவராலுமே புகழப் பெறுகின்றன. ஆயினும் இவன் மேற்கொண்ட போராக அறிய வருவது சோழ பாண்டியரிருவரையும் இவன் வென்றோட்டிய ஒன்றேயாம்.

சிறியிலை உழிஞைத் தெரியல் சூடிக்
கொண்டி மிகைபடத் தண்டமிழ் செறித்துக்
குன்றுநிலை தளர்க்கும் உருமிற் சீறி
ஒருமுற்று இருவ ரோட்டிய ஒள்வாள்
செருமிகு தானை வெல்போ ரோயே (பதி.63)

என்று அவ்வெற்றியைப் பாடுவார் கபிலர். இப்போர் பற்றிய வேறு விளக்கமும் புலப்படவில்லை.

அடுத்து, இச்செல்வக் கடுங்கோ வாழியாதன் ஈகை நலமும் சிறப்புற இயல்பிலேயே வாய்க்கப் பெற்றவன். கபிலர் இவனிடம் வந்து பாடிய முதற் பாடலிலேயே இவனது ஈகைப் பண்பினைத் தாம் கேள்வியுற்ற முறையில கிளந்து மொழிகின்றார்.

ஈத்தது இரங்கான் ஈத்தொறும் மகிழான்
ஈத்தொறும் மாவள் ளியனென நுவலும்நின்
நல்லிசை தரவந் திசினே (பதி.61)

என்று, இவனுடைய இந்த ஈகைப் புகழே தம்மை ஈர்த்ததாய் அவர் இயம்புவார். பின்னர் அவர் பாடிய பத்துப் பாடல்களுக்குப் பரிசிலாக இவன் நூறாயிரம் பொற்காசுகளைச் சிறுகொடை கொடுத்துப் பின்னும் நன்றாவென்னும் குன்றேறி நின்று தன் கண்ணிற்கண்ட நாடுகளையெல்லாம் காட்டிக் கொடுத்தானென்று பதிகத்தால் அறிகின்றோம்.

இந்த நன்றாவென்றும் குன்று இக்காலத்துத் தேனன்றா மலையெனச் சேலம் மாவட்டம் ஊற்றங்கரை

வட்டத்தின் தென்பகுதியில் மஞ்சவாடிக் கணவாயின் வடபால் உள்ளதென்பர் மு. இராகவையங்கார்.[9]

செல்வக் கடுங்கோ வாழியாதன் நன்றாவென்னும் குன்றேறி நின்று கண்ணிற்கண்ட நாடுகளையெல்லாம் காட்டிக் கொடுக்கக் கபிலர் அம்முறையில் பலவூர்களைப் பரிசிலாகப் பெற்ற இச்செய்தியைப் பின்னர்ப் பெருங்குன்றூர் கிழாரும் இளஞ்சேரலிரும்பொறையைப் பாடும்போது சிறப்புற எடுத்துக் குறிப்பிடுவார். (பதி. 85)

குண்டுகட் பாலியாதனாரும் தாம் கனவென மருளுமாறு தமக்கு இவன் நனவில் நல்கிய நசைச் சிறப்பினை நன்கு புனைவார் (புறம். 387).

இவன் இருபத்தைந்தாண்டுகள் அரசு வீற்றிருந்தானென்று பதிற்றுப்பத்தின் பதிகம்(7) பகரும். சேரமான் சிக்கற்பள்ளித் துஞ்சிய செல்வக் கடுங்கோ வாழியாதனென்று குறிக்கப் பெறுதலால் (புறம்.387-குறிப்பு) இவன் தன் இறுதிக் காலத்தில் சிக்கற்பள்ளியென்ற இடத்தே இறந்தானென்று அறிகிறோம்.

29. பல்யானைச் செல்கெழுகுட்டுவன் (கி.பி.100-125)

இமையவரம்பன் தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவன் என்று பதிற்றுப்பத்தில் இவனைப் பற்றிய மூன்றாம் பத்தின் பதிகம் கூறும். ஆதலால், இவன் உதியஞ்சேரலுக்கு வெளியன் வேண்மாள் நல்லினி வயிற்றில் பிறந்த இளையமகனென்பது இனிதே விளங்கும். அப்பதிகத்தால் அறியவருகின்ற இவனைக் குறித்த பிற செய்திகளாவன.

1. இவன் உம்பற்காடெனும் பகுதியைத் தன் ஆட்சியின்கீழ் அடக்கினான். 2. அகப்பாவெனும் பகைவரது அரணை முற்றுகையிட்டுச் சிதைத்து அதனைப் பட்டப் பகலில் தீக்கொளுத்தினான். 3. தன் குலத்தில் தனக்கு மூத்தோராய் உள்ளோரை மதியோடொத்த தன் குளிர்ந்த அருளால் தழுவி அவர்க்கும் தன்னுடைய பரந்த நாட்டினைப் பகுத்துக் கொடுத்து ஆட்சியமைத்தான். 4. களிறுகளைக்

கிழக்கு மேற்காக வரிசையில் நிறுத்திக் கீழ்கடல் மேல்கடல் என்ற இருகடல் நீரையும் ஒரே பகலில் வரவழைத்து நீராடினான். 5. தன்னாட்டு அயிரை மலையில் உறையும் தன் குலதெய்வமான கொற்றவையைத் தானும் முறைப்படி வழிபட்டான். 6. தன்னைப் பாலைக் கௌதமனார் பத்துப்பாடல்களால் சிறப்பித்துப் பாடினாராகத் தான் அவர்க்குப் பரிசில் கொடுக்குமுகத்தான் அவரை நோக்கி: 'நீர் வேண்டுவதைக் கொள்வீராக' என்னவும், அந்தணராகிய அப்புலவர், 'யானும் என் பார்ப்பனியும் சுவர்க்கம் புகல் வேண்டும்' என, இவன் பார்ப்பனரில் பெரியோரைக் கேட்டு அவரால் ஒன்பது பெருவேள்வி வேட்பித்துப் பத்தாவது பெரு வேள்வியில் அப்புலவரையும் அவருடைய மனைவியையும் சுவர்க்கம் புகுவித்தான். 7. இவன் இருபத்தைந்தாண்டுகள் அரசு வீற்றிருந்தான். 8. முடிவில், ஒடுங்காத நற்புகழையும் உயர்ந்த நூற்கேள்வியையுமுடைய நெடும்பாரதாயனாரெனும், தன் ஆசான் தனக்கு முன்னே துறவு மேற்கொண்டு காடு செல்லத் தானும் துறவுள்ளங்கொண்டு துறந்து காட்டிற்குச் சென்றான் - என்பனவாம்.

291. உம்பற்காட்டு ஆளுகை

பல்யானைச் செல்கெழு குட்டுவன் உம்பற் காட்டைத் தன்கோலில் நிறுத்தினான் என்பதற்குப் பிறராட்சியின்கீழ் இருந்ததனை வென்று இவன் தன்னாட்சியின்கீழ் அடிப்படுத்திச் சேரமுடியரசிற் சேர்த்தான் என்று பொருள் காண்பர்.[10] அது பொருந்தாது. உம்பற்காடென்பது இக்காலத்து ஆனைமலைப் பகுதியாம் (உம்பல்- யானை),[11] அது முன்னமே சேரராட்சியிற் சேர்ந்திருத்தலேயன்றிப் பிறராட்சியில் இருந்ததன்று. அக்காட்டு நாட்டில் ஐந்நூறு ஊர்களை இப்பல்யானைக் குட்டுவனின் தமையனான இமையவரம்பன் தன்னைப் பாடிய குமட்டூர்க் கண்ணனார்க்குப் பிரமதாயமாகக் கொடுத்தானென்ற இரண்டாம் பத்தின் பதிகச் செய்தியால் இதனையறியலாம். அவ்வும்பற்காட்டில் அவ்வந்தணப் புலவர்க்கு இறையிலி நிலமாகக் கொடுத்த ஐந்நூறு ஊர்களுக்கு மேலும் பலவூர்கள் இருந்தனவென்றும் கருதக்கிடக்கின்றது. உம்பற்காட்டு ஐந்நூறு ஊரும் என்று முற்றும்மை கொடுத்துக் கூறாமல் ஐந்நூறூர் என்ற மட்டில் கூறப்பெற்றமையால் இது புலனாம். ஆகவே, இமைய வரம்பனின் ஆட்சியிலிருந்த உம்பற் காட்டை

அவனது இசைவோடே இவன் தன்னாட்சியில் ஏற்று நிறுவினானென்று கொள்வதே பொருந்தும். சேர வேந்தர்கள் பலர் ஒரே காலத்தில் சேரநாட்டின் பல பகுதிகளைப் பகைமையின்றி ஒற்றுமையோடே பிரித்து ஆண்டனராதலால் இஃது இசையக்கூடியதே.

மதியுறழ் மரபின் முதியரைத் தழீஇக்
கண்ணகன் வைப்பின் மண்வகுத்து ஈத்து
(பதி.பதி.3)

என்று இப்பல்யானைச் செல்கெழு குட்டுவனும் தன்னாட்டின் பரந்த பகுதியைத் தன்குலத்து மூத்தோர்க்குப் பகுத்துக் கொடுத்துள்ள முறையில் மூத்தோனாகிய இமைய வரம்பனின் உம்பற்காட்டுப் பகுதியைத் தானும் மாற்றாக ஏற்றுக் கொண்டிருத்தல் இயல்பே எனலாம்.

இனி, உம்பற்காடாகிய ஆனைமலைத் தொடரிலேயே பழநி மலைக்கு மேற்கே பதினான்கு கிலோமீட்டர் தொலைவில் இக்காலத்தே ஐவர் மலையென வழங்கும் பண்டைய அயிரை மலையில் [12] அமர்ந்த கொற்றவையாகிய தன் குலதெய்வத்தை இவன் முறைப்படி வழிபட்டான் எனக் காண்கிறோம். அன்றியும், 'நேருயர் நெடுவரை அயிரைப் பொருந' (பதி21) என்று அம்மலையின் உரிமைதோன்ற இவன் விளிக்கவும் பெறுகின்றான்.

அயிரை நெடுவரை போலத்
தொலையா தாகநீ வாழும் நாளே (பதி.70)

என்று செல்வக்கடுங்கோ வாழியாதனும்,

கடவுள் அயிரையின் நிலைஇக்
கேடில வாகப் பெருமநின் புகழே (பதி.79)

எனப் பெருஞ்சேரல் இரும்பொறையும் அம்மலையோடே சார்த்திப் பின்னர் வாழ்த்தலும் பெறுகின்றனர். இவற்றால் அவ்வயிரைமலை தொன்று தொட்டுச் சேரர்க்குரியதென்பது விளங்கும். தமக்கேயுரிய தம்மலை என்பதனாலேதான் அம்மலையிற் கொற்றவையைத் தம் குலதெய்வமாகக் கொண்டு சேரர் வழிபட்டனர்; அம்மலைபோல் நாளும் புகழும் நிலை பெற்று வாழுமாறு அவர்களைப் புலவர்களும் வாழ்த்தினர்.

ஆதலால், அவ்வயிரை மலையையுள்ளிட்ட ஆனைமலைத் தொடரும் சேரர்க்குப் பண்டே உரிமையுடையதன்றிப் பின்னர் வென்று கொண்டதன்று.

292. முதியரைத் தழுவல்

இனி, இப்பல்யானைச் செல்கெழு குட்டுவனால் தழுவிக் கொள்ளப்பட்ட முதியரை உம்பற்காட்டுப் பகுதியில் வாழ்ந்த ஓர் இனத்தவரென்றும் அவர்களின் துணையோடுதான் இவன் உம்பற்காட்டின் வடபகுதியில் அமைந்த அகப்பாவென்னும் பகைவரது அரணையழித், அப்பகுதியை அம் முதியர் காவலில் வைத்தானென்றும் கூறுவர்.[13] ஆயின், அதுவும் பொருந்துவதாகத் தோன்றவில்லை. முதியரென்பாரை ஓர் இனத்தவராகச் சங்க இலக்கியங்களைக் கொண்டு கருதுமாறில்லை. இக்குட்டுவன் முதியரைத் தழுவி அவர்க்கு மண்வகுத்துக் கொடுத்தானாகக் கூறுகின்ற மேற்குறித்த பதிகத்தடிகளுக்கு அமைந்த பழையவுரையும்,

> "முதியரை மதியுறழ் மரபின் தழீஇ
> மண்வகுத்து ஈத்தெனக் கூட்டித்
> தன்குலத்தில் தனக்கு முதியாரை
> மதியோடொத்த தன் தண்ணளியால்
> தழீஇக்கொண்டு அவர்க்குத்
> தன்னாட்டைப் பகுத்துக் கொடுத்து
> என உரைக்க"

என்றே அமைந்துள்ளது. முதியரென்பார் ஓர் இனத்தவராயின் அவரை இப்பழையவுரையாசிரியர் அறியாதும் குறியாதும் இரார். அடுத்து, இக்குட்டுவனேயன்றி இவன் தந்தையான உதியஞ்சேரலும் முதியரைப் பேணியிருகின்றான்.

> மறப்படைக் குதிரை மாறா மைந்தின்
> துறக்க மெய்திய தொய்யா நல்லிசை
> முதியர்ப் பேணிய உதியஞ் சேரல்
> பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை (அகம். 233)

எனவரும் இது முன்னர்க் காணப்பட்டதே. பின்னும்,

இளந்துணைப் புதல்வரின் முதியர்ப் பேணித்
தொல்கடன் இறுத்த வெல்போர் அண்ணல்
(பதி.70)

என்று செல்வக் கடுங்கோ வாழியாதனும் முதியரைப் பேணியவனாகப் பாடப்பெறுகின்றான்.

"இளந்துணையாகிய புதல்வர்களைப்
பெற்றமையால் நின்குலத்து
முன்னோர்களான பிதிரர்களைக்
காப்பாற்றி இல்லறத்தார்க்குரிய
பழைய கடன்களைச் செய்துமுடித்த,
வெல்லும் போரைச்
செய்யும் தலைவனே"[14]

என்பதே இவ்வடிகளின் பொருளாகின்றது. இவற்றுளெல்லாம் முதியரை ஓர் இனத்தவராகக் கொள்ளுமாறில்லை. மாறாகத் தம்குலத்து முன்னோர், முதியோர் என்று கருதுமாறே அச்சொல் ஆட்சிப்பட்டுள்ளதென்பது அறியத்தக்கதாம்.

293. அகப்பாவெறிந்த கொங்கவெற்றி

இனி, இக்குட்டுவன் அகப்பாவென்னும் பகைவரது அரணையழித்துப் பகலிலேயே அதற்குத் தீயிட்டுக் கொளுத்தினானாகக் கூறுகின்ற பதிகம், அந்த அகப்பாவிற்குரிய பகைவர் யாரென்பதைக் குறிப்பிடவில்லை. ஆயினும், பாலைக்கௌதமனாரின் பாடலொன்றில் இக்குட்டுவன் கொங்கர் நாட்டை அகப்படுத்திக்கொண்ட வெற்றியைத் தொடர்ந்தே இந்த அகப்பாவெறிந்த செய்தி குறிக்கப்பெறுகின்றது.

ஆகெழு கொங்கர் நாடகப் படுத்த
வேல்கெழு தானை வெருவரு தோன்றல்
உளைப்பொலிந்த மா
இழைப்பொலிந்த களிறு
வம்புபரந்த தேர்
அமர்க்கெதிர்ந்த புகன்மறவரொடு
துஞ்சுமரந் துவன்றிய மலரகன் பறந்தலை

ஓங்குநிலை வாயில் தூங்குபு தகைத்த
வில்விசை மாட்டிய விழுச்சீர் ஐயவிக்
கடிமிளைக் குண்டுகிடங்கின்
நெடுமதில் நிரைப்பதணத்து
அண்ணலம் பெருங்கோட்டு அகப்பா எறிந்த
பொன்புனை உழிஞை வெல்போர்க் குட்டுவ! (பதி.22)

எனவரும் அப்பாடலடிகளின் போக்கினால் இந்த அகப்பாவைக் கொங்கர்க்குரியதாகக் கொள்ளலாம். கொங்கரையன்றிக் குறிப்பாக வேறெவரையும் இக்குட்டுவன் வென்றானாகப் பதிகமோ பாடல்களோ கூறாமையால் இவ்வாறு கொள்வதே நேராகும்.

இனி, இக்குட்டுவன் பாலைக் கௌதமனார் பாடலில், 'மிதியல் செருப்பின் பூழியர் கோவே' (பதி.21) என விளிக்கப்பெறுதலால் இவன் சேர நாட்டினுள் பூழிநாட்டுப் பகுதியை ஆண்டவன் என்பது விளங்கும்.

"இன்றைய நிலப்பிரிவின்படி பாலக்காடு,
திருச்சூர் மாவட்டங்களும்
மலப்புறம் மாவட்டத்தின் தென்பகுதியும்
சேர்ந்ததே பண்டைய
பூழிநாடாகும். பொன்னானி
மாவட்டத்தின் தென்பகுதியினைப்
பூழிநாடெனக் குறிப்பது கேரளத்து
வழக்கமாக இன்றும் உள்ளதால்
அந்நாடு மேற்கே பொன்னானி வரையில்
பரவியிருந்தமை விளங்கும்"[15]

இப்பூழிநாடு பிற்காலத்தில் பொலநாடென்ற பெயரில் கோழிக்கோடு நகரைச் சுற்றிய இருபத்திரண்டு அம்சங்களை உள்ளடக்கியிருந்தது.[16] எனவே, பூழியர்கோவர்கிய இவன் அப்பூழிநாட்டின் கீழதாகிய உம்பற்காடென்னும் ஆனைமலைப்பகுதியைத் தன் ஆட்சிக்குள் நிறுவியதும் அதனையொட்டிய கொங்கர் நாட்டை வென்றகப்படுத்ததும் நேர்பட விளங்கும். கொங்கு நாட்டை வென்றகப் படுத்தி ஆண்டமையால் அந்நாட்டு வீரமரபினராகிய மழவர்க்குக் காவலனாகிக், 'குவியல் கண்ணி மழவர் மெய்ம்மறை' (பதி.21) எனவும் இவன் குறிக்கப்பெற்றான்.

இவன் செய்திகளுள் அயிரை பரவியது ஒரு சிறப்புமிக்க செய்தியாகப் பின்வந்த புலவர்களாலும் எடுத்துப் பாராட்டப்பெறுகின்றது. பதிற்றுப்பத்திலேயே பின்னர் இளஞ்சேரல் இரும்பொறையைப் பாடுகின்ற பெருங்குன்றூர் கிழார், அவன் மரபின் முன்னோர்கள் செய்த செயற்கரும் செயல்களைக் குறித்து விளம்புகையில்,

குருதி விதிர்த்த குவவுச்சேற்றுக் குன்றோடு
உருகெழு மரபின் அயிரை பரைஇ
வேந்தரும் வேளிரும் பின்வந்து பணியக்
கொற்றம் எய்திய பெரியோர் மருக (பதி.88)

என்று இவனது இச்செயலை எடுத்துமொழிவது காணலாம். இதனை இதேமுறையில் அவரே பின்னும் ஒருமுறை பேசுவார் (பதி.90)

இளங்கோவடிகளும் தம் சிறியதந்தையாகிய இவன் செய்திகளைச் சிலப்பதிகாரத்தில் பரவலாகவே செப்பிச் செல்கின்றார். தன்னைப் பத்துப்பாடல்களிற் பாடிய பாலைக்கௌதமனார்க்கு இவன் வானுலகளிக்க வேண்டி இயற்றிய வேள்விக்களத்திலே அந்தணர்க்குக் கொடுத்த கொடைத் திறங்கேட்டுச் சோழநாட்டு அந்தணன் பராசரனென்போன் இவனிடம்வந்து பார்ப்பன வாகை சூடி நன்கலன்களைப் பரிசில்கொண்டு வாழ்த்திப் போகின்றானாக வருகின்ற வரலாற்றைப் பாடுமிடத்து,

வண்டமிழ் மறையோற்கு வானுறை கொடுத்த
திண்டிறல் நெடுவேற் சேரலன் (சிலம்பு:23:63-64)

என்று இப்பல்யானைச் செல்கெழு குட்டுவனை அவ்வந்தணன் கூற்றிலே அவர் சிறப்பித்துக் குறிப்பிடுவார். பின்னர்ச் செங்குட்டுவனுக்குச் செவியறிவுறுக்கும் மாடலன் கூற்றிலும்,

நான்மறை யாளன் செய்யுட் கொண்டு
மேனிலை யுலகம் விடுத்தோன் ஆயினும்
. . . . . .
மிகப்பெருந் தானையொடு இருஞ்செரு ஓட்டி
அகப்பா எறிந்த அருந்திறல் ஆயினும்
உருகெழு மரபின் அயிரை மண்ணி
இருகடல் நீரும் ஆடினோன் ஆயினும்
(சிலம்பு: 28: 137-138, 143-146)

என்றெல்லாம் இவன் சிறப்புக்களையே அவர் பெரிதும் அடுக்கி முன்னோர் ஆற்றல்களை மொழிகின்றார்.

210. மாந்தரம் பொறையன் கடுங்கோ என்னும் கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை
(கி.பி.100-140)

மாந்தரம் பொறையன் கடுங்கோ என்னும் கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை, சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதனையொட்டிய காலத்தவன். மாந்தரஞ்சேரல் இரும்பொறையென்னும் பெயரால் அந்துவஞ்சேரல் இரும்பொறையோடும் மாந்தரம் பொறையன் கடுங்கோவென்னும் பெயரால் செல்வக்கடுங்கோவோடும் இவன் ஒற்றுமையுற்று உணரப்படுகின்றான். ஆதலால் இவனை அந்துவஞ்சேரலின் மகனென்ற முறையில் செல்வக் கடுங்கோவின் தம்பியென்றோ அல்லது அவனுக்குத் தாயத்தினனென்றோ எண்ணலாம். இவ்வாறு எண்ணுதற்கு இன்னுமோர் சிறப்புடை ஏதுவையும் காணலாம்.

பாரி மாண்டபின் சேரநாடு வந்து செல்வக்கடுங்கோவைப் பாடிய கபிலர், பின்னர் அப்பாரியின் பிரிவையாற்றாது போய் வடக்கிருந்து உயிர் துறந்த பிறகு, இச்சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறை, விளங்கில் என்னும் ஊருக்குப் பகைவரால் நேர்ந்த துன்பத்தைப் போக்கித் தான் வெற்றி பெற்ற நிலையில், அவ்வெற்றியைச் சிறப்பித்துப்பாட அக்கபிலர் இல்லையேயென்று ஏங்கிக் கூறினானாகப் பொருந்தில் இளங்கீரனாரின் புறப்பாடலால் (புறம்.53) அறிகிறோம். ஆதலின் இவன் செல்வக்கடுங்கோவை அடுத்துக் கபிலரால் முன்னர்ப் பலபடப் பாராட்டிப் பாடப்பெற்றவனாதல் வேண்டும். அப்படியானால்தான் அபபோதெல்லாம் சிறப்பித்துப்பாடிய புலவர் இப்போதும் இருந்தால் இன்னும் சிறப்புறப் பாடுவாரேயென்ற ஏக்கமெழுதற்கு ஏதுவாகும்.

செறுத்த செய்யுள் செய்செந் நாவின்
வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்
இன்றுள னாயின் நன்றுமன் (புறம்.53)

என்ற இவனுடைய இக்கூற்றிலிருந்து கபிலருடைய புலமைத்திறத்தில் இவன்கொண்ட மதிப்பு நன்கு புலப்படுதலால், அம்மதிப்புமிக்க புலமைத் திறத்தினால் தான் பின்னும் புகழப் பெறுதலை இழந்து நிற்கும் ஏக்கமும் இனிதே புலனாகும்.

ஆகவே, இவ்வாற்றால் இச்சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறை, செல்வக் கடுங்கோவையடுத்த காலத்தவனென்பது கருதப்படும்.

2101. மாந்தரன் ஒருவனே

குறுங்கோழியூர் கிழார் (புறம்.17,20,22), கூடலூர் கிழார் (புறம்.229), பொருந்தில் இளங்கீரனார் (புறம்.53), பரணர் (அகம்.142), பெருங்குன்றூர்கிழார் (பதி.90) ஆகியோரால் இச்சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறை பாராட்டிப் பாடவும் குறிக்கவும் பெற்றுள்ளான். மற்றும், தேர்வண்மலையனைப் பாடிய வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தனாரின் பாடலொன்றிலும் (புறம்125) இவன் குறிப்பிடப் பெற்றுள்ளான்.

மற்று, புறநானூற்றில் குறுங்கோழியூர் கிழாராலும் கூடலூர் கிழாராலும் பாடப்பெறுவோன் பெயர் சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையென்றும், பொருந்தில் இளங்கீரனாரால் பாடப்பெறுவோன் பெயரும் பெருஞ்சாத்தனாரால் குறிக்கப்பெறுவோன் பெயரும் சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறையென்றும் அவ்வப்பாடல்களின் அடிக்குறிப்புக்களில் காணப்படுகின்றன. குறுங்கோழியூர் கிழாரின் பாட்டுடைத் தலைவன், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்குப் பகைவன்; பெருஞ்சாத்தனார் பாடலில் வருவோன் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியின் பகைவன். இப்பெருநற்கிள்ளியை நெடுஞ்செழியனுக்கும் பிற்காலத்தவனாகக் கருதுவதனால் போலும், ஔவை துரைசாமிப்பிள்ளை, இவன் பகைவனான மாந்தரஞ்சேரலை நெடுஞ்செழியனின் பகைவனான யானைக்கட்சேய்க்கும் பின்னோனாகக்கொண்டு, மாந்தரஞ்சேரலா வார் இருவரென்பர்.[17] சேரர் வரலாறு எழுதிய துடிசைகிழாரோ, மாந்தரஞ்சேரலுக்குப்

பின்னோனாக யானைக்கட்சேயைக் கொள்வதோடு, அகநானூற்றுப் பாடலில் (142) பரணரால் குறிக்கப் பெறுபவனான மாந்தரம் பொறையன் கடுங்கோவையும் தனியொருவனாகக் கொண்டு அவனொடும் மூவரென்பார்.[18] இன்னோர் கருத்துக்களெல்லாம் ஏற்கத்தக்க வலுவுடையனவாய் இல்லை. இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளிக்கும் சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறைக்கும் இடையே நிகழ்ந்த போரில் சோழனுக்குத் துணையாகிச் சேரனைத் தோற்பித்த தேர்வண்மலையனையே (புறம்.125) தாமும் குறிப்பிடும் பரணர் (நற்.100), அகப்பாடலில் (142) மாந்தரம் பொறையன் கடுங்கோவையும் குறிப்பிடுகின்றார். நெடுஞ்செழியனைப் பற்றிய குறிப்பினையும் அவரது மற்றொரு பாடலில் (அகம்.116) காணலாம். ஆகவே, அந்நெடுஞ்செழியனின் பகைவனான யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலும், பெருநற்கிள்ளியின் பகைவனான சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறையும், பரணர் குறிப்பிடும் மாந்தரம்பொறையன் கடுங்கோவும் வெவ்வேறு காலத்தவரோ வேறுவேறு மாந்தரோ ஆகார்; ஒருவனேயாவான். புறநானூற்றுப் பாடப்பட்டோர் வரலாற்றில் (ப.68) உ.வே. சாமிநாதையரும், சங்ககாலச் சேரமான்கள் என்ற ஆங்கில நூலில் சேசையரும்[19] முறகாலத்தமிழர் காலமுறை கண்ட ஆங்கில நூலில் சிவராசப் பிள்ளையும்[20] மாந்தரஞ்சேரலை ஒருவனென்று கொண்டதே உண்மைவழிப படுவதாம்.

இன்னும் பதிற்றுப் பத்தினுள் இளஞ்சேரல் இரும்பொறையின் முன்னோனாகப பெருங்குன்றூர் கிழாரால் குறிக்கப்பெறுகின்ற (பதி 90) மாந்தரனையும் ஆட்சித்திறன், போராற்றல், பெருமிதம் போன்ற பண்பொற்றுமைகள் பற்றி இவனேயெனக கொள்ளலாம்.

2102 பெயரில் அமைந்த பெருமை

கோசசேரமான் யானைகடசேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்று அடைமொழிகள் பலவற்றோடே இவனபெயர் அமைந்துள்ளது. 'எபபொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள், மெய்ப்பொருள் காண்பது அறிவு' (355) என்ற குறளின் விளக்கவுரையில்,

"..... கோச்சேரமான் யானைக்கட்சேஎய் மாந்தரஞ்
சேரல் இரும்பொறை என்றவழி அரசனென்பதோர்
சாதியும், சேரமானென்பதொரு குடியும்,
வேழநோக்கினை யுடையானென்பதோர்
வடிவும் சேயென்பதோர் இயற்பெயரும்,
மாந்தரஞ்சேரல் இரும்பொறையென்பதோர்
சிறப்புப்பெயரும் ஒருபொருளின்கண்
கற்பனை"

என்று இவன் பெயரையே எடுத்துக்காட்டி உரைக்கின்ற பரிமேலழகரின் உரைவிளக்கத்தால் இவனது இம்முழுப்பெயரும் விளக்கமுறும். 'வேழ நோக்கின் விறல்வெஞ் சேஎய்' எனவும், 'மாந்தரஞ் சேரல் இரும்பொறை' எனவும் இவன் பெயரைத் தம் பாடலின் (புறம்.22) இரண்டடிகளில் அமைத்தாளுவர் குறுங்கோழியூர் கிழார்.

சங்ககாலச் சேரமான்களுள் கோச்சேரமானெனச் சிறப்பித்துக் குறிக்கப்பெறுவோன் இந்த யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை ஒருவனே கோப்பெருஞ் சேரல், கோப்பெருஞ்சோழன் என்ற பெயர்களில் ஒட்டாகிவந்த கோவென்னும் பெயரடையே கோச்சேரமானென்ற இப்பெயரினும் ஒட்டாகி வந்துள்ளது; ஆயினும் இயற்பெயர்களான அவற்றில் அது தரும் பொருட்பேற்றினும், குடிப்பெயரான இதில் தருகின்ற பொருட்பேறு சிறப்புமிக்கது. பெருஞ்சாத்தனென்ற இயற்பெயரிலமைந்த பெருமையினும் பெருவேந்தனென்ற இனப்பெயரிலமைந்த பெருமை பொருட்சிறப்பு மிக்கவாறுபோல், இதனையுணரலாம். ஆகவே, சேரமான்களுள்ளும் கோவென்னும் சிறப்புக்குரியவனாக விளங்கிய தனிப்பெருமை கருதி, இவன் கோச்சேரமானென்று குறிக்கப்பெற்றானாதல் வேண்டும்.

210.3. செங்கோல் வேந்தன்

குறுங்கோழியூர் கிழார் இவனைப்பாடும் முதற்பாடலிலேயே, "மாந்தரஞ்சேரல் இரும்பொறை காக்கும் நாடு தேவருலகத்தையொத்துத் திகழ்கின்றது எனப் பிறர் சொல்லக்கேட்டு வந்து பெருமானே, நின்னாட்டினை யான் கண்ணுக்கினிதாகக் கண்டேன்" (புறம்.22) என்று இவனாட்சிச்

சிறப்புக் குறித்த முகவுரையை மொழிவார். மற்றொரு பாடலில்,

சோறுபடுக்கும் தீயோடு
செஞ்ஞாயிற்றுத் தெறலல்லது
பிறிதுதெறல் அறியார்நின் நிழல்வாழ் வோரே
திருவி லல்லது கொலைவில் லறியார்
நாஞ்சி லல்லது படையு மறியார் (புறம்.20)

என்ற அடிகளால், பகையச்சமின்றிக் குடிகள் அமைதியுற வாழுமாறு நாட்டைக்காத்த இவனது ஆட்சித்திறனை அவர் பாராட்டுவார். அம்பு தங்கும் காவலையுடைய அரணோடே அறம் தங்கும் செங்கோலையுடையவனாகவும் அப்பாடலில் அவர் இவனைப் புகழ்வார்.

மற்று, இவனைப் பாடிய குறுங்கோழியூர் கிழாரேயன்றி, இளஞ்சேரல் இரும்பொறையைப் பாடும் பெருங்குன்றூர் கிழாரும் இவனாட்சிச் சிறப்பினை எடுத்துப் பாராடடுவார் (பதி.90). அவ்விரிந்த பாராட்டின் முடிமொழியாக, 'அறக்கடவுள் வாழ்த்தும்படி நன்காண்ட வெற்றிமேம்பாடுடைய மாந்தரன்' என்று இவனைக் குறிப்பிட்டு, இவன் மரபில் வந்தவனாக இளஞ்சேரலை விளித்துப்பாடுவார் அவர். இவ்வாறு ஒரு மரபு முன்னோனாகக் குறித்தொருவன் எடுத்துமொழியப்பெறும் சிறப்பினையும் சேரமான்களுள் இவனையன்றி வேறெவரும் பெற்றிலரென்பது இங்கே குறிக்கொண்டு நோக்கத்தகும்.

210.4. போர் வேந்தன்

நாடாளும் வேந்தனுக்கு இன்றியமையாத போராற்றலி லும் இவன் மேலோங்கிச் சிறந்திருந்தான். இவனது புகழகேட்டுக் காணச் சென்ற குறுங்கோழியூர் கிழார் இவனைப போர்க்களத்தேதான் முதலில் காண்கிறார்; கண்டு, 'வியன பாசறைக் காப்பாள' (புறம்.22) என விளித்துப் பாடுகின்றார்.

விளங்கிலெண்ணும் ஊருக்குப் பகைவரால் வந்த இடும்பையைத் தீர்த்துப் போர்க்களத்தைத் தனதாக்கிக்கொண்டு பகைவரை வென்ற இவனது

போர்வெற்றியை அவ்வெற்றிச் சிறப்பிற்குப் பொருந்தத் தாம் பாடுவதாகப் பொருந்தில் இளங்கீரனார் ஒரு பாடலைப் (புறம்.53) பாடியுள்ளார்.

இத்தகைய போராற்றல் மிக்க இவன் எவ்வாறோ தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனால் பிணியுண்டு சிறைப்படுத்தப் பட்டதொரு நிலையில், அச்சிறையை அழித்து வலிதில் போய்த் தன் அரசுகட்டிலை எய்திய ஆற்றல்மிக்க செயலொன்று குறுங்கோழியூர்கிழார் பாடலொன்றால் (புறம்.17) அறிய வருகின்றது. அச்செயலை ஒரு களிற்றியானையின் செயலோடே உவமித்து அவர் பாடுகின்றார். யானையை அகப்படுத்தும் குழிமேல் பாவிய பாவைத் தன் மனச்செருக்கினால் மதியாதே சென்று, ஆழ்ந்த குழியில் அகப்பட்ட பீடுடைய வலிமையமைந்த கோடு முற்றிய கொல்களிறு, அக்குழியின் நிலைசரிய அதனைக் குத்தித் தூர்த்து மேலேறித் தன்னினம் விரும்பச் சென்று சேர்ந்தாற்போல், இவன் தன் அரிய வலிமையால் பகையை மதியாது போய்ப் பிணியுண்டு தானுற்ற பெருந்தளர்ச்சி நீங்குமாறு, பின் பிறிதொரு சூழ்ச்சியால் சென்று தன் சுற்றத்தினர் பலரும் மகிழத் தன்னரசெய்தினான் என்று பாடுகின்றார் அவர். எனவே, அப்பாண்டியன் இவனைப் போரிலே வென்று பிணியாது வஞ்சகத்தால் வரவழைத்துப் பிணித்தானென்பதும், இவன் தன் மனவலிமையால் அவனது வஞ்சகத்தை அறியாதே சென்று பிணியுண்டானென்பதும், பிணியுண்டபின் தன் ஆற்றலால் அச்சிறையை அழித்து வலிதில் மீண்டு தன்னரசெய்தினானென்பதும் கருதுகோள் ஆகின்றன.

மற்றொருகால் இவனும் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் பொருத போரில், தேர்வண் மலையனது துணைப்படைபெற்ற சோழனை இவன் வெல்லமாட்டாமல் தோல்வியுற்றானென்று வடமவண்ணக்கன் பெருஞ்சாத்தனார் பாடலால் (புறம்.125) அறிகின்றோம். அப்போரிலே இவன் தோல்வியுற்றாலும், விரைந்து வந்து போரைத் தாங்கிய மலையனை ஒரு குறுநில மன்னனென்று இகழாதே பாராட்டி மொழிவது இவனுக்கு ஆற்றலாகவே அமைகின்றது, ஆற்றலுடையோரே பிறராற்றலைப் போற்றுவராதலால்.

210.5. பெருமித வேந்தன்

சான்றோர் பாடல்கள் பலவற்றாலும் இவனுடைய கல்வி, தறுகண், இசைமை, கொடை என்ற நிலைக்களன்கள் நான்கிலும் அமைந்த பெருமிதம் நன்கு புலனாகின்றது.

'பெரிய கடலினது ஆழமும், அகன்ற உலகத்துப் பரப்பும், காற்று இயங்கும் திசையும், வடிவின்றி நிலைபெற்ற வானமும் என்று சொல்லப்படுகின்ற அவற்றையெல்லாம் வரையறுத்தறியினும் நின் அறிவும் அன்பும் பெருங்கண்ணோட்டமும் ஆகிய பண்புகளைப் பிறர் வரையறுத்தற்கு அரியவனாய் நீ விளங்குகின்றாய்' (புறம்.20) எனறு இவனுடைய அளப்பரிய பெரும்பண்புகளை வியந்து பாடும் குறுங்கோழியூர் கிழார் பாடலில், இவனது அறிவின்கண் அடங்கிய கல்விப் பெருமிதம் விளங்கும்.

திறனறி வயவரொடு தெவ்வர் தேயவப்
பிறர்மண் ணுண்ணும் செம்மல்! நின்னாட்டு
வயவுறு மகளிர் வேட்டுணின் அல்லது
பகைவர் உண்ணா அருமண் ணினையே (புறம்.20)

என்பதால் இவனது தறுகண் பெருமிதம் புலனாம். 'பொறைய, நின் புகழை யாம் விரித்துச் சொன்னால் அவை அகன்று பெருகும்; தொகுத்துச் சொன்னால் அடங்காதெஞ்சும். ஆதலால், மயக்கம் பொருந்திய நெஞ்சையுடைய எம்போல்வார்க்கு நின்புகழ் முழுமையும் பாராட்டி முடியப்பெறா' (புறம்.53) என்று இவன் மிகுபுகழை மீக்கூறும் பொருந்தில் இளங்கீரனார் பாடலடிகளால், இவனது இசைமைப பெருமிதம் இனிதே விளங்கும்,

நிற்பாடிய அலங்கு செந்நாப்
பிற்பிறரிசை நுவலாமை
ஓம்பாது ஈயும் ஆற்றல் எங்கோ (புறம்.22)
இலமல ரன்ன அஞ்செந் நாவின்
புலமீக் கூறும் புரையோர் ஏத்தப்
பலர்மேந் தோன்றிய கவிகை வள்ளல்
நிறையருந் தானை வெல்போர் மாந்தரம்
பொறையன கடுங்கோப் பாடிச் சென்ற
குறையோர் கொள்கலம் போல நன்றும்
உவவினி வாழிய நெஞ்சே (அகம்.142)

என்பன போன்றவற்றால் இவனது கொடைப் பெருமிதம் தேற்றமாம்.

இத்தகைய பெருமிதப் புரவலனான இவனே புலத்துறை முற்றிய கூடலூர் கிழாரைக்கொண்டு கபிலருள்ளிட்ட புலவர்கள் பாடிய ஐங்குறுநூற்றைத் தொகுப்பித்தான். "இத்தொகை தொகுப்பித்தார் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையார்" என்ற அவ்வைங்குறுநூற்றின் பிற்குறிப்பிலே இவன், ஏனைத்தொகைகளின் தொகுப்பித்தார் போலின்றிச் சிறப்புடனே, 'ஆர்' விகுதியால் குறிக்கப்பெறுதல் காணலாம்.

2.10.6. விழுமிய முடிவு

இச்சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறையின் இறப்பும் இவனுடைய சிறப்பிற்கேற்பவே அமைந்தது. இவன் இறப்புக் குறித்த தீநிமித்தமாக இயற்கையில் நேர்ந்த சில மாறுதல்களைக் கண்டு புலவர்கள் அஞ்சினமையும், அவர்கள் அஞ்சினபடியே இவன் துஞ்சினமையும் காண்கிறோம். இவன் இறப்பதற்குமுன் இவனாட்டிலிருந்த பழம் பறவைகள் பறந்துபோக, புதுப்பறவைகள் வந்தமை கண்டு விதுப்புற்ற குறுங்கோழியூர் கிழார், இவனைக் குறித்தெழுந்த தம் பதைப்பினை மாற்றிக்கொண்டு இவனுக்கு ஓம்படை (காப்பு) மொழிகின்றார். 'புதுப்புள் வரினும் பழம்புள் போகினும் அத்தீநிமித்தத்தின் தீப்பயன் நின்மேல் வாராமல் விதுப்புறவறியா ஏமக்காப்பினை உடையையாகுக! ஏனெனில், உலகத்து உயிர்களெல்லாம் நின்னிடத்து வைத்த காதலால், நினக்கு ஏதம் வருமோ என்று அஞ்சுகின்றன' (புறம்.20) என்று அவரது ஓம்படை மொழி அமைகின்றது.[21]

அடுத்தொரு நிமித்தத்தைக் கூடலூர்கிழார் தம் கூட்டத்தாருடனே கண்டு, அத்தீநிமித்தம் தீங்கிலே முடிந்தபின் இரங்கிப் பாடுகின்றார் (புறம்.229). அதில் இச்சேரமான் இறப்பதற்கு ஏழுநாள் முன்பு ஒருநாளிரவு, குறித்ததொரு வானியல் நிலையில், குறித்த திசையில் விண்மீனொன்று எரிமீனாய் வீழ்ந்தது கண்ட புலவரும் இரவலர் பலவரும், அத்தீநிமித்தத்தால் காவலனுக்குத் தீங்கு வருமென்று கருதி, இவன் நோயிலனாயின் நன்றென்று கவலையுற்றிருக்க, எழுநாள் கழிந்தவுடன் அவரஞ்சியவாறே

இவன் மேலோருலகம் எய்தினனென்று அவர்கூறிப் புலம்புகின்றார். மற்றும், இவன் இறந்தபொழுது வலிமை யுடைய பட்டத்துயானை கையை நிலத்திலிட்டு உறங்கவும், திண்ணிய வாரினால் பிணிக்கப்பட்ட முரசம் திடீரெனக் கண்கிழிந்து உருளவும், காவலமைந்த வெண்கொற்றக்குடை கால்பரிந்துவீழவும், காற்றுப்போலும் இயலையுடைய மனஞ்செருக்கிய குதிரைகள் கதியின்றிக் கிடக்கவுமாய்த் தீநிமித்தங்கள் நிகழ்ந்தன என்கிறார் அவர். எனவே, இங்ஙனமெல்லாம் இயற்கையில் மாறுபாடுகள் கண்டவாற்றால், இவன் இறப்பினாலும் விழுமிய சிறப்புக்கு உரியவனாகின்றான் என்று உணரலாம்.

2.11. களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல்
(கி.பி.125-150)

இமையவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கு வேளாவிக் கோமான் பதுமனின் மகள் வயிற்றில் பிறந்தவன் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல். இவன் தம்பியே ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்.

களங்காயால் செய்த கண்ணியும் நாரால் செய்த முடியும் அணிந்து அரசப் பொறுப்பேற்றமையால் இவனுக்குக் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலென்ற பெயர் காரணச் சிறப்புப் பெயராய் ஏற்பட்டது. இது குறித்து

> "தான் முடிசூடுகின்ற காலத்து ஒருகாரணத்தால்
> முடித்தற்குத் தக்க கண்ணியும் முடியும்
> உதவாமையின் களங்காயால் கண்ணியும்
> நாரால் முடியும் செய்துகொள்ளப்பட்டன"

என்பார் பதிற்றுப்பத்தின் (38:4) பழையவுரையாசிரியர். எனவே இவன், சூழ்ச்சிக்கிடையே அரசனானான் என்பது உணரப்படும். ஆயினும், அந்தச் சூழ்வினை யாதென்று தெளிவாக விளங்கவில்லை. ஒரு காரணமெனக் குறிப்பிடுகின்ற பழையவுரையாசிரியரும் அதனை இன்ன காரணமென்று எடுத்துக்கூற இயலாமல் போகின்றார். இவன் அரசு கட்டிலேறுகையில் தன்னையொத்த தாயத்தார் போட்டியிட்டுச் சூழ்ச்சி செய்தனரென்று கருதலாமாயினும், சேரர் குடியில் அத்தகைய உரிமைப்போட்டி இருந்ததாக

எண்ணுதற்கில்லை. தாயத்தார் பலராயின் அவர்களே தங்களுக்குள் உடன்பாட்டு உணர்வோடே ஒற்றுமைக்குக் கேடின்றிப் பகுத்தாண்ட முறைகளைப் பார்க்கின்றோம். இவனுக்குச் சிறிய தந்தையான பல்யானைச்செல்கெழு குட்டுவன்,

மதியுறழ் மரபின் முதியரைத் தழீஇக்
கண்ணகன் வைப்பின் மண்வகுத்து ஈத்து
(பதி.பதி.3)

ஆண்டதை முன்னர்க்கண்டோம். பின்னர், இவனுடைய மாற்றாந்தாய் மக்களான செங்குட்டுவனும் இளங்கோவும் என்ற இருவருள், தமையன் அரசுரிமை பெறவேண்டித் தம்பி துறவு மேற்கொண்ட வரலாற்றையும் சிலப்பதிகாரத்திலே (30:171-183) காண்கிறோம். ஆகையால் தாயப்போட்டி காரணமாக இவன் தக்க கண்ணியும் முடியுமின்றிக் களங்காய்க் கண்ணியும் நார்முடியும் சூடி அரசனானான் எனக்கருத இயலாது.

மற்றுப், பகைவர் சூழ்ச்சி ஏதேனுமிருந்து அதன் காரணமாகவே இவன். பொன்னங்கண்ணியும் பொலந்தார் முடியுமின்றி, களங்காய்க் கண்ணியும் நார்முடியும் சூடி அரசனானான் எனக் கருதுதற்கு இடமுண்டு.

எனின், இவனுக்குப் பகைவர் யாரென்ற கேள்வி எழுகின்றது. இவனைப் பாட்டுடைத் தலைவனாகக்கொண்டு பத்துப் பாடல்களைப் பாடிய காப்பியாற்றுக் காப்பியனார் (பதி.31-40), இவன்கொண்ட பல போர் வெற்றிகளைப் பாடினாரேனும் அவரால் இவனுக்குப் பகைவராகக் குறிப்பிடப்பெறுவோர் நெடுமிடலஞ்சியும், கம்பின் பெருவாயில் நன்னனுமேயாவர்.

நெடுமிடல் சாயக் கொடுமிடல் துமியப்
பெருமலை யானையொடு புலங்கெட இறுத்துத்
தடந்தாள் நாரை படிந்திரை கவரும்
முடந்தை நெல்லின் கழையமல் கழனிப்
பிழையா விளையுள் நாடகப் படுத்து (பதி.32)

எனவும்,

பொன்னங் கண்ணிப் பொலந்தேர் நன்னன்
சுடர்வீ வாகைக் கடிமுதல் தடிந்த
தார்மிகு மைந்தின் நார்முடிச் சேரல் (பதி.40)

எனவும் பின்னர் அவ்விரு பகைவரையும் இவன் வென்ற வெற்றிகளை அவர் பாடுவார். நெடுமிடலென்பது அஞ்சியின் இயற்பெயராம் என்ற பழையவுரைக் குறிப்பினால், அந்நெடுமிடலஞ்சி அதியமான் மரபினனென்பது புலனாம். அவ்வதியமான் மடிந்து சாயவும், அவன் கொடுவலிமையாற் செய்த போர் அழியவும், இச்சேரமான் பெருமலைகள்போலும் யானைகளோடே அவனது நாடு கெடும்படிப் படையெடுத்துச் சென்று தங்கி, அவனது பிழையா விளையுளையுடைய நாட்டை வெனறு அகப்படுத்தினான் என்று காண்கிறோம். அடுத்து, நன்னனுடைய காவல் மரமாகிய வாகை மரத்தை வேரோடு வெட்டிய வலிமையமைந்த நார்முடிச் சேரலென்று இங்கே பாடப்பெறும் இவன் செய்தி பதிகத்தில்,

ஒழுகின ஆகிய வுயர்பெருஞ் சிறப்பின்
பூழி நாடடைப படையெடுத்துத் தழீஇ
உருள்பூங் கடம்பின் பெருவாயில் நன்னனை
நிலைசெ செருவின் ஆற்றலை அறுத்து அவன்
பொன்படு வாகை முழுமுதல் தடிந்து (பதி.பதி.4)

என்று மேலும் தெளிவான விளக்கத்தோடு வருகின்றது. ஆயின், பூழி நாட்டை இவன் வென்று தழுவினான் என்ற இச்செய்தியை நாம் இங்கே நின்று நினைதல் வேண்டும். முன்னம் இவன சிறிய தந்தையான பல்யானைச் செல்கெழு குடடுவனை, மிதியல் செருப்பின் பூழியர் கோவே (பதி.21) என்று பாலைக்கௌதமனார் விளித்துப் பாடியது கொண்டு, பூழிநாடு இசசேரராட சியில் இருந்ததென்று கண்டோம். மற்று, இபபோது அப்பூழிநாட்டை இக்களங்காய்க் கண்ணி நார்முடிச சேரல் படையெடுத்துத் தழுவினானாகக் கூறபபெறுவது முரணாகத் தோன்றுகின்றதே! உண்மையில் இது முரணதானா? இலலையெனறால் இவற்றை எவ்வாறு கொளவது?

இங்கே இக்களங்காய்க்கணணி நார்முடிச்சேரல் பூழிநாட்டைப படை யெடுத்துத தழுவினான் என்பதைத் தொடர்ந்தே அவன கடம்பின் பெருவாயில நன்னனது நிலைச்

செருவின் ஆற்றலையறுத்து அவனது காவல் மரமான வாகையை வெட்டிய செய்திகள் வருகின்றன. இவற்றை நாம் வெவ்வேறாகக் காணாமல் ஒருங்கு வைத்தே காணலாம். காணும்போதே,

> . . . . . குடாஅது,
> இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவில்
> பொலம்பூண் நன்னன் பொருதுகளத் தொழிய
> வலம்படு கொற்றம் தந்த வாய்வாள்
> களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்
> இழந்த நாடுதந் தன்ன (அகம்.199)

என்ற கல்லாடனாரின் அகப்பாடலடிகளையும் உடன்கொண்டு நோக்கினால் உண்மையைத் தடங்கண்டு உணரலாம். களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் தன்னாட்டிற்கு மேற்கேயிருந்த வாகைப்பெருந்துறை என்னுமிடத்தே நிகழ்த்திய போரில், நன்னன் எதிர்த்துப்பொருது களத்திலே மாண்டானாக, அவ்வெற்றியைப் பெற்ற சேரல் தான் முன்னம் அவனிடத்தே இழந்துவிட்டிருந்த நாட்டை மீளக் கைப்பற்றினான் என்ற வரலாற்றை இக்கல்லாடனார் பாடலடிகளில் காணலாம். ஆகவே, இச்சேரல் நன்னிடத்தே தன் நாடொன்றை இழந்திருந்தானென்ற உண்மையொன்று இதனால் உணரப்படும். அந்நாடே பூழிநாடென்பதும் அதனைப் படையெடுத்துத் தழுவியதைத் தொடர்ந்தே இவன் நன்னனை வென்று அவனது காவல் மரத்தை வெட்டினானென்பதும் பதிகத்தால் உணரப்படும். பதிகத்தில், ஊழினாகிய உயர்பெருஞ் சிறப்பின் பூழிநாடு என்றதனால், களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலுக்கு அந்நாடு உரிமை முறையில் வந்த உயர்ந்த பெருஞ் சிறப்பினை உடையதென்பதும், அதனையே இவன் படையெடுத்துத் தழுவிக்கொண்டு நன்னனது நிலைச்செருவின் ஆற்றலை அறுத்தானென்றதனால் அந்நன்னன் இவனுக்குரிய அந்நாட்டை இடையே கவர்ந்துகொண்டு நிலையாகப் போருடற்றி வந்தானென்பதும் புலனாம்.

இனி, அந்நன்னன் இவனாட்டை எப்போது கவர்ந்தானென்பதையும் ஒருவாறு உணர்ந்து காணலாம். பல்யானைச் செல்கெழு குட்டுவன் பூழிநாட்டைத் தலைமையாகக் கொண்டு ஆண்டபின் முடிவில் தன் ஆசான்

நெடும்பாரதாயனார் தனக்கு முன்னே துறந்து காடு செல்லக்கண்டு தானும் துறவுமேற்கொண்டவனாய் அவரைத் தொடர்ந்து காட்டிற்குச் சென்ற அக்காலத்துத் தன் ஆட்சிப்பொறுப்பினை முறைப்படி அடுத்தவரிடம் ஒப்புவிக்கும் கருத்தின்றிச் சென்றானோ என்று எண்ணத் தோன்றுகின்றது. மற்றும் அவனுக்கு நேர்முறையில் மகன் இருந்தானோவென்றும் இருந்திருப்பின் அம்மகன்தான் யாரென்றும் அறியக் கூடவில்லை. ஒருகால் மகனில்லாதிருந்து, அதனாலும் அவன் அவ்வாறு சென்றிருத்தல் கூடும். அவன் துறவுமேற்கொண்டு காடு சென்றதையறிந்து அவனுக்கு அண்ணன் மகனான இக்களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் அடுத்து உரிமையுடையோனாய்த் தான் சென்று அவனாட்டு அரசப்பொறுப்பினை ஏற்பதற்கிடையில் கடம்பின் பெருவாயில் நன்னன் அப்பூழி நாட்டையும் அந்நாட்டு மன்னனாயிருந்த பல்யானைக் குட்டுவனின் முடி முதலானவற்றையும் கவர்ந்து கொண்டானாதல் வேண்டும். அந்நிலையில்தான் உரிய கண்ணியும் முடியுமின்றிக் களங்காய்க் கண்ணியும் நார்முடியும் சூடி இச்சேரல் அரசுப் பொறுப்பேற்றானென்று அறியலாம். இவன் அரசுப் பொறுபேற்றபின் நன்னன் நாள்தோறும் செய்த நிலைச் செருவினை வாகைப் பெருந்துறை என்னுமிடத்தே அவனை வீழ்த்தியமையால் முடித்து, அவனிடம் இழந்திருந்த பூழிநாட்டைத் தான் மீளக் கைப்பற்றினான் எனக் காணலாம்.

இனி, இக்களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலின் சிறப்புக்கள் பலவற்றுள்ளும் இவன் அசைவுற்ற குடியின் சிறந்த மரபினை முன்பிருந்தவாறே திருத்தித் தன் ஆண்மைக் கடனை நிறைவேற்றிய சிறப்பே அடுத்தடுத்தும் பாராட்டப் பெறுகின்றது.

துளங்குகுடி விழுத்தினை திருத்தி முரசுகொண்டு
ஆண்கடன் இறுத்தநின் பூண்கிளர் வியன்மார்பு
(பதி.31)

எனவும்,

ஈத்தான்று ஆனா இடனுடை வளனும்
துளங்குகுடி திருத்திய வலம்படு வென்றியும் (பதி.32)

எனவும்,

வான்தோய் நல்லிசை உலகமொடு உயிர்ப்பத்
துளங்குகுடி திருத்திய வலம்படு வென்றியும் (பதி.37)

எனவும் இவ்வொரு சிறப்புப் பின்னும் பின்னும் பேசப்பெறுதல் நினையப்படும். அசைவுற்ற குடியைத் திருத்திய வீறார்ந்த வென்றியெனப் பெறுதலால், அதனை இன்னதென்று தெளியலாம். பல்யானைச் செல்கெழு குட்டுவனைத் தொடர்ந்து தான் அரசினை ஏற்பதற்கிடையே நேர்ந்த சிறியதோர் செவ்வியில் பகைவன் கைப்பட்டுக் கலங்கிய குடிகளைத் தான் பொறுப்பேற்றுக் காத்து அப்பகைவனை வென்றழித்த வெற்றியே இங்குத் துளங்குகுடி திருத்திய வலம்படு வென்றி என்று குறிக்கப் பெறுகின்றது எனலாம். துளங்குகுடி திருத்திய இதனோடே முரசுகொண்டு ஆண்கடன் இறுத்த ஆண்மையும் இணைந்து பாராட்டப் பெறுவதன் குறிப்பும் இதுவேயாகலாம்.

"நீரிமிழ் சிலம்பின் நேரியோனே" (பதி.40) என்று இருப்பிடம் குறிக்கப் பெறுதலால் இக்களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் நேரிமலையைத் தன் தலைமையிடமாகக் கொண்டு தங்கியாண்டான் என்பது விளங்கும்.

இவன் தன்னைப் பத்துப் பாடல்களாற் பாடிய காப்பியாற்றுக் காப்பியனார்க்கு நாற்பது நூறாயிரம் பொன்னை ஒருங்கே கொடுத்துத் தான் ஆளும் நாட்டின் ஒரு பாகத்தையும் கொடுத்தானென்றும் இருபத்தைந்து ஆண்டுகள் அரசு வீற்றிருந்தானென்றும் பதிற்றுப்பத்தின் பதிகம் (4) பகரும்.

212. கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் (கிபி130-185)

இமையவரம்பனாகிய குடவர்கோமான நெடுஞ் சேரலாதனுக்குச் சோழன் மகளான மணக்கிள்ளியென்பாள் ஈன்ற மகன் கடல்பிறக்கோட்டிய செங்குடடுவன். செங்குட்டுவனென்னும் இயற்பெயரையுடைய இவன் கடல் பின்னிடுமாறு அதன் அலைப்பரப்பினூடே குதிரையூர்ந்து நீர்ப்பரப்பினுள்ளே வேலெறிந்த சிறப்பினால் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனென்று அடையடுத்து அழைக்கப்பெற்றான்.

சங்க இலக்கியங்களுள் பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்துப்பாடல்களால் இவனைப் பல்வகையிலும் சிறப்பித்துப் பாராட்டிய பரணர் பின்னும் இவனது போர்க்கள வெற்றியை ஏர்க்கள உருவகமாகப் பாடிய பாடலொன்றும் புறநானூற்றிலே (369) இடம் பெற்றுள்ளது. மற்று, அகநானூற்றுப் பாடலொன்றிலும் (212) அவரே இவன் வெற்றியொன்றை வேற்றுப் பொருள் வைப்பாக விளம்புவார்.

பரணரின் சங்கப்பாடல்களால் விளங்குகின்ற இவன் வெற்றிகள் மூன்றே, அவை: 1. இவன் கடல் பிறக்கோட்டி வேலெறிந்த வெற்றியும், 2. தென்னாட்டு வடநாட்டு அரசரின் போர்களைக் கடந்து அவருடைய நாடுகளை அழித்த வெற்றியும், 3. மோகூர் மன்னனுடைய முரசத்தைக் கைப்பற்றிக் கொண்டு அவனைக் கொன்று அவனது காவல்மரமான வேம்பினை வெட்டிக் கொணர்ந்த வெற்றியுமாம். அவற்றை முறையே காண்போம்.

2121. கடல்பிறக்கோட்டி வேலெறிந்த வெற்றி

செங்குட்டுவன் வெற்றிகளுள் முதலாவதான கடல்பிறக்கோட்டி வேலெறிந்த வெற்றி பல பாடல்களில் (பதி.41, 42, 45, 46, 48; அகம்.212) பரணரால் பாராட்டிக் குறிக்கப் பெறுகின்றது. அப்பாடல்களில் உள்ளபடி அதனைக் காண்போம்.

தாவல் உய்யுமோ மற்றே தாவாது
. . . . . .
காலுளைக் கடும்பிசிர் உடைய வாலுளைக்
கடும்பரிப புரவி ஊர்ந்தநின்
படுந்திரைப பனிக்கடல் உழந்த தாஎன்(பதி.41)

என்ற பாடலடிகளில் கடற்பரப்பிலே காற்று மோதுதலால் வருந்துகின்ற நீர்த்துளிகள் சிதறியுடையவும் அலைகள் தன் கால்களில் மோதியலைக்கவும் இவன் கடும்வேகத்தையுடைய குதிரையை ஊர்ந்தானென்று காண்கிறோம்.

இனியார் உளரோநின் முன்னும் இல்லை
மழைகொளக் குறையாது புனல்புக நிறையாது
விலங்குவளி கடவும் துளங்கிருங் கமஞ்சூல்

வயங்குமணி மிமைப்பின் வேலிடுபு
முழங்குதிரைப் புனிக்கடல் மறுத்திசி னோரே
(பதி.45)

எனவரும் பாடலடிகளில் இவன் கடலுக்குள் வேலெறிந்த ஒன்று விளக்கமாகின்றது. மற்று, கடலை மறுத்ததாக வரும் செய்தி தெளிவுற விளங்கவில்லை. ஆயினும் அடுத்துவரும் பாடலடிகளில் அதுவும் விளங்கும்.

கோடுநரல் பௌவம் கலங்க வேலிட்டு
உடைதிரைப் பரப்பிற் படுகடல் ஓட்டிய
வெல்புகழ்க் குட்டுவன் (பதி.46)

என்னும் பாடலடிகளில் கடல் கலங்குமாறு வேலெறிந்து கரைமோதியுடையும் அலைப்பரப்பினையுடைய அக்கடலிலே ஓட்டிய வெற்றிப் புகழையுடைய குட்டுவன் என்று இவன் வேல் இட்டதும் கடல் ஓட்டியதுமாகிய இரண்டையும் காண்கிறோம். முன்பாடலில் கடல் மறுத்ததாகக் குறிக்கப்பட்டதே இப்பாடலில் கடலோட்டியதாகக் கூறப்பட்டது. கடலோட்டியதன் விளக்கத்தை முதற்பாடலில் குதிரையூர்ந்ததாகப் பாடப்பட்டதிலிருந்து கொள்ளலாம். அல்லது, வேலெறிந்து அதனையே கடலினுள் ஓட்டிய என்றும் கருதலாம்.

மட்டவிழ் தெரியல் மறப்போர்க் குட்டுவன்
பொருமுரண் பெறாஅது விலங்குசினம் சிறந்து
செருச்செய் முன்பொடு முந்நீர் முற்றி
ஓங்குதிரைப் பௌவம் நீங்க ஓட்டிய
நீர்மாண் எஃகம் (அகம்.212)

என்ற அகப்பாடலடிகளில் இது மிகத் தெளிவான முறையில் விளக்கம் பெறும். குட்டுவன் முந்நீரை முற்றுகையிட்டு ஓட்டிய எஃகம் என்றதனால் ஓட்டப்பட்டது வேலேயென்பது நன்கு விளங்கும். இங்கே வேல் ஓட்டப்படுதலாவது அதனை எறிந்து செலுத்துதல்.

இனி, 'சேரமான் கடலோட்டிய வேல்கெழு குட்டுவன்' (புறம். 369- குறிப்பு) என்று இவ்வெற்றியால் இவனுக்கமைந்த பெயரும் இதனை விளக்கும். கடலினுள் ஓட்டப்பட்ட வேலுக்கு உரிமையுடைய குட்டுவனென்பது இப்பெயரின்

பொருளாம். கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனென்ற பெயர், இவன் வேலெறியப் புகுந்து கடல் பின்னிடும்படிக் குதிரையூர்ந்தகம குறித்து இவனுக்கு ஏற்பட்டதாகலாம்.

ஆக, இச்செங்குட்டுவன் கடலின் அலைப்பரப்பிற் கெதிரே குதிரையூர்ந்து சென்று வேலெறிந்த செயலே இச்சான்றுகள் எல்லாவற்றாலும் கொள்ளக் கிடக்கின்றது. இதன் கருத்தை இனிக்காணலாம்.

மேலே காட்டப்பெற்ற அகப்பாடலடிகளில் (212) பரணர் இதனைத் தெளிவாக விளக்குகின்றார். 'மறப்போர் புரிதலில் வல்லவனான குட்டுவன் தன்னையெதிர்த்துப் போரிடும் வன்மையமைந்த பகைவரை இந்நிலவெல்லைக்குள் காணாமையால், பொங்கியெழும் சினம் மிகுந்து போர்புரியும் வலிமையோடே சென்று கடலை முற்றுகையிட்டு, அக்கடல் பின்னிடும்படி ஓட்டிய மாண்பமைந்த வேல்' என்பது அவர் பாடலடிகளால் விளங்கும்பொருள். ஆகவே, இவன் பிறநாட்டு மன்னர்களையெல்லாம் வென்று உயர்ந்த மேம்பாட்டிலே நிலவெல்லைக்குள் தனக்கு நிகரின்மை காட்டிக் கடலின் அலைப்பரப்பினூடே குதிரையூர்ந்து நீர்ப்பரப்பை நோக்கி வேலெறிந்தானென்று உணரலாம். இத்தகைய வெற்றிவெளிப்பாட்டை நிலந்தரு திருவின் நெடியோனான வடிம்பலம்ப நின்ற பாண்டியன் வரலாற்றிலும் காணலாம்.

அடியில் தன்னளவு அரசர்க்கு உணர்த்தி
வடிவேல் எறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
(சிலம்பு. 11: 17-20)

எனவரும் சிலப்பதிகாரத்து அடிகளில் அப்பாண்டியன் தனது மேம்பாட்டினை வேற்று வேந்தர்க்கு வெளிப்படுத்திக் கடலலைகள் தன் அடிகளை அலம்புமாறு நின்று அதனிடையே வேலெறிந்தான் என்று அறிகின்றோம். அவ்வெற்றி மேம்பாட்டினால் அவன் வடிம்பலம்ப நின்ற பாண்டியனென்னும் சிறப்புப் பெயர் பெற்றதைப் போலவே, கடல் பிறக்கோட்டி வேலெறிந்த இவ்வெற்றி மேம்பாட்டால் இவனும் கடலோட்டிய வேல்கெழு குட்டுவனென்றும் கடல்பிறக்கோட்டிய செங்கட்டுவனென்றும் சிறப்புப்பெயர் பெற்றானாக ஒப்பிட்டுணரலாம்.

புறத்துறை மருங்கின் அறத்தொடு பொருந்திய
மறத்துறை முடித்த வாய்வாள் தானையொடு
பொங்கிரும் பரப்பின் கடல்பிறக் கோட்டி

எனவருகின்ற சிலப்பதிகார வஞ்சிக்காண்டத்துக் கட்டுரையடிகளும் இவன் மறத்துறை முடித்த மாண்போடே கடல்பிறக்கோட்டிய செய்தியைத் தொடர்புறுத்திக் காட்டுதல் காணலாம்.

மற்று, இச்செங்குட்டுவன் கடலலைகளுக்கிடையே புரவியூர்ந்து சென்று, அக்கடல் தீவுகளில் தங்கிக் குறும்புசெய்த பகைவர்களை வேலெறிந்து வென்றோட்டிய வெற்றிச் சிறப்பினாலேயே இச் சிறப்புப்பெயர்களைப் பெற்றானாகப் பலரும் கருதுவர். ஆயின், அது பொருந்துமோ? பொருந்துமெனின், அப்பகைவரைப் பற்றிய குறிப்பேதும் இப்பாடல்கள் எவற்றிலுமே இடம்பெறாதது ஏன் என்ற வினா எழும். எங்கு ஓட்டினான், எப்படி ஓட்டினான் என்பவற்றையே, இத்துணையும் விரித்துப் பாடியவர் யாரை ஓட்டினான் என்று கூற வேண்டுமே; அதனைக் கூறாது விடுத்தாரெனக் கொள்ளலாகுமோ? இவற்றை விரித்துக் கூறினாலே அது விளங்குமென்று விடுத்தாரெனின், எல்லாப் பாடல்களிலுமே அவ்வாறு விடுத்தாரெனல் இசையுமோ? அதுவும் இசையுமாயின், மேல் கடல் தீவுகளில் தங்கிக் கடற்கொள்ளை செய்து வந்த கடம்பர்களை வென்ற இமையவரம்பனாகிய தந்தையைப் போலவே இவனும் தன்காலத்து அப்பகைவர்களை வென்றோட்டினான் எனல்வேண்டும். எனின், அவ்வாறு கொள்வதற்கு மேற்காணப்பட்ட பரணரின் பாடலடிகளே தடையாகின்றன. "இனியார் உளரோ? நின் முன்னும் இல்லை ..... முழங்குதிரைப் பனிக்கடல் மறுத்திசினோரே" (பதி.45) என்ற அப்பாடலடிகளில் இவனைப்போல் கடலினிடத்தே வேலெறிந்து வென்றவர் இவனுக்கு முன்னுமில்லை, பின்னுமில்லை என்று அதியிட்டுப் பாடுகின்றார் பரணர். இமையவரம்பனையும் பாடியுள்ள அப்புலவர், அவன் செய்த கடற்போரையும் அப்போர் வெற்றியையும் அறியாதவராகார். அறிந்து வைத்தும் இச்செங்குட்டுவனின் வெற்றியை இவ்வாறு வியப்பது, இவனை மேம்படப் பாராட்டுவதற்கே என்று கொள்ளலாமோ? அவ்வாறு கொள்வது தகாதென்பதனால் பிறர் இங்கே வேறொரு விளக்கமும் தருவர்.[23] அஃதாவது இமைய வரம்பன் பேரரசனாயிருந்தபோது செங்குட்டுவன்

இளரசனாயிருந்தானென்றும் இவ்விளவரசனை ஏவியே அப்பேரரசன் கடற்கடம்பரை வென்று அவரது காவல்மரத்தை வெட்டினானென்றும் கொண்டு, அதுபற்றியே அவ்வெற்றியை இச்செங்கட்டுவனுக்கு உரியதாக ஏற்றிப் பாடினார் பரணரென்றும் அன்னோர் விளக்கம் தருவர். இவ்விளக்கத்திற்கு ஏற்றதாக,

பலர்மொசிந்து ஓம்பிய திரள்பூங் கடம்பின்
கடியுடை முழுமுதல் தமிய ஏஎய் (பதி.11)

என்று இமையவரம்பனைக குறித்துவந்த பாடலடிகளையும் எடுத்துக் காட்டுவர். இதுவும் பொருந்துவதாயில்லை. பகைவேந்தரை வென்ற வெற்றிவேந்தன் அப்பகைவரின் காவல் மரத்தை வெட்டுமாறு தன படை மறவரை ஏவுதலன்றித் தானே அதனை இயற்ற மாட்டனல்லனோ? அம்முறையில் இமையவரம்பன் கடம்பினை வெட்டுதற்குத் தன் படைஞரை ஏவியதைத்தான இப்பாடலடிகள் இயம்புகின்றனவேயொழியக் கடம்பரை வெல்லுதற்குச் செங்குட்டுவனை ஏவியது குறித்து இயம்பவில்லை. அன்றியும்,

நுங்கோ யாரென வினவின் எங்கோ
இருமுந்நீர்த் துருத்தியுள்
முரணியோர்த் தலைச்சென்று
கடம்புமுதல் தடிநத கடுஞ்சின முன்பின்
நெடுஞ்சேர லாதன வாழ்கவவன கண்ணி (பதி.20)

என்றவாறு பலவிடங்களிலும வருகின்ற பாடலடிகளால் இமையவரம்பன் தானே படைகொண்டு சென்று பகைவரை வென்று கடம்பெறிநததைக் காணலாம். ஆகவே, இமைய வரம்பனின் அவவெற்றியில் செங்கடடுவனுக்குத் தொடர்பினமையைத் தெளிய வேண்டும்.

மறறும் இமையவரமபன் காலத்துக் கடற்போரில் ஈடுபட்டுக் கடம்பரை வென்று, கடம்பினை வெட்டி, அவவெற்றியை அபபேரரசனுககு ஈட்டிக்கொடுத்தவன் இச்செங்குடடுவனே எனபதனால்தான் பரணர் அதனை இவனுடையதாகக கொண்டு, 'இனியாருளரோ? நின் முன்னுமிலலை' என்றாரெனின், அவர் அதனை இன்னும் தெளிவுற இவனுககுரியனவாய் எடுத்துப் பாடியிருத்தல் வேண்டுமனறோ? அவ்வாறு கடம்பரை வென்றதையோ

கடம்பினை வெட்டியதையோ இக்குட்டுவன் செயல்களாக அவர் எங்குமே கூறவில்லை. அவரேயன்றி இக்குட்டுவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு சிலப்பதிகாரத்து வஞ்சிக் காண்டம் பாடிய இளங்கோவடிகளும் இவனுடையனவாய் அவ்வெற்றிகளை இயம்பவில்லை யென்பது காணலாம்.

ஆகவே, இமையவரம்பனின் கடற்போர் வெற்றிகளினும் வேறானது இச்செங்குட்டுவன் கடல்பிறக்கோட்டிய வெற்றியென்பது விளங்கும். அது மட்டுமன்றி, 'இனியாருளரோ? நின் முன்னுமில்லை' என்றதனால் அதன் தனித்தன்மையும் உணரப்படும்.

212.2. மோகூர் வெற்றி

இனி, இச்செங்குட்டுவனின் போர் வெற்றிகளுள் பரணரால் தெளிவாகவும் விரிவாகவும் குறிப்பிட்டுப் பாடப்பெறுவது, இவன் மோகூர் மன்னனுடைய முரசத்தைக் கைப்பற்றிக் கொண்டு, அவனையும் கொன்று, அவனது காவல் மரமான வேம்பினையும் வெட்டிக் கொணர்ந்த வெற்றியாகும். இவ் வெற்றியை அப்புலவர் இருபாடல்களில் எடுத்துப் பாடியுள்ளார். அப்பாடல்களால் பொதுப்பட அறியலாகும் இவனது இப்போர் விளக்கம் வருமாறு: உழிஞைமாலை அணிந்த வெல்லும் போர்வல்ல அறுகையென்னும் குறுநில மன்னனொருவன் மோகூர் மன்னனான பழையனின் பகைமைக்கு ஆற்றானாய் இச்செங்குட்டுவனுக்குத் தொலை தூரத்தில் இருந்தும் இவனே தனக்குத் துணையாகும் நண்பனென்று நம்பிமொழிந்து நாட்டை விட்டு ஓடி ஒளிந்திருந்தான். அவனால் நீக்கமாட்டாத அத்துன்பத்தை இவன் நீக்க நினைந்து, தெய்வமே எதிர்நின்று வருத்துவதுபோல் பகைகொண்டு நின்ற அம்மோகூர் மன்னனின் அரண்களையழித்து, முரசினையும் கைக்கொண்டு, அவன் மொழிந்த மேம்பாட்டு மொழிகளையும் அடக்கி, அவனது காவல் மரமான வேம்பின் அடியை வெட்டி, அதுகொண்டு தனக்கு வெற்றி முரசு செய்யுமாறு அதனைத் துண்டங்களாக்கி முற்றுவித்து, அவனுடைய போர் யானைகளையே கடாக்களாகக் பூட்டி, வண்டியிலேற்றிக் கொண்டு வந்தான் (பதி.44). யானைப் படைகள் பரவிவரவும், விரைவுடைய குதிரைப் படைகளை மேலோர் தாங்கி நடத்தவும், கொடிகள் அசையத் தேர்ப் படைகள் திரிந்து

சூழலவும், வேலெறிந்து எழுகின்ற வீரர்கள் நிறைந்த முன்னணிப் படைகளோடே வெல்லும் போரினையுடைய வேந்தரும் வேளிரும் வஞ்சினங் கூறிவர, அத்துணைவலி மிகுதியால் செருக்குற்றுத் திரண்டு வந்த மோகூர் மன்னனுடைய வெற்றியுண்டாதற்குக் காரணமான கூட்டத்தின் நிலை நடுங்குமாறு தாக்கி, பகை மறவர்களின் குருதி நிலத்தின் மேற் பரந்தோடி மழைக் காலத்து வெள்ளம்போல் பள்ளங்களில் பரந்து பாயவும், பட்டு வீழ்ந்த பிணங்கள் மலைபோல் உயர்ந்து தோன்றவும் பாழ்பல செய்து, படைகளின் நடுவே வெற்றிமுரசொலிக்க, வளங்களெல்லாம் வறியவாகும்படிக் கொள்ளையடித்துக் காவல் மரமான வெற்றியமைந்த வேம்பினை வெட்டிய பெருஞ்சினக் குட்டுவன் (பதி.49) என்பதனால் இவன் வென்ற அபபோரின் கடுமையையும் காணலாம்.

ஆக, இப்போர் அறுகையென்னும் குறுநில மன்னனைக் காத்தற்காக இச்செங்குட்டுவனால் மேற்கொள்ளப் பெற்றதென்பதும், வேம்பினைக் காவல் மரமாகக் கொண்டிருந்த மோகூர் மன்னன் பழையன் பாண்டியன் பக்கத்தவனென்பதும், அப்பழையனுக்குத் துணையாக அப்பாண்டிய வேந்தனேயன்றிச் சோழ வேந்தனொருவனும் வேளிர் சிலரும் படைகொண்டு வந்தனரென்பதும், அவர்களையெல்லாம் வென்று பழையனைக் கொன்றபின் அவனது காவல் மரமான வேம்பினை வெட்டிக் கொணர்ந்தான் இக்குட்டுவனென்பதும் விளங்கும்.

பழையன் காக்கும் கருஞ்சினை வேம்பின்
முழாரை முழுமுதல் துமியப் பண்ணி
வாலிழை கழித்த நறும்பல் பெண்டிர்
பல்லிருங் கூந்தல் முரற்சியால்
குஞ்சர வொழுகை பூட்டி (பதி.பதி.5)

எனறு பதிற்றுப் பத்தின் பதிகமும்

பழையன் காக்கும் குழைபயில் நெடுங்கோட்டு
வேம்புமுதல தடிந்த ஏந்துவாள் வலத்துப
போந்தைக கண்ணிப் பொறைய (சிலம்பு.27:124-126)

என்று மாடலன விளியாகச் சிலபபதிகாரமும செங்குட்டுவனின் இமமோகூர்ப் போரினை மொழியும்.

212.3. தென்னாட்டு வடநாட்டு வெற்றிகள்

அடுத்து, செங்குட்டுவன் தென்னாட்டு வடநாட்டு அரசர் பலரின் போர்களைக் கடந்து அவர்தம் நாடுகளை அழித்த வெற்றிகளைக் குறித்து,

வடதிசை யெல்லை இமய மாகத்
தென்னங் குமரியொடு ஆயிடை யரசர்
முரசுடைப் பெருஞ்சமம் ததைய ஆர்ப்பெழச்
சொல்பல நாட்டைத் தொல்கவின் அழித்த
போரடு தானைப் பொலந்தார்க் குட்டுவ (பதி.43)

என்று பொதுவாகப் பாடுவார் பரணர். இப்போர்களின் தொகை வகைகளை அவர் ஏதும் விரித்துக் கூறவில்லை; ஆயினும் பதிற்றுப் பத்திலே இவனைப் பாடிய அவர் பாடல்களுக்கமைந்த பதிகமும் சிலப்பதிகாரத்தில் இவனைத் தலைவனாகக் கொண்ட வஞ்சிக் காண்டமும் அவ்வெற்றிகள் இன்னின்னவென்று கூறுகின்றன. அவற்றை இனிக் காணலாம்

212.31. வியலூர்-கொடுகூர்ப் போர்

உறுபுலி யன்ன வயவர் வீழச்
சிறுகுரல் நெய்தல் வியலூர் நூறி
அக்கரை நண்ணிக் கொடுகூர் எறிந்து (பதி.பதி.5)

என்று பதிகம் இப்போரைப் பாடுகின்றது.

கறிவளர் சிலம்பில் துஞ்சும் யானையின்
சிறுகுரல் நெய்தல் வியலூர் எறிந்தபின்
(சிலம்பு.28:114-115)

என்பது சிலப்பதிகாரத் தொடர். மிளகுக் கொடிகள் வளர்ந்த மலைப்பக்கத்தே துயிலும் யானைகளையுடையதும் நெய்தல் பூக்களையுடையதுமான வியலூர் எனவரும் இவ்விளக்கங்களால் மலைச்சாரலும் கடற் சாரலும் அமைந்த இவ்வியலூர் மேலைக் கடற்கரையைச் சேர்ந்ததென்பது விளங்கும்.

அகவுநர்ப் புரந்த அன்பின் சுழல்தொடி
நறவுமகிழ் இருக்கை நன்னன் வேண்மான்
வயலை வேலி வியலூர் (அகம்.97)

எனவரும் மாமூலனாரின அகப்பாடலடிகளால் இவ்வியலூர் நன்னன் வேண்மானுகுரியதென்பதும் புலனாம்.

உருள்பூங் கடம்பின் பெருவாயில் நன்னனை
நிலைச் செருவின் ஆற்றலை அறுத்துஅவன்
பொன்படு வாகை முழுமுதல் தடிந்து (பதி.பதி.4)

என்ற பதிறறுப் பத்தின் நான்காவது பதிகத்தில் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலின் பகைவனாய் அவனால் கொலலபபட்டானென்று கூறப்படும் கடம்பின் பெருவாயில் நன்னனே இந்நன்னன் வேண்மானென்றும், இவனை அந்நார்முடிசசேரல் கொல்வதற்கு முன்பே இவனுடைய வியலூரைச செங்குட்டுவன் அழித்தானென்றும் அறியலாம்.

மற்று, வியலூரையழித்த செங்குட்டுவன் அகநரைச் சென்று கொடுகூரை எறிந்தானென்பதனால் இவ்வியலூரும் கொடுகூரும் ஒராற்றின் எதிரெதிர்க் கரைகளில் இருந்தமை விளங்கும். இககொடுகூர் தென்கன்னடத்துப் புன்னாட்டைச் சேர்ந்ததெனபர் மு. இராகவையங்கார்.[24]

212.3.2 நேரிவாயில் போர்

ஆராச் செருவின் சோழர்குடிக் குரியோர்
ஒனபதின்மர் வீழ வாயிற்புறத்து இறுத்து
நிலைச் செருவின ஆற்றலை அறுத்து (பதி.பதி.5)

என்று இவனது நேரிவாயில் போரைப் பற்றிப் பதிற்றுப் பதின பதிகம் பேசுகின்றது. சிலப்பதிகாரம் இதனை,

ஆர்புனை தெரியல் ஒன்பது மன்னரை
நேரி வாயில் நிலைச்செரு வென்று (சிலம்பு.28:116-117)

எனச சுருககியும்,

மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா
ஒதத பண்பினர் ஒன்பது மன்னர்
இளவரசு பொறாஅர் ஏவல் கேளார்
வளநா டழிகும் மாண்பின ராதலின்
ஒனபது குடையும் ஒருபகல் ஒழித்தவன்
பொன்புனை திகிரி ஒருவழிப் படுத்தோய்
(சிலம்பு 27: 118-123)

என விரித்தும் மாடலன் கூற்றாகப் பேசுகின்றது. செங்குட்டுவன் தாய் மணக்கிள்ளியென்பாள் சோழன் மகளாதலால், அவளுடன் பிறந்தவன் மகனான சோழ இளவரசன் கிள்ளி இச் செங்குட்டுவனுக்கு ஒத்த அல்லது இளம் அகவையுடைய மைத்துன வளவனாகின்றான். அம் மைத்துன வளவனான கிள்ளிக்குத் தாயத்தாராய், அவனோடு ஒற்றுமையில்லாத ஒன்பதுமன்னர், அவன் இளவரசானமை பொறாதவராய், அவன்கீழ் ஏவலும் கேளாதவராய், அவனது வளநாட்டை யழிக்கும் சூழ்ச்சியில் முனைந்து கலாம் விளைத்தபோது, இக்குட்டுவன் படைகொண்டு சென்று உறையூரின் தெற்கே நேரிவாயில் என்னுமிடத்தே அவ்வொன்பது மன்னரின் குடைகளையும் ஒரு பகலிலேயே ஒழித்துக் கிள்ளியின் ஆட்சியை நிலை நாட்டினான்.

இச்செங்குட்டுவனுக்கு மைத்துன வளவனான கிள்ளியைச் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளியென்றும்[25] கிள்ளி வளவனென்றும்[26] வேறுபடக் கருதுவர் அறிஞர். ஆயின், மைத்துன வளவன் கிள்ளி என்ற தொடரில் கிள்ளி வளவன் பெயரே முன்பின்னாக மாறி அமைந்திருப்பது நோக்கி அவனென்று கொள்வதே அமையும்.

2.12.3.3. இடும்பில் முற்றுகை

"மாறா வல்லில் இடும்பிற் புறத்து இறுத்து" என்று பதிற்றுப்பத்தின் பதிகமும் (5) "நெடுந்தேர்த் தானையொடு இடும்பிற்புறத்து இறுத்து" என்று சிலப்பதிகாரமும் (28:118) இவனது இடும்பில் முற்றுகையைக் குறிக்கின்றன. எனினும், இரண்டுமே இம்முற்றுகையை விளக்காமலே விடுகின்றன. "இடும்பிலென்றது இடும்பாதவனத்தை" என வரும் பதிற்றுப்பத்தின் பழையவுரைக் குறிப்பினைத் தவிர இதுபற்றி வேறொன்றும் விளங்கவில்லை. இடும்பிற் புறத்து இறுத்தற்கு முன்னும் பின்னும் வரும் செய்திகளில் பதிற்றுப்பத்தின் பதிகத்திற்கும் சிலப்பதிகாரத்திற்கும் ஒற்றுமையின்மையால் அச்செய்திகளை இணைத்துக் காண இயலாது; இணைத்துக் காண்பதும் இசையாது.

இனி இடும்பிலென்ற இடும்பாத வனத்தை இக்காலத தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டத்திலுள்ள இடும்பாவனமெனக் கொண்டு, அங்கே செங்குடடுவனுக்கும்

சோழனொருவனுக்கும் போர் நிகழ்ந்ததாகக் கற்பித்துக் கூறுவர் துடிசைகிழார் அ. சிதம்பரனார்.[27] அவ்வாறு கூறுதற்குத் தக்க சான்றில்லாமையால் அஃது இசையுமாறில்லை.

212.3.4. கொங்கர் செங்களப்போர்

செங்குட்டுவன் செய்த கொங்கர் செங்களப்போர் பறறிய விளக்கத்தைச் சிலப்பதிகாரம் மட்டுமே தருகின்றது.

நும்போல் வேந்தர் நும்மோடு இகலிக்
கொங்கர்செங் களத்துக் கொடுவரிக் கயற்கொடி
பகைபுறத்துத் தந்தன ராயினும் ஆங்கவை
திகைமுக வேழத்தின் செவியகம் புக்கன
(சிலம்பு: 24: 152-155)

எனறு வில்லவன் கோதையென்னும் அமைச்சன் செங்குட்டுவனிடமே சொல்வதாக இது வருகின்றது. இதனுள், "நுமபோல் வேந்தர் நும்மோடு இகலி" என்பதனால் சேரர் பக்கத்தில செங்குட்டுவனேயன்றி மற்றும் சிலரும் இப்போரில் ஈடுபட்டனரென்பதும் எதிர்ப்பககத்தில் சோழபாண்டிய ராகிய மறற இருபெருவேந்தரும் கூடி எதிர்த்தனரென்பதும் புலனாம கொங்கர் நாட்டுச் செங்களமென்ற இடத்தில் நிகழ்ந்த இபபோரில் கொங்கரும்கூட ஈடுபட்டிருக்கலாம். ஆயினும் அதில் தெளிவில்லை. மற்று, இச்செங்களப் போரில் எதிர்ததுவந்த சோழ பாண்டியராகிய இருபெரு வேந்தரும் சேரர்க்கு ஆற்றாது தோற்றுத் தத்தம் புலிக்கொடியையும் கயற்கொடியையும் பகைமுனையிலேயே துறந்தோடிய பழிசசொல எங்கும் பரந்தது.

212.3.5 வடவாரியரொடு வண்டமிழ்ப் போர்

கொங்கணர் கலிங்கர் கொடுங்கரு நாடர்
பங்களர் கங்கர் பல்வேற் கட்டியர்
வடவா ரியரொடு வண்டமிழ் மயக்கத்துன்
கடமலை வேட்டமென் கடபுலம் பிரியாது
(சிலம்பு 25: 156-159)

எனறு விலலவன கோதை கூறறாகச சிலபபதிகாரமே இதனையும் செப்புகினறது இபபோரின எதிரணியிலிருநத கொஙகணர், கலிஙகர், கருநாடர், பஙகளா ஆகியோர தமிழகததையடுத்து வடககிலுளள நாடுகளையாணடவாகள கஙகரும கடடியரும் தமிழகததின் உளளேயே வடபால எலலைபபுறநாடடு மனனாகள இவரெலலாம வடவாரியரொடும கூடி வநத இபபோரில சேரநாடடுத தமிழ்ப படை கைகலந்து மணடிப பொருதபோது, செஙகுடடுவன புகுநது பகைவரின யானைப படையை வேடடமாடிய திறத்தையே தன கடபுலம் பிரியாத காடசியாக வியககின்றான் விலலவன கோதை

இனி, இபபோரின வரலாறறை உயததுணாதறகு இவன செயத அடுத்த போரினை அறிவோம

21236 கங்கைப்போர்

கஙகைப பேரியாற்றுக கடும்புனல நீத்தம
எஙகோ மகளை ஆடடிய அநநாள
ஆரிய மன்னா ஈரைஞ ஞாறறுவாகக
ஒருநீ யாகிய செருவெங கோலம்
கண்விழித்துக கண்டது கடுங்கட கூறறம
(சிலமப 25 160-164)

என்பது செஙகுடடுவனின கஙகைப போரைக குறிதத விலலவன கோதை கூற்று இககூற்றின முனனிரணடு அடிகளை முநதைய போருகளும இபபோருகளும் இடைநிலை விளகமாகக கொண்டால இருபோாகளின வரலாறறு முறையையும நன்றே இணைத்துக காணலாம செஙகுடடுவன தன தாயைக கஙகையிற் கொணடு போய நீராட்டுதறகுப படையுடன புறபபடடு வடநாடடுப பயணம மேற்கொணடபோது, தமிழகததின வட வெலலையிலேயே கொஙகணா முதலானோா வடவாரியரொடும கூடி எதிாததனராக அவாகளின யானைபபடையை வேடடமாடி வெனறு மேறசெனறு கஙகைக கரையை அடைநது அஙகே எதிரத்த ஆரியமனனா ஈரைஞஞாறறுவரையும தானொருவனே தனிதது நினறு அழிததான எனறு அறியலாம் செஙகுடடுவனின கஙகைபபோரினை இஙகே வியநதுபேசும் விலலவனகோதையே அனறியும் பினனா மாடலமறையோனும

உடன்றுமேல் வந்த ஆரிய மன்னரைக்
கடும்புனற் கங்கைப் பேரியாற்று வென்றோய்
(சிலம்பு.28:120-121)

என்று வென்றவனையே விளித்துப் பேசக் காணலாம்.

இவ்வளவும் பதிற்றுப்பத்திலே செங்குட்டுவனைப் பாடிய பரணரின் பாடல்களை அடியொற்றி அறியப்பட்ட அவன் போர்களாம். அப்பத்தின் பதிகத்திலும் சிலப்பதிகாரத்திலும் இப்போர்கள் குறித்து வந்த துணைமைச் சான்றுகளும் இங்கே ஒருங்கு காணப்பட்டன. இனி, பரணர் பாடல்களால் அறியப்படாமல் அவற்றின் பதிகத்தினாலும் சிலபபதிகாரத்தினாலும் மட்டுமே அறியப்படுகின்றதோர் செங்குட்டுவனின் வெற்றியுண்டு. அதுவே அவன் பெற்ற இமையவெற்றி!

21237. இமையப் படையெடுப்பு

செங்குட்டுவனின் இந்த இமையப் படையெடுப்பைச் சிலபபதிகாரம் காப்பியமரபிலே கட்டிப்புனைகின்றது.

மேலே காணப்பட்ட தென்னாட்டு வடநாட்டு வெறறிகளால் மேம்பட்டு வஞ்சிமாநகரில் வீற்றிருந்த செங்குடடுவனிடம் இமையமலையிலிருந்து வந்த முனிவர்கள் சிலர் ஒரு செய்தியை அறிவித்தனர். கங்கைக்கு வடகேயாண்ட கனகரும் விசயனுமென்ற ஆரியவரசர் ஆங்கோர் மங்கைக்கு மணமுடித்துத் தங்கியிருந்த இருப்பிடத்தே தம்மில் ஒத்த நகைப்பினராய்த் தமிழ்வேந்தரைக் குறித்து, 'தென்றமிழ் நாடாளும் வேந்தர் போரினை விரும்பிப் புறப்பட்டு வந்து வடவிமயச் சிகரத்திலே தம வில், புலி, கயற்பொறியைப் பொறித்துப் போன நாளில் எம்போலும் முடிமன்னர் இங்கே இல்லைபோலும்' என்று இறுமாபபோடு இகழ்ந்துரைத்தனர் என்பதை அம்முனிவர் வாயிலாய் அறிந்த சேரன் சினமுற்றுத் தானே படை கொண்டு சென்று அத்தருக்கரை வென்றுவர நினைந்தான். நினைந்திருந்த தோடே தன்னாட்டு நெடுவேள் குன்றத்து மலைவேங்கை மரநிழலில் ஈரேழ்நாள் தவமிருந்து இருவிசும்பேறிய பத்தினிக் கடவுளாம் கண்ணகிக்குப் படிவம் அமைத்து வழிபட வேண்டுமென்ற பேச்செழ,

அப்படிவத்திற்குரிய கல்லை இமையத்திலிருந்து எடுத்துக் கங்கையிலே நீராட்டிக் கொண்டுவரலாமென்று அமைச்சரும் கருத்து உரைத்தார். முன்னமே உருள்கின்ற மணிவட்டத்தைப் பின்னரும் குறுந்தடிகொண்டு ஏவினாற்போல், ஆரியவரசரின் ஆணவத்தை அடக்க நினைந்த அவனது நினைப்பினை இமையமலையிலே கல்லெடுக்கலாமென்ற இக்கருத்து நன்றும் தூண்டிவிட்டது. வடநாட்டு வேந்தரை வாட்டி அவர்தம் முடித்தலையிலேயே இமையக் கல்லைச் சுமத்தி எடுத்து வருமாறு வஞ்சினங்கூறிப் புறப்பட்டான் வாள்வேந்தன்.

வஞ்சிமாநகரிலிருந்து வலமாகப் புறப்பட்ட செங்குட்டுவன் நீலகிரியிற் சென்று தங்கியபோது, வான்வழிச் செல்லும் முனிவர் வந்து அவனை வாழ்த்தி, நீ இமையத்தை நோக்கிப் படையெடுக்கின்றாயாகலின், அம்மலையில் வாழ்வோராய அருமறையந்தணரைப் பேணுவது நின் கடனெனக் கூறிச் சென்றபின், இவன் தன்முன் வந்து கூத்தாடிக்காட்டிய கொங்கணர், குடகர், ஓவர் ஆகியோர்க்குப் பரிசளித்திருந்தான். அப்போது கங்கைக் கரைநாட்டை ஆளும் நூற்றுவர் கன்னரின் தூதனான சஞ்சயனென்போன் பரிவாரங்களோடு வந்து, "இப்படையெடுப்பு இமையக் கல்லுக்கேயென்றால் அதனை யாமே எடுத்து வந்து தருவோம்" என்று அக்கன்னர் அறிவித்ததாகத் தெரிவித்தான். அதுகேட்ட செங்குட்டுவன், 'கனகவிசயரைக் கருதிச் செல்லும் இப்படையின் கருத்தினை அக்கன்னர்க்குக் கூறிக் கங்கையைக் கடத்தற்கு வேண்டிய வங்கங்களை மட்டும் அமைத்துவைக்குமாறு அவரிடம் அறிவிப்பீர்' என்று அத்தூதனையனுப்பிப் பின் படையொடு சென்று கங்கைக் கரையையடைந்து அங்கே கன்னர் நிறுத்தியிருந்த வங்கப் பரப்பினால் வடகரையெய்தி, அக்கன்னர் எதிரேற்க அவர்நாடு கடந்து போய் உத்தரநாட்டைச் சேர்ந்து, அப்பகைப் புலத்தில் பாடிவீடு அமைத்திருந்தான். அப்போது கனகவிசயர் இருவரும் உத்தரன், விசித்திரன், உருத்திரன், பைரவன், சித்திரன், சிங்கன், தனுத்தரன் சிவேதன் ஆகிய வடபுல மன்னரெல்லோரையும் உடன்கொண்டு, தென்றமிழ் வேந்தரின் ஆற்றலைக் காண்போமென்று படை கொண்டு வந்து சேரனையெதிர்த்தனர். இரைதேரும் வேட்டைக்கு எழுந்த சிங்கமொன்று யானைப்பெருங்கூட்டத்தை எதிரே கண்டதுபோல் அப்பகைப்படையைக் கண்டு ஊக்கமுற்றுப் பாய்ந்த செங்குட்டுவன், அப்பகையரசர் பலரையும் ஒரு

பகலில் கொன்று களங்குவித்து, கனகவிசயரை ஐம்பத்திருவருடனே சிறைப்பிடித்துக் கொண்டு மறக்கள வேள்வி புரிந்தபின்னர், வில்லவன் கோதையெனும் அமைச்சனுடனே வெற்றிப்படைகளை ஏவி, இமையத்தில் இருந்து கல்லெடுத்துக் கனகவிசயரின் கதிர்முடியிலேற்றிக் கங்கையிற் கொண்டுவந்து நீராட்டினான். நீராட்டியபின் தன்முன் தோற்ற ஆரிய மன்னர் அழகுற அமைத்த பாடி வீட்டிலே தங்கிய செங்குட்டுவன், படைமறவர் பலரையும் சிறப்பித்து, நூற்றுவர் கன்னர்க்கும் விடையளித்து விட்டுப் படையோடே புறப்பட்டு, வஞ்சிமாநகர் வந்து கண்ணகிக்குப் பத்தினிக்கோட்டம் கண்டான். இதுவே இப்படையெடுப்பின் வரலாறாம்.

செங்குட்டுவனின் இந்த இமையப் படையெடுப்பிலே அவனை எதிர்கொண்டு போற்றித் துணைநின்ற வடதிசை மன்னரான நூற்றுவர் கன்னர், கங்கையையடுத்த வடபால் நாட்டை ஆண்டவரென்பது சிலப்பதிகாரத்திலேயே தெளிவாகின்றது. கங்கையைக் கடப்பதற்கு அவர்களே வங்கங்கள் உதவினராதலால் கங்கையின் வடகரையுரிமை அக்கன்னர்களுடையதே என்பது விளங்கும். கங்கையைக் கடந்து வடகரையடைந்த செங்குட்டுவன் படையை அகக்கன்னரே எதிர்கொள்ள, அவருடைய நாட்டைக் கழிந்தே அப்படை உத்தரநாட்டை எய்தியதென்பதும் இக்கருத்தினை உறுதிப்படுத்தும். ஆயின், அந்நூற்றுவர் கன்னரென்போர் யாரென்பது ஆய்விற்குரியதாகவே உள்ளது.

வடகிழக்கிந்தியாவில் மகதநாட்டையாண்ட சதகன்னனென்ற ஆந்திரப்பேரரசனாக நூற்றுவர் கன்னரைக் குறிப்பர் கனகசபைப் பிள்ளை.[28] கன்னரென்ற அளவில் பன்மையிற் குறிப்பிடும் அவர் சதகன்னனென்னும்போது ஒருமையிலேயே குறிக்கின்றார். ஆதலால் கன்னரென்பதோர் அரசமரபின் பொதுப்பெயரென்றும் சதகன்னனென்பது அவ்வினத்துள் வந்த வேந்தனொருவனின் சிறப்புப் பெயரென்றும் அவர் கருதுவது விளங்கும். மற்று, ஆந்திர மரபினரான மகதபேரரசர் மகாகன்னரே சதகன்னரென்றும் கூறபபடுவரெனக் குறிப்பிட்டு அவர்களே செங்குட்டுவனுக்கு நட்பரசர்களான நூற்றுவர் கன்னரென்பர் கா. அப்பாதுரையார்.[29]

எனினும், நூற்றுவர் கன்னரென்போர் ஆந்திர மரபினரான மகதப்பேரரசரல்லரென்றும் அவர்களை மாளுவவேந்தராகவே சிலப்பதிகாரம் செப்புகின்றதென்றும் நிறுவுவார். மு. இராகவையங்கார்,[30] சதகன்னனென்பது ஆந்திரப்பேரரசருள் ஒருவன் பட்டப்பெயரேயென்றும், 'நூற்றுவர் கன்னர்' (26:163), 'ஆரியமன்னர் ஐயிரு பதின்மர்' (27:177) எனத் தொகையிட்டுக் குழுஉப் பெயராகவே இளங்கோவடிகள் கூறுவதால் இவற்றை ஒருவன் பெயராகக்கொள்ளுதல் பொருந்தாதென்றும் காட்டுவதோடு,

குடகக் கொங்கரும் மாளுவ வேந்தரும்
கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்
(சிலம்பு: 30:159 -160)

என்றவாறு செங்குட்டுவனின் பத்தினிக் கோட்டத்துக் கடவுள் மங்கலப் பெருவிழாவிற்கு வந்திருந்து வரம்பெற்றுச் சென்றாரென்று சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பெறுகின்ற மாளுவ வேந்தராக நூற்றுவர் கன்னரைக் கொள்வதுதான் பொருந்துமென்றும் அவர் காட்டுவார்.

இனி, செங்குட்டுவனால் வெல்லப்பட்ட கனகவிசயர் என்ற ஆரியவரசர் இருவருள் கனகனைச் சகப்பேரரசன் கனிட்கனென்றும் விசயனைக் காசுமீர நாட்டரசனான விசயாலயனென்றும் காட்டி, சகப்பேரரசின் கிழக்கெல்லையும் ஆந்திரப்பேரரசின் மேற்கெல்லையுமாகிய வடமதுரை அல்லது இக்காலத் தில்லி நகர்க்கருகிலேயே அவர்களைச் செங்குட்டுவன் வென்ற போர் நிகழ்ந்திருத்தல் வேண்டுமென்றும் கருதுவார் கா. அப்பாத்துரையார்.[31] ஆயின்,

பால குமரன் மக்கள் மற்றவர்
காவா நாவின் கனகனும் விசயனும்
(சிலம்பு.26:158-159)

என்று அவ்விருவரையும் ஒருவன் மக்களான உடன் பிறப்பாளரே எனக் குறிப்பிடுகின்ற சிலப்பதிகாரத்தோடு இது முரண்படுவதையும் அவரே நினைக்கின்றார். ஆதலால் இக்கருத்து அமையாது.

212.4. செங்குட்டுவன் ஆட்சிக்காலம்

இனி, இச்செங்குட்டுவன் ஆட்சிக்காலத்தைக் குறித்துக் காணலாம். இவன் இமையப் படையெடுப்பினைத் தொடர்ந்து செய்த கண்ணகி கோட்டத்துக் கடவுள் மங்கலப் பெருவிழாவிற்குக் கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும் வந்திருந்தானாகச் சிலப்பதிகாரம் (30:160) செப்புகின்றது. இலங்கை வரலாற்றில் அவனது ஆட்சிக்காலம் கி.பி.173 முதல் 191 முடியவென்று அறிஞர்கள் வரைகின்றனர்.[32] கண்ணகிக்குக் கடவுள் மங்கலம் செய்யுமுன்னே செங்குட்டுவன் தன் ஆட்சியாண்டுகளில் ஐம்பதைக் கடந்தவனென்பது,

வையங் காவல் பூண்டநின் நல்லியாண்டு
ஐயைந் திரட்டி சென்றதற் பின்னும்
அறக்கள வேள்வி செய்யாது யாங்கணும்
மறக்கள வேள்வி செய்வோய் ஆயினை
(சிலம்பு. 28:129-132)

திருஞெமிர் அகலத்துச் செங்கோல் வேந்தே
நரைமுதிர் யாக்கை நீயும் கண்டனை
(சிலம்பு. 28:157-158)

என்ற மாடலன் கூற்றுக்களால் அறியவருகின்றது. இவன் அரசு வீற்றிருந்த ஆட்சிக்காலம் ஐம்பத்தைந்து ஆண்டுகளென்பதைப் பதிற்றுப்பத்தின் பதிகத்தால் அறியலாம். ஆதலால், கயவாகுவின் கால அளவிற்கும் முன்னோர் கால அடைவிற்கும் பொருந்த, இச்செங்குட்டுவன் ஆட்சியாண்டுகளைக் கி.பி.130 முதல் 185 முடியவெனக் கொள்ளலாம்.

212.5. செங்குட்டுவன் மகன்

செங்குட்டுவனுக்குக் குட்டுவன் சேரல் என்பானோர் மகனிருந்தானென்று பதிகவழி அறிகிறோம். கரணம் அமைந்த காசறு செய்யுட்பரணர் தன்னைப் பாடிய பத்துப் பாடல்களுக்குப் பரிசிலாகச் செங்குட்டுவன் உம்பற்காட்டு வருவாயினை அளித்ததோடே தன் மகனான குட்டுவன் சேரலையும் அவர்க்கு (மாணாக்கனாகக்)கொடுத்தானென்று அப்பதிகச செய்தி அமைகின்றது.

2.13. தகடூர் எறிந்த சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை (கி.பி.135-152)

சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதனுக்கு வேளாவிக் கோமானாகிய பதுமனின் மகள் வயிற்றில் பிறந்த மகனே பெருஞ்சேரல் இரும்பொறை. இவன் அதியமான் நெடுமானஞ்சியை வென்று அவனுடைய தகடூரை எறிந்தழித்தமையால் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை எனக் குறிக்கப் பெற்றான். பதிற்றுப் பத்தில் அமைந்த எட்டாம் பத்துப் பாடல்களால் இவனைப் பாராட்டும் அரிசில் கிழார், இவன் பெற்ற இந்தத் தகடூர் வெற்றியைப் பின்வருமாறு பேசுவார்.

வெல்போர் ஆடவர் மறம்புரிந்து காக்கும்
வில்பயில் இறும்பின் தகடூர் நூறிப்
பேஎம் மன்ற பிறழநோக்கு இயவர்
ஓடுறு கடுமுரண் துமியச் சென்று
வெம்முனை தபுத்த காலைத் தம்நாட்டு
யாடுபரந் தன்ன மாவின்
ஆபரந் தன்ன யானையோன் (பதி.78)

எனவரும் இப்பாடலடிகளில், கொங்குநாட்டுத் தகடூரை அந்நாட்டுச் சிறப்புக் கால்நடைகளாகிய ஆடுகளையும் மாடுகளையும் போன்ற பல குதிரைகளும் யானைகளும் நிறைந்த படையோடு சென்று அழித்தான் சேரமான் என்று புனையப் பெறுதல் காணலாம்.

கொல்லிக் கூற்றத்து நீர்கூர் மீமிசைப்
பல்வேல் தானை அதிக மானோடு
இருபெரு வேந்தரையும் உடனிலை வென்று
முரசும் குடையும் கலனும் கொண்டு
உரைசால் சிறப்பின் அடுகளம் வேட்டுத்
துகள்தீர் மகளிர் இரங்கத் துப்பறுத்துத்
தகடூர் எறிந்து நொச்சிதந்து எய்திய
அருந்திறல் ஒள்ளிசைப் பெருஞ்சேரல் இரும்பொறை
(பதி.பதி.8)

என்று எட்டாம் பத்தின் பதிகம் இவனுடைய இவ்வெற்றி ஒன்றையே சிறப்பாகவும் விரிவாகவும் எடுத்துச் செப்புகின்றது. இதனால் இப்போர் முதலில் கொங்கு

நாட்டிலே கொல்லிமலை சூழ்ந்த பரப்பில் நீர்வளம் மிக்கதொரு மலையின்மேல் நிகழ்ந்ததென்றும், பலவேற் படைகளையுடைய அதிகமானோடு சோழபாண்டியராகிய மற்ற இருபெருவேந்தரும் கூடிப்போரிட வந்தனரென்றும், அவர்களை யெல்லாம் இப்பெருஞ்சேரல் இரும்பொறை ஒருங்கே வென்றோட்டி அவர்தம் வெற்றிமுரசும் கொற்றக்குடையும் மணிமுடியுமாகிய அவற்றைக் கைப்பற்றிக்கொண்டு களவேள்வி வேட்டானென்றும், பின்னர் அதியமானின் மனைவியர் இரங்குமாறு அவனைக் கொன்று தகடூரையும் அழித்து அதன் காவல் மதிலைக் கைகொண்டானென்றும் காணலாம்.

அடுத்து இப்பெருஞ்சேரலிரும்பொறை ஆயர் தலைவனாகிய கழுவுள் என்பானுடைய ஊரைத் தீகிரையாக்கி அவனது அரணையும், காளைகளோடும் கன்றுகளோடும் கூடிய ஆனிரையையும் கவர்ந்துகொண்டு அவனைத் தலைமடங்குமாறு வென்ற வெற்றியொன்றும் அரிசில் கிழார் பாடலொன்றால் (பதி.71) அறியவருகின்றது. இதனை இவன் பின்னோனான இளஞ்சேரல் இரும்பொறையைப் பாடுகின்ற பெருங்குன்றூர் கிழாரும்,

பொருமுரண் எயதிய கழுவுள் புறம்பெற்று
நாம மன்னர் துணிய நூறிக
காலவல் புரவி அண்டர் ஓட்டி (பதி.88)

என்று அவன் முனனோருடைய அரும்பெருஞ் செயல்களின் வரிசையில் வைத்துப் பாடுவார்.

இவன் சிறந்த பண்பாளன். ஒருகால இவனுடைய வெற்றிமுரசு நீராட்டுக்கெனச் சென்றிருந்தபோது இவனைக் காணவந்த புலவர் மோசிகீரனார், களைப்பினால் சோர்ந்து அமமுரசு கட்டில்மேல் அறியாதே படுத்துறங்கவும், அதனையறிந்த இவன் அவரை வாளால் எறியப்போய், தமிழ்ப் புலவரென்று அறிந்த நிலையில் வாளை மாற்றிக் கவரிகொண்டு வீசி நின்றானாக, துயிலுணர்ந்து எழுந்த புலவர் இவன் செயலைக்கண்டு வியந்து பாடியுள்ளார் (புறம்.50).

இவன் தன் பெருங்கோப் பெண்டுடனே அமர்ந்து மகப்பெறு வேள்வி இயற்றிச சாலபும் செம்மையும் உளப்பட்

பிறவும் அரசியற் பண்புகளெல்லாம் அமைந்த வீறுசால் புதல்வன் ஒருவனைப் பெற்றானென்றும் இறுதிக் காலத்தில் துறவுள்ளத்தோடே தவவேடங்கொண்ட இவன் அவ்வுள்ளத்து உறுதியோடே தன் அரசவையிலிருந்த புரோகிதனான நரைமூதாளனுக்கும் தவத்தின் சிறப்புரைத்து அவனையும் துறவற நெறியில் செலுத்தினானென்றும் பாராட்டப் பெறுகின்றான் (பதி.74).

இவன் சிறந்த கொடையாளன். தன்னைப் பத்துப் பாடல்களால் பாடிய புலவர் அரிசில் கிழார்க்குப் பரிசிலாகத் தானும் தன் பெருங்கோப் பெண்டும் அரண்மனையை விடுத்து வெளிவந்து நின்று, அதிலுள்ளவெல்லாம் கொள்ளுமின் என்று கூறி, ஒன்பது நூறாயிரம் பொற்காசுகளோடே அரசாட்சியையும் கொடுத்தானாக, ஏனையவற்றையெல்லாம் ஏற்றுக் கொண்டபுலவர் அரசினை மட்டும் ஏலாதே இவனை நோக்கி, 'யான் இரப்ப நீயே இதனை ஆள்க' என மீளக்கொடுத்துத் தாம் அமைச்சரானார் எனவரும் பதிகச் செய்தியால் இவனது இந்தக் கொடைமை உணரப்படும்.

இப்பெருஞ்சேரல் இரும்பொறை பதினேழாண்டு அரசு வீற்றிருந்தானென்றும் பதிகத்தால் அறியலாம்.

214. பாலைபாடிய பெருங்கடுங்கோ
(கிபி.140-170)

கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையாகிய மாந்தரம் பொறையன் கடுங்கோவின் மகனென்று கருதத் தக்கவன் பாலைபாடிய பெருங்கடுங்கோ. இவன் தம்பியே மருதம் பாடிய இளங்கடுங்கோ.

இப்பெருங்கடுங்கோ அரசநிலையில் பேய்மகள் இளவெளினியாரின் புறப்பாடலொன்றில் மட்டும் அறிய வருகின்றான்.

தண்பொருநைப் புனல்பாயும்
விண்பொருபுகழ் விறல்வஞ்சிப்
பாடல்சான்ற விறல்வேந்தனும்மே
வெப்புடைய அரண்கடந்து
துப்புறுவர் புறம்பெற்றிசினே (புறம்.11)

எனவரும் அப்பாடலடிகளால், இவன் இருந்து அரசாட்சி செய்த தலைநகர் ஆன்பொருநைக் கரையில் அமைந்த வஞ்சி மாநகரேயென்பதும், இவன் பகைவரது அரணொன்றை வென்று அப்பகைவரைப் புறங்கண்டானென்பதும் புலனாகின்றன. மற்றப்படி இவன் வரலாறேதும் விளக்கமுறவில்லை.

சிறந்த புலமைப் பாவலனாகிய இக்காவலன் தன் பாடலொன்றில் (நற்.391) கொண்கான நன்னனைக் குறித்துள்ளமையால் இவனும் அவனும் ஒத்த காலத்தவரென்பது உணரப்படும்.

இவன் தம்பியாகிய மருதம் பாடிய இளங்கடுங்கோ அரசநிலையின்றிப் புலவர் நிலையிலேயே அறிய வருகின்றானாதலால் அவன் வரலாறும் தெளிவாகவில்லை.

215. ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்
(கிபி140-178)

இமையவரம்பனாகிய குடக்கோ நெடுஞ் சேரலாதனுக்கு வேளாவிக்கோமானாகிய பதுமனின் மகள் வயிற்றில் பிறந்த இளையமகனே ஆடுகோட்பாட்டுச் சேரலாதன். ஆதலால் இவன் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலுக்குத் தாய்வயிற்றுத் தம்பியும் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனுக்கு மாற்றாந்தாய் வயிற்றுத் தம்பியுமாவான்.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக் காக்கை பாடினியார் நச்செள்ளையார் பாடியதாய்ப் பதிற்றுப் பத்தினுள் அடங்கியுள்ள ஆறாம் பத்துப் பாடல்களும் அவற்றிற்கு அமைந்த பதிகமுமே இவன் வரலாற்றுச் செய்திகளை அறிய உதவுகின்றன. இவனைக் குறித்து வேறுபாடல்களுமில்லை; இவனைப்பாடிய வேறு புலவருமில்லை.

2151. நாடும் நகரும்

பதிற்றுப் பத்தின் பாடலொன்றிலே,

கமழுந் தாழைக் கானலம் பெருந்துறைத்
தண்கடற் படப்பை நன்னாட்டுப் பொருந

. . . . . .
குடவர் கோவே கொடித்தேர் அண்ணல் (பதி.55)

என விளிக்கப் பெறுதலால் இவன் மேலைக் கடலோரத்துக் குடநாட்டை ஆண்டவனென்பது விளங்கும்.

பொங்குபிசிர்ப் புணரி மங்குலொடு மயங்கி
வருங்கடல் ஊதையின் பனிக்கும்
துவ்வா நறவின் சாயினத் தானே (பதி.60)

என்று, அலைகளோடும் மேகத்தோடும் கலந்துவருகின்ற கடற்காற்றினால் நடுங்குதற்கிடமான நறவென்னும் நகரிலே மகளிர் கூட்டத்தோடே மகிழ்ந்திருந்தானாகப் பாடப் பெறுதலால், கடற்கரை நகரான நறவென்பது இவனுக்கு உரியதாய் அறியப்படுகின்றது. அதுகொண்டு அந்நகரே இவன் இருந்தாண்ட தலைநகர் என்பாருமுளர்.[33]

மற்று, 'தண்டாரணியத்துக் கோட்பட்ட வருடையைத் தொண்டியுள் தந்து கொடுப்பித்து' எனவரும் பதிகத்தடிகளில் பகைவரால் கவரப்பட்டுத் தண்டகாரணியத்துள் கொண்டு போகப்பட்ட ஆட்டுமந்தையை இவன் மீட்டுக்கொண்டுவந்து தன் நகரான தொண்டியுள் நிறுத்திப் பகுத்தளித்தானென்றும் அறிகிறோம். ஆதலால் தொண்டியே இவன் தலைநகர் என்பதற்கும் இடமுண்டாகிறது.

21511. தலைநகர் நறவா, தொண்டியா?

இவற்றுள் நறவு நகரின்கண் இவன் மகளிர் கூட்டத்துடனே மகிழ்ந்திருந்தானென்பது கொண்டு அதனை இவனது தலைநகராகக் காண்பது தக்கதன்று. இன்பநுகர்ச்சியின் பொருட்டும் விளையாட்டு விருப்புடனும் ஆடல் பாடல் மகளிருடனே இவன் தன் தலைநகரை நீங்கிப்போய்த் தங்கிய மாற்றுநகரே அஃதென்று அறியவருகின்றது. அவ்வாறு இவன் சென்று தங்கியிருக்கும் நிலையிலேயே புலவர் இவனைப் பாடத் தொடங்குகின்றார். முதற் பாடலிலேயே (பதி.51) இவன் தன் நகர்க்கு மேற்பால் அமைந்த கடல்சேர் கானற் குடபுலத்தில் சென்று பனஞ்சோலையிடத்தே மலர்களால் வேய்ந்து அணிசெய்யப்பட்ட பந்தரில் தங்கி விறலியரின் பாடல்கேட்டு

நீடியிருக்கும் பண்பினைப் புனைகின்றார் புலவர். அம்முறையே அவர் இறுதிப்பாடலில் இவனிடத்து விறலியை ஆற்றுப்படுத்துவாராய், இவன் நறவு நகரில் மகளிர் கூட்டத்தோடு இருப்பதைக் கூறுகின்றார் எனலாம். ஆகவே, நறவுநகர் இச்சேரலாதனின் தலைநகராகாமை அறியலாம்

சங்க இலக்கியங்களிலும் நறவுநகர் சேரவேந்தர்க கோர் தலைநகராய் இருந்தமுறையில் எங்கும் சிறப்பித்துப் பாடபபெறவில்லை. இவ்வொரு பாடலிலேயன்றி வேறுபாடல் ஒன்றிலும் அது குறிக்கப்பெறவுமில்லை. மாறாகத் தொண்டி நகரோ, 'திண்டேர்ப் பொறையன் தொண்டி' (அகம்.60; நற்.8; குறு.128), குட்டுவன் தொண்டி (அகம்.290; ஐங்.178) என்று புலவர் பலராலும் சேராக்குரியதாகப் பாடப்பெறுவதோடே அச்சேரவேந்தா பலரும் தனித்தனியே, 'தண் தொண்டியோர் அடுபொருந' (புறம்17), 'வளைகடல் முழவின் தொண்டியோர் பொருந' (பதி.88), 'கானலந்தொண்டிப் பொருநன்' (நற்.18) என்றெலலாம் அத்தொண்டி வேந்தராகக குறிக்கப பெறுகின்றனர். அம்முறையில் ஆடுகோடபாடடுச் சேரலாதனுக்கும் பதிகப் பாடல் தொடர்புறுத்தும் தொண்டி நகரே தலைநகராய் இருந்திருத்தல் வேண்டும்.

215.2. ஆடுகோட்பாட்டுப் பெயர் விளக்கம்: வெற்றிக்கோட்பாடு

இனி, இச்சேரலாதனுடைய நாடடிலிருந்து ஆட்டுநிரையைத் தண்டகாரணியத்துப் பகைவர் கவர்ந்து போனதை இவன் மீட்டுக் கொண்டுவந்தான் என்ற பதிகச் செய்தியே இவனுடைய குறிபபிடத்தக்க சிறப்புடைய வெற்றிச் செயலாக வருகின்றது. அது பற்றியே இவனுக்கு ஆடுகோட்பாட்டுச் சேரலாதனென்ற சிறப்புப் பெயரும் அமைந்ததென்பா.[34] எனினும், அப்பெயர் விளக்கம் ஆயவிற்குரியதே ஆடென்பதற்குச் சங்ககாலத்துப் பயின்று வழங்கிய சொல் யாடென்பதே. ஆடென்ற சொல் அக்காலத்து ஆட்டினத்தைக் குறித்ததன்று; வெற்றியையே குறித்ததாம். ஆடுகோள் காரணமாக இவனுக்குப் பெயரமைவதாயின், அக்கால மொழிபபடி யாடுகோட்பாட்டுச் சேரலாதன் என்றே அமைநதிருந்தல் வேண்டும்., அன்றியும் அம்முறையில் இவன் பெயர் பெறுமளவு சிறப்புமிக்க

அவ்வெற்றி இவனைப் பற்றிய பாடல்களில் குறிப்பாகவும் கூறப்படவில்லை. மற்று.

மடம்பெரு மையின் உடன்றுமேல் வந்த
வேந்துமெய்ம் மறந்த வாழ்ச்சி
வீந்துகு போர்க்களத்து ஆடும் கோவே(பதி.56)

என்று போர்க்களத்தில் பகைவரை வென்று அவ்வெற்றிக் களிப்பிலே 'ஒள்வாள் அமலை' ஆடுவோனாகவே இவன் பாடப்பெறுகின்றான். ஆடென்ற சொல்லும் அக்காலத்தில் வெற்றியையே குறித்தது.

ஆடு ஆடு என்ப ஒருசா ரோரே
ஆடன்று என்ப ஒருசா ரோரே
. . . . . .
யான்கண் டனன்அவன் ஆடா குதலே (புறம்.83)

எனவருவதை இங்கே எடுத்துக்காணலாம். எனவே, அம்முறையில் போர்வெற்றிக் கோட்பாட்டிலே இவனுக்கு ஆடுகோட்பாட்டுச் சேரலாதனென்ற சிறப்புப்பெயர் அமைந்ததாகக் கருதுவதே பெருமையாம்.

இன்றினிது நுகர்ந்தன மாயின் நாளை
மண்புனை இஞ்சி மதில்கடந் தல்லது
உண்குவ மல்லேம் புகாவெனக் கூறிக்
கண்ணி கண்ணிய வயவர் பெருமகன் (பதி.58)

என்று வெற்றிக்கோட்பாட்டிலே வஞ்சினங்கூறும் வயவர்க்குப் பெருமகனாக இவன் பாடப்பெறுவதும் இக்கருத்தினை வலியுறுத்தும்.

மற்றும், 'மழவர் மெய்ம்மறை' (பதி.55), 'சான்றோர் மெய்ம்மறை' (பதி.58), 'வில்லோர் மெய்ம்மறை' (பதி.59) என்றெல்லாம் இவன் படைமறவர்க்குக் காப்புக் கவசமானவன் எனப் பாராட்டப்பெறுவதும் காணலாம்.

2153. பிற சிறப்புச் செய்திகள்

இவ்வாறு போர்வெற்றிக் கோட்பாடுடைய இச்சேரலாதன் இரவலர்க்குப் பரிசில் நல்கிப் புரப்பதிலும் சிறப்புமிக்கவனாகப் பாடப் பெறுகின்றான் (பதி.55, 57, 59).

இவன் மழவரினத்தாரைப் போரிலே வென்றடக்கித் தன்கீழ்ப்படுத்தினானென்றும், மன்னர் பலரை வென்று ஓட்டினானென்றும் குழந்தை வளர்ப்பாரைப்போல் குடிகளைக் காத்து வளர்த்தானென்றும் பதிகத்திலே சிறப்புறக் குறிக்கப்பெறுகின்றான்

தன்னைப் பத்துப் பாடல்களால் சிறப்பித்துப் பாடிய காக்கை பாடினியார் நச்செள்ளையார்க்குப் பரிசிலாக அணிகலன்கள் அணியச் சொல்லி, ஒன்பது காவென்னும் நிறையளவு பொன்னும் நூறாயிரம் பொற்காசுகளும் கொடுத்த இவ்வாடுகோட்பாட்டுச் சேரலாதன், அவற்றின்மேலும் அவரைத் தன் அரச இருக்கைக்குப் பக்கத்தே அமர்த்திச் சிறப்பித்தானெனவும் அப்பதிகத்தாலேயே அறிகின்றோம்.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் முப்பத்தெட்டாண்டுகள் அரசு வீற்றிருந்தானென்றும் பதிகம் பகரும்.

216. இளஞ்சேரல் இரும்பொறை என்னும்
சேரமான் குடகோச்சேரல் இரும்பொறை (கி.பி152-168)

குட்டுவன் இரும்பொறைக்கு மையூர் கிழானென்னும் வேளின் மகளாகிய அந்துவஞ்செள்ளையென்பாள் வயிற்றில் பிறந்த மகன் இளஞ்சேரல் இரும்பொறையென்று பதிற்றுப்பத்தின் பதிகம் பகர்கின்றது. தகடூர் எறிந்த சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறையே இங்குக் குட்டுவன் இரும்பொறையென்று குறிக்கப்பெற்றுள்ளான் என்பது பதிற்றுப்பத்தின் வரிசைமுறையில் விளக்கமாகின்றது. ஆதலால் பெருஞ்சேரல் இரும்பொறையின் மகனே இளஞ்சேரல் இரும்பொறை என்பது புலனாம்.

இவனைப் பாடிய புலவர் பெருங்குன்றூர்கிழார் ஒருவரே. பதிற்றுப்பத்தில் அமைந்த ஒன்பதாம் பத்தும் புறநானூற்றில் இடம்பெற்ற இரண்டும் (*210, 211*) ஆகப் பன்னிரு பாடல்களில் இவன் அவரால் பாடப்பெற்றுள்ளான். பதிற்றுப்பத்தின் பதிகத்தில் குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை எனக் குறிக்கப்பெறுகின்ற இவனே புறப்பாடலின்கீழ்ச் சேரமான் குடக்கோச்சேரல் இரும்பொறை என்று குறிக்கப்பெற்றுள்ளானாகக் கொள்ளலாம்.

2161. போர்வெற்றிகள்

இளஞ்சேரல் இரும்பொறை தன் பகைவர் அஞ்சத்தக்க தானையோடே சென்று சோழபாண்டியராகிய இருபெருவேந்தரும் விச்சியென்னும் குறுநில மன்னனும் மாண்டு விழும்படிப் போரிட்டு ஒரு மலையிடத்தமைந்த அரிய காவல் காட்டினையுடைய ஐந்து அரண்களை அழித்தானென்றும், பொத்தியாரென்ற புலவரை நட்பாண்ட கோப்பெருஞ்சோழனையும் கல்வியையாண்ட இளம்பழையன் மாறனையும் தான் கூறிய வஞ்சினம் வாய்ப்ப வென்றானென்றும் இவனுடைய வெற்றிச் செயல்கள் இரண்டினைப் பதிகம் அடுக்கிக் கூறுகின்றது. இவற்றுள்,

வெருவரு தானையொடு வெய்துறச் செய்துசென்று
இருபெரு வேந்தரும் வீச்சியும் வீழ
அருமிளைக் கல்லகத்து ஐந்தெயில் எறிந்து
(பதி.பதி.9)

எனவரும் முதற்போரில் விச்சியெனக் குறிப்பிடப்பெறுவோன் விச்சிக்கோனெனென்பதும் அவன்மேற் படையெடுத்துச் சென்ற இவனுக்கெதிராக அவனுக்குத் துணைவந்த பெயரறியப்படாத பெருவேந்தர் இருவரும் அவனோடே மாண்டுவிழ, இவன் அனைவரையும் கொன்று விச்சிக் கோனுடைய ஐந்தெயில்களை அழித்தானென்பதும் விளங்கும். அடுத்து,

பொத்தி யாண்ட பெருஞ்சோ ழனையும்
வித்தை யாண்ட இளம்பழையன் மாறனையும்
வைத்த வஞ்சினம் வாய்ப்ப வென்று (பதி.பதி.9)

என்றுவரும் இரண்டாவது போரில் கோப்பெருஞ்சோழனும் பழையன் மாறனும் இவன்மேற் படையெடுத்துவர அவர்களுக்கெதிராக இவன் வஞ்சினங்கூறிச் சென்று போரிட்டு வென்று துரத்தினானென்பதும் விளங்குகின்றது. எனவே, முதற்போரில் இவனால் கொல்லப்பட்ட சோழ பாண்டியருடைய மக்களே இரண்டாவது போரில் இவன்மேல் வந்த இருபெரு வேந்தருமெனக் கருதலாம்.

இவ்விளஞ்சேரல் இரும்பொறை சோழ வேந்தனை வென்றோட்டிய போது அவன் தன் வேற்படைகளை

யெல்லாம் களத்திலே போகட்டு ஓடினானென்பதை மட்டும் பெருங்குன்றூர் கிழாரும் விதந்தெடுத்துப் பாடியுள்ளார் (பதி.85).

216.2. செயற்கருஞ் செயல்கள்

இவன் மந்திரங்களால் வழிபடவேண்டிய முறையில் தெயவங்களை வழிபட்டானெனவும், தன் பாட்டனும் அமைச்சனுமான மையூர்கிழானைக் குற்றமற்ற கேள்விச் செலவத்தையுடைய தன் புரோகிதனைக் காட்டிலும் அறநெறி அறிபவனாகச் செய்தானெனவும் கூறுகின்ற பதிகமே தொடர்ந்து,

அருந்திறல மரபின் பெருஞ்சதுக் கமர்ந்த
வெந்திறற் பூதரைத தந்திவண் நிறீஇ
ஆய்ந்த மரபிற் சாந்தி வேட்டு (பதி.பதி.9)

என்ற அடிகளால் இவன் பெருஞ்சதுக்கப் பூதரைத் தேவருலகத்திலிருந்து இவ்வுலகிற் கொண்டுவந்து நிறுத்தி முறைப்படிக் களவேள்வியினால் சாந்திசெய்து விழா எடுத்தானென்றும் பேசுகின்றது. இதனைச் சிலப்பதிகாரமும்,

சதுக்கப் பூதரை வஞ்சியுள் தந்து
மதுக்கொள் வேள்வி வேட்டோன் (சிலம்பு 28: 147-148)

எனச செப்பக் காணலாம்.

216.3 ஆட்சிக்காலம்

இனி, இவ்விளஞ்சேரல் இரும்பொறையின் ஆட்சிக்காலத்தைக் குறித்துக் காணுங்கால், சேரமான் கடலபிறக்கோட்டிய செங்குட்டுவனின் ஆட்சியாண்டிற்குள் அடங்கியவனாகவே இவன் காணப்படுகினறான.

இவனுடைய மரபின் முன்னோர்களை மீண்டும் மீண்டும இருபாடல்களில (பதி.88,.90) எடுத்துமொழிகின்ற பெருங்குன்றூர் கிழார், கடல்கலங்க வேலிட்ட செங்குடடுவனை இருமுறையும் குறித்துக கூறுகின்றார்.

எனவே, செங்குட்டுவன் இவனுக்கு முன்னோன் போல்கின்றான். எனின், சிலப்பதிகாரத்தே கடவுட் பத்தினிக்குச் சிலையமைக்கவேண்டிய கல்லை இமையத்தில் இருந்து எடுத்துக் கனகவிசயரின் தலையில் சுமத்திக் கொண்டுவந்த செங்குட்டுவனிடம் அவன் முன்னோர்களின் அருஞ்செயல்களை அடுக்கி மொழியும் மாடலன், மேற்குறித்தவாறு

சதுக்கப் பூதரை வஞ்சியுள் தந்து
மதுக்கொள் வேள்வி வேட்டோன் ஆயினும்
மீக்கூற் றாளர் யாவரும் இன்மையின்
யாக்கை நில்லாது என்பதை உணர்ந்தோய்
(சிலம்பு.28:147-150)

என்று இவ்விளஞ்சேரல் இரும்பொறையின் அருஞ்செயலையும் எடுத்துக்கூறி அவரெல்லோரும் மாய்ந்தனர்காண் என்று நிலையாமை காட்டுவதை நோக்க, இவனே செங்குட்டுவனுக்கு முன்னோன் போல்கின்றான். இந்த முரண்பாட்டை எவ்வாறு நேர்படக் காண்பது? எனின், ஐம்பத்ததைந்து ஆண்டுகள் அரசு வீற்றிருந்தவன் செங்குட்டுவன்; பதினாறாண்டுகள் அரசமர்ந்தவன் இளஞ்சேரல் இரும்பொறை (பதி.பதி.5,9). செங்குட்டுவன் கடல்கலங்க வேலிட்டது அவன் ஆட்சிக் காலத்தின் முற்பாதியிலென்றும் கடவுட் பத்தினிக்குக் கற்கோள் கொண்டது பிற்பாதியிலென்றும் காணலாம். மாடலன் பேசும்போது செங்குட்டுவன் ஆட்சியாண்டுகளில் ஐம்பதைக் கடந்தவனென்பது,

வையங் காவல் பூண்டநின் நல்லியாண்டு
ஐயைந் திரட்டி சென்றதற் பின்னும்
அறக்கள வேள்வி செய்யாது யாங்கணும்
மறக்கள வேள்வி செய்வோய் ஆயினை
(சிலம்பு.28:129-132)

திருஞெமிர் அகலத்துச் செங்கோல் வேந்தே
நரைமுதிர் யாக்கை நீயும் கண்டனை
(சிலம்பு.28:157-158)

எனவரும் அவன் கூற்றுக்களாலேயே அறியவருகின்றது. ஆகவே, கி.பி.130 முதல் 185 முடியவென்று முனனே கணிக்கப்பெற்ற அவனாட்சியாண்டுகளில் ஏறத்தாழ

இருபதுக்கும் நாறபதுக்கும் இடையில், கி.பி.152 முதல் 168 முடிய இவ்விளஞ்சேரல் இரும்பொறையின் ஆட்சிக்காலம் பதினாறாண்டுகள் முடிந்து இவனும் முடிவு கண்டிருத்தல் கூடும். ஆதலால், இடையே இவனைப் பாடிய பெருங்குன்றூர்கிழார். இவனாட்சிக்கு முன்னே செங்குடுவன் கடல்கலங்க வேலிட்டதைக் கருதி, அவனது அருஞ்செயலை இவன் முன்னோர் செயல்களோடே முறைப்படுத்தி மொழிந்தார். பின்னர்ச் செங்குட்டுவனிடம் மாடலன் பேசுங்கால் இவ்விளஞ்சேரல் இரும்பொறை முடிவு கண்டானாதலால், அவ்வகையில் அவனுக்கு முன்னோனாக இவன் மொழியப் பெறுகின்றான். இவ்வாறன்றி இவற்றிற்கு அமைதி காணல அமையாது. எனவே, இவன் ஆட்சிக்காலம் கி.பி.152 முதல் 168 முடியவாய் அமையும்.

செங்குட்டுவனிடம பேசும் மாடலன் இளஞ்சேரல் இரும்பொறையை இறந்தவனாகக் குறிப்பதுபோல் இளஞ்சேரலைப் பாடும் பெருங்குன்றூர் கிழார் செங்குட்டுவனைக் காலங்கடந்தவனாகக் காட்டாமல், கொற்றம் எய்திய பெரியோர்" (பதி.88) 'கொற்றத் திருவின் உரவோர்' (பதி.90) என்ற முறையிலேயே வைத்து அவனது வெற்றிச் செயலை மட்டும் விளம்புதல் இங்கே குறிக்கொண்டு கருததத்தகும்.

2.16.4 பிற செய்திகள்

இளஞ்சேரல் இரும்பொறை தன்னைப் பத்துப் பாடலகளால பாடிய பெருங்குனறூர கிழார்க்குப் பரிசிலாக அவரறியாமலேயே ஊரும் மனையும் வளமிகப் படைத்து, அவறறில அழகும் இன்பமும் அமையுமாறு பரபப வேண்டிய பொருள்களையெல்லாம் பரப்பி, எண்ணற்ற அருங்கலச் செலவங்களோடே காவற் படையும் அமைத்துப் பின்னும் உவகையினால் முப்பத்தீராயிரம் பொற்காசளித்தான் என்று பதிகம பகர்கின்றது. ஆயின், தன்னை அவர் மிகுததுப் பாடப் பாடப் பாடுபுகழ் கொண்ட இவன், அவர்க்கு அளிக்கும் பரிசைக கையுள்ளதுபோற் காட்டிப் பொய்யுற விடுத்தானாகப புலவர் நொந்து பேசிப புறப்படும் நிகழ்வில் அவர் பாடிய புறப் பாடல்கள் இரண்டும் (புறம்.210, 211) அமைந்துள்ளன. ஆதலால் இவன் அவர்க்குப் பரிசில் கொடுப்பான்போல் நீட்டித்துத் தன்னிடமே அவரைப்

பலநாள் தங்கச் செய்து, அவ்விடைக்காலத்தில் அவரறியாதே ஊரும் மனையும் வளமிகப் படைத்து வைத்துப் பின் அவரை வெறுங்கையோடே விடுத்து வியப்பூட்டினான் என்று கருதலாம்.

217. **சேரமான் குட்டுவன் கோதை என்னும் கோக்கோதை மார்பன்**
(கி.பி.160-200)

தொண்டியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவனாக அத்தொண்டிப்புலவர் பொய்கையாரால் புறப்பாடல்கள் இரண்டிலே (48,49) பாராட்டிப் பாடப்பெற்றவன் சேரமான் கோக்கோதை மார்பன்.

கோதை மார்பின் கோதை யானும்
கோதையைப் புணர்ந்தோர் கோதை யானும்
மாக்கழி மலர்ந்த நெய்த லானும்
கள்நா றும்மே கானலந் தொண்டி
அஃதெம் ஊரே அவனெம் இறைவன் (புறம்.48)

என்று அவர் இவனைத் தொண்டியொடு சார்த்தி அறிமுகப் படுத்துவது காணலாம். அவர் பாடல்களால் இவனாட்டு நானில வளமும் இவன் வள்ளன்மையும் விளங்கும்.

மற்று, நக்கீரரின் அகப்பாடலொன்றிலும் இவன் செய்தியொன்று பேசப்படுகின்றது.

இழையணி யானைப் பழையன் மாறன்
மாடமலி மதுகிற் கூடல் ஆங்கண்
வெள்ளத் தானையொடு வேறுபுலத்து இறுத்த
கிள்ளி வளவன் நல்லமர் சாஅய்க்
கடும்பரிப் புரவியொடு களிறுபல வவ்வி
ஏதில் மன்னர் ஊர்க்கொளக்
கோதை மார்பன் உவகையிற் பெரிதே (அகம்.346)

எனவரும் இப்பாடலடிகளில் சோழன் கிள்ளிவளவனும் பாண்டியன் பழையன் மாறனும் இச்சேரமான் கோதை மார்பனும் ஒத்த காலத்தவரென்பதும் பழையன் மாறனைக் கிள்ளி வளவன் நற்போரில் சாயத்து அவனுடைய

குதிரைகளையும் யானைகளையும் கூடல் நகரோடே கொண்டபோது, இக்கோதை மார்பன் பெரிதும் உவகையுற்றானென்பதும் விளங்குகின்றன. ஆதலால், இச்சேரமான், பாண்டியன் பழையன் மாறனோடே பகைமையுற்றிருந்தமை புலனாம்.

இனி, இரவலர்க்கெளியவன், பகைவர்க்கரியவன் என்ற முறையில் கோனாடடு எறிச்சிலூர் மாடலன் மதுரைக்குமரனாரால் பாராட்டிப் பாடப்பெற்ற (புறம்.54) சேரமான் குட்டுவன் கோதையும் இந்தக் கோக்கோதை மார்பனே யென்று கொள்ளலாம். புறநானூற்றில் குட்டுவன் கோதையெனவும் கோக்கோதை மார்பனெனவும் வருகின்ற பெயர் வேறுபாடுகளைப் பாடல்களாலன்றி அவற்றின் அடிக்குறிப்புக்களாலேயே அறிகிறோம். பொய்கையார், மதுரைக்குமரனார் என்ற புலவரிருவரின் புறப்பாடல்கள் மூன்றிலுமே கோதையென்ற அளவிலேயே ஆட்சிப்பெற்றுள்ள பெயரொற்றுமை கொண்டு, குட்டுவன் கோதை- கோக்கோதை மார்பன் பெயர்களை ஒருங்கிணைத்து உணரலாம். கோதையினுடைய மார்பில் அணிந்த மாலை என்ற பொருளில், கோதை மார்பிற்கோதை என்று அமைந்த பொய்கையாரின் பாடலடியாக, அப்பாட்டுடைத் தலைவனாகிய இவன்பெயர் கோதைமார்பனெனக் குறிக்கப்பெற்றிருத்தல் கூடும். அதுவேயன்றி நக்கீரரின் அகப்பாடலிலும் (346) இப்பெயராட்சி இடம்பெற்றுள்ளது எண்ணத்தகும்.

இன்னும், சேரமான் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனுக்கு மகனென்று பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பதிகத்தால் அறியவருகின்ற குட்டுவன் சேரலும், குட்டுவன்கோதையாகிய இக்கோக்கோதை மார்பனே போல்கின்றான். கோதையென்பதும் சேரலென்பது போல் குடிப்பெயரே. சேரன் செங்குட்டுவனும் கோதையென்ற பெயரால் குறிக்கப் பெற்றதை, வானவர் தோன்றல் வாய்வாள் கோதை (25:3) எனவரும் சிலப்பதிகாரத்தால் அறியலாம். ஆகவே, குட்டுவன் சேரல்-குட்டுவன் கோதை பெயர்களையும் ஒருங்கிணைத்து உணர்தல் கூடும். அடுத்து, செங்குட்டுவனின் மைத்துனனான கிள்ளிவளவனின் கூடல் வெற்றிக்குக் குட்டுவன் கோதையாகிய கோக்கோதைமார்பன் உவகையுற்றமையாலும் இவனை அச் செங்குட்டுவனின் மகனாகிய குட்டுவஞ்சேரலென்று கொள்ளலாம்.

218. சேரமான் கணைக்கால் இரும்பொறை
(கிபி178-200)

குழவி யிறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆளன்று என்று வாளின் தப்பார்
தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாமிரந்து உண்ணும் அளவை
ஈன்ம ரோவிவ் வுலகத் தானே (புறம்.74)

எனவரும் புறநானூற்றுப் பாடலின் கீழ்,

"சேரமான் கணைக்கால் இரும்பொறை, சோழன்
செங்கணானோடு திருப்போர்ப்புறத்துப் பொருது
பற்றுக்கோட் பட்டு, குடவாயில் கோட்டத்துச்
சிறையில் கிடந்து, தண்ணீர் தாவென்று பெறாது,
பெயர்த்துப் பெற்றுக் கைக்கொண்டிருந்து,
உண்ணான் சொல்லித் துஞ்சிய பாட்டு"

என்ற குறிப்புக் காணப்படுகின்றது. இதனால் இச்சேரமானுக்கும் சோழன் செங்கணானுக்குமிடையே போரென்னும் ஊரின் புறத்தே போர் நிகழ்ந்ததென்பதும், அப்போரில் தோற்ற இவனை வென்ற சோழன் அகப்படுத்திக் கொண்டுபோய்த் தன் நகரான குடவாயிற் கோட்டத்துச் சிறையிலிட்டு அடைத்தானென்பதும், அங்கே இவன் நீர் வேட்கையுற்றுக் கேட்டவுடன் கிடைக்கப் பெறாது பின்னர்ப் பெற்ற நீரை மானத்தால் குடிக்காதே கையில் கொண்டிருந்து துஞ்சினானென்பதும் தெரிகின்றன.

அடுத்துப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான களவழி நாற்பதின் இறுதியில்,

சோழன் செங்கணானும்
சேரமான் கணைக்கால் இரும்பொறையும்
(திருப்) போர்ப்புறத்துப் பொருது
உடைந்துழிச் சேரமான் கணைக்கால்
இரும்பொறையைப் பற்றிக் கொண்டு
சோழன் சிறைவைத்துழிப் பொய்கையார்
களம்பாடி வீடு கொண்ட களவழி நாற்பது

என்ற குறிப்பும் காணப்படுகின்றது.

இவற்றுள் முந்தைய புறநானூற்றுப் பாடற் குறிப்பிலே, சிறைப்பட்ட இரும்பொறை, அங்கே நீர்வேட்கையுற்றுக் கேட்டவுடன் கிடைக்கப்பெறாது, காலந்தாழ்த்துக் கிடைத்த நீரை மானத்தாற்குடிக்காது கையில் வைத்தபடியே துஞ்சினானென்பதும், பின்னைய களவழி நாற்பதின் குறிப்பிலே பொய்கையார் களம்பாடிச் சேரமானைச் சோழனின் சிறையினின்றும் வீடுகொண்டாரென்பதும் ஒன்றுக்கொன்று முரண்படுவதுபோல் தோன்றுகின்றது. ஆயின், தமிழ் நாவலர் சரிதை என்ற நூல் மேற்குறித்த புறப்பாடலையே,

> 'சேரன் கணைக்கால் இரும்பொறை செங்கணானால்
> குணவாயிற் கோட்டத்துத் தளைப்பட்டபோது
> பொய்கையாருக்கு எழுதிவிடுத்த பாட்டு'

எனற குறிப்போடே கொடுப்பதுகொண்டு[35] முன்னிரு குறிப்புக்களின் இடைப்பட்ட முரண்பாட்டினை ஒருவாறு களைந்து அவற்றை ஒருங்கிணைத்து உணரலாம். இதனால் முதற் குறிப்பினில் வருகின்ற, 'துஞ்சிய' என்பதற்கு இறந்தவெனப் பொருள் கொள்ளாது, மயக்கமுற்ற (மூர்ச்சித்த) என்றே பொருள் கொள்ள வேண்டுமென்பதும் விளங்கும். புறநானூற்றுப் பதிப்பாசிரியர் உ.வே. சாமிநாதையரும் இவ்வாறே கருத்துரைத்துள்ளமை காணலாம்.[36] ஆகவே, இச்சேரமான் தன்னிலைமை குறித்து நொந்து பாடிய பாடலைப் பெற்ற பொய்கையார் தாமே சோழன் செங்கணானிடம் சென்று அவனது போர்க்கள வெற்றியைப் புனைந்து பாராட்டிக் களவழி நாற்பது பாடியதற்குப் பரிசிலாக இவனைச் சிறைவீடு செய்துகொண்டார் என்ற உண்மை உணரப்படும். இவ்வுண்மையை,

> களவ ழிக்கவிதை பொய்கையுரை செய்ய உதியன்
> கால்வ ழித்தளையை வெட்டியர சிட்ட அவனும்

என்று கலிங்கத்துப் பரணியும் (182)

> மேதக்க பொய்கைக் கவிகொண்டு வில்லவனைப்
> பாதத் தளைவிட்ட பார்த்திவனும் (விக்கிரம.14)

> .... அணங்கு
> படுத்துப் பொறையனைப் பொய்கைக்குப் பண்டு

கொடுத்துக் களவழிப்பாக் கொண்டோள்
(குலோத்துங்க.19-20)

நல்லவன் பொய்கை களவழி நாற்பதுக்கு
வில்லவன் கால்தளையை விட்டகோன்
(இராசராச.18)

என்றெல்லாம் மூவருலாவும்,

.... சேரமான்
தன்னடிக் கண்டு தளைவிடுத்தாய் ஏழ்தளையுன்
பொன்னடிக்குண் டென்பதென்ன புத்தியோ

என்று தமிழ்விடுதூதும் (78-79),

செய்கை யரிய களவழிப்பா முன்செய்த
பொய்கை யொருவனால் போந்தரமோ -சைய
மலைச்சிறைதீர் வாட்கண்டன் வெள்ளணிநாள்
வாழ்த்திக்
கொலைச் சிறைதீர் வேந்துக் குழாம்

என்றொரு பழம்பாடலும்[37] தொடர்ந்து கூறிவந்துள்ளன என்பது இங்கே குறிக்கொண்டு கருதத்தகும்.

2181. **கணையன், பொறையன்: கணைக்கால் இரும்பொறை. பெரும்பூட் சென்னி: செங்கணான்**

இனி, இச்சேரமான் கணைக்கால் இரும்பொறையும் சோழன் செங்கணானும் பொருத இடம் திருப்போர் என்னும் ஊரின் புறமென்ற குறிப்பிற்குக் களவழி நாற்பது நூலில் சான்றில்லையென்றும், "காவிரி நாடன் கழுமலம் கொண்ட நாள்" (களவழி.36) என வருதலால் இப்போரிலே சோழன் கழுமலமென்னும் ஊரைக் கைப்பற்றிக் கொண்டானென்பதே படுமென்றும் அறிஞர் புகல்வர்.[38] மற்றும், மேற்குறித்த புறப்பாடற்குறிப்பிலின்றிச் சங்க நூல்கள் பிறவற்றிலோ வேறு இடங்களிலோ கணைக்கால் இரும்பொறையைப் பற்றியும் சோழன் செங்கணானைப் பற்றியும் ஒரு குறிப்பும் காணப்பெறவில்லை யென்பர்.[39] ஆயின், சங்க இலக்கியங்களிலேயே அகநானூற்றில் குடவாயிற் கீரத்தனார் பாடலொன்று இவ்வெல்லாக் குறிப்பிற்கும் ஏற்புடைச் சான்றாய் அமைந்துள்ளது.

நன்னன் ஏற்றை நறும்பூண் அத்தி
துன்னருங் கடுந்திறல் கங்கண் கட்டி
பொன்னணி வல்வில் புன்றுறை என்றாங்கு
அன்றவா குழீஇய அளப்பருங் கட்டூர்ப்
பருந்துபடப் பண்ணிப் பழையன் பட்டெனக்
கண்டது நோனாமை ஆகித திண்டேர்க்
கணையன் அகப்படக் கழுமலம் தந்த
பிணையலங் கண்ணிப் பெரும்பூட் சென்னி
(அகம்.44)

எனவரும் இவ்வகப்பாடலடிகளில் பழையன் குறிக்கப் பெறுதலால், சங்க இலக்கியங்களின் பல பாடல்களில் (அகம்.186, 326; நற்.10) அவனுடைய ஊராகப் கூறப்பெறுகின்ற போர் பற்றிய குறிப்புப் பொருந்தும். களவழி நாற்பதில் சோழன் கழுமலத்தைக் கைபபற்றினான் எனவரும் குறிப்பு இவ்வகப் பாடலிலும் வந்துள்ளது. எனவே, கணையன்தான் கணைக்கால் இரும்பொறையென்றும் பொரும்பூட்சென்னி தான் செங்கணானென்றும் கருதுதல் தவறாகாது. இப்பாடலில் சேரமானைத் 'திண்டேர்க் கணையன்' எனக் குறிப்பிடும் இப்புலவரே மற்றோர் அகப்பாடலில், 'திண்டேர்ப் பொறையன்' (அகம்.60) என்று குறிப்பதும் கருதத்தகும்.

சேரவேந்தருள் இப்புலவரால் பாடப்பெற்றவர் வேறு எவருமிலர் என்பதையும் இங்கே எண்ணிப்பார்க்கலாம். புறநானூற்றுக் குறிப்பின்படி, குடவாயிற் கோட்டத்துச் சிறைவைக்கப்பட்ட இவன் செய்தியை அகப்பாடலில் அமைத்த இவரும் குடவாயிற் புலவரேயென்பதையும் இங்குக் குறிக்கொண்டு நோக்கலாம்.

இன்னும் களவழி நாற்பது பாடிய பொய்கையார் தாமே இப்பொறையனைப் பாடிய சங்கப் பாடல் ஒன்றும் நற்றினையில் காணப்படுகின்றது.

கானலந் தொண்டிப் பொருநன் வெல்வேல்
தெறலருந் தானைப் பொறையன் (நற்.18)

என்னும் அப்பாடலில் தொண்டி நகரோடே இவன் தொடர்புறுத்தப்பெறுவதும், 'திண்டேர்ப் பொறையன் தொண்டி' (அகம்.60) என்று குடவாயிற் கீரத்தனார்

குறிப்பிடுவதும் ஊரின் சார்பினால் ஒருங்கிணைதல் உணரப்படும். பொய்கையாரும் தொண்டி நகரினர் என்பது 'கானலந் தொண்டி அஃதெம் ஊரே' (புறம்.48) என்ற அவரது பாடலடியால் அறியப்படும்.

இனி, சோழன் செங்கணானும் வரலாற்று இலக்கியங்களில் அறியப்படாதவனல்லன்.

> சிலந்தியும் ஆனைக் காவில் திருநிழற் பந்தர் செய்து
> உலந்தவண் இறந்த போதே கோச்செங்க
> ணானு மாகக்
> கலந்தநீர்க் காவி ரிசூழ் சோணாட்டுச் சோழ ர் தங்கள்
> குலந்தனில் பிறப்பித் திட்டார் குறுக்கைவீ
> ரட்ட னாரே
> (4:49:4)

என்று திருநாவுக்கரசர் தேவாரத்தில் கோச்செங்கணான் என்னும் பெயரோடே இவன் குறிக்கப்பெறுகின்றான். இக்குறிப்பினை அடியொற்றிச் சுந்தரர், 'தென்னவனாய் உலகாண்ட செங்கண னார்க்கு அடியேன்' (7:39:11) எனத் திருத்தொண்டத்தொகை பாட, சேக்கிழாரும் திருத்தொண்டர் புராணத்திலே கோச்செங்கட் சோழ நாயனார் புராணமெனத் தனியொரு புராணமே பாடியுள்ளார்.

இனி, குலோத்துங்க சோழனுலாவில் களவழிப்பாக் கொண்டோன் எனக் குறிக்கப்பெறுபவனைத் தஞ்சை விசயாலயன் என்று கூறும் பழையவுரையைச் சான்று காட்டி, இஃது உண்மையாய் இருக்கலாமோவென மயங்குவாருமுளர்.[40] ஆயின், அதே உலாவின் அடுத்த கண்ணியில்,

> சீறும் செருவில் திருமார்பில் தொண்ணூறும்
> ஆறும் படுதழும்பின் ஆகத்தோன் (குலோத்துங்க. 21)

என்று விசயாலயன் குறிக்கப்பெறுகின்றான். மற்று, அவ்விசயாலயனை அவ்வுரையாசிரியர் இராசராச தேவன என்கின்றார். எனவே, இவ்வகையில் அவரது உரையின் பொருத்தமின்மை புலனாம். ஆதலால் அதனைப் புரிந்து கொள்ளாமல் மயங்குவதும் பொருளற்ற மயக்கமே.

மூவருலாவின் ஒவ்வோருலாவிலும் இச்செங்கணானும் விசயாலயனும் தனித்தனியே அடுத்தடுத்துப் பாடப் பெற்றுள்ளனர். ஆகவே, இவருள் ஒருவரை மற்றொருவராகக் கொண்டு மயங்குதற்கு எவ்வகையிலும் இயைபில்லை.

எனவே, இச்சேரமான் கணைக்கால் இரும்பொறையும் சோழன் செங்கணானும் முதலில் போர்ப்புறத்தே பொருத போரில், போர் கிழவோனும் சோழர் மறவனுமான பழையன், சேரன் படைத்தலைவர்களான நன்னன் முதலானோரைக் கொன்று தானும் விழப்புண் பட்டு மாண்டானாக, அதனைப் பொறாத பெரும்பூட்சென்னியாகிய சோழன் செங்கணான் சினந்தெழுந்து, சேரமான் கணைக்கால் இரும்பொறையைப் போரில் பிணித்துக் கொண்டு, அவனுடைய சேரநாட்டுக் கழுமலத்தையும் கைப்பற்றினான் என்று கீரத்தனாரின் அகப்பாடல் வழி அறியலாம்.

இனி, பொறையனென்ற இச்சேரமான் கணைக்கால் இரும்பொறை தன் பகைவனான மூவனென்பானைப் போரிலே வென்று, அவனது பல்லைப் பிடுங்கிக் கொண்டுபோய்த் தன்னுடைய தொண்டி நகரத்து அரண்மனை வாயிற்கதவில் பதித்திருந்தானென்ற வெற்றிச் செய்தியொன்றைப் பொய்கையார் குறித்துள்ளார் (நற்.18) இவனால் வெல்லப்பட்ட அந்த மூவனே பெருந்தலைச் சாத்தனார்க்குப பரிசில் நீட்டித்துக் கொடாது விடுத்த கோமான் போலும் (புறம்.209).

அடிக்குறிப்புக்கள்

1. துடிசைகிழார் அ. சிதம்பரனார் - சேரர்வரலாறு, தோற்றுவாய, ப.7.
2. மகாவித்துவான் இரா. இராகவையங்கார் - தமிழ் வரலாறு, பக்.248.250.
3. John Ralston Marr, The Eight Anthologies, pp.273-274.
4. துடிசைகிழார அ சிதம்பரனார்.சேரர் வரலாறு, பக்.20.21.
5. Mail dated 28-11-1945;

நோக்கு: துடிசைகிழார் அ. சிதம்பரனார்-சேரர் வரலாறு, ப.21.

6. Mysore and Coorg from the Inscriptions, p.21:
நோக்கு: மு. இராகவையங்கார்-சேரன் செங்குட்டுவன், ப.11.

7. மயிலை சீனி. வேங்கடசாமி-சேரன் செங்குட்டுவன், ப.11.
நோக்கு: பேரா.சி.பாலசுப்பிரமணியன்- சேரநாடுடுச் செந்தமிழ் இலக்கியங்கள், ப.38.

8. மேலவர்-மேலது, பக்.38.

9. மு. இராகவையங்கார்-சேரர் செங்குட்டுவன், ப.16.

10. துடிசைகிழார் அ. சிதம்பரனார்-சேரர் வரலாறு, பக். 55-57.

11. பேரா.ம. பசுவலிங்கம்-சங்க கால வஞ்சி.ப.26.

12. மேலவர்-மேலது, ப.32.

13. பேரா. சி.பாலசுப்பிரமணியன்-சேரநாட்டுச் செந்தமிழ் இலக்கியங்கள், பக். 40-41.

14 உ.வே. சாமிநாதையர்-பதிற்றுப்பத்து 70 - குறிப்புரை.

15. பேரா. ம. பசுவலிங்கம் - சங்ககால வஞ்சி, ப.28.

16. Malabar Manual, Vol.I. pp.647-666;
நோக்கு: பேரா. ம. பசுவலிங்கம் - சங்ககால வஞ்சி.ப.28.

17. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை -பண்டைநாளைச் சேரமன்னர் வரலாறு, பக.283-284.

18. துடிசைகிழார் அ. சிதம்பரனார்-சேரர் வரலாறு, பக்.175-190

19. K.G.Sesha Aiyar- Cera kings of the Sangam peirod, pp.62-66.

20. K.N.Sivaraja Pillai-The Chronology of the Early Tamils,p.149.

21. நோக்கு: நச்சினார்க்கினியர்- தொல்காப்பியம், பொருளதிகாரம், நூ.36 உரை.

22. துடிசைகிழார் அ. சிதம்பரனார் - சேரர் வரலாறு, பக்.72-73;
கா. அப்பாத்துரை-தென்னாட்டுப போர்க்களங்கள், ப.78;
பேரா.சி. பாலசுப்பிரமணியன்-சேரநாட்டுச் செநதமிழ் இலக்கியங்கள், ப.52.

23. மயிலை சீனி.வேங்கடசாமி-சேரன்செங்குட்டுவன், பக்.26-27;
நோக்கு: பேரா.சி. பாலசுப்பிரமணியன்-சேரநாட்டுச் செந்தமிழ் இலக்கியங்கள், பக்.50-51.

24. மு.இராகவையங்கார்-சேரன் செங்குட்டுவன், பக்.28-29.

25. நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் -சிலப்பதிகாரம், 27:118 உரை: துடிசை கிழார் அ.சிதம்பரனார்-சேரர் வரலாறு, பக்.75-76.

26. கா. அப்பாத்துரை-தென்னாட்டுப் போர்க்களங்கள், பக்.80-81; பேரா.சி.பாலசுப்பிரமணியன்-சேரநாட்டுச் செந்தமிழ் இலக்கியங்கள், ப.56.

27 துடிசைகிழார் அ. சிதம்பரனார்-சேரர் வரலாறு, பக் 80.

28. V. Kanakasabhai-The Tamils Eighteen hundred years ago, pp.95-96.

29 கா. அப்பாத்துரை- தென்னாட்டுப்போர்க்களங்கள், பக.86.

30. மு. இராகவையங்கார் - சேரன் செங்குட்டுவன், பக 109-110.

31 கா அப்பாத்துரை - தென்னாட்டுப் போர்ககளங்கள், ப.87.

32. V.A. Smith-Early History of India, p.452.
- vide.N.Subrahmanian-Sangam Polity, p.28.

33 மு இராகவையங்கார் -சேரன் செங்குட்டுவன், ப.14.

34. மேலவர்- மேலது, ப 14.

35 நோகசு: பதினெண்கீழ்ககணகசு, மர்ரே பதிப்பு, ப 407

36 உ வே சாமிநாதையர்-புறநானூறு, 177- அடிகுறிப்பு; சங்கததமிழும் பிற்காலத் தமிழும், பக்.94.

37. நச்சினார்க்கினியர்-தொல்காப்பியப் பொருளதிகாரம், நூ.90 உரைமேற்கோள்.

38 பதினெண் கீழக்கணகசு, மர்ரே பதிப்பு, ப.406.

39 மேலது, ப 407.

40. மேலது, ப. 409

3. பாண்டிய வேந்தர் வரலாறு

தமிழகத்து மூவேந்தர் குடிமரபின் தொன்மை முறையில் சேரர்க்கடுத்து இரண்டாம் நிலையில் வருவது பாண்டியர் குடியேயாம்.

பாண்டிய வேந்தருடைய பழம் பெரும் சிறப்புகளுள் அன்னோர் சங்கங்கள் நிறுவித் தமிழ் வளர்த்த சிறப்பே தலையாயதாம். இறையனார் அகப்பொருளுரைப் பாயிரத்தினாலும், சிலப்பதிகாரத்து வேனிற்காதை முதலிரண்டு அடிகளுக்கு அமைந்த அடியார்க்கு நல்லாருரையினாலும் அறிய வருகின்ற முச்சங்க வரலாற்றுள் தலைச்சங்க காலத்துப் பாண்டியர் காய்சின வழுதி முதலாகக் கடுங்கோன் ஈறாக எண்பத்தொன்பதின்மரென்றும் இடைச்சங்கத்துப் பாண்டியர் வெண்டேர்ச் செழியன் முதல் முடத்திருமாறன் முடிய ஐம்பத்தொன்பதின்மரென்றும் கடைச்சங்க காலத்துப் பாண்டியர் முடத்திருமாறன் முதல் உக்கிரப்பெருவழுதி முடிய நாற்பத்தொன்பதின்மரென்றும் அறிகிறோம். ஆயின், இப்போது கிடைத்துள்ள கடைச்சங்க இலக்கியங்களால் பதினறுவரையொழிய ஏனையோர் பெயரும் வரலாறும் அறியக் கூடவில்லை. அறியவந்தோர் வரலாறுகளின் அளவும் குறைவே. அவற்றை இனிக் காண்போம்.

3.1 நிலந்தரு திருவின் பாண்டியன்

இன்றுள்ள சங்க இலக்கியங்களால் மட்டுமன்றி அவற்றின் முந்தைய தொல்காப்பியப் பாயிரத்தினாலும் அறியப்படுமளவில் நிலந்தரு திருவின் பாண்டியனென்ற

முந்நீர் விழவின் நெடியோனே பாண்டிய வேந்தருள் முன்னோனாக வருகின்றான். இவனது அவைக்களத்திலேயே தொல்காப்பியர் தம் இலக்கண நூல் தொல்காப்பியத்தை அரங்கேற்றினாரென்று அந்நூற் பாயிரம் பகர்கின்றது. தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கமென மூன்று சங்கங்கள் நிறுவித் தமிழ் வளர்த்தார் பாண்டியரென்று, முச்சங்க வரலாறு பேசும் முதல் நூலான இறையனார் களவியலுரை தொல்காப்பியரை இடைச்சங்கப் புலவரென்றும் தொல்காப்பியத்தை இடைச்சங்க நூலென்றும் கடடுரைக்கக் காண்கிறோம். அதற்கேற்ப,

> ". . . இரண்டாம் ஊழியதாகிய கபாடபுரத்தின் இடைச்சங்கத்துத் தொல்காப்பியம் புலப்படுத்திய மாகீர்த்தியாகிய நிலந்தரு திருவின் பாண்டியன் அவைக்களத்து அகத்தியனாரும் தொல்காப்பிய னாரும்"

எனவாங்குச சிலப்பதிகார உரைப்பாயிரத்தில் அவ்வெலலாவறறையும் இயைத்து மொழிவார் அடியார்க்கு நலலார் அவற்றின் வழிப்பட்டு இவ்வேந்தன் இடைசசங்கத்துப் பாண்டியன் என்று கருதலாமாயின், அவ்வடியார்கு நல்லார் தாமே, பின்னர் வேனிறகாதையுரையில்,

> ". . . முதலூழியிறுதிக்கண் தென்மதுரையகத்துத் தலைச்சங்கத்து . . . . . கவியரங்கேறினார் எழுவர் பாண்டியருள் ஒருவன் சயமாகீர்த்தியனாகிய நிலந்தரு திருவின பாண்டியன் தொல்காப்பியம் புலபபடுத்து இரீஇனான். அக்காலத்து அவர்நாட்டு . . . தடநீர்க்குமரி வடபெருங்கோட்டின் காறும் கடல கொண்டொழிதலால்"

என்று இவனைத் தலைச்சங்கத்துப் பாண்டியனாக நிறுததுகின்றார். முன்னர் இடைச்சங்கத்தவனென்றும் பினனர்த் தலைச்சங்கத்தவனென்றும் கூறுகின்ற இவருரைப் பகுதிகள் தடுமாற்றத்தைத் தருகின்றன; ஆயினும், `முதலூழியிறுதிக்கண் தலைச்சங்கத்துத் தொல்காப்பியம் புலபபடுதது இரீஇனான். அக்காலத்துக் கடல் கொண்டொழிதலால. .' எனவரும் குறிப்பினைக் கொண்டு இரண்டாம் ஊழியதாகிய இடைச்சங்கத் தொடக்கத்தினை

அதனோடே இயைத்து அவருரைக் கருத்தின் உண்மையை உணர்தல் கூடும். அஃதாவது முதலூழி இறுதியில் கடல்கொண்டமை கூறுதலால் தென்மதுரைத் தலைச்சங்கத்து முடிவும் அதனையடுத்த கபாடபுரத்து இடைச்சங்கத் தோற்றமும் துலக்கமாம். ஆகவே, நிலந்தரு திருவின் பாண்டியன் தலைச்சங்கத்திலே தொல்காப்பியத்தைப் புலப்படுத்து இருத்தியவுடன் தென்மதுரையுட்படக் கடல்கோள் நேர்ந்து அச்சங்கமும் அழிவுற்றதாக, இவன் அங்கிருந்து சங்கத்தாரைக் காப்பாற்றிக் கொண்டுவந்து, கபாடபுரத்திலே இடைச்சங்கம் ஏற்படுத்தி அரங்கேற்றினான் என்பதாக அவருரைகட்கு அமைதி காணலாம். முதலூழி, இரண்டாமூழி என்றவாறு அவர் கூறும் காலக்கணக்கையும் ஊழி முடிவில் கடல்கொள்ளுமென்ற கருத்தில் அக்கடல்கோளை எல்லையாகக் கொண்ட கால அளவுகளாகக் கருதலாம்.

311. தகைமை சான்றோன்

நிலந்தரு திருவின் பாண்டியனான இவன் தலைச்சங்கத்துப் புரவலர்களான பாண்டிய வேந்தர் எண்பத்தொன்பதின்மருள்ளும், கல்விச் சிறப்பினால் கவியரங்கேறிய புலமைப் பாண்டியர் எழுவருள் ஒருவனென்று அடியார்க்கு நல்லார் உரையால் அறியப்படுகின்றான். ஆதலால் அவ்வகைப்பட்ட இவனது கல்வித்தகைமை கருதப்படும். அத்தகைய இவன் தகைமை, தன் குலத்துப் பின்னோனான பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்குக் காஞ்சிப் பொருள் காட்டிய மாங்குடி மருதனாரால் சிறப்புற எடுத்துக் காட்டப் பெறுகின்றது.

> தொல்லாணை நல்லாசிரியர்
> புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்
> நிலந்தரு திருவின் நெடியோன் போல
> வியப்பும் சால்பும் செம்மை சான்றோர்
> பலர்வாய்ப் புகரறு சிறப்பின் தோன்றி (மது 761-765)

விளங்குமாறு அந்நெடுஞ்செழியன் அறிவுறுத்தப் பெறுவதில், இவனது வியக்கத்தக்க மேம்பாடும் சங்கச் சால்பும் பிறவும் நன்கு குறித்துக் காட்டப்படுதல் காணலாம்.

312. முந்நீர் விழவின் நெடியோன்: வடிம்பலம்பநின்ற பாண்டியன்

பின்னோனான பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை வாழ்த்திப் பாடவந்த நெட்டிமையார், அவனை அவன் முன்னோனான முந்நீர் விழவின் நெடியோனென்னும் இவன் வெட்டியுண்டாக்கிய பஃறுளியாற்று மணலினும் பலகாலம் வாழுமாறு வாழ்த்துகின்ற முறையில் இயன்ற பாடலொன்று புறநானூற்றிலே அமைந்துள்ளது.

எங்கோ வாழிய குடுமி தன்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே (புறம்.9)

எனவரும் இதனுள், முந்நீர் விழவின் நெடியோன் நன்னீர்ப் பஃறுளி என்பதற்கு,

"முந்நீர்க் கடல்தெய்வத்திற்கு எடுத்த
விழாவினையுடைய நெடியோனால்
உளதாக்கப்பட்ட நலல நீரையுடைய பஃறுளி"

எனப் பொழிப்புரைக்கும் பழையவுரைகாரர் பின்னும்,

"முந்நீர்ககண் வடிம்பலம்ப நின்றானென்ற
வியபபால் நெடியோனென்றார் என்ப"

எனறு விளக்கவுரையும் தருவார். இவ்விளக்கவுரையின் வழியில நச்சினார்க்கினியரும், மதுரைக் காஞ்சியில் வருகின்ற நெடியோனென்ற பெயர்க்கு, வடிவம்பலம்ப நின்ற பாணடியன் என்றே பொருளெழுதக் காணலாம் (மது 61 உரை). மறறும,

"ஆழி வடிம்பலம்ப நினறான்" 1
"கடலவடிம் பலம்ப நினற கைதவன்"2

என்றவாறு பிறவிலகியங்களில வரும் பெயராட்சிகளும் காணத்தகும். எனவே, இந்நெடியோன் கடல்தெய்வத்திற்கு விழாவெடுத்ததனால் முந்நீர் விழவின நெடியோனென்றும்,

அவ் விழாவின்போது கடலலைகள் தன் கால்வடிம்பினை அலம்புமாறு நின்றதனால் வடிம்பலம்ப நின்ற பாண்டியனென்றும் பெயர்பெற்றானென விளங்கும். ஆயினும், இவன் கடல்தெய்வத்திற்குச் செய்ததாக வருகிற விழா மட்டும் இன்னதென்று விளங்கவில்லை.

31.3. சிலப்பதிகார விளக்கம்

இனி, இவ்வடிம்பலம்ப நின்ற பாண்டியனான நெடியோனைக் குறித்த மேற்செய்திகளைச் சிலப்பதிகாரமும் செப்புகின்றது.

> அடியின் தன்னளவு அரசர்க்கு உணர்த்தி
> வடிவேல் எறிந்த வான்பகை பொறாது
> பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
> குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
> வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
> தென்திசை யாண்ட தென்னவன் வாழி
> (சிலம்பு 11: 17-22)

என்ற அடிகளில் இவன் தன் பெருமையின் அளவினை உலக மன்னர்களுக்கு உணர்த்துவானாய்க் கடலலைகளைக் காலால் மிதித்து அவ்வலைகள் தன்னடியைக கழுவுமாறு நின்று, அக்கடலகத்தே வேலெறிந்தானென்பதும், அவ்வாறு இவன் வேலெறிந்த பகைமையைப் பொறாது இவனாட்டுப் பஃறுளி யாற்றுடனே பல பக்கமலைகளையுடைய குமரிமலையினையும் அக்கடல் கொண்டொளித்ததென்பதும், அம்முறையில்இழந்த நாட்டிற்கீடாக இவன் வடநாட்டின்மேற் படையெடுத்துக் கங்கையாற்றையும் இமயமலையையும் கைக்கொண்டு தென்னாட்டிலிருந்தே ஆண்டானென்பதும் கூறப்படுகின்றன

31.4. திருவிளையாடற் புராண விளக்கம்

இந்தச் சிலப்பதிகார விளக்கங்களுள், இவன் தன் மேம்பாட்டினை வேற்றரசர்க்கு வெளிப்படுத்திக் கடலலைகள் தன்னடிகளை அலம்புமாறு நின்று அதனிடையே வடிவேலெறிந்தானென்ற வழக்கம், பின்னாளில் சேரமான் கடல் பிறக்கோட்டிய வேல்கெழுகுட்டுவன் வரலாற்றிலும் காணப்படுவதே ஆயினும், மிகப் பிற்காலத்துப்

புராணமரபிலே இது வேறுவகையாக விளக்கப்பட்டதைத் திருவிளையாடற புராணங்களில் காண்கிறோம். அவற்றில இந்நெடியோன பெயரும உக்கிரவனமன (உக்கிரகுமாரப் பாண்டியன) என்று மாறி வருகின்றது இவவுக்கிரவனமனிடம அழுக்காறுற்ற இந்திரன இவனாட்டை அழிக்குமாறு வருணனை ஏவினனென்றும், கடல தெயவமாகிய அவவருணன கருததுபபடியே அககடல பொங்கியெழுந்து இவனுடைய மதுரையை அழிக்க வந்ததென்றும், சித்தராயக கனவில தோன்றிய சிவபெருமான மொழிபபடி சின்நதெழுந்த இபபாண்டியன தனனிடம அப்பெருமான அருளியிருந்த வேறபடையை விடுததுக கடலை வற்றச செயதானென்றும், அவவாறு வற்றிய கடலின அலைகள தன காலவடிமபை அலமப நின்றமையால இவனுககு வடிமபலமப நின்ற பாண்டியனென்று பெயராயிற்றென்றும அபபுராணங்கள பேசுகின்றன[3]

இவன வேலெறிந்த பகை பொறாது இவனாட்டைக கடல கொண்டதென்ற பழந்தமிழக் கருத்துககு மாறாகக கடலகொள்ள வந்ததையெதிர்ததே இவன வேலெறிந்து வற்றச செயதானென்னும் புராணக கருததின போககும காணத்தகும

315 அடியார்க்கு நல்லாரின் பொருந்தாத விளக்கம்

இனி, இவவடிமபலமப நின்ற பாண்டியன தனனாட்டின இழந்த பகுதிகளுககீடாக வடதிசைக சங்கையையும இமையத்தையும வென்று ஆண்டானென்ற சிலபபதிகார மூலககருததினோடே உரையாசிரியராகிய அடியாரககு நல்லார், தென்திசை யாண்ட தென்னவன என்பதற்கு மற்றொரு விளககமும தருவார அஃதாவது,

"அங்ஙனமாகிய நிலககுறைககுச் சோழ நாட்டு எல்லை யிலே முததூரக கூற்றமும சேரமானாட்டுக குணடூரக கூற்றமும என்னுமிவற்றை இறந்த நாட்டிறகாக ஆண்ட தென்னவன"

என்பதாம அவர அவவாறு உரைபபதற்குக கலித்தொகைப பெயரொன்று காரணமானது போலும

மலிதிரை ஊாந்துதன் மணகடல வெளவலின
மெலிவின்றி மேறசெனறு மேவாாநாடு இடமபடப
புலியொடு வில்நீகிப புகழ்பொறிதத கிளாகெணடை
வலியினான வணகிய வாடாசசீர்த தென்னவன
(கலி 104)

எனவரும இம்முல்லைகலிப பாடலிலே சோழ நாடடிடஙகளையும சேரநாடடிடஙகளையும வெனறு அவவவ்விடங்களிலுளள புலிக கொடி விற்கொடிகளை நீகி, தன மீனக் கொடியை நாட்டியாண்ட தென்னவன செயதி பாடப்பட்டிருததலைக கொணடே அடியார்க்கு நல்லார் அவ்வாறு உரைவிளகமம வரைந்தமை உணரபபடும். ஆயினும், அவரே வேனிற்காதைத தொடககததில உரைக்குமாறு, அகாலததுப பாணடியா நாடடுத தென்பாலி முகததிறகு வடவெலலையாகிய பஃறுளியெனனும் ஆறறிறகும குமரியெனனும ஆறறிற்குமிடையே எழுநூறறுக காவத ஆறும், இவறறின நீாமலி வானென மலிநத ஏழ்தெஙக நாடும், ஏழமதுரை நாடும, ஏழமுன்பாலை நாடும, ஏழ்பினபாலை நாடும, ஏழ்குனற நாடும, ஏழ்குணகரை நாடும, ஏழ்குறுமபனைநாடும் எனனும் இந்த நாறபத்தொனபது நாடும, குமரி, கொலலம முதலிய பனமலை நாடுஙகாடும நதியும் பதியும தடநீாக் குமரி வடபெருங்கோட்டின்காறும கடல கொணடொழிததன அவறறையுழநத தெனனவன், சோழ நாடடெலலையிலே முததூர்க கூறறமும சேரநாடடெலலையிலே குண்டூர்க கூறறமுமெனனும இவறறை மடடும் கைப்பற்றிக் கொணடால, இவை அவவிழந்த நிலகுறைககு ஈடாகி அமையுமோ? அவ்வளவு பெருநிலததை இழந்துவிடடு இவவளவு சிறுநிலததை வென்று பிடிதத தெனனவன வெறறி புலவர்பாடும வெறறியாமோ? ஆகாதெனபதைச சிறுபிளளையும சொலலுமாதலால, அடியாாககு நலலார் கூறும் இந்த மேல விளககம் இஙகே பொருநதாமை நனகு புலனாகும்

ஆயின, மேறகுறிதத கலிததொகைப் பாடற் கருத்தும் அதன வழிபபடட அடியாாககு நலலாரின் உரை விளககமும உணர்ததுகினற உண்மையை எவவாறு காண்பது எனின், பேராசிரியர் க வெளளைவாரணனார் கூறுமாறு[4] அவை இடைசசஙகதது இறுதியில ஏறபடட இரணடாவது கடலகோளையொடடி நிகழந்தவறறைக கூறுவனவாம் பஃறுளியாறறுடன் பன்மலையடுகஙகளையுடைய

குமரிக்கோடு (மலை) காறும் திகழ்ந்த பெருநிலப் பகுதியைத் தலைச்சங்கத்து முதலூழியிறுதியில் நிகழ்ந்த கடல்கோளும், குமரிமலைக்கும் குமரியாற்றிற்கும் இடையில் திகழ்ந்த சிறுநிலப்பகுதியை இடைச்சங்கத்து இரண்டாமூழியிறுதியில் நிகழ்ந்த கடல்கோளும் கொண்டன என்ற முறையில் பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் விளக்குவார்.[5] அம்முறையே முதலூழியிறுதிக் கடல்கோளில் இழந்த பஃறுளி யாற்றுக்கும் குமரி மலைக்கும் ஈடாக வடதிசைக் கங்கையாற்றையும் இமைய மலையையும் கொண்டு தென்றிசை ஆண்ட தென்னவன் தலைச்சங்கத்து இறுதியிலும் இடைச்சங்கத்து முதலிலும் விளங்கிய நிலந்தரு திருவின் பாண்டியனாவான்; அடுத்த இரண்டாமூழியிறுதிக் கடல்கோளில் தோற்ற நிலப்பரப்பிற்கீடாகச் சோழ நாட்டு முத்தூர்க் கூற்றத்தையும் சேரநாட்டுக் குண்டூர்க் கூற்றத்தையும் வென்றாண்ட தென்னவன் இடைச்சங்கத்து இறுதியிலும் கடைச்சங்கத்து முதலிலும் விளங்கிய முடத்திருமாறனாவான் என்று அறியலாம்.

ஆயின், இவ்விரு கடல்கோளையும் ஒன்றாகக் கருதிய மயக்கத்தில் இருவேறு காலத்தவரான நிலந்தரு திருவின் பாண்டியன் பெயரையும் முடத்திருமாறன் பெயரையும் பொருளளவில் ஒருங்கிணைத்து இருவரையும் ஒருவனென்பார் இரா. இராகவையங்கார்.[6] அவரது மயக்க மொழிக்கு மாறான முன்னைய சான்றுகளையெல்லாம் முறைப்படி காட்டி மறுக்கும் பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் முடிவாக, வேறு வேறு காலத்தினராகிய இவ்விரு பெருவேந்தரையும் ஒருவராகக் கொள்ளுதல் எவ்வாற்றானும் பொருந்துவதன்றாம்[7] என்று அறுதியிட்டு அறைகுவார்.

316. பெயரும் புகழும்

இனி, இப்பாண்டியன் தன்காலத்து நிகழ்ந்த கடல் கோலில், தான் இழந்துவிட்ட நிலத்திற்கு ஈடாக வடதிசையிற் படையெடுத்துக் கங்கையாற்றையும் இமைய மலையையும் கைப்பற்றித் தந்தமையாலேயே நிலந்தரு திருவின் பாண்டியன் எனப் பெயர் பெற்றமை புலனாம். தொல்காப்பியப் பாயிரமும் சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரையும் இவனை இவ்வாறே குறிக்கின்றமை கண்டோம். மதுரைக் காஞ்சியிலும் இவன்,

நிலந்தந்த பேருதவிப்
பொலந்தார் மார்பின் நெடியோன் (மது.60-61)

எனவும்,

நிலந்தரு திருவின் நெடியோன் (மது.763)

எனவும் இப்பெயரோடே இயம்பப் பெறகின்றான். மற்று, மாகீர்த்தியாகிய நிலந்தரு திருவின் பாண்டியன் (சிலம்பு உரைப்பாயிரம்) என்றும், சமயமாகீர்த்தியனாகிய நிலந்தரு திருவின் பாண்டியன் (சிலம்பு வேனிற் காதையுரை) என்றும் வருகின்ற அடியார்க்கு நல்லார் குறிப்புக்களும், 'பாண்டியன் மாகீர்த்தி' (தொல்.பாயிரவுரை) எனவரும் இளம்பூரணர் மற்றும் நச்சினார்க்கினியர் குறிப்பும், மாகீர்த்தி, சயமாகீர்த்தி என்று இவனுக்கமைந்த மற்றுமிரு பெயர் வடிவங்களைப் புலப்படுத்துகின்றன. சயமாகீர்த்தியென்பது நிலந்தரு திருவின் பாண்டியன் என்னும் சிறப்புப் பெயரின் மொழி பெயர்ப்பேயாம் என்பார் பேராசிரியர் க. வெள்ளை வாரணனார்.[8] இவற்றால் இவனுடைய சிறப்புப் பெயர்களேயன்றி இயற்பெயர் இன்னதென்றும் விளங்கவில்லை. அவ்வளவிற்கு இவன் சிறப்பு பெயர்களால் புகழ்பெற்று விளங்கினான் என்பது புலனாம்.

317. பிற வெற்றிகள்

இனி, சிலப்பதிகாரத்தில் எடுத்துப் பாராட்டப் பெறுகின்ற இவனுடைய மற்றுமிரு வெற்றிச் செயல்களைக் காணலாம்.

திங்கட் செல்வன் திருக்குலம் விளங்கச்
செங்கண் ஆயிரத்தோன் திறல்விளங்கு ஆரம்
பொங்கொளி மார்பிற் பூண்டோன் வாழி
முடிவளை உடைத்தோன் முதல்வன் சென்னியென்று
இடியுடைப் பெருமழை எய்தாது ஏகப்
பிழையா விளையுட் பெருவளம் சுரப்ப
மழைபிணித்து ஆண்ட மன்னவன் வாழ்க
(சிலம்பு 11:23-29)

என்று இப்பாராட்டு அமைகின்றது. இவனிடத்து அழுக்காறுற்ற இந்திரன், பிறர் எவராலும் தாங்க

மாட்டாததோர் ஆரத்தை இவனுக்கு அணிவித்தானாக, இவன் அதனைத் தாங்கியதும் அவனது முடிவளையை உடைத்து மழையைப் பிணித்தாண்டதுமாகிய இருவெற்றிகளை இவ்வடிகளில் காண்கிறோம். இந்திரன் அணிவித்த ஆரத்தைத் தாங்கினமையால் இவன், தேவராரமார்பன் (29:20-22) என்று அக்காப்பியத்திலேயே பின்னர்ப் புகழ்ந்து வாழ்த்தவும் பெறுவான். பின்வந்த திருவிளையாடல் புராணங்களும் இவனுடைய இந்நிகழ்ச்சியைப் புனைந்து இச்சிறப்பினால் இவனை, ஆரம்பூண்ட பாண்டியன் (திருவாலவாய் 44:16) என்றும், ஆரந்தாங்கு பாண்டியன் (பரஞ்சோதி 14:38) என்றும் அவ்விந்திரன் வாயிலாகவே பாராட்டிப் பாடுகின்றன.

இந்திரனது முடிவளையை உடைத்தோன் என்ற பகைமையினால் இவனாட்டில் மழை பெய்யாமல்போக, இவன் மேகங்களைப் பிணித்து மழைபெய்யச் செய்தாண்டான் எனவரும் சிலப்பதிகாரச் செய்தியில், இவன் இந்திரனின் முடிவளையுடைத்த வரலாறு தெளிவுற விளங்கவில்லை. மற்று, இதனைத் தெளிவுற விளக்கும் திருவிளையாடல் புராணங்களோ இவன் பெயரை உக்கிரவன்மன் எனக் கூறி, இவ்வரலாற்றினையும் வேறு முறையில் வடிவமைத்து வழங்குகின்றன. மழையின்மையால் வாடிய தமிழகத்து இவனுள்ளிட்ட மூவேந்தரும் மழை வேண்டுதற்கென்று இந்திரனிடம் போனபோது அவன் தன்னிருக்கையினும் தாழ இட்ட இருக்கைகளில் ஏனைவேந்தர் இருவரும் அமர, இவனொருவன் மட்டும் அமராது அவ்விந்திரனின் இருக்கையிலேயே ஒத்த நிலையில் உடனமர்ந்தானாக, அதனால் அழுக்காறுற்ற இந்திரன் இவனை மேம்படச் சிறப்பிப்பான்போல் ஆரத்தை அணிவித்தான். மற்றெவரும் தாங்குதற்கரிய அவ்வாரத்தினை எளிதில் தாங்கி இனிதிருந்த இவனை அவன் சிறப்புறப் பாராட்டினான். ஏனை வேந்தர்கள் இந்திரனிடம் மழை வேண்டிப் பெற்றபோதும் இவன் வேண்டாது தன்னிலை தாழாத தருக்குடனே மீண்டான். பின்னர் இவன் தன்னாட்டுப் பொதிய மலையில் வேட்டை வினைக்குச் சென்றபோது, அங்கே அலைந்து திரிந்த மேகங்களைப் பிணித்துச் சிறையிட்டானாக, அதனாற் சினமுற்ற இந்திரன் பொங்கியெழுந்து இவன் மேல் படைகொண்டு வந்த நிலையில் இவன் போரெதிர்ந்து, சிவனருளால் தான் முன்னர்ப் பெற்றிருந்த வளையை வீசி அவன் முடியை உடைத்தானென்று, இவ்வாறு காரண

காரியங்களும் நிகழ்ச்சி முறைகளும் மாறிய போக்கிலே அப்புராணங்கள் இவ்வரலாற்றைப் புகல்கின்றன.

ஆக, நிலந்தரு திருவின் பாண்டியனான முந்நீர் விழவின் நெடியோன், வரலாற்று முறையிலும் புராண மரபிலும் புகழ்படைத்தவன் என்பது நன்கு புலனாம்.

3.2. பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி

நிலந்தரு திருவின் பாண்டியனான முந்நீர் விழவின் நெடியோனுக்கு மகன் அல்லது பின்னோனாக மதிக்கத் தக்கவன் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி. இவனை வாழ்த்திப் பாடவந்த நெட்டிமையார்,

> எங்கோ வாழிய குடுமி தங்கோச்
> செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க்கு ஈத்த
> முந்நீர் விழவின் நெடியோன்
> நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே (புறம்.9)

என்று, நெடியோனால் உளதாக்கப்பட்ட பஃறுளியாற்று மணலினும் பலகாலம் வாழுமாறு வாழ்த்தியுள்ளார். ஆதலால் அந்நெடியோன் இவனுக்கு முன்னோன் என்பது விளங்கும். மற்று, அப் பஃறுளியாறு தன்னையுண்டாக்கிய நெடியோன் காலத்திற்குள்ளாகவே தான் கடல்கோள் பட்டொழிந்ததை அவன் வரலாற்றில் கண்டோமாதலின், இப்பெருவழுதி பஃறுளியாறு கடல்கோள்படுவதன் முன், நெடியோன் காலத்திலேயே நெட்டிமையாரால் பாடப்பெற்றமை புலனாம். கடல்கொண்ட பின்னராயின் பஃறுளியாற்று மணலினும் பலகாலம் வாழியவென்று வாழ்த்துதல் கூடாதன்றோ?

இனி, இவன் நெடியோனுக்குப் பின்னோனன்றியும் அவன் காலத்தவனாகவே அறிய வருதலால் அவனுக்கு மகனென்றே கருதலாம். இக்கருத்திற்கு மேற்குறித்த நெட்டிமையார் பாடலினின்றே தக்கதொரு சான்றையும் காணலாம். 'எங்கோ வாழிய குடுமி தங்கோ . . . நெடியோன்' எனவரும் அடிகளில் அமைந்த எங்கோ, தங்கோ என்ற சொற்களிரண்டும் இங்கே ஊன்றி நோக்குதற்கு உரியனவாம். இவற்றுள், எங்கோ என்பதற்கு எம்முடைய வேந்தன் என்று

பொருள் கூறிய பழைய உரையாசிரியர், தங்கோ என்பதற்குத் தம்முடைய கோ என்றே குறித்துவிட்டுப் போகின்றார். அதற்கு வேந்தனென்று பொருள்கொள்ளவியலாது; ஆகையால் வேறு பொருளை விரித்தல் வேண்டும். சங்க இலக்கியங்களில், கோ என்னும் ஒரெழுத்தொருமொழி வேந்தன், தலைவன், தந்தை, பசு என்ற நான்கு பொருள்களிலேயே தெளிவுற வந்துள்ளது. இப்பாடலில், தங்கோ என்பதில் அமைந்த கோவிற்கு வேந்தனென்ற பொருளைப் போலவே தலைவன், பசுவென்ற பொருள்களும் பொருந்தாமற்போக, தந்தையெனும் பொருளே பொருந்துவதாகின்றது. கோவென்னும் சொல்லிற்குத் தந்தையென்னும் பொருளை,

> யாய்வருக ஒன்றோ பிறர்வருக மற்றுநின்
> கோவரினும் இங்கே வருக தளரேன்யான்
> நீயருளி நல்கப் பெறின் (கலி.116)

எனவரும் கலிப்பாவடிகளில் காணலாம். இங்கே தலைவன் தலைவியிடத்து அவள் தந்தையையே கோவென்று குறிக்கக் காண்கிறோம். இதற்கு நச்சினார்க்கினியரும் தந்தையென்றே பொருள் கூறியுள்ளார். இம்முறையே நெட்டிமையார் பாடலிலும், 'தங்கோ . . . . நெடியோன்' என்பதற்குத் தம் தந்தையாகிய நெடியோனென்று பொருள் காணலாம். ஆகவே, இப்பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை முந்நீர் விழவின் நெடியோனுக்கு மகனென்றே மதிக்கலாம்.

மற்று, இம்முதுகுடுமிப் பெருவழுதி, காரிகிழாரும் (புறம்.6) நெட்டிமையாரும் (புறம்.9, 12, 15) நெடும்பல்லியத்தனாரும் (புறம்.64) என்ற புலவர் மூவரால் புகழ்ந்தும் வாழ்த்தியும் பாடப்பெற்றுள்ளான். அப்பாடல்களால் இவனுடைய அறனும் மறனும் ஆற்றலும் அடக்கமும் ஈகையும் எளிமையும் போன்ற ஏற்றமிகு பண்புகளெல்லாம் இனிதே விளங்குகின்றன.

3.21. அறக்கோட்பாட்டு மறவேந்தன்

பேராற்றல் மிக்க இம் முதுகுடுமிப் பெருவழுதி பகைநாடுகளின்மேற் படையெடுத்துப் போர்தொடுக்கும் போது, அப்போரின் அழிவிற்கு ஆட்படலாகாத பகைநாட்டு

எளியோரெல்லாம் தத்தமக்கு ஏற்ற காப்பகங்களையடைந்து தம்மைக் காத்துக்கொள்ளுதற்கேதுவாக முன்னறிவிப்பு விடுத்துப் பின்னரே போர்புரியும் பேராண்மையனாய்த் திகழ்ந்தான். 'யாம் எம் அம்புகளை விரைந்து விடுப்போம். ஆதலால், ஆவினங்களும், ஆவினங்களின் இயல்பையுடைய அந்தணரும், பெண்டிரும், பிணியுடையீரும், தென்புலத் தார்க்குரிய கடன்களை நிறைவேற்றும் பிள்ளைகளைப் பெறாதீரும் ஆகிய நீவிர் எல்லீரும் நுமக்கு அரணாகுமிடங்களை அடைவீராக' என்று இவ்வாறு முன்னறிவிப்பை விடுத்துப் போர்மேற்செல்லும் இவன் அறக்கோட்பாடு தமிழ்வேந்தர்களின் மறப்போர் நெறிக்கே ஆணிவேராய் ஆழ்ந்து நிற்கின்றது.

ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்என
அறத்தாறு நுவலும் பூட்கை மறத்தின்
கொல்களிற்று மீமிசைக் கொடிவிசும்பு நிழற்றும்
எம்கோ வாழிய குடுமி (புறம்.9)

என்று இந்த அறக்கோட்பாட்டு மறத்தினைக் குறித்து இவனை வாழ்த்திப்பாடும் நெட்டிமையார் பாடல், போர்ப் பண்பாடு பேசும் எவர்க்கும் ஏற்புடைய மேற்கோளாகும். பண்டைத் தமிழ் மன்னர்களின் போர்நெறி குறித்துப் பேசுகின்ற சேச அய்யங்காரும் இவன் கூற்றாய் அமைந்த இப்பாடலை மேற்கொண்டே பேசுவார்.

இவ்வாறுபோர்ச் செயலில் அறத்தாறு நுவலும் கொள்கை மறவனான இம்முதுகுடுமிப் பெருவழுதி, தன்னோடே பொருதற்கெதிர்ந்த பகைவருடைய நாட்டிற்குள் தன் கடல்போலும் படைபுகத் தானும் புகுந்து யானைகளை ஏவி, அவர்களுடைய அரண்கள் பலவற்றையும் கைப்பற்றிக் கொள்ளும் அருந்திறல் ஆற்றலை,

செய்வினைக்கு எதிர்ந்த தெவ்வர் தேஎத்துக்
கடற்படை குளிப்ப மண்டி அடர்புகர்ச்
சிறுகண் யானை செவ்விதின் ஏவிப்
பாசவல் படப்பை ஆரெயில் பலதந்து (புறம்.6)

எனவரும் காரிகிழார் பாடலில் தெளிவுறக் காணலாம். இவன் தன் அருந்திறத்து ஆற்றலால் போரிலே வென்று பகைப்புலத்தைத் தனதாக்கிக் கொண்டு தங்கியிருக்கும் தகைமையினை,

> களிற்றுக்கணம் பொருத கண்ணகன் பறந்தலை
> விசும்பாடு எருவை பசுந்தடி தடுப்பப்
> பகைப்புலம் மாீஇய தகைப்பெருஞ் சிறப்பின்
> குடுமிப் கோமான் (புறம்.64)

என்ற நெடும்பல்லியத்தனார் பாடலடிகளால் அறியலாம்.

இத்தகைய கடுமையான போர்முனையில் பகைவர் நாடுகளைக் கவர்ந்து கொள்ளும் இம்முதுகுடுமிப் பெருவழுதி, தன் வெற்றிகளைப் பாராட்டிப் பாடுகின்ற பாணர்க்கும் புலவர்க்கும் பரிசில்களை அளித்துச் சிறப்பிக்கும் இனிமையை,

> பாணர் தாமரை மலையவும் புலவர்
> பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்
> அறனோ மற்றிது விறல்மாண் குடுமி?
> இன்னா வாகப் பிறர்மண் கொண்டு
> இனிய செய்திநின் ஆர்வலர் முகத்தே (புறம்.12)

என்று அறனற்றதாகப் பழிப்பதுபோல் புகழும் நெட்டிமையார் பாடலில் பார்க்கலாம்.

3.2.2. வேள்வி சான்றோன்

இவ்வாறெல்லாம் மறக்கள வேள்வி முறையில் போர்கள் பலவற்றைப் புரிந்து வெற்றி வேந்தனாய் விளங்கிய முதுகுடுமிப் பெருவழுதி, அவற்றிற்கொப்ப அறக்கள வேள்விகளும் பலவாக இயற்றிச் சிறந்தமையால் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியெனப் பெயர் பெற்றான். இவனது போர்ச் சிறப்பைப் பலபடப் பாடிய நெட்டிமையார், முடிபாக இவனை முன்னிலைப் படுத்தி, 'பெரும, நின்னை எதிர்த்துப் போரிட வந்து நின்னிடத்தே தோல்வியற்றும் அக்களத்திலேயே மாண்டொழியாது பின்னும் பழிபட உயிர்வாழ்ந்தோர் பலரோ, நீ வேள்விகளை முடித்துத் தூண்களை நட்ட வேள்விச் சாலைகள் பலவோ? இவற்றுள் மிகப் பலவானவை யாவை?' என்று வினவுவாராய்ப பாடிய பாடல் இவ்வகையில் இங்கே காணத்தகும்.

நிழல்படு நெடுவேல் ஏந்தி ஒன்னார்
ஒண்படைக் கடுந்தார் முன்புதலைக் கொண்மார்
நசைதர வந்தோர் நசைபிறக்கு ஒழிய
வசைபட வாழ்ந்தோர் பலர்கொல், புரையில்
நற்பனுவல் நால்வேதத்து
அருஞ்சீர்த்திப் பெருங்கண்ணுறை
நெய்ம்மலி ஆவுதி பொங்கப் பன்மாண்
வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி
யூபம் நட்ட வியன்களம் பலகொல்
யாபல கொல்லோ பெரும (புறம்.15)

எனவரும் இப்பாடலடிகளால் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியெனும் இவன் பெயர்க்காரணம் பொருத்தமுறப் புலனாகின்றது.

அடுத்து, நிலந்தரு திருவின் பாண்டியனான நெடியோன் தனக்குரிய மேம்பாட்டுச் சிறப்புக்களால், பின்வந்த பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு மாங்குடி மருதனாரால் சான்றுகாட்டப் பெறுவது போலவே, இப்பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியும் வேள்வி வேட்டல் சிறப்பினால் சான்றாகி வருகின்றான்.

பல்சாலை முதுகுடுமியின்
நல்வேள்வித் துறைபோகிய (மது.759-760)

என்ற அடிகளில், இவனைப் போல் நல்வேள்வித் துறைகளில் மேம்பட்டுச் சிறக்கும்படி நெடுஞ்செழியனுக்கு மாங்குடி மருதனார் அறிவுறுத்துவது காணலாம். மற்று, அந்நெடுஞ்செழியனுக்கு முன்னோனாகிய இப்பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியின் பெயரோடே, அவனுக்குப் பின்னோனான வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியின் பெயரையும் ஒருங்கிணைத்து இருபெயருக்குமுரியோன் ஒருவனேயென்பார் சிவராசப் பிள்ளை.[10] அவர்கருத்தின் ஒவ்வாமை இங்கே உணரப்படும்.

3.3. பாண்டியன் கருங்கை ஒள்வாள் பெரும்பெயர்வழுதி

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதிக்குப் பின்னோனாக அறியவருபவன் கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி.

கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதியென்னும் இப்பெயர் இவனுக்கு இயற்பெயராகத் தோன்றவில்லை.

பெருங்கை யானை இரும்பிடர்த் தலையிருந்து
மருந்தில் கூற்றத்து அருந்தொழில் சாயாக்
கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி (புறம்.3)

எனவரும் இப்புறநானூற்றுப் பாடலடிகளால் விளித்துப் பாடப் பெற்ற வழுதியின் இயற்பெயரும், பாடிய புலவரின இயற்பெயரும் காலப்பழமையால் விளங்காதொழியவே, இடையடுத்த விளியாய் அடிநிறைந்து அமைந்த, கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி யெனும் இம்முழுத் தொடரே இவனுக்கும், யானையின் பெருங்கழுத்தை இரும்பிடர்த்தலை யெனப் பாடிய தொடர்கொண்டு அமைந்த இரும்பிடர்த்தலையாரெனும் குறியீடே இப்புலவருக்கும் பெயராயின போலும். கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி என்ற இப்பாடலடிக்கு வலிய கையின்கண்ணே ஒள்ளிய வாளினையுடைய பெரும்பெயர் வழுதி என்று விரித்துப் பொருள் கூறுவார் புறநானூற்றின் பழைய உரையாசிரியர். இத்தொடர் முழுதும் இயற்பெயராயின் அவர் இதனை விரித்துப் பொருள்கூற வேண்டாவன்றோ?

இனி, இத்தொடரில், கருங்கை ஒள்வாள் என்ற முன்னிரு சொற்களை மட்டும் விரித்துப் பொருளெழுதிய பழையவுரையாசிரியர், பெரும்பெயர் வழுதி என்ற பின்னிரு சொற்களுக்கும் அம்முறையே பெரிய பெயரையுடைய (புகழையுடைய) வழுதியென விரித்தெழுதாது உள்ளவாறே உரைத்துள்ளமையால் பெரும்பெயர் வழுதியென்பதே இவனது இயற்பெயரெனக் கருதுதற்கும் இயைபுணடு.

மற்று, இவன் வரலாற்றில் குறிப்பிடத்தக்க சிறபபுச் செய்தியேதும் தெரிந்திலது.

3.4. முடத்திருமாறன்

முடத்திருமாறன் இரண்டாமூழியில் கபாடபுரத்து இடைச்சங்கத்தைப் புரந்த பாண்டியருள் இறுதிவேந்தனாயும், அவ்வூழியிறுதியில் கபாடபுரம் கடல்கோட்பட்டபோது அச்சங்கத்தினரை அங்கிருந்து காப்பாற்றிக் கொண்டுவந்து

இன்றுள்ள மதுரையில் நிறுவிய கடைச்சங்கத்து முதல் வேந்தனாயும் அறிய வருகின்றான்.

முதலூழியிறுதியில் நிலந்தருதிருவின் பாண்டியன் காலத்துத் தலைச்சங்கமிருந்த தென்மதுரை உட்படப் பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங்கடல்கொள்ள, அவ்விழந்தவற்றிற்கு ஈடாக அப்பாண்டியன் வடதிசைக் கங்கையையும் வான் பேரிமயத்தையும் வென்று தென்திசையில் இருந்தாண்டான் என்று சிலப்பதிகாரத்தாலும் (11:17-22) அதற்கமைந்த அடியார்க்கு நல்லார் உரையாலும் அறிந்தோம். ஆயின்,

> "அங்ஙனமாகிய நிலக்குறைக்குச் சோழ நாட்டெல்லையிலே முத்தூர்க் கூற்றமும் சேரமானாட்டுக் குண்டூர்க் கூற்றமும் என்னுமிவற்றை இறந்த நாட்டிற்காக ஆண்ட தென்னவன்"

என்ற அடியார்க்கு நல்லாரின் உரைக்குறிப்பு, அம்முதற் கடல்கோளையடுத்துக் கங்கையையும் இமையத்தையும் கொண்ட நிலந்தரு திருவின் பாண்டியனுக்கு நேர்பட்டமையாதென்றும், இடைச்சங்கத்து இறுதியில் நேர்ந்த இரண்டாமூழிக் கடல்கோளையடுத்து மதுரைக்கு வந்த முடத்திருமாறனுக்கே முட்டின்றிப் பொருந்துமென்றும் முன்னரே கண்டோம். அதனோடே, அடியார்க்கு நல்லாரின் அவ்வுரைக்குறிப்பிற்கு மூலமாக,

> மலிதிரை ஊர்ந்துதன் மண்கடல் வௌவலின்
> மெலிவின்றி மேற்சென்று மேவார்நாடு இடம்படப்
> புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
> வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்
> (கலி.104)

எனவரும் முல்லைக்கலிப்பாடலில், சோழன் நல்லுருத்திரனார் குறிப்பிடும் தென்னவன் இவனேயென்றும் தெரிந்தோம். ஆதலால், இழப்புக் கண்டு இடியாத உள்ளமும் மடியாத மறமும் ஆகிய இவன் மாண்புகள் புலனாம்.

இனி, இம்முடத்திருமாறன், இடைச்சங்கத்தையும் கடைச்சங்கத்தையும் புரந்த புரவலன் மட்டுமல்லாமல் அவற்றிலே புலவனாயும் அமர்ந்து தமிழாய்ந்து பாடியுள்ளான். அவ்வாறு இவன் பாடிய இருபாடல்கள் நற்றிணையில் (105, 228) இடம்பெற்றுள்ளன.

35. ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் (கிபி75-100)

முடத்திருமாறனுக்குப் பின் கடைச்சங்க காலத்துப் பாண்டியனாக அறியவருபவன் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன். பூதப்பாண்டியன் என்பதே இவன் பெயர். இக்காலத்துப் புதுக்கோட்டை மாவட்டத்தில் திருமெய்யத்திற்கு அண்மையிலுள்ள ஓலியமங்கலம் என வழங்கும் பண்டைய ஒல்லையூரை வென்றுகொண்ட சிறப்பினால் இவன், ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் என்று அடையடுத்து அழைக்கப்பெற்றான். ஓலிய மங்கலமே பண்டைய ஒல்லையூர் என்பது அவ்வூர்க் கல்வெட்டொன்றால் அறியப்படுகின்றது.[11]

ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன் என்பானொருவன் குடவாயில் கீரத்தனாரால் பாடப்பெற்றுள்ளான் (புறம்.242). அவர் பாடலில் ஒல்லையூர் நாடு எனவரும் குறிப்பினால் அஃதொரு சிறுநாடென்பதும், ஒல்லையூர் கிழான் மரபினரே அந்நாட்டு மன்னரென்பதும் விளங்கும்.

பாண்டிய நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் இடைப்பட்ட எல்லைப்பகுதியில் அமைந்த இவ்வொல்லையூர் நாட்டை இப்பூதப் பாண்டியனே வென்று தன்னாட்டோடே சேர்ந்த்தானாதல் வேண்டும். ஒல்லையூரை வென்றுகொண்ட இப்போரிலேயே போலும் இவன் பகைவரைக் குறித்துக் கூறிய வஞ்சினப்பாடலொன்று புறநானூற்றிலே வருகின்றது. அவ்வஞ்சினப் பாடல் இவ்வொல்லையூர்ப் போரைக் குறித்ததேயெனக் கொள்வோமாயின்,

மடங்கலிற் சினைஇய மடங்கா வுள்ளத்து
அடங்காத் தானை வேந்தர் உடங்கியைந்து
என்னொடு பொருதும் என்ப (புறம்.71)

எனவரும் அப்பாடலடிகளால், ஒல்லையூர் கிழானேயன்றியும் அவனுக்குத துணையாகச் சேர சோழ வேந்தரும் ஒருங்கே கூடிவந்து இவனொடும் பொருதனரென்பது புலனாம். ஆயினும், இவன் தான் கூறிய வஞ்சினப்படி அவரனைவரையும் வென்று ஒல்லையூரைக் கைப்பற்றினான் என்று உணரப்படும்.

3.5.1. வாழ்வியல் அரசியல் பண்பாளன்

இனி, இவ்வொல்லையூர்ப் போரின் தொடக்கத்தே இப்பூதப் பாண்டியன், கூறிய வஞ்சின மொழிகள் இவனுடைய வாழ்வியல் அரசியல் பண்புகளின் அமைதியை அழகுறக் காட்டுகின்றன. 'என்னொடு பொருவதாகக் கூறிவரும் பகைவரை அரிய போரிலே அலறுமாறு தாக்கி அவர்தம் தேர்களோடே திரும்பியோட யான் அவரைப் புறங்காணேனாயின் முதலாவது, எனக்குச் சிறந்த மனைவியாகிய இவளை யான் நீங்குவேனாகுக; இரண்டாவது, அறம் நிலைதிரியாத அன்பினையுடைய அவைக்களத்தே அறத்திறனில்லாத ஒருவனை அமர்த்தி முறைதிரிந்து கொடுங்கோல் செய்தேனாகுக; மூன்றாவது, மையலென்னும் ஊர்க்குத் தலைவனான மாவனும் எயிலென்னும் ஊரையுடைய ஆந்தையும் புகழமைந்த அந்துவஞ்சாத்தனும் ஆதனழிசியும் வெஞ்சினத்தையுடைய இயக்கனும் என இவருட்படப் பிறருமான என் கண்போலும் நண்பர்களோடே கூடிய இன்களி மகிழ்நகையை யான் இழப்பேனாகுக; நான்காவது, இவையனைத்திற்கும் மேற்பட, பல்லுயிரையும் பாதுகாக்கும் அரச குலத்திற் சிறந்த பாண்டிநாடு காக்கும் காவலினின்றும் நீங்கி, பிறருடைய வன்புலங்களைக் காக்கின்ற காவலிலே நிற்குமாறு யான் இக்குடிப் பிறப்பினின்றும் மாறிப் பிறப்பேனாகுக' எனவரும் இவ்வஞ்சினமொழிகளால் இவன் சிறந்த வீட்டுத் தலைவனும் நாட்டுத் தலைவனுமாய் விளங்கினமை போதரும். இவனுக்கு வீடொரு கண்ணும் நாடொரு கண்ணும் நண்பர்களே இரு கண்களுமாய் இருந்தமையால்தான் வீட்டின் மனைவியைப் பிரிவதும் நாட்டின் காவலை நீங்குவதும் நண்பர்களின் மகிழ்நகையை இழப்பதும் இவன் நாவிலே வஞ்சின மொழிகளாகி வந்தன.

'சிறந்த பேரமர் உண்கண் இவளினும் பிரிக' என்று இவன் தன் மனைவியான பெருங்கோப் பெண்டைக் குறித்துக் கூறிய இம்மொழிக்கேற்ப, அவளும் இவனிடத்தே ஆராத காதலோடு அளவற்ற அன்பு பூண்டவளென்பதையும் இங்கே காணலாம். பின்னர் வேறு எக்காரணத்தாலோ இவன் தன் முதுமைக்குமுன்னே இறந்தானாக, இவனது பிரிவையாற்றாத அவளும் இவனோடே உடன்கட்டை ஏறத் துணிந்து, பிறரெல்லாம் தடுக்கவும் தடைப்படாமல்,

> பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்டு ஈமம்
> நுமக்கரிது ஆகுக தில்ல; எமக்கெம்

பெருந்தோட் கணவன் மாய்ந்தென அரும்பற
வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையும் தீயுமோர் அற்றே (புறம்.246)

என்று தெளிவுறக் கூறித் தீப்பாய்ந்த செய்தியையும் புறநானூற்றிலேயே காண்கிறோம்.

இப்பூதப்பாண்டியன் தன் நண்பர்களென்று அவ்வஞ்சினப் பாடலிற் குறிப்பிட்ட மையற்கோமான் மாவனும், எயிற்கோமான் ஆந்தையும், அந்துவஞ்சாத்தனும், ஆதனழிசியும், இயக்கனும் ஆகிய இவரெல்லாம் இவனது பேராட்சிக்கு உட்பட்ட குறுநில மன்னர்களாய், இவனுக்கு அரசியலில் துணைநின்றவர் என்று அறியலாம். இவர்களேயன்றிப் பொதியில்மலைத் தலைவனான திதியனென்பவனும் இவனுக்கு அரசியல் நண்பனாய் அறிய வருகின்றான். புலமை வேந்தனான இப்பூதப்பாண்டியன் பாடியுள்ள அகப்பாடல் ஒன்றில்,

பொருநீர், செல்சமங் கடந்த வில்லெழு தடக்கைப்
பொதியிற் செல்வன் பொலந்தேர்த் திதியன்
இன்னிசை இயத்தின் கறங்கும்
கன்மிசை அருவிய காடு (அகம்.25)

என்று அத்திதியனையும் சிறப்பித்துப் பாடியுள்ளான். இவ்வாறெல்லாம் தன் பேராண்மைக்கு அடங்கிய அரசியல் தலைவர்களையும் அவரவர் நிலைமை பாராதே அரவணைத்துத் தன் கண்போலும் நண்பர்களென்று கருதித் தான்பாடும் பாடல்களிலெல்லாம் பதித்துச் சிறப்பிக்கும் இப்பெருவேந்தனின் பெருந்தன்மை எத்துணையும் சிறப்பாக எடுத்துப் பாராட்டத் தகுவதொன்றாம்.

3.6. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் (கி.பி. 100-150)

சங்க இலக்கியங்களில் நெடுஞ்செழியனென்ற பெயரோடு தெளிவாகத் தெரியவருகின்ற பாண்டிய வேந்தர்கள் இருவரே. ஒருவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்; மற்றொருவன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன். முன்னவன் பாடியோனாகவும்

பாடப்பெற்றோனாகவும் சங்க இலக்கியங்கள் பலவற்றிலும் பல பாடல்களுக்குத் தலைவனாய் வந்துள்ளான். பின்னவன் பாடினோனாக மட்டும் ஒரேயொரு பாடல் தலைவனாய் வருகின்றான். அப்பின்னவனையே சிலப்பதிகாரத்துப் பாண்டியனென்றும் இளங்கோவடிகள் விளங்கக் காட்டுகின்றார். சிலப்பதிகாரம் கடைச்சங்க காலத்து இறுதிக்கட்டத்தில் நிகழ்ந்த வரலாற்றையொட்டி அதே காலத்தில் கி.பி.180ஆம் ஆண்டளவில் எழுந்த காப்பியமென்பது ஆய்வறிஞர்களின் கருத்தாகலின்,[12] அக்காப்பியக் கதையில் வரும் ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியன் காலமும் அதுவேயாம். ஆகவே கடைச்சங்க முன்னை புலவர்களான கல்லாடனார் (புறம். 23,25, அகம்.209), குடபுலவியனார் (புறம்18,19) மாங்குடி கிழாராகிய மருதனார் (புறம்.24,26; மதுரைக்காஞ்சி), இடைக்குன்றூர் கிழார் (புறம். 76-79), ஆலம்பேரி சாத்தனார் (அகம்.47,175), எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் (அகம். 149), மதுரை நக்கீரர் (அகம்.36,57; நற்,340; நெடுவல்வாடை), பொதும்பில்கிழார் மகனார் (நற்.387) ஆகியோரால் தெளிவுறப் பாடப்பெற்ற தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனுக்கு முன்னோனென்பது தெளிய விளங்கும்.

ஆயினும் அறிஞருள் சிலர் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனை முன்னோனாகவும், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பின்னோனாகவும் ஆய்வுரை கண்டுள்ளனர். அஃது எவ்வாற்றானும் இசையாது; அன்றியும் அதற்குத் தக்க ஏதுச்சான்றுகளும் இல்லை.

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனுக்குப் பின்னோனாக, அவ்வறிஞர் கூறுகின்ற ஆய்வுரைப்படி அந்நெடுஞ்செழியனுக்குப் பெயரனாக, தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைக் கருதுவோமாயின், இவனைத் தலைவனாகக் கொண்ட சங்க இலக்கியப் பாடல்களெல்லாம் சிலப்பதிகாரத்திற்குப் பிற்பட்டனவென்றே பேசப்பெறல் வேண்டும். அவ்வாறு பேசல் கூடுமோ?

அன்றியும் சிலப்பதிகாரத்திலேயே தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனுக்கு முன்னோனாகக் கருதத்தக்க குறிப்புக் காணப்படுகின்றது.

இளைய ராயினும் பகையரசு கடியும்
செருமாண் தென்னர் குலம் (சிலம்பு. 4: 21-22)

எனவரும் பாண்டியர் குலச்சிறப்பு, இளையனாய்த் தனி நின்று இருபெருவேந்தரோடு ஐம்பெரு வேளிரையும் ஆலங்கானத்துப் போரிலே கொன்று களம்வேட்ட நெடுஞ்செழியனைக் குறித்ததுதானே! குறிப்பாக இவனையன்றிப் பாண்டியர் குலத்துள் வேறெவரையும் இச்சிறப்புக்குரியோராக எண்ணக் கூடவில்லை; ஆதலின், இளங்கோவடிகளால் இங்கே குறிகசப்பெற்ற இந்நெடுஞ்செழியன் அவர்க்கும் அவர் காப்பியக் கதையில் வரும் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனுக்கும் முன்னோனே என்று முடிக்கலாம்.

இனி, பண்டைத் தமிழர் காலமுறையென்ற ஆங்கில நூலின் ஆசிரியரான சிவராசப்பிள்ளை எவ்வகையிலும் ஏதுக் காட்டாமலேயே, பெரும்பாலும் தம் கற்பனைப் போக்கிலேயே, தமிழ் வேந்தர்களுக்குத் தலைமுறை வகுக்கும் இயல்புடையாராதலால், அவர் ஆரியப படைகடந்த நெடுஞ்செழியனை எண்ணாது விட்டுமே நெடுஞ்செழினென்ற பெயருடையோர் மூவரென்பார்.[13] மதுரைப் பேராலவாயாரால் அகப்பாடலொன்றில் (296) நெடுந்தேர்ச் செழியனெனக் குறிக்கப்பெற்றவனை முதலாம் நெடுஞ்செழியனென்றும்,[14] வடிம்பலம்ப நின்ற பாண்டியனான நிலந்தருதிருவின் நெடியோனையே பசம்பூண் பாண்டியனெனவும் பன்னாடு தந்த பாண்டியனெனவும் கொண்டு அவனையே இரண்டாம் நெடுஞ்செழினென்றும்,[15] தலையாலங்கானத்துச் செருவென்ற இம் முதலாம் நெடுஞ்செழியனை மூன்றாம் நெடுஞ்செழியனென்றும்[16] அவர் மொழிவது முற்றும் முரணாகும்; பிழையாகும். மதுரைப் பேராலவாயார் நெடுந்தேர்ச் செழியனெனக் குறித்தது தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனையே என்பது பின்னர்க் காணப்படும். அவனையே அவனுடைய தேர்ச்சிறப்புக் குறித்துக் கொடித்தேர்ச் செழியன் (அகம்.36, 57), திண்டேர்ச்செழியன் (அகம்.137), இயல்தேர்ச் செழியன் (அகம்.209), பொற்றேர்ச் செழியன் (அகம். 298), கடுந்தேர்ச் செழியன் (நற். 340; சிறு. 65) என்றெல்லாம் புலவர் பலரும் செய்யுளில் தேரடைகளோடே சிறப்பித்துக் குறித்துள்ள முறையில் பேராலவாயாரும் நெடுந்தேர்ச் செழியனெனக் குறித்துள்ளார். ஆதலால், அவனை முதலாம் நெடுஞ்செழியனென்றும் மூன்றாம் நெடுஞ்செழியனென்றும்

வேறுபடுத்திக் கூறுதற்கு ஏது எதுவுமில்லை. அடுத்து, இரண்டாம் நெடுஞ்செழியனாகச் சிவராசப்பிள்ளை குறிப்பிடுகின்ற நெடியோனைத் தலைச்சங்கத்து இறுதியிலும் இடைச்சங்கத்து முதலிலும் இருந்தவனென்று முன்னர்க் கண்டோம். பன்னாடு தந்த பாண்டியன் கடைச்சங்கத்து இறுதிக் காலத்தவனென்பதை, அச்சங்கத்து இறுதிப் பாண்டியனான உக்கிரப்பெருவழுதி உள்ளிட்டோர் பாடிய அகப்பாடல்கள் நானூற்றைத் திரட்டி நற்றிணைநானூறு தொகுப்பித்தோன் அவனென்பதனால் அறியலாம். பசும்பூண் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனென்பது பின்னர்க் காணப்படும். ஆதலால், அம்மூவரையும் ஒருவனென்பதே ஒவ்வாது. அதற்கு மேலும் நெடியோனை நெடுஞ்செழியன் என்பதற்கு ஏற்புடைய சான்று ஏதுவுமில்லை. எனவே, மூவர் நெடுஞ்செழியர் என்பதன் முரண்பாடும் விளக்கமாம்.

3.6.1. செழியன்

இனி, சங்க இலக்கியங்களில் செழியனென்ற பெயர் சிறப்பாகத் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனையே குறிக்குமென்பதைக் காணலாம்.

சங்கப் பாடல்களில் இருபத்து மூன்று இடங்களில் (புறம்.18, 19, 24,26, 76,79; அகம்.36, 46,47, 57, 106, 116, 137, 149, 175, 209, 296, 335; நற்.39, 298, 340, 387; சிறு 65) செழியன் பெயர் பயின்று வந்துள்ளது. அவற்றுள் புறநானூற்றில் அமைந்த ஆறு இடங்களும் தெளிவாக இவன்மேற் பாடப் பெற்ற பாடல்களாதலால் அவை இவனையே குறித்தன. அவற்றோடே இவன்வென்ற ஆலங்கானத்துப் போர்க் குறிப்புக்களைக் கொண்ட நான்கும் (அகம். 36, 175, 209, நற்.387), அப்போரின் முதற்கட்டமாய் உடனியைந்து வந்த இருபெருவேந்தரை இவன் கலங்கத்தாக்கி அவர்களை முரசொழிய ஓடுபுறங்கண்ட கூடற்பறந்தலைப் போரைக் குறித்த இரண்டும் (அகம்.116, 296), இவன்மேற் பல பாடல்கள் பாடிய நக்கீரர் தாமே முசிறி முற்றிய செழியனென்றும் (அகம்.57) குளத்திற்குப் பெயர்கொடுத்த செழியனென்றும் (நற்.340) குறித்த இரண்டும், அதே முசிறி முற்றுகையைக் குறித்த எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் பாடற்குறிப்பு ஒன்றும் (அகம்.149), இவன் வென்ற

ஆலங்கானத்துப் போரைப் பாடிய (அகம்.175) ஆலம்பேரிச்சாத்தனார் தாமே சிறுமலைக்குரிய செழியனெனக் குறித்த ஒன்றும் (அகம்.47) ஆகப் பத்தும் கூடிய பதினாறு குறிப்புக்கள் இவனைக் குறித்தனவே என்பதும் தெளிவு. எஞ்சிய குறிப்புக்கள் ஏழில் இவன் செய்திகளென்று தெளிவுறத் தெரிவன எவையுமில்லை. எனினும், இவனையொழித்து வேறு எவரையும் அவை சிறப்புறச் சார்ந்து வரவுமில்லை. ஆதலால், அவையும் இவனைக் குறித்தனவே யெனின், அஃது இழுக்காது. சங்ககாலப் பாண்டியர் பலருள் செழியனென்று குறிக்கப் பெற்றோர் இவனையொழிய வேறு எவருமிலர் என்பதும் இங்கே கருதத்தகும்.

362. பசும்பூட் செழியன்: **பசும்பூட் பாண்டியன்: பசும்பூண் வழுதி**

அடுத்துப் பசும்பூட் பாண்டியன் என்ற பெயரோடே சங்க இலக்கியங்களில் ஐந்தும் (அகம்.162, 231, 253, 338: குறு.393) தொல்காப்பியப் பொருளதிகாரக் களவியலுக்கு அமைந்த நச்சினார்க்கினியரின் உரை மேற்கோட் பாடலில் ஒன்றும் (நூற்பா 11.உரைமேற்கோள்) ஆக ஆறு குறிப்புக்கள் காணப்படுகின்றன. இன்னும், பசும்பூண் வழுதி என்ற பெயரோடு நக்கீரர் பாடலில் (நற்.358) ஒரு குறிப்பும் வருகின்றது.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் தன் பகைவர் எழுவரைத் தானொருவனே போரிட்டுக் கொன்ற கன்னிப்போர் வெற்றியை வியந்து பாடும் புலவர் இடைக்குன்றூர் கிழார் இவனைப் பசும்பூட் செழியனென்று பாடியுள்ளார் (புறம்.76). இளமையணிகளைக் களைந்தும் களையாமலே போரணிகளைப் பூண்டு பொருத சிறப்பினால் இவனுக்கு இப்பெயர் இயைவதாயிற்று. ஆகவே, அம்முறையில் பசும்பூட் பாண்டியன், பசும்பூண் வழுதி என்ற பெயர்களும் இவனுக்கே இயன்றன எனலாம். இவனைப் பலபடப் பாடியுள்ள நக்கீரர் பாடல்களிலும் பசும்பூட் பாண்டியன் (அகம்.253), பசும்பூண் வழுதி (நற்.358) என்ற இரு பெயர்க் குறிப்புக்களும் இருத்தலால் அப்பெயர்களுக்குரியோனும் இவனே என்பது எளிதில் விளங்கும். நக்கீரரேயன்றி அவர் தந்தையாரான மதுரைக் கணக்காயனாரும் (அகம்.338), பரணரும் (அகம்.162, குறு.393), மதுரை ஈழத்துப் பூதன் தேவனாரும் (அகம்.231) இவனைப் பசும்பூட் பாண்டியன்

என்று பாடியுள்ளனர். அவருள்ளும் பரணர் இவனைச் செழியனென்ற பெயரில் குறித்துக் கூடற்பறந்தலைப் போரிலே இவன் பெற்ற வெற்றியை எடுத்துப் பாடிய தொடர்புடையவரே என்பதும் கருதத்தகும்.

இவ்வாற்றால் பசும்பூட் செழியனான தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனே பசும்பூட் பாண்டியனென்றும் பசும்பூண் வழுதியென்றும் பாடப்பெற்றுள்ளான் என்பது தெளிவாம்.

ஆக, தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனான இவன், சங்க இலக்கியங்களில் செழியன், பசும்பூட் பாண்டியன், பசும்பூண் வழுதி என்ற பெயர்களையெல்லாம் கொண்டு,

அள்ளூர் நன்முல்லையார் (அகம்.46)
ஆலங்குடி வங்கனார் (அகம்.106)
ஆலம்பேரிச் சாத்தனார் (அகம்.47, 175)
இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் (சிறு.62-65)
இடைக்குன்றூர் கிழார் (புறம்.76-79)
உறையூர் முதுகூத்தனார் (அகம்.137)
எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் (அகம்.149)
கல்லாடனார் (புறம்.23,25,371; அகம்.209)
குடபுலவியனார் (புறம்.18,19)
பரணர் (அகம்.116, 162; குறு.393)
பொதும்பில் கிழார் மகனார் (நற்.387)
மதுரை ஈழத்துப் பூதன் தேவனார் (அகம்.231)
மதுரைக் கணக்காயனார் (அகம்.338)
மதுரை நக்கீரனார் (அகம். 36, 57, 253; நற. 340, 358, நெடுநல்வாடை)
மதுரைத் தத்தங்கண்ணனார் (அகம்.335)
மதுரைப் பேராலவாயார் (அகம்.296)
மதுரை மருதனிளநாகனார் (நற.39)
மாங்குடி கிழாராகிய மருதனார் (புறம்.24, 26, 372; மதுரைக்காஞ்சி)
விற்றூற்று வண்ணக்கன் தத்தனார் (நற்.298)

ஆகிய புலவர் பத்தொன்பதின்மரால் முப்பத்தேழு பாடல்களில் பாடப்பெற்ற ஒருவெருந்தலைவனாய் வருத்தலைக் காண்கிறோம்.

இனி, அப்பாடல்களால் அறியப்படும் இவனது வரலாற்றைக காணலாம்.

3.6.3. பூதப்பாண்டியனின் புதல்வன்

பாண்டிய வேந்தருள் தன் இளமை மாறாத நிலைமையிலேயே தந்தையையிழந்து, ஆட்சியெய்திய அப்பொழுதே சேர சோழராகிய இருபெருவேந்தரையும் அவருடன் கூடிவந்த ஐம்பெரு வேளிரையும் தலையாலங்கானத்துப் போரிலே வென்று, தன் தலைமையை நிலை நிறுத்திய தக்கோனாய், அவ்வெற்றியையே தனக்குச் சிறப்படையாகப் பெற்றவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்.

எனவே, இப்பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை, ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியனின் மகனென்று மதிக்கலாம். பூதப்பாண்டியன் தன் முதுமைக்கு முன்னே இறந்ததையும் அவனுடனே அவன் பெருங்கோப்பெண்டு தீப்பாய்ந்ததையும் முன்னர்க் கண்டோம். அவ்வாறு தீபபாய்ந்த பெருங்கோப்பெண்டை நேரில் கண்டு (புறம்.247) இரங்கிப் பாடிய மதுரைப் பேராலவாயார் தாமே மற்றொரு பாடலில் (அகம்.296) இந்நெடுஞ்செழியனையும் பாடியுள்ள தொடர்பு இங்கே கருதத்தகும். அப்பூதப் பாண்டியனிடத்தே ஏனை இருபெரு வேந்தரும் பகைமையுற்றுப் போருக்கு வந்ததும், அப்போரையெதிர்த்து அவன் வஞ்சினங்கூறிச் சென்று வென்றதும் அறிந்த செய்திகளே. ஆதலால், அவனிடம் தோல்வியுற்றுத் துவண்டிருந்த பகைவேந்தர் இருவரும், அவன் முதுமைக்கு முன் இறந்த நிலைமையையே தம் பகைமைக்கு ஏற்ற நிலைமையாகக் கொண்டு, இளைஞனான இந்நெடுஞ்செழியனை எளிதில் வென்று விடலாம் என்று வந்தனர்.

3.6.4. கன்னிப்போர்

இருபெருவேந்தரும் அவ்வாறு இணைந்து போருக்கு வந்ததை அறிந்த இந்நெடுஞ்செழியன், முன்னர்த் தந்தை சினந்தெழுந்ததைப் போலவே இப்போது தானும

சீறியெழுந்து, அவன் வஞ்சினங்கூறியது போன்றே தானும் கூறிப் போருக்குப் புறப்பட்டான். இவன் கூறிய இவ்வஞ்சினப்பாட்டு அவனது வஞ்சினப் பாடலையடுத்தே புறநானூற்றில் (72) அமைந்துள்ளது. தன்னை இளையனென்றும், தன்னாட்டை மிகுத்துக் கூறுவோரை நகைக்கத் தக்கவரென்றும் தான் வெறுக்கும்படிப் பேசி, அவற்றின் மேலும் தன் வலிமையை அஞ்சாதே சினச்செருக்கினால் சிறுசொற்களையும் சொல்லிவந்த அப்பகைவரை அருஞ்சமத்திலே சிதையத் தாக்கி, அவர்களை முரசங்களோடு ஒருங்கே அகப்படுத்துவானாய் வஞ்சினங்கூறிப் புறப்பட்ட இவன், போர்மடந்தையைப் புணர வருகின்ற கன்னிப் போராதலால் (புறம்.79-பழையவுரை), தன் மதுரை மூதூரின் வாயிற் புறத்தேயிருந்த பொய்கையில் குளித்தெழுந்து வந்தான். இவனது அவ்வரவையும் அதன் விளைவையும் இடைக்குன்றூர் கிழார் பாடுமாறு காணலாம்.

மூதூர் வாயில் பனிக்கயம் மண்ணி
மன்ற வேம்பின் ஒண்குழை மலைந்து
தெண்கிணை முன்னர்க் களிற்றின் இயலி
வெம்போர்ச் செழியனும் வந்தனன்; எதிர்ந்த
வம்ப மள்ளரோ பலரே;
எஞ்சுவர் கொல்லோ பகல்தவச் சிறிதே! (புறம்.79)

எனவரும் இப்பாடலால், இவன் சீற்றத்தொடும் கூடிய செம்மாந்த எழுச்சியும், பகைப்படையின் பன்மையும், அதனை அழிக்கத்தக்க இவனது ஆற்றலும் புலனாகின்றன. இவனையெதிர்த்து வந்த பகைப்படையினர் பலராயினும் அவரெல்லோரும் இவனால் அழிவுண்போரே! அதில் ஐயமில்லை. ஆயினும் அவரனைவரும் இவனால் அழிவுண்பதற்குப் பொழுதுதான் போதாது. சிறிதேயுள்ள பொழுது முடிந்தால் போரும் முடிந்துபோம். போர் முடிந்தால் பகைவருள் சிலர் இவனால் கொலையுண்பது தவிர்ந்து எஞ்சலும் எஞ்சுவர். அவ்வாறன்றி வேறு எவ்வாறும் இவனிடமிருந்து அவர்கள் எஞ்சுதற்கில்லை என்று எண்ணுமளவு அப்போரில் இவனது எழுச்சி காணப்பட்டது.

3.6.41. முதற்கட்டம்: கூடற்பறந்தலைப்போர்

இப்பாண்டியன் நெடுஞ்செழியன்மேல் படைகொண்டு வந்த பகைவேந்தர் இருவரும் மதுரையாகிய கூடற்புறத்தே

போரைத் தொடங்கினர். தலையாலங்கானத்துச் செருவின் முதற்கட்டமாய்க் கூடற்புறந்தலையில் தொடங்கிய இப்போர் பற்றிய விளக்கத்தைப் பரணரின் அகப்பாடலொன்றால் அறிகிறோம்.

மையணி யானை மறப்போர்ச் செழியன்
பொய்யா விழவின் கூடற் பறந்தலை
உடனியைந் தெழுந்த இருபெரு வேந்தர்
கடல்மருள் பெரும்படை கலங்கத் தாக்கி
இரங்கிசை முரசம் ஒழியப் பரந்தவர்
ஓடுபுறங் கண்ட ஞான்றை
ஆடுகொள் வியன்களத்து ஆர்ப்பினும் பெரிதே
(அகம்.116)

என வரும் இவ்வகப் பாடலடிகளால், இந்நெடுஞ்செழியன் கூடற்பறந்தலையில் குழுமிவந்த இருபெருவேந்தரின் ஒருபெரும் படையை நிலைகலங்கத்தாக்கியபோது, அத்தாக்குதலை ஆற்றாத ஞானை வேந்தர் இருவரும் தத்தம் வெற்றி முரசங்களையெல்லாம் வெங்களத்தே விட்டு ஓடினராக, இவன் வெற்றியாரவாரத்தோடே அவர்களைப் புறங்கண்டானென்பது புனலாகின்றது. இவன் பெற்ற இவ்வெற்றியின் ஆரவாரத்தை மதுரைப் பேராலவாயாரும்,

கடும்பகட்டு யானை நெடுந்தேர்ச் செழியன்
மலைபுரை நெடுநகர்க் கூடல் ஆடிய
மலிதரு கம்பலை போல
அலரா கின்றது பலர்வாய்ப் பட்டே (அகம்.296)

எனப் பாடியுள்ளது காணலாம்.

3.6.4.2. இரண்டாம் கட்டம்: தலையாலங்கானத்துப் போர்

அவ்வாறு கூடற்பறந்தலையில் தன்னிடம் தோற்றுப் புறங்காட்டி ஓடிய அவ்விருபெருவேந்தரை அந்நிலையில் அங்கே கொல்லுதற்கு இசைந்திலனாயினும், தன்னை இளையனென்று இகழ்ந்ததோடே செருக்குற்று மேலும் சிறுசொற்களைச் சொல்லி வந்த சினமிக்க அவ்வேந்தரை அவ்வளவில் விட்டு அமைதற்கும் விரும்பாத இந்நெடுஞ்செழியன், தன் படையுடனே அவர்களைத் தொடர்ந்து போய்ச் சோழ நாட்டிற்குள் புகுந்து

தலையாலங்கானத்திலே அவர்களுக்கெதிராகப் போர்ப் பாசறை அமைத்துத் தங்கினான். இவன்மேல் தாம் படைகொண்டு சென்றதற்கு மாறாகத் தம்மேல் இவன் படையெடுத்து வந்தது கண்ட சேர சோழ வேந்தர் இருவரும் தத்தமக்கு அடங்கிய வேளிர்களையும் உடன்கொண்டு இவனை எதிர்க்கத் துணிந்தனர். அம்முறையில் திதியன், எழினி எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் ஆகிய ஐம்பெருவேளிரும் துணைவர, அப்பெருவேந்தர் இருவரும் கூடி எழுவராய்த் தத்தம் படைகளுடனே பரந்தெழுந்து விரைந்து வந்து இவனை எதிர்த்தனர். அவர்களின் எதிர்ப்பிற்கு எதிர்நோக்கியிருந்த இவன், பொங்கியெழுந்து போருடற்றி ஒரு பகற்பொழுதிலேயே அவர்களைச் செருக்கடங்க வென்று, அவர்களுடைய முரசங்களைக் கைப்பற்றிக் கொண்டபின் அவரனைவரையும் அக்களத்திலேயே கொன்று களவேள்வி செய்தான்.

எள்ளி வந்த வம்ப மள்ளர்
புல்லென் கண்ணர் புறத்திற் பெயர
ஈண்டவர் அடுதலும் ஒல்லான் ஆண்டவர்
மாணிழை மகளிர் நாணினர் கழியத்
தந்தை தம்மூர் ஆங்கண்
தெண்கிணை கறங்கச் சென்று ஆண்டட் டனனே
(புறம்.78)

என்ற இடைக்குன்றூர் கிழாரின் புறப்பாடலடிகள், இவன் தன்மேற்படைகொண்டு வந்த பகைவேந்தரை முதலில் தன்னூரிலேயே எதிர்த்துப் போர்புரிந்து வென்றானென்பதற்கும், வென்றபோதும் அவர்களை அங்கே கொல்லுதல் ஒல்லானாய் ஓடவிட்டுப் பின்தொடர்ந்துபோய் அவரூரிலேயே ஆரவாரத்தோடு கொன்று முடித்தான் என்பதற்கும் சான்றாகின்றன.

காலென்னக் கடிது உராஅய்
நாடுகெட எரிபரப்பி
ஆலங்கானத்து அஞ்சுவர இறுத்து
அரசுபட அமருழக்கி
முரசுகொண்டு களம்வேட்ட
அடுதிறலுயர் புகழ்வேந்தே (மது.125-130)

எனவரும் மாங்குடி மருதனாரின் மதுரைக்காஞ்சியடிகளால், இந்நெடுஞ்செழியன் தன் படையுடனே மிக்க விரைவில் பரவிச்

சென்று பகைநாடு கெடும்படி எரிபரந்தெடுத்து, தலையாலங்கானத்திலே பகைவர் அஞ்சுமாறு பாசறை அமைத்துத் தங்கி, பகையரசர் பட்டொழியப் போருடற்றி, அவருடைய முரசுகளைக் கைப்பற்றிக் கொண்டு களவேள்வி செய்தமை கானப்படும்.

ஆலங் கானத்து அஞ்சுவர இறுத்த
வேல்கெழு தானைச் செழியன் பாசறை
உறைகழி வாளின்மின்னி (நற்.387)

என்னும் பொதும்பில்கிழார் மகனார் பாடலும், இவன் தலையாலங்கானத்திலே பாசறை அமைத்துத் தங்கிப் போர்புரிந்தமையைப் புலப்படுத்துகின்றது.

இருபெரு வேந்தரொடு வேளிர் சாயப்
பொருது அவரைச் செருவென்றும் (மது.55-56)

என்ற மதுரைக் காஞ்சியடிகள், இப்போரில் வேந்தரொடு வேளிர்களும் வீழுமாறு இவன் வென்றதைப் புலப்படுத்தும்.

அலரே, கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழியன்
ஆலங் கானத்து அகன்தலை சிவப்பச்
சேரல் செம்பியன் சினங்கெழு திதியன்
போர்வல் யானைப் பொலம்பூண் எழினி
நாரரி நறவின் எருமை யூரன்
தேங்கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின்
இருங்கோ வேண்மான் இயல்தேர்ப் பொருநனென்று
எழுவர் நல்வல மடங்க ஒருபகல்
முரசொடு வெண்குடை அகப்படுத்து உரைசெலக்
கொன றுகளம் வேட்ட ஞான்றை
வென்றிகொள் வீரர் ஆர்ப்பினும் பெரிதே (அகம்.36)

எனவரும் நக்கீரரின் அகப்பாடலடிகள், இவனுக்கு எதிராகி வந்த இருபெருவேந்தரையும் அவர்க்குத் துணையாகி வந்த ஐம்பெருவேளிரையும் எவரெவரென்று எடுத்துக் கூறி, அவரவரையும் இவன் ஒரு பகற்போரிலே நல்வலமடங்க வென்றகப்படுத்திக் கொன்றுகளம் வேட்ட ஆரவாரத்தின் அளவைக் கூறுகின்றன. கல்லாடனாரின் அகப்பாடல் ஒன்றிலும் (209) இந்த ஆரவார மிகுதியை அறியலாம்.

3.6.4.3. வியத்தகு வெற்றி

இனி, இத்தலையாலங்கானத்துச் செருவினை வென்று இப்பாண்டியன் நெடுஞ்செழியன் பெற்ற கன்னிப்போர் வெற்றியை அக்காலத்துப் புலவர் பலரும் பலவாறாகப் பாராட்டியும் வியந்தும் பாடியுள்ளவற்றைப் பார்க்கலாம்.

தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து
மன்னுயிர்ப் பன்மையும் கூற்றத்து ஒருமையும்
நின்னொடு தூக்கிய வென்வேற் செழிய (புறம்.19)

எனக் குடபுலவியனாரும்,

ஞாலம் நெளிய ஈண்டிய வியன்படை
ஆலங் கானத்து அமர்கடந்து அட்ட
கால முன்ப! (புறம்.23)

எனக் கல்லாடனாரும், பகைவர்தம் மிகப் பெரும்படையை அழித்த இவனது தகப்பெருந் தறுகண்மையைப் பாராட்டுவர்.

'ஒருவனை ஒருவன் கொல்லுதலும் ஒருவனுக்கு ஒருவன் தோற்றலும் புதுவதன்று; அஃது இவ்வுலகத்து இயற்கையே. ஆயினும் பசும்பூட் செழியனின் பெருமையையும் தலைமையையும் அறியாராய் அவனோடு எதிர்த்துப் போரிடுவோமென்று புறப்பட்டு வந்த எழுவருடைய நல்வெற்றியெல்லாம் அடங்கியழிய இவனொருவனே நின்று பொருது அக்களத்திலேயே அவரனைவரையும் கொன்றதையொத்த அருஞ்செயலை இன்றைக்குமுன்னே எங்கும் கேட்டிலேம்' (புறம்.76) என்று இவனொருவனே எதிர்வந்த எழுவரைக்கொன்ற ஏற்றமிக்க செயலை வியக்கும் இடைக்குன்றூர்கிழார்,

திண்திணி களைந்தகால் ஒண்கழல் தொட்டுக
குடுமி களைந்தநுதல் வேம்பின் ஒண்டளிர்
நெடுங்கொடி உழிஞைப் பவரொடு மிலைந்து
குறுந்தொடி கழித்தகைச் சாபம் பற்றி
நெடுந்தேர்க் கொடுஞ்சி பொலிய நின்றோன்
யார்கொல் வாழ்க அவன் கண்ணி தார்பூண்டு
தாலி களைந்தன்றும் இலனே பால்விட்டு
அமினியும் இன்றுஅயின் றனனே (புறம்.77)

என்ற பாடலடிகளில் இளமையணி களைந்தவுடனே போரணி பூண்டுவந்து தேரிலேறிப் பொலிந்துநின்ற இவனது எழுச்சியை வியந்து வாழ்த்திப் பின்னும்,

> வயின்வயின், உடன்றுமேல் வந்த வம்ப மள்ளரை
> வியந்தன்றும் இழிந்தன்றும் இலனே அவரை
> அழுந்தப் பற்றி அகல்விசும்பு ஆர்ப்பெழக்
> கவிழ்ந்துநிலம் சேர அட்டதை
> மகிழ்ந்தன்றும் மலிந்தன்றும் அதனினும் இலனே
> (புறம்.77)

என்று, இப்போர் நிகழ்ச்சிகளால் திரிபுறாத இவனுடைய உணர்ச்சியின் ஒருமைநிலையை வியப்பார். இன்னும் இவன் பெற்ற இப்போர் வெற்றி குறித்த பாராட்டுக் குறிப்புக்கள் பலவுள (புறம்.25, 26, அகம்.175, மது.55-56)

> தலையாலங் கானத்தில் தன்னொக்கும்
> இருவேந்தரைக்
> கொலைவாளின் தலைதுமித்துக் குறைத்தலையின்
> கூத்தொழித்தும்[17]

எனப் பிற்காலத்து மூன்றாம் இராசசிங்க பாண்டியனின் சின்னமனூர்ச் செப்பேடும் இவனது இப்போர் வெற்றியைப் பாராட்டக் காணலாம்.

3.6.5. வேறுபல வெற்றிகள்

இவ்வாறாகக் கூடற்பறந்தலையில் தொடங்கித் தலையாலங்கானத்திலே முடிந்த இக்கன்னிப் போரிலே வென்று மேம்பட்ட இப்பாண்டியன் நெடுஞ்செழியன், பின்னொருகால் சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையோடு நிகழ்த்திய போரில் அவனை வென்றகப்படுத்திக் கொண்டுவந்து சிறையிட்டான். ஆயினும் அவன் தன் வலிமையால் தானே தப்பித்துப் போய்த் தன்னரசெய்தினான் எனக் குறுங்கோழியூர்கிழார் புறப்பாடல் ஒன்றால் (புறம்.17) அறிகிறோம்.

இன்னும் சேரருடைய முசிறி நகரை முற்றுகையிட்டுப் போருடற்றி வென்றதும் அங்கிருந்ததோர் படிமத்தை (சிலையை)க் கவர்ந்து வந்ததுமாகிய இவன் செய்திகளை,

சேரலர், வளங்கெழு முசிறி ஆர்ப்பெழ வளைஇ
அருஞ்சமம் கடந்து படிமம் வவ்விய
நெடுநல் யானை அடுபோர்ச் செழியன் (அகம்.149)

எனவரும் எருக்காட்டூர்த் தாயங்கண்ணனாரின் அகப் பாடலடிகளால் அறியலாம். மற்று, இம்முசிறிநகரை முற்றுகையிட்டு வென்ற செழியனை முசிறிமுற்றிய செழியனென்ற பெயரோடே இந்நெடுஞ்செழியனல்லாமல் வேறொருவனாகக் கூறுவார் சிவராசப்பிள்ளை.[18] ஆயின், அவனுக்கு முசிறி முற்றிய செழியனென்பதே பெயராகாமையாலும், வேறுபெயர் விளங்காமையாலும், பல பாடல்களில் நெடுஞ்செழியனைப் பாடிய நக்கீரர் தாமே ஒரு பாடலில் (அகம்.57) செழியனின் இம்முசிறி முற்றுகையைப் பாடியிருத்தலாலும், இம்முற்றுகை நெடுஞ்செழியனுக்கு இசையாமைக் காரணமேதும் இல்லாமையாலும் இச்செழியனை வேறொருவனாகக் கூறுதல் வேண்டாத கூற்றேயாம்.

அடுத்து, வேளெவ்வியின் மிழலைக் கூற்றத்தையும் வேளிருடைய முத்தூற்றுக் கூற்றத்தையும் இவன் வென்று கைப்பற்றினான் என்பதை,

ஓம்பா ஈகை மாவேள் எவ்வி
புனலம் புதவின் மிழலையொடு கழனிக்
கயலார் நாரை போர்வில் சேக்கும்
பொன்னணி யானைத் தொன்முதிர் வேளிர்
குப்பை நெல்லின் முத்தூறு தந்த
கொற்ற நீள்குடைக் கொடித்தேர்ச் செழிய (புறம்.24)

எனவரும் மாங்குடி கிழாராகிய மருதனாரின் புறப்பாடலால் அறிகிறோம். மற்றும், மதுரைக்காஞ்சி பாடும்போது அம்மருதனாரே நெல்லினூர் என்னும் ஓரூரை இவன் வென்றானென்றும் விளம்புவார் (மது.75-88).

ஒருமுறை பசும்பூண்பாண்டியனான இந்நெடுஞ்செழிய னுடைய படைத்தலைவன் அதிகனென்பான், வாகைப் பறந்தலையென்னும் போர்க்களத்தே கொங்கரை எதிர்த்துப் பொருத போரில் தான் ஏறியிருந்த களிற்றுடனே வீழ்ந்து மாண்டானாக, அக்கொங்கர் பெரிய வெற்றியாரவாரம் புரிந்தனர் என்பார் பரணர் (குறு.393). அது குறித்து

அக்கொங்கர்மேல் வெகுண்டெழுந்த இவன், தானே படைகொண்டு சென்று அவரைத் தோற்றோடச் செய்து, அவர் நாடுகளைக் கவர்ந்து கொண்டு மீண்டபின், தன் கூடல் நகரிலே ஆடிய வெற்றிவிழாவில் பெரியதோர் இன்னிசையாரவாரம் எடுத்தான் என்பார் நக்கீரர் (அகம்.253).

இன்னும் இவன் தொடர்ந்து பலபோர்களைப் புரிந்து வென்றவனென்பது,

ஒளிறுவாள் தானை கொற்றச் செழியன்
வெளிறில் கற்பின் மண்டமர் அடுதொறும்
களிறுபெறு வல்சிப் பாணன் எறியும்
தண்ணுமை (அகம்.106)

எனவும், பல்லரண் கடந்த பசும்பூட் பாண்டியன் (தொல். பொருள். களவு. நூ.11. நச்சி. உரை மேற்கோள்) எனவும் வருகின்ற பாடலடிகளால் விளங்கும்.

இந்நெடுஞ்செழியன் தன் பெருந்தேவியைப் பிரிந்து போர்த் தொழிலிலேயே ஈடுபட்டவனாய்ப் பாசறையில் இருக்கையில் நக்கீரரால் நெடுநல்வாடை பாடப்பெற்றான்.

இளமை முதலே மறத்துறையில் மேலோங்கி மறப்போர்ப் பாண்டியன் எனக் குறிக்கப்பெற்ற இவன், பின்னர், மாங்குடி மருதனாரால் காஞ்சிப் பொருளாகிய அறமுணர்த்தப் பெற்று, அதுவே பொருளாக மதுரைக் காஞ்சியென்னும் நெடும்பாட்டினையும் கொண்டான்.

3.6.6. அறம் கடைப்பிடித்த செங்கோலன்

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனான இந்நெடுஞ்செழியன், மறமேம்பாடு மட்டுமன்றி அறமேம்பாடுகளும் அமைந்து சிறந்த பாண்பாளனாய்த் திகழ்ந்தான். மாங்குடி மருதனாரைத் தலைமைப் புலவராகக் கொண்டு விளங்கிய புலவர் குழுவை இவன் போற்றிய மதிப்பும், குடிபழி தூற்றாச் செங்கோலனாய் ஆள்வதிலும் இரப்போர்க்கு ஈதலிலும் இவன் கொண்டிருந்த நாட்டமும் மேற்குறித்த இவனுடைய வஞ்சினப் பாடலில் (புறம்.72)

பதிநதுளளன ஒரேயொரு பொயயினால உயாநிலை உலகை அமிழதோடே பெறுவதாயினும அபபொயயினைப போறறாத வகையில் மெய்யோடு நடபுடையவன; இவவுலகப பகைவருடனே மேலுலகத தேவரும கூடிப பகைதது வரினும அபபகைவாககு அஞசிப பணிநதொழுகாதவன; விழுபபொருள பெறுவதாயினும தனகுப பழிவரக கருதாதவன, பொருளைப பிறாககு ஈதல உளளமொடு புகழையே விருமபுபவன எனறெலலாம இவனுடைய பணபுகளைப பாராடடுவாா மாங்குடி மருதனார் (மது.197-205)

குனறோஙகு லைபபின நாடுமீக கூறும
மறஙகெழு தாலை அரச ருளளும
அறஙகடைப பிடதத செஙகோல உடனமா
மறஞசாயத தெழுநத வலனுயா திணிதோள
பலர்புகழ திருவின் பசுமபூட பாண்டியன (அகம 338)

எனறு இவனைக குறிபபிடுவாா மதுரைக கணககாயனாா

இநநெடுஞசெழியன தன ஈகைத திறததால கைவண செழியன (அகம 47,175) எனவும், போர்ததிறததால, வெமபோாச செழியன (புறம.79), மறபபோாச செழியன் (அகம 116), அடுபோாச செழியன (அகம 149, 335, நற 39) எனவும, படைததிறததினால, கொயசுவல புரவிக கொடிததோச செழியன (அகம 36, 57), கடும்பகடடு யானை நெடுநதேதாச செழியன (அகம 296), கலலா யானைக கடுநதேதாச செழியன் (நற 340), வேலகெழு தானைச செழியன (நற 387) எனவும், படையுடன கூடிய வெறறிச சிறபபினால ஒளிறுவாள தானைக கொறறச செழியன (அகம 46, 106) எனவும அடைகளோடே சிறபபிதது அழைகபபெற்றான

37 பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி (கி.பி125-160)

பாணடியன வெளளியமபலத்துத துஞசிய பெருவழுதி, தலையாலஙகானதது செருவென ற பாண்டியன நெடுஞசெழியனுககுப பினவநதவனாகலாம இவனைச சோழன குராபபளளித துஞசிய பெருநதிருமா வளவனோ'- ஒருங்கு கணடு உவநது பாடிய காவிரிபபூம படடினதது காரிகணணனாா,

இவனே, முழுமுதல் தொலைந்த கோளி ஆலத்துக்
கொழுநிழல் நெடுஞ்சினை வீழ்பொறுத் தாங்குத்
தொல்லோர் மாய்ந்தெனத் துளங்கல் செல்லாது
நல்லிசை முதுகுடி நடுக்கறத் தழீஇ
இளையது ஆயினும் கிளையரா எறியும்
அருநரை உருமின் பொருநரைப் பொறாஅச்
செருமாண் பஞ்சவர் ஏறே (புறம். 58)

என்று குறிப்பிடுவார். இக்குறிப்பிலே வருகின்ற குடிப்பெருமிதம் பொதுநிலையிலன்றிச் சிறப்புநிலையில், இளமையிலேயே தலையாலங்கானத்துச் செருவினை வென்று புகழ்நிறுத்திய நெடுஞ்செழியனை நினைவில் கொணர்வதனால், இப்பாடல் அந்நெடுஞ்செழியனின் காலத்தை ஒட்டி அவனது நினைவோடே பாடப்பட்டதென்பதும், அவன் வழித்தோன்றலே இப்பெருவழுதியென்பதும் உய்த்துணரப்படும் உண்மைகளாகும்

இப்பாண்டியன் பெருவழுதி சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனோடு நட்புற்று ஒருங்கிருந்த ஒற்றுமைக்காட்சி, சங்க கால அரசவரலாற்றில் குறிப்பிடத்தக்க பாராட்டுதலுக்குரிய சிறப்புக் காட்சியாய் விளங்குகின்றது.

இவனைப் பாடிய காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாடிய நக்கீரருக்கு ஒத்த காலத்தவரென்பது, இருவருமே இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனைப் பாடியுள்ளமையால் (புறம்.56.57) விளங்கும். எனவே, அந்நெடுஞ்செழியனுக்கும் இவனுக்கும் இடைப்பட்ட காலத்தின் அண்மைநிலை அறியப்படும்.

மற்று, இவ்வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியைப் பலயாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியாக, ஒவ்வாத அளவிலே ஒருங்கிணைத்து, காண்பார் சிவராசப்பிள்ளை.[19] அவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்கு மிக முன்னோனென்பதும் இவன் பின்னோனென்பதும் அறியவருதலால், அவர் ஒருங்கிணைப்பின் ஒவ்வாமை உணரப்படும்.

3.8. பாண்டியன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன் (கி.பி. 135-160)

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு அண்மைக் காலத்தவனாயும் அவனைப் பாடிய மருதனிளநாகனார், நக்கீரர் ஆகியோரால் தானும் பாடப்பெற்றவனாயும் (புறம்.55, 56) அறிய வருபவன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன். வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியைப் பாடிய காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார் தாமும் இவனைப் பாடியுள்ளமையால் (புறம்.57) அவனுக்கும் இவன் அண்மைக்காலத்தவனே என்பது அறியப்படும்.

நன்மாறன் எனப்பெயர் பெற்ற பாண்டியருள், இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனாகிய இவனை முதல்வனாகக் கொள்ள இயலும். பாண்டிய நாட்டில் அமைந்ததோர் இலவந்திகைப் பள்ளியில் இறந்தமையால் இந்நன்மாறன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் எனக் குறிக்கப பெற்றான். இலவந்திகைப் பள்ளியாவது. வேந்தரும் அவர்தம் உரிமை மகளிரும் இளவேனிற் காலத்திலே தங்கி இன்பம் நுகரும் பொய்கையைச் சூழ்ந்த சோலையிடத்து அமைந்த இருக்கையாம்.[20]

3.8.1. வெற்றிமேம்பாட்டு வேந்தன்

இப்பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் தன் காலத்தில் தமிழ் வேந்தர் மூவருள் தானே சிறந்தோனாய் மேம்பட்டு விளங்கினான் என்பார் மதுரை மருதனிளநாகனார்.

கறைமிடற்று அண்ணல் காமர் சென்னிப்
பிறைநுதல் விளங்கும் ஒருகண் போல
வேந்துமேம் பட்ட பூந்தார் மாற (புறம்.55)

என்று அவர், முக்கட் செல்வனாகிய இறைவனுடைய மூன்று கண்களுள்ளும் சிறந்த நெற்றிக் கண்ணை மூவேந்தருள்ளும் சிறந்த இவனுக்கு உவமையாக்கிப் பாடியுள்ள பான்மையால் இஃது உணரப்படும். சிவபெருமானும் பலதேவனும் மாயோனும் முருகனுமென்ற நால்வருள்ளும் சிவ

பண்பினால் சிவனையும், வலிமையால் பலதேவனையும், பகைவரை அழிக்கும் பண்பினால் மாயோனையும் கருதியது முடித்தலால முருகனையும் ஒத்தவனாக இவன் நக்கீரரால் பாடப்பெறுகின்றான் (புறம்.56). மற்றும் தன்னைப் பாடவரும் புலவர் எத்திறத்தாராயினும், அவரால் புகழ்ந்து முடிக்க வொண்ணாத புகழ் மேம்பாட்டிலே மாயோனையொத்தவனாக இவன் காவிரிப்பூம பட்டினத்துக் காரிக்கண்ணனாராலும் பாராட்டப் பெறுவான் (புறம்.57).

3.8.2. அறப்பண்பு அமையாத ஆற்றலன்

ஆயின், இப்பாணடியன் நன்மாறனைக் குறித்து மேலே கண்ட புலவர்களின் பாராட்டுக்களெல்லாம் இவன் போர் மேம்பாட்டைக கருதியனவேயென்று புலப்படுகின்றன. மற்று, அறபபண்பிலே இவன் அத்துணையும் குறைவுற்றிருந்தமை அறிகிறோம். மூவேந்தருள் மேம்பட்டவனென்று இவனை விளித்துப் பாடுகிற மருதனிளநாகனாரும் அதே பாடலில் இவனுக்கு அறப்பண்புகளையே செவியின்கண் அறிவுறுத்தக் காண்கிறோம.

வேந்துமேம் பட்ட பூந்தார் மாற!
கடுஞ்சினத்த கொல்களிறும் கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும் நெஞ்சுடைய
புகல்மறவரும் என
நான்குடன் மாண்டது ஆயினும் மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்
அதனால், நமரெனக் கோல்கோடாது
பிறரெனக் குணம்கொல்லாது
ஞாயிற்று அன்ன வெந்திறல் ஆண்மையும்
திங்கள் அனன தண்பெருஞ் சாயலும்
வானத்து அன்ன வண்மையும் மூன்றும்
உடையை ஆகி இல்லோர் கையற
நீநீடு வாழிய நெடுந்தகை (புறம் 55)

என்று அறிவுறுத்தப் பெறுதலால், இபபண்புகளில் இவன் குறைபட்டிருந்தமை கொள்ளப்படும். அறநெறியின முதன்மை கருதாது, நமரெனக கோல்கோடியும் பிறரெனக் குணங்கொன்றும், பெருந்தன்மையோடு ஈகையும் இல்லாதவனென்பதனாலேயே இவன் அப்புலவரால

இப்பண்புகளெல்லாம் உடையையாகி வாழிய என்று வாழ்த்தப் பெறுகின்றான

காவிரிபூம் பட்டினத்துக் காரிக்கண்ணனாரும் இவனுடைய போர்வெறியைப் போக்கி மாற்றரசர்களோடு சந்து (உடன்பாடு) செய்யுமுகமாகவே துணைவஞ்சித் துறையில மென்மையுறப பாடியுள்ளார்.

உரைசால் சிறப்பின் புகழ்சால் மாற
நின்னொன்று கூறுவது உடையேன் என்னெனின்
நீயே, பிறர்நாடு கொள்ளும் காலை அவர்நாட்டு
இறங்குகதிர்க் கழனிநின் இளையரும் கவர்க;
நனந்தலைப் பேரூர் எரியும் நைக்க;
மின்னு நிமிர்ந்தன்ன ஒளிறிலங்கு நெடுவேல்
ஒன்னார்ச் செகுப்பினும் செகுக்க; என்னதூஉம்
கடிமரம் தடிதல் ஓம்பு; நின்
நெடுநல் யானைக் கந்தாற் றாவே (புறம்.57)

எனவரும் இப்பாடலில், இவன் பகைநாட்டு விளைநிலங்களையெல்லாம் கொள்ளையிடுவதும், பேரூர்களையெல்லாம் தீயிடுவதும், பகைவரையெல்லாம் அழிப்பதும், அவர்தம் காவல் மரங்களையெல்லாம் வெட்டுவதுமாகவே வினைபுரிந்து வருதலைப் புலவர் இடிக்காமல் இடித்துரைத்தல் காணலாம்.

3.8.3. இகழுற்ற செல்வன்

இவைபோலவே இப்பாண்டியன நன்மாறன் தன்னைப் பாடி வரும் பாவலர்களுப் பரிசில் கொடாத இகழ்ச்சியாளனாய்ப் பாடப்பெற்றுள்ளான். ஆவூர் மூலங்கிழார் இவனிடத்துப பரிசில் வேண்டி வந்தபோது, இவன் அவர்க்குக் கொடுப்பான்போல் காட்டிக் காலங்கழிதத்தும் கொடாத நிலையில் அவர் நெஞ்சம் நொந்து, 'நின் புதல்வர் நோய் இலராகுக! நின் வாழ்நாள் சிறப்பதாகுக!' எனக் குறிப்பு மொழியில் இவனை வைது சென்றார் (புறம்.196). அவரேயன்றி வடமவண்ணக்கன் பேரிசாத்தனாரும் இவனைப் புதல்வரோடே பொலிய வாழ்த்தி வந்து பாராடடியிருந்தபோது, இவன் அவருக்கும் அளித்திலனாக, அவரும் இவனை வெறுத்து இகழ்நது பாடிப போயினார்.

தண்டமிழ் வரைப்பகம் கொண்டி யாகப்
பணித்துக் கூட்டுண்ணும் தணிப்பருங் கடுந்திறல்
நின்னோர் அன்னநின் புதல்வர் என்றும்
ஒன்னார் வாட அருங்கலம் தந்துநும்
பொன்னுடை நெடுநகர் நிறைய வைத்தநின்
முன்னோர் போல்கஇவர் பெருங்கண் ணோட்டம்
(புறம்.198)

என்ற அவர் பாடல் அடிகளில், இவனுடைய கண்ணோட்டமின்மை யால் முன்னோர் பின்னோர் கண்ணோட்டமின்மையும் சேர்ந்து வெளிப்படுகின்றன. இவனும் இவன் புதல்வருமேயன்றி முன்னோரும் கூடப் பகைவரை ஓட்டி, அவர்தம் பொருள்களைக் கொள்ளையிட்டுக் கொண்டுவந்து யார்க்கும் கொடுக்காதே குவித்து வைத்த கண்ணோட்டமின்மை அப்புலவரால் இகழப்படுகின்றது. முடிவாக, அவர் தம்மை மதித்தளிக்காத இவனை,

யாண்டும் நாளும் பெருகி ஈண்டுதிரைப்
பெருங்கடல் நீரினும் அக்கடல் மணலினும்
நீண்டுயர் வானத்து உறையினும் நன்றும்
இவர்பெறும் புதல்வர்க் காண்டோறும் நீயும்
புகன்ற செல்வமொடு புகழினிது விளங்கி
நீடு வாழிய நெடுந்தகை (புறம்.198)

என்று வெறுப்போடே வாழ்த்திச் செல்கின்றார்.

இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனின் கண்ணோட்டமில்லாத முன்னோர் என்று வடமவண்ணக்கன் பேரிசாத்தனாரால் குறிப்பிடப் பெறுவோரை இன்னாரென்று கருதக்கூடவில்லை. ஆயினும், நன்மாறனின் புதல்வராகக் குறிப்பிடப்பெறுவோருள் ஒருவனாகக் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதியைக் கருதலாம். இது, மேலே அவன் வரலாற்றில் காணப்படும்.

39. பழையன் மாறன்
(கி.பி. 150-175)

பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனை ஒட்டி, அவன் தாயத்தினனென்று கருதத்தக்க

முறையில அறிய வருபவன பழையன மாறன நனமாறனைப பாடிய நககீரரே இவனைபபம அகபபாட ல ஒர நில குறித்தலால, இருவருகிடையிலான காலததொட பர கருதப்படும

தொடுந்தோ, இழையணி யானைப பழையன மாறன
மாடமலி மறகிற கூடல ஆஙகண
வெளளத் தானையொடு வேறுபுலதது இறுதத
கிளளி வளவன நலலமா சாஅயக
கடுமபரிப புரவியொடு களிறுபல வவவி
ஏதில மனனா ஊஙகொளக
கோதை மாபன உவகையிற பெரிதே (அகம 346)

எனவரும அபபாடலடிகளில, சோழன கிளளி வளவன பெரும்படையோடே வந்து கூடல மாநகரிமேல முறறுகையிடடுத தஙகி, இபபழையன மாறனை நலலாரிமேல சாயதது வென்று, இவனுடைய புரவிகளோடே களிறுகளையும கவாநது, ஊரையும கைபபறறிக கொணடானாக, இவனை ஏதில மனனனாகக கொணடிருநத சேரமான கோகதோளை மாபன பெரிதும உவந்தனன எனறு அறிகிறோம

310 இளம் பழையன் மாறன்
(கிபி 155-175)

பழையன மாறனுககுத தமபியெனற முறையில அறிய வருபவன இளமபழையன மாறன இவன தன காலதது சோழவேநதனான கோபபெருஞசோழனமேல படை சென்று சேரமான இளஞசேரல இரும்பொறையுட னை போரிட்டு அவனால வெலலபபடடோனாக அறிய வருகினறான

பொததி யாணட பெருஞசோ றூணையும
விததை யாணட இளமபழையன மாறனையும
வைதத வஞசினம வாயபப வெனறு (பதி 11 9)

எனவரும இளஞசேரல இரும்பொறையின வெறறி குறிபப பதிறறுபபததின பதிகததால இதனை அறிகிறோம அதனால இவன இளஞசேரல இரும்பொறையால வெலலபபட வரலாறு தெளிவற விளஙகவிலலை

இவன், வித்தையாண்ட இளம்பழையன் மாறனென்று சிறப்பிக்கப் பெறுதலால் இவனது கல்வி மேம்பாடு கருதப்படும். அல்லது தமிழ்ச் சங்கத்தைப் புரந்த தகைமையினாலும் இவன் இவ்வாறு குறிக்கப்பெற்றானாதல் கூடும்.

311. பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் (கி.பி.160-180)

நெடுஞ்செழியன் எனப் பெயர்பெற்ற பாண்டியருள் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் இரண்டாமவன் ஆவான். முதலாமவனான தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின் பெயரன் என்று இவனை எண்ணலாம்.

இந்நெடுஞ்செழியன் சங்கப்புலவர் எவராலும் பாடப்பெறவில்லை. ஆயினும் புலமை வேந்தனாய் விளங்கிய இவன், தானே கல்விச் சிறப்புக் குறித்துப் பாடிய பாடலொன்று புறநானூற்றிலே (183) இடம் பெற்றுள்ளது.

சிலப்பதிகாரக் கதை வரலாற்றில் வருகின்ற நெடுஞ்செழியன் இவனேயென்று காண்கிறோம்.

வடவாரியர் படைகடந்து
தென் தமிழ்நாடு ஒருங்குகாணப்
புரைதீர் கற்பின் தேவி தன்னுடன்
அரைசு கட்டிலில் துஞ்சிய பாண்டியன்
நெடுஞ்செழியன் (சிலம்பு. மதுரை. கட்டுரை)

என்று இவனைத் தெளிவுறக் குறிப்பிடுவார் இளங்கோவடிகள். எனினும் இவன் ஆரியப்படைகடந்த செய்தி சிலப்பதிகாரத்திலும் விளக்கமுறவில்லை. மற்று, அவ்வெறறியின் தொடர்ச்சியாக இவன் இமையத்தில் கயல்பொறி பொறித்த செய்தி மட்டும் குறிக்கப்பெறுகின்றது.

கயலெழுதிய இமய நெற்றியின்
அயலெழுதிய புலியும் வில்லும்
நாவலந்தண் பொழில் மன்னர்
ஏவல்கேட்பப் பார்அரசாண்ட
மாலை வெண்குடைப் பாண்டியன் (சிலம்பு.17: 1-5)

என்று அக்குறிப்பு அமைகின்றது.

இவன் வினையின் விளைவாய்க் கோவலனை ஆராயாதே கள்வன் எனக் கொலைப்படுத்தற்கு ஏவி, பின் அவன் கள்வனல்லன் என்பதைக் கண்ணகியின் வழக்குரையால் உணர்ந்தவுடன்,

> யானோ அரசன் யானே கள்வன்
> மன்பதை காக்கும் தென்புலங் காவல்
> என்முதற் பிழைத்தது கெடுகஎன் ஆயுளென
> (சிலம்பு. 20: 75-77)

மயங்கி வீழ்ந்து மடிந்ததைச் சிலப்பதிகாரம் காட்டும்.

312. பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி (கி.பி.160-185)

பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனின் மகனென்று மதிக்கத்தக்க முறையில் அறிய வருபவன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி. மாறன் வழுதியென்ற இயற்பெயரை நோக்கி இவனை நன்மாறனுக்கு மனனென மதிக்கிறோம். நன்மாறனைப் பாடிய மதுரை மருதனிள நாகனார் தாமே இவனையும் பாடியுள்ளமையால், அந்நன்மாறனே இவன் தந்தையென்பது இசையும். தமிழ்நாட்டு எல்லை முழுதும் வென்று கொண்டி (கொள்ளை) கொண்டவனாக இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனைப் பாடிய வடமவண்ணக்கன் பேரிசாத்தனார், அவனை ஒத்தவராகவே அவன் புதல்வரையும் குறித்தமை கண்டோம். அம்முறையில் இம்மாறன் வழுதியும், 'தண்டமிழ் (நாடு) பொதுவெனப் பொறாஅன் போர் எதிர்ந்து, கொண்டி வேண்டுவன்' (புறம்.51) என்று ஐயூர் முடவனாரால் குறிக்கப்பெறுகின்றான். இதுவும் இதுபோன்ற பிறவுமான ஒற்றுமைப் பண்புகள் இங்கே உணரத்தகும்.

இம்மாறன் வழுதி, நன்மாறனைப் போன்றே வலிமையும் சினமும் வாய்ந்த போராற்றல் மேம்பட்டவன் என்பது, இவனைப் பாடிய ஐயூர் முடவனார் (புறம்.51), மருதனிளநாகனார் (புறம்.52) ஆகிய இருவர் பாடல்களாலுமே நன்கு விளங்குகின்றது.

> நீர்மிகின் சிறையும் இல்லை; தீமிகின்
> மன்னுயிர் நிழற்றும் நிழலும் இல்லை;

வளிபிகின் வலியும் இல்லை; ஒளிமிக்கு
அவற்றோர் அன்ன சினப்போர் வழுதி (புறம்.51)

என்று இவனுடைய எதிரிலாப் போராற்றலை எடுத்துப் பாடுவார் ஐயூர் முடவனார். 'தமிழ்நாடு மூவேந்தர்க்கும் பொதுவெனக் கூறப் பொறாதவனாய் இவன் போர்க்கெழுந்து கொண்டியை (கொள்ளையை, திறையை) வேண்டுவனாயின், கொள்கவென்று முன்னமே கொடுக்கும் மன்னர் நடுக்கம் தீர்வார்; கொடாமையால் இவனருளை இழக்கும் அரசர் இரங்கத் தக்கவரே! கறையானின் புற்றீசல்போல ஒரு பகல் வாழ்க்கைக்கே அவர்கள் உழல்வோர் ஆவர்' என்று அப்புலவர் தொடர்ந்து கூறுவது இவனது மேலாண்மையைக் காட்டும்.

தமிழ்நாட்டு எல்லையையும் தாண்டி வடநாட்டின் மேலும் இவன் படைகொண்டு சென்றதை மருதனிளநாகனார் பாடலால் அறிகிறோம். உறங்கியெழுந்து மூரிநிமிர்ந்த புலியேறு ஊனை விரும்பிய உள்ளம் செலுத்துதலால், அவ்விரையைக் கருதி அது தான் வேண்டுமிடத்தே விரும்பிச் சென்றாற் போல்,

வடபுல மன்னர் வாட அடல்குறித்து
இன்னா வெம்போர் இயல்தேர் வழுதி
இதுநீ கண்ணியது ஆயின் இருநிலத்து
யார்கொல் அளியர் தாமே ஊர்தொறும் . . .
காடாகி விளியும் நாடுடை யோரே (புறம்.52)

என்று இவனை நேர்பட வினவுவார்போல் அவர் இவனது ஆற்றலை எடுத்துப் பாடுவதில் இது புலனாம்.

முடிவிலே இம்மாறன வழுதி கூடகாரம் என்னும் இடத்தே இறந்தமையால் பின்னர் இக்குறியீடு பெற்றான்.

313. பாண்டியன் அறிவுடை நம்பி
(கிபி. 165-190)

பாண்டியன் அறிவுடைநம்பியை இளம்பழையன் மாறனின் வழித்தோன்றல் என்னலாம். இளம்பழையன் மாறனைக் கோபபெருஞ்சோழன் காலத்தவனாக முன்பே கண்டோம். அக்கோப்பெருஞ்சோழனின் காலத்திற்

குள்ளாகவே அறிவுடைநம்பியும் பாண்டிய நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்ததை அறிகிறோம். பாண்டியன் அறிவுடைநம்பிக்கு அரசியலறிவு புகட்டிப் பாடிய புலவர் பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழனுக்கு நண்பராய் அவனோடே அமர்ந்து வடக்கிருந்த வரலாறு கொண்டு இன்னோர் கால முறைமையைக் கணிக்கலாம்.

அறிவுடைநம்பி ஆட்சிப் பொறுப்பினை ஏற்றவுடன் தன் இளமையினாலும் மென்மையினாலும் அரசியலில் தரமறியாத மாக்களை உடனிருத்திக் குடிகளிடமிருந்து அன்புகெடுமாறு இறைப்பொருளை (வரி) வாங்கி, அது தொடர்பாகப் பிசிராந்தையாரால் அறிவுறுத்தப் பெற்றான் (புறம்.184).

பிற்காலத்தில் இவன் தானும் புலமை பெற்றுச் சிறந்த பாடல்களைப் பாடியுள்ளான் (புறம்.188; அகம்.28; நற். 15; குறு.230). மக்கட்பேற்றின் மாண்பும் அஃதில்லாமையின் இழிவும் குறித்த இவனது புறப்பாடல் சிறந்த பொருள்நலம் சான்றது.

314. பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன் (கி.பி.185-210)

நன்மாறன் எனப் பெயர் பெற்ற பாண்டியருள் இவனை இரண்டாமவனாகக் கொள்ளலாம். முதலாமவனான இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனின் பெயரனென்றும், கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதியின் மகனென்றும் இவனை மதித்தல் கூடும்.

இவன் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனாரால் மட்டும் ஒரே பாடலில் (புறம்.59) பாடப்பெற்றுள்ளான். அதில் பகைவர்க்கு வெம்மை ஒழியாத ஞாயிற்றையொத்தும், இரவலர்க்குத் தண்மையை ஊட்டும் திங்களையொத்தும் திகழ்ந்து, யாவர்க்கும் உவந்து அருளவல்லவனென்றும், யாவரிடத்தும் பொய்யை மெய்யாகத் தெளியமாட்டானென்றும் இவனுடைய இருவகைப்பட்ட நற்பண்புகள் நன்கு எடுத்துக் கூறப்பெறுகின்றன.

முடிவில் இவன் பாண்டிய நாட்டில் அமைந்ததோர் சித்திரமாடத்துத் தங்கியிருந்து துஞ்சினமையால் இப்பெயர் பெற்றான்.

315. பாண்டியன் கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி (கி.பி.190-215)

கடைச்சங்கத்தைப் புரந்த பாண்டியவேந்தருள் இறுதிவேந்த னென்று இறையனார் களவியல் குறிப்பிடுகின்ற உக்கிரப்பெருவழுதியே கானப்பேரெயில் வென்றுகொண்ட சிறப்பினால் கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி எனப் பெயர்பெற்றான். வேங்கை மார்பன் என்பானுக்குரிய கானப்பேரெயிலை இவன் வென்று கைக்கொண்ட வெற்றியை ஐயூர் மூலங்கிழார் சிறப்போடே எடுத்துப் பாடியுள்ளார். நிலவெல்லையைக் கடந்து பாதலத்தே செல்லுமாறு ஆழ்ந்தகன்ற அகழியையும், உயர்ச்சியால் வானளாவிய மதிலையும், வானிலே மீன் பூத்தாற்போலும் வடிவமைந்த சூட்டினையும், வெயிற் கதிர் நுழையாத மரம் அடர்ந்த காவல் காட்டினையும் உடையதாய், பகைவர்களால் அணுகுதற்கரிய சிற்றரண்களால் சூழப்பட்ட கானப்பேரெயிலை, தீயின்கண் பழுக்கக் காய்ந்த இரும்பினால உறிஞ்சப்பட்ட நீரைப்போல் மீட்டற்கு அரிதென்று கருதி வேங்கை மார்பன் வருந்துமாறு இவன் வென்று கைப்பற்றிக் கொண்டான் என்பார் அபபுலவர் (புறம்.21). இவவெற்றியினால் இவனது போராற்றல நன்கு புலப்படும்.

ஆடுகொளக் குழைந்த தும்பைப புல்வர்
பாடுதுறை முற்றிய கொற்ற வேந்தே (புறம்.21)

எனறு, அவர் இவனை விளித்துப் பாடுவதிலும் இது விளக்கமாம்.

இவ்வாறு வெறறி வேநதனாய விளங்கிய உக்கிரப் பெருவழுதி ஒற்றுமைப் பண்பிலும் உயர்ந்து விளங்கினான். சேரமான மாரி வெண்கோவும் சோழன் இராசசூயம் வேட்ட பெருநறகிளளியுமாகிய ஏனை இருபெருவேந்தருடனும் இவன் நடபுறறு ஒருங்கிருந்த நிலையில் ஔவையாரால் உவந்து வாழததப் பெற்றான (புறம.367)

இவன சிறந்த புலமைத்திறனும பொருந்தத திகழ்ந்தமை குறிஞ்சியும மருதமுமாகிய இரு திணைகளுக்கும் ஒவவொன்றாக இவன பாடியுள்ள அகத்துறைப பாடல்கள இரணடும முறையே நறறிணையிலும (98) அகநானூறறிலும (26) இடமபெறறு அமைந்துளளன

இவ்வெல்லாச் சிறப்புக்களுக்கும் மேலாக இவன் மதுரை உப்பூரிகுடிகிழார் மகனாகிய உருத்திரசன்மனைக் கொண்டு அகநானூற்றைத் தொகுப்பித்தான் (அகம். பாயிரம்) என்பதும், இவனுடைய அவையின்கண் திருக்குறள் அரங்கேறியதென்பதும் இவன் புகழ் நிலைக்கத் தக்க செய்திகளாம். திருக்குறளுக்குப் பாயிரம் போல் அமைந்த திருவள்ளுவமாலையில் அசரீரி, நாமகள், இறையனார் ஆகியோர் பாடல்களை அடுத்துச் சங்கப்புலவருள் இவன் பாடலே முதலாவதாக இடம்பெற்றுள்ள சிறப்பும் உணரத் தகுவது ஒன்றாம்.

316 பாண்டியன் பன்னாடுதந்த மாறன் வழுதி (கி.பி.200-225)

பாண்டியன் பன்னாடு தந்த மாறன்வழுதியைக் கடைச்சங்கத்து இறுதிப்பாண்டியனான உக்கிரப் பெருவழுதியோடு ஒட்டிய காலத்தவனென்று கருதலாம். உக்கிரப்பெருவழுதியின் பாடலையும் உட்படுத்திய நற்றிணையை இப்பன்னாடுதந்த பாண்டியன் மாறன் வழுதியே தொகுப்பித்தான் என்பதனால் இது விளங்கும்.

மற்று, இப்பன்னாடு தந்த பாண்டியனே நிலந்தரு திருவின் நெடியோனென்றும், இவனே இரண்டாம் நெடுஞ்செழியனென்றும் பண்டைத்தமிழர் காலமுறையென்ற ஆங்கில நூலின் ஆசிரியர் சிவராசப்பிள்ளை மொழிவார்.[21] அவர்மொழி முற்றும் முரணாகும். தலைச்சங்கத்து முடிவிலும் இடைச்சங்கத்து முதலிலும் இருந்தவன் நெடியோனென்பது முன்பே காணப்பட்டது. இப்பன்னாடுதந்த பாண்டியனோ கடைச்சங்கத்தின் இறுதிக் காலத்தவனென்று அறியவருதலால் அவனையும் இவனையும் ஒருவனென்பதே முதலில் ஒவ்வாது. அதற்கு மேலும் இவனை நெடுஞ்செழியனென்பதற்கு ஏற்புடைச் சான்று ஏதுமில்லை.

இவனால் தொகுப்பிக்கப்பட்ட நற்றிணையில் இவன் பாடிய பாடல்களும் இரண்டு (97, 301) இடம்பெற்றுள்ளன. இவையேயன்றியும் குறுந்தொகையிலும் இவன் பாடலொன்று (270) காணப்படுகின்றது. இவற்றால் இவனது புலமைநலம் நன்கு புலனாகின்றது.

பனனாடுதந்த பாண்டியன் என்பதனால இம்மாறன் வழுதி பலநாடுகளை வென்று கொண்டானென்பது விளங்கும ஆயினும்,

மலிதிரை ஊர்ந்துதன் மண்கடல் வவ்வலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நாடு இடம்பப்
புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்
(கலி.104)

எனக் கலித்தொகையில் குறிக்கப்பெறற தென்னவனாகவோ,

பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுககத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை ஆண்ட தென்னவன் (சிலம்பு.11: 19-22)

என்று சிலப்பதிகாரத்திலே குறிப்பிடப்பெற்ற தென்னவனாகவோ இவனைக கருதுதற்கில்லை. காரணம், கலிததொகைப் பாடல் காடடும் தெனனவன இடைச்சங்கத்தின் இறுதியில கடல்கொள்ளபபடடு வநது கடைச்சங்கத்தை அமைத்த முடத்திருமாறனென்றும், சிலப்பதிகாரம் காட்டும் தென்னவன் முதற்சங்கத்து முடிவில் கடல்கோட்பட்டு வந்து இடைச்சங்கம் ஏற்படுத்திய நிலந்தருதிருவின் பாண்டியனான ஆழிவடிம்பலம்ப நின்ற நெடியோனென்றும் தகக ஏதுக்களோடே முன்னர்க் கண்டோம். இப்பன்னாடு தந்த பாண்டியன் கடைச்சங்கத்து இறுதிப் பாண்டியனான உக்கிரப்பெருவழுதியின் காலத்தை ஒட்டியவனென்பது இங்கே மீண்டும் கருதத்தகும். எனவே, இவனுக்கு அப்பாடற்செய்திகள் இசையமாட்டா. மற்று, இவன் வேறுபல நாடுகளை வென்று கொண்டமையால் இப்பெயர் பெற்றிருக்கலாம்.

3.16.1 பன்னாடு: பனைநாடு

அன்றியும் இம்மாறன் வழுதி வென்று தந்த பன்னாடு என்பது, பல்நாடு எனப பிரிந்து நின்று பொருளபடுவதோடு, பனைநாடு எனவும் பொருள்படும்: பன்னாடை என்பது பனையாடை எனப பொருள்படுதல் போல! ஏழ்குறும்பனை

நாடொன்று இருந்து கடல கொள்ளப்பட்ட செய்தியையும் சிலப்பதிகார அடியார்க்கு நலலார் உரையினால (9:1-2 உரை) அறிகிறோம். அவ்வாறு பனைநாடு என்ற பன்னாட்டை வென்று தந்தமையாலும் இவனுக்கு இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். இஃதொரு கருத்தேயன்றி முடிபன்று.

அடிக்குறிப்புக்கள்

1. நளவெண்பா, சுயம்வர காண்டம், பா.137
2. வில்லிபுத்தூராழ்வார் மகாபாரதம், பதினைந்தாம் போர்ச்சருக்கம், பா.18
3. திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம் மற்றும் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம்- கடல்சுவறவேலிட்ட படலங்கள.
4. பேரா. க. வெள்ளைவாரணனார். தமிழ் இலக்கிய வரலாறு: தொல்காப்பியம், ப.33.
5. நோக்கு: மேலது, ப.32.
6. மகாவித்துவான் இரா. இராகவையங்கார் - தமிழ் வரலாறு, பக்.36-38.
7. பேரா. க. வெள்ளைவாரணனார் - தமிழ் இலக்கிய வரலாறு: தொல்காப்பியம், ப.64
8. மேலது, ப. 60
9. Vide- T.R. Sesha Ayengar - Dravidian India, pp.251-252
10. K.N. Sivaraja Pillai - The Chronology of the Early Tamils, pp.131-133.
11. நோக்கு: உ.வே. சாமிநாதையர்- புறநானூறு பாடினோர் வரலாறு: ஒல்லையூர்தந்த பூதப்பாண்டியன்
12. V.A.Smith-Early History of India, p.452
    - vide. N. Subrahmanian -Sangam Polity., p.28.
13. K.N.Sivaraja Pillai - The Chronology of the Early Tamils. Table-II.
14. Ibid.pp.98-102

15. Ibid.pp.120-124
16. Ibid.pp.144-146
17. நோக்கு: தி. வை. சதாசிவப்பண்டாரதார்- பாண்டியர் வரலாறு, சேர்க்கை, ப.16
18. K.N. Sivaraja Pillai- The Chronology of the Early Tamils, pp.151-152.
19. Ibid.pp.131-133.
20 நோக்கு: சிலப்பதிகாரம், 10: 31 அடியார்க்கு நல்லார் உரை
21. K.N. Sivaraja Pillai - The Chronology of the Early Tamils pp/120-124.

4. சோழவேந்தர் வரலாறு

சங்ககாலச் சோழ வேந்தர்களாகப் பதின்மூவர் அறிய வருகின்றனர். சங்கப் பாடல்களைக் கொண்டு இவர்களின் வரலாற்று முறைமையை ஒருவாறு காணலாம்.

சோழர்களுக்கு முதன்மையானதும் சிறப்பானதுமான தலைநகர் உறந்தையெனப்படும் உறையூரே. சோழ வேந்தருள் சிலர் ஆவூரையும் தலைநகராகக் கொண்டு ஆண்டிருக்கின்றனர். பின்னர்க் கரிகாற்பெருவளத்தான் காவிரிப்பூம்பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டானென்று அறிகின்றோம். சோழவேந்தர் கிள்ளியென்றும் சென்னியென்றும் குடிப்பெயர் கொண்டு விளங்கினமை காண்கிறோம்.

41. **தித்தன்** (கி.பி.30-60)

சங்க காலத்தே உறையூரிலிருந்து ஆட்சிபுரிந்த சோழவேந்தருள் முதல்வனாகக் கருதத்தக்கவன் தித்தனே. இவனே அகப்பாடல்களாலும் புறப்பாடல்களாலும் சிறப்புற அறிய வருகின்றான். போர்வன்மை கைவண்மைகளோடே இவன் நாடுகாவற் சிறப்பும் வாய்ந்தவனாகக் காணப்படுகின்றான்.

இத்தித்தன் இருந்து ஆட்சிபுரிந்த உறந்தை நகரைப் பாடல்களில் (புறம்.352, 395 அகம்.6, 122, 226) இவனோடு சார்த்திக குறிகளப் பெறுகின்றதை நோக்க, அந்நகர் முதலில் இவனாலேயே சிறப்புற்றது எனக் கருதலாம்.

இத்தித்தனுடைய உறந்தை நாளோலக்கம் மிக்க ஆரவாரமுடையது. ஒரு காலத்து இவனொடு போரிடுவதற்குப் பாணன் என்பவனுடன் கூடிவந்த கட்டியென்பான், இவனது நாளோலக்கத்தில் எழுந்த கிணையொலி கேட்டே அஞ்சிப் போரிடாமல் ஓடினான். இதனை,

வலிமிகு முன்பின் பாணனொடு மலிதார்த்
தித்தன் வெளியன் உறந்தை நாளவைப்
பாடின் தெண்கிணைப் பாடுகேட்டு அஞ்சிப்
போரடு தானைக் கட்டி
பொராஅது ஓடிய ஆர்ப்பு (அகம்.226)

எனவரும் பரணரின் பாடலடிகளால் அறியலாம்.

தித்தனாகிய இவனே தித்தன் வெளியனென்றும் இப்பாடலில் மட்டுமன்றி இன்னொரு பாடலிலும் (அகம்.152) குறிப்பிட்டுப் பாடப்பெற்றுள்ளான். வீரை வேண்மான் வெளியன் தித்தன் என்று நற்றிணைப் பாடலொன்றில் (58) முதுகூற்றனாரால் குறிப்பிடப் பெறுவோனும் இவனேயென்பது, அதன் உரையாசிரியராகிய பின்னத்தூர் நாராயணசாமி ஐயரின் உரைப்பகுதியால் விளங்குகிறது. அப்பெயர்த் தொடரில் அமைந்த வீரை என்பது ஓர் ஊரென்றும், அவ்வூர் வேளிர்க்கு உரியதென்றும்,

அடுபோர் வேளிர் வீரை முன்றுறை
நெடுவெள் உப்பின் நிரம்பாக் குப்பை (அகம்.206)

எனவரும் அகப்பாடலடிகளால் அறியவருகின்றன. பெண்ணையாற்றின் வடகரை நாட்டில் புதுச்சேரிக்கருகில் இக்காலத்து வீராம்பட்டினமென வழங்கும் ஊரே வீரையென்பார் ஔவை. துரைசாமிப்பிள்ளை (புறம். 320-முன்னுரை). மேற்கண்ட அகப்பாடலடிகளிலும் அவ்வூர் கடற்கரையூரெனக் காணப்படுகின்ற குறிப்பிற்கு அவர் கூற்று பொருந்தியதே! ஆதலால் வீரை நகரையுடைய வேளிர் குடியினனான வெளியன் தித்தனே, வீரை வேண்மான் வெளியன் தித்தன் எனக் குறிக்கப்பெற்றான். இப்பெயர்க்கு விளக்கம் கூறும் உரையாசிரியர் பின்னத்தூரார், உறையூரின்கண் அரசாண்ட வீரை வேண்மான் வெளியனென்னும் தித்தன் எனபார் (நற். 58 உரை). எனவே, வெளியனென்பதும் தித்தனென்பதும் ஒருவனுக்கேயுரிய

இருபெயாகள என்றும, அவை முனனும பினனும மாறியே வெளியனதிததனெனவும் திததனவெளியனெனவும வநதனவெனறும கருதலாம

இவவாறறால வீரை வேணமான வெளியன திததனெனற இவன, பிறபபிலே வேளிா குடியினெனபதும பின் சிறபபினால சோழநாட டு வேநதனாகிச சோழா குடியிலே மகடகொடை கொணடு மருவினெனபதும அறிய வருகினறன

இததிததன சிறநத புலவனாகவும திகழநதான இவன பாடிய பாடலகள புறநானூறறில ஒனறும (320) அகநானூறறில ஒனறும (188) காணபபடுகினறன

42 சோழன் போர்வைக்கோப் பெருநற்கிள்ளி (கி.பி60-85)

திததன மகன போாவைககோப பெருநறகிளளி, தநதையின ஆடசிக காலததில யாது காரணததாலோ அவனோடு கருதது வேறுபடடு அவனிடததிருநது நீஙகிப போயப புலலரிசியுணவை உணணும வறியனாகியும (புறம 84) வலியனாய மறபோர் முதலான போாப பயிறசிகளில தோநது திகழநதான அககாலததுத திததனது தனிமை கணடோ அலலது அவனது தளாச்சி கணடோ அவனுடைய ஊரைக கைபபறறிக கொளளுமாறு (புறம 82) வநத முககாவல நாட டு ஆமூா மலலனைத தகக நிலையில இபபெருநறகிளளி கடுகது அவனோடே தனிபபோா புரிநது அவனைக கொனறான அதனை அருகிலிருநது வியநது கணட புலவா சாததநதையார இவனது அவவெறறியை இவன தநதையாகிய திததன விருமபினும விருமபானாயினும காணபானாக எனறு கருதிப பாடியுளளார (புறம் 80) தன தநதையுடன வேறுபட டு வெறுதது வநதவன, அததநதைககு எதிராக மறறொருவன மணடிவநத போருடபுகுநது அமமாறறானை மடிததது கணடால, இவனை அவன விருமபுவான விருமபானாயினும அஞசுவான எனற கருததிலேயே அபபுலவா அவவாறு பாடினார

இவனிடததுக கைககிளைக காதல சொணட முறையில நககணணையாராலும இவனுடைய இபபோா நிகழசசிகள பாட பபெறறுளளன (புறம 83 85)

மற்று, இப்போருக்குப் பின் இவனுக்கும் இவன் தந்தைக்கும் இடைப்பட்ட செய்திகளோ இவனுடைய அரசியல் வரலாறுகளோ அறியக் கூடவில்லை.

43. சோழன் முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளி (கிபி70-100)

சோழன் முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளியை உறையூராண்ட சோழருள் மூன்றாமவனாகக கொள்ளலாம். முடித்தலைக்கோ என்ற பெயரைக் கொண்டு இவனே சோழர் மரபில் முடியணிந்தாண்ட முதல் வேந்தன் என்பார் அறிஞர் சிவராசப் பிள்ளை.[1]

உறையூராண்டிருந்த இப்பெருநற்கிளளி ஒருகால் தான் ஏறியிருந்த களிறு மதத்தினால் நெறிகெட்டுப் பகை நகராகிய கருவூருக்குள் ஓடியதாக, அப்போது அந்நகர் வேண்மாடத்தின் மேலிருந்த சேரமான் அந்துவஞ்சேரல் இரும்பொறை, தன்னுடனிருந்த உறையூர் ஏணிச்சேரி முடிமோசியாரை நோக்கி இவன் யாரென்று வினவ, அவர் இவனை இன்னானென்று கூறுவதாகப் புறநானூற்றிலே ஒரு பாடல் (13) காணப்படுகின்றது. இவன் யானைமேல் எறிய அளவில் அது மதங்கொண்டு கருவூருக்குள் ஓடியதெனவே, இவன் அக்கருவூர்ப்புறத்தே போர் குறித்துப் படையோடே சென்றவனாதல் வேண்டும். எனவே, நகரை அணுகிய அளவினில் யானை மதம் பட்டது என்று மதிப்பதே மாண்பாகும். அல்லாமல் உறையூரிலே மதம்பட்ட யானை கருவூருக்குள் ஓடியதென்றல் மிகையாதல் உணரப்படும்.

இனி, இம் முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளியை இன்னானென்று தானே அறியாது அடுத்தவரிடம் வினவிய அந்துவஞ்சேரல் இரும்பொறைக்கு இப்பெருநற்கிள்ளி அறிமுகமாகாதவனென்பதும், அதனால் அவன் இவனுக்குப் பகைவனல்லனென்பதும், அக்காலத்தே அவன் ஆட்சியில் இருந்து நீங்கிய முதியனென்பதும், அவனுக்குப் பின்னோனான சேரவேந்தன் செல்வக்கடுங்கோ வாழியாதனே இவனுக்குப் பகைவனாவானென்பதும் அறியப்படும். ஆதலால் இப்பெருநற்கிள்ளியை அந்துவஞ்சேரலுக்கும் அவன் மகன் செல்வக் கடுங்கோவுக்கும் ஒத்த காலத்தவனென்று உணர்தல் வேண்டும்.

இப்பெருநற்கிள்ளி தான் ஏறியிருந்த யானை மதமுற்றுப் பகைநகரான கருவூருக்குள் புகுந்ததனால், 'தீங்கின்றிப் பெயர்வானாகுக' என்று ஏணிச்சேரி முடமோசியாரால் இவன் வாழ்த்தப் பெறுகின்றான்.

4.4. சோழன் உருவப் பல்தேர் இளஞ்சேட்சென்னி என்னும் நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி (கி.பி.75-90)

சோழன் முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளியின் ஆட்சிக் காலத்திலேயே சோழ நாட்டின் கிழக்குப் பகுதியை ஆண்டிருந்தவன் என்று சுருதத்தக்க முறையில் அறிய வருபவன் சோழன் உருவப் பல்தேர் இளஞ்சேட் சென்னி.

இளஞ்சேட் சென்னியென்பதே இவனது இயற்பெயர். அஞ்சத்தக்க அலகு அழகிய பல தேர்ப்படைகளையுடைய சிறப்பினாலோ அத்தேர்ப்படை களைக் கொண்டு பகைவரோடு போரிட்டு வென்ற சிறப்பினாலோ இவன் உருவப் பல்தேர் இளஞ்சேட் சென்னியென்று குறிக்கப் பெற்றான.

சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னியென்று குறிக்கப் பெற்றோனும் (புறம். 10, 203) இவனேயாதல் வேண்டும்.[2] நெய்தலங்கானலை இவனது ஊரென்பார் புறநானூற்றுப் பழையவுரையாசிரியர் (புறம். 10 உரை). அஃது இவன பிறந்த ஊராகலாம். அடுத்து, சேரமானுக்குரிய பாழூரை வென்றழித்தபோது இவன், 'சேரமான் பாழூரெறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி' என்றும், வடுகராட்சியிலிருந்த போர்ரணான பாழிநகரை வென்றழித்தபோது, 'செருப்பாழியெறிந்த இளஞ்சேட்சென்னி' என்றும் சிறப்பித்துக் குறிக்கப்பெற்றான்.

நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னியென்ற இவனது பெயர் கண்டு, இவன் உறந்தையில் ஆட்சி செலுத்துமுன் கடற்கரைப் பகுதியில் இளவரசனாய் இருந்தவன் என்பார் பேராசிரியர் க. வித்தியானந்தன்.[3] நெய்தலங்கானல இவனது ஊரென்பதை அவர் உணர்ந்திலர் இனி, இளஞ்சேட் சென்னியென்ற பெயரோடு இளையோனென்னும் பொருநராற்றுப்படை (130)

குறிப்பையும் கொண்டு. இவனை அரசுரிமையே எய்தாத இளவரசன எனறு எணணியோரும் உளர்.[4] ஆயினும். இளஞ்சேட சென்னியென்ற இவனது இயற்பெயரையோ..அது செய்யுளிலே செறிந்தமைந்த இளையோனென்ற குறும்பெயரையோ கொண்டு இவனை இளவரசனென்று எண்ணுதல் கூடாது. இது கூடுமென்றால் இம்முறையே இளஞ்சேரல் இரும்பொறையென்ற சேரமானையும் இளந்திரையனென்ற தொண்டைமானையும இளவரசரென்று எண்ணுதல் வேண்டும். அவ்வாறு எண்ணவும் கூடுமோ?

அன்றியும் இவன் அரசுரிமையே எய்தாது இளவரசனாகவே காலங்கழித்தவனென்று எண்ணியோரெல லாம், பரணரும் (புறம்.4) பெருங்குன்றூர் கிழாரும் (புறம்.266), ஊன்பொதி பசுங்குடையாரும் (புறம்.10, 203, 370, 378) இடையன் சேந்தங் கொற்றனாரும் (அகம்.375) இவனைக் குறித்துப் பாடிய பாடல்களில் காணப்படும் இவனுடைய அரசியல் மேம்பாடுகளை அறிந்திலர் போலும்.

441. வெற்றிச்சிறப்பு

இச்சோழன் இளஞ்சேட்சென்னி வெற்றிச் சிறப்பு மிக்கவன் இவன் தன்னைச் சினமூடடிய பகைவரது நாட்டை அழித்துப் பகைவரொடு பொருத படைகளுகடையே தேரில பொலிந்து தோன்றிய நிலையில், கருங்கட லில ஒங்கியெழுகின்ற செஞ்ஞாயிற்றின் ஒளியுடையோனாகப் பரணரால் சிறப்பித்துப் பாடப்பெறுவான் (புறம்.4).

4411 செருப்பாழி எறிந்த வெற்றி

சோழன் இளஞ்சேடசென்னி வடுகரின் போரரணான பாழி நகரை அழித்து அவர்களையும் கொன்று முடித்த வென்றி, இடையன் சேந்தங்கொற்றனாரால் அகப்பாடல் ஒன்றிலே அருமையுற எடுத்து மொழியப்பட்டுள்ளது.

அரைசேர் யாத்த வெண்டிறல் வினைவிறல்
எழூஉத திணிதோள் சோழர் பெருமகன்
விளங்குபுகழ் நிறுத்த இளம்பெருஞ் சென்னி
குடிகடன ஆகலின் குறைவினை முடிமார்

செம்புறழ் புரிசைப் பாழி நூறி
வம்ப வடுகர் பைந்தலை சவட்டிக்
கொன்ற யானைக் கோட்டின் தோன்றும் (அகம்.375)

எனவரும் அப்பாடலில் இவன் பெயர் இளம் பெருஞ்சென்னி என்று வந்து இளஞ்சேட் சென்னியென்ற பெயர்ப் பொருளையும் தெளிய விளக்குதல் காணலாம். பாழிநகரை அழித்து வடுகரைக் கொல்ல வேண்டுவது தன் குடிக்கடன் என்ற முறையில் இவன் அவற்றைச் செய்து அக்குறையை முடித்தான் என்று அறிகிறோம். ஆதலால் பாழியிலிருந்த அவ்வடுகர் சோழரொடு மாறுபட்டுத் தொடர்ந்து இடையூறுகளை இயற்றி வந்தனரென்பதும், இவன் அவர்களுடைய போரரணை அழித்து அவர்களையும் பொருது கொன்றானென்பதும் புலனாம்'. 'செம்புறழ் புரிசைப் பாழி நூறி, வம்ப வடுகர் பைந்தலை சவட்டி' என்ற அடிகளில் பாழியரணின் வலிமையும், அவ்வரணையழித்து வம்பவடுகரைக் கொன்ற இவன் போர்த்திறனும் எடுப்புடனே இயம்பப் பெற்றுள்ளமை உணரத்தகும். அப்போரினை வென்று இவன் களங்கொண்டிருந்தபோது அக்களத்திடைச் சென்று இவனைக்கண்ட ஊன்பொதி பசுங்குடையார்,

ஒண்படை மாரி வீழ்கனி பெய்தெனத்
துவைத்தெழு குருதி நிலமிசைப் பரப்ப
விளைந்த செழுங்குரல் அரிந்துகால குவித்தாங்கு
படுபிணப் பல்போர்ப் அழிய வாங்கி
எருது களிறாக வாள்மடல் ஓச்சி
அதரி திரித்த ஆளுகு கடாவின்
அஞ்சுவரு கிடக்கைய களங்கிழ வோயே (புறம்.370)

என்றவாறு அப்போர்க்களத்தை ஏர்க்களமாகப் புனைந்து பாடிய உருவகப் பாடலிலும் இவன் வென்ற போர்ககடுமை விளங்கும்.

இவ்வாறு இளஞ்சேட்சென்னி பாழிநகரையழித்து வம்ப வடுகரைக் கொன்ற இப்போரினைக் குறித்துத் 'தென்னாட்டுப் போர்க்களங்கள்' நூலாசிரியர் கா. அப்பாத்துரையார் ஒரு வரலாறு காட்டுவார். மோரியப் பேரரசனான அசோகன் கலிங்கத்தை வென்றபின் தென்னகத்தையும் வெல்லுதற்கு வந்து, தமிழகத்தின் வடவெல்லையில் இருந்த சோசர்களின் துணையோடே

நன்னனுடைய பாழியரணைக் கைப்பற்றி, அதனையே மையமாகக் கொண்டு தங்கித் தமிழகத்தின்மேல் படையெடுத்த அளவில், இளஞ்சேட் சென்னி அவன் படைகளை எதிர்த்து முறியடித்ததோடே அமையாது, தோற்றோடிய மோரியப்படைகளைத் தொடர்ந்துபோய், அவை மையங்கொண்டிருந்த பாழிநகரையே தகர்த்து அப்படைகளையும் அழித்ததாக அவர் புனைவார்.[5] கோசரையும் வடுகரையும் முன்னுற விடுத்து மோரியர் தென்னகத்திற்குள் புகுந்தமை சங்க இலக்கியங்களில் மாமூலனார் பாடல்களால் (அகம்.251,281) அறியப்பட்டனவே. ஆயினும், பாழிநகரை அவர்கள் மையங்கொண்டிருந்தமைக்கு ஏற்புடைச்சான்று ஏதுமில்லை. மற்றும், இளஞ்சேட் சென்னியால் பாழிநகரில் பொருதழிக்கப்பட்டவர் வடுகரேயன்றி மோரியரல்லர். மோரியரே வடுகரென்று குறிக்கப் பெற்றதாகக் கூறுவதும் கூடாது. சங்க இலக்கியங்களில் மோரியர் பற்றிய குறிப்புக்கள் நான்கிடங்களிலும் (புறம்.175; அகம்.69; 251, 281), வடுகர் பற்றிய குறிப்புக்கள் பத்திடங்களிலும் (புறம்.378; அகம்.107, 213, 253, 281, 295, 375, 381; குறு.11; நற்.212) தெளிவுற வேறுபட்டு வந்துள்ளன. ஆதலால் இளஞ்சேட்சென்னியின் பாழிப்போருக்கு அது பொருந்தாத புனைந்துரை வரலாறாகவே அமையும்.

4.4.1.2 பிற வெற்றிகள்

இவ்வாறு சோழநாட்டிற்கு வடக்கேயிருந்த வடுகரின் செருப்பாழியைச் சீறியழித்து அவர்களைக் கொன்று பெயர் கொண்ட வென்றிவேந்தனான இவ்விளஞ்சேட் சென்னி, அதற்குமுன்பே தெற்கேயிருந்து குறும்பு செய்த பரதவரின் வலிமைச் செருக்கினையும் வாட்டிச் சாய்த்தவனென்பதை,

> தென்பரதவர் மிடல்சாய
> வடவடுகர் வாளோட்டிய
> தொடையமைக் கண்ணித் திருந்துவேல் தடக்கைக்
> கடுமா கடைஇய விடுபரி வடிம்பின்
> நற்றார்க் கள்ளின் சோழன் (புறம்.378)

என்ற ஊன்பொதி பசுங்குடையாரின் மற்றொரு பாடலின் அடிகளால் அறியலாம்.

இவன் சேரமானுடைய பாழூரையெறிந்து வென்ற செய்தி பெயரளவில் புலப்படுவதன்றி (புறம்.203 அடிக்குறிப்பு) விளக்கமாக வெளிப்படவில்லை.

4.4.2. அரசியற் பண்புகள்

வருவோர்க்கு வரையாது ஊட்டும் வசையில்லாத வாழ்க்கையமைந்த மகளிர் தழுவிப் பொருதலின்றி மள்ளர் மாறுபட்டுப் போரிடாத மாலையணிந்த மார்பனான இந்நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி, ஒரு செயலைச் செய்துமுடித்தபின் பிழையாகச் செய்தோமேயென்று இரங்காத வினைத்திட்பத்தோடு, சேய்மைமிலே சென்று விளங்கும் புகழ்வாய்ந்தவன்; தன்னை வழிபடுவோரை விரைவில் அறிந்து அவருக்கு அருள் செய்பவன்; பிறர் பழி கூறுவோரின் பொய்ம்மொழிகளைத் தெளிந்து அவற்றை நம்பாதவன்; தானே தன் மனத்தால் ஆராய்ந்து மெய்யாகவே குற்றமென்று தெளிந்த கொடுமையை ஒருவரிடத்துக் காணின், அதனை அறநூலுக்குத்தக ஆராய்ந்து அக்குற்றத்திற்குத் தக்க தண்டனையை அளிப்பவன்; அவரே வந்து அடிபணிந்து முன்னிற்பராயின், அவர் குற்றம் புரியுமுன் தான் செய்த அருளிலும் பெரிதாக அருளி அத்தண்டனையைத் தணிப்பவன் (புறம்.10). இப்பண்புகள் எல்லாவற்றிற்கும் மேலாக இவனிடத்து விளங்கியதொரு பண்பு இங்கே சிறப்புடன் எடுத்துக் குறிக்கத் தகுவதாம்.

> ஒன்னார், ஆரெயில் அவர்கட் டாகவும் நுமதெனப்
> பாண்கடன் இறுக்கும் வள்ளியோய் (புறம்.203)

என்று ஊன்பொதி பசுங்குடையாரால் விளிக்கப்பெறுகின்ற இவனது இப்பண்பு, 'கொள்ளார் தேஎம் குறித்த கொற்றம்' (தொல். புறத்திணை.நூ.12) என்ற தொல்காப்பியப் புறத்திணை இலக்கணத்திற்கு ஏற்ற எடுத்துக் காட்டாகத் திகழும் அரியதோர் பண்பாகும். பகைவருடைய அரண் அவரிடத்தே இருக்கவும் அதனைத் தான் பொருது கைப்பற்றும் முன்னமே தன் கையிலுள்ளதுபோல் பாணர்க்கு வாய்மொழியால் வழங்கும் வெற்றியோடு கூடிய இந்த வள்ளன்மையைச் சங்கத் தமிழ் வேந்தருள் இவனொருவனிடத்திலேயே காண்கிறோம்.

சோழ வேந்தருள் தமிழகத்திற்கு அப்பாலும் அடியெடுத்து வைத்து வெற்றிப் புகழ் பரப்பிய முதல்

வேந்தனான இவ்விளஞ்சேட சென்னியின மகனே. கங்கையையுங்கடந்து இமயத்தில புலி பொறித்த கரிகால் பெருவளத்தான ஆவான் அம்முறையில் தந்தையின் வழியே தனயனுகும் நெறியாகி நெடுவெற்றி காட்டி நிறைபுகழ் ஈட்டுவித்தது என்னலாம்.

45. சோழன் கரிகால் பெருவளத்தான் (கி.பி.90-140)

சோழன் கரிகால் பெருவளத்தானை 'உருவப் பலதேர் இளையோன் சிறுவன்' (பொரு.130) என்று பொருநராற்றுப் படை குறிப்பதனால் அவ்வுருவப் பல்தேர் இளஞ்சேட சென்னியின் மகனே இவனென்பது இனிது விளங்கும். உருவப் பல்தேர் இளஞ்சேட் சென்னி அழுந்தூர் வேளின் மகளை மணந்தானென்று அறிய வருதலால் (தொல்.அகத்திணை. நூ.30-நச்சி.உரை) அவளே இவன் தாயென்பதும் அறியப்படும்.

451. கரிகாலன் அரசேற்பு

கரிகால் பெருவளத்தான் தாய் வயிற்றிலிருந்து பிறக்குமுன்னே தந்தை இறந்தனன் போலும். அதனால் இவன், கருவில் இருக்கும்போதே தந்தையின் அரசவுரிமையை அடைந்தவன் என்ற முறையில், 'தாய் வயிற்றிருந்து தாயம் எய்தி' (பொரு. 132) எனப் பாடப்பெறுகின்றான். இதற்குத் தான் பிறக்கவேண்டிய காலத்தே பிறவாமல், நல்ல காலம் வருமளவும் தாயின் வயிற்றிலேயிருந்து பிறந்தமையால், அரசவுரிமையை அடைந்தான் என்றொரு விளக்கமும் உரையாசிரியர் நச்சினார்க்கினியரால் காணப்படுகின்றது அஃது எவ்வாறாயினும் இவன் பிறந்த போது தந்தையில்லையாதலால, தான் அடைந்த அரசினைத் தானே ஆளதக்க பருவத்தன் ஆகும்வரை ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த தாயத்தார், அவ்விடைகாலத்திலேயே இளைஞனான இவனைக் களைந்தழிக்க எணணி, இவனிருந்த இல்லத்திற்குத் தீயிட்டுக் கொளுத்தினர் அதிலிருந்து தப்பிப் போன இவன், தீப்பட்டுக் கரிந்த காலனாலமையால் கரிகாலன் எனப் பெயர் பெற்றான.

முச்சக கரமும் அளப்பதற்கு நீட்டியகால
இசைக் கரமே அளந்ததால். செயச்செய்

அரிகால்மேல் தேன்தொடுக்கும் ஆய்புனல் நீர்நாடன்
கரிகாலன் கால்நெருப்பு உற்று (பட். வெண்பா)

என்ற பாடலால் இவன் கரிகாலனானமை அறியப்படும். தாய் வயிற்றிருந்து தாயமெய்திய முறையில் கருவிலே திருவுடைய இவனுக்குத் திருமாவளவன் என்ற இயற்பெயர் இயைந்திருந்ததோடு, இப்பின்னிகழ்ச்சியால் கரிகாலனென்ற காரணப் பெயரும் கலந்து, அதுவே இவனுக்கு நிலைத்த பெயராய் நின்றது.

தீயிடப்பட்டதிலிருந்து தப்பிய பின்னும் இவன் அரசாட்சியை எய்துதற்கு இடையூறு தந்த தாயத்தார் இவனைச் சிறைக் காவலில் இட்டு அடைத்தனர். அந்நிலையில் இவன் மனவயிரம் முற்றி, அந்தக் காவலை அழித்து வெளிவந்து தன் வாள் வலிமையாலே பகையைக் கடந்து ஆட்சியை எய்தினான்.

கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்குப்
பிறர், பிணியகத் திருந்து பீடுகாழ் முற்றி
அருங்கரை கவியக் குத்திக் குழிகொன்று
பெருங்கை யானை பிடிபுக் காங்கு
நுண்ணிதின் உணர நாடி நண்ணார்
செறிவுடைத் திண்காப்பு ஏறி வாள்கழித்து
உருகெழு தாயம் ஊழின் எய்தி (பட்.221-227)

எனவரும் பட்டினப்பாலையடிகளால், இவன் சிறையிருந்து தப்பி அரசெய்திய வரலாறு அறியப்படும். புலிக்குட்டி ஒன்று கூட்டகத்தே அடைபட்டிருந்து வளர்ந்ததுபோல், இவன் காவலில் அடைபட்டு மனவயிரம் முற்றினானெனவும், பெருங்கை யானையொன்று தன்னை அகப்படுத்திய குழியைக் குத்தித் தூர்த்து வெளிப்பட்டுப் பிடியைச் சேர்ந்ததுபோல் இவன் தன்னை அடைத்திருந்த காவலையழித்துப் புறப்பட்டு ஆட்சியை எய்தினானெனவும் அமைந்த உவமைகளால் இவனாற்றலும் மறமும் உணரப்படும்.

தீயிலிருந்து உயிர் தப்பிய கரிகாலன் தன் அம்மானான இரும்பிடர்த் தலையாரின் அருந்துணையினால் ஆட்சியைக் கைப்பற்றினானென்றும் அறியப்படுகின்றது.

சுடப்பட்டு உயிருய்ந்த சோழன் மகனும்
பிடர்த்தலைப் பேரானைப் பெற்றுக் - கடைக்கால்
செயிரறு செங்கோல் செலிஇயினான் (பழமொழி.105)

என்ற பழமொழிப்பாடலை இதற்குச் சான்றாகக் காண்கிறோம். இரும்பிடர்த்தலையார் இவனுக்கு அம்மானென்று இப்பாடலின் உரையே பகர்கின்றது. இஃது இன்னும் ஆராயத்தகும்.

4.5.11. புனைகதை

இனி, கரிகாலன் தன் ஆற்றலால் சிறையினின்றும் தப்பி ஆட்சியை எய்தினான் எனப் பட்டினப்பாலையில் காணப்படுவதற்கு மாறாக, மற்றொரு கதையும் வழங்கி வருகின்றது. தாயத்தாரின் கலகத்திற்காற்றாது தப்பிப் போன இவன், கருவூரிலே சென்று அங்கே அலைந்து திரிந்திருந்தானென்றும், இவனுக்குரிய அரசாட்சியைக் கவர்ந்துகொண்ட தாயத்தாரிடையே போட்டிகள் தலையெடுத்துத் தீராத நிலையில் அவர்கள் பட்டத்து யானையின் கையிலே மாலை கொடுத்து அதனால் அணிவிக்கப் பெறுவோன் எவனோ அவனே அரசனென விடுத்தனரென்றும், கழுமலத்திலிருந்து விடப்பட்ட அவ்வியானை கருவூரில் சென்று அங்கே அலைந்திருந்த இக்கரிகாலனுக்கு மாலையிட்டுக் கொண்டுவந்ததால் இவன் சோழநாட்டில் வேந்தனாயினனென்றும் இவ்வாறு வழங்கிவரும் கதைக்குப் பழமொழி நானூற்றுப் பாடலொன்றையும் சான்றாகக் காட்டுவர்.[6]

கழுமலத்து யாத்த களிறும் கருவூர்
விழுமியோன் மேற்சென் றதனால் விழுமிய
வேண்டினும் வேண்டா விடினும் உறற்பால
தீண்டா விடுதல் அரிது (பழமொழி.62)

எனவரும் இப்பாடல், முதல்நிலையில் இக்கதைக்கு முற்றும் இசைவுடையதாகத் தோன்றவில்லை. 'யாத்த களிறு' எனவும், 'விழுமியோன் மேற்சென்றது' எனவும் 'வேண்டினும் வேண்டா விடினும் உறற்பால, தீண்டா விடுதல் அரிது' எனவும் அமைந்த சொல்லாட்சிகள் இக்கதை நிகழ்ச்சிகளுக்கு ஏற்புடையனவல்ல என்பது எளிதில் விளங்குகின்றது. இரண்டாவது நிலையில்

பாடலும் கருத்தும் எவ்வாறாயினும் இக்கதை நிகழ்ச்சி கரிகாலன் பெருமைக்குத் தக்கதன்று. பிறர் இட்ட பிணியகத்தேயிருந்து பீடுகாழ் முற்றி, நுண்ணிதின் உணர நாடிச் செறிவுடைய சிறையினின்றும் தப்பி, வாளுருவிப் போர் புரிந்து உரிய தாயத்தை முறையின் எய்தினனென்ற பட்டினப் பாலைப் புனைவிலுள்ள பெருமையும் சிறப்பும் இக்கதை நிகழ்ச்சியில் காணாது ஒழிகின்றன. ஆதலால் கரிகாலன் வரலாற்றில் இந்தப் புனைகதை பிற்காலத்தே ஏற்பட்டதாகலாம்.

4.5.2. கரிகாலன் போர்வெற்றிகள்

4.5.21. கரிகாலன் கன்னிப்போர்: முதலாம் வெண்ணிப்போர்

சோழ வேந்தருள் வெற்றிமேம்பாடு உடையோரை எண்ணுங்கால் விரலுக்கு முன்னிற்கும் வேந்தன் கரிகாலனே. இவன் தனக்கெதிரான தாயத்தாரின் சூழ்ச்சிகளையெல்லாம் கடந்து ஆட்சியெய்திய அந்த இளமையிலேயே தன்மேல் போருக்கெழுந்து வந்த இருபெரு வேந்தராகிய சேர பாண்டியரை எதிர்த்து வெண்ணியெனுமிடத்தே அவர்களைப் போரிட்டுக் கொன்றான். இளமை மாறாத நிலைமையிலேயே இவன் பெற்ற இக்கன்னிப்போர் வெற்றியைப் புனைந்து பாடும் பொருநராற்றுப்படை, ஆளிநன் மானின் அணங்குடைய குருளையொன்று தன் தாயின் முலையுண்ணுதலைத் தவிராத அவ்விளமையிலேயே சரேரெனப் பாய்ந்த முதல் வேட்டையில் களிற்றியானையைக் கொன்றாற்போல், இவன் இருபெருவேந்தரையும் வெருவுறத்தாக்கி ஒருகளத்தே வீழ்த்தினான் என்று புகழும் (பொரு.139-148). இப்போரில் இருபெரு வேந்தருக்கு உறுதுணையாகக் கூடிவந்து ஈடுபட்டோரையும் அவர்களையெல்லாம் இவன் எதிர்த்து அழித்தமையையும் பரணரின் அகப்பாடல் ஒன்றினாலும் அறியலாம்.

அலரே, காய்சின மொய்ம்பின் பெருபெயர்க் கரிகால்
ஆர்கலி நறவின் வெண்ணி வாயில்
சீர்கெழு மன்னர் மறலிய ஞாட்பின்
இமிழிசை முரசம் பொருகளத்து ஒழியப்
பதினொரு வேளிரொடு வேந்தர் சாய

மொய்வலி அறுத்த ஞான்றைத்
தொய்யா அழுந்தூர் ஆர்ப்பினும் பெரிதே
(அகம்.246)

எனவரும் அப்பாடலில், இவனுக்கு எதிராக வந்த இருபெருவேந்தரும், அவருக்குத் துணையாகி வந்த பதினொரு வேளிரும், தம்முடைய போர்முரசங்களையெல்லாம் போர்க்களத்தே போகட்டு மடிய, இவன் அவர்களுடைய ஆற்றலையறுத்துக் கொன்றானென்று பரணர் குறித்துள்ளார். வெண்ணிவாயிலில் இவன் வென்றமைக்கு இவனுடைய தாய்வழிப் பாட்டனூராகிய அழுந்தூரிலே வெற்றியாரவாரம் எழுந்ததை இப்பாடல் அறிவிக்கின்றது.

வெண்ணியென்று பொருநராற்றுப் படையிலும் வெண்ணி வாயிலென்று பரணரின் அகப்பாடலிலும் குறிப்பிடப் பெற்ற இடத்திலே நிகழ்ந்த இப்போரைக் கரிகாலனின் முதலாம் வெண்ணிப்போரென்று குறிக்கலாம். வெண்ணியென்னுமூர் சோழநாட்டிலேயே தஞ்சை மாவட்டத்து நீடாமங்கலத்தின் மேற்கேயுள்ளது. இக்காலத்துக் கோயில் வெண்ணி (கோவிலுண்ணி) என வழங்கும் அவ்வூர், பண்டைக் காலத்தே மிகப் பெரிய நகராய் இருந்தமைக்குரிய சுவடுகளை இன்றும் காணலாம்.

4522. இரண்டாம் வெண்ணிப்போர்

வெண்ணிவாயிலில் முன்னர் இருபெருவேந்தரையும் பதினொரு வேளிரையும் வென்று வீழ்த்திய வெற்றிவேந்தன் கரிகாலன், பின்னும் ஒருகால் அவ்வூரையடுத்த பெருவெளியில் சேரமான் பெருஞ்சேரலாதனை எதிர்த்து வென்றான். முதலாம் வெண்ணிப்போரில் கரிகாலனால் சேரமானொருவனும் கொல்லப்படாமையால் போலும், சினமுற்ற பெருஞ்சேரலாதன் கரிகாலன்மேல் படையெடுத்து வந்தான். சேரலாதனின் அச்சினப்போரினை மாறாது ஏற்ற கரிகாலன், அவனொடு நேர்நின்று போரிட்ட கடும்போரிலே தன் கைவேலினை அவனது மார்பில் எறிந்தானாக, அவ்வேல் அவனது முதுகையும் ஊடுருவிச் சென்றது. அவ்வாறு தன் மார்பிலே தைத்து முதுகிலே உருவிய புண்ணைப் புறப்புண்ணென்று நாணிய அச்சேரலாதன், அதற்கு நாணி வாளொடு வடக்கிருந்து மாண்டான் (புறம்.65; அகம்.55). அம்

முறையில் இந்த இரண்டாம் வெண்ணிப்போரிலும் கரிகாலன் வெற்றி வாகையே சூடினான். இவ்வெற்றி குறித்து இவனைப் பாடும் வெண்ணிக் குயத்தியார், 'சென்றமர்க் கடந்தநின் ஆற்றல் தோன்ற வென்றோய்' (புறம்.66) என்று விளிப்பர்.

4.5.2.1. வெண்ணிப்போர் இரண்டே

கரிகாலனின் வெண்ணிப்போர்கள் இரண்டையும் ஒருங்கிணைத்து ஒன்றாகக் கொள்வோரும்[7], இவ்விரண்டினுள் முதலாவது வெண்ணிப்போரையே இரண்டெனப் பிரித்து, இரண்டாவது வெண்ணிப்போரை இடையிட்டு மூன்று போர்களாக முடித்துக் காட்டுவோரும்[8] உளர். இவருள் மூன்றாகக் கொள்வோர், கரிகாலன் பதினொரு வேளிரொடு வேந்தர் சாய வென்ற இடத்தை வெண்ணிவாயிலெனப் பரணர் குறித்தமையால் அதனை வெண்ணிவாயில்போர் என்று முதலாவதாகவும், பெருஞ்சேரலாதனை வென்ற இடம் வெண்ணிப் பறந்தலையென வெண்ணிக் குயத்தியார் (புறம்.66) மற்றும் மாமூலனாரால் (அகம்.55) குறிக்கப்பெறுதலால் அதனை வெண்ணிப் பறந்தலைப் போர் என்று இரண்டாவதாகவும், இருபெருவேந்தரை ஒருகளத்து அவிய வெண்ணியிலே தாக்கினனென்று முடத்தாமக்கண்ணியார் குறிப்பிடுதலால் அதனை வெண்ணிப்போரென்று மூன்றாவதாகவும் முறைப்படுத்துவர். பரணர் குறிப்பிடும் வெண்ணிவாயில் போரிலே வருகின்ற பதினொரு வேளிர் பற்றிய குறிப்பு, முடத்தாமக்கண்ணியார் மொழியும் வெண்ணிப்போரிலே விளங்கக் காணாமையும் இவற்றை வேறுபடுத்துதற்கு இன்னுமோர் ஏதுவாயிற்று. எனினும், இருபெருவேந்தரை மட்டும் தலைமைபற்றி எடுத்து மொழிந்த முடத்தாமக்கண்ணியார், அவ்வேந்தரின் தலைமைக்குள் அடங்கிய வேளிரைக் குறிக்க வேண்டாதே விடுத்தாரென்று கொள்ளுதல் கூடும். அடிகள் சிலவேயுடைய அகப்பாடலில் பரணர் குறிக்கவும், அடிகளால் நிமிர்ந்த ஆற்றுப்படையில் முடத்தாமக்கண்ணியார் குறிக்காது விட்டாரோ என்று குறுக்கு வினாத் தொடுப்பதெல்லாம் கூடாவாம். பாடலின் போக்கிற்கும் பாடுவோர் கருத்திற்கும் ஏற்பச் செய்திகள் சுருங்கியும் விரிந்தும், விளக்கத்தில் கூடியும் குறைந்தும் அமைதலை அறிவோம் ஆதலால், நிகழ்ச்சிகளின் ஒற்றுமைக் கூறுகளை உணராது, இடப்பெயர்க்குறியீடுகளையும் விடுபட்ட விளக்கங்களையுமே ஏதுவாக்கி இவ்வாறு ஒருபோரையே

முதலாவதும் மூன்றாவதுமென்று இருபோர்களாக எண்ணுதல் இசையாது. அவ்வாறு எண்ணினால், இருபெருவேந்தரும் கூடிவந்தோரைக் கரிகாலன் இருபோர்களிலும் கொன்றானென்று கூறநேரிடும். ஆயின், இரண்டாவது போரிலே மாண்ட சேரலாதனொடும் கூட்டிச் சேரவேந்தர் மூவரும் பாண்டிய வேந்தர் இருவரும் ஆக ஐவர் அடுத்தடுத்துக் கரிகாலனொருவனாலேயே கொல்லப்பட்டன ரென்று கூறுதலும் வேண்டும். அவ்வாறு கூறுதல் மிகையாம். அம்மிகையைத் தணிக்கக் கரிகாலனொருவனையே இருவரென்பதும் ஏலாது. அது பின்னர்க் காணப்படும். இப்போதைய நிலையில் கரிகாலனின் கன்னிப்போர் என்று முடத்தாமக் கண்ணியார் பாடிய வெண்ணிப்போரையே பரணர் வெண்ணிவாயில்போரென்று விரித்துப் பாடினார் என்ற மட்டில் காணலாம். வெண்ணியையும் வெண்ணிவாயிலையும் இங்கே வேறுபடுத்துதல் வேண்டா.

இனி, வெண்ணியையொட்டி நிகழ்ந்த இரு போர்களையும் ஒருங்கிணைத்து ஒன்றாகக் காண்பதும் ஒவ்வாது. கரிகாலன் பெருஞ்சேரலாதனை வென்ற வெண்ணிப் பறந்தலைப்போரைப் பாடிய கழாத்தலையார், வெண்ணிக் குயத்தியார், மாமூலனார் ஆகிய மூவர் பாடல்களுள் ஒன்றிலேனும் அச்சேரலாதனோடே பாண்டிய வேந்தனோ பதினொருவேளிரோ யாரும் கரிகாலனால் வென்றழிக்கப்பட்ட குறிப்பு வாராமையால், இப்போர்களை இரண்டு படுத்தி எண்ணுவதே ஏற்புடையதாம்.

4.5.2.3. கரிகாலன் தமிழக வெற்றி

கரிகாலனின் தலைமையை ஏலாத ஏனை இருபெருவேந்தரும் வேளிருமெல்லாம் இவன்மேல் படையெடுத்து வந்து போரிட்ட காலங்களில், அவர்களையெல்லாம் எதிர்த்து வென்ற இவன் வெற்றிகளையே வெண்ணிப் போர்களில் விளங்க கண்டோம். அப்போர்களின் முடிவால் அக்காலத் தமிழக வேந்தருள் இவனது பேராற்றல் தலைநிமிர்ந்து ஓங்கியது. அதன் விளைவாக முன்னர்த் தன்மீது படையெடுத்து வந்த தமிழ வேநதர் மீதெல்லாம் பின்னர்த் தான் படையெடுத்துச் சென்றான். இவனது அவ்வெழுச்சியைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பட்டினப் பாலையில் மிக விரித்துப்

பாடியுள்ளமை காண்கிறோம் (பட்.228-282). பகைவர் நாடுகளையெல்லாம் பாழ்படுத்திச் செல்லும் இவனது சீற்றம் கண்டு எல்லோரும், 'இவன் தெய்வத்தன்மை உடையோனாதலால் மலைகளையெல்லாம் அகழ்வான்; கடல்களையெல்லாம் தூர்ப்பான்; வானுலகத்தையும் கீழே வீழ்த்துவான்; காற்றையும் இயங்காதே இருத்துவான்' என்றவாறு இவனுடைய பேராற்றலை வியக்க, இவன் போர்த்துறைகளையெல்லாம் பொருது முடித்தான் (பட்.271-273). தன் எழுச்சிக்கு ஆற்றாமல், 'குடவர் கூம்பத் தென்னவன் திறல் கெடச் சீறி' (பட்.276-277) அவ்விருவரையும் இவன் அடக்கிமேம்பட்டான். பலராகிய ஒளிநாட்டாரும் இவனாற்றலுக்குப் பணிந்தொடுங்கினர்; அருவாளரும் அடங்கி ஏவல் கேட்டனர் (பட்.274-275). அடங்காத பொதுவர் இவனால் அழிக்கப்பட்டுக் குடிவழியுமின்றிக் கெட்டொழிந்தனர்; இருங்கோவேள் உள்ளிட்ட ஐம்பெருவேளிரும் அழிந்து சாய்ந்தனர் (பட்.281-282).

இவன் பகலிரவென்றும் பாராது பகைவர் நாடுகளைத் தீக்கிரையாக்கி அழித்த திறத்தை மழபுலவஞ்சித் துறையிலே கருங்குழலாதனார் பாடியுள்ளார் (புறம்.7).

4.5.2.4. கரிகாலன் வடபுல எழுச்சி

தமிழகமெங்கும் தடையின்றி நடையிட்டு வெற்றி வாகை சூடிய வேந்தன் கரிகாலன், இந்த நாட்டிலே தன்னை எதிர்த்துப் பொருவோர் இல்லையென்ற நிலையில் வடபுலத்தின்மேல் படைகொண்டு சென்றான்.

இருநில மருங்கில் பொருநரைப் பெறாஅச்
செருவெங் காதலின் திருமா வளவன்
வாளும் குடையும் மயிர்க்கண் முரசும்
நாளொடு பெயர்த்து நண்ணார்ப் பெறுகவிம்
மண்ணக மருங்கினென் வலிகெழு தோளெனப்
புண்ணியத் திசைமுகம் போகிய அந்நாள்
(சிலம்பு.5:89-94)

என்று, இப்படையெடுப்பு இளங்கோவடிகளால் சிலப்பதிகாரத்திலே சிறப்புறப் புனையப் பெறுகின்றது. இப்பெரும் படையெடுப்பின்போது கரிகாலனொடு

பெரும்படை புறப்பட்டது. அவனுடைய புகார் நகரே வறிதாயிற்று என்று மணிமேகலையும் இதனைக் குறிப்பிடும் (மணி.1:39-40). இவ்வாறு வடபுல வெற்றி குறித்துப் புறப்பட்ட கரிகாலன், குடபுலத்தைக் கடந்து மேலைப் பெருவழியில் தன் படையெடுப்பினை மேற்கொண்டான போலும். அவ்வழியில் அவன் பெற்ற குறிப்பிடத்தக்க வெற்றியாக வாகைப் பறந்தலை வெற்றி வருகின்றது.

4.5.2.4.1. வாகைப் பறந்தலைப்போர்

வாகையென்னும் ஊர் மேலைக் கடலோரத்துப் பூழி நாட்டைப் பொருந்தியது. களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரலின் காலத்தே, கடம்பின் பெருவாயில் நன்னனுக்கு உரியதாயும் (பதி.ப.4; அகம்.199), மற்றொரு காலத்தே ஆய் எயினனுக்கு உரியதாயும் (புறம்.351) அது திகழ்ந்ததை அறிகிறோம். நன்னனுக்குரிய காவல் மரம் வாகையாதலால் (பதி.ப.4), அம்மரம் வளர்க்கப்பட்ட இடம் வாகையென்றும் (புறம்.351), வாகைப்பெருந்துறையென்றும் (அகம்.199) வழங்கப்பெற்றது. அவ்வாகையையடுத்த பறந்தலையில் கரிகாலனை ஒன்பது மன்னர் ஒருங்குகூடி எதிர்த்தனர். ஆயினும் அவரெல்லாம் கரிகாலனின் ஆற்றலுக்கு ஆற்றாராய்த் தத்தம் கொற்றக் குடைகளையெல்லாம் அக்களத்திலேயே ஒழியவிட்டு ஓடினாரென்று பாடியுள்ளார் பரணர்.

> விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்
> வெருவரு தானையொடு வேண்டுபுலத்து இறுத்த
> பெருவளக் கரிகால் முன்னிலைச் செல்லார்
> சூடா வாகைப் பறந்தலை ஆடுபெற
> ஒன்பது குடையும் நன்பகல் ஒழித்த
> பீடில் மன்னர் போல
> ஓடுவை மன்னால் வாடைநீ எமக்கே (அகம்.125)

எனவரும் இப்பாடலில், பகைவர் கண்டு அஞ்சத்தக்க தானையோடே சென்று கரிகாலன் தான் வேண்டுமிடங்களில் தங்கித் தன் மேலாண்மையைக் காட்டினனென்றும், அதனை ஏலாது எதிர்த்த ஒன்பது மன்னரும் அவனது முன்னிலையில் நிற்க முடியாதவராய்க் குடைகளை ஒழித்துப் பெருமையின்றிப் பெயர்ந்தோடினரென்றும் தெளிவுறக் காணகிறோம்.

அவ்வொன்பது மன்னர் யாரென்பது இங்கே தெளிவுறத் தோன்றவில்லையாயினும், அவரெல்லாம் சோழர் குடிக்கு உரியோரேயென்பதைப் பின்னர்க் கிள்ளி வளவன் வரலாற்றில் காணலாம்.

4525. இமையத்தில் புலிபொறிப்பு

கரிகாலனின் வடபுலப் படையெடுப்பில் வாகைப் பறந்தலைக்கு அப்பால் எதிர்ப்பேதும் இல்லைபோலும். இடைப்பட்ட வேந்தரெல்லாம் இறையிட்டுப் பணிய, இமையம் வரை சென்ற இவன், அதற்கு அப்பாலும் போய்த் தன் ஆண்மைகாட்ட நினைந்தபோது, எதிர்நின்ற அம்மலை இடைநின்று விலக்கவே, இவன் சினந்து அதன் பிடர்த்தலையிலே தன் புலிப்பொறியைப் பொறித்து மீண்டான். அவ்வாறு மீள்வோனுக்குச் சோணைக் கரையிலே கடலை அரணாகவுடைய வச்சிர நாட்டு வேந்தன், பகையும் நட்புமில்லாத அயன்மை முறையில் முத்துப் பந்தரொன்றைத் திறையாகக் கொடுத்தான்; மகதநாட்டு வேந்தன் வாட்போர் வல்லமையால் இவனுக்குப் பகைவனாய்ப் போரிட்டுத் தோற்றபின் பட்டிமண்டபமொன்றைத் திறையிட்டான்; அவந்தி நாட்டு வேந்தன் நண்பனாய் உவந்த உள்ளத்தோடே மிகவுயர்ந்த தொழில் முறையுடைய தோரண வாயிலொன்றை இவனுக்குத் திறைதந்தான். அவற்றையெல்லாம் கொண்டுவந்து இவன் தன் புகார் நகரத்தே அமைத்தானாகச் சிலப்பதிகாரத்தால் அறிகிறோம் (சிலம்பு.5: 89-110).

கரிகாலனின் வடபுலப் படையெடுப்பினைப் பட்டினப்பாலை மிகச்சுருக்கமாக, 'வடவர் வாட ... சீறி' (பட்.276-277) எனக் குறிப்பிடும்.

இவன் இமையத்தில் புலிப்பொறி பொறித்ததைப் பின்னையிலக்கியமான கலிங்கத்துப் பரணி,

> செண்டு கொண்டுகரி காலனொரு காலில் இமையச்
> சிமைய மால்வரை திரித்தருளி மீளவதனைப்
> பண்டு நின்றபடி நிற்கஇது என்றுமுதுகில்
> பாய்பு லிப்பொறி குறித்தது மறித்தபொழுதே
> (கலிங்க. இராச. 1)

எனச் சற்றுக் கூடுதலான விளக்கத்தோடே குறிக்கின்றது. செண்டு என்னும் படைக்கலத்தால் அடித்து இமையத்தின் சிகரத்தைத் திரித்து, அதன் முதுகிலே தன் புலிப்பொறியைப் பொறித்து, பின் அதனை முன்போல் நிறுத்தினான் கரிகாலன் என்று இப்பரணிப் பாடலில் காண்கிறோம். இப்பாடலைச் சிலப்பதிகாரத்தின் உரையிலே மேற்கோள் காட்டி விளக்கும் அடியார்க்குநல்லார், கரிகாலனுக்கு இச்செண்டு கச்சி மாநகர்க் காமக்கோட்டத்துக் காவல் தெய்வமான சாத்தனருளால் வாய்த்தது என்ற வரலாற்றிற்கும் ஒரு பழம் பாடலை மேற்கோள் காட்டுவார் (சிலம்பு, 5:95-98 அடியார்.உரை).

கரிகாலன் இமையத்தின் சிகரத்தைச் செண்டால் அடித்துத் திரித்து அதன் பிடர்த்தலையிலே தன் புலிப்பொறி பொறித்தமைக்கும் இரண்டு காரணங்களை அழகுறக் காட்டுவார் அடியார்க்கு நல்லார் (சிலம்பு.5: 95-98 உரை). தான் படைகொண்டு போகும்போது தன்னை எதிர்த்து நின்று விலகியதனால் அம்மலையைப் புறங்காண்பதற்கும் அதன் வடபாலும் தன் ஆணை செல்லுதற்கும் சாத்தனருளால் தான்பெற்ற செண்டினால் அடித்துத் திரித்துப் பொறித்து மறித்து நிறுத்தானென்ற இக்காரணங்களால் கரிகாலனின் மேம்பாடு சிறக்கக் காணலாம்.

4.5.3 கரிகாலன் ஆட்சித்திறன்

பேராற்றல் வாய்ந்த பெருவேந்தனான கரிகாலன், போர்த்திறன் போன்றே ஆட்சித்திறனும் அமைந்து விளங்கினான்.

> அரிமா அன்ன அணங்குடைத் துப்பின்
> திருமா வளவன் தெவ்வர்க்கு ஓக்கிய
> வேலினும் வெய்ய கானம் அவன்
> கோலினும் தண்ணிய தடமென் தோளே (பட்.298-301)

என்று, படடினப்பாலைத் தலைவன் அவனுடைய இவ்விருபெருந்திறனகளையும் இணைத்து இருபேர் உவமங்களாக எடுத்தாண்டுள்ளதை இங்கே எண்ணிப் பார்க்கலாம். பகைவர் மீது பாய்ச்சப் பெறுகின்ற இவன் கைவேல அவரை வென்றழித்தலால மிக்க வெம்மையுடையதாயினும், தன் கீழ்க் குடிகளை நன்மையுறக்

காத்தலால் இவன் செங்கோல் மிகுந்த தண்மையுடையதென்று இதனால் அறிகிறோம்.

மண்மருங்கினான் மறுவின்றி
ஒருகுடையான் ஒன்றுகூறப்
பெரிதாண்ட பெருங்கேண்மை
அறனொடு புணர்ந்த திறனறி செங்கோல்
அன்னோன் வாழி வென்வேல் குருசில்
(பொரு.227-231)

என்று, தன்னுடைய வெற்றிச் சிறப்பமைந்த ஒருகுடையாட்சியாலும் அறத்தொடு கூடிய செங்கோல் அமைதியாலும் இவன் பொருநராற்றுப் படையிலே வாழ்த்தப்பெறுதலையும் காண்கிறோம்.

4.5.4. முறைசெய்தல்

கரிகாலன் ஆட்சியெய்திய இளமைக் காலத்தே நரை மூதாளர் இருவர் தம்முள் மாறுபட்டு முறைமை வேண்டி வந்து இவனைக் கண்ட நிலையில், தம் சொற்களை ஆராய்ந்து முறைசெய்வதற்கு இவன் அறிவு நிரம்பாத இளைஞனென்று அவர்கள் இகழ்ந்தனராக, இவன் அவர்களிடம் மூதறிஞரொருவரை விடுப்பதாகக் கூறிப்போய்த் தானே முதுமைக் கோலம் பூண்டுவந்து, அவ்விருவரின் சொற்களையும் நன்கு ஆராய்ந்து முறை செய்தான் என்று காண்கிறோம். 'முதியோர் அவைபுகு பொழுதில்தம் பகைமுரண் செலவும்' (பொரு. 187-188) என்று பொருநராற்றுப் படையிலேயே முடத்தாமக்கண்ணியாரால் முன்மொழியப்பட்ட இவனைப் பற்றிய இவ்வரலாற்றுக் குறிப்பினைக் கொண்டு,

இளமை நாணி முதுமை யெய்தி
உரைமுடிவு காட்டிய உரவோன் (மணி.4: 107-108)

என்று மணிமேகலை இவனைப் புகழ, இதனை மேற்கொண்டு,

உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப-நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமல் பாகம் படும் (பழமொழி.21)

எனப் பழமொழியும் விரித்துப் பாடுகின்றது. இவ்வாறு முறை செய்தான் கரிகால்பெருவளத்தான் என்பது இப்பழமொழிப் பாடலின் பழையவுரையாலும் தெளிவுபடுகின்றது.

4.5.5. வளமையாக்கம்

கரிகாலன் தன் ஆட்சிக் காலத்தில் நாடு வளமுற்று வாழ வேண்டிய ஆக்கப் பணிகள் பலவற்றையும் ஆராய்ந்து செய்தான்.

காடுகொன்று நாடாக்கிக்
குளந்தொட்டு வளம்பெருக்கி (பட்.283-284)

எனத் தொடர்ந்து இப்பணிகளைப் பட்டினப்பாலை எடுத்துக்காட்டுகின்றது. பயனின்றி வளர்ந்த காடுகளை அழித்துப் பயிர்த்தொழிலுக்கும் பயின்று உறைதலுக்கும் ஏற்ற நாடாக்கி, பின்னும் நீர்நிலைகளாகக் குளங்களை வெட்டி வளங்களைப் பெருக்கிய வளவேந்தனாக இவனே வருகின்றான். இவற்றின்மேலும், அக்காலத்தே கரையின்றிப் பெருகி ஆக்கத்திற்கு மாறான அழிவை விளைவித்த காவிரியாற்றின் நெடுகிலும் இருபுறக்கரையெடுத்த ஒருபெருஞ்செயலும் பிற்காலங்களில் இவன் புகழ் நிறுத்தும் அரும்பெருஞ்செயலாயிற்று. அம்முறையில் இவன், 'பொன்னிக்கரை கண்ட பூபதி' (விக்கிரம.உலா.13) எனப் புகழொடு குறிக்கப் பெறுகின்றான்.

இவன் காவிரிக்குக் கரையெடுத்த காலத்தில் கரைகட்டும் பணிக்கு வாராத ஒருவனுடைய கண்ணைப் பறித்து ஒறுத்தானாகவும் ஒரு நிகழ்ச்சி காணப்படுகின்றது.[9]

காவிரிக்குக் கரையெடுத்த கரிகாலன் பின்னும் அதன் நீரைத் தேக்கிப் பயிர்த்தொழிலுக்கு வளமூட்ட நினைத்து, இன்றும் நிலைத்துள்ள கல்லணையைக் கட்டினானென்றும், காவிரியின் பெருவெள்ளம் பாழாகாதவாறு பிரித்துக் கொள்ளிடமென்ற மற்றொரு கிளையாறு வெட்டினானென்றும் வரலாற்றுச் செய்திகள் வழங்கி வருகின்றன.

4.5.6. தலைநகர் சீரமைப்பு

கரிகாலன் ஆக்கப் பணிகளில் அவன் தன் தலைநகரான உறையூரைச் சீரமைத்துப் பொலிதாக்கிய பணிகளும் சிறப்புறக் குறிக்கப் பெறுகின்றன.

பிறங்குநிலை மாடத்து உறந்தை போக்கிக்
கோயிலொடு குடிநீ நீஇ
வாயிலொடு புழையமைத்து
ஞாயில்தொறும் புதைநீ நீஇ (பட்.285-288)

என்று, இவற்றைப் பட்டியலிடுவதுபோல் பகர்கின்றது பட்டினப்பாலை. உறையூரை அகலப்படுத்திக் கோயில்களோடே பழைய குடிகளையும் பண்டுபோல நிலைநிறுத்தினான் எனப்படுதலால், இவனாட்சிக்கு முன்னே சிலகாலம் குடிகள் நிலைகெட்டிருந்தனவென்றும், அவற்றை இவனே பழைய நிலையில் சீரமைத்து நிறுத்தினனென்றும் நினையலாம். ஆகவேதான், இவனைக் குறித்துப் பாடுகின்ற நக்கீரரும், 'செல்குடி நிறுத்த பெரும்பெயர்க் கரிகால்' (அகம்.141) என்று சிறப்புறக் குறிப்பார்.

457. கரிகாலன் மனைச்சுற்றம்

கரிகாலன், தன் தந்தையான உருவப் பல்தேர் இளஞ்சேட்சென்னி அழுந்தூர்வேளின் மகளை மணந்தது போல, தான் நாங்கூர் வேள் மகளை மணந்தனன் என்று அறிகிறோம் (தொல். அகத்திணை. நூ.30. நச்சி. உரை).

கரிகாலனின் ஆண்மக்கள் யாவரென்று தெளிவாக அறியுமாறில்லை. ஆயினும், ஆதிமந்தி என்ற பெண்மகளைப் பற்றி அறியமுடிகின்றது. கழார் என்னும் ஊரின்முன் ஓடுகின்ற காவிரித்துறையில் இக்கரிகாலன் தன் சுற்றத்தோடே புதுப்புனல் விழாக் கொண்டாடிருக்கையில் இவன் மகள் ஆதிமந்தியின் காதலனான சேர இளவரசன் ஆட்டனத்தி, இவன் காணுமாறே புனலாடியபோது அக்காவிரி வெள்ளத்தால் அடித்துப் போகப் பட்டானாக, அவனைக் காணாத ஆதிமந்தி பேதுற்றுக் கரையோடே தேடிப்போய்க் கடல் முகத்தையடைந்து அங்கே மருதியென்பவளால் காப்பாற்றிக் கொடுக்கப்பட்ட காதலனைக் கண்டாள் என்று அவளைப் பற்றிய செய்திகளை அறிகிறோம் (அகம்.45, 76, 135, 222, 236, 376, 396). அவற்றின் இடையே,

மலிபுனல் பொருத மருதோங்கு படப்பை
ஒலிகதிர்க் கழனிக் கழாஅர் முன்றுறைக்

கலிகொள் சுற்றமொடு கரிகால் காணத்
தண்பதங் கொண்டு தவிர்ந்த இன்னிசை (அகம்.376)

என்று இவன் புனல்விழாக் கண்டிருந்த பொலிவு பரணரால் புனையப்பெறுகின்றது. இதே பொலிவு இளங்கோவடிகளாலும்,

விண்பொரு பெரும்புகழ்க் கரிகால் வளவன்
தண்பதங் கொள்ளும் தலைநாட் போல
வேறுவேறு கோலத்து வேறுவேறு கம்பலை
(சிலம்பு.6: 159-161)

என்று உவமைமுகத்தால் எடுத்துக் காட்டப்படுகின்றது. எனவே, காவிரியில் தண்ணீர் வருகின்ற தலைநாளில் கரிகாலன் தண்பதம் கொள்ளும் பெருவிழாவின் சிறப்பு இருவர் பாடல்களிலும் இனிதே விளங்குகின்றது.

45.8. கரிகாலன் பாடுபுகழ்

இத்தகைய சிறப்புக்களோடே வளமையும் வன்மையும் வாயந்த கரிகாலன் புலவர்களால் பெரிதும் புகழ்ந்துபாடப் பெற்றுளளான்.

தான பகலிரவென்றும் பாராது பகைவர் நாடுகளைத் தீக்கிரையாக்கி அழித்த திறத்தை மழபுல வஞ்சித் துறையிலே அமைத்துக கருங்குழலாதனாரால் பாடப்பெற்ற இவன் (புறம்.7), இறந்த பின்னும் இன்னபிற பண்புகளால் அவருடைய இரக்கப் பாடடை எய்தியுள்ளான் (புறம்.224). வெண்ணிப் பறந்தலையிலே சேரமான் பெருஞ்சேரலாதனை வென்ற திறம் குறித்து வெண்ணிக் குயத்தியாரால் பாராட்டப் பெற்றதோடு (புறம்.66) வெண்ணிவாயிலில் பதினொரு வேளிரொடு இருபெரு வேந்தரை வீழுமாறு வென்றதும் (அகம்.246) வாகைப் பறந்தலையில் ஒன்பது மன்னரை ஓடடியதும் (அகம்.125) கழார்த்துறையிலே காவிரிப் புனல்விழாக் கொண்டாடியதும் (அகம்.376) ஆகிய செய்திகளைக் குறித்துப் பரணராலும் பாடப்பெற்றுள்ளான். இவனொடு வெண்ணிப் பறந்தலையில் பொருது பெற்ற புண்ணுக்கு நாணிய சேரலாதன் வடக்கிருந்து மாண்ட செய்தி கழாத்தலையாராலும் (புறம் 65) மாமூலனாராலும் (அகம்.55)

குறிக்கப்பெறும். நிலைகெட்டுத் தளர்ந்திருந்த குடிகளை இவன் நிலைநிறுத்திய திறன் நக்கீரரால் (அகம்.141) பாடப்பெறும்.

பெருந்திருமாவளவனென்றும் பெயர்பெறுகின்ற இவன், தன் காலத்துப் பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியோடே நட்புற்று ஒருங்கிருந்த உடனிலைக் காட்சி சங்க கால அரச வரலாற்றில் குறிப்பிடத்தக்க பாராட்டுதலுக்குரிய சிறப்புக் காட்சியாய் விளங்குகின்றது. அதனைக் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் கண்டு உவந்து பாடியுள்ளார் (புறம்.58).

இச்சோழன் உறையூர் மருத்துவன் தாமோதரனாரால தன் வெண்கொற்றக் குடையின் சிறப்பாகிய குடைமங்கலம் பாடப்பெற்றான் (புறம்.60).

கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனாருக்குப் பரிசில் நீட்டித்து அவரால் வெறுத்துப் பாடப்பெற்றமையால் இவன் தன் புகழ்ச்சிக்கு ஓரளவு இகழ்ச்சியையும் ஏற்படுத்திக் கொண்டான் (புறம்.197).

இவைதவிர இவன் செய்திகள் பலவற்றையும் தொகுத்து உரைப்பதோடே பல பண்புகளையும் பாராட்டிப் பொருநரை இவன்பால் ஆற்றுப்படுத்தும் முறையில் பொருநராற்றுப்படையை முடத்தாமக் கண்ணியாரும் இவனுடைய மற மேம்பாடுகளோடே ஆட்சிச் சிறப்புக்களையும் அடுக்கி இவன் கடற்கரை நகரான காவிரிப்பூம்பட்டினத்துச் செல்வச் சிறப்புக்களையும் சேர்த்துப் பட்டினப் பாலையைக் கடியலூர் உருத்திரங்கண்ணாரும் பாடியுள்ளனர்.

தன்மேல் பட்டினப்பாலை பாடிய உருத்திரங் கண்ணனார்க்கு இவன் பதினாறு நூறாயிரம் பொன் பரிசளித்துச் சிறப்பித்த செய்தியைத்

> தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்
> பத்தொ டாறுநூ றாயி ரம்பெறப்
> பண்டு பட்டினப் பாலை கொண்டதும்
> (கலிங்க. இராச. 21)

எனவரும் கலிங்கத்துப் பரணிப் பாடலிற் காணலாம்.

459. சங்க காலத்துக் கரிகாலன் ஒருவனே

இனி, சங்க இலக்கியங்களாலும் பிற்கால இலக்கியங்களாலும் அறிய வருகின்ற சங்க காலத்துக் கரிகாலன் ஒருவனையே இருவராக எண்ணிச் சிலர் வரலாற்று ஆராய்ச்சியை வகுப்பர்.[10] கருங்குழலாதனார், சுழாத்தலையார், வெண்ணிக் குயத்தியார், மாமூலனார், பரணர், நக்கீரர் ஆகியோரால் புறநானூறு, அகநானூறு ஆகிய தொகை நூல்களில் பாடப்பெற்றவன் முதலாம் கரிகாலனென்றும், முடத்தாமகண்ணியார் மற்றும் கடியலூர் உருத்திரங்கண்ணனாரால் முறையே பொருநராற்றுப் படையிலும் பட்டினப்பாலையிலும் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பெற்றவன் இரண்டாம் கரிகாலனென்றும் அன்னோர் ஆய்வுரை காண்பர். அவர்கள் பதினொரு வேளிரொடு வேந்தர் சாய வென்றான் கரிகாலனென்று பரணர் குறிப்பிடும் வெண்ணிவாயில் போரை, இருபெருவேந்தரை ஒருகளத்து அழியத் தாக்கினானென்று முடத்தாமக் கண்ணியார் மொழியும் வெண்ணிப்போரினும் வேறாக எண்ணியதால், வேளிரொடு வேந்தரை வென்ற போர்க்குறிப்பு பொருநராற்றுப் படையிலோ பட்டினப் பாலையிலோ இல்லையெனக் கொண்டனர். அதன் மேலும், வெண்ணிப் பறந்தலைப் போரிலே இவனால் புறப்புண் பெற்ற பெருஞ்சேரலாதன் வடக்கிருந்த செய்தி மற்றும் ஒன்பது மன்னரை நண்பகல் ஒழித்த வாகைப் பறந்தலைப் போரின் வெற்றி ஆகிய இவையெல்லாம் அந்நெடும்பாட்டுக்களில் இல்லாமை கண்டதும் கரிகாலன் ஒருவனையே இருவராக்குதற்கு ஏதுவாயிற்று. ஆயினும், அஃது அமையாது. பரணர் பாடிய வெண்ணிவாயில் போரே முடத்தாமக் கண்ணியார் மொழியும் வெண்ணிப்போரென்பது மேலே விளக்கப்பட்டது. பெருஞ்சேரலாதனை வென்ற வெண்ணிப் பறந்தலைப் போரும் ஒன்பது மன்னரை வென்ற வாகைப்பறந்தலைப் போரும் பொருநராற்றுப்படை மற்றும் பட்டினப் பாலைகளில் குறிக்கப் பெறாமைக்குக் காரணம் இப்போர் நிகழ்ச்சிகளுக்கு முன்பே அப்பாடல்கள் பாடப் பெற்றிருக்கலாம்.

இனிச் சங்க காலத்துக் கரிகாலன் இருவராகார் என்பதற்குரிய காரணங்களைக் காணலாம்.

முதற்காரணம், திருமாவளவனுக்குக் கரிகாலனென் பது சரணப்பெயர். பொருநராற்றுப்படை, பட்டினப்பாலை ஆகியவற்றின் பாட்டுடைத்தலைவன் வரலாறு, 'கரிகாலன் கால் நெருப்புற்று' என்றவாறு அப்பெயர்க் காரணத்தை உள்ளடக்கிக் கொண்டுவருகின்றது. ஆதலால் முதன் முதலில் கரிகாலனென்னும் காரணப்பெயர் பெற்ற அவனை இரண்டாம் கரிகாலனெனக் குறிப்பது எவ்வாறு? அக்காரணப் பெயரே அவனின் முன்னோனான ஒருவனுக்கு முதலாம் கரிகாலனென்று இசைந்ததெவ்வாறு? அம் முன்னோனுக்கு இயற்பெயரே இல்லாமைபோல இப்பெயரன்றோ எங்கும் ஆட்சிப் பெறுகின்றது? காரணப்பெயர் சிறப்புடையதாயிருந்து அப்பெயருக்குரியோனும் பெருமையுடையோனாயிருந்தால் பின்வருவோர் வேண்டுமாயின் அப்பெயரைக் காரணம் கருதாது சிறப்பே கருதி இயற்பெயராக எடுத்து இட்டுகொள்ளலாம் அம்முறையில் பின்வந்த ஆதித்த கரிகாலன் முதலியோர்க்கு இப்பெயர் அட்டியின்றி அமைந்தது. ஆயின், முன்னுள்ளோனுக்கு அப்பெயரமைதல் முடியாதாகையால சங்க காலத்துக் கரிகாலன் ஒருவனேயென்பது உணரபபடும்.

இதற்கு இன்னும் பல காரணங்களையும் காணலாம். அகநானூற்றின் இரு பாடல்களில் கரிகாலனின் வாகைப்பறந்தலை வாகையையும் (அகம்.125) வெண்ணி வாயில் வெற்றியையும் (அகம்.246) விரித்துப் பாடிய பரணர், பின்னும் ஒரு பாடலில் இவன் கழாரெனும் ஊரையொட்டிய காவிரித்துறையில் சுற்றத்தோடே புதுப்புனல் விழாக் கொண்டாடியிருக்கையில் இவன் காணுமாறே புனலாடிய ஆட்டனத்தியை வெள்ளம் அடித்துப்போன நிகழ்ச்சியை விரிதது பாடியுள்ளார் (அகம்.376). அவரே ஆட்டனத்தியின் காதலியாகிய ஆதிமந்தி அவனைக் காணாத நிலையில் அறிவுபேதுற்றுக் கரைவழியே தேடிப்போய்க் கடல் முகத்தே அவனைக்கண்டு அணைந்தாளென்பதையும் வேறு பாடல்களில் விளங்கக் கூறியுள்ளார்.. (அகம்.76, 135, 222, 236, 396). மற்று, இளங்கோவடிகளும் சிலப்பதிகாரத்திலேயே கண்ணகியின் கூற்றாகக் கரிகாலனின் மகள் வரலாறாக ஆதிமந்தியின் வரலாற்றை வடித்துள்ளார் (சிலம்பு.21:10-15). அன்றியும், கரிகாலன் புதுப்புனல் விழாக் கொண்டாடும் பொலிவினைத் தண்பதங் கொள்ளுதல் என்ற பரணரின் அதே சொல்லாட்சியால் இளங்கோ பிறிதோரிடத்திலும் புனைவார் (சிலம்பு.6: 159-161). ஆயின், சிலப்பதிகாரத்துக்

கரிகாலனை இமையப் படையெடுப்பாளன் என்ற முறையில் இரண்டாம் கரிகாலனென்றால் முதற்கரிகாலனுக்குரிய இச்செய்திகள் அவனோடு எவ்வாறு இயைவுறும்?

இனி, அகநானூற்றிலே, 'செல்குடி நிறுத்த பெரும்பெயர்க்கரிகால்' (அகம்.141) என்று, தளர்ந்த குடிகளை நிலைநிறுத்தியவனாகக் கரிகாலனைப் பாராட்டுவார் நக்கீரர். மற்று, அதே செய்தி குறித்துக் 'கோயிலொடு குடிநீறீஇ' (பட்.286) என்று பட்டினப் பாலையில் பாட்டுடைத் தலைவன் செயலைப் பட்டியலிடுவார் கடியலூர் உருத்திரங்கண்ணனார். அவனை இரண்டாம் கரிகாலனெனின் நக்கீரர் பாடிய முதலாம் கரிகாலனுக்குரிய அதே செயல் இவனுக்கும் பொருந்தியது என்பதோ?

இன்னும் பொருநராற்றுப்படை தன் தலைவனான கரிகாலனை உருவப் பல்தேர் இளஞ்சேட் சென்னியின் மகன் என்று மொழியக் கண்டோம். அந்த உருவப்பல்தேர் இளஞ்சேட் சென்னி பரணரால் நேரில் சிறப்பித்துப் பாடப்பெற்றவன் (புறம்.4). ஆதலால் அவன் மகன் கரிகாலனும் பரணர் காலத்தவனேயென்று அறியலாம். ஆயின், அவரால் மூன்று பாடல்களில் குறிக்கப்பெற்ற கரிகாலனை முதற்கரிகாலனென்றும் இவனை இரண்டாம் கரிகாலனென்றும் எவ்வாறு வேறுபடுத்த இயலும்? இயலாதெனவே, சங்க காலத்தைப் பொருத்தமட்டில் கரிகாலன் ஒருவனேயென்று முடிக்கலாம். 'ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்கள்'[11] என்ற ஆங்கில நூலாசிரியர் கனகசபைப் பிள்ளை 'முதலாம் கரிகாலன்' நூலாசிரியர் உலகநாதப்பிள்ளை[12] போன்றோரும் இவ்வாறே முடித்துள்ளனர்.

4.5.10. திருமாவளவனே பெருந்திருமாவளவன்

இனி, கரிகாலனாகிய திருமாவளவனே புறநானூற்று மூன்று பாடல்களின் (58, 60, 197) அடிக்குறிப்புக்களில் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன் என்று குறிக்கப் பெற்றுள்ளமை காண்கிறோம். காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார், உறையூர் மருத்துவன் தாமோதரனார், கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக்குமரனார் ஆகிய மூவரும் அப்பாடல்களை முறையே பாடியுள்ள புலவராவர்.

இவருள் காரிக்கண்ணனார் நக்கீரரின் காலத்தவரென்பதை இருவரும் ஒருங்கிருந்து பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனைப் பாடியுள்ளமையால் (புறம்.56,57) அறியலாம். இவ்விருவருள் நக்கீரர் கரிகாலனையும் பாடியுள்ளவராதலால் காரிக்கண்ணனாரும் கரிகாலன் காலத்தவரேயென்பது விளங்கும். விளங்கவே, அவரால் பாடப்பெற்ற பெருந்திருமாவளவனும் கரிகாலனே என்று கருதலாம். அவ்வாறே கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக்குமரனார், பெருந்திருமாவளவனையேயன்றியும் சோழன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னியைப் பாடியவர் (புறம்.61). அந்நலங்கிள்ளி சேட்சென்னி கரிகாலனுக்கு மகனென வருதலால், இப்பெருந்திருமாவளவனைக் கரிகாலனாகவே காணலாம். கரிகாலனுக்கே பெருந்திருமாவளவனென்றும் பெயர் வழங்கிற்று என்பார் கனகசபைப் பிள்ளையும்[13].

4.6. சோழன் வேற்பல்தடக்கைப் பெருவிறற்கிள்ளி (கிபி. 100-130)

சோழன் கரிகாற் பெருவளத்தானுக்கு ஓரளவு சம காலத்தவனாய்ச் சோழநாட்டின் மற்றோரிடத்திலேயிருந்து அரசு புரிந்தவனாக அறிய வருபவன் சோழன் வேற்பல் தடக்கைப் பெருவிறற் கிள்ளி ஆவான். கரிகாலனொடு வெண்ணிப் பறந்தலையில் பொருது புண்பட்டு வடக்கிருந்த பெருஞ்சேரலாதனைப் பாடிய கழாத்தலையாரும், கரிகாலனின் வாகைப் பறந்தலை வாகை (அகம்.125), வெண்ணிவாயில் வெற்றி (அகம்.246), காவிரிப் புனல்விழா (அகம்.376) ஆகியவற்றைப் பாடிய பரணரும் இப்பெருநற் கிள்ளியின் திருப்போர்ப்புறத்துப்போரின் அவல முடிவை அவலித்துப் பாடியுள்ளமையால் (புறம்.62, 368, 63) இதனை உணரலாம். இச்சோழன் பெருவிறற் கிள்ளிக்கும் சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனென்ற இமையவரம்பனுக்கும் இடையே கடுமையுற நடந்த அப்போரில் இருதிறப் படையோடே இருபெருவேந்தரும் ஒருங்கே மாண்ட உருக்கத்தை அவ்விரு பெரும்புலவர் பாடல்களிலும் உணரலாம்.

இனி, இவ்வேற்பல் தடக்கைப் பெருவிறற்கிள்ளி நெடுஞ்சேரலாதனுடன் பொருத இடமான

போர்ப்புறமென்பது சங்க இலக்கியங்களின் மூன்று பாடல்களில் (அகம்.186, 326, நற்.10) போர எனவருகின்ற ஊரின் புறமாகலாம். ஆயின், காவிரிக கரையூரான அது (அகம். 186, 326) பழையனுக்கு உரியது (அகம்.186, 326: நற்.10). அப்பழையன் சோழர் மறவனென்றும் (அகம்.326) அச்சோழர் கொங்கரொடு பொருதபோரில் அவன் குறிதவறாது வேலெறிந்து போர் புரிந்தானென்றும் (அகம்.326: நற்.10) அறிகிறோம். கொங்கரென்ற சொல் சேரரையும் குறிக்குமாகலின், சேரமான் குடகுகோ நெடுஞ்சேரலாதனை எதிர்த்து இச்சோழன் பெருவிறற்கிள்ளி பொருத போர்ப்புறத்துப் போரிலேயே சோழர் மறவனான அப்பழையனும் வேலெறிந்து வினைபுரிந்திருத்தல் கூடும். இப்போரைப் பாடிய பரணரே போர்கிழவோனான அப்பழையனைப் பற்றிய செய்திகளையும் பாடியுள்ளாரென்பதும் இங்கே எண்ணத்தகும்.

47. சோழன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளி (கிபி.125-150)

சோழன் வேற்பல் தடகைப் பெருவிறகிள்ளியை அடுத்த வேந்தனாகச் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியைக் காணலாம். முன்னவனான வேற்பல் தடக்கைப் பெருவிறற் கிள்ளியைச் சேரமான குடகடுங்கோ நெடுஞ்சேரலாதன் காலத்தவனாகக் கணிக்கலாம். பின்னவனான இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி அந்நெடுஞ்சேரலாதனுக்கும் அவனை வென்ற மலையமான் திருமுடிக்காரிக்கும் பின்னோனாகிய மாந்தரஞ் சேரலின் காலத்தவனாக வருகின்றான்.

சோழ வேந்தருள்ளும் கரிகாலன் காலத்திலேயே அவனாட்சியின் பிறகூறின்கண் இப்பெருநற்கிள்ளி சோழ நாட்டின மற்றொரு பகுதியிலிருந்து ஆண்டிருத்தல் வேண்டும். கரிகாலன் காலத்துப் பாண்டியனான இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறனைப் பாடிய புலவர் வடமவண்ணக்கன் பேரிசாத்தனார் (புறம்.198) தாமே இப்பெருநற்கிள்ளியையும் பாடியுள்ளமையால் (புறம்.125) இது விளங்கும்.

'சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறையும்
சோழன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளியும்

பொருதவழிச் சோழற்குத் துப்பாகிய தேர்வன்
மலையனை வடமவண்ணக்கன பேரிசாத்தனார்
பாடியது'

என்ற குறிப்புடனே புறநானூற்றிலே அவர் பாடல் (125) காணப்படுகின்றது. எனவே, இப்பெருநற்கிள்ளி மலையமான திருமுடிக்காரியாகிய தேர்வன் மலையனைத் துணையாகக் கொண்டு, சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறையை வென்றமை விளங்கும். மற்று, துணைப்படை வேண்டாத போர் வெற்றியையும் முருகனையொத்த சீற்றத்தையுமுடைய அச்சம் பொருந்திய தலைவனாக இவனை விளித்துப் பாடும் பாண்டரங் கண்ணனார், இவன் மாட்சிமையுடைய குதிரைகளோடும் யானைகளோடும் பகைநாடொன்றின் மேல் படையெடுத்துச் சென்று அதனைப் பாழ்க்கித் தீக்கிரையூட்டி நல்லமர் செய்து வென்றான் என்பார் (புறம்.16). இஃது எந்த நாடென்று விளங்கவில்லை.

சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறைக்குப் பகைவனாய் அவனை வென்ற இச்சோழன் அவன் மரபினனான சேரமான் மாரிவெண்கோவுக்கு நண்பனாய்த் திகழ்ந்தான். அன்றியும் பாண்டிய வேந்தனான கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதியையும் இவன் நண்பனாகக் கொண்டு அவ்விருவரோடும் ஒற்றுமைப்பட்டு ஒருங்கிருந்த நிலையில் ஔவையாரால வாழ்த்திப் பாடப்பெற்றான் (புறம். 367).

இவன் கைவண்மை, போர்வன்மைகளால் மேம்பட்டு விளங்கினமையை உலோச்சனார்ின் புறப்பாடல் ஒன்றினாலும் அறியலாம்.

நாடென மொழிவோர் அவன்நாெ ன மொழிவோர்
வேந்தென மொழிவோர் அவன் வேந்தென
மொழிவோர் (புறம்.377)

எனவரும் அவர் பாடலடிகளால் இவன் அரசியல சிறப்புக்களும் அறியப்படும்.

4.8. **சோழன் நலங்கிள்ளி**
(கி.பி.140-170)

சோழன் கரிகாறபெருவளத்தானுகுப பின அவன் மகனென்று மதிக்கத்தக்க சேட்சென்னி நலங்கிள்ளி சோழ

வேந்தனாகி வருகின்றான். உறையூர் முதுகண்ணன் சாத்தனார் (புறம்.27, 28, 29, 30), கோவூர் கிழார் (புறம்.31, 32, 33, 44, 45, 47, 68, 382, 400), கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக குமரனார் (புறம்.61), ஆலத்தூர் கிழார் (புறம்.225) ஆகியோரால் இவன் பாடப்பெற்றுள்ளான்.

உருவப பல்தேர் இளஞ்சேட் சென்னியின் பெயரன் என்ற முறையில் இந்நலங்கிள்ளியும் சேட்சென்னியென்ற பெயரொட்டுப பெற்றான்.

பெருந்திருமாவளவனான கரிகாற் பெருவளத் தானைப பாடிய (புறம்.197) கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக குமரனாராலேயே நலங்கிள்ளி சேட்சென்னியாகிய இவனும் பாடபபெற்றமையால் (புறம்.61) இருவருடைய ஒட்டிய காலத்தொடர்பும் உணரப்படும்.

நக்கீரரால் பாடப்பெற்ற முறையில் சோழன் கரிகாற் பெருவளத்தானுக்கு (அகம்.141) ஒத்த காலத்தவனான பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறனைப் (புறம்.56) பாடிய ஆவூர் மூலங்கிழாருக்கு (புறம்.196) ஆலத்தூர் கிழார் ஒத்த காலப்புலவராக வருதலின், அவரால் பாடப்பெறுகின்ற நலங்கிள்ளியை அம்முறையிலும் கரிகாலனோடே ஒட்டிய காலத்தவனென்று உணரலாம். ஆலத்தூர் கிழாரும் ஆவூர் மூலங்கிழாரும் ஒரே காலத்தவரென்பது பின்னர் இருவரும் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனைப் பாடுவதனால் (புறம். 34, 38) அறியப்படும்.

'ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழாகள்' என்ற ஆங்கில நூலாசிரியர் கனகசபைப் பிள்ளையும் கரிகாலனையடுத்து ஆட்சிக்கு வந்தவனாக நலங்கிள்ளியையே காட்டுகின்றார்.[14] ஆயினும் அவர் உறவுமுறையைக குறிக்கவிலலை. பண்டைத்தமிழர் காலமுறை என்ற ஆங்கில நூலாசிரியர் சிவராசப் பிள்ளை நலங்கிள்ளியைக் கரிகாலனுக்குப் பின் வந்தானாகக் காடடுவதோடே அவனுக்கு மகனென்றும் உருவப் பல்தேர் இளஞ்சேட்சென்னிக்குப் பெயரனென்றும் உறவு முறையைத் தெளிவுறக் குறிப்பிடுவார்.[15]

4.81. நலங்கிள்ளி நெடுங்கிள்ளி தாயப்போர்

சோழன் நலங்கிள்ளிக்குத் தாயப்பகைவனாய் அரசுரிமையில் குறுக்கிட்டுப் போர்புரிவோனாய் நெடுங்கிள்ளி வருகின்றான். கரிகாற் பெருவளத்தான் இறந்தவுடன் அரசுரிமை பெறுதற்குரிய நலங்கிள்ளி ஆட்சியேற்குமுன்னர் போலும், அந்நெடுங்கிள்ளி முனைந்து வந்து ஆவூர் அரணைப் பற்றிக்கொண்டு உள்ளிருந்தான். அவன் செயல்கண்டு சினந்த நலங்கிள்ளி அவனுக்கெதிராக வஞ்சினங்கூறி அவனோடு போருக்கெழுந்தான்.

மெல்ல வந்தென் நல்லடி பொருந்தி
ஈயென இரக்குவர் ஆயின் சீருடை
முரசுகெழு தாயத்து அரசோ தஞ்சம்
இன்னுயிர் ஆயினும் கொடுக்குவென் இந்நிலத்து
ஆற்றல் உடையோர் ஆற்றல் போற்றாதென்
உள்ளம் எள்ளிய மடவோன் தெள்ளிதின்
துஞ்சுபுலி இடறிய சிதடன் போல
உய்ந்தனன் பெயர்தலோ அரிதே (புறம்.73)

எனத் தொடங்கும் இவன் வஞ்சினப் பாடல் புறநானூற்றிலே இடம் பெற்றுள்ளது. இவ்வாறு நெடுமொழி கூறிப் படையொடு சென்று ஆவூரை முற்றுகையிட்ட இந்நலங்கிள்ளியை எதிர்க்கும் துணிவில்லாத அந்நெடுங்கிள்ளி அரணை அடைத்துக்கொண்டு உள்ளேயே ஒடுங்கியிருந்தான். இவன் பலநாள் தொடர்ந்து முற்றியிருந்த நிலையில் அடைபட்ட அரணுக்குள் களிற்றியானைகளெல்லாம் பிடியானைகளோடு குளத்திற் படிந்து நீராட வழியின்றிக் கவளமும் பெறாதனவாய்க் கட்டுத்தறிக் கம்பங்களைச் சாய்த்து நிலத்திற் புரளும் கையையுடையனவாய் வெய்துயிர்த்துச் சுழன்று இடியேறுபோல் முழங்கின; பாலின்றிக் குழந்தைகள் அழுதன; பூவின்றி மகளிர் வறுந்தலை முடித்தனர்; நீரின்றி மனையிடத்தே இருந்தோரெல்லாம் வருந்திக் கூவினர்; இவற்றையெல்லாம் கேட்டிருந்தும் இவற்றிற்கு நாணாதே அடைத்திருந்த நெடுங்கிள்ளியை நேரிற்கண்ட கோவூர்கிழார், நிலைமைகளை எடுத்துச் சொல்லி அவனுக்கு அறவுரையும் மறவுரையுமாகப் பாடிய பாடலொன்றையும் காண்கிறோம்.

இன்னாது அம்ம ஈங்கினிது இருத்தல்
துன்னருந் துப்பின் வயமான் தோன்றல்!

அறவை யாயின் நினதெனத் திறத்தல்;
மறவை யாயின் போரொடு திறததல்;
அறவையும் மறவையும் அல்லை யாகத்
திறவாது அடைத்த திண்ணிலைக கதவின்
நீண்மதில் ஒருசிறை ஒடுங்குதல்
நாணுத்தகவு உடைத்தித காணுங் காலே (புறம்.44)

எனவரும் இப்பாடலில் இவனுகுரிய அரணுக்குள் புகுந்துகொண்டு அறமும் மறமுமில்லானாய் அடைத்திருந் தான் நெடுங்கிள்ளி என்பதைப் புலவர் தெளிவுறக் கூறுதல் காணலாம்.

இதனையடுத்து நெடுங்கிள்ளி ஆவூர் அரணை விட்டுத் தபபிப போய் உறையூர் அரணுக்குள் புகுந்து ஒடுங்கினான். அவனைத் தொடர்ந்து நலங்கிள்ளி அங்கும்போய் முறறுகையிட்டானாக, அப்போதும் நெடுங்கிள்ளி வெளிப்படாத நிலையில் கோவூர்கிழார் தனித்தனியே இருவரையும் கண்டு,

குடிப்பொருள் அன்றுநும் செய்தி கொடித்தேர்
நும்மோர் அன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி உவகை செய்யுமிவ் விகலே (புறம்.45)

எனக கூறி, 'இப்போரைத் தவிர்த்தலே நுமக்குத் தக்கது' என்று அறிவுறுத்திச் சந்துசெய்தார். அதன்பின் இவ்விருவருக்கு இடைப்பட்ட செய்தியேனும் விளங்கவில்லை. ஆயினும், சோழன் நலங்கிள்ளியின் ஆட்சிப் பேரொளியை நன்கு அறிகிறோம்.

4.8.2. பாண்டி நாட்டு வெற்றி

ஆட்சி பெற்று அமர்ந்தபின் சிறந்த வெறறிமேம்பாடு உடையனாய் விளங்கிய சோழன் நலங்கிள்ளியின் குறிப்பிட்ட வெற்றியாக நாமறிய வருவது, அவன் பாண்டிநாட்டை வென்ற வெற்றியேயாம்.

தென்னம் பொருப்பன் நன்னாட் டுள்ளும்
ஏழெயிற் கதவம் எறிந்துகைக் கொண்டுநின
பேழ்வாய் உழுவை பொறிக்கும் ஆற்றலை! (புறம்.33)

எனறு இவன்கொணட அவவெறறிச சிறபபினை எடுததுப பாடுவாா கோவூர்கிழாா பாணடி நாட்டில் அமைநததோா ஏழரணின கதவை எறிநது கைபபற்றி அதிலே தன புலிப பொறியை இவன் பொறிததானெனறு அவவெறறியை அறிகிறோம பாணடி நாட்டில பல சிறறரணகள வாயநததாகப பாடடபெறற பணடைச சிறபபுமிகக கானபபேரெயிலாகிய காளையாாகோயிலுககு அருகில இககாலததுளள. 'ஏழுபொனகோட்டை' எனபது இஙகே குறிககபபெறுகினற ஏழெயிலாக எணணபபடுகினறது (புறம.33. உ.வே.சா குறிபபுரை)

483. வேந்து மேம்பாடு

வெறறி வேநதனான சோழன நலஙகிளளி தன காலத தமிழகததில தானே பெருவேநதனாய ஏனை இருவேநதரையும வெனறு மேமபடடு விளஙகினான

சிறபபுடை மரபின பொருளும இனபமும
அறததுவழிப படுஉம தோறறம போல
இருகுடை பிற்பட ஓஙகிய ஒருகுடை (புறம 31)

எனறு இவனது வெணகொறறககுடையின உயாசசி மேமபாடடைக குறிககினற கோவூாகிழாரே பினனும

கடுமபின அடுகலம நிறையாக நெடுஙகொடிப
பூவா வஞசியும தருகுவன ஒனறோ
வணணம நீவிய வணஙகிறைப பணைததோள
ஒணணுதல விறலியர் பூவிலை பெறுகென
மாட மதுரையும தருகுவன (புறம 32)

எனறவாறு இவன வெறறிக கொடையையும விளமபுவாா மறறும நனமதியுடைய குயககுலதது இளையோா கலம வனைதறகுத தணட சசககரததில இட்ட பசுமணதிரள அவா நினைநத வடிவகதிறகு வருவதுபோல நாடுமுழுதும இவன கருதும முடிவையடையும எனறும அவா பாடுவாா (புறம 32)

இவவாறு தமிழக வேநதருள தலைமையுறறுத திகழநத இவனது வெறறிமேமபாடு தமிழகம கடநது வட புலததுளவிலும பரநது சிறநதமையினையும பாராககலாம சேரபாணடிய

ராகிய ஏனை இருபெருவேந்தரும் தம் இருகுடைகளையும் எடுத்துப் பின தொடர. இவன் அவற்றிற்கு முன்னே மேலோங்கிய தன் ஒரு பெருங்குடை உயர்ந்து விளங்கப் புகழ்வே யை விரும்பிச் சென்று பாசறையில் இருத்தலன்றி. நகரிலே இருத்தலை உடன்படான். ஆதலால், அம்முறையே பகைப்புலத்துப் பாசறையில் தங்கிவிட்டுக் கீழ்கடல் பிறபட மேல்கடலின் அலை தன் குதிரைக் குளம்பை அலைக்குமாறு இவன் வலமாகப் படையெடுத்து வருதலுமுண்டெனறு வடபுலத்தரசுகள் மயங்கி நெஞ்சு நடுங்கும் துயரம் பாய்தலால் துஞ்சாக் கண்களை உடையன (புறம்.31) என்ற கோவூர்கிழாரின் பாடற் குறிப்பு இதற்கேற்ற சான்றாகும்.

இதேமுறையில் அவனது எழுசசிமேம்பட்ட ஆற்றலின் தோற்றத்தை ஆலத்தூர் கிழாரும் அருமையிற் புனைவார். இவன் படையெடுத்துச செல்லுங்கால் முன்னே செல்லும் தூசிப் படையினர் எதிர்ப்பட்ட பனைமரத்தின் காய்த்த நுங்கினையுண்டு போக. இடைப்படையினர் செல்வதற்குள் அபபனைமரம் பழுத்து நிற்க அவர் அப்பழங்களையுண்டு விதையையெறிந்து செல்ல, கடைப்படையினர் போகும்போது அவவிதை முளைத்துக் கிழங்கு தோன்ற அவர் அக்கிழங்கினை எடுததுச் சுட்டுண்டு செல்வரெனறு இவனுடைய படைமிகுதியையும் அது செலலுதற்காகும் கால நீட்சியையும் காட்டுகின்ற அவர், அத்தகைய படையோடே இவன் உலகத்தை வலமுறையாக வளைத்து மனனரையெல்லாம் வலி மையடகி மேம்பட்ட ஆற்றல் அமைந்தவனென்பார். மற்றும் அவவாற்றலமைந்த இவன் ஆட்சிக் காலத்தே அடுத்த மன்னரெல்லோரும் தத்தம் வலம்புரிச் சங்குகளை ஊதினால அவவோசையை இவன் கேட்பானோ என்றஞ்சி ஊதாதே அவறறைத தூக்கணங்குருவிக் கூடுகளைப்போல அரண்மனையின் ஓவவொரு மூலையிலே தொங்க விட்டிருபபர் எனவும இவனது மேலாண்மையை அவரே மேம்படமொழிவார் (புறம்.225).

இந்நலங்கிள்ளி சேட் சென்னி தன்னைச்
சினந்தோர்க்கே கொடியன; சேர்ந்தோர்க்கு இனியன்.

எஃகுவிளங்கு தட கைகை இயலதேர்ச் சென்னி
சிலைத்தார் அகலம் மலைகுநா உளரெனின்
தாமறி குவர்தமககு உறுதி; யாமவன

எழுவுறழ் திணிதோள் வழுவின்று மலைந்தோர்
வாழக் கண்டன்றும் இலமே; தாழாது
திருந்தடி பொருந்த வல்லோர்
வருந்தக் காண்டல் அதனினும் இலமே (புறம்.61)

என்று இவ்விரு பண்புகளையும் குறித்து, இவன் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனாரால மாண்புறப் பாராட்டப்பெறுகின்றான்.

4.8.4. புலமையரசன்

சோழன் நலங்கிள்ளி தானே பாடும் தமிழ்ப் புலமை சான்றவனென்பதை முன்னர் அவன் கூறிய வஞ்சினப் பாட்டிலிருந்தே உணரலாம். பின்னும், அரசுரிமைச் செல்வம் குறித்து இவன் பாடிய பொருண்மொழிக் காஞ்சிப்பாடல் ஒன்று இவனது புலமையை மட்டுமன்றி அரசியல் ஆண்மையையும் அறிவிப்பதாய் அமைந்துள்ளது. மூத்தோரையெல்லாம் கூற்றம் கொண்டுபோக விதியால் தரப்பட்டுவந்த அரசுரிமையை அடைந்தோமானால் தலைமை பெற்றோமென்று குடிமக்களை வரிவேண்டி இரக்கும் கூர்மையில்லாத ஆண்மையையுடைய சிறியோன், வானுற ஓங்கிய வெண்கொற்றக் குடையும் முரசும் பொருந்திய வேந்தரின் அரசச் செல்வமாகிய அதனை அடைந்தானாயின், அச்செல்வம் அவனுக்குத் தாங்கவொண்ணாத சுமையாகவே அமையும்: அவனைப் போலன்றிப் போரையேற்கும் மனவெழுச்சியொடும் கூடிய வலிய முயற்சியுடைய சீர்மையோன் பெறுவானாயின், அது வற்றியுலர்ந்த நெட்டிச் சுள்ளிபோல நொய்தாய் அவனுக்கு எளிதில் தாங்கும்படி இருக்கும் என்ற கருத்தில் இவன் அப்பாடலைப் (புறம்.75) பாடியுள்ளான்.

4.8.5. இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னி

சோழன் நலங்கிள்ளி தன் இறுதிக் காலத்தில் இலவந்திகைப் பள்ளி என்னுமிடத்தே இறந்தமையால் பின்னர் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னி எனக் குறிக்கப்பெற்றான் (புறம்.61, அடிக்குறிப்பு).

இவன் பெயரை உறையூர் முதுகண்ணன் சாத்தனாரும் (புறம்.27:10) ஆலத்தூர் கிழாரும் (புறம்.225:9) 'சேட்சென்னி

நலங்கிள்ளி' என்று தத்தம் பாடலுக்குள்ளேயே பயிற்றியுள்ளனர் மற்று, மதுரைக் குமரனாரின் பாடலின்கீழ் அமைந்த அடிகுறிப்பில் தலைவன் பெயர் மேற்கண்டவாறு இலவந்திகைப பள்ளித்துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னியென்று குறிக்கப பெறுதலால அப்பாடலின தலைவனை வேறொருவனாகக் கருதி, அவனைச் சேடசென்னி நலங்கிளியின மைந்தனென்பார் ஔவை துரைசாமிபபிள்ளை (புறம்.61 முன்னுரை). எனினும், சோழன நலங்கிள்ளியைக் குறித்த ஆலத்தூர் கிழாரின் பாடலில் (புறம்.225) சேட் சென்னி நலங்கிள்ளி என்றமைந்த பெயரையே பழையவுரையாசிரியர் நலங்கிள்ளி சேட்சென்னியென்று தம் உரையிடையே ஆள்வதனாலும், அம்முறையிலேயே மதுரைக்குமரனார் பாடலின்கீழ்ப் பாட்டுடையோன் பெயர் குறிகபப பெறுதலாலும், சங்க காலத்தில இவ்வாறான இருசொற் பெயர்கள் முன்பின்னாக மொழிமாறி வருதலைத் தித்தன் வெளியன் · வெளியன் தித்தன், கிள்ளி வளவன் · வளவன் கிள்ளி போன்ற பெயர்களில் காண்கிறோம் ஆதலாலும், இப்பெயர் வடிவங்களைக் கொண்டு நலங்கிள்ளி ஒருவனையே இருவராக்குதல் இசையாது. அறிஞர் சிவராசப் பிள்ளை போன்றோர் நலங்கிள்ளியை ஒருவனாகவே கொண்டுள்ளதை[16] இங்கே ஒருங்குவைத்து உணரலாம்.

49. காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி
(கி.பி.140-150)

சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளிக்குப் பின்னோனாகவும் சோழன் நலங்கிள்ளிக்கு ஒத்த காலத்தவனாகவும் அறிய வருபவன் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி.

சோழன் கரிகால்பெருவளத்தான் இறந்தவுடன் அரசுரிமை பெறுதற்குரிய நலங்கிள்ளி ஆட்சியேற்குமுன், அவனுகுத் தாயத்தானாகிய இந்நெடுங்கிள்ளி முனைந்து போய் ஆவூர் அரணைப் பற்றிக்கொண்டு உள்ளிருந்ததும், இவனுக்கெதிராக நலங்கிள்ளி வஞ்சினங்கூறிப் போருக்கெழுந்து முற்றுகையிட்டதும், அவனை எதிர்க்கும் துணிவின்றி அரணை அடைத்திருந்த இவனுகு அறமும் மறமுமூட்டிக கோவூர் கிழார் பாடியதும் (புறம்.44), அதன்பின் இவன் ஆவூர் அரணைவிடுத்துத் தப்பிப்போய் உறையூர்

அரணுக்குள் புகுந்து ஒடுங்கியதும், இவனைத் தொடர்ந்து வந்து அவன உறையூர் அரணையும் முற்றுகையிட்டதும், அப்போதும் இவன் வெளிப்படாமையால் இவனையும் அவனையும் கோவூர் கிழாரே சந்துசெய்து பாடியதும் (புறம்.45) முன்பு அந்நலங்கிள்ளியின் வரலாற்றிலேயே காணப்பட்டன.

இந்நெடுங்கிள்ளி ஆவூரிலிருந்து உறையூர் புகுந்தவுடன் அவ்வுறையூர் அரணை நலங்கிள்ளி முற்றுகையிடுதற்கு முன்னர்ப் போலும். இளந்தத்தன் என்னும் புலவரொருவர் அரசியல் நிலைமையினை அறியாதவராய் அந்நலங்கிள்ளியிடமிருந்து இவனிடம் பாடிப பரிசில் பெற வந்தார்; அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்றாற் போல், இவன் அப்புலவரை நலங்கிள்ளியின ஒற்றனெனக் கொண்டு கொல்லத் துணிந்தான். இதனையறிந்த கோவூர் கிழார் விரைந்து வந்து இவனுக்கு உண்மையுணர்த்தி அப்புலவரை விடுவித்துக்கொண்டார் என்றும் அறிகிறோம் (புறம்.47).

இவ்வாற்றால இந்நெடுங்கிள்ளி அரசியல் தெளிவும் ஆற்றலசால் துணிவும் இல்லாதவனென்பது புலனாம்.

இவன் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி எனக் குறிகசப்பெறுதலால் (புறம்.47 அடிக்குறிப்பு) முடிவில் இவ்ன் காரியாறு என்னும் ஆற்றிடை இறந்தமை அறியப்படுமாயினும், போர்முறையாலோ அல்லது வேறு எம்முறையில் இறந்தான் என்பது அறியுமாறில்லை.

இக்காரியாறென்பதைத் தமிழகத்தின் வட பகுதியில் திருவள்ளூரிலிருந்து திருக்காளத்திக்குச் செல்லும் வழியிலுள்ள இக்காலத்து இராமகிரியென்னும் மலையும் அதனையொட்டிய ஆறும ஊருமாகக் கூறும் கா. அப்பாத்துரையார், அங்கே வடபுல வடுக அரசர்களின் துணையோடு நலங்கிள்ளியை எதிர்த்து நெடுங்கிள்ளி ஏழுநாள் போர்புரிந்து இறுதியில் அவனோடு மற்போர் புரிந்து மாண்டானென்று கதை கூறுமாறே கற்பித்துக் கூறுவார்.[17] ஆயின், அவற்றுள் எதுவும் ஏதுவோடு இசையவில்லை.

சேரர தலைநகரான கருவூர் வஞ்சிகளும் சோழர தலைநகரான உறையூருகுமிடையே இனைறைய

திருச்சிராப்பள்ளி மாவட்டத்து மதுக்கரையருகே ஓடுகின்ற கரைபோத்தனாறு என்ற கருவெட்டாறே காரியாறு என்பர் அறிஞர்.[18] வஞ்சியிலிருந்து வஞ்சிப்பூச்சூடிப் போருக்கு வந்த சேரபாண்டியரைக் கிள்ளிவளவன் தன் தம்பியால் இக்காரியாற்றிலே எதிர்க்கச் செய்து வென்ற வரலாறு ஒன்றும் பின்னே வருதலால், அதற்கு இதுவே இசைவதாம். ஆகவே, கருவூருக்கும் உறையூருக்கும் இடைப்பட்ட கருவெட்டாறு என்னும் காரியாற்றிலேயே இந்நெடுங்கிள்ளி இறந்து பெயர்பெற்றான் என்று எண்ணலாம்.

410. கோப்பெருஞ்சோழன்
(கி.பி. 145-170)

சோழன் நலங்கிள்ளியை ஒட்டிய காலத்திலேயே சோழ நாட்டை உறையூரிலிருந்து ஆட்சி புரிந்தோனாக அறியவருபவன் கோப்பெருஞ்சோழன். முன்னோர்களோடே இவனுக்கு இடைப்பட்ட உறவுமுறை முதலான தொடர்புகள எவையும் விளங்கவில்லை. அன்றியும் கோப்பெருஞ்சோழன் என்ற இவன் பெயரும் முன்னோர் பெயர்களைப் போல இன்மையால், அஃது இவனுக்கு இயற்பெயரென்றும் தோனறவில்லை. மற்று, 'பெருங்கோக்கிள்ளி' (புறம்.67) என்று இவன் பெயரைப் பிசிராந்தையார் தம் பாடலில் குறிப்பிடுப் பாடுவதனால், அதுவே இவனுக்கு இயற்பெயராயிருந்து. அதனடியாகவே கோபபெருஞ்சோழன் என்ற பெயரும் சிறபபுப பெயர்போல வழங்கப்படடு வந்திருக்கலாம். 'பெருங்கோக்கிள்ளி' என்ற பெயரைப் போலவே 'தோவணகிள்ளி' (புறம்.220) என்ற பெயரும இவனைக குறித்துப பொத்தியார பாடலில் பொருந்தி வநதுள்ளமையால், கிள்ளி யென்னும் சொலலொடு கூடியதாகவே இவனது இயற்பெயர் அமைந்திருநததென்றும் அறியப்படும

இனி, கோபபெருஞசோழன் என்ற இவன் பெயர் முழுமையாகப பிசிராந்தையார் பாடலிலும் (புறம்.212) 'பெருஞ்சோழன்' என்ற அளவில் பதிற்றுப்பத்தின் ஒன்பதாம் பதிகத்திலும் ஆட்சி பெற்று அமைந்துள்ளது.

இகோபபெருஞசோழன் தன் காலத்துப பாணடியன இளம்பழையன் மாறனுடன் கூடிச சென்று சேரமான்

இளஞ்சேரல் **இரும்பொறையை** எதிர்த்துப் போரிட்டு அவனால் வெல்லப்பட்டோனாக அறிய வருகின்றான்.

> பொத்தி யாண்ட **பெருஞ்சோ** முனையும்
> விதலை யாண்ட **இளம்பழையன்** மாறனையும்
> வைத்த வஞ்சினம் **வாய்ப்ப வென்று** (பதி.பதி.9)

என வருகின்ற இளஞ்சேரல் **இரும்பொறையின்** வெற்றி குறித்த பதிற்றுப்பத்தின் பதிகத்தால் **இதனை** அறிகிறோம். ஆயினும், இவன் இளஞ்சேரல் **இரும்பொறையால்** வெல்லப்பட்ட வரலாறு தெளிவுற விளங்கவில்லை. அதே போல், இவனுடைய அரசியல் வரலாறுகளாக அறியத்தக்க செய்திகளும் வேறில்லை.

4101. புலவர் தோழன்

நாட்டுப் புரவலனான இக்கோப்பெருஞ்சோழன் சிறந்த பாட்டுப் புலவனாயும் திகழ்ந்தான். அகத்திணைச் சுவையோடே இவன் பாடிய அழகிய பாட்டுக்கள் நான்கு குறுந்தொகையிலே (20,53,129,147) இடம்பெற்று அமைந்துள்ளன. இத்தகைய புலவனாய்த் திகழ்ந்த இவன் இயல்பிலேயே புலவர்களிடம அன்பு பூண்டு அவர்களைப் போற்றி அவர்களுக்கு நண்பனாய் விளங்கினான். அவ்வகையில் புல்லாற்றூர் எயிற்றியனார், பொத்தியார், கண்ணகனார், கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனார் ஆகிய புலவர்கள் இவனால் போற்றப்பட்டுத் தாமும் இவனது நட்பிற்கு இசைந்தவராய் இவனோடு இனிமையுறப் பழகியிருந்தனர். அந்நால்வருள்ளும் பொத்தியார் நட்பினை இவன் பெரிதும் போற்றி மதித்து ஆண்டிருந்தானென்பதை, 'பொத்தியாண்ட பெருஞ்சோழன்' எனவந்த பதிற்றுப்பத்தின் (9) பதிகத்தால் அறிந்தேதும்.

இவ்வாறு தன் அருகிருந்த புலவர்களிடத்தே அன்பு கொண்டு நண்பு பூண்டிருந்த இவன், தொலைவில் பாண்டிநாட்டுப் பிசிரென்னும் ஊரினரான ஆந்தையாரென்னும் புலவருடைய பண்புகளைக் கேள்வியுற்ற அளவிலேயே அவர்பால் ஆராத நண்புற்றான். இவனைப் போலவே அவரும் இவன்பால் உணர்ச்சி வாயிலாய் ஒன்றிய நட்புடையரானார். அந்த நட்புணர்ச்சியிலே அவர்

இவன்பால் அன்னத்தைத் தூதுவிடுவார்போல் ஒரு பாடல் (புறம்.67) பாடிப் பின்னும்,

நுங்கோ யாரென வினவின் எங்கோ . . .
கோழி யோனே கோப்பெருஞ் சோழன்;
பொத்தில் நண்பின் பொத்தியொடு கெழீஇ
வாயார் பெருநகை வைகலும் நக்கே (புறம்.212)

என்று இவனையே தம் அரசனாகக் கொண்டு மற்றொரு பாடலும் பாடியிருந்தார்.

410.2. உணர்ச்சியொன்றிய நண்பன்

இவ்வாறு இக்கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையாரும் ஒருவரையொருவர் காணாதே உள்ளங்கலந்த நண்பராய் இருக்கையில் இவன் தன்னோடே முரண்பாடுகொண்டு போருக்கெழுந்த தன் புதல்வரை வெகுண்டு தானும் அவர்களின் மேல் போருக்குப் புறப்பட்ட நிலையில் புல்லாற்றூர் எயிற்றியனாரால் சினம் தணிக்கப்பெற்று, நல்வினை செய்யுமாறும் அறிவுறுத்தப் பெற்றவனாய் (புறம்.213) அரசாட்சியைத் துறந்து வடக்கிருந்து உயிர்நீக்கத் துணிந்தான். துணிந்து நல்வினையின் இன்றியமையாமை குறிததுப் பாடிய இவன் (புறம்.214) வடக்கிருக்க அமர்ந்தபோது, இவனுடன் நட்புற்றிருந்த புலமைச் சான்றோர் பலரும் இவனோடே வடக்கிருக்கும் கருத்தினராய் அமர்ந்தனராக இவன், தன்னருகே பிசிராந்தையாருக்கும் ஓரிடம் ஒழித்து வைகக வேண்டினான். அப்போது அவ்விடத்தேயிலலாமலும் இவன் செய்தியை அறியாமலும் தொலைநாட்டிலிருக்கும் அப்புலவர் இவனைப பற்றிக் கேள்விப பட்டதேயல்லாமல் நேரில் காணாதவர் ஆகையால், அவர் வந்து இவனோடே வடகிருத்தல எவ்வாறு இயலுமென்று அருகிருந்த சான்றோர் ஐயுற்றாராக இவன்,

ஐயம் கொள்ளன்மின் ஆரறி வாளீர்;
இகழ்விலன், இனியன், யாத்த நண்பினன்;
புகழ்கெட வரூஉம் பொய்வேண் டலனே;
தன்பெயர் கிளக்கும் காலை யென்பெயர்
பேதைச சோழன எனலும் சிறந்த

காதற் கிழமையும் உடையன்; அதன்தலை
இன்னதோர் காலை நில்லலன;
இன்னே வருகுவன்; ஒழிக்கஅவற்கு இடமே. (புறம்.216)

எனவும்,

தென்னம் பொருப்பன் நன்னாட் டுள்ளும்
பிசிரோன் என்பவென் உயிரோம் புநனே;
செல்வக காலை நிற்பினும்
அல்லற் காலை நில்லலன் மன்னே. (புறம்.215)

எனவும் தன்னோடே அவருக்குள்ள நட்பின் திறத்தைத் தெளிவுறுத்திக் கூறினான். இவன் தெளிவுறக் கூறியவாறே சின்னாட்களில் பிசிராந்தையார் இவன் வடகிருந்த இடத்திற்கு வந்தாராயினும் அவர் வருமுன்னரே இவனுயிர் நீங்கிற்று. அதுகண்ட அப்புலவர், இவன் குறித்தவாறே தாமும் இவனருகில் வடக்கிருந்து உயிர் நீத்தார்.

இவன் தானுற்ற அல்லற்காலத்தே பிசிராந்தையார் நில்லாது வருவாரென்று தனக்கும் அவருக்கும் இடையிலான உள்ளங்கலந்த நட்புணர்ச்சியில் நம்பிக்கூறிய படியே அவர் வந்தமை கண்ட பொத்தியார்,

நினைக்குங் காலை மருட்கை யுடைத்தே . . . .
வருவன் என்ற கோனது பெருமையும்,
அதுபழு தின்றி வந்தவன் அறிவும்,
வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தனவே
(புறம்.217)

என்றவாறு வியந்து, இவனையிழந்த நாட்டின் இடும்பையை எண்ணி இரங்கினார்.

இவன் வடக்கிருந்தபோது இவனோடே தாமும் வடகிருக்கவந்த பொத்தியாரை இவன் விலக்கி, அவருக்கு மகன் பிறந்தபின வருமாறு கூறி மறுத்துவிட்டான். அந்த வருத்தத்தோடு மீண்டுவந்த அவர், பல்லாண்டுகள் பாதுகாத்த களிற்றியானையை இழந்தபாகன், அது தங்கியிருந்த கூடத்தில் கம்பம் வறிதாயிருக்கக் கண்டு கலங்கியதுபோல தேர்வண்கிள்ளியாகிய இவனிலலாத உலறபுரின் மன்றத்தைப் பார்த்துக் கலங்கியழுதார் (புறம்.220)

இவன வடக்கிருந்து உயிர்துறந்த இடத்தே இவனுக்கு நடுகல் நாட்டியபோதும் அருகிருந்து கண்ட பொத்தியார், இவனை நினைந்து ஆற்றாதே இரங்கி, இவன் பண்புகளையெல்லாம் அடுக்கிக்கூறி அரற்றினார் (புறம்.221).

பின்னர்ச சிலகாலம் தமக்குப் புதல்வன் பிறக்கும்வரை இவன்பிரிவைப் பொறுத்திருந்த பொத்தியார், மகன் பிறந்தபின் மீண்டும் வந்து, நடுகல்லாய் நின்ற இவனைக் கண்டு, முன்னே நின்னொடும் வந்த என்னைப் புதல்வன் பிறந்தபின் வாவென்று விடுத்த அன்பிலாளனே! இப்போது வந்திருகினறேன்; என் இடம் யாது? என்று வினவ (புறம்.222). இவனும் பழைய நட்புணர்வோடே இடம் கொடுத்தானாக, அவரும் இவன் கொடுத்தஇடத்தே அமர்ந்து வடக்கிருந்து இவனொடும் கலந்தார (புறம்.223).

இவன் பழகிய புலமைச் சான்றோருள் கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனார் எனபவர் ஒருவர். இவன் வடகிருந்து உயிர்துறந்த காலத்து அதனை அறியாதோ எனனவோ அவர் காலந்தாழ்த்து இவனைக் காண வந்தார். தமமை இவன் வரவேற்றுப் பேசுவானென்று உணர்ச்சி நிலையில எண்ணி எதிர்பார்த்து வந்த அவர், தம்மிடம் இவன் மடடுமனறி இவனுடன் இறந்த எவருமே பேசாமையால், தம் உணர்வு நிலையிலேயே கலக்க முற்று, 'வீரனே, நின் கருத்திறகேறப வடகிருநதோர பலராதலால் அவரோடே முறபட வாராது பிற்பட வநத என்னை, 'இவன் உதவான்' என்று நீ எலலோரிடமும் சொல்லி வெறுத்தாய் போலும்' எனப புலம்பியழுதார் (புறம.219).

411 சோழன் நலங்கிள்ளி தம்பி மாவளத்தான்
(கி.பி.150-175)

கரிகால பெருவளத்தான என்ற தந்தையின பெயரடியாகத தானும பெயர் பெறறவன மாவளத்தான் இமைய வரம்பன தமபி பலயானைச் செல்கெழுகுடடுவன் என்றாறபோல, சோழன நலங்கிள்ளி தமபி மாவளத்தான என்று அணணனையடுத்துப பெயர் பெற்ற இவன் வரலாற்றில் குறிபபிடத்தக்க அரசியல் செய்தியேதும் அறியுமாறு இல்லை.

மற்று, இவனும புலவர் தாமபபல கண்ணனாரும வடடாடியிருகுகையில அவர விளையாடடாக வட்டினை

மறைக்கக் கண்ட இவனை விருட்டென வெகுண்டு தன் கையில் இருந்த வடினை அவர்மேல் எறிந்தானாக. 'இவ்வெறுக்கத்தகுக வெகுளிச் செயல் நின் முன்னோர் முறைமைக்குப் பொருந்துமோ? பொருந்தாதாகலின், யான் நின் பிறப்பிலே ஐயம் உடையேன்' என்று அவர் இவனை வெறுக்கும்படி பேசிப் பிழைபுரியவும், அத்தவற்றிற்கு இவன் அவரை வெறுக்காதது மட்டுமின்றி, தானே தவறு செய்தான் போல நாணியிருந்த முறையால், அவர் பிழையை அவரே உணருமாறு விட்டு, பின் அவரால் புகழ்ந்து வாழ்த்தப்பெற்ற ஒரு நிகழ்ச்சியே அறிய வருகின்றது (புறம்.43).

நின்யான பிழைத்தது நோவாய் என்னினும்
நீபிழைத் தாய்போல் நனிநா ணினனையே!
தம்மைப் பிழைத்தோர்ப் பொறுக்கும் செம்மல
இகழுடிப் பிறந்தோர்க்கு எண்மைகா ணுமெனக
காண்டகு மொய்ம்ப காட்டினை யாகலின்,
யானே பிழைத்தனென்: சிறக்கநின் ஆயுள்! (புறம்43)

எனவரும் அப்புலவர்தம் உணர்ச்சிக் கூற்றினால் இவனுடைய பொறுமைப் பண்பின் மேன்மை புலனாம். விளையாட்டு உணர்ச்சியில் முதற்கண் வெகுண்டாலும், அதனை உணர்ந்த நிலையில் அதனினும் பெரிய எதிர்ப்பிழை கண்டும் வெகுளாது பொறுத்த இவன் வெற்றி பாராட்டத்தகும். அரச வாகைத் துறையில் அமைந்த இப்பாடலுக்கு உரையெழுதியபின்,

"இது பொறுத்தற்கரிய பிழையைப பொறுதத குண வெனறியான் அரசவாகை ஆயிற்று"

என்ற பழையவுரையாசிரியரின் விளக்கக் குறிப்பினாலும் இவனது பண்புமேம்பாட்டை அறியலாம்.

4.12. **சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்** (கி.பி.170-200)

சோழன நலங்கிள்ளிகுப் பின் அவன் மகனென்று கருதத் தகுக கிள்ளிவளவன சோழவேநதன் ஆனான்

நலங்கிள்ளியைப பாடிய ஆலத்தூர் கிழாரும், கோவூர் கிழாரும் கிள்ளிவளவனையும் பாடியுள்ளமையால் (புறம்.34, 36, 69; 41, 46, 70, 373, 386) இருவர்தம் காலத்தொடர்பு கருதப்படும்

நலங்கிள்ளியின் மகனென்ற முறையிலும் கரிகால் வளவனின் பெயரனென்ற முறையிலும இவனுக்குக் கிள்ளிவளவனென்ற பெயர் அமைந்திருக்கலாம்.

கரிகாலனுக்கே முதன்முதல் வாய்த்த வளவனென்ற அப்பெயர் அவனுடைய பெயரனான இவனுக்கும் அமைந்தபின், அவனோடு இவனை வேறுபடுத்தி உணர்தறகாக நலங்கிள்ளியென்ற தந்தை பெயரொடு சார்ந்து கிள்ளிவளவனென்று ஆயிற்று எனலாம்

கரிகாலனையடுத்து அரசனானவன் நலங்கிள்ளி என்று ஆய்ந்துரைத்த அறிஞர் கனகசபைப பிள்ளை, நலங்கிள்ளிக்குபபின் அரசாண்டவன் கிள்ளிவளவன் என்றும் கூறுவார்.[19] பின்வந்த அறிஞரா சிவராசபபிள்ளை கரிகாலனுக்குப பின்னோனாக நலங்கிள்ளியை அக கரிகாலனின் மகனென்றும், உருவப பலதேர் இளஞ்சேச சென்னியின் பெயரனென்றும தெளிவுறுத்தியதோடு நலங்கிள்ளிக்குப பின்னோனான கிள்ளிவளவனை அந்நலங்கிள்ளியின் மகனென்றும், கரிகாலனின் பெயரனெனறும பேசுவார்.[20] மற்று, புறநானூறறுப புத்துரையாளர் ஔவை துரைசாமிப்பிள்ளை போல, கிள்ளிவளவனுக்குப் பின்வந்தவன நலங்கிள்ளி என்பார் (புறம்.373 முன்னுரை). எனினும் அதனை எண்ணிப் பார்க்குமிட தத்துப் பொருந்தாமையே புலப்படுகின்றது முதலாவதாக, இளஞ்சேட்சென்னியின பெயரன் நலங்கிள்ளி சேட சென்னியென்றும், கரிகால் வளவனின் பெயரன் கிள்ளிவளவனென்றும் காணப்படுகின்ற பெயர் மரபின பொருத்தத்தை அம்முறையில் காண இயலாது இரண்டாவதாக, கூடியமட்டில காலமுறையைக் கருத்தில கொண்ட புறநானூறறுப் பாட லவரிசையில ஓரிட தது மட்டுமன்றி நான்கிடங்களில் நலங்கிள்ளியைக குறித்த பாடலகளுக்குப பின்னரே கிள்ளிவளவனைப பறறிய பாடல்கள (புறம.27.42, 45 46, 68 70, 225 228) அமைந்துள்ளன நூற்றைத அறியாது விடுதலாகாது எனவே, கிள்ளிவளவனை நலங்கிள்ளியினும முற்கூற முடியாது

இனி, அகநானூறறில் கரிகாலனை ஒரு பாட லில (141) குறிபபிட்ட நக்கீரர்தாமே இக்கிள்ளிவளவனை மறறொரு பாட லில (346) குறிதத்துள்ளதனால் கரிகாலனுக்குப்பின நலங்கிள்ளி குறுகிய காலமே ஆண்டானென்றும அவனைத

தொடர்ந்து விரைவிலேயே கிள்ளிவளவன் ஆட்சி பெற்றானென்றும் அம்முறையில் கரிகாலனுக்கும் கிள்ளி வளவனுக்குமிடையில் கால இடைவெளி பெரிதில்லை யென்றும் காணலாம்.

4.12.1. கிள்ளிவளவன் அரசேற்பு

கிள்ளிவளவனின் அரசியல் தொடக்கமும் கரிகாலன், நலங்கிள்ளி ஆகியோர் ஆட்சிபெற்ற வரலாறுகளைப் போல எதிர்ப்பும் இடையூறும் நிறைந்ததாகவே இருந்தது. இவன் வேந்தனாய் முடிசூடி ஆட்சிப்பொறுப்பேற்றபோது, இவனினும் முதியராய் இவன் குலத்தில் இருந்த தாயத்தார் ஒன்பதின்மர் ஒருங்குகூடி, இவன் இளைஞனாய அரசாளுவதைப் பொறாதவராயும், இவனது மேலாண்மையை ஏலாது ஏவலைக் கேளாதவராயும், இவனுடைய வளநாட்டினை அழிக்கும் செயல்களில் ஈடுபட்டனர். அந்நிலையில் இவனுக்கு மாமன் முறையினனான சேரன் செங்குட்டுவன் தன் படையுடனே பரிந்துவந்து, நேரிவாயிலில் என்னுமிடத்தே அவ்வொன்பதின்மரையும் ஒரே பகலில் ஒழித்து இவனது ஆட்சியை ஒருவழிப்படுத்தி நிலை நிறுத்தினான்.

> மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா
> ஒத்த பண்பினர் ஒன்பது மன்னர்
> இளவரசு பொறா அர் ஏவல் கேளார்
> வளநாடு அழிக்கும் மாண்பினர் ஆதலின்
> ஒன்பது குடையும் ஒருபகல் ஒழித்தவன்
> பொன்புனை திகிரி ஒருவழிப படுத்தோய்
> (சிலம்பு.27: 118-123)

என்று சிலப்பதிகாரத்தில் இவ்வரலாறு குறித்து அச்செங்குட்டுவன் பாராட்டப்பெறுவான். இதில் கிள்ளிவளவனின் தாயத்தார் ஒன்பதின்மர் என்பது கொண்டு, இவன் வரலாற்றைக கரிகாலனின் வரலாற்று வழியிலேயே காணலாம். கரிகால வளவன் காலத்தும் ஒன்பது மன்னர் ஒருங்குகூடி வாகைப பறந்தலையில் அவனை எதிர்த்தும் தோற்றதைப் பரணரின் அகப்பாடலால் (125) அறிந்தோம். அவனிடம் தோற்ற அவ்வொன்பது மன்னரின் வழியினரே அவனையடுத்து நலங்கிள்ளிக்குப்பின் ஆட்சிப்பொறுப்பேற்ற இளவரசனான இக்கிள்ளிவளவன் காலத்தும்

இவனை யெதிர்த்த உள்நாட்டுக் கலகம் விளைத்துச் செங்குட்டுவன் தலையீட்டினால் மீண்டும் ஒடுக்கப்பட்டனர் என்பது இங்கே உணரப்படும்.

இனி, இவனாட்சியின் நிலைபேற்றிற்கு மலையமான் திருமுடிக்காரியின் மகனென்று மதிக்கத்தக்க மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணனும் ஒருவாறு உதவியுள்ளான். இவனையும் (புறம்.37,39,226) மலையமான் திருமுடிக காரியையும் (புறம்.126), மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணனையும் (புறம்.174) தனித்தனியே பாடியுள்ள மாறோகத்து நப்பசலையார் தாமே அத்திருக்கண்ணனைப் பாடிய பாடலில இதனைக குறித்துள்ளார். 'பெருவெற்றியமைந்த வளவன ஒருகால் பகைவேந்தரொடு பொருது தோறறப்போய், கபிலரால பாடப்பெற்ற முள்ளூர் மலைபுச சியிலே பிறரால் காண்டற்கரியதோர் இடத்தில் ஒளிந்திருந்தானாக, வேந்தனை இழந்து உழலும் சேமாழநாட டின் அல்லல் தீருமாறு அவ்வளவனது வெண்கொறறக குடையை வெளிபபடுததி அவனாட்சியைப் புதுமையுற நிலைநிறுத்திய புகழ்மேம்பாட்டாளன்' என்று மலையமான் சோழிய ஏனாதி திருகிளளியைப் புகழ்ந்து பாடுகின்றார் மாறோகததது நப்பசலையார்.

சங்க இலகியங்களில் வளவனென்னும் பெயரொட டுப் பெறற கரிகால் வளவன் (புறம்.7), கிளளிவளவன (புறம.34, 39, 41, 42, 60, 226, 227, 228, 393, 397) ஆகியோரே பல பாடல்களில் சிறப்பாக வளவனெனக குறிகக பெறுகினறனர். ஆதலால, அம்முறையே நபபசலையார இபபாடலில குறித்த வளவனைக கிள்ளிவளவனெனறு கொளளுதல கூடும். தொட ககததில கிள்ளி வளவனின ஆட சியை நிலைபெறுததி, பின அவனுக்கு ஏனாதியாய விளங்கியவன என்பதனாலேயே சோழன மலையமானை சேமாழிய ஏனாதி திருக்கண்ணனுககு திருகிளளி எனற வேறுபெயரும (புறம.174 அடிககுறிபபு) விளஙகியது.

அடுதது, கபிலரால பாடபபெற்ற முள்ளூர் மலையுச்சி யிலுளளரும் நபபசலையாரின் பாடற்குறிப்பு, மலையமான் திருமுடிககாரியொடு சார்த்தி அமமலையைக் கபிலா பாடிய பாடலகளையே (புறம்.123; நற்.291; குறு.312) காட டுவதாம். ஆதலால, 'பெருமபுகழமைந்த நும்முன ஆகிய தந்தை

இவ்வுலகத்துச் செய்த நல்லறத்தின் பயனை மேலுலகத்தே நுகர வேண்டிப் போய்விட்ட வருத்தம் கெடுமாறு நீ வந்து தோன்றினாய்' என்று திருக்கிள்ளியை அவர் பாடும் இப்பாடற் குறிப்பினில் குறிக்கப்பட்ட நம்முன் என்பதும் அக்காரியைக் குறித்ததே எனக் கொள்ளல் இயலும். எனவே, மலையமான் திருமுடிக்காரியின் மகனே இந்தச் சோழிய ஏனாதி 'திருக்கிள்ளி' என்பதும் விளங்கும்.

ஆக, நலங்கிள்ளிக்குப்பின் ஆட்சிப்பொறுப்பேற்ற இளைஞனான கிள்ளிவளவன் தொடக்கத்திலேயே தோன்றிய தாயத்தாரின் அரும்பகைக்கு ஆற்றானாய், அவரறியாதே துணைவலிமை வேண்டி மலையமானிடம் போய் அவன் துணைபெற்றுப் பின்னும் அவனுடைய பாதுகாவலிலேயே முள்ளூர் மலையுச்சியில் மறைந்திருந்து, தன் மாமனான சேரன் செங்குட்டுவனுக்கும் ஆட்போக்கி அறிவித்தான் ஆதல் வேண்டும். அதனையறிந்த செங்குட்டுவன் தானே படைநடத்தி வரவும், அந்நிலையில் மலையமான் திருக்கண்ணனும் கிள்ளிவளவனை வெளிப்படுத்திக்கொண்டு தன் படையோடே புறப்பட்டு வந்து சேரன்படையுடன் சேர்ந்து நேரிவாயிற்போரில் கிள்ளியின் தாயப்பகைவரைக் கிள்ளியெறிந்து அவனாட்சியை நிலைநிறுத்தத் துணை நின்றானென்று அறியலாம்.

412.2. வெல்போர் வேந்தன்

ஆட்சிப்பொறுப்பேற்றபோது, இவன் ஆற்றலின் தோற்றமின்றித் துணைப்படை வேண்டுமளவு துவண்டிருந்தான். ஆயினும், ஆட்சியில் நிலைபெற்று அமர்ந்தபின் இக்கிள்ளிவளவன் ஆற்றல் வாய்ந்தவனாய்ப் பகைவர் நாடுகளை வெல்லும்போர் வல்ல வெற்றி வேந்தனாய் விளங்கினான். அம்முறையில் இவனது பேராண்மை குறித்துக் காணுங்கால் கோவூர்கிழாரின் பாடலொன்று முதலில் நோக்கத்தகும்.

> காலனும் காலம் பார்க்கும் பாராது
> வேலீண்டு தானை விழுமியோர் தொலைய
> வேண்டிடத்து அடூஉம் வெல்போர் வேந்தே (புறம்.41)

என்று இவனை விளித்துப்பாடும் அவர், இவனைச் சினப்பித்த பகைவர்நாடு ஆடவரின் அவலநிலையை அருமையுறப்

புனைகின்றார். நனவிலே தீநிமித்தங்களையும் கனவிலே தீநிகழ்ச்சிகளையும் கண்ட நிலையில் அப்பகைநாட்டு ஆட்சியர், தம்மேல் இவன் படையெடுத்துவரும் குறிப்பினையுணர்ந்து, பாதுகாப்பில்லாத இருக்கையராய் மயங்கி, தாம் மனைவி மக்களை விட்டுப் போரிலே மடியவிருப்பதையெண்ணி, புதல்வருடைய பூங்கண்களை முத்தமிட்டு, மனைவியர்க்குத் தம் துன்பம் தோன்றாது மறைக்கும் நிகழ்ச்சிகளை அவர் புனைவதிலிருந்து இவனுடைய படையெடுப்பின் கடுமையை நன்கு உணரலாம்.

இவ்வாறு, கடுமையாகப் படை யெடுத்துச் செல்லும் இயல்புடைய இவன், 'நீயே மாற்றிரு வேந்தர் மண்நோக்கினையே' (புறம்.42) என்று இடைக்காடனார் குறித்தபடி சேரநாட்டின் மேலொன்றும், பாண்டிய நாட்டின் மேலொன்றுமாக எடுத்த படை யெடுப்புக்கள் இரண்டு சிறப்புறத் தெரிய வருகின்றன.

4.12.21. சேரநாட்டுப் படையெடுப்பு

இக்கிள்ளிவளவனின் சேரநாட்டுப் படை யெடுப்பினை ஆலத்தூர் கிழார் (புறம்.36), மாறோக்கத்து நப்பசலையார் (புறம்.37, 39), கோவூர்கிழார் (புறம்.373) ஆகிய மூவரும் பாடியுள்ளனர். சேரநாட்டின் தலைநகரான கருவூரை இவன் முற்றுகையிட்டு ஆன்பொருநைக கரையிலுள்ள சோலைகள் தோறும் சேரனுக்குரிய காவல் மரங்களை வெட்டி வீழ்த்தவும், அவ்வோலை சென்று சேரன் அரண்மனையிலே ஒலிக்கவும், அவன் இவனையெதிர்த்து வெளிப்படும் எண்ணமின்றி உள்ளேயே ஒளிந்திருந்தான். அந்நிலையில் அவனூரை இவன் முற்றுகையிட்டு முரசொலிக்கப் பொருதல் நாணத்தக்கதென்பதை இவனுக்கு எடுத்துரைத்துப் போரை ஓழிக்குமாறு அறிவுறுத்தினார் ஆலத்தூர் கிழார் (புறம்.36). ஆயினும், இவன் தான் கொண்ட சினம் தணியாதனாய்ச் சேரனது அரண்மனையையே சிதைக்க முனைந்தான். அவ்வாறு இவன் சிதைத்த செயலை ஊகுவார்போல மாறோக்கத்து நப்பசலையார் இருபாடல்களைப் பாடியுள்ளார்.

நஞ்சுடை வாலெயிற்று ஐந்தலை சுமந்த
வேக வெந்திறல் நாகம் புகுகென
விசும்புதீப் பிறப்பத் திருகிப் பசுமகொடிப்

பெருமலை விடரகத்து உருமெறிந் தாங்கு ....
செம்புறழ் புரிசைச் செம்மல் மூதூர்
வம்பணி யானை வேந்தகத்து உண்மையின்
நல்ல என்னாது சிதைத்தல்
வல்லையால் நெடுந்தகை செருவத் தானே (புறம்.37)

எனவும்,

இமையம் சூட்டிய ஏம விற்பொறி
மாண்வினை நெடுந்தேர் வானவன தொலைய
வாடா வஞ்சி வாட்டும்நின்
பீடுகெழு நோன்தாள் (புறம்.39)

எனவும் வருகின்ற அவருடைய பாடலடிகளில் கருவூரை முற்றிச் சிதைத்த இவன் முனைப்பும் திறனும் ஊக்குவித்து மொழியப்பெறுதல் காணலாம்.

அவ்வாறு இவன் முனைந்து சிதைத்தபின் அரண்மனையின் அகத்தேயிருந்த சேரன் இவனையெதிர்த்துப் போர் தொடங்கினன் போலும். அப்போரினை விருமபி ஏற்ற இவன், இடிபோல் முரசு முழங்க நாற்படைகளுடனும் மண்டிப் போரிட்டுச் சேரனை வென்று புறங்கண்டமை இவ்வெற்றியைக் குறித்துக் கோவூர்கிழார்,

மைந்தர் ஆடிய மயங்குபெருந் தானைக்
கொங்குபுறம் பெற்ற கொற்ற வேந்தே (புறம்.373)

என்று இவனை விளித்துப் பாடுவார். இப்பாடலினைக் கீழ்ச் சோழன் குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவனை கருவூரை எறிந்தானைக் கோவூர் கிழார் பாடியது என்று உ.வே.சாமிநாதையரின் புறநானூற்றுப் பதிப்பிலே காணப்படுகின்றது. ஆயினும் அவ்வடை மொழியேயன்றி வேறொரு கிள்ளிவளவன் பிற பாடல்களில் அறியப்படாமையாலும், குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் கருவூர் எறிந்தவனென்பதும் இவனை கோவூர் கிழாரால் பாடப்பெற்றவனென்பதும் பிறவற்றால் தெளிவுறத் திகழ்கின்றமையாலும், 'குளமுற்றத்துத் துஞ்சிய' என்ற இவனது அடை மொழியே, 'குராப்பள்ளித் துஞ்சிய' எனறு ஏனை முதுவோரால் பிழைபட எழுத்தப்பட்டிருத்தல் கூடுமெனக் கொண்டு, இப்பாடலை இவனுக்குரியதெனவே எண்ணலாம்.

புறநானூற்றின் மற்றோர் உரையாசிரியரான ஔவை துரைசாமிப்பிள்ளையும் இப்பாடலை இவனுடையதாகவே கொண்டுள்ளார்.

இவன் எடுத்த இச்சேரநாட்டுப் படையெடுப்பிலே இவனுக்குப் பகைவனாய் வருபவன் இவன் மாமனான செங்குட்டுவனுக்குப்பின் வஞ்சியை ஆண்ட சேரனாகலாம்.

41222 பாண்டிநாட்டுப் படையெடுப்பு

இனி, இவன் மேற்கொண்ட பாண்டிநாட்டுப் படையெடுப்பினைப் பார்க்கலாம். அதனை நாமறியப் பாடியுள்ளவர் நகநீரர். பழையன் மாறனென்னும் பாண்டியன் கூடல் மாநகரை ஆண்டிருந்தபோது, இவன் பெருமாபடையெடுத்துச் சென்று, அந்நகரை முற்றுகையிட்டுத் தங்கி, அப்பழையன் மாறனை நற்போரிலே சாய்த்து, அவனுடைய குதிரைகளையும் யானைகளையும் கவர்ந்து, அவனுரையும் கைப்பற்றிக கொண்டானென்று அவர் பாடலால் அறிகிறோம்

இழையணி யானைப் பழையன் மாறன்
மா மலி மறுகிற கூடல ஆங்கண்
வெள்ளத் தானையொடு வேறுபுலத்து இறுத்த
கிள்ளி வளவன் நல்லமர் சாஅய்க்
கடும்பரிப் புரவியொடு களிறுபல வவ்வி
ஏதில மன்னர் ஊர்கொள (அகம்.346)

என்று அப்பாடல வருகின்றது.

41223 சேர, பாண்டியரை வென்ற காரியாற்றுப்போர்

அடுத்தது, மாறறிரு வேந்தரின்மேல் இவன் தானே படை யெடுத்துச் சென்று வென்றதற்கு மாறாக, தன்மேல் படை யெடுத்து வந்த அவ்விருபெருவேந்தரின் ஒருபெரும்படையை இவன எதிர்த்து வென்ற வெறறியொன்றும் மணிமேகலையால் அறிய வருகின்றது.

எஞ்சா மண்நசைஇ இகல்உளம் துரப்ப
வஞ்சியின் இருந்து வஞ்சி சூடி
முறைஞ்செவி யானையும் தேரும் மாவும

மறங்கெழு நெடுவாள் வயவரும் மிடைந்த
தலைத்தார்ச் சேனையொடு மலைத்துத்தலை
வந்தோர்
சிலைக்கயல் நெடுங்கொடி செருவேல் தடக்கை
ஆர்புனை தெரியல் இளங்கோன் தன்னால்
காரியாற்றுக் கொண்ட காவல் வெண்குடை
வலிகெழு தடக்கை மாவண் கிள்ளி (மணி.19:119-127)

என்று அக்காப்பியத்திலே இப்போர்வெற்றி விரித்துரைத்துப் பாராட்டப்பெறுகின்றது. மண்ணாசையின் காரணத்தால் சேரனும் பாண்டியனும் ஒன்றுகூடி வஞ்சிமாநகரத்திலிருந்து வஞ்சிப்பூச்சூடி நாற்பெரும் படைகளோடும் இவன்மேல் மண்டிவந்தனராக, இவன் தன் தம்பியாகிய இளங்கோனால் அவ்விருவர் படைகளையும் காரியாற்றுக் களத்திலே எதிர்த்து வென்று, அவர்தம் விற்கொடி, மீனக்கொடிகளைக் கவர்ந்துகொண்டு புறங்கண்டான் என்பதை இங்கே காண்கிறோம். இப்போர் இவனாட்சியின் பிற்பகுதியிலே நிகழ்ந்திருக்கலாம்.

இப்போர் நிகழ்ந்த காரியாறென்பதைத் தமிழகத்தின் வடபகுதியில் திருவள்ளூரிலிருந்து திருக்காளத்திக்குச் செல்லும் வழியிலுள்ள இக்காலத்து இராமகிரியென்னும் மலையும் அதனையொட்டிய ஆறும் ஊருமாகக் கற்பித்துக் கொண்டமையால், தென்திசைப் பாண்டியனும் மேல்திசைச் சேரனும் வடதிசையரசர்களோடு சேர்ந்து சோழனை ஒடுக்க நினைததனர் என்பார் கா. அப்பாத்துரையார்.[21] எனினும், அதற்கு இசைவில்லை. சேரர் தலைநகரான வஞ்சிக்கும் சோழர் தலைநகரான உறையூருக்குமிடையே இன்றைய திருச்சிராப்பள்ளி மாவட்டத்து மதுக்கரையருகே ஓடுகின்ற கரைபோத்தானாறு என்ற கருவெட்டாறே காரியாறென்று அறியவருதலால்[22] வஞ்சியிலிருந்து வந்த பகைவரைச் சோழன் எதிர்த்து வென்ற இடம் இக்கருவெட்டாறென்ற காரியாறு என்பதே இசையும்.

மணிமேகலையில் இங்கே, மாவண்கிள்ளி எனக் குறிப்பிடப் பெறுமாறே பின்னும், தொடுகழற் கிள்ளி (28:172), நெடுமுடிக்கிள்ளி (24:29), வடிவேற் கிள்ளி (25:193), வென்வேற்கிள்ளி (29:3) என்று வெவ்வேறிடங்களில் வெவ்வேறு அடைமொழிகளால் இவன் பெயர் குறிக்கப்பெற்றாலும், ஓரிடத்துக் கிள்ளிவளவன் (25:14)

என்றும் வருதலால் **இக்காரியாற்றுப போர்வெற்றி** இக்கிள்ளி வளவனுடையதே **என்பதில் ஐயமிலலை.**

இப்போரில் **ஈடுபடுத்தப்பெற்ற இவன்** தம்பியின் பெயரைத் 'துணையிளங்கிள்ளி' **(28:172)** என்று மற்றோரிடத்தே **மணிமேகலை** குறிக**கிறது.** சங்க இலக்கியங்களில் அவன் பெயர் இன்னதென்று விளங்கவில்லை.

4122.4. கோசர் நகரப்படையெடுப்பு

மேற்கண்ட படையெடுப்புக்களேயன்றியும் ஒருமுறை இக்கிள்ளிவளவன் கோசரின் படையையழித்து அவருடைய நாட்டைக் கைப்பற்றக் கருதி முடித்த செய்தியொன்றும்,

வளங்கெழு கோசர் விளங்குபடை நூறி
நிலங்கொள வெஃகிய பொலம்பூண் கிள்ளி
(அகம்.205)

என்ற நக்கீரரின் மற்றோர் அகப்பாடலால அறியவருகின்றது. கோசர் நிலமென்று இங்கே குறிக்கப்பட்டது செல்லூர்க்கும் கிழக்கே இருந்ததாகச் சொலலப்படுகின்ற கீழைக்கடற்கரை நகரமான நியமம் (அகம்.90) என்பதாகலாம்.

4123 மலையமான் மக்களை யானைக்கிடல்

இக்கிள்ளிவளவன் மலையமான் மக்களை யானைக்கிடும்போது கோவூர்கிழார் பாடி உய்யக்கொண்டது என்ற குறிப்போடே புறநானூற்றில் **(46)** ஒரு பாடல் காணப்படுகின்றது. இவனது சினத்திற்குக் காரணமான அந்த மலையமான் குறிப்பாக யாவனென்று விளங்கவில்லை. இவனைப் பாடியுள்ள புலவர் மாறோக்கத்து நப்பசலையார் தாமே மலையமான் திருமுடிக்காரியை ஒரு பாடலிலும் (புறம்.126), அவன் மகனென்று மதிக்கத்தக்க மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணனை மற்றொரு பாடலிலும் (புறம்.174) பாடியுள்ளமை பார்த்தோம். ஆயின், இக்கிள்ளி வளவனின் ஆட்சியை நிலைநிறுத்திய நட்பினராகிய அவ்விரு மலையமான்களும், இவனைச் சினப்பித்தோராகார். தான்

நன்றியுணர்வோடே கருதத்தக்க அம்மலையமான்களின் மக்களையும் இவன் யானைக்கிடத் துணியான். ஆதலால், இவன் சினத்திற்கு ஆட்பட்ட மலையமான் வேறொருவனாதல் வேண்டும். அவன் யாவனென்று அறிதற்கில்லை. புறநானூற்றுப் பதிப்பாசிரியர் உ.வே. சாமிநாதையரும், 'மலையமான் என்பது கோவலூரில் இருந்த சிற்றரசனொருவனை' (புறம்.46 குறிப்புரை) என்று அவனது பெயர் குறியாது போனதும் இங்கே எண்ணத்தகும்.

இனி, அம்மலையமான எவனாயினும் அவன் மக்களாகிய இளஞ்சிறார்களை இவன் யானைக்காலில் இட்டுக் கொல்லத் துணிந்த துணிவுகண்டு, கோவூர்கிழார் இடையிட்டுச் சிலசொற் கூறி, இவனது சீற்றத்தை மாற்றி அம்மக்களை உய்யக்கொண்ட அருள் நிகழ்ச்சியை (புறம்.46) அறிகிறோம். ஒரு நிலையில் பகைவன் மக்களை யானைக்காலால் இடறவிட்டுக் கொல்லத் துணியுமளவு சீற்றம்கொண்ட இவன், மறுநிலையில் புலவரொருவரின் சொல்லைக்கேட்டு அதனை மாற்றிக்கொண்ட மாண்பு பாராட்டத்தகுவதாம்.

412.4. புகழாளன்

கிள்ளிவளவன் புலவர் பலரால் பாடப்பெற்ற புகழாளன். ஆலத்தூர் கிழார் (புறம்.34, 36, 69), வெள்ளைக்குடி நாகனார் (புறம்.35), மாசீறாக்கத்து நப்பசலையார் (புறம்.37, 39, 226), ஆவூர் மூலங்கிழார் (புறம்.38, 40), கோவூர் கிழார் (புறம்.41, 46, 70, 386) இடைக்காடனார் (புறம்.42), ஆடுதுறை மாசாத்தனார் (புறம்.227), ஐயூர் முடவனார் (புறம்.228, 399), நல்லிறையனார் (புறம்.393), எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் (புறம்.397), நக்கீரர் (அகம்.346) ஆகிய புலவர் பதினொருவரால் இவன் பாடப்பெற்றுள்ளான். அவருள் நக்கீரர் ஒழிந்த ஏனையெல்லோரும் இவனை நேரிலேயே கண்டு பாடியுள்ள பாடல்களைப் புறநானூற்றில் காண்கிறோம். அம்முறையில் சங்க காலத்துப் புலவர் பதின்மரால் நேர்பட்டுப் பாராட்டிப் பாடப்பெற்ற சிறப்பிற்குரியோன் இவனொருவனே. அதற்குக் காரணம் பேராண்மையாளனாய் விளங்கிய இவனது வெற்றிச் சிறப்பும், அதனையும் மீறிப் பெருவண்மையாளனாய் மேம்பட்டு விளங்கிய இவனது ஈகைச் சிறப்புமே எனலாம். அன்றியும் புலவர் பலரையும் நன்கு மதித்தும்

மேற்றிய பண்பும் அவரோடே அணுகிப் பழகிய அன்புமை அவர்களின் மிகுந்த பாராட்டுக்களை இவன் அடையக் காரணமாயின.

புலவர் முதலியோர்க்கு நிறைந்த செல்வங்களை அளித்துச் சிறப்பித்து அவர்களையெல்லாம் அச்செய்நன்றிக் கடப்பாட்டிற்கு ஆட்படுத்தியவனாக இவனை அறிகிறோம். அம்முறையில இவனைப் பாடும் ஆலத்தூர் கிழார்.

நிலம்புடை பெயர்வது ஆயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்கு உய்தி இலலென
அறம்பா டிற்றே ஆயிழை கணவ! . . . .
அமலைக் கொழுஞ்சோறு ஆர்ந்த பாணர்க்கு
அகலாச் செல்வம் முழுவதும் செய்தோன்
எங்கோன் வளவன் வாழ்க என்றுநின்
பீடுகெழு நோனதாள் பாடேன் ஆயின்
படுபறி யலனே பல்கதிர்ச் செல்வன் (புறம்.34)

என்று தாம் இவனை வாழ்த்திப் பாடவேண்டிய நன்றிக் கடப்பாடு உணர்வை நன்றும் வெளிப்படுத்தியுள்ளமை காணலாம்.

அதேபோல, ஆவூர் மூலங்கிழார் இவனை முதன்முறை காண வந்தபோது, அவரை முன்பே அறிந்து மதித்திருந்த இவன், தனனை அவர் காலந்தாழ்த்திக் சுருதி வந்தமைக்குக் சுவன்றவனாய், 'இந்நாள் வரை என்னை நினையாதவராய வந்நாடடில் இருந்தீர்கள்' என்று இரக்கமுற்றுக் கேட்ட நிலையில், இவனது ஆறறாமைபுணர்ந்த அப்புலவர் இவனை ஆறறும் முறையில, 'வேந்தே பகைவர் நாட்டில் இருக்கும் பரிசிலரும் நினனையே நினைபபார் ஆதலால், நின் நிழலில் பிறந்து நின்னிழலில் வளர்ந்த யான் நின்னை நினையாதிருப்பனோ?' எனப் பாடியது கொண்டும் (புறம்.38) புலவர்பால் இவனுக்கு இருந்த பரிவுணர்ச்சியை உணரலாம்.

இவன தன்னாட்டுக் குடிகளிடமிருந்து பொதுவாக வாங்கிய நிலவரியின் பாரம் தாங்கமாட்டாத நிலையில், அதனை எடுத்துக்கூறி அறிவுறுத்திய வெள்ளைகுடி நாகனார்கு இவன் வரிவிலக்கு அளித்ததும் (புறம் 35) இவனது பெருந்தனமையைப புலப்படுத்தும்.

கிள்ளி வளவற் படர்குவை ஆயின்
நெடுங்கடை நிற்றலும் இலையே; கடும்பகல்
தேர்வீசு இருக்கை ஆர நோக்கி
நீயவற் கண்ட பின்றைப் பூவின்
ஆடும்வண்டு இமிராத் தாமரை
சூடாய் ஆதல் அதனினும் இலையே (புறம்.69)

எனவரும் ஆலத்தூர் கிழாரின் மற்றொரு பாடலடிகளும்,

கிள்ளி வளவன் நல்லிசை உள்ளி . . . .
செல்வை ஆயின் செல்வை ஆகுவை
விறகொய் மாக்கள் பொன்பெற் றன்னதோர்
தலைப்பாடு அன்றவன் ஈகை
நினைக்க வேண்டா வாழ்கவன் தாளே (புறம்.)

எனவரும் கோவூர்கிழாரின் பாடலடிகளும் இவனுடைய மாறுபாடில்லாத ஈகையின் மாண்பை உணர்த்துவனவாம். இந்த ஈகை மாண்பினால் இவனை நோக்கிப் புலவர் பலரும் வந்த வண்ணமிருந்தனர் என்பதை,

மலையின் இழிந்து மாக்கடல் நோக்கி
நிலவரை இழிதரும் பல்யாறு போலப்
புலவ ரெல்லாம் நின்நோக் கினரே
நீயே . . . . மாற்றிரு வேந்தர் மண்நோக் கினையே
(புறம்.42)

என்று அழகுறப் புனைவார் இடைக்காடனார்.

4.12.5. அருளாளன்

சோழநாட்டின் பெருவேந்தனாயும் பேராண்மைமிக்க போராளனாயும் விளங்கிய இக்கிள்ளிவளவன், அடிநெஞ்சளவிலே அருளாளனாய்த் திகழ்ந்தான். 'காலனும் காலம் பார்த்தே உயிர்களைக் கொல்வான்; நீயோ, காலம் பாராதே பகைவரை வேண்டுமிடத்தே கொல்லுவாய்' (புறம்.41) எனவும், 'நீ சினந்து நோக்குமிடத்தே தீப்பரவ, நீ விரும்பி நோக்குமிடத்தே பொன் பூக்க, செஞ்ஞாயிற்றிலே நிலவுண்டாகவேண்டினும் வெண்திங்களிலே வெயிலுண்டாக வேண்டினும் நீ வேண்டியதை விளைக்கும் ஆற்றலையுடையை' (புறம்.38) எனவும் பிறரால் புகழ்ந்து பேசப்பெற்ற பேராற்றலோடே,

முரசுமுழங்கு தானை மூவ ருள்ளும்
அரசெனப் படுவது நினதே பெரும (புறம்.35)

எனவும்,

நாடெனப் படுவது நினதே அத்தை (புறம்.35)

எனவும் எடுத்து மொழியப் பெற்ற பெருஞ்சிறப்பையும் உடைய இவன், அருள்நிலையிலே அவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டு நின்றதை அறிகிறோம். தன் மேலாண்மைக்கு அடங்கிய சீறூர் மன்னனான சிறுகுடிகிழான் பண்ணன் எல்லோருக்கும் உணவளித்து ஆண்ட அருளாட்சிக்கு முன்னே, தான் ஆளும் ஆரவாரம்மிக்க பேராட்சி பயனற்றதாய்த் தோன்ற, இவன் அவனைப் பசிப்பிணி மருத்துவனென்று பாராட்டிய தோடே, 'யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய' (புறம்.173) என்று தன் வாழ்நாளையும் அவனே பெறுமாறு விரும்பிப் பாடியுள்ளதை இந்நோக்கிலே பார்க்கலாம்.

4126. இறுதி இரக்கம்

இக்கிள்ளிவளவன் தன் இறுதிக் காலத்தில் குளமுற்றம் என்னுமிடத்தே இறந்த நிலையில், மாறோக்கத்து நப்பசலையார் (புறம்.226), ஆடுதுறை மாசாத்தனார் (புறம்.227), ஐயூர் முடவனார் (புறம்.228), ஆகியோர் இவன் இறப்புக் குறித்து இரங்கிப் பாடியுள்ளனர். அந்த இரக்கப் பாடல்களிலும் இவனுடைய பெருமையும் புகழும் அருமையின் அமைந்து விளங்குகின்றது.

413. பெரும்பூட் சென்னி என்றும்
சோழன் செங்கணான்
(கி.பி.175-200)

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை ஒட்டிய காலத்தவனாகவும், சங்ககாலச் சோழவேந்தருள் அறியப்படுமளவு இறுதிவேந்தனாகவும் வருவோன் சோழன் செங்கணான். பெரும்பூட் சென்னியென்றும் குறிக்கப் பெறுகின்ற செங்கணான் வரலாறும், அது பற்றிய ஆய்வும் முன்னே சேரமான் கணைக்கால் இரும்பொறையின் வரலாற்று ஆராய்ச்சியோடே பிணைந்து வந்துள்ளமையால், கூறியது கூறலாக [illegible]ண்டாமையால் ஈண்டு விடப்படுகின்றது.

அடிக்குறிப்புக்கள்

1. K.N. Sivaraja Pillai - The Chronology of the Early Tamils, p.88.
2. பேரா. சு. வித்தியானந்தன். தமிழர் சால்பு, ப.24.
3. மேலவர். மேலது, ப.24
4. V. Kanakasabhai - The Tamils Eighteen hundred years ago. p.66.
   உலகநாதப்பிள்ளை - முதலாம் கரிகாலன், பக்.21-22.
5. கா. அப்பாத்துரை-தென்னாட்டுப் போர்க்களங்கள், பக்.40-43.
6. உ.வே. சாமிநாதையர்-புறநானூறு, பாடப்பட்டோர் வரலாறு, ப.72;
   உலகநாதப்பிள்ளை - முதலாம் கரிகாலன், ப.25.
   மா. இராசமாணிக்கனார் - சோழர் வரலாறு, ப.48.
7. உ.வே. சாமிநாதையர்-புறநானூறு, பாடப்பட்டோர் வரலாறு, பக்.72-73.
   V. Kanakasabhai-The Tamils Eighteen hundred years ago. pp.66-67
8. கா. அப்பாத்துரை. தென்னாட்டுப் போர்க்களங்கள், பக்.55-56
9. கலிங்கத்துப்பரணி-இராச பாரம்பரியம்.,20.
   குலோத்துங்க சோழன் உலா. 18.
10. K.N.Sivaraja Pillai-The Chronology of the Early Tamils. pp.88-98, 128-131.
    மா. இராசமாணிக்கனார்-சோழர் வரலாறு பக்.21-24.
    கா. அப்பாத்துரை-தென்னாட்டுப் போர்க்களங்கள், பக்.53-65.
    சு. வித்தியானந்தன்-தமிழர் சால்பு, பக்.24-25.
11. V. Kanakasabhai-The Tamils Eighteen hundred years ago, pp.66-72
12. உலகநாதப்பிள்ளை - முதலாம் கரிகாலன், பக்.19-20.
13. V. Kanakasabhai- The Tamils Eighteen hundred years ago, p.68
14. Ibid, p.72

15. K.N.Sivaraja Pillai-The Chronology of the Early Tamils, pp.141-142.

16. Ibid, pp.141-143.

17. கா. அப்பாத்துரை-தென்னாட்டுப் போர்க்களங்கள், பக்.94-95

18. புலவர் பெ. இராமலிங்கன் -கருவூரே வஞ்சி, ப.104.

19. V. Kanakasabhai-T.T.E.H.Y.A. pp.72-75

20. K.N.Sivaraja Pillai-The Chronology of theEarly Tamils. pp.141-142, 148.

21. கா. அப்பாத்துரை-தென்னாட்டுப் போர்க்களங்கள், பக்.94-95, 107.

22. புலவர் பெ. இராமலிங்கன்-கருவூரே வஞ்சி, ப.104.

5. வேளிர் வரலாறு

5.0. வேளிர்

சங்க இலக்கியங்களில் சேர, பாண்டிய, சோழர்களாகிய முடிவேந்தர்களையடுத்து மொழியப் பெறுவோர் வேளிரே.

பணைகெழு வேந்தரும் வேளிரும் ஒன்றுமொழிந்து
(பதி.30)
வெல்போர் வேந்தரும் வேளிரும் ஒன்றுமொழிந்து
(பதி.49)
வேந்தரும் வேளிரும் பின்வந்து பணிய (பதி.88)

பதினொரு வேளிரொடு வேந்தர் சாய (அகம்.246)

இருபெரு வேந்தரொடு வேளிர் சாய (மது.55)

என்றெல்லாம் வேந்தரோடே வேளிர் உடன்படுத்தி மொழியப் பெறுதல் காண்கிறோம். ஆதலால் பண்டைத் தமிழகத்தில் வேந்தரையடுத்த நிலையில் சிற்றரசருள் சிறப்பிற்குரியோராய்த் திகழ்ந்தவர் வேளிரேயென்பது விளங்கும்.

இவ்வேளிர், 'தொன்முதிர் வேளிர்' (அகம்.258) எனவும், 'தொன்றுமுதிர் வேளிர்' (நற்.280) எனவும் கூறப்படுதலால் இவருடைய குடிமரபின் தொன்மை தோன்றும். 'நாற்பத்தொன்பது வழிமுறை வந்த வேளிர்' (புறம்.201) என்பது இத்தொன்மையை அறிதற்கு ஏற்புடைய சான்றாகும்.

'பதினொரு வேளிர்' (அகம்.246), 'ஈரெழு வேளிர்' (அகம்.135) என்றெல்லாம் வருகின்ற எண்ணுத்தொடர்களால் தமிழகத்தே பல்கியிருந்த வேளிர் குடிகளின் பன்மையும் விளங்கும்.

இனி, இவ்வேளிர் வரலாறுகளாகப் பண்டைத் தமிழ் நூல்களால் அறிய வருவனவற்றைக் காணலாம். வேளிர் குடி வழிகளுள் ஒருவழி வந்த இருங்கோவேளைப் பாடிய கபிலர்,

நீயே, வடபால் முனிவன் தடவினுள் தோன்றிச்
செம்புபுனைந்து இயற்றிய சேணெடும் புரிசை
உவரா ஈகைத் துவரை யாண்டு
நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே விறற்போர் அண்ணல் (புறம்.201)

என விளிப்பதினின்றும் இவ்விருங்கோவேளின் முன்னோனான குடிமுதல்வன் வடபால் முனிவனது தடவினுள் தோன்றியவனென்பதும், அவனும் அவன் மரபினரும் துவரையென்ற நகரையாண்டவரென்பதும், அவனது மரபிலே நாற்பத்தொன்பதாம் தலைமுறையினனே இவ்விருங்கோவேளென்பதும் விளங்குகின்றன. சங்க இலக்கியங்களில் வேளிர் வரலாற்று மரபு குறித்து இவ்வொரு சான்றே காணப்படுகின்றது.

5.01 வந்தேறிய வுவரோ?

தொல்காப்பியத்திற்கு உரை வரைந்த நச்சினார்க்கினியரின் பாயிரவுரையும் மற்றொரு நூற்பாவுரையும் இவ்வேளிர் வரலாற்றை ஒருவாறு குறித்துக் காட்டுகின்றன.

"தேவரெல்லாம் கூடி யாம் சேரவிருத்தலின்
மேருத்தாழ்ந்து தென்றிசை உயர்ந்தது; இதற்கு
அகத்தியனாரே ஆண்டிருத்தற்குரியர் என்று
அவரை வேண்டிக்கொள்ள, அவரும் தென்றிசைக்கண்
போதுகின்றவர் . . . . துவராபதிப் போந்து
நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண் அரசர்
பதினெண்மரையும் பதினெண்குடி வேளிர் உள்ளிட்
டாரையும் அருவாளரையும் கொண்டு போந்து
காடுகொடுத்து நாடாகி . . பொதியிலினகண்
இருந்தனர்" (தொல்.சிறப்புப்பாயிரவுரை)

"இது மலயமாதவன் நிலங்கடந்த நெடுமுடி
அண்ணலுழை நரபதியருடன் கொணர்ந்த
பதினெண்வகைக் குடிப்பிறந்த வேளிர்க்கும் வேந்தன்
தொழில் உரித்து என்கின்றது"
(தொல்.பொருள்.நூ. 32 உரை)

என்பன வேளிர் வரலாறு குறித்த நச்சினார்க்கினியரின் உரைப் பகுதிகளாம்.

இச்சான்றுகளையெல்லாம் கொண்டு, வேளிர் வரலாறு கண்ட மு. இராகவையங்கார், தமிழகத்து வேளிரெல்லோரும் வடநாட்டுத் துவாரகையினின்றும் வந்தேறிய குடியினரென்றும் அவரெல்லாம் நிலங்கடந்த நெடுமுடியண்ணலான கண்ணனின் வழியினரென்றும் யாதவரென்றும் கூறுவார். அவர் ஆராய்ச்சியின் முடிவுரையாவது:

"இதுகாறும் கூறிப்போந்தவற்றால், தமிழகத்துப் பண்டைக்கால முதலே உள்ள வேளிர் என்ற கூட்டத்தார் திருமால் வழியினராய்த் துவாராபதியினின்று தென்னாட்டுக் குடியேறியவர் என்றெழுதிய நச்சினார்க்கினியர் கூற்று, அவர்கள் கண்ணன் அவதரித்த யாதவ குலத்தவரென்பதைக் குறிப்பதென்பதும், இச்செய்திக்குப் பொருந்த வேளிர் துவாரகையினின்றும் வந்தவரெனப் புறநானூற்று மேற்கோள் உண்டென்பதும், பாரத காலத்தையடுத்து யாதவர் தெற்கே வந்தேறியவர் என்ற குறிப்பு முன்னூல்களினின்று அறியப்படுதலோடு வடநாட்டுப் பண்டிதராலும் அஃது ஆதரிக்கப்பட்டுள்ளதென்பதும், வேள், வேள்புலவரசர் என்ற பெயர்களைச் சளுக்க வேந்தர்க்கு நிகண்டுகளும் சாசனங்களும் வழங்குகின்றன என்பதும், இச்சளுக்கரும் யாதவகுலத்தில் ஒரு கிளையினரே என்பதும், முனிவர் ஒருவரது யாகபாத்திரத்தில் தோன்றிய வரலாறு சளுக்கருக்கும் பண்டை வேளிர்க்கும் உரியதாகத் தெரிய வருதலின் அவ்விருவரும் ஒரு குலத்தவரென்பதும், வேள்ளூரின் மரபினரான வேணாட்டரசர் சிலர் தம்மைக் கண்ணன் அவதரித்த யதுவம்சத்து விருஷ்ணிகுலத்தவராகக் கூறிக் கொள்ளுதல் மேற்கூறிய முடிபைத் தெளிவாக்குகின்ற

தென்பதும், வேளிர் யாதவருள் ஒருவரே என்பது பிற்காலத்தில் துவாரகையினின்று வந்து தென்னாடாண்ட ஓய்சள-பேலால யாதவர் இவருடன் பல்லாற்றானும் ஒத்திருத்தலால் விளங்குவதென்பதும், வேள்புலமென்பது பம்பாய் மாகாணத்தின் சில பகுதிகட்கு முற்காலத்தில் வழங்கிய தமிழ்ப் பெயராதல் வேண்டும் என்பதும், கொடுந்தமிழ் நாடுகளில் ஒன்றாகிய வேணாடென்பது இவ் யாவரது புராதன பூமியாகிய வேள்புலத்தையே குறிப்பதாக வேண்டுமென்பதும், பண்டை வேளிர் தமிழ் நாட்டுக் குடியேறிய காலம் கி.மு.10-ஆம் நூற்றாண்டாகக் கொள்ளுதல் ஒருவாறு பொருந்துமென்பதும், வேளிர் பெருங்கூட்டம் தென்னாடு புகுந்து வாழ்ந்த வரலாறு இதுவென்பதும், அன்னோர் பெருமை இன்னவென்பதும் புலப்படுமாறு கண்டு கொள்க."[1]

என்பதாம்.

5.02. பொருந்தாத புனைந்துரை

இது மிக நுண்ணிய ஆராய்ச்சியேயாயினும் தமிழக வேளிர் அனைவருடைய வரலாற்றிற்கும் ஒப்ப முடிந்த ஆராய்ச்சியாகுமோ என்பது ஐயத்திற்குரியதே. காரணம், நச்சினார்க்கினியர் காட்டுகின்ற அகத்தியர் வரலாறு முற்றும் நம்பத்தக்கதாயில்லை யென்பதை அவ்வுரைப் பகுதியை ஒருமுறை சற்போரும் உணர்வர். அகத்தியர் தென்றிசைக்குப் புறப்பட்டு வருபவர் கங்கையாரிடம் சென்று காவிரியாரை வாங்கிக் கொண்டும், யமதக்கினியாரிடம் சென்று அவர் மகனார் திரணதூமாக்கினியாரென்ற தொல்காப்பியரை வாங்கிக் கொண்டும், புலத்தியனாரிடம் சென்று அவருடன் பிறந்தாளான உலோபாமுத்திரையாரை மணந்து அங்கேயே இருத்தியும் வந்த வரலாற்றினிடையேதான் துவராபதியில் இருந்து திருமால் வழியினரான அரசர், வேளிர், அருவாளர்களையும் கொண்டு வந்தாராகக் கூறுகின்றார் நச்சினார்க்கினியர். பின்னும் அவர் அகத்தியனாரும் திரணதூமாக்கினியராகிய தொல்காப்பியனாரும் உலோபாமுத்திரையின் காரணத்தால் மாறி மாறிச் சபித்துக் கொண்டாராக அருவருக்கத்தக்கதொரு கதையையும் புனைந்து உரைப்பார். தென்தமிழ் நாட்டவராகிய தொல்காப்பியரை வடநாட்டுத் திரணதூமாக்கினியென்றும் யமதக்கினிக்கு மைந்தரென்றும் (பரசுராமருக்கு

உடன்பிறந்தாரென்றும்) கூறுகின்ற இப்புனைகதை போனறதே தமிழகத்து வேளிரைத் துவாரகையிலிருந்து கொண்டுவரப் பட்டாராகக் கூறுவதுமாம். இந்தப் புனைகதைக்கு ஏற்புடைய சான்றுகளையெல்லாம் திரட்டி வேளிர் வரலாறு கண்டது இராகவையங்காரின் அருமுயற்சியேயாயினும் அஃது ஐயத்தின்பாற் பட்டே அமைந்துள்ளது.

இனி, இருங்கோவேளின் குடிவழிபற்றிக் கூறிய கபிலரின் பாடற்பகுதி கொண்டு தமிழகத்து வேளிர் அனைவருக்கும் பொதுவரலாறு காண்பதுவும் பொருந்தாதாம். இராகவையங்காரின் கருத்துப்படி வடபால் முனிவன் தடவினுள் தோன்றியதும் துவரையென்னும் நகரையாண்டதும் வேளிர் அனைவருடைய முன்னோருக்கும் பொதுவாயினும் நாற்பத்தொன்பது வழிமுறை (தலைமுறை) வருதல் எல்லோருக்கும் ஒத்ததென்பது ஒவ்வாது. இருங்கோவேள் தன் குடியில் நாற்பத்தொன்பதாவது தலைமுறையினனென்றால் அவனை யொத்த வேளிர் அனைவருமே அவரவர் குடிகளுள் நாற்பத்தொன்பதாவது தலைமுறையினராகவே இருக்க வேண்டுமென்பது இயலாதன்றோ?

5.0.3. பதினெண்குடிகளோ?

இனி, இவ்வேளிர் குடிகள் பதினெட்டெனக் கொண்டு இவரைப் பதினெண்குடி வேளிரெனத் தொகையிட்டுக் குறிக்குமொரு வழக்கையும் காண்கிறோம். ஆயின், சங்க இலக்கியங்களில் எங்கும் இத்தொகைக் குறிப்புத் தோன்றவில்லை; மேற்கண்ட நச்சினார்க்கினியர் உரையிலேயே காணப்படுகின்றது. வேளிர் அனைவரும் கண்ணன் வழியினரென்ற கருத்திற்கேற்ப அக்கண்ணன் குலத்தோரான யாதவர் பதினெண்குடியினராகலின் வேளிரும் பதினெண் குடியினரென்று ஒப்பீட்டுப் புனைந்துரை உருவாயிற்று என்னலாம். அம்முறையில் தமிழக வேளிர் குடிகளைப் பதினெட்டாக எண்ணிக் காண்பதற்கு எத்துணையும் இசைவில்லை.

சங்க இலக்கியங்களில், 'பதினொரு வேளிர்' (அகம்.246) 'ஈரெழு வேளிர்' (அகம்.135) என்று ஈரிடங்களில்

மட்டுமே இவர்கள் எண்ணிடப்பெறுகின்றனர். எனினும், அவ்விடங்களில் அவ்வெண்ணிக்கை வேளிர் குடிகளின் முற்றெண்ணிக்கையாக மொழியப் பெறவில்லை என்பதும் காணத்தகும்.

5.0.4. சங்ககால வேளிர்கள்

சங்க காலத் தமிழகத்தில் ஆட்சிபுரிந்த வேளிர்களாக அறிய வருவோர் இருபதின்மர். அவர்களின் வரலாறுகளை அறிந்த மட்டில் சேர, பாண்டிய, சோழ நாடுகளின் அடைவிலே காணலாம்.

5.1. சேர நாட்டு வேளிர்கள்

சேரநாட்டு வேளிர்கள் எழுவர். அவர்களின் ஆட்சியிடங்களைத் தெற்கு வடக்காக நோக்கி அவர்களைப் பின்வருமாறு வரிசைப் படுத்தலாம்.

1. நெடுவேளாவி
2. வேளாவிக் கோமான் பதுமன்
3. வையாவிக கோப்பெரும் பேகன்
4. நன்னன் வேண்மான்
5. வெளியன் வேண்மான் ஆய் எயினன்
6. வெளிமான்
7. எருமையூரன்

இவர்களின் வரலாறுகளை இதே வரிசையில் இனி வரையறுத்துக் காணலாம்.

5.1.1. நெடுவேளாவி

இக்காலப் பழநி மலையாகிய பொதினிமலையும் அதனைச் சூழ்ந்த நாடும் பண்டைக் காலத்தே ஆவியர் என்ற வேள்குடி மன்னரால் ஆளப்பட்டு வந்தன. வேள்குடியைச் சார்ந்த ஆவிக்கோ வேளாவிக்கோ எனப்பெயர் பெற்றான். ஆவிக்கோவின் ஊராகிய நன்குடியே ஆவிநன்குடியெனப் பெயர்பெற்று, அதுவே இகாலத்துத் திருவாவிநன்குடியாய் இலங்குகின்றது.

வேளாவியர் குடியுள் இன்று அறியப்படுமளவில் முதல்வனாக வருபவன் நெடுவேளாவி.

உருவக் குதிரை மழவ ரோட்டிய
முருகன் நற்போர் நெடுவே ளாவி
அறுகோட்டு யானைப் பொதினி (அகம்.1)

முழவுறழ் திணிதோள் நெடுவே ளாவி
பொன்னுடை நெடுநகர்ப் பொதினி (அகம்.61)

என்று அகநானூற்றின் இருபாடல்களில் இவனை இவனுக்குரிய பொதினி மலையோடே சார்த்திப் பாடியுள்ளார் மாமூலனார். அவருடைய முதற்பாடலால் முருகனையொத்த நல்ல போராற்றல் அமைந்த இவன், ஏனையோரால் அஞ்சத்தக்க குதிரைப்படையுடைய மழவரைப் போரிலே வென்றோட்டிய வெற்றியொன்றை அறிகிறோம். இவனைக் குறித்து வேறு செய்திகள் எவையும் விளங்கவில்லை.

512. வேளாவிக்கோமான் பதுமன்

நெடுவேளாவிக்குப் பின்னோனாக ஆவியர்கோவாய் அறிய வருபவன் வேளாவிக்கோமான் பதுமன் என்பவனாவான். இவன் மகளிர் இருவருள் ஒருத்தியை இமைய வரம்பன் நெடுஞ்சேரலாதனும், மற்றோருத்தியைச் செல்வக் கடுங்கோ வாழியாதனும் மணந்து மக்களைப் பெற்றனராகப் பதிற்றுப்பத்தின் பதிகங்கள் (4,6,8) பகர்கின்றன. ஆதலால், இவனை இமைய வரம்பனுக்கும் செல்வக் கடுங்கோவுக்கும் மாமனாக அறியலாம்.

வஞ்சிமாநகராகிய கருவூர்ப்புறத்தே இவன் பெயரோடு விருந்தினர் மாளிகையொன்று இருந்ததைச் சிலப்பதிகாரம் செப்புகின்றது.

ஆரிய அரசரை அருஞ்சிறை நீக்கிப்
போரிசை வஞ்சி மூதூர்ப் புறத்துத்
தாழ்நீர் வேலித் தண்மலர்ப் பூம்பொழில்
வேளா விக்கோ மாளிகை காட்டி
(சிலம்பு.28:195-198)

எனச் செங்குட்டுவன் இமையப் படையெடுப்பிலே வென்று கல்கமத்திக் கொண்டுவந்த கனகவிசயரை இந்த வேளாவிக்கோ மாளிகையில் தங்க வைத்தமை அறிகிறோம்.

இந்த வேளாவிக்கோ மாளிகையே புறநானூற்றுப் பாடலொன்றின் குறிப்பிலே வேண்மாடமென்று வந்துள்ளது. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் கருவூரின்கண் செல்வக் கடுங்கோவின் தந்தையாகிய சேரமான் அந்துவஞ்சேரல் இரும்பொறையோடு இந்த வேண்மாடத்து மேலிருந்த போதுதான், மதம்பட்ட யானைமேல் இம்மாளிகைமுன் சென்ற சோழன் முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளிக்குத் தீங்கு வராமல் வாழ்த்திப் பாடினார் (புறம்.13).

513. வையாவிக்கோப் பெரும்பேகன்

வேளாவி மரபிலேயே வையாவியென்ற பெயர் வழக்கும் வருகின்றது. வேளாவிகோமான் பதுமனுக்குப் பின்னோனாக வள்ளலெழுவருள் ஒருவனான வையாவிக் கோப்பெரும் பேகன் வரக் காண்கிறோம். இவன், 'ஆவியர்கோ' (புறம்.147) எனவும், 'ஆவியர் பெருமகன்' (சிறு.86) எனவும் குறிக்கப்பெறுகின்றான்.

பரணர் (புறம்.141, 142, 144, 145), கபிலர் (புறம்.143), அரிசில் கிழார் (புறம்.146), பெருங்குன்றூர் கிழார் (புறம்.147), பெருஞ்சித்திரனார்(புறம்.158), இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் (சிறு.84-87) ஆகிய புலவர் பலரும் இவனைப் பாடியுள்ளனர். ஆயினும், அப்பாடல்களால் இவன் அரசியல் வரலாறுகள் எவையும் அறியப்படவில்லை. மயிலுக்குப் போர்வை அளித்தது முதலான வண்மைச் செயல்களே மிகுத்துப் பாடப்பெற்றுள்ளன. மற்றும், இவன் தன் மனைவியாகிய கண்ணகியைத் துறந்து, முல்லைவேலி அமைந்த நல்லூரின்கண் வேறொருத்தியை விரும்பி அவளோடே உறைந்திருந்தபோது, அக்கண்ணகி காரணமாகக் கபிலர், பரணர், அரிசில் கிழார், பெருங்குன்றூர் கிழார் ஆகியோரால் இவன் அறிவுறுத்தப் பெற்றுள்ளமை அறிகிறோம்.

இனி, ஆவிநன்குடி உள்ளிட்ட பழநிமலை நாட்டிற்கு வைகாவூர் நாடென்ற பெயர் வழக்கத்தைப் பிற்காலத்தில் காண்கிறோம்.

ஆதி யந்தவு லாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர்நன் னாடதில்
ஆவி நன்குடி வாழ்வான தேவர்கள் -பெருமாளே

என்று அருணகிரிநாதர் பாடுகின்ற முருகன் திருப்புகழ் (104) பாடலாலும் இஃது அறியப்படும். இந்த வைகாவூரென்ற பெயர் வழக்கமும் வையாவியின் பெயரடியாகவே வந்ததாகலாம். அதாவது, வையாவியூரே பிற்காலத்து வைகாவூராகி வந்திருத்தல் கூடும். அதேபோல், ஆவிநன்குடிக்கு வையாவிபுரியென்ற பெயரும் வாய்த்து, அதுவே இன்று வையாபுரியென்றும் வழங்குகின்றது. அடுத்து, வையாவிக்குளம் என்பதொன்றும் இவன் பெயரோடே ஆவிநன்குடியில் அமைந்துள்ளது அறியலாம்.

514. நன்னன் வேண்மான்

சேரநாட்டையொட்டி மேல்கடற் கரையதாகிய வியலூரில் இருந்தாண்டவன் நன்னன் வேண்மான்.

நுணங்குகண் சிறுகோல் வணங்கிறை மகளிரொடு
அகவுநர்ப் புரந்த அன்பின் கழல்தொடி
நறவுமகிழ் இருக்கை நன்னன் வேண்மான்
வயலை வேலி வியலூர் அன்னநின்
அலர்முலை ஆகம் (அகம்.97)

எனவரும் மாமூலனாரின் பாடலடிகளால் இவன் வண்மையும் இவனுடைய வியலூர் வளமும் விளக்கமாகின்றன. அகவன்மகளிரோடே அகவுநரையும் புரந்த அன்பினனாகவும், கழலும்படி அணிந்த தொடியினனாகவும், கள்ளருந்தி மகிழும் இருக்கையனாகவும் இந்த நன்னன் வேண்மானை அறிமுகப்படுத்துகின்ற அப்புலவர், வயலைக்கொடி படர்ந்த வேலியையுடைய இவன் வியலூரைத் தலைவியின் அலர் முலை ஆகத்திற்கு உவமையாக்குகின்ற முறையில் அவ்வூர் வளத்தையும் அறிவிக்கின்றார்.

வயலை வேலி வியலூர் என்று இங்கே மாமூலனாரால் பாடலில் புனையப் பெற்ற இவ்வூர், இதே முறையில், 'சிறுகுரல் நெய்தல் வியலூர்' (பதி.பதி.5) எனப் பதிற்றுப்பத்தின் பதிகத்திலும் கடற்கரைச் சார்போடே காட்டப் பெறுகின்றது.

அன்றியும் சேரன் செங்குட்டுவனால்இவ்வூர் அழிகசப் பட்டதாகவும் அப்பதிகத்தால் அறிகின்றோம். ஆதலால், இவ்வியலூர் வேண்மான் நன்னன் சேரர்க்குப் பகைவனென்பது புலனாம்.

மற்று, செங்குட்டுவனுக்குத் தமையனான களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரலும் நன்னனொருவனை வென்று, அவனது காவல் மரமான வாகையின் அடியைத் தடிந்தானாகப் பதிற்றுப்பத்தில் அவனைப் பற்றிய பாடல் பகர்கின்றது.

பொன்னங் கண்ணிப் பொலந்தேர் நன்னன்
சுடர்வீ வாகைக் கடிமுதல் தடிந்த
தார்மிகு மைந்தின் நார்முடிச் சேரல் (பதி.40)

என்று அப்பாடலில் குறிக்கப்படும் இதே செய்தியை இன்னும் சற்று விளக்கமாகப் பதிகமும் பாடுகின்றது

உருள்பூங் கடம்பின் பெருவாயில் நன்னனை
நிலைச் செருவின் ஆற்றலை அறுததவன்
பொன்படு வாகை முழுமுதல் தடிந்து (பதி.பதி.4)

எனவரும் அபபதிகத்தடிகளால், நார்முடிச்சேரலின் பகைவனான இந்நன்னனூர் கடம்பின் பெருவாயில் என்பதும், இவன் நார்முடிச்சேரலோடே நிலையாகப் போர்புரிந்து வந்தானென்பதும், முடிவாக இவனது நிலைப் போராற்றலை அழித்து இவனுடைய காவல்மரமான வாகையை அந்நார் முடிச்சேரல் வெட்டினான் என்பதும் விளங்குகின்றது.

. . . . . குடாஅது,
இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவில்
பொலம்பூண் நன்னன் பொருதுகளத்து ஒழிய
வலம்படு கொற்றம் தந்த வாய்வாள்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்
இழந்த நாடுதந் தன்ன
வளம்பெரிது பெறினும் வாரலென் யானே
(அகம் 199)

என்ற கல்லாடனாரின் அகப்பாடலடிகள் இப்போர் பற்றிய வேறுசில செய்திகளை விளக்கக் காணகிறோம். நனனனது

காவல் மரமான வாகை இருந்த இடம் வாகைப் பெருந்துறையென்றும், அது நார்முடிச் சேரலின் நாட்டிற்கு மேற்கிலிருந்ததென்றும், அவ்வாகைப் பெருந்துறையிலேயே இவ்விறுதிப் போர் நிகழ்ந்ததென்றும், இப்போரில் நார்முடிச் சேரலை எதிர்த்துப் போரிட்ட நன்னன் போர்க்களத்திலேயே மாண்டொழிந்தானென்றும், அவனைக் கொன்று வெற்றிபெற்ற சேரல் முன்னர் அவனிடத்தே தான் இழந்திருந்த நாட்டை மீட்டுக்கொண்டானென்றும் இப்பாடலடிகளால் அறிகிறோம்.

ஆக, செங்குட்டுவனால்அழிக்கப்பட்ட வியலூர்க்குத் தலைவனான நன்னன் வேண்மானே, களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலின் பகைவனாய் அவனால் வாகைப் பெருந்துறைப் போரிலே வென்று வீழ்த்தப்பட்ட கடம்பின் பெருவாயில் நன்னனென்று விளங்கக் காணலாம். நார்முடிச் சேரலுக்குப் பின்னோனே செங்குட்டுவன் ஆயினும், முன்னோன் ஆட்சிக்காலத்திலேயே பின்னோனும் வேறொரு பகுதியில் வேந்தனாய்த் திகழ்ந்ததால் இருவர் பகைமையும் நன்னனுக்கு எய்திற்று என்னலாம். அவ்வகையில் செங்குட்டுவன் வந்து வியலூரை அழித்துச் சென்றபின்னும், நன்னன் தொடர்ந்து போருடற்றி ஊறு விளைத்தானாக, நார்முடிச்சேரல் வந்து இவன்புரியும் நிலைச்செருவின் ஆற்றலையழித்து, காவல்மரத்தை வெட்டி, இவனையும் கொன்று, தான் இழந்திருந்த நாட்டை மீண்டும் எய்தினனாகலாம்.

515. வெளியன் வேண்மான் ஆய் எயினன்

'வானவரம்பன் வெளியம்' (அகம்.359) எனச் சேரமானுக்குரியதாக வெளியமென்பதோர் ஊரை மாமூலனார் பாடலொன்றில் அறிகிறோம். இந்த வெளியமென்னும் ஊரினனான் வேண்மானே வெளியன் வேண்மானென்று உணரலாம். ஆகவே, வெளியன் வேண்மான் ஆய் எயினன் (அகம்.208) என்று பரணரால் குறிப்பிடப் பெறுவோன் இவ்வெளியத்தோன் என்பது விளங்கும்.

இனி, வெளியன் வேண்மாள் நல்லினியென்பவளை உதியஞ்சேரலின் மனைவியாகவும், இமைய வரம்பன் நெடுஞ்சேரலாதனுக்குத் தாயாகவும் காண்கிறோம் (பதி.பதி.2).

வேள்மகன் **வேண்மான் எனக் குறிக்கப்** பெறுவதுபோலவே, வேள்மகள் **வேண்மாளெனக் குறிக்கப்** பெற்றாள். ஆதலின், அந்த நல்லினி **என்பாளும் இந்த வெளியன்வேள்** குடியில் பிறந்த பெண்ணே **என்பது** புலனாம். ஆகவே, சேரமான், மரபினர் மகட்கொடை நேரும் மாண்பு அமைந்த குடியாக இவ்வேள் குடியை எண்ணலாம்.

மேலே கண்டவாறு வானவரம்பன் வெளியம் என்பதனால் இவ்வூரைச் சேரநாட்டுப் பேரெல்லைக்குள் பட்டதாகக் காணலாம். வானவரம்பனென்று மாமூலனாரால் குறிக்கப்பெறுகின்ற சேரமான் இமைய வரம்பன் நெடுஞ்சேரலாதனே என்பதை, அவர் அச்சேரலாதனைக் குறித்து வேறும் இருபாடல்கள் (அகம்.127,347) பாடியுள்ளமையால் விளங்கும். விளங்கவே இமைய வரம்பனுக்குத் தாய்வழிப் பாட்டன் ஊரான வெளியம் அம்முறையிலும் சிறப்பாக அவனோடே தொடர்புறுத்திப் பாடப்பட்டதாகலாம்.

வானவரம்பன் வெளியத்தன்ன நம் மாணலம் எனத் தலைவியின் பெண்மைப் பொலிவிற்கு உவமையாகக் கூறப்படுவதனால், இவ்வெளியம் அக்காலத்துச் செல்வச் செழிப்போடே சிறந்து திகழ்ந்தமை புலனாம்.

சேரநாட்டுப் பேரெல்லைக்குட்பட்ட இவ்வூர் அதன் வடபால் அமைந்திருந்தமை பின்னர் வரும் வரலாறுகளால் அறியப்படும்.

அடுத்து, வாகையென்னும் ஊரொன்றும் இந்த வெளியன் வேண்மான் ஆய் எயினனுக்குரியதாக வருகின்றது (புறம்.351).

வெளியன் வேண்மான் ஆய் எயினன் பரணராலும் (அகம்.142, 148, 181, 208, 396), படைமங்க மன்னியாராலும் (புறம்.351) பாடப்பெற்றுள்ளான். இவனுக்கு அதிகனென்ற பெயரும் பரணர் பாடலொன்றால் (அகம்.142) அறியவருகின்றது.

யாம இரவின் நெடுங்கடை நின்று
தேமுதிர் சிமயக் குன்றம் பாடும்
நுண்கோல் அகவுநர் வேண்டின் வெண்கோட்டு

அணணல யானை ாயும வணமகிழ்
வெளியன் வேணமான ஆஅய எயினன (அகம 208)

எனச சிறந்த வளளனமைப பண்பு வாய்நதவனாக இவன பாடபபெறுகினறான. தனனைப பாடும பாணர்ககேயன்றிப் பாடாத பறவைகளுககும பாதுகாவலனாய அவறறை வளாத்து வநதவன இவனென்பது,

புளளிறகு ஏமம் ஆகிய பெருமபெயர்
வெளளத் தானை அதிகன் (அகம 142)

எனபதனால இனிதே விளங்கும

இனி, இநத ஆய எயினன் காலத்தில் கொணகான நாடடினை ஏழினமலை சாாநத பாழிககோடடையிலிருநது ஆணட பாரததுத தலைவனான நனனன் புன்னாடடினமீது படையெடுததான (அகம 396) அககாலததே நனனனுககு நணபனாய அவனுடைய நகரான பாரததைக காககும் பாதுகாவலனாய விளங்கிய மிஞிலியெனபவனே (நற 265) இபபடையெடுபபிறகுத தலைவனாகி எழுந்தான அதனை அறிநத நிலையில அவனை எதிாககும் ஆறறலினறி அஞசிய புனனாடடு மன்னனுககு ஆருயிர் நண்பனென்ற முறையில அவனை அஞ்சேலெனறு அமாத்திய ஆய் எயினன, வெளளமபோலும் தன படையுடனே (அகம்.142) செனறு பாழியையடுதத பறந்தலையில (அகம 208) தானே முன்னின்று மிஞிலியைத தாககினான (அகம 396). மிஞிலியும பகைவாகளால பாதுகாககபபடட அரண்கள் பலவறறை அழித்துவென்ற பெரும்படையோடே ஆய எயினனை எதிாததான (அகம 181) மிகக கடுமையாக நடநத அபபோரினிடையே ஆய எயினனுககும மிஞிலிக்கும் இடையிலான வாடபோா நிகழசசியில வலிமையுறப் போரிடட எயினன, இறுதியில மிஞிலியின வாள வாயபபடடு வீழநதான அவவாறு வீழந்த எயினனின உடலமேல் வெயில் படாதவாறு, அவனால முன்னர்க காககபபடட பறவைகளெலலாம கூடித தம இறகுகளைக கோலி நிழல்செயது வருநதின அந்நிலையில பகைமறந்து இவனை அருளிக காணவேணடிய நனனன இவனிடதது வைதத பகையும சினமும் மாறாதவனாய இவனைக காணாதே மறைநதிருந்தான இவன் வீழச்சியை அறிநது, இவனுடைய உரிமை மகளிா பலரும போாககளம் செனறு

பெருவிதுப்புற்றுத் தம் மாலைகளைப் பிய்த்தெறிந்து புலம்பினராக, அப்பூசல் கண்ட அகுதை என்பவன் அவர்களையெல்லாம் ஆற்றித் துயர்களைந்தான் (அகம்.208) என்று அறிகிறோம்.

> பொலம்பூண் நன்னன் புன்னாடு கடிந்தென
> யாழிசை மறுகிற் பாழி யாங்கண்
> அஞ்சல் என்ற ஆஅய் எயினன்
> இகலடு கற்பின் மிஞிலியொடு தாக்கித்
> தன்னுயிர் கொடுத்தனன் சொல்லியது அமையாது
> (அகம்.396)

எனவரும் பரணரின் பாடலடிகள், அஞ்சலென்ற அபயமொழிக்காகத் தன்னுயிர் கொடுத்த உயர்ந்தோனான இவன் புகழை என்றும் நிலைநிறுத்தி நிற்கின்றன.

516. வெளிமான்

வெளிமான், இளவெளிமான் என்ற உடன்பிறப்பாளர் இருவர் பெருஞ்சித்திரனாரால் முறையே புகழ்ந்தும் இகழ்ந்தும் பாடப்பெற்றுள்ளனர். இந்த வெளிமானுடைய ஊர் எதுவென்று தெளிவுறத் தெரியவில்லை. இவன் பெயரான வெளிமான் என்பதிலுள்ள மானென்னும் விகுதி மன்னனென்று பொருள்படுவதாகலின், வெளியென்னும் பகுதி ஊரைக் குறித்ததாகலாம். ஆயின், வெளியெனப் பெயர் பெற்ற ஊரும் சங்க இலக்கியங்களில் விளங்கவில்லை. மற்று, வெளியமென்ற ஊரையும் (அகம்.359), அதனடியாய் வெளியன் வேண்மான் ஆய் எயினன் (அகம்.208), வெளியன் வேண்மாள் நல்லினி (பதி.பதி.2) என்ற பெயர்களையும் காண்கிறோம். ஆதலால், வெளியமென்ற ஊர்ப் பெயரே விகுதிகெட்டு வெளியென்ற மட்டில் நின்று வெளிமானென்ற பெயர்க்குப் பகுதியாயிருத்தலும் கூடும். இஃது ஆய்வினுக்குரியது.

வெளிமான் சங்க காலத்திலேயே கடையெழு வள்ளல்களுக்குப் பிற்பட்டுக் குமணன் காலத்தில் கோலோச்சியிருந்தவன். குமணனைப் பாடிய பெருஞ் சித்திரனாரே இவ்வெளிமானையும் பாடியுள்ளமையால் இஃது விளங்கும்.

வெளிமானுடைய அரசியல் வரலாறாக எதனையும் அறிய இயலவில்லை.

5.1.7. எருமையூரன்

தமிழ்ப் படைகள் தலைமயங்கிப் போரிட்ட தலையாலங்கானத்துப் போரிலே பாண்டியன் நெடுஞ்செழியனால் இருபெருவேந்தரோடு ஒருசேரக் கொன்று ஒழிக்கப்பட்ட ஐம்பெருவேளிருள் ஒருவனாய் அறிய வருபவனே எருமையூரன் (அகம்.36). இவனை, 'நாரரி நறவின் எருமையூரன்' என்ற மட்டில் குறிப்பிட்டு அறிவிக்கும் நக்கீரர் தாமே பிறிதோர் அகப்பாடலில்,

நேரா வன்தோள் வடுகர் பெருமகன்
பேரிசை எருமை நன்னாட்டு உள்ளதை
அயிரியாறு (அகம்.253)

என்று இவனையும் இவனாட்டில் ஓடுகின்ற ஆற்றையும் குறிப்பிட்டுப் பாடுவார். இதில் இவன் பெயர் எருமையென்று மட்டும் வந்துள்ளது. எருமை நன்னாடு என்று இவன் பெயரால் அமைந்த நாடு எது என்பதை மாமூலனாரின் மற்றோர் அகப்பாடலால் அறியலாம்.

நுண்ணிண் எருமை குடநாட் டன்னஎன்
ஆய்நலம் தொலையினும் தொலைக (அகம்.115)

எனவரும் அப்பாடலில் குடநாடே இவனுக்குரியது என்க் கூறப்படுகின்றது. குடநாடென்பது சேரநாட்டின் வடபால் அமைந்தது. அஃது எருமையென்ற இவன் பெயரால் தானும் எருமை நாடாகிப் பிற்காலத்துக் கருநாடகமாயிற்றெனக் காணலாம்.

5.2. பாண்டிய நாட்டு வேளிர்கள்

பாண்டி நாட்டு வேளிர்கள் நால்வர். அவர்களின் ஆட்சியிடங்களைத் தெற்கு வடக்காக நோக்கி அவர்களைப் பின்வருமாறு வரிசைப் படுத்தலாம்.

1. ஆய் அண்டிரன்
2. பொதியிற் செல்வன் திதியன்
3. பாரிவேள்
4. இருங்கோவேள்

இவர்களின் வரலாறுகளை இதே வரிசையில் இனி வரையறுத்துக் காணலாம்.

5.21. ஆய் அண்டிரன்

'தென் தமிழ்நாட்டு அகன் பொதியில்' என்று சிறப்புறக் குறிக்கப்பெறுகின்ற பொதியமலையிலிருந்து சங்க காலத்தே ஆட்சிபுரிந்த வேள்குலமன்னன் ஆய் அண்டிரனை அக்காலத்து வள்ளலெழுவருள் ஒருவனாக அறிகின்றோம். உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் (புறம்.127-135, 241, 374, 375), துறையூர் ஓடைகிழார் (புறம்.136), பெருஞ்சித்திரனார் (புறம்.158), குட்டுவன் கீரனார் (புறம்.240), உமட்டூர்கிழார் மகனார் பரங்கொற்றனார் (அகம்.69), பரணர் (அகம்.152, 198), காரிக்கண்ணனார் (நற்.237), மோசிகீரனார் (குறு.84), இடைக்குழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் (சிறு.95-99), மற்றும் பெயர் புலப்படாத புலவர் ஒருவர் (நற்.167) ஆகியோர் பாடல்கள் இவனைப் பற்றி நாம் அறிய உதவுகின்றன. ஆயினும், இவனுடைய அரசியல் செய்திகளை விடவும் வண்மையாகிய பண்பியற் செய்திகளையே அவர்கள் மிகுத்துப் பாடியுள்ளனர். அவற்றினூடே அறிய வருகின்ற மூன்று செய்திகளே இவனது அரசியல் குறித்தனவாய் அமையக் காண்கிறோம்.

> கழல்தொடி ஆஅய் மழைதவழ் பொதியில்
> ஆடுமகள் குறுகின் அல்லது
> பீடுகெழு மன்னர் குறுகலோ அரிதே (புறம்.128)

என்ற பாடலடிகள் பகைமன்னரால் நெருங்குதற்கு அரிய பாதுகாப்புடையதாக இவனது பொதியில் மலையைப் புனைந்து அம்முறையில் இவனாற்றலை அறிவிக்கின்றன.

> நின்னும்நின் மலையும் பாடி வருநர்க்கு
> இன்முகம் கரவாது உவந்துநீ அளித்த
> அண்ணல் யானை எண்ணின் கொங்கர்க்
> குடகட லோட்டிய ஞான்றைத்
> தலைப்பெயர்த் திட்ட வேலினும் பலவே (புறம்.130)

என்று இவனை நேர்முறையில் பாடும் பாடலடிகள், இவன் தன்மேல் பகைத்து வந்த கொங்கரை எதிர்த்துப் போரிட்டு வென்றோட்டிய வெற்றியை விளம்புகின்றன. இவனால் மேலகடற்பக்கம் ஓட்டப்பட்ட அக்கொங்கர் தாம் புறமுதுகிடு ஓடியபோது, தம் தோல்வியின் அறிகுறியாகத் தம்முடைய கைவேல்களையெல்லாம் முனைமாற்றி எறிந்துவிட்டு ஓடினரென்று இவற்றால் அறிகிறோம்.

சிலைமான் வல்விற் சுற்றிப் பலமாண்
அம்புடைக் கையர் அரண்பல நூறி
நன்கலந் தரூஉம் வயவர் பெருமகன்
சுடர்மணிப் பெரும்பூண் ஆஅய் (அகம்.69)

எனவரும் அகப்பாடலடிகளில், இவன் பகை மன்னர் பலருடைய அரண்களையழித்து, அவற்றிலிருந்து நல்ல அணிகலன்களைக் கவர்ந்து வரும் மறவர்க்குப் பெருமகனாகக் குறிக்கப்பெறுகின்றான். இவையொழிந்த ஏனைய பாடற்பகுதிகளெல்லாம் இவனது வண்மைத்திறம் குறித்தே வருகின்றன.

522. பொதியிற் செல்வன் திதியன்

ஆய்வேளின் பொதியிலை ஆண்டிருந்த மற்றொருவன் திதியன்.

. . . . . பொருநர்
செல்சமங் கடந்த வில்கெழு தடக்கைப்
பொதியிற் செல்வன் பொலந்தேர்த் திதியன்
இன்னிசை இயத்தின் கறங்கும்
கன்மிசை யருவிய காடிறந் தோரே (அகம்.25)

என்று, ஓல்லையூர் தந்த பூதப்பாண்டியனே இவனைத் தன் பாடலொன்றில் சிறப்புறக் குறிப்பிட்டுள்ளமை காண்கிறோம். எதிர்த்துப் பொருகின்ற பகைவரின் போரை வஞ்சியாதே எதிர்நின்று வென்ற, வில் பொருந்திய தடக்கையினனாக இங்கே பூதப்பாண்டியனால் குறிக்கப்பெறும் இவன் இதே முறையில்,

. . . . . உருமிசைக்
களிறுகண் கூடிய வாள்மயங்கு ஞாட்பின்
ஒளிறுவேல் தானைக் கடுந்தேர்த் திதியன்
(அகம்.322)

எனப் பரணராலும் பாடப்பெறுகின்றான். இவனுடைய பொதியிலும் அதே அகப்பாடலில அவரால் குறிக்கப்பெறுகின்றது.

5.2.3. பாரிவேள்

பறம்பு மலையையும் அதனைச் சூழ்ந்த முந்நூறு ஊர்களைக்கொண்ட பறம்பு நாட்டையும் ஆண்ட வேளிர் வழியினன் பாரிவேள். இவன் எவ்வியின் தொல்குடியில் தோன்றிவன் என்பார் கபிலர் (புறம்.202).

'பாரியும் பாண்டியன் மண்டலமே' எனவரும் பாண்டி மண்டல சதகப் பாடல் (66) அடியினால் பாரியின் பறம்புமலை பாண்டிய நாட்டில் உள்ளமை புலனாம். பாண்டிநாட்டுத் திருப்புத்தூர்ச் சிவன் கோயில் கல்வெட்டொன்றில், 'புறமலை நாட்டுப பொன்னமராவதி யூருடையான் திருக்கொடுங்குன்றூருடையான்' என்ற தொடர் காணப்படுகின்றது.[2] பாரியின் பறம்பு நாட்டிற்குப் பறநாடென்ற பெயர் வழக்கமும் உண்டென்பதை, 'பாரி பறநாட்டுப் பெண்டிரடி'[3] என்ற பாடலடியில் காண்கிறோம். ஆதலின், அம்முறையே பறம்பு மலைநாடு பறமலை நாடென்று ஆகி, அப்பறமலை நாடே காலப்போக்கில் புறமலை நாடாயிற்றெனக் கொள்ளலாம். ஆகவே, பொன்னமராவதியையும் திருக்கொடுங்குன்றூரையும் உள்ளடக்கிய இப்புறமலை நாடே பாரியின் பறம்புமலை நாடாகும்.

பொன்னமராவதிக்கும் கொடுங்குன்றூருக்கும் அண்மையிலுள்ள கொட்டாம்பட்டி மலையைச் சார்ந்த நாட்டிற்கு வழங்குகின்ற பிரமநாடென்ற இக்காலப் பெயர் வழக்கும் பறம்புநாடென்ற பெயரின் மருவிய வழக்கேயாகலாம். ஆக, இப்போது பிரான்மலையென வழங்கும் கொடுங்குன்றமே பாரியின் பறம்பு மலை என்பது விளங்கும். இப்பிரான்மலையிலுள்ள சிவன் கோயிலான மங்கைநாதர் கோயிலின் ஆறுகால் மண்டபத்தில் அக்கோயிலின் பெயர் பாரியின் பெயராலேயே பாரீசுவரமென்று குறிக்கப்பட்டிருப்பதும் இதற்குத் தக்க சான்றாகும்.[4]

5.2.3.1. புகழ் தந்த போர்

பற்றிப் படர்தற்குக் கொழுகொம்பின்றி ஆடி அசைந்த முல்லைக் கொடிக்குத் தன் தேரையே பந்தர்போல் நிறுத்திக் கொடுத்த உணர்ச்சிக கொடையாளனாகிய இப்பாரி,

இன்னும் பலவாறு இரவலர்க்கு ஈந்து ஈகைப் புகழிலே இணையின்றிச் சிறந்தான். ஆதலால், புகழ்தற்குரியோன் இவனேயென்று புலவர் பலரும் இவனையே புகழ்ந்தனர்.

பாரி பாரி யென்றுபல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனும் அல்லன்
மாரியும் உண்டீண்டு உலகுபுரப் பதுவே (புறம்.107)

என்றவாறு, உலகைப் பாதுகாப்பதற்கு இவனேயன்றி இன்னும் எவரோ இருப்பார்போல் காட்டிப் பேசத் தொடங்கிய கபிலரும், மாந்தருள் எவருமின்மையால் மாரியும் உண்டெனப் பேச்சின் போக்கினை மாற்றி இவனையே புகழக் காண்கிறோம்.

இவ்வாறு ஒரு குறுநிலத்து வேள் மன்னனான இப்பாரி, பெருநிலத்து முடிவேந்தரினும் மேம்பட்ட கொடையாளனாய்,

நிழலில் நீளிடைத் தனிமரம் போலப்
பணைகெழு வேந்தரை இறந்தும்
இரவலர்க்கு ஈயும் வள்ளியோன் (புறம்.119)

எனப் புகழ்படைத்தபோது, இவனுடைய இவ்வண்மைப் புகழைப் பொறாத அம்முடிவேந்தர் மூவரும் ஒருங்குகூடி, இவன்மேல் படையெடுத்துவந்து இவனது பறம்பு மலையை முற்றுகையிட்டனர். அன்னோர் முற்றுகையிட்டவுடன் பாரி அம்மூவேந்தரின் பெரும்படையினால் வெல்லற்கரிய தன் அரணையடைத்துக்கொண்டு உள்ளேயிருந்தான். மூவேந்தரின் முற்றுகை நெடுநாள் தொடர்ந்தது. ஆயினும், அவரால் பாரியின் மலையரணைத் தகர்த்து உட்புக இயலவில்லை. பாரியின் பறம்பு மலையோ அரணிலுள்ள அனைவருக்கும் போதிய உணவுப் பொருள்களை விளைத்துக் கொடுக்கும் வளத்ததாயிருந்தது. ஆதலின் பாரியும் அவன் படையாளரும் அரணைவிட்டு வெளிவர வேண்டிய தேவையின்றி அடைத்திருத்தலாயிற்று. அப்போது பாரியின் நண்பராய் அவனுடனிருந்த கபிலர், அவன் மலையை முற்றியிருக்கும் மூவேந்தரின் முற்றுகை அவர்க்கு ஒரு சிறிதும் பயன் தராதென்பதை உணர்த்திப் போக்குமாறு அவரை அணுகிப் பாடினார்.

அளிதோ தானே பாரியது பறம்பே!
நளிகொள் முரசின் மூவிரும் முற்றினும்,
உழுவர் உழாதன நான்குபயன் உடைத்தே; . . . .
மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்,
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினும்,
தாளின் கொள்ளலிர்; வாளின் தாரலன்;
யானறி குவனது கொள்ளு மாறே;
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரையொலி கூந்தல்நும் விறலியர் பின்வர,
ஆடினிர் பாடினிர் செலினே,
நாடும் குன்றும் ஒருங்கீ யும்மே. (புறம்.109)

கடந்தடு தானை மூவிரும் கூடி
உடன்றனிர் ஆயினும், பறம்புகொளற்கு அரிதே;
முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நன்னாடு;
முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்;
யாமும் பாரியும் உளமே;
குன்றும் உண்டுநீர் பாடினிர் செலினே. (புறம்.110)

எனவரும் இப்பாடல்களில் பாரியின் ஆற்றலையும் மூவேந்தரின் பயனில முற்றுகையையும் பாடிய கபிலர் அவரை நோகுகி, 'நீவிர் இவ்வாறு முற்றுகையிடுவதிலும் நும் விறலிய ரோடே ஆடிபபாடிவந்து பாரியிடத்தே இரந்து பறம்பு மலையைப் பெறுதலே அமையும் என்று எள்ளல் குறிப்போடே எடுத்து மொழிந்தார். இதே எள்ளலொடு பின்னும் அவர்,

அளிதோ தானே பேரிருங் குன்றே!
வேலின் வேறல் வேந்தர்க்கோ அரிதே;
நீலத்து, இணைமலர் புரையும் உண்கண்
கிணைமகட்கு எளிதால், பாடினள் வரினே. (புறம்.111)

எனப் பாடிச் சென்றார்.

அவர் அவ்வாறு பாடிச் சென்ற பின்னும் மூவேந்தர் தம் முற்றுகையொழியாது தொடரவும், பறம்பு மலையரணுக்குள் உணவுக்குப் போதிய நெல் குறைந்தமை கண்ட பாரி, கபிலர் கூறிய சூழ்ச்சித்திறத்தின்படி, கிளிமுதலாய குருவியினங்களைப் பழக்கி அரணுக்கு வெளியே விடுத்து, வேண்டிய நெற்கதிர்களைத் தருவித்து அவற்றால் ஓரளவு உணவுக்குறையை ஒழித்தான். அந்நிலையில்

தொடர்ந்து அரணுக்குள் ஒடுங்கியிருத்தலை வெறுத்த பாரி, முற்றியிருக்கும் மூவேந்தர் எதிர்ப்பாராத அளவில் ஒரு நாள் படையொடு புறப்பட்டுப் போரை ஏற்றானாக, அவனுடைய அந்தத் திடீர்த் தாக்குதலை ஆற்றாத மூவேந்தரும் தத்தம் படைகளோடே புறங்கொடுத்தோடினர். இவ்வாறாகப் பாரி காலங்கருதி அவரை வென்றோட்டினான்.

உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை
வாய்மொழிக் கபிலன் சூழச் சேய்நின்று
செழுஞ்செய்ந் நெல்லின் விளைகதிர் கொண்டு
தடந்தாள் ஆம்பல் மலரொடு கூட்டி
யாண்டுபல கழிய வேண்டுவயிற் பிழையாது
ஆளிடுஉக் கடந்து வாளமர் உழக்கி
ஏந்துகோட்டு யானை வேந்த ரோட்டிய
கடும்பரிப் புரவிக் கைவண் பாரி (அகம்.78)

என்று இந்நிகழ்ச்சிகளை முறைப்படுத்திப் பாடுவார் நக்கீரர்.

உரைசால் வண்புகழ்ப் பாரி பறம்பின்
நிரைபறைக் குரீஇயினம் காலைப் போகி
முடங்குபுறச் செந்நெல் தரீஇயர் ஓராங்கு
இரைதேர் கொட்பின வாகிப் பொழுதுபடப்
படர்கொள் மாலைப் படர்தந் தாங்கு (அகம்.303)

என்று ஔவையாரும், குருவிகளால் பாரி நெற்கதிர் கொணர்வித்த நிகழ்ச்சியைக் குறித்துள்ளமை காணலாம். 'பகைவர், ஓடுகழற் கம்பலை கண்ட, செருவெஞ் சேஎய்' (புறம்.120) என்ற கபிலர் பாடலடிகளும் பகைவேந்தரை வென்றோட்டிய வெற்றியாளனாய்ப் பாரியைப் புகழ்தல் காணலாம்.

5.2.3.2. வஞ்சத்தில் வீழ்ச்சி

இவ்வாறு பாரியால் வென்றோட்டிப் புறங்காணப்பட்ட பகைவேந்தர் மூவரும் அவனிடத்துத் தாம் அடைந்த தோல்வியை ஆற்றாதே வருந்தி, பின் எவ்வாறேனும் அவனையழிக்கத் துணிந்து, ஏதோ ஒருவாறு தம் கருத்தினை முடித்தனராகக் காண்கிறோம். அஃதெவ்வாறு எனத் தெளிவுற விளங்கவில்லை. ஆயினும் அவ்வழி வஞ்சக வழியேயென்பது விளங்குகின்றது.

இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தர்எம்
குன்றும் கொண்டார்; யாம் எந்தையும் இலமே.
(புறம்.112)

எனவரும் பாரிமகளிர் பாடலடிகளின் குறிப்பும்,

ஒருவனை மூவேந்தரும் முற்றியிருந்தும் வஞ்சித்துக்
கொன்றமையின், வென்றெறி முரசின் வேந்தர்
என்றது ஈண்டு இகழ்ச்சிக் குறிப்பாய் நின்றது

என்று அவ்வடிகளுக்கு அமைந்த பழையவுரைக் குறிப்பும் இவ்வஞ்சக உண்மையை வலியுறுத்துகின்றன. ஆதலால்,

பாரியும் பரிசிலர்இரப்பின்
வாரேன் என்னான்; அவர்வரை யன்னே. (புறம்.108)

விரையொலி கூந்தல்நும் விறலியர் பின்வர
ஆடினிர் பாடினிர் செலினே
நாடும் குன்றும் ஒருங்கீ யும்மே. (புறம்.109)

யாமும் பாரியும் உளமே
குன்றும் உண்டுநீர் பாடினிர் செலினே. (புறம்.110)

அளிதோ தானே பேரிருங் குன்றே
வேலின் வேறல் வேந்தர்க்கோ அரிதே
நீலத்து, இணைமலர் புரையும் உண்கண்
கிணைமகட்கு எளிதால் பாடினள் வரினே.(புறம்.111)

என்றெல்லாம் பாரியின் வள்ளற் பெருமிதம் குறித்தும், வலிமைப் பெருமிதம் குறித்தும் பாடிய கபிலரின் மொழிவழியே மூவேந்தரும் அவனை இரந்து பெற்றுக் கரந்து கொன்றனராகக் கருத வாய்ப்பாகின்றது. கற்போர் பலரும் இவ்வாறே கருதி வருகின்றனர்.[5]

புரிசைப் புறத்தினில் சேரனும் சோழனும் போர்புரிய
இரியச் சயங்கொண்ட போதினில் யாமினி
யீங்கிவனைப்
பரிசுக்கு நல்ல கவிபாடி னால்வரும் பாக்யமென்றே
வரிசைத் தமிழ்புனை பாரியும் பாண்டியன்
மண்டலமே

எனவரும் பாண்டிமண்டல சதகப் பாடலும் (66) இம்முறையே எண்ணிக் கூறுகின்றது காணலாம்.

இவ்வாறாகப் பாரி மாண்டதையடுத்து, அவனிறப்புக் குறித்துப் பலவாறு இரக்கமுற்று நொந்துபாடிய கபிலர் (புறம்.113-120), அவன் மகளிரை மணவாழ்க்கைப் படுத்தும் கடப்பாட்டினைத் தாமே ஏற்றுக்கொண்டு, அம் மகளிரை அழைத்துக் கொண்டுபோய் விச்சிக்கோனிடத்து நிறுத்தி மணந்துகொள்ளுமாறு அவனை வேண்ட (புறம்.200), மூவேந்தரின் பகைமைகொண்ட பாரிமகளிரை அவன் மணத்தற்கஞ்சி மறுத்தபின், இருங்கோவேளிடத்துக் கொண்டுபோய் அவனை வேண்டியபோது (புறம்.201), அவனும் அவ்வாறே மறுத்தானாக மனம் நொந்த கபிலர் (புறம்.202), தாமறிந்த பார்ப்பார் பொறுப்பிலே அம்மகளிரை ஒப்படைத்துவிட்டுத் தாம் வடக்கிருந்து (புறம்.236), மாண்டு பாரியோடே கலந்தார்.

5.2.4. இருங்கோவேள்

பாரி மாண்டபின் அவன் மகளிரைத் தக்கார்க்கு மணம் முடிக்கும் பொறுப்பினைத் தலைமேற்கொண்ட கபிலர், அம்மகளிரை இருங்கோவேளிடம் அழைத்துவந்து, மணந்துகொள்ளுமாறுஅவனை வேண்டியதாகவும், அவன் மறுத்தபின் அவர் அவனை வெறுத்துப் பாடியதாகவும், இருபாடல்கள் புறநானூற்றிலே இடம் பெற்றுள்ளன. அவற்றுள் முதற்பாடலில்,

> நீயே, வடபால் முனிவன் தடவினுள் தோன்றிச்
> செம்புபுனைந்து இயற்றிய சேணெடும் புரிசை
> உவரா ஈகைத் துவரை யாண்டு
> நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
> வேளிருள் வேளே விறற்போர் அண்ணல்;
> தாரணி யானைச் சேட்டிருங் கோவே! (புறம்.201)

என்று இந்த இருங்கோவேள் குடிவரலாறு கூறப்பெற்று விளிக்கப் பெறுகின்றான். இதனால் இவன் முன்னோனான குடிமுதல்வன் வடபால் முனிவனொருவனின் தடவினுள் தோன்றியவனென்பதும், அவனும் அவன் பின்னோரும் துவரையென்னும் நகரையாண்டவரென்பதும், அவன் மரபிலே இவன் நாற்பத்தொன்பதாவது தலைமுறையினன் என்பதும்

விளங்குகின்றன. இவற்றுள் வடபால் முனிவன் தடவினுள் தோன்றி என்பதற்கு, 'வடபக்கத்து முனிவனுடைய ஓமகுண்டத்தின்கண் தோன்றி' என்றும், துவரையாண்டு என்பதற்கு, 'துவராபதியென்னும் படைவீட்டையாண்டு' என்றும் பழையவுரை பொருள் கூறும்.

இந்த வடபால் முனிவனைச் சம்பு முனிவனாகக் கருதுவர் உ.வே. சாமிநாதையர். 'சம்புமா முனிவன் வேள்வித் தழல்தரு மரபில் வந்தோன்' என்று விசுவபுராண சாரமென்னும் தமிழ் நூலின் பதிகமும் (15) 'சம்பு குலத்தொருவன்' என்று இரட்டையர்கள் பாடிய ஏகாம்பர நாதருலாவும் கூறுவனகொண்டு இவ்வாறு கருதுவார் அவர் (புறம்.201-குறிப்புரை).

அடுத்து, துவரை நகராவது வடநாட்டில், நிலங்கடந்த நெடுமுடியண்ணலான கண்ணன் இருந்து ஆட்சி புரிந்த துவராபதியெனக் காண்பது நச்சினார்க்கினியர் நோக்கின் வழிபட்ட காட்சி. அந்நகரிலிருந்தே அரசர் பதினெண்மரையும், பதினெண்குடிவேளிர் உள்ளிட்டோரையும், அருவாளரையும் அகத்தியர் கொண்டுவந்து தென்னாட்டில் குடியேற்றினார் என்றுரைத்த அவ்வுரையாசிரியர் எழுத்தை[6] மேலே கண்டோம். அது தமிழகத்து வேளிர் அனைவருக்கும் பொதுவரலாறு ஆகாதென்பதும் அங்கே காணப்பட்டது. மற்று, இவ்விருங்கோவேளின் முன்னோர் துவரைநகரையாண்டவர் என்ற மட்டில் இங்கே கொள்ளலாம். ஆகவே, துவரை நகரில் இருந்து அகத்தியனாரால் கொண்டுவரப் பட்டோ வேறுவழியாலோ வந்தேறிய வேளிராக இவ்விருங்கோவேள் குடியினரைக் குறிக்கலாம்.

இனி, பாரியின் பறம்பு நாட்டையடுத்துத் துவரையங்குறிச்சி என்றுள்ள ஊரையுள்ளிட்ட நாடு துவராபதி நாடென்றே இக்காலத்தும் வழங்கி வருகின்றது. வடநாட்டுத் துவராபதியிலிருந்து இங்கு வந்தேறிய வேளிர் அந்நகர்ப்பெயரையே இதற்கும் இட்டு ஆட்சிபுரிந்த இடமென்று இதனைக் கருதுவார் மு. இராகவையங்கார்.[7] ஆயினும், இதுவே கபிலர் குறிப்பிட்ட துவரை நகரென்று எண்ணுதற்கும் இடமுண்டு. எனவே, இருங்கோவேள் குடியினர் இருந்தாண்ட நாடு இத்துவராபதி நாடேயென்றும் துணியலாம்.

இந்த இருங்கோவேளுக்குப் புலிகடிமால் என்பது ஒரு பெயராகக் கூறப்படுகின்றது (புறம்.201). அதனடியாக வேறு வேறு வரலாறுகள் வழங்கிவருகின்றன. புலிகடிமாலென்ற பெயர் 'ஒய்சள' என்ற பெயரோடே பொருளளவில் ஒற்றுமையுடையதாய் இருப்பதுகொண்டு, ஒய்சள மன்னர் வரலாறும் இருங்கோவேளிர் வரலாறும் இணைத்துக் காணப்படுகின்றன.

தபங்கரென்னும் முனிவர் ஒருகாட்டில் தவஞ்செய்கையில் ஒரு புலி அவர்மேல் பாய்தற்கு நெருங்க, அதுகண்ட அம்முனிவர் அங்கு வேட்டையாடி வந்த சளனென்னும் யாதவ அரசனை நோக்கி, 'ஒய்சள' என்று கூற, அவன் அப்புலியைத் தன் அம்பால் எய்து கடிந்தமையால் ஒய்சளனென்றும், புலிகடி மாலென்றும் வழங்கப்பட்டானென்று சிலர் கூறுவர்; சசகபுரத்தை அடுத்த காட்டிலுள்ள தன் குல தேவதையான வாசந்திகா தேவியைச் சளனென்னும் அரசன் வணங்கச் சென்றபோது, புலியால் தடுக்கப்பட்டு வருந்துகையில், அக்கோயிலிலிருந்த பெரியவர் அவனை நோக்கி, 'ஒய்சள' என்று கூறி ஓர் இரும்புத்தடியை அருள, அவன் அதுகொண்டு அதனைக் கொன்றமை பற்றி ஒய்சளன் என்றும், புலிகடிமால் என்றும் பெயர் பெற்றனனென்று வேறுசிலர் கூறுவர். இவ்வாறு இவ்வரலாற்றை எடுத்துக் காட்டுவார் உ.வே. சாமிநாதையர் (புறம்.201 குறிப்புரை).

இதுவே கல்வெட்டுக்களுள் இன்னும் வேறுவேறு வகையாக விரித்துக் கூறப்படுகின்றது.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் மைசூர் நாட்டில் இருந்து ஆட்சி செலுத்திய ஒய்சள வேந்தருடைய கல்வெட்டுக்களுள், பண்டை நாளில் யது குலத்தில் தோன்றிய சளனென்ற பெயரினனான வேந்தனொருவன் மேற்குமலைத் தொடரில் வேட்டைபுரியுங்கால், முயலொன்று புலியொடு பொருவதுகண்டு வியப்புற்று, இந்நிலம் மிக்க வன்மை நல்கும் பெருநிலம் போலுமென்று எண்ணியவனாய் அவற்றைத் தொடர்ந்து சென்றானாக, அங்கே தவம்புரிந்துவந்த முனிவனொருவன் புலியைக் கண்டு, 'சளனே புலியைக்கொல்' (அகம் ஒய்சள) என வேந்தனைப் பணித்தலும், அவன் தன் உடைவாளை உருவிப் புலியைக் கொன்றான்; பின்னர் முனிவனருள்பெற்று மீண்ட சளன் அன்றுமுதல் ஒய்சளன்

எனப் பெயர் பெற்றான்; அவன் வழிவந்தோரும் தம்மை ஒய்சளரெனக் கூறிக்கொள்வாராயினரென்று மைசூர் நாட்டுப் பேலூர் மாவட்டத்துப் பேலவாடியிலுள்ள நரசிம்ம ஒய்சள தேவர் கல்வெட்டொன்று[8] கூறுகிறது. அந்நாட்டு ஒன்னாவரத்துக் கேசவப்பெருமாள் கோயில் கல்வெட்டு[9], இவ்வரலாற்றிற் கண்ட முயலைப் பற்றிய செய்தியை நீக்கி எஞ்சியவற்றைக் கூறுகின்றது. காட்டிலிருந்த முனிவன் மந்திர வலிமையுடையவனென்று சளனென்பான் அறிந்து அவன் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினனென்றும், அதனால் மகிழ்ச்சியுற்று அவனுக்குச் சசகபுரத்தைத் தலைமையாகக் கொண்ட பேரரசை வழங்க வேண்டுமென விரும்பிய முனிவன் அதற்கேற்ற மந்திரச் செயல்களைச் செய்தானென்றும், அதனை அழித்தற்கென்று சசகபுர நகரத் தெய்வமாகிய வாசந்திகையென்பாள் ஒரு புலியுருக்கொண்டு வந்தாளென்றும், அதுகண்டு முனிவன் அப்புலியைக் கொல்லுமாறு பணிப்பான், 'ஒய்சள' என்றானென்றும், அவனும் அவ்வண்ணமே செய்து ஒய்சளனானானென்றும், அரிசிற்கரையிலுள்ள வீரவல்லாளதேவன் கல்வெட்டொன்று[10] கூறுகின்றது என்றவாறு இம்மூன்று கல்வெட்டுக்களிலிருந்து இவ்வரலாற்றுக் கதையை எடுத்துக் காட்டுவார் ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை (புறம்.201. விளக்கவுரை).

இனி அவரே, புலிகடிமால் என்பதற்கு இந்தக் கதையினும் மாறான கருத்தையும் கூறுவார்.

மேற்கு மலைத்தொடர்ப் பகுதியினர் நாற்புறமும் மலைமுடிகள் சூழ்ந்த இடைநிலத்தைத் தடவென்றும் கோட்டமென்றும் கூறுதலால், வடபால் முனிவன் தடவென்றது முனிவனொருவன் இருந்த மலைமிசை இடைநிலமெனவும், அந்நிலத்து வாழ்ந்த வேளிர் தலைவனொருவன் அப்பகுதிக்குக் கிழக்கிலுள்ள புலி நாடென்றும் புன்னாடென்றும் வழங்கிய கன்னட நாட்டு வேந்தனை வென்றது பற்றிப் புலிகடிமால் என்றழைக்கப் பெற்றான் எனவும் கொள்வது நேரிதாகத் தோன்றுகின்றது; அந்நாளில் அப்பகுதியை ஆண்ட ஆந்திர சாதவாகன வேந்தருள் புலிமாய் என்பவன் சிறந்து விளங்கினமையின், ஒருகால் அவனை வென்றது பற்றி இருங்கோவேள் தானே புலிகடிமால் எனப்பெயர் பெற்றானென்றும் கொள்ளலாம். மேனாட்டு யவனரான தாலமியும் இப்புலிமாய் வேந்தனைக்

குறித்து உரைத்துள்ளார். சாதவாகனராட்சி கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்தே தொடர்ந்திருக்கிறது; அந்நாளிலேயே துவராவதி நகரம் அந்நாட்டில் இருந்திருக்கிறது; புலுமாவி, புலிமாயி எனக் காணப்படினும், கன்னட மொழியில் அது புலி மெய்யென வழங்குமென்றும், அதற்குப் புலிபோலும் மெய்வலி உடையவனென்பது பொருளென்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்; இவ்வாற்றால் ஒய்சளக் கதையினும் இது பொருத்தமாதல் காணப்படும் என்று அவர்தரும் விளக்கம் இங்கே அறியத்தகும் (புறம்.201 விளக்கவுரை).

இவ்வரலாற்று விளக்கங்களை ஏற்குங்கால் புலி கடிமாலென்ற முன்னோன் வழிவந்த பின்னோர் சிலர், முந்தைய துவாராபதியிலிருந்து இடம்பெயர்ந்து வந்து பறம்புநாட்டையடுத்த பகுதியில் தங்கி, அதற்கும் துவராபதியென்றே பெயரிட்டு ஆண்டனரென்று அறியப்படும். 'துவராபதியென்னும் படைவீடு' என்ற பழைய உரையின் தொடரும் இக்கருத்திற்கு ஏற்பவுள்ளது காணலாம்.

இனி, புலிகடிமாலென்ற முன்னோன் பெயரே பின்னோனான இருங்கோவேளுக்கும் இசைந்ததாக எண்ணப்படும்.

கபிலரால் பாடப்பெற்றபின் இவ்விருங்கோவேள் ஏனை வேளிர்களோடு சேர்ந்து, சோழன் கரிகால் பெருவளத்தானால் வெல்லப்பட்டும் (பட்.282), முடிவில் தலையாலங்கானத்துப் போரிலே பாண்டியன் நெடுஞ்செழியனால் கொல்லப்பட்டும் (அகம்.36) மாண்டானாக அறிகிறோம். இவனுடைய அரசியல் செய்திகளாக வேறொன்றும் அறியப்படவில்லை.

5.3. சோழநாட்டு வேளிர்கள்

சோழநாட்டு வேளிர்கள் ஒன்பதின்மர். அவர்தம் ஆட்சியிடங்களைத் தெற்கு வடக்கிலே நோக்கி அவர்களைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

1. நெடுங்கை வேண்மான்
2. நெடுவேளாதன்
3. செல்லிக்கோமான் ஆதனெழினி
4. வாட்டாற்று எழினியாதன்

5. அழுந்தூர்வேள் திதியன்
6. வேளெவ்வி
7. வீரைவேண்மான் வெளியன் தித்தன்
8. நன்னன்சேய் நன்னன்
9. பொருநன்

இவர்தம் வரலாறுகளை இதே வரிசையில் இனி வரையறுத்துக் காணலாம்.

5.3.1. நெடுங்கை வேண்மான்

செல்லா நல்லிசை உறந்தைக் குணாது
நெடுங்கை வேண்மான் அருங்கடிப் பிடவூர் (புறம்.395)

என்று நக்கீரரால குறிக்கப் பெறுவோன் நெடுங்கை வேண்மான. இவன் பெயரில் நெடுங்கையென்ற சொல்லிற்கு, நெடிய கையெனப் பொருள் கொள்ளுதல் மிகவும் எளிதே. ஆயினும் அச்சொல் அப்பொருளினும் வேறாக ஓர் ஊரைக் குறித்து நிற்பதுபோல் நினைக்கத் தோன்றுகிறது. வீரையென்ற ஊரையுடைய வேண்மானே வீரைவேண்மானெனப் பெயர் பெற்றமைபோல், நெடுங்கையென்ற ஊரின் வேண்மானே நெடுங்கை வேண்மானெனப் பெயர்பெற்றானென்று நினைக்கலாம். இந்த நினைப்பிற்கேற்ப, இவனூராக இங்கே குறிக்கப்பெறுகின்ற பிடவூருக்கருகிலேயே, பாடலில் பயினறவாறு உறையூரின் கிழக்கிலேயே, நெடுங்களமென்ற ஊரும் பண்டுதொட்டு இதே பெயரில் நிலைத்திருக்கக் காண்கிறோம. செங்கற்பட்டு என்ற ஊர்பபெயர் செங்கையென்று மருவினாற்போல் நெடுங்களமென்ற ஊர்ப்பெயரும் நெடுங்கையென்று மருவியிருக்கலாம். ஆக, நெடுங்களத்து வேண்மானே நெடுங்கை வேண்மானென்ற நினைப்பிற்கோர் ஏதுவிருப்பது எண்ணத்தகும்.

இஃறி, உறையூரின் கிழக்கே உள்ளதெனப் பாடப்பெறும் இப்பிடவூர் சோழநாட்டுப் பிடவூரெனப் பாடலின் கீழ்க் குறிப்பிலும் பயின்று வருகின்றது. இப்பிடவூர்கிழான் மரபினரான வேளிர், சோழவேந்தர்க்கு மகட்கொடை நேரும் மாண்பினரென்பது தொல்காப்பியத்-திற்கு அமைந்த நச்சினார்க்கினியருரையால் (பொருள்.நூ.30 உரை) விளங்குகின்றது. சோழ நாட்டுள்ளும் பல

உட்பிரிவுகளான வளநாடுகளுள் பிடவூர்ப் பெயரோடே ஒரு வளநாடு இருந்ததென்பதும், அவ்வளநாட்டிற்குப் பிடவூரே தலைமையூராய் விளங்கியதென்பதும், 'பிடவூர் நாட்டுப் பிடவூர்' எனவரும் இவ்வூர்க் கோயிற் கல்வெட்டுத் தொடரால் தெரியவருகின்றது.[11] 'செழுந்தண் பிடவூர்' என்று இவ்வூரைச் சைவத் தலவரிசையில் தேவாரமும் (6:7:6) குறிப்பிடும்.

சோழநாட்டுப் பிடவூர்கிழார் மகன் பெருஞ்சாத்தன் என்பானை மேற்கண்ட பாடலில் (புறம்.395) நக்கீரர் பாடியுள்ளார். 'நெடுங்கை வேண்மான் அருங்கடிப் பிடவூர் அறப்பெயர்ச் சாத்தன்' என்று அப்பாடலில் அவன் குறிக்கப்பெறுகின்றான். ஆதலால், நெடுங்கை வேண்மானே பிடவூர் கிழானென்பது அறியப்படும். வேண்மானுக்குக் கிழானென்ற சிறப்புப் பெயர் உண்டென்பதை, 'மையூர்கிழான் வேண்மாள் அந்துவஞ்செள்ளை' (பதி.பதி.9) என்ற தொடரால் தெளியலாம்.

5.3.2. நெடுவேளாதன்

நீர்வளம் மிக்க வயல்களையும், நெல்வளம் மிக்க மனைகளையும், பொன்வளம் மிக்க தெருக்களையும், பூவளம் மிக்க பொழில்களையும் உடைய போந்தையென்னும் ஊருக்குரியோன் என்று மட்டும் குன்றூர் கிழார் மகனாரால் (புறம்.338) குறிக்கப்பெறுகின்ற வேள்குலமன்னன் நெடுவேளாதன். போந்தையென்னும் பெயர் அமைந்த ஊர்கள் தமிழகத்தில் சோழநாட்டிலொன்றும், குறும்பொறை நாட்டிலொன்றும், ஓய்மான் நாட்டிலொன்றுமாகப் பலவுளவென்றும், நெடுவேளாதனின் இப்போந்தை, சோழநாட்டு மிறைக்கூற்றத்துப் போந்தையாதல் வேண்டுமெனக் கருதப்படுகிறதென்றும் கூறுவர் ஔவை துரைசாமிப் பிள்ளை (புறம்.338.உரைவிளக்கம்). இந்நெடுவேளாதனைக் குறித்த வேறுவரலாறுகள் விளங்கவில்லை.

5.3.3. செல்லிக்கோமான் ஆதனெழினி

சோழநாட்டின் கீழைக் கடற்கரைச் சார்பிலே செல்லூரென்னும் ஊர் பண்டைக் காலத்தே சிறந்து திகழ்ந்தது. அருந்திறல் கடவுளர் அமர்ந்து காக்கும் இந்தச் செல்லூர்க்குக் கிழக்கே பெருங்கடலோரத்தே அலைகளின்

முழக்கத்தையுடைய நியமமென்னும் ஊரொன்றும் கோசர்க்குரியதாய்ச் செல்வச் செழிப்போடே நிலைபெற்றிருந்ததென்றும் குறிப்பிடுவார் மதுரை மருதனிளநாகனார் (அகம்.90).

இந்தச் செல்லூர் எக்காலத்தும் கெடாத வேள்வித் தீயினால் சிறந்திருந்ததென்பதும், மன்னர் மரபையே தொடர்ந்து அழித்துவந்த மழுவாள் நெடியோனான பரசுராமனும் இவ்வூரில் அரிதின் முயன்று முடித்த வேள்வியில், அழகும் காவலும் அமைந்த நெடுந்தூண் ஒன்றைப் பிறர் பார்வையில் படாதவாறு நிறுத்தினன் என்பதும் அம் மருதனிளநாகனாரின் மற்றோர் அகப் பாடலால் (அகம்.220) அறியப்படும்.

இச்செல்லூர்க் கோமானாய்ப் பண்டைக்காலத்தே சிறந்து விளங்கிய வேள்குலமன்னனே ஆதனெழினி. இவனது பெயரைக்கொண்டு இவனை ஆதனென்பானுக்கு மகனாகிய எழினியென்று எண்ணலாம். ஆயின், அம்முறையே போந்தையென்னும் ஊரினனான நெடுவேளாதன் மகனாய் இவனை எண்ணுதல் கூடும்.

இந்த ஆதனெழினி தன்னூரை அடுத்திருந்த நியமமென்னும் ஊரினரான கோசரினத்தாரைத் தன் செல்லூரிலும் இருத்தித் தன்னுடைய அரசியல் செயல்பாடுகளில் அவர்களையும் பணி கொண்டானென்று அறிகிறோம். இவன் போர்க்களம் புகுந்து போர் புரியுங்கால் பகைப்படையின் யானைகளை வேலால் எறிந்தே வீழ்த்துகின்ற சிறப்பாற்றல் மிக்கவனென்றும், இவன் குறிதவறாது எறிகின்ற வேல் மார்பினிடையே பாயப்பெற்ற பெருங்களிறுகளெல்லாம் மிக வருந்துமென்றும் ஐயூர் முடவனாரின் அகப்பாடலொன்று அறிவிக்கின்றது.

பல்லிளங் கோசர் கண்ணி அயரும்
மல்லல் யாணர்ச் செல்லிக் கோமான்
எறிவிடத்து உலையாச் செறிசுரை வெள்வேல்
ஆத னெழினி அருநிறத்து அழுத்திய
பெருங்களிற்று எவ்வம் போல
வருந்துப
(அகம்.216)

எனவரும் இப்பாடலொன்றே இவன் செய்தியைச் சிறப்புற அறியத்தக்க ஆதாரமாயுள்ளது.

மற்று, தலையாலங்கானத்துப் போரிலே பாண்டியன் நெடுஞ்செழியனால் கொல்லப்பட்ட இருபெரு வேந்தரொடு கூடிய ஐம்பெரு வேளிருள் ஒருவனாய்ப், 'போர்வல் யானைப் பொலம் பூண் எழினி' (அகம்.36) எனக் குறிக்கப்பெற்றவன் இவனே போலும்.

5.3.4. வாட்டாற்று எழினியாதன்

சோழநாட்டில் கீழைக்கடற்கரைச் சார்போடு பட்டுக்கோட்டை வட்டத்தில் வாட்டாற்றுக் கோட்டை (வாட்டாத்திக் கோட்டை) என வழங்கும் பண்டைய வாட்டாறு என்னும் ஊரையாண்ட வேள்குல மன்னன் வாட்டாற்று எழினியாதன். எழினி என்பானுக்கு மகனாகிய ஆதன் என்ற முறையில் இவன் எழினியாதன் எனப் பெயர் பெற்றான். எனவே, இந்த எழினியாதனைப் போந்தையூர் ஆண்ட நெடுவேளாதன் பெயரனாகவும் செல்லிக்கோமான் ஆதனெழினிக்கு மகனாகவும் அறியலாம்.

ஆதனெழினியின் செல்லூர் சோழநாட்டின் கீழைக் கடற்கரைச் சார்பிலே அமைந்திருந்ததென்பதும், அந்தச் செல்லூருக்கு அருகிலேயே கோசருடைய ஊரான செல்வச் செழிப்புமிக்க நியமம் நிலைத்திருந்ததென்பதும் முன்னர்க் கண்டோம். அவற்றையொட்டியே இந்த எழினியாதனின் வாட்டாறும் அமைந்திருத்தலை அறியலாம். அன்றியும்,

> பல்லிளங் கோசர் கண்ணி அயரும்
> மல்லல் யாணர்ச் செல்லிக் கோமான் (அகம்.216)

என்று ஆதனெழினி கோசரோடு தொடர்புறுத்திக் கூறப்பெறுமாறு,

> நனைக்கள்ளின் மனைக்கோசர்
> தீந்தேறல் நறவு மகிழ்ந்து
> தீங்குரவைக் கொளைத்தாங்குந்து . . . .
> வளநீர் வாட்டாற்று எழினி யாதன் (புறம்.396)

என்று இவ்வெழினியாதனும் கோசரோடே குறிக்கப் பெறுகின்றான். இவற்றால் இவ்விருவருடைய ஊரின் நெருக்கமும் உறவின் அணுக்கமும் உறுதியுறக் காணலாம்.

இவவாடடாற்று எழினியாதனால் மிகக பரிசில பெறற மாங்குடி கிழாராகிய மருதனாா இவனை வாழ்ததிப பாடிய இபபாடலொனறே இவனைப பறறி அறியுமாறு அமைநதுளளது

உளளிலோாககு வலியாகுவன
கேளிலோர்ககுக கேளாகுவன
கழுமிய வென்வேல வேளே
வளநீா வாடடாறறு எழினி யாதன (புறம 396)

எனவரும அவரது இபபாடலடிகளாால இவன பெருநில வேந்தாககுப படைததுணையாளனாகும வீறு அமைநதவன எனபது விளஙகும

535 அழுந்தூர்வேள் திதியன்

சோழன கரிகால பெருவளததானுககுத தந்தையான உருவப பலதேர இளஞசேடசெனனி அழுந்தூா வேளின மகளை மணந்தானாக அறிகிறோம்[12] ஆதலால அழுநதூரெனபது வேளிருககுரிய ஊரெனறு விளஙகும விளஙகவே, 'கடுநதோத திதியன அழுநதை' (அகம 196) என்று அவவழுநதூரையுடையோனாய அறியவருகினற திதியனொருவன வேளிா குலததினன எனபது வெளிபபடும

அழுநதூரெனபது இககாலதது மயிலாடுதுறைககு அணமையிலுளள தேரழுந்தூரேயாம[13] அதனையொடடிய பகுதிகளில சிலவறறை அககாலததே ஆணடிருந்த கோசர் தம விளைநிலததிலே ஒரு பசு புகுந்து மேயநத தவறறிறகுத தணடமாக அபபசுவினையுடைய முதியோனொருவனின கணகளை அருளினறிக களைநது துனபுறுததினா அமமுதியோன மகளான அனனி மிஞிலியெனபாள, தன தநதையைக கண்களைநத கோசரின் கொடுஞசெயலால சினமுறறு, அவரைப பழிகுபபழி வஞ்சந தீர்கக உறுதிபூணடு அதுவரையில கலததிலிடடு உணணாமலும, தூவுடை உடுததாமலும, தன சினபபடிவம மாறாது வநது இததிதியனிடததே உரைததாள அவள மொழிகேடடுக கோசரின கொடுஞசெயலை உணாநத இவன தானே சினஙகொணடு சென்று, அககோசரைக கொனறு அனனி மிஞிலியின மனததுயரை மாறறினான

பாசிலை அமனற பயறுஆ புகுகென
வாயமொழித தநதையைக கணகளைநது அருளாது
ஊர்முது கோசா நவைதத சிறுமையின
கலததும உணணாள வாலிதும உடாஅள
சினததிற கொண்ட் படிவம மாறாள
மறநகெழு தானைக கொறறக குறுமபியன
செருவியல நனமான திதியறகு உரைததவா
இன்னுயிா செகுபபக கணடுசினம மாறிய
அனனி மிஞிலி போலமெயம மலிநது
ஆனா உவகையேம ஆயினெம (அகம 262)

எனவும

தநதை. கணகவின அழிதததன தபபல தெறுவர
ஒனறுமொழிக கோசாக கொனறுமுரண போகிய
கடுநதோத திதியன அழுநதைக கொடுஙகுழை
அனனி மிஞிலியின இயலும (அகம 196)

எனவும வருகினற அபபெணணின நெஞசுறுதிகொணட வஞசின வரலாறறில இவன வரலாறும இணைநதுவரக காணகிறோம

இநதத திதியனிடததுப பகைமை கொணட அனனி எனபானோா குறுநில மனனன. இவனுடைய காவலமரமான புனனனையை வெட்டியொழிதது இவனோடே போாபுரிய துடிததெழுநதான அவனுடைய அரைகுறை ஆறறலையறிநத மிழலைக கூறறது வேளெவவி அவனைததடுதது நயமபுரி நனமொழிகளால அறிவுரை கூறி. இததிதியனொடு பொருதல அவனுககே தீதாய முடியுமெனறு எசசரிதது அடககவும அடஙகாத அவவனனி. பொறையாறறு கிழானாகிய நறறோப பெரியனைத துணைககொணடு படையுடன வநதான வநத வேகததில இவனுடைய புனனனையை வெட்டி வீழததிய அவன. குறுகைப பறநதலை எனனுமிடததே இவனொடு போர்புரிநது இவனால கொலையுணடு மடிநதான

பயங்கெழு வைபபின பலவேல எவவி
நயமபுரி நனமொழி அடககவும அடஙகான
பொனனினா நறுமலாப புனனை வெஃகித
திதியனொடு பொருத அனனி போல
விளிகுவை கொலலோ நீயே (அகம 126)

அனனி குறுககைப பறநதலைத திதியன
தொனனிலை முழுமுதல துமியப பணணிய
நனனா மெலலிணாப புனனை போலக
கடுநவைப படீஇயா மாதோ (அகம 145)

அனனியும பெரியன அவனும விழுமிய
இருபெரு வேநதா பொருகளதது ஒழிதத
புனனை விழுமம போல
எனனொடு கழியுமிவ விருவரது இகலே (நற.180)

எனவரும பாடற பகுதிகள இவவரலாறறை உணாததுகினறன இவறறால், வலிய வருகினற வமபப பகைவரை வாடடியழிககும இததிதியனின ஆறறலையறியலாம

அழுநதூர் வேளாகிய அததிதியனுககுத தனனை ஒதத வேறறுவேளிா சிலருடைய வெமபகையும இருநததாய அறிகிறோம. அவவேளிரொடு பொருதறகு இவன உருவிய வாளின வெமமையை,

பாணா ஆாபபப பலகலம உதவி
நாளவை யிருநத நனைமகிழத திதியன
வேளிரொடு பொரீஇய கழிதத
வாளவாய அனன வறுஞசுரம (அகம 331)

எனற பாடலடிகளில மாமூலனாா சிறபபிததுக கூறுவாா

முடிவில, தலையாலஙகானததுப போரிலே பாணடியன நெடுஞசெழியனை எதிாதத இருபெருவேநதரும ஐமபெரு வேளிருமாகிய எழுவருள ஒருவனாக இததிதியனை அறிகிறோம சோழ வேநதனுககுத துணையாக இவன அபபோரில ாடுபடடனன போலும ாடுபடட அபபோரே இவனுககு இறுதிபபோராயிறறு (அகம 36)

536 வேளெவ்வி

சோழநாடடில கீழைக கடற்கரை சாாநத மிழலைக கூறறததை ஆணடவன் வேளெவவி

ஓமபா ாகை மாவேள எவவி
புனலம புதவின் மிழலை (புறம 24)

என்று இவனுடைய மிழலைக் கூற்றம் குறிக்கப் பெறுகின்றது

யாழிசை மறுகின் நீடூர் கிழவோன்
வாய்வாள் எவ்வி (அகம் 266)

என்பதனால் நீடூரும்,

பொலம்பூண் எவ்வி நீழல் (அகம் 366)

என்பதனால் நீழலும், இவனூர்கள் என்பது விளங்கும்

இவனுடைய ஊர்களெல்லாம் நெய்தல்வளம் சான்றனவாகவே புனையப் பெறுகின்றனவாதலால் இவற்றின் கடற்கரைச் சார்பு காண்பப்படும் சோழநாட்டிலே தேவாரப் பாடல் பெற்ற ஊர்களான திருவீழிமிழலையும் திருநீடூருமே எவ்வியின் இந்த மிழலையும் நீடூருமாகலாம்[14]

வேளெவ்வி அரசியலில் நல்ல மதிநலமாண்பு வாய்கப் பெற்று விளங்கினான் இவன் காலத்தே அன்னியென் பானோர் குறுநிலமன்னன், அழுந்தூர்வேள் திதியனிட்ததுப் பகைமுரண் கொண்டு, அவனுடைய காவல் மரமான புன்னையை வெட்டத் துணிந்தான் அந்நிலையில் இந்த எவ்வி அவ்வன்னிக்கு நயம்புரி நன்மொழிகளால் அறிவுரை கூறித் திதியனொடு பொருதல் தீதாய் முடியுமென்று எச்சரித்து அடக்கவும், அடங்காத அவன் பொறையாற்றுக் கிழானாகிய நற்றோப் பெரியனைத் துணைக்கொண்டு, படையுடன் போய்த் திதியனின் புன்னையை வெட்டிக் குறுக்கைப் பறந்தலையிலே அவனொடு போர்புரிந்தபோது அவனால் கொல்லப்பட்டு மடிந்தான்

பயங்கெழு வைப்பின் பலவேல் எவ்வி
நயம்புரி நன்மொழி அடக்கவும் அடங்கான்
பொன்இணர் நறுமலாப் புன்னை வெஃகித்
திதியனொடு பொருத அன்னி போல்
விளிகுவை கொல்லோ நீயே (அகம் 126)

என்ற நக்கீரரின் அகப்பாடலடிகளால் இந்த எவ்வியின் எதிர்து காணும் மதிநல மாண்பு புலனாகும்

இத்தகைய மதிநுட்பம் வாய்ந்த எவ்வி வண்மைச் சிறப்பினாலும் மேம்பட்டு விளங்கினான்

ஓம்பா ஈகை மாவேள் எவ்வி (புறம்.24)

இரும்பாண் ஒக்கல் தலைவன் பெரும்பூண்
போரடு தானை எவ்வி (புறம்.233)

உலகுபுகத் திறந்த வாயில்
பலரோடு உண்டல் மரீஇ யோனே (புறம்.234)

என்றெல்லாம் வருகின்ற பாடற் பகுதிகள், இவனது வண்மைச் சிறப்பிற்கு வலுவான சான்றுகளாம்.

'போரடு தானை எவ்வி' (புறம்.233), 'வாய்வாள் எவ்வி' (அகம்.115, 266), 'பலவேல் எவ்வி' (அகம்.126) என்றவாறு படைச்சிறப்புக்களோடே பாடப்பெறுகின்ற இந்த நீடூர் கிழவோன் எவ்வி, தன் ஏவலை ஏற்காதவராகிய பகைவரை அரிமணவாயில் உறத்தூர் என்னுமிடத்தே வலியழித்து வென்று, அவ்வெற்றியை விளைத்த படையாளர்க்குப் பெருஞ்சோறு அளித்து ஆரவாரம் விளைத்தானென்று அறிகிறோம்.

யாழிசை மறுகின் நீடூர் கிழவோன்
வாய்வாள் எவ்வி ஏவல் மேவார்
நெடுமிடல் சாய்த்த பசும்பூட் பொருந்தலர்
அரிமண வாயில் உறத்தூர் ஆங்கண்
கள்ளுடைப் பெருஞ்சோற்று எல்லிமிழ் அன்ன
கவலை யாகின்றால் பொரிதே (அகம்.266)

எனவரும் பரணர் பாடலால் இது விளங்கும்.

முடிவில இந்த எவ்வியின் மிழலைக் கூற்றமும் இவனையொத்த வேளிரின் முதுதூற்றுக் கூற்றமும் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன நெடுஞ்செழியனால் வென்று கைக்கொள்ளப பட்டன (புறம 24) அப்போரிலே போலும் இவன் விழுப்புண்பட்டு வீழ்ந்து மாண்டான். இவன் வீழ்ச்சியால் வருந்திய பாணரெலலாம், 'இதுவரை இவனைப பாடிய யாழ்கொண்டு

இனி எவரைப் பாடுவது' என்று இரங்கித் தத்தம் கைகளில் கொண்டிருந்த யாழை வெறுத்து உடைத்தெறிந்து போயினர் (அகம்.115) இவன் உயிரோடிருந்த காலத்து இவனால் பொற்பூ அளிக்கப் பெற்று அணிந்து பொலிந்த அப்பாணர் தலைகளெல்லாம். இவனை இழந்தபின் ஏற்பட்ட வறுமையின் பூவில்லாத வறுந்தலைகளாய்ப் பொலிவிழந்து தோன்றின

எவ்வி யிழந்த வறுமையாழ்ப் பாணர்
பூவில் வறுந்தலை போலப் புல்லென்று
இனைமதி வாழிய நெஞ்சே! (குறு.19)

என்று இதனை உவமையாக்கிப் பாடுவார் பரணர்.

இந்த வேளெவ்வியோடே நெருங்கிப் பழகியிருந்த வெள்ளெருக்கிலையார் என்ற புலவர், இவன் போரிலே விழுப்புண் பட்டு வீழ்ந்த மறுநாள் விடியற் காலையில் இச்-செய்தியை முதன் முதலாகக் கேட்டவுடன் நெஞ்சம் துணுக்குற்று,

பொய்யா கியரோ! பொய்யா கியரோ!
பாவடி யானை பரிசிலர்க்கு அருகாச்
சீர்கெழு நோன்தாள் அகுதைகண் தோன்றிய
பொன்புனை திகிரியின் பொய்யா கியரோ!
'இரும்பாண் ஒக்கல் தலைவன் பெரும்பூண்,
போரடு தானை எவ்வி மார்பின்
எஃகுறு விழுப்புண் பல'என
வைகுறு விடியல் இயம்பிய குரலே. (புறம்.233)

எனப் பதைத்துப் பாடிய பாடல் படிப்போர்தம் நெஞ்சை நெக்குருக்கக் காணலாம். பின்னர் இவனுக்குப் பிண்டம் இட்ட படையலின்போதும் அப்புலவர் நொந்து பாடியுள்ளார் (புறம்.234).

537. வீரை வேண்மான் வெளியன் தித்தன்

வீரையென்பதோர் ஊரைப்பற்றி மதுரை மருதனிள நாகனாரின் அகப்பாடலொன்றால் அறிகிறோம்.

அடுபோர் வேளிர் வீரை முன்றுறை
நெடுவெள் உப்பின் நிரம்பாக் குப்பை (அகம்.206)

எனவரும் இதனால், இவ்வீரை கடற்கரையூரென்பதும், இது வெல்லும் போரிலே வல்ல வேளிர்க்குரியதென்பதும் விளங்குகின்றன. எனவே, 'தென்பெண்ணையாற்றின் வடகரை நாட்டில் கீழைக் கடற்கரையில் புதுச்சேரிக்கு அருகே இக்காலத்து வீராம்பட்டினமென்று வழங்குமூரே பண்டைய வீரையாம்' என்று இவ்வூரைக்குறித்து ஔவை சு. துரைசாமிப்பிள்ளை கூறும் கருத்து (புறம்.320-முன்னுரை) இங்கே அறியப்படும். இந்த வீரையை ஆண்ட வேண்மான் வீரைவேண்மானென்று வழங்கப்படுகின்றான். அம்மரபில் அறிய வருபவனே வீரைவேண்மான் வெளியன் தித்தன்.

வீரை வேண்மான் வெளியன் தித்தன்
முரசுமுதற் கொளீஇய மாலை விளக்கின் (நற்.58)

என்று இவனுர்ப்பெயர், குடிப்பெயர், இயற்பெயர் எல்லாம் இணைந்த ஆட்சியை முதுகூத்தனாரின் நற்றிணைப் பாடலில் நன்கு அறிகிறோம்.

இவ்வேண்மான் வெளியன்தித்தனுடைய அரசியல் வரலாறுகள் தித்தனென்ற சோழவேந்தன் வரலாற்றிலே காணப்பட்டன. வீரை வெளியனார் (புறம்.320) எனவும், வீரை வெளியன் தித்தனார் (அகம்.188) எனவும் அறிய வருகின்ற புலவர் பெயர்கள் இவனுடையனவாகவே எண்ணப்படுமாறு உள்ளமையால் இவ்வேண்மானைப் புலவனாகவும் அறியலாம்.

5.3.8. நன்னன்சேய் நன்னன்

பிற்காலத்துத் தொண்டை நாட்டின் இருபத்துநான்கு கோட்டங்களுள் ஒன்றாய்த் திகழ்ந்த, பண்டைப் பல்குன்றக் கோட்டத்துத் தலைநகரான செங்கண்மாவிலிருந்து ஆட்சி புரிந்த வேள்குலமன்னன் நன்னன்சேய் நன்னன். இந்நன்னனுக்குத் தந்தைபெயரும் நன்னனேயென்பது, 'நன்னன் சேய் நன்னன்' எனவரும் பெயர்த்தொடரால் புலனாகும்.

பல குன்றங்களையுடைமையால் இந்த நன்னனுடைய நாடு பல்குன்றக் கோட்டமெனப் பெயர்பெற்றது. 'குன்றுசூழ் இருக்கை நாடுகிழவோனே' (மலை.583) என்று இந்த நாட்டொடு சார்த்தி இவன் குறிக்கப் பெறுவதனாலும் இது விளங்கும். இந்தப் பல்குன்றக் கோட்டம் தமிழகத்து

வடவெல்லையாய் விளங்கிய வேங்கடத்தையும் உள்ளடக்கியிருந்ததை, 'பல்குன்றக் கோட்டத்துச் சிலை நாட்டுத் திருவேங்கடம்' என்ற கல்வெட்டுத் தொடரால் அறியலாம்.[13]

இந்நன்னனுடைய செங்கண்மா நகர் திருவண்ணாமலைக்கு மேல்திசையில் இக்காலத்துச் செங்கமென விளங்குகின்றது.

நவிரம் என்ற இவனுடைய மலை (மலை.82,579) இன்று திரிசூலகிரியென்ற பெயரில் உள்ளது. இந்நவிர மலைமேல் காரியுண்டிக் கடவுள் (மலை.83) என்று இவன் காலத்தே வழிபடப் பெற்ற சிவபெருமான், இன்று காளகண்டேசுவரர் என்ற பெயரில் விளங்குகின்றார்.

காண்போர் விரும்பும் கண்ணுக்கினிய சேயாறு (மலை.476) என்றும், கடிய நீர்ப்பெருக்கினையுடைய கண்ணுக்கினிய சேயாறு (மலை.555) என்றும் பாடப் பெறுகின்ற இவனது ஆறு, இக்காலத்துச் சண்முகநதி என்னும் பெயரோடே ஓடுகின்றது.

ஈகைப் பண்பிலே சிறந்துவிளங்கிய இவனிடத்துக் கூத்தரை ஆற்றுப்படுத்தும் முறையில் இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பாநலம்படப் பாடிய மலைபடுகடாமென்ற கூத்தராற்றுப் படையினால் இவனைப் பற்றியும் இவனுடைய நாட்டைப் பற்றியும் அறியலாம். ஆயினும் இவனுடைய அரசியல் வரலாறாக எதுவும் அறியவரவில்லை.

539. பொருநன்

தலையாலங்கானத்துப் போரிலே பாண்டியன் நெடுஞ்செழியனால் இருபெரு வேந்தரோடே கொல்லப்பட்ட ஐம்பெருவேளிருள் ஒருவனாய், 'இயல்தேர்ப் பொருநன்' (அகம்.36) என்ற முறையில் அறிய வருகின்ற பொருநனைப் பற்றிய வேறு வரலாறேதும் சங்க இலக்கியங்களால் விளங்கவில்லை. இவனுடைய நாடு இன்னதென்றும் தெரியவில்லை.

அடிக்குறிப்புகள்

1. மு. இராகவையங்கார்-வேளிர் வரலாறு. பக்.25-26
2. நோக்கு: மேலவர்-மேலது, ப.60-61.
3. யாப்பருங்கலக் காரிகை, 26 உரை மேற்கோள்
4. நோக்கு: மு. இராகவையங்கார்-வேளிர் வரலாறு, பக.61
5. நோக்கு: மேலவர்-மேலது, ப.48
6. நச்சினார்க்கினியர் - தொல்காப்பியம், எழுத்ததிகாரம், சிறப்புப்பாயிரம் உரை.
7. மு.இராகவையங்கார்-வேளிர் வரலாறு, ப.62
8. Ep.car.Vol.I. Bl.171
9. Ibid, Hn.65
10. Ibid, AK.71
11. நோக்கு: பேரா. தா.வே. வீராசாமி- பெரியபுராணம் சிறப்புப் பெயரகராதி- ஊர்ப்பெயர்கள், ப.169.
12. நோக்கு: நச்சினார்க்கினியர் - தொல்காப்பியம், பொருளதிகாரம், நூ.30-உரை
13. நோக்கு: பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்-நற்றிணை, 180-உரை
14. நோக்கு: கா. கோவிந்தன் - சங்க கால அரசர் வரிசை - 5, ப.67
15. நோக்கு: உ.வே. சாமிநாதையர்-பத்துப்பாட்டு, பாடப்பட்டோர் வரலாறு.

6. குறுநில மன்னர் வரலாறு

சங்ககாலத் தமிழகத்தில் முடிவேந்தரையும் வேளிரையும் அடுத்த நிலையில் ஆங்காங்கே அமைந்த குறுநிலங்களை ஆண்டிருந்த மன்னராகவும் பலர் அறிய வருகின்றனர். அக்குறுநில மன்னரெல்லாம் தத்தம் நிலங்களை உள்ளிட்ட பெருநில வேந்தரின் பேராட்சிக்குக் கீழ்ப்பணிந்தும், அவர்தம் அரசியலில் தாமும் பங்கேற்றுப் போர்க் காலங்களில் அவர்களுக்குப் படைத்தலைவர்களாய் வினைபுரிந்தும் விளங்கக் காண்கிறோம். சேரன் மறவனான குதிரைமலைக் கிழவன் பிட்டங்கொற்றன், பாண்டியன் மறவர்களான அதிகன், கோடைப் பொருநன் பண்ணி என்ற கடியநெடு வேட்டுவன், நாஞ்சிற் பொருநன் வல்வேற் கந்தன் மற்றும், சோழன் மறவனான மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணன் ஆகியோர் இம்முறையில் படைத்தலைவர்களாய் அறியவருகின்றனர்.

இனி, இக்குறுநில மன்னர்களின் வரலாறுகளைச் சேர. பாண்டிய, சோழநாடுகளின் அடைவிலே காணலாம்.

61. சேரநாட்டுக் குறுநில மன்னர்கள்

சேரநாட்டுக் குறுநில மன்னர்களாகப் பதினறுவர் வருகின்றனர். அறிந்த அளவில் அவர்களுடைய குறுநிலங்களைத் தெற்கு வடக்காக நோக்கி அவர்களைப் பின் வருமாறு வரிசைப் படுத்தலாம்.

1. அறுகை
2. கடலன்

3. மூவன்
4. குமணன்
5. கழுவுள்
6. தாமான் தோன்றிக்கோன்
7. ஓரி
8. அதியமான் நெடுமானஞ்சி
9. அதியமான் பொகுட்டெழினி
10. மலையமான் திருமுடிக்காரி
11. மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணன்
12. மல்லிகிழான் காரியாதி
13. ஏறைக்கோன்
14. பிட்டங்கொற்றன்
15. பிண்டன்
16. கொண்கானம் கிழான் நன்னன் உதியன்

இதே வரிசையில் இவர்களின் வரலாறுகளைத் தொடரலாம்.

611. அறுகை

செங்குட்டுவன் காலத்துச் சேரநாட்டின் தென்பால் எல்லைக்கு உட்பட்டுப் பாண்டிய நாட்டை ஒட்டியதோர் குறுநிலத்தை ஆண்டிருந்தவன் அறுகை. பாண்டி நாட்டுக் குறுநில மன்னனான பழையனின் மோகூருக்கு அண்டை நிலத்து ஆட்சியாளன் என்ற முறையில் இவனுக்கும் அவனுக்குமிடையே இணக்கமின்றி எதிர்ப்பு ஏற்பட்டது போலும். அதனால் அப்பழையன் இவ்வறுகையின்மேல் படைகொண்டு பாய்ந்தானாக, உழிஞைமாலை அணிந்து பகைநாடுகளை எரித்தழித்து வெல்லும் போரை இயல்பாகவே பழகியிருந்தும், இவனால் அவன் படையை எதிர்த்துநிற்க இயலவில்லை. இயலாமையால் இவன் அவனுக்குத் தோற்றுத் தன் நாட்டை விட்டே ஓடி ஒளிந்தவனாய், தனக்கு நெடுந்தொலைவில் இருப்பினும் தன்னைக் காத்தற்குரிய நண்பன் செங்குட்டுவனே என்று நம்பி மொழித்திருந்தான். அதுகேட்ட செங்குட்டுவன், இவனால் நீக்க மாட்டாத துன்பத்தை நீக்க நினைந்து தானே படையெடுத்துவந்து, தெய்வமே எதிர்நின்று வருத்துவது போலப் பகைகொண்டு நின்ற பழையனின் மோகூர் அரண்களை அழித்து, அவனது முரசினையும் கைக்கொண்டு, அவன்மொழிந்த மேம்பாட்டு மொழிகளையும் அடக்கி, அவனுடைய காவல் மரமான வேம்பின் அடியை வெட்டி, அதுகொண்டு தனக்கு வெற்றி

முரசு செய்யுமாறு அதனைத் துண்டுசெய்து முற்றுவித்து, அவன் போர்யானைகளையே கடாக்களாகப் பூட்டிய வண்டியில் ஏற்றிக் கொண்டு சென்றான். அம்முறையில் இவன் அச்செங்குட்டுவனால் காப்பாற்றப்பட்டவனாய் அறிய வருகின்றான்.

நுண்கொடி உழிஞை வெல்போர் அறுகை
சேணன் ஆயினும் கேளென மொழிந்து
புலம்பெயர்ந்து ஒளித்த களையாப் பூசற்கு
அரண்கள் தாவுறீஇ, அணங்குநிகழ்ந் தன்ன
மோகூர் மன்னன் முரசம் கொண்டு,
நெடுமொழி பணித்து,அவன் வேம்புமுதல் தடிந்து,
முரசுசெய முரச்சி, களிறுபல பூட்டி,
ஒழுகை உய்த்த (ஆடுநடை அண்ணல்) (பதி.44)

என்று அச்செங்குட்டுவனைப் பாடுகின்ற பரணரின் பாடலடிகளால் இவனது இச்செய்தி அறியப்படும்.

612. கடலன்

விளங்கில் என்னும் நகரைத் தலைநகராகக் கொண்டு அதனைச் சூழ்ந்த குறுநிலத்தை ஆண்டிருந்தவன் கடலன்.

கறுத்தோர், ஒளிறுவேல் அழுவம் களிறுபடக் கடக்கும்
மாவண் கடலன் விளங்கில் (அகம்.81)

என்பதனால் இது விளங்கும். இவன் போராற்றல் மிக்கவன் என்பதும் இவ்வடிகளில் புலப்படுகின்றது.

முதிர்வார் இப்பி முத்த வார்மணல்
கதிர்விடு மணியின் கண்பொரு மாடத்து
இலங்குவளை மகளிர் தெற்றி ஆடும்
விளங்குசீர் விளங்கில் விழுமம் கொன்ற
களங்கொள் யானைக் கடுமான் பொறைய (புறம்.53)

என்று, சேரன் மாந்தரஞ்சேரல் இரும்பொறையை விளித்துப் பாடும் பொருந்தில் இளங்கீரனார் புறப்பாடலால், இவ்விளங்கில் சேரநாட்டகத்ததென்றும், இதற்குப் பகைவரால் நேர்ந்த துன்பத்தை அம்மாந்தரஞ்சேரல் தீர்த்துக் காத்தனனென்றும் அறியப்படும். ஆதலால், இவ்விளங்கிலை

ஆண்ட கடலனைச் சேரர்க்கு அடங்கிய குறுநில மன்னனென்று கொள்ளலாம்.

613. மூவன்

சேரநாட்டின் தென்பால் மேலைக் கடலோரத்துக் குறுநிலமொன்றை ஆண்டிருந்தவனாக அறிய வருபவன் மூவன்.

பொய்கை நாரை போர்வில் சேக்கும்
நெய்தலங் கழனி நெல்லரி தொழுவர்
கும்புவிடு மென்பிணி அவிழ்ந்த ஆம்பல்
அகலடை அரியல் மாந்தித் தெண்கடல்
படுதிரை இன்சீர்ப் பாணி தூங்கும்
மென்புல வைப்பின் நன்னாட்டுப் பொருந (புறம்.209)

என்று இவனுடைய குறுநாட்டினைப் புனைந்து பாடி, அதனோடே இவனைச் சார்த்தி விளிப்பார் பெருந்தலைச் சாத்தனார். வாட்போரில் மேம்பட்டவனாக அப்பாடலிலேயே அவரால் குறிக்கப்பெறுகின்ற இவன், தன் காலத்துச் சேரநாட்டை ஆண்டிருந்த பெருவேந்தனான கணைக்கால் இரும்பொறையின் பேராட்சிக்கு அடங்காது அவனை இகழ்ந்தமையால் போலும், அவனால் போரிலே வென்றடக்கப்பட்டதோடே பல்பறிக்கவும் பட்டான். இவனது பல்லைப் பறித்துக்கொண்டுபோன அப்பொறையன், அதனைத் தன் தொண்டி நகரக் கோட்டைக் கதவிலே பதித்து வைத்தானென்பதை,

மூவன், முழுவலி முள்ளெயிறு அழுத்திய கதவின்
கானலந் தொண்டிப் பொருநன் வென்வேல்
தெறலருந் தானைப் பொறையன் (நற்.18)

எனவரும் பொய்கையாரின் பாடலடிகளால் அறியலாம். இதனையொழிய, இவனுடைய அரசியல் வரலாறாக வேறொன்றும் விளங்கவில்லை.

614. குமணன்

இச்காலத்துப் பழநிமலையென்ற பொதினிமலைத் தொடர்களுள் ஒன்றாகிய முதிரமலையையும், அதனைச் சூழ்ந்த நாட்டையும் ஆண்ட குறுநில மன்னன் குமணன்.

அதிரா யாணர் முதிரத்துக் கிழவ!
இவண்விளங்கு சிறப்பின் இயல்தேர்ச் குமண
(புறம்.158)

பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேல் குமணன் (புறம்.163)

நட்டோர் நட்ட நல்லிசைக் குமணன்
மட்டார் மறுகின் முதிரத் தோனே (புறம்.160)

என்றெல்லாம் இவன் முதிரமலைக்குத் தலைவனாகவும் அம்மலையின்கண் ஆண்டிருப்போனாகவும் பாடல்களில் விளிக்கவும் குறிக்கவும் பெறுகின்றான்.

இம்முதிரமலை அடிவாரத்தில் குமணமங்கலம் என்ற சிற்றூர் ஒன்று இன்றும் இவன் பெயரோடே விளங்குகின்றது. இன்றைய உடுமலைப்பேட்டை நகரைத் தன்னகத்தே கொண்டு, அவ்வுடுமலைப் பேட்டை வட்டத்துத் தென்கீழ்ப் பகுதியையும் பழநி வட்டத்துத் தென்மலைப் பகுதியையும் அடக்கிய குறுநிலமே குமணன் நாடு எனக் கூறுவர்.

குமணன், சங்க கால வளளல் எழுவருக்கும் காலத்தால் பிற்பட்டவன். இதனை,

கொள்ளார் ஓட்டிய நள்ளியும் எனவாங்கு
எழுவர் மாய்ந்த பின்றை அழிவரப்
பாடி வருநரும் பிறரும் கூடி
இரந்தோர் அற்றம் தீர்க்கென விரைந்திவண்
உள்ளி வந்தனென் யானே (புறம்.158)

என்று இவனிடத்து வந்து பாடிய பெருஞ்சித்திரனாரின் பாடலடிகளால் அறியலாம்.

குமணன் மிகமேம்பட்ட வண்மைப்பண்பு வாய்ந்தவன். தன்னைப் பாடிவந்த புலவர் பெருஞ்சித்திரனாருக்குப் பெருங்களிற்றோடே கூடிய பெரும்பரிசில் நல்கித் தன் பெருமிதம் விளங்க அவரைப் பெருமைப் படுத்தியதை (புறம்.161-163) இவனது வண்மைக்குச் சிறந்த காட்டாகக் காணலாம்.

இனி, இதனினும் சிறந்ததாக இவன் வண்மைத் திறத்தை அறிதற்கு இவன் வாழ்வில் நிகழ்ந்ததொரு நிகழ்ச்சி சான்றாகின்றது. இவன் எவ்வாறோ தன் தம்பியாகிய இளங்குமணனால் நாடுகொள்ளப்பட்டுத் தான் போய்க் காடு பற்றியிருந்த காலத்துப் பெருந்தலைச் சாத்தனார் இவனைக் கண்டு, இவனது நிலையினும் வாட்டமிக்க தமது வறுமைநிலையைக் கூறிப் பரிசில் வேண்டினார். அவர்க்குக் கொடுக்க ஒன்றுமில்லாத அந்நிலையிலும் இவன், அவரை வெறுங்கையோடு விடுத்தற்கு இசையானாய், தனது தலைக்கு விலையறிவித்திருந்த தம்பியாலேனும் அவர் பொருள் பெறுமாறு, தன் தலையைக் கொண்டுபோகச் சொல்லி வாளைக் கொடுத்தான். அவர் அந்த வாளை மட்டும் வாங்கிப் போய் குமணனின் தம்பியாகிய இளங்குமணனைக் கண்டு, இவனது புகழ்ச் செயலைப் புகழ்ந்து பாடி அவனை இகழாமலே இகழ்ந்து தெளிவித்தார்.

ஆடியல் யானை பாடுநர்க்கு அருகாக்
கேடில் நல்லிசை வ'பமான் தோன்றலைப்
பாடி நின்றனென் ஆக, கொன்னே
பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தல்என்
நாடிழந் ததனினும் நனியின் னாதென
வாள்தந் தனனே தலையெனக்கு ஈய!
தன்னிற் சிறந்தது பிறிதொன்று இன்மையின்,
ஆடுமலி உவகையொடு வருவல்
ஓடாப் பூட்கைநிற் கிழமையோற் கண்டே. (புறம்.165)

எனவரும் பெருந்தலைச் சாத்தனாரின் இப்பாடலடிகளில் இக்குமணன் தன் உயிரினும் மேலாகக் கருதிய ஈகைப்பண்பு எடுத்துமொழியப் பெறுதலை அறிகிறோம்.

615. கழுவுள்

காமூரென்னும் ஊரிலேயிருந்து அதனையொட்டிய குறுநிலத்தை ஆண்டிருந்தவன் கழுவுள். 'வென்வேல், மாவண் கழுவுள் காமூர்' (அகம்.365) என்று அகப்பாடல் ஒன்றிலே இவனுடைய ஊரைக் குறிக்கின்ற மதுரை மருதனிளநாகனார், அந்தக் காமூரிடத்தே பூதமொன்றினால் உண்டாக்கப்பட்ட பொரிந்த அடியையுடைய வேங்கை மரத்தின் மலர்கள் மணச்சிறப்பு மிக்கவையென்றும் கூறுவார்.

'ஆன்பயம் வாழ்நர் கழுவுள்' (பதி.71) என்று இவனைக் குறிப்பிடுகின்ற அரிசில்கிழாரின் பாடலடியால் இவன் ஆயர்குலக்கோன் என்பது அறியப்படும்.

சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையால் அடக்கப்பட்டவனாக அறியவருதலால், இந்தக் கழுவுளுடைய காமூர் சேரநாட்டினகத்தோ அல்லது அந்நாட்டின் எல்லைப்புறத்தோ இருந்தது எனலாம். பசுப்பயனால் வாழ்வோராகிய ஆயர்களுக்குத் தலைவனென்பதனால், கூடிய மட்டிலே சங்க இலக்கியங்களின் பல பாடல்களில் (பதி.22, 77 அகம்.79) பசுவளம் மிக்கதாகப் பாடப்பெறுகின்ற கொங்கு நாட்டு ஊராக அதனைக் கொள்ளவும் தகும்.

இந்தக் கழுவுள் தனக்கு நண்பரென்று யாரையும் நணுகானாய், அண்டை மன்னரெல்லோரிடத்தும் அயன்மையே பாராட்டி, அவர்களிடமிருந்து தானும் பகைமையையே பரிசாகப் பெற்றானென்றும் அறிகிறோம். அம்முறையில் வேளிர் பதினால்வர் இவன்மேல் வெகுண்டு படையெடுத்து வந்து இவனுடைய காமூரை அலங்கமலங்க அழித்ததைக் காணலாம்.

காடிறந் தனரே காதலர்; அடுபோர்
வீயா விழுப்புகழ் விண்தோய் வியன்குடை
ஈரெழு வேளிர் இயைந்தொருங்கு எறிந்த
கழுவுள் காமூர் போலக்
கலங்கின்று மாதவர்த் தெளிந்தவென் நெஞ்சே
(அகம்.135)

என்று, அவ்வேளிரால் இவனுடைய காமூர் அடைந்த கலக்கத்தைப் பரணர்தம் அகப்பாடலொன்றிலே தலைவியின் நெஞ்சக் கலக்கத்திற்கு நேர்பட உவமையாக்கிப் பாடியுள்ளார்.

சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறையிடமும் இக்கழுவுள் முரண்பாடு உற்றானாக, அவனும் சினந்து இவன்மேல் படையெடுத்து வந்து, இவனூரைத் தீக்கிரை ஆக்கினான். அவ்வளவில் இவனும் இவன் படை மறவரும் அரணின் மதிலிடத்தே மாற்றார்க்குத் தோன்றாமல் மறைந்துநின்று, ஊக்கத்துடனே போர்ச்செயல் புரிந்தனராயினும் அரிய காவல்மிக்க அவ்வரணை இவனாலும்

இவன் படையாலும் தொடர்ந்து காத்துக்கொள்ள இயலவில்லை. இவர்களின் காவலையுடைத்து அரணைக் கைப்பற்றிக்கொண்ட சேரமான், இவனுக்கும் இவன் மக்களுக்கும் சிறந்த ஆனிரைகளையும் கவர்ந்து, தன் படையினர்க்குப் பகுத்தளித்தானாக, அவர்களும் அவற்றைப் பிறர் பிறர்க்கு அளித்துவிட்டனர். அம்முறையில் இக்கழுவுள் தன்னூரில் இனித் தயிர் கடைதற்கு வாய்க்கமாட்டாத நாட்களை நினைந்து இரக்கமுற்று, அச்சேரமானிடம் சென்று தலைவணங்கி நின்றானென்றும், அவன் வெற்றிச் சிறப்பாக இதனைப் பாடுவார் அரிசில்கிழார் (பதி.71).

பின் வந்த இளஞ்சேரல் இரும்பொறையைப் பாடும் பெருங்குன்றூர்கிழார் அவன் முன்னோர் செய்த அரும்பெருஞ்செயல்களை அடுக்கிக் கூறும் முறையில், பெருஞ்சேரல் இரும்பொறையின் பெருவெற்றியாக, 'பொருமுரண் எய்திய கழுவுள் புறம் பெற்று' (பதி.88) என்று அவன் இந்தக் கழுவுளை வென்று புறங்கண்டதையே கூறுகின்றார். அஃது இவனுக்கோர் சிறப்பாக அமைந்துள்ளதை அறியலாம்.

616. தாமான் தோன்றிக்கோன்

தோன்றியென்னும் மலையையும் அம்மலையைச் சூழ்ந்த நாட்டையும் ஆண்ட குறுநில மன்னராகிய தோன்றிக் கோ மரபில் வந்த ஒருவனே தாமான் தோன்றிக்கோன். தாமன் என்ற இயற்பெயரே நீண்டு இவனுக்குத் தாமான் என வழங்கியதாகக் கருதலாம்.

மற்று, இந்தத் தாமானுக்குரிய 'தோன்றிமலை இன்னதென்று தெளிவுறத் தெரியவில்லை. இக்காலத்துத் திண்டுக்கல்லுக்கு மேற்கில் பதினைந்து கல் தொலைவிலே தான்றிக்குடியென வழங்குகின்றதோர் ஊரமைந்த மலையைத் தோன்றிமலையெனக் கருதலாமாயின், இதனினும் பொருத்தமுடையதாக இன்னொரு மலையும் காணப்படுகின்றது. இன்றைய கருவூருக்கு அண்மையில் உள்ள தான்தோன்றிமலையே பண்டைய தாமான்தோன்றி மலையென்றும், அதுவே இக்காலத்துத் தான்தோன்றி மலையென மரூஉப்பெயரோடு வழங்குகின்றதென்றும் அறிஞர்கள் கருதுகின்றனர்.[2] ஆதலால், தோன்றிக்

கோன்களுள் சிறந்து விளங்கிய இவன் பெயரோடே இவனுடைய தோன்றி மலையும் தாமான் தோன்றி மலையென மறுபெயர் பெற்று வழங்கியதாய் மதிக்கலாம்.

இந்தத் தாமான் தோன்றிக்கோன் காலத்தே சோழ நாட்டை ஆண்டிருந்த குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனையே பெரிதும் மதித்து, அவனிடத்தன்றிப் பிறரிடத்துப் பரிசில்வேண்டிச் செல்லேனென்றும், அவன் முகத்தையன்றிப் பிறர்முகத்தை ஏறிட்டுப் பாரேனென்றும் உறுதி பூண்டிருந்த புலவர் ஐயூர்முடவனார், ஒருமுறை அவனைக் காணச் செல்லுமிடையே தம் வண்டிக்காளை ஒன்று தளர்ந்தொழிந்ததாக, அவ்வண்டிக்கு ஒரு மாற்றுக்காளை வேண்டிய நிலையில் இந்தத் தோன்றிக் கோனிடம் வந்தார். வந்தவர் தம் குறையைத் தெரிவிக்குமுன்னரே இவன் அதனை உணர்ந்து, காளைகள் பூட்டப்பெற்ற ஊர்தியோடே எண்ணற்ற பசுக்களையும் நல்கினானென்று அவர் பாடலொன்றால் அறிகிறோம்.

'கடுந்தேர் அள்ளற்கு அசாவா நோன்சுவல்
பகடே அத்தை யான் வேண்டிவந் தது'என
ஒன்றுயான் பெட்டா அளவை, அன்றே
ஆன்று விட்டனன் அத்தை விசுப்பின்
மீன்பூத் தன்ன உருவப் பன்னிரை
ஊர்தியொடு நல்கி யோனே; சீர்கொள
இழுமென இழிதரும் அருவி
வான்தோய் உயர்சிமைத் தோன்றிக் கோவே
(புறம்.399)

எனவரும் இப்பாடலில் இவன் வண்மையும் வளமையும் தெளிவுற விளங்குகின்றன.

617. வல்வில் ஓரி

வள்ளலெழுவருள் ஒருவனான ஓரி தனக்கமைந்த வலிய வில்லாற்றல் காரணமாக வல்வில் ஓரியென்னும் சிறப்புப்பெயர் பெற்றான். இவன் வேட்டைக்குச் சென்று யானையொன்றின்மேல் எய்த அம்பு அவ்வியானையின் உடலில் பாய்ந்து ஊடுருவிப்போய், ஒரு புலியையும் கொன்று, அடுத்தொரு கலைமானையும் தொலைத்து, பின்னொரு பன்றியையும் வீழ்த்தி, இறுதியில் ஒரு புற்றினிடத்தேயிருந்த

உடும்பின் உடலில் தைத்து நின்றது என்று இவனது அந்த வில்லாற்றலின் வன்மையை வியந்து பாடுவார் வன்பரணர் (புறம்.152).

தன்னைப் பாடியும் ஆடியும் வருகின்ற பாணரும் பொருநருமாகிய இரவலர் கூட்டம் தன்னிடம் மிக்க பரிசிலைப் பெற்றுப் போய் உண்டு பசியாராய், தத்தம் பாடலையும் ஆடலையும் மறக்குமளவு அவர்களுக்கு வரையாது வழங்கும் வண்மையமைந்தவன் இந்த வல்வில் ஓரி எனவும் அந்த வன்பரணரே பாடுகின்றார் (புறம்.153). மழைபோல் வழங்கும் வண்மையின் காரணமாக, இவனை, 'மாரி வண்மகிழ் ஓரி' (நற்.265) என்று குறிப்பிடுவார் பரணர்.

'மழவர் பெருமகன் மாவள் ஓரி' (நற்.52) என்று பாலத்தனாரால் பாடப்பெறுகின்ற இந்த வல்வில் ஓரி, கொங்கு நாட்டிலுள்ள கொல்லிமலையை ஆண்டவன். இவனை, 'கொல்லி யாண்ட வல்வில் ஓரி' (புறம்.158) என்றே குறிப்பிடுவார் பெருஞ்சித்திரனார். 'கொல்லிப் பொருநன்' (புறம்.152) என்பார் வன்பரணர். மற்றும்,

"ஓரி, பல்பழப் பலவின் பயங்கெழு கொல்லி" (அகம்.208)

"மாரி வண்மகிழ் ஓரி கொல்லி" (நற்.265)

"வல்வில் ஓரிக் கொல்லிக் குடவரை" (குறு.100).

என்றெல்லாம் பரணரும் கபிலரும் கொல்லிமலையை ஓரிக்குரியதாகக் குறிக்கின்றனர்.

இக்கொல்லிமலையை உள்ளிட்ட கொங்குநாடு முழுமையும் சேரநாட்டுப் பேரெல்லைக்குள் அடங்கியிருந்தது. ஆதலின், குறுநில மன்னனான கொல்லிப் பொருநன் வல்வில் ஓரியும், தகடூர் மன்னன் அதியமானைப் போல், பெருநில வேந்தரான சேரரின் மேலாண்மைக்குப் பணிய வேண்டியிருந்தது. ஆயினும், இவன் அவ்வதியமானோடு உடன்பட்டு, அவனைப் போலவே சேரவேந்தரின் மேலாண்மையை ஏலாது தன்னளவில் நிமிர்ந்து நின்றான் போலும். அந்நிலையில் கொங்குநாட்டிற்கு அப்பாற்பட்டிருந்தும் சேரநாட்டோடு தொடர்புற்றிருந்த மலைநாட்டை ஆண்ட மலையமான் திருமுடிக்காரி, அச்சேரவேந்தனின்

மேலாண்மைக்குக் கீழ்ப்பணிந்து ஆண்டமையால், அதுபற்றி அதியமானின் பகைமைக்கு உள்ளாகி அவனால் படையெடுக்கப்பட்டு வென்றோட்டவும் பட்டான் (புறம்.99). அவ்வாறு அதியமானிடம் தோல்வியுற்று ஓடிய மலையமான் திருமுடிக்காரி, சேரவேந்தன் பெருஞ்சேரல் இரும்பொறையிடம் சென்றடைந்தான். அதுவரை கொங்குநாடு முழுமையும் தன் பேராட்சியிலிருந்து பிரிந்து தன்னாட்சியோடு இயங்குவதைத் தகர்த்தெறியக் காலங்கருதியிருந்த சேரமான், தன்னிடத்தே காரியும் வந்தானாக அவனைத் துணையாகக் கொண்டு கொங்குநாட்டு அரசரை அடக்கி அழிக்க முனைந்தான். அம் முனைப்போடே முதலில் மலையமான் தலைமையில் தன் படையை அனுப்பி ஓரியோடே போரிடத் தூண்டினான். அதனையறிந்த ஓரி தானும் போருக்கெழுந்து காரியை எதிர்த்தான். காரியென்ற குதிரையின்மேல் ஏறிவந்த மலையமான் திருமுடிக்காரியும், ஓரியென்ற குதிரைமேல் ஏறிநின்ற கொல்லிப் பொருநன் வல்வில் ஓரியும் நேருக்குநேர் மோதிப்பொருதனர். அப்போரிலே துணைவலிமை சான்ற காரியால் ஓரி கொல்லப்பட்டு மாண்டான்.

காரிக் குதிரைக் காரியொடு மலைந்த
ஓரிக் குதிரை ஓரியும் (சிறுபாண்.110, 111)

என்று இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனாரும்,

முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி
செல்லா நல்லிசை நிறுத்த வல்வில்
ஓரிக் கொன்று சேரலர்க்கு ஈத்த
செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி (அகம்.209)

என்று கல்லாடனாரும்,

ஓரிக் கொன்ற ஒருபெருந் தெருவில்
காரி புக்க நேரார் புலம்போல்
கல்லென் றன்றால் ஊரே (நற்.320)

என்று கபிலரும், இவ்விருவர் போரையும் போர் முடிவையும் பாடியுள்ளனர். இவற்றுள் கல்லாடனார் பாடலால், ஓரியின் வீழ்ச்சியை அடுத்துக் கொல்லிமலை நாடு சேரராட்சியில் சேர்ந்ததென்பது விளங்கும்.

618. அதியமான் நெடுமானஞ்சி

இக்காலத்துத் தருமபுரியென வழங்கும் பண்டைய ஆகடூரைத் தலைநகராகக் கொண்டு குதிரைமலை உள்ளிட்ட நாட்டை ஆண்டுவந்தவர் அதியரென்ற குடியினரான அரச மரபினர். இந்த அதியர்குடி சேரர் குடியின் கிளைவழியைச் சேர்ந்தது. சேரர்க்குரிய பனம்பூ மாலையே இவருக்கும் உரிமைப்பட்டு வருதலால் இஃது உணரப்படும். அது முன்னர்க் காணப்பட்டது.

குதிரைமலையென்பது தென்கன்னட மாவட்டத்துக்கும் மைசூர் நாட்டுக்கும் எல்லையாய் நிற்கும் மலைத் தொடரில் உள்ள முடிகளுள் ஒன்று என்பார் ஔவை துரைசாமிப்பிள்ளை.[3] அஃது இக்காலத்துக் குதிரை மூக்கு மலை என்ற பெயரிலேயே கருநாடக மாநிலத்தின் உட்பட்டு அமைந்துள்ளது. கடல் மட்டத்திலிருந்து காண்போர்க்குக் குதிரைமுகம்போல் காட்சியளிப்பதால் இம்மலை குதிரைமலை, குதிரை மூக்குமலை எனப் பெயர் பெறுவதாயிற்று.

ஊராது ஏந்திய குதிரைக் கூர்வேல்
கூவிளங் கண்ணிக் கொடும்பூண் எழினி (புறம்.158)

என்று பெருஞ்சித்திரனாரும்,

நெடுநெறிக் குதிரைக் கூர்வேல் அஞ்சி (அகம்.372)

என்று பரணரும் இக்குதிரை மலையோடு தொடர்புறுத்தி அதியமானைக் குறித்துள்ளனர். எழினியென்பது அதியமானுக்கு அமைந்த குடிப்பெயராகும்.

இந்தக் குதிரைமலை உள்ளிட்ட தகடூர் நாட்டை ஆண்ட அதியமரபினரே, அரும்பெறல் மரபினையுடைய கரும்பினை அயல்நாட்டிலிருந்தும் முதன்முதலாகத் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்து பயிரிட்டு வளர்த்தனர். இதனையே விண்ணுலகத்திலிருந்து இவ்வுலகத்திற்குக் கொண்டுவந்தாராகக் குறித்துப் பாராட்டுவர் புலவர். அதியமான நெடுமானஞ்சியைப் பாடும் ஔவையார்,

அமரர்ப் பேணியும ஆவுதி அருததியும்
அரும்பெறல மரபின் கரும்பிவண் தந்தும்

நீரக இருக்கை ஆழி சூட்டிய
தொன்னிலை மரபின்நின் முன்னோர் (புறம்.99)

என்று, அவன் முன்னோர் கரும்பினைக் கொணர்ந்ததைக் குறிப்பிடுவார். அவரே அதியமான் நெடுமானஞ்சியின் மகன் பொகுட்டெழினியைக் குறிக்கையிலும்,

விருந்தினை நல்கி யோனே; அந்தரத்து
அரும்பெறல் அமிழ்தம் அன்ன
கரும்பினை தந்தோன் பெரும்பிறங் கடையே
(புறம்.392)

என, விண்ணுலகத்திலிருந்து கரும்பு கொணர்ந்தோன் வழித்தோன்றலாகவே அவனைக் காட்டுவார்.

இந்த அதியர்நாடு சேரநாட்டுப் பேரெல்லைக்கு உட்பட்ட கொங்குநாட்டில் அமைந்தது. ஆதலின் குறுநில மன்னரான இவ்வதியர் பெருநில வேந்தரான சேரரின் பேராட்சிக்கு அடங்கியாள வேண்டியிருந்தது. சேர வேந்தரின் பேராண்மையைச் சிற்றரசர் அதியர் எல்லாக் காலங்களிலும் ஏற்றுப் பணிதலின்றி ஒருசில காலங்களில் இகழ்ந்தும் நடந்தனர் போலும். அவ்வாறு இகழ்ந்த காலங்களில் அவ்விகழ்ச்சியை ஏலாத சேரர் படையெடுத்து வந்து அதியரை அடக்கியும் அழித்தும் தம் ஆண்மை செலுத்தியதை அறிகிறோம்.

அதியமான்களில் அறியப்படுமளவில் முதல்வனாக வருவோன் நெடுமிடல் அஞ்சியென்பான். களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரலின் காலத்தவனான இவன், அவனால் அழிக்கப்பட்டானாகக் காப்பியாற்றுக் காப்பியனாரால் குறிக்கப்படுகின்றான் (பதி.32).

அதியமான் நெடுமிடல் அஞ்சியையடுத்து அறிய வருபவன் நெடுமான்அஞ்சி. இவனை அந்நெடுமிடல் அஞ்சிக்குப் பின்னோனாகவும் மகனென்றும் மதிக்கலாம்.

6181. அரும்பெருங்கொடைஞன்

வள்ளலெழுவருள் ஒருவனான அதியமான் நெடுமானஞ்சி ஔவைக்கு நெல்லிக்கனி கொடுத்தது முதலான

அருமபெருங்கொடைமைப பணபினால புலவா பலா தொடுததபுகழமாலை பூணடவன. சாதலை நீககும சிறபபினையுடைய அநநெலலிககனியை அதன சிறபபினைக கூறாதே இவனால கொடுககபபெறறு உணட ஔவை. பினனா அதனை அறிநதவுடன உணாசசிமேலிடடு.

ஆரகலி நறவின அதியா கோமான!
போரடு திருவின பொலந்தார அஞசி!
பாலபுரை விறைநுதல பொலிநத செனனி
நீல மணிமிடறறு ஒருவன போல
மனனுக, பெரும! நீயே, தொனனிலைப
பெருமலை விட ரகதது அருமிசைக கொணட
சிறியிலை நெலலித தீஙகனி குறியாது,
ஆதல நினனகதது அடககி,
சாதல நீஙக எமககீத தனையே! (புறம 91)

எனறு இவனைப பாராடடி வாழததினார இநத நெலலிககனி கொடுதத கொடை ச சிறபபினைக குறிதது.

மாலவரைக
கமழபூஞ சாரல கவினிய நெலலி
அமிழதுவிளை தீஙகனி ஔவைககு ஈநத
அதிகன (சிறுபாண 99.101.103)

எனறு இடைககழிநாடடு நலலூர நததததனாரும இவனைப பாராடடிக கூறுவார, மறறும

ஒருநாள செலலலம, இருநாள செலலலம,
பலநாளபயினறு, பலரொடு செலலினும,
தலைநாள போனற விருபபினன மாதோ!
அணிபூண அணிநத யானை இயலதோ
அதியமான பரிசில பெறுஉம காலம
நீட டினும நீடடா தாயினும யானைதன
கோட டிடை வைதத கவளம போலக
கையகத தது,அது பொயயா காதே! (புறம 101)

அலததற காலை யாயினும
புரததல வலலன வாழகவன தாளே! (புறம 103)

கடவா மீதும இரபபோரககு ஈயும
மடவா மகிழதுணை நெடுமான அஞசி (புறம 315)

கடுமபகட்டு யானை நெடுமான அஞ்சி
பர நெஞ்சம ஓடிசசேண் விளங்குத
தோவீசு இருகைக போல
மாரி இரீஇ மானறனறால மழைபேய (நற 381)

ஓவாது ஈயும மாரி வணமைக
கடுமபகடடு யானை நெடுநதோ அஞ்சி (குறு 91)

எனறெலலாம வருகினற ஒளவையின பாடலடிகளுைம இவைது ஈகைப பணபினை எடுததுப பாராட ட க காணகிறோம

இததகைய ஈகைபபணபினையுைட ய இவை ரிகா பெருஞசெலவனலலன எனபதும இஙகே காணதகும

உணடாயின பதஙகொடுதது,
இலலாயின உடனுணணும
இல்லோா ஒகல தலைவன (புறம 95)

சிறியகள பெறினே எமகுகீயும; மனனே!
பெரியகள பெறினே யாமபாட்டு தானமகிழநது
உணணும, மனனே!
சிறுசோற றானும நனிபல கலததன; மனனே!
பெருஞசோற றானும நனிபல கலததன, மனனே! (புறம 235)

எனபனவறறால இவன வறியோா சுறறதது வளளலாகவே அறிய வருகினறான

இவவாறெலலாம வணமைமததிறன அமைநத இவனது வணமைப பெருவாழவான அரசியல வரலாறறை இனி அறியலாம

6182 செங்கோல் மன்னன்

அதியமானைக கொஙகுநாடடவரான மழவா எனனும வீரமர பினராகுத தலைவன எனறு ஔவையாரா குறிகினறார

ஒளிறிலஙகு நெடுவேல மழவா பெருமகன (புறம 88)
வழுவில வணகை மழவா பெரும! (புறம 90)

எனவரும அடிகள இதறகுச சானறாகினறன

இவன் சிறந்த செங்கோல் மன்னன். இவனது செங்கோல் சிறப்பினைக் குறித்து அரிசில் கிழார்,

கன்றமர் ஆயம் கானத்து அல்கவும்,
வெங்கால் வம்பலர் வேண்டுபுலத்து உறையவும்,
களமலி குப்பை காப்பில வைகவும்,
விலங்குபகை கடிந்த கலங்காச் செங்கோல்,
வையகம் புகழ்ந்த வயங்குவினை ஒள்வாள்,
பொய்ய எழினி (புறம்.230)

என்றவாறு இவனைப் பாராட்டுவார்.

61.8.3. பகைமைச் சூழல்

அதியமான் நெடுமானஞ்சியின் காலத்தே சேர நாட்டை ஆண்டிருந்தவன் பெருஞ்சேரல் இரும்பொறை; அதியமானாட்டிற்கு வடகிழக்காகிய மலையமானாட்டை ஆண்டிருந்தோன் திருமுடிக்காரி; அதியமானாட்டை ஒட்டிக கொங்கு நாட்டிலேயே கொல்லிமலையைத் தலைமையிடமாகக கொண்டு அதனைச் சூழ்ந்த நாட்டை ஆண்டு வந்தவன் வல்வில் ஓரி; தொண்டை நாட்டை ஆண்டிருந்தவன் தொண்டைமான் இளந்திரையன்.

அதியமான் தன் ஆட்சிமுறையில் பெருஞ்சேரல் இரும்பொறையின் மேலாண்மைக்கு அடங்கிப் பணியாது நிமிர்ந்து நின்றானேபோலும் கொல்லிமலையை ஆண்ட வலவில் ஓரியையும் இவன் தனனோடே உடன்படுத்திக் கொண்டிருத்தல் கூடும். ஆக, பெருஞ்சேரல் இரும்பொறையின் பேராட்சியிலிருந்து கொங்குநாடு முழுதும் தனிப்பட்டுப் பிரிந்து நின்றது. மற்றுக் கொங்குநாட்டின் கீழ் பாலான மலைநாட்டை ஆண்டிருந்த மலையமான சேரமானையே சார்ந்திருந்தான். மலையமானுக்கு அண்டையனான தொண்டைமானும் அவனுக்குத் துணைவனாய் இவனுக்குப் பகைவனானான். ஆக, அதியமான் பகைவர் பலருக்கு இலக்கப்பட்டவனாய், எல்லோர் படைகளையும் எதிர்க்க வேண்டியவனாய இருந்தான். அவ்வளவிற்கு வேண்டிய ஆற்றலும் மறனும் இவனிடத்து இயல்பிலேயே அமைந்திருந்தன.

இவ்வதியமானுடன் நடபுற்று இவனுடைய அவையக களத்திலேயே இருந்த ஔவையார் பாடலகளால், இவனை

எதிர்நோக்கியிருந்த போர்ச்சூழல்களும் அவற்றைத் தாங்கவல்ல இவனது தறுகண்மையும் நன்கு புலப்படுகின்றன.

இவன்மேல் படையெடுக்கத் துணிந்த பகைவரை நோக்கி,

> களம்புகல் ஓம்புமின். தெவ்விர்! போர்எதிர்ந்து
> எம்முளும் உளனொரு பொருநன்: வைகல்
> எண்டேர் செய்யும் தச்சன்
> திங்கள் வலித்த காலன்னோனே. (புறம்.87)

எனவும்,

> யாவி ராயினும் 'கூழை தார்கொண்டு
> யாம்பொருதும்' என்றல் ஓம்புமின்; ஓங்குதிறல்
> ஒளிறிலங்கு நெடுவேல் மழவர் பெருமகன்,
> கதிர்விடு நுண்பூண் அம்பகட்டு மார்பின்
> விழவுமேம் பட்ட நற்போர்
> முழவுத்தோள் என்னையைக் காணா வூங்கே.
> (புறம்.88)

எனவும் பாடி, இவனாற்றலை அவர்களுக்கு அறிவித்தார் ஔவையார். அறிவிக்கக் கேட்டபின்னும் இவனை இகழ்ந்து இவன்மேல் கிளர்ந்தெழுந்த பகைமறவர்களைப் பார்த்து,

> போற்றுமின் மறவீர்! சாற்றுதும் நும்மை;
> ஊர்க்குறு மாக்கள் ஆடக் கலங்கும்
> தாள்படு சின்னீர்க் களிறட்டு வீழ்க்கும்
> ஈர்ப்புடைக் கராஅத்து அன்ன என்னை
> நுண்பல் கருமம் நினையாது,
> இளையனென்று இகழின் பெறலரிது ஆடே.
> (புறம்.104)

என்று எச்சரித்தார். சேரவேந்தனே ஒருமுறை ஔவையாரைக் கண்டபோது, 'நும் நாட்டில் என்னோடு எதிர்த்துப் போரிடுவோரும் உளரோ' என்று வினவினனாக, அவனுக்கு விடை கூறுமுகத்தான்,

> 'பொருநரும் உளரோ நும் அகன்தலை நாட்டு'என
> வினவல் ஆனாப் பொருபடை வேந்தே!
> எறிதோல் அஞ்சா அரவின் அன்ன

சிறுவன் மள்ளரும் உளரே; அதூஉ அன்று
பொதுவில் தூங்கும் விசியுறு தண்ணுமை
வளிபொரு தெண்கண் கேட்பின்.
அதுபோர் என்னும் என்னையும் உளனே (புறம்.89)

எனப் பாடி, இவனாட்டு மள்ளர் மறத்தையும் இவனது மறத்திறத்தையும் மாண்புறக் கூறினார்.

61.8.4. வெற்றியாளன்

என்ன கூறியும் கேளாது இவ்வதியமானின் மேல் எழுந்து போருக்கு வந்த பகைவரை இவனும் எதிர்கொப் புறப்பட்டானாக, அப்போது ஔவையார்,

உடைவளை கடுப்ப மலர்ந்த காந்தள்
அடைமல்கு குளவியொடு கமழும் சாரல்,
மறப்புலி உடலின் மான்கணம் உளவோ? . . .
வழுவில வன்கை மழவர் பெருமஃ!
இருநில மண்கொண்டு சிலைக்குமஃ
பொருநரும் உளரோ? நீகளம் புகினே. (புறம்.90)

என்று இவனை ஊக்கியும் உரைத்தார். போர் நிகழ்ந்தது. இவனுடைய முன்னணிப் படையையும் எதிர்க்க மாட்டாத பகைமன்னர் பலரும் தோற்றோடத் தொடங்கியபோது, இவனும் இவன் படையினரும் தொடர்ந்து சென்று அவரை வளைத்துப் போரிட்டு வானுலகு அனுப்பினர். அப்போரில் இவன் விழுப்புண் பெற்று வென்றுநின்ற நிலையில் இவனைக் கண்ட ஔவையார்,

திண்பிணி முரசம் இழுமென முழங்கச்
சென்றமர் கடத்தல் யாவது? வந்தோர்,
தார்தாங் குதலும் ஆற்றார், வெடிபட்டு
ஓடல் மரீஇய பீடில் மன்னர், ...
வாளபோழ்ந்து அடக்கலும் உய்ந்தனர் மாதோ!
வரிஞிமிறு ஆர்க்கும் வாய்புகு கடாஅத்து
அண்ணல் யானை அடுகளத்து ஒழிய,
அருஞ்சமம் தகைய நூறி,நீ
பெருந்தகை விழுப்புண் பட்ட மாறே! (புறம்.93)

என்று இவனது வெற்றியையும் பகைவரின் வீழ்ச்சியையும் சிறப்பித்துப் பாடினார்.

அதியமானுக்குப் பகைவர் பலராயிருந்தமையின் இவன் சிலரையழிக்க, மற்றும் சிலர் சீறியெழுந்து இவனைச் சினப்பித்துத் தொடர்ந்து போர்புரிவாராயினர். அவ்வாறான போர் நிகழ்ச்சிகளுக்கிடையே இவனுக்குத் தவமகனான தலைமகன் பிறந்தான். அவனை முதன் முதல் காணவந்த நிலையிலும் இவன் போருக்குரிய தோற்றத்திலேயே பொலிந்ததைக் காண்கிறோம்.

கையது வேலே; காலன புனைகழல்;
மெய்யது விடரே; மிடற்றது பசும்புண்;
வட்கர் போகிய வளரிளம் போந்தை
உச்சிக் கொண்ட ஊசி வெண்தோடு
வெட்சி மாமலர் வேங்கையொடு விரைஇ,
சுரியிரும் பித்தை பொலியச் சூடி,
வரிவயம் பொருத வயக்களிறு போல,
இன்னும் மாறாது சினனே; அன்னோ!
உய்ந்தனர் அல்லர், இவனுடற்றி யோரே;
செறுவர் நோக்கிய கண்,தன்
சிறுவனை நோக்கியும் சிவப்பா னாவே. (புறம்.100)

எனவரும் ஔவை பாடலில், பகைவரைச் சினந்து நோக்கிய இவன் கண்களின் சிவப்பு, பிறந்த மகனை மகிழ்ந்து நோக்க வேண்டிய காலத்தும் மாறவில்லை என்பதனால் அந்தச் சினக்குடுமை உணரப்படும்.

இவ்வாறாக இவன் பகைமன்னர் பலரையும் வென்று அவர்தம் அரண்கள் பலவற்றையும் அழித்த வெற்றித்திரு பெற்றவன் என்பதை,

வலம்படு வாய்வாள் ஏந்தி, ஒன்னார்
களம்படக் கடந்த கழல்தொடித் தடக்கை,
ஆர்கலி நறவின் அதியர் கோமான்!
போரடு திருவின் பொலந்தார் அஞ்சி! (புறம் 91)

ஒன்னார், கடிமதில் அரண்பல கடந்த
நெடுமான் அஞ்சி! (புறம் 92)

எனவன போன்ற பாடலடிகளால் அறியலாம்

6185. மேலாண்மையன்

இவ்வதியமான் தன் வெற்றி மேம்பாடினால் பகைமன்னர் பலரிடத்தும் திறைபெற்று அவரிடத்துத் தன் மேலாண்மை செலுத்தி மீகூர்ந்திருந்தமையும் அறியப்படும் அம்முறையில் இவனுக்குத் திறை செலுத்த மறுத்து, இவனோடே போர் தொடுக்கத் துணிந்த மன்னர் சிலரைக் கண்டும் ஔவையார் அறிவுறுத்தது தல் காணலாம்.

உடன்றோர் உயதல் யாவது? 'தம் நாள்
பிணிக்கதிர் நெல்லின் செம்மல் மூதூர்
நுமக்குரித் தாகல வேண்டின், சினவி அவற்கு
இறுக்கலவேண்டும் திறையே; மறப்பினை,
ஒலவான் அலலன் வெல்போர் ஆன'னை
சொலலவும் தேற்றீர் ஆயின், மெல்லியல்
கழற்கனி வகுத்த துணைச்சில ஓதி,
குறுந்தொடி மகளிர் தோள்விடல்
இறும்பூது அன்று;அஃது அறிந்தோர் நுமினே. (புறம்.97)

எனவரும் அவ்வறிவுரையில், இவனுக்குத் திறை செலுத்த மறுத்துப் போர்தொடுக்க நினைப்போர், தத்தம் மனைவியரின் மேனிளைப் பிரிந்து மாளுதல் உறுதியென்று இவனது பெருமிதத்தைப் புலப்படுத்துதல் காணத்தகும் இதற்கேற்பவே இவன் தன்னைப் போற்றாத பகைவரைச் சினந்து, அவர் நாட்டினமேல் எடுத்துச் சென்றதொரு படையெடுப்பையும் ஔவையாரே பாடியுளளார் (புறம்98)

அவ்வாறே இவன் தன்னைப் பகைத்து வழிபடுவதைத் தானும் பகைத்துச் சென்று, அவரை அவர்களுக்குத் தெவ்வென்று தன் ஆற்றலைத் தோற்றுவித்ததோடு அருவிப்பாடல் வரையில் அடுத்துத் தனவேங்கடம் என்ற பெயரில் நின்ற மலையானை திருமுடிக்காரியினமேல் படையெடுத்துப் போய், அவனை வென்று அவனுடைய திருக்கோவலூரையும் அழித்து, பிற அரண்களையும் அழிக்கவல்ல தன் ஆழிப்படை வலிதாங்கிநின்ற தறுகண்மையையும் அறிகிறோம்

இரிபுகுல முரசின் வழுவல்படு முரணி.
சினவரைக் கடந்தடிந்த ஆற்றல் தேர்ற்றிய
அனறும் பாடுநர்க்கு அரியவ இனறும்.
பலவின் பழங்கொள் பறம்பினை மறந்தோர்

முரண்மிகு கோவலூர் நூறி,நின்
அரண்டு திகிரி ஏந்திய தோளே. (புறம்.99)

எனவரும் ஔவையாரின் இப்பாடலடிகளால், இவன் ஏழரசரை வென்ற வெற்றி, புலவரெவராலும் பாடுதற்கரிய முறையில் அமைந்திருந்ததென்பதும், இவன் கோவலூரை அழித்துத் திகிரியேந்திய கொற்றம் பரணரால் மட்டுமே பாடக்கூடிய அருமையமைந்த தென்பதும் அறியவருகின்றன.

61.8.6 பகைவர் கூட்டணி

இவவதியமானிடத்துத் தோல்வியுற்ற மலையமான் தன் தலைநகரான திருக்கோவலூரையும் இவன் அழித்தமை கண்டு ஆற்றானாய் ஓடிச் சேரமானிடத்தே சேர்ந்தான். அந்நிலையில் சேரமானுக்கு இவனேயன்றிக் கொல்லி மலை ஓரியும் அடங்காதிருந்தமையால், இவ்விரு கூட்டாளிகளையும் அழிப்பதற்கு இதுவே தக்க தருணம் எனக் கருதிய சேரமான், முதலில் மலையமானின் தலைமையில் தன் படையை அனுப்பி, அவனால் ஓரியைக் கொலவித்து, அவனாடசியில் இருந்த கொல்லி மலையைத் தன் ஆட்சியின் கீழ்ப்படுத்திக் கொண்டான் (அகம்.209; நற்.320). கொண்டபின், தானே முன்னின்று அதியமானின் தகடூர்மேல் படையெடுக்கத் துணிந்தான். அதற்கிடையில தொண்டைமானும அதியமானின்மேல் படையெடுக்கக கருதினனாக, அதனையறிந்த அதியமான் சூழ்நிலையை உணர்ந்து, அத தொண்டைமானிடத்து ஔவையாரைத் தூதுவிட்டான் தூதுசென்ற ஔவைக்குத் தொண்டைமான் தன் படைக்கலக கொட்டிலைக காட்டித் தருக்கினனாக, அவனது தருககினை அடக்கக் கருதிய ஔவை.

இவவே, பீலி யணிந்து, மாலை சூட்டி,
கண்திரள் நோன்காழ் திருத்தி, நெய்யணிந்து,
கடியுடை வியனக ரவ்வே; அவவே,
பகைவர்க குததி, கோடுநுதி சிதைந்து,
கொற்றுறைக குற்றில மாதோ! என்றும்
உண்டாயின் பதங்கொடுத்து,
இல்லாயின் உடனுண்ணும்
இலவோர் ஒககல் தலைவன்,
அண்ணலஎம் கோமான் வைந்நுதி வேலே (புறம 95)

என்று, அவன் படைக்கலங்களைப் புகழ்வார்போல் பழித்தும், அதியமான் படைகளைப் பழிப்பார்போல் புகழ்ந்தும் பேசிவந்தார். அவர் பேச்சினால் தொண்டைமான் அதியமான்மேல் படையெடுக்கும் துணிவை ஒழிந்து அடங்கினான்.

61.8.7. போரும் வீழ்ச்சியும்

அதியமான் தகடூர்மேல் சேரமான் படையெடுக்கத் தொடங்கிய நிலையில், அச்சேரமானைத் தடுத்து அமைதிப் படுத்தும் முறையில பாடப்பட்டதாகத் தகடூர் யாத்திரையில் ஒரு பாடல் காணப்படுகிறது

> கால வெகுளிப் பொறையகேள்! நும்பியைச்
> சாலுந் துணையும் கழறிச் சிறியதோர்
> கோல்கொண்டு மேற்சேறல் வேண்டா; அதுகண்டாய்
> நூல்கண்டார் கண்ட நெறி (தகடூர்.6)

எனவரும் இப்பாடலில் சேரமானுக்கு அதியமான் தம்பி முறையினன் என்பதை நினைவுறுத்திச் சான்றோர் அமைதிப்படுத்தவும் அடங்கானாய், அச்சேரமான் படையை முடுகி முனைந்தான்.

சேரமானின் படையெடுப்பை அறிந்து சோழ பாண்டியராகிய இருபெரு வேந்தரும் படைகளோடே வந்து அதியமானுக்குத் துணையாகிச் சேரமானை எதிர்த்தனர். முதலில போர் சேரமானுக்குரிய கொல்லிக் கூற்றத்திலேயே நீளவளம் மிக்கதோர் மலைமேல் நிகழ்ந்தது. எனவே, அதியமான சேரமானின் படையெடுப்பினை முன்னமே அறிந்து, சோழ பாண்டியர் துணையோடு தானே முந்திச சென்று, அவனாட்டிலேயே அவன் படையை எதிர்த்தனனென்று எண்ணலாம்.

ஆயினும், சேரமான் மலையமான் ஆகியோருடைய திரண்ட பெருந்தாக்குதலுக்கு அதியமான் மற்றும் சோழ பாண்டியரின் படைகளால் எதிர்நிற்க இயலவில்லை. அதியமானோடு இருபெருவேந்தரையும் ஒருங்கே வென்ற சேரமான், இம்மூவருடையை முரசு, குடை, முடி ஆகியவற்றைக் கைப்பற்றிக கொண்டு, தொடர்ந்து வந்து தகடூரைத்

தாக்கினான். தன் அரணைக் காத்தற்குக் கடும்போர் புரிந்த அதியமானின் வலிமையைச் சேரமான் அழித்து, இவனுரிமை மகளிர் இரங்குமாறு இவனைக் கொன்று. முடிவில் இவனுடைய அரணையும் தகர்த்தெறிந்து களவேள்வி செய்தான்.

கொல்லிக கூற்றத்து நீர்கூர் மீமிசைப்
பல்வேல் தானை அதிக மானோடு
இருபெரு வேந்தரையும் உடனிலை வென்று,
முரசும் குடையும் கலனும் கொண்டு,
உரைசால் சிறப்பின் அடுகளம் வேட்டு,
துகள்தீர் மகளிர் இரங்கத் துப்பறுத்து,
தகடூர் எறிந்து, நொச்சிதந்து எய்திய
அருந்திறல் ஒள்ளிசைப் பெருஞ்சேரல் இரும்பொறை
(பதி.பதி.8)

என்று பதிற்றுப்பத்திலே அச்சேரமானைக் குறித்த பதிகம் இப்போர் நிகழ்ச்சிகளைப் புனைந்துரைக்கின்றது.

இனி, சேரமான் படையெடுத்துவந்த நிலையில், அதியமான் அவனை எதிர்க்காமலே அரணை அடைத்துக் கொண்டு உள்ளிருந்தானென்றும் ஒருசார் உணரப்படுகின்றது.

"ஒருவன் மேற்சென்றுழி ஒருவன் எதிர்செல்லாது
தன் மதிற்புறத்து வருந்துணையும் இருப்பின் அஃது
உழிஞையின் அடங்கும். அது, சேரமான் செல்வுழித
தகடூரிடை அதியமான் இருந்ததாம்"
(தொல்.பொருள்.நூ.62 நச்சி.உரை)

என்று தொல்காப்பியத்திற்கு அமைந்த நச்சினார்க்கினியரின் உரை கொண்டு இஃது உணரப்படும். 'தகடூர் எறிந்து நொச்சிதந்து எய்திய, பெருஞ்சேரல் இரும்பொறை' என்ற பதிகத்தடிகள் இதற்கு ஆதாரமாகும்.

மடவர் மகிழ்துணை நெடுமான் அஞ்சி
இல்லிறைச் சொரிஇய ஞெலிகோல் போலத்
தோன்றாது இருக்கவும் வல்லன்: மற்றதன்
கான்றுபடு கனையெரி போலத்
தோன்றவும் வல்லன்,தான் தோன்றும் காலே.
(புறம்.315)

எனவரும் ஔவையார் பாடலும் இக்கருத்திற்கு ஏற்புடையதாகின்றது. ஆயினும், இதில் ஔவையார் கூறியபடியே அதியமான் வெளிப்படவேண்டிய பொழுதில் வெளிப்படும் பொருதான். அவ்வாறு பொருத போதுதான் அவன் தன் மார்பிடை வேலபாயப் பெற்று மாண்டானென்று அறிகிறோம்.

அஞ்சொல்நுண் தேர்ச்சிப புலவர் நாவில்
சென்றுவீழ்ந் தன்றுஅவன்
அருநிறத்து இயங்கிய வேலே (புறம.235)

என்ற ஔவையாரின் இரகசப் பாடலால் இது புலனாம்.

அதியமான் மாண்டமையால் அவனாடு அடைந்த அவல நிலையை மேலே குறித்த அரிசில கிழார் பாடல தெளிவுற அறிவிக்கின்றது.

வையகம் புகழ்ந்த வயங்குவினை ஒள்வாள்
பொய்யா எழினி பொருதுகளம் சேர,
ஈன்றோள நீத்த குழவி போலத்
தன்னமர் சுற்றம் தலைத்தலை இனைய,
கடும்பசி கலக்கிய இடும்பைகூர் நெஞ்சமொடு
நோயுழந்து வைகிய உலகு (புறம.230)

என்று அதனை அறியலாம் இவன் இறந்தபின் புரவலா இன்மையால இரவலர் பலரும் இவனோடே மாண்டனர். இதனை ஔவையார், 'இனிப் பாடுநரும் இல்லை; பாடுநர்க்கு ஒன்று ஈகுநரும்இல்லை' (புறம.235) எனறு இரங்கிப் பாடுவதனால் உணரலாம். 'அதியமான் பின்றை, வளஞுயிர் மாக்கிணை கண்ணவிந்தாங்கு' (அகம.325) என்ற மாமூலனாரின் அகப்பாடலடிகளும், இவனிறபபுகுப் பின் பொருநருடைய கிணைகளெலலாம இசைகசப் பெறாமல் கண் அவிந்தன என்பதைக காட்டுகின்றன.

619 அதியமான் பொகுட்டெழினி

அதியமான நெடுமானஞ்சிகுப பின் அவன் மகன பொகுட்டெழினி அரசனானான். நெடுமானஞசியைக் கொனறு அவனுடைய தகடூரை அழிதத சேரமான, அவற்றைத் தொடர்ந்து தன் மேலாண்மையைய மட டும நிலை நிறுதததிக

கொண்டு அதியமானாட்டைப் பொகுட்டெழினிக்கே அளித்துவிட்டுப் போயினன் போலும்.

அதியமான் பொகுட்டெழினியின் அரசியல் வரலாறாக அறியவருவன சிலவே. நெடுமானஞ்சியைப் பாடிய ஔவையாரே இவனையும் பாடியுள்ள மூன்று பாடல்களால் இவன் செய்திகள் அறியவருகின்றன.

இவன் தன் தந்தையின் ஆட்சிக்காலத்தில் தான் இளவரசனாய் இருக்கையிலேயே அரசியலில் பெரும் பங்குபெற்று ஆள்வினை புரிந்திருந்தான். நிறைந்த பண்டங்கள் ஏற்றப்பட்ட வண்டி, மேடு பள்ளங்களில் செலலும்போது அச்சு முறியுமாயின் துணையாவதற்கு உமணர் அவ்வண்டியின் கீழே கட்டிவைத்த சேமஅச்சைப் போன்று, அதியமான் நெடுமானஞ்சியின ஆட்சிகீழ் இவன் இளவரசனாய் இருநத நிலைமையைப பாடுவார் ஔவையார் (புறம்.102).

இப்பொகுடடெழினி தன் தந்தையின் ஆட்சிக காலத்திலேயே தானும் பகைவர் நாடுகளின்மேல் படையெடுத்துப் போய்ப் பலபோர்களைப புரிந்தான். அவ்வாறு இவன் படையெடுத்துச் சென்று தங்குகின்ற ஊரிலே இவனுடைய படையால் எழுகினற ஆரவாரத்தால் அவ்வூரினர் அங்கே உறைதலை வெறுப்பர் என்ற முறையில, இவன் போர்நிகழ்ச்சிகள் முதலில புலபபடுததபபடுகின்றன (புறம்.96)

பின்னர் அரசனான நிலையில் இவன் செய்த போர் நிகழ்ச்சிகளை ஔவையார் கிணைப்பொருநன் கூற்றிலே அமைத்துப் பாடியுள்ளார். பகை மன்னருடைய அரிய அரண்களை வென்று, போர்களனந்தோறும் பகைமறவர்களின் குருதி பாயந்த பெரும்பாட்டு ஈரததிலே கழுதையீர் பூட்டி உழுது, வெள்ளை வரகும் கொள்ளும் விதைக்கின்ற உழவனாக இவனை அப்பாடலில் உருவகித்துப் பாடும் அவர். இவனது ஈகைப் பண்பினையும் எடுத்துச் சிறப்பிப்பார் (புறம்.392).

6110. மலையமான் திருமுடிக்காரி

தென்பெண்ணையாற்றங்கரையிலுள்ள திருகோவலூரைத் தலைநகராகக் கொண்டு, அதனைச

சூழ்ந்த மலையநாட்டை ஆண்டிருந்த அரசமரபினர் மலையமான்களாவர்.

மலையநாடு இயற்கையமைப்போடு ஒட்டி மலைநாடான சேரநாட்டுப் பேரெல்லைக்கு உட்பட்டதென்பதும், மலையமான்கள் சேரவேந்தரின் குடிவழியைச் சேர்ந்தவர்களென்பதும் முன்னர்க் காணப்பட்டன அம்முறையில் மலையமான்களைச் சேரவேந்தருடைய பேராட்சிக்குள் அடங்கிய குறுநில மன்னரென்றே கொள்ளலாம்.

ஆயினும் சேரநாட்டுத் தலைநகரிலிருந்து மிகவும் எட்டியதாய் அந்நாடடு எல்லைப்புறத்தே இருந்தமையால், இம்மலையநாடு அவ்வக்காலத்து ஆட்சியாளர்களின் வன்மை மென்மைகளேற்ப சேரநாடடோடோ சோழநாட்டோடோ சேர்ந்தும் ஆட்சி மாற்றம் அடைய நேர்ந்தது. ஆதலால், இம்மலையமான்களும் ஒருநிலையின்றிச் சேரவேந்தர்க்கும் சோழவேந்தர்க்கும் அவ்வவ் வன்மைக்கேற்ப அவ்வக்காலங்களில் அடங்கியாண்டனர் எனவும் அறியலாம்.

இந்த மலையமான்களுள் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்தவனாக அறியவருபவன் மலையமான் திருமுடிக்காரி. இவன் கடைச்சங்க காலத்து வளனலெழுவருள் ஒருவன். இவன் பெயர் காரியென்றும் மலையனென்றும் தேர்வண் மலையனென்றும் காணப்பெறுகின்றது.

கோவற்கோமான் (அகம்.35) ஆகிய இம்மலையமான் திருமுடிக்காரி முள்ளூரென்ற மலைமேலிருக்கும் மன்னனென்ற முறையில், 'முள்ளூர் மன்னன்' (அகம்.209. நற.291) எனவும், 'முள்ளூர்ப் பொருநன்' (புறம்.126) எனவும் மொழியப் பெறுவான். இம்முள்ளூர் பெண்ணையாற்றின் தென்மேற்கேயும் செங்கண்மா என்ற செங்கம் நகருக்குத் தெற்கேயும் உள்ளதென்பர் ஔவை துரைசாமிப்பிள்ளை (புறம்.121 உரை).

இம்முள்ளூரேயன்றிப் பெண்ணையாற்றங்கரையை ஒட்டி இவனுக்குரியதாகப் பாடப்பெற்ற கொடுங்கால் (அகம்.35) என்னும் ஊர் இக்காலத்தும் அப்பெயரோடே இலங்குகின்றது.

61101. போர்த்திறன்

ஒருமுறை ஆரியமன்னர் பலர் தம்முள் ஒன்றுகூடிப் படையெடுத்து வந்து இம்முள்ளூரை முற்றுகையிட்டு வாளேந்தி நின்றபோது, இதன்கண் இருந்த மலையன் தானொருவனே வேலேந்திப் போர் புரிந்தானாக, அம்மன்னர் பலரும் இவனொருவன் எறிந்த வேல் வீச்சுக்கே ஆற்றாமல புறங்காட்டி ஓடினர்.

ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்ப்
பலருடன் கழித்த ஒள்வாள் மலையனது
ஒருவேற்கு ஓடி யாங்கு (நற்.170)

எனவரும் நற்றிணைப் பாடலால் இதனை நன்கறியலாம்

இங்ஙனம் போராற்றல் மிக்க இம்மலையமான் திருமுடிக்காரியை அக்காலத்து மூவேந்தரும் தத்தமக்குப் படைத்துணை வேண்டித் தனித்தனியே அமைச்சரை ஏவ, அவரெல்லாம் இவனிடத்து வந்து பொருள்தந்து புகழ்ந்து நின்றனராகக் காண்கிறோம்.

வீயாத் திருவின விறல்கெழு தானை
மூவருள் ஒருவன் துப்பா கியரென
ஏத்தினர் தரூஉம் கூழே (புறம்.122)

என்று இதனை எடுத்துப் பாடுவார் கபிலர். இம்முறையே ஒரு காலத்தில் சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறைக்கும் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளிக்கும் இடையே போர் மூண்டபோது, தேர்வண்மலையனாகிய இத்திருமுடிக்காரி சோழனுக்குப் படைத்துணையாகி அவனை வெற்றி வேந்தனாக்கினான். இவனால் வெற்றிபெற்ற அச்சோழன் அந்நன்றியுணர்வோடு, இவனே தன்னை வெல்வித்தோன் என்று மகிழ்ந்துபேச, இவனால் தோல்வியுற்ற அச்சேரனும் ஆற்றாமையோடு, இவனல்லாதிருந்தால் தான் சோழனுடைய நற்போரை வெல்லுதல் எளிதாய் இருந்திருக்குமேயென்று ஏங்கிப் பேசினானென்பதை அறிகிறோம்.

குன்றத் தன்ன களிறு பெயரக்
கடந்தட்டு வென்றோனும் நிற்கூறும்மே

வெலீஇயோன் இவனெனெ;
கழலணிப் பொலிந்த சேவடி நிலங்கவர்பு
விரைந்துவந்து சமந்தாங்கிய
வல்வேல் மலையன் அல்லன் ஆயின்
நல்லமர் கடத்தல் எளிதுமன் நமக்கெனத்
தோற்றோன் தானும் நிற்கு றும்மே
தொலைஇயோன் இவனெனெ;
ஒருநீ ஆயினை பெரும. பெருமழைக்கு
இருக்கை சான்ற வுயர்மலைத்
திருத்தகு சேஎய்நிற பெற்றிசி னோர்க்கே. (புறம.125)

என்று, இது குறித்து இவன் வடமவண்ணக்கண பெருஞ்சாத்தனாரால் பாராட்டப்பெறுதல காணலாம் ஆதலால், இவன் தன்னை நண்பனாகவும் பகைவனாகவும் கொள்வோருடைய வெற்றி தோல்விகளை முடிவுபடுத்தும் ஒருவனாய் விளங்கினமை உணரப்படும்

6.1.10.2. தோற்றோடி வென்றோன்

இவவாறு பெருவேந்தர்களுக்குப் பலை த்துணைபோய் அவர்களை வெறறிவேந்தராக்கிய இம்மலையமான், தனகு அணமையில இருந்த தகடூர்நாட்டை ஆண்டுவந்த அதியமானின் பகைமைக்கும் படை யெடுப்புக்கும் ஆறற மாட்டாதவனாயினான் என்பதையும் அறிகிறோம். முதலில் மாந்தரஞ்சேரலின் ஆட்சிக்காலத்தில் அவனுகெதிரா யச் சோழன் பெருநற்கிள்ளிக்குத் துணை போன மலையமான், அம்மாந்தரஞ்சேரலுக்குப் பின் பெருஞ்சேரல் இரும்பொறையின் காலத்தில் அவனோடு இணங்கி, அவனது பேரரா யிரின் கீழ அடங்கி நடந்தான் அபபோது சேரமான் பேரரா யிரில அடங்காது அச்சேரநாட்டுப் பகுதியான கொங்குநாட்டுத் தகடூரைத் தனியாட்சி நடத்திவந்த அதியமான் இம்மலையமானின் மாற்றங்கண்டு மனங்கொதித்திருத்தல் கூடும். ஆதலால் அககொதிப்போடே அவன் இவன்மேல படையெடுத்துவந்து இவனை வென்று இவனுடைய திருக்கோவலூரையும் அழித்தான் (புறம 99) அவ்வாறு அதியமானிடத்துத் தோலவியுறற இம்மலையமான் தன் தலைநகரான திருக்கோவலூருக்கும் அவனால அழிவுறறதுகண்டு ஆறறாமையா ஓடிச் சேரமானிடத்தே சேர்ந்தான அந்நிலையில அசசேரமானுக்குத் தகடூர் மன்னன்

அதியமானேயன்றிக் கொல்லிப் பொருநன் வல்வில் ஓரியும் அடங்கா திருந்தமையால், அவ்விரு கூட்டாளிகளையும் அழித்துத் தன் பேரெல்லைக்கு உட்பட்ட கொங்கு நாட்டுப் பேரரசு சிலை மீளப்பெறுதற்கு இதுவே தக்க தருணமெனக் கருதி, மலையமானின் தலைமையில் தன் படையை ஓரியின் மேல் போருக்கு விடுத்தானாக, இவன் சென்று ஓரியைக் கொன்று அவனாட்சியில் இருந்த கொல்லிமலையைச் சேரமானுடைய பேராட்சியில் சேர்த்தான்.

செவ்வேல், முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி
செல்லா நலவிசை நிறுத்த வலவில்
ஓரிக் கொன்று சேரலர்கு ஈத்த
செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி (அகம்.209)

எனவரும் கலலாடனாரின் அகப்பாடலால் இதனை அறியலாம். இப்போரில் இவன் தன பெயரையே இட்டு வழங்கிய காரியென்னும் தன்னுடைய குதிரையிலேறி, ஓரியென்னும் பெயரமைந்த குதிரையின்மேல் வந்த ஓரியொடு போரிட்டுக் கொன்றானென்று காண்கிறோம்.

காரி பூண்ந்து பேரமர்க் கடந்த
மாரி யீகை மறப்போர் மலையன் (புறம்.158)

காரிக் குதிரைக் காரியொடு மலைந்த
ஓரிக் குதிரை ஓரி (சிறு. 110, 111)

என்பனவற்றால் இது விளங்கும். இவ்வாறு இவன் ஓரியைக் கொன்ற வெற்றிக்களிப்பில் தன் படையோடே அவனுடைத் தெருக்களில் வலம் சென்றானாக, அவ்வோரியின் தேசத்து அன்புடைய ஊரார் பலரும் இவனையெதிர்த்துப் போரிக் கொதித்தனரென்றும் கூறப்படுகின்றது.

பழவிறல் ஓரிக் கொன்ற ஒருபெருந் தெருவில்
காரி எக்க நேரார் புலம்போல
கல்லென் றனறால் ஊரே (நற்.320)

என்று, இவனிடத்துப் பற்றுடைய காலிலரே இவன் ஓரியைக் கொன்று பெற்ற பழியை எடுத்துப் பாடுவதாகப்படும்.

இவ்வாறு இமயமலையமான் திருமுடிக்காரி ஓரியைக்கொன்று அவனாட்சியிலிருந்த கொல்லிமலையைச

சேரனுக்கு அளித்தபின், அச்சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை இவனுடன் முன்னின்று படையெடுத்துப் போய்த் தகடூரை முற்றுகையிட்டுத் தாக்கியழித்து அதியமானையும் கொன்று அவனால் இவனுக்கிருந்த பகையச்சம் தீர்த்தானாக, இவன் திருக்கோவலூர் மீண்டு தன்னரசடைந்தான் என்று அறியலாம். இதற்குப்பின் இவன் வரலாறு ஏதும் அறியப்படுமாறில்லை.

61.11. மலையமான் சோழியவேனாதி திருக்கண்ணன்

மலையமான் திருமுடிக்காரியின் மகனென்று அறியவருபவன் மலையமான் திருக்கண்ணன். காரியைப் பாடிய மாறோக்கத்து நப்பசலையார் (புறம்.126) தாமே இத்திருக்கண்ணனைப பாடுங்கால்,

> விடர்புலி பொறித்த கோட்டைச் சுடர்ப்பூண்
> சுரும்பார் கண்ணிப் பெரும்பெயர் நும்முன்
> ஈண்டுச்செய் நல்வினை ஆண்டுச்சென்று உணீஇயர்
> உயர்ந்தோர் உலகத்துப் பெயர்ந்தனன் ஆகலின்
> ஆறுகொல் மருங்கின் மாதிரம் துழவும்
> கவலை நெஞ்சத்து அவலம் தீர
> நீதோன் றினையே நிரைத்தார் அண்ணல் (புறம்.174)

என்று, இவன் தந்தைக்குப் பின்னர்த் தான் அரசுப் பொறுப்பேற்றதை குறிப்பதுகொண்டு, இவன் தந்தை காரியேயெனபது கருதப்படும். விடர்ப்புலி பொறித்த கோட்டையையுடையவன் என்றதனால், இவன் தந்தை சோழனொடு தொடர்புற்று அவனுக்குத் துணையானவனென்பது தோன்றி நின்றது என்பார் பழையவுரையாசிரியர். எனவே, சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறையும் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற் கிளளியும் பொருதபோது, சோழனுக்குத் துணையாகிய தேர்வண் மலையனென்ற திருமுடிக்காரியே இசுகுறிபபினுக்குரிய இவன் தந்தையென்று கொள்ளுதல் கூடும். அன்றியும், 'பெரும் புகழுமைந்த நும் தந்தை இவ்வுலகத்துச் செய்த நல்லறததின் பயனை மேலுலகத்தே நுகரவேண்டிப் போனான்' என்ற குறிப்பும், இம்மலையமான் திருக்கண்ணன் முன்னோருள் பெருங்கொடையாளனும் கபிலர் முதலிய பெரும்புலவர்களால் புகழப்பெற்ற பெரும்புகழாளனுமான

காரியைக் கருதியதே ஆகும். ஆகவே, அத்திருமுடிக்காரியின் மகனே இத்திருக்கண்ணன் என்பது தெளிவாம்.

இனி, இம்மலையமான் திருக்கண்ணனும் தன் தந்தையைப் போன்றே சோழ வேந்தனொடு தொடர்புற்று அவனுக்குப் படைத்துணையான வரலாற்றைப் பார்க்கலாம். 'பெருவெற்றியமைந்த வளவன் ஒருகால் பகைவேந்தரொடு பொருது தோற்றுப்போய், கபிலரால் பாடப்பெற்ற முள்ளூர் மலையுச்சியிலே பிறரால் காண்பதற்கரியதோர் இடத்தில் ஒளிந்திருந்தானாக, வேந்தனை இழந்துழலும் சோழ நாட்டின் அல்லல் தீருமாறு அவ்வளவனது வெண்கொற்றக் குடையை வெளிப்படுத்தி, அவனாட்சியைப் புதுமையுற நிலைநிறுத்திய புகழ்மேம்பாட்டாளன்' என்று இவனைப் புகழ்ந்து பாடுவார் மாறோக்கத்து நப்பசலையார்.

அரசிழந் திருந்த அல்லற் காலை
முரசெழுந்து இரங்கும் முற்றமொடு கரைபொருது
இரங்குபுனல் நொிதரு மிகுபெருங் காவிரி
மல்லல் நன்னாட்டு அல்லல் தீர,
பொய்யா நாவின் கபிலன் பாடிய
மையணி நெடுவரை ஆங்கண் ஓய்யெனச்
செருப்புகல் மறவர் செல்புறங் கண்ட
எள்ளறு சிறப்பின் முள்ளூர் மீமிசை
அருவழி யிருந்த பெருவிறல் வளவன்
மதிமருள் வெண்குடை காட்டி அக்குடை
புதுமையின் நிறுத்த புகழ்மேம் படுந (புறம்.174)

என்று அவர் பாடல் அமைகின்றது. இதில் குறிப்பிடப்பெறுகின்ற வளவன், குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனே எனவும், அவன்தான் ஆட்சிப் பொறுப்பேற்றபோது தாயத்தார் ஒன்பதின்மரின் பொறாமைச் செயல்களைப் பொறுக்க மாட்டாமல் அவரறியாதே துணைவலிமை வேண்டி இவனிடம் வந்து இவன்துணை பெற்றுப் பின்னும் இவனது பாதுகாவலிலேயே இவனுடைய முள்ளூர் மலையுச்சியில் மறைந்திருந்து, தன் மாமனான சேரன் செங்குட்டுவனுக்கு ஆட்போக்கி அறிவித்தான் எனவும், அச்செங்குட்டுவன் படை நடத்தி வருமளவில் இம்மலையமான் திருக்கண்ணன் அக்கிள்ளி வளவனை வெளிப்படுத்திக் கொண்டு தன் படையோடே புறப்பட்டுப்போய் அச்சேரன் படையுடன் சேர்ந்து

நேரிவாயிற் போரில் கிள்ளிமின் தாயப்பகைவரைக் கிள்ளியெறிந்து அவனாட்சியை நிலைநிறுத்திப் புகழப்பெற்றான் எனவும் இவ்வரலாற்றை முன்னர் அக்கிள்ளி வளவன் வரலாற்றோடும் கண்டோம். 'ஞாயிற்றை அவுணர்கள் கொண்டுபோய் மறைத்தார்களாக, அதனைக் காணாமையால் இருளால் மூடப்பட்ட உலகத்து நோய்கொண்ட துன்பம் நீங்கும்படி, மிக்க வலிமையுடைய கண்ணன் அஞ்ஞாயிற்றைக் கொண்டு வந்து உலகிருள் நீங்க வானத்திலே நிறுத்தினாற்போல் இம்மலையமான் திருக்கண்ணன் கிள்ளி வளவனை வெளிப்படுத்தி அவனாட்சியை நிலை நிறுத்தினான்' என்ற முறையில்,

அணங்குடை அவுணர் கணங்கொண்டு ஒளித்தெனச்
சேண்விளங்கு சிறப்பின் ஞாயிறு காணாது
இருள்கண் கெடுத்த பருதி ஞாலத்து
இடும்பைகொள் பருவரல் தீரக் கடுந்திறல
அஞ்சன வுருவன் தந்து நிறுத்தாங்கு (புறம்.174)

எனக் கூறப்படும் உவமையினால் இவன் செய்த இச்செயலின் அருமை அறியப்படும்.

இவ்வாறு கிள்ளி வளவனின் ஆட்சியை நிலைநிறுத்திப் பின்னும் அசோழனிடத்துப் படைத்தலைமையேற்று, அவனுக்கு வெற்றிகள் பலவற்றை விளைத்துக் கொடுத்தமையால் இவன், 'சோழிய ஏனாதி' என்ற சிறப்புப் பட்டத்தையும் அவ்வேந்தனால் அளிக்கப்பெற்று, அம்முறையே 'மலையமான சோழியவேனாதி திருக்கண்ணன்' என்று அழைக்கப்பெற்றான். அன்றியும், திருக்கண்ணன் என்ற தன் இயற்பெயருமின்றி அக்கிள்ளியின் பெயரையே தானும் பெற்று, 'மலையமான் சோழியவேனாதி திருக்கிள்ளி' (புறம்.174 அடிக்குறிப்பு) என்றும் இவன் விளங்கமுற்றதைக் காண்கிறோம். இப்பெயரே சுருங்கி, 'ஏனாதி திருக்கிள்ளி' எனவும் வழங்கியது. 'ஏனாதி திருக்கிள்ளியைக் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார் பாடியது' (புறம்.167) எனற குறிப்போடு புறநானூற்றிலேயே மற்றொரு பாடலும் வருகிறது. அதில் அப்புலவரால் இவனது மறமாண்பு நயமுற நவிலப்படுகின்றது. இவன் போரைக்காணின் அதனை வென்று அப்பகைவரது பலை யை விலக்கி எதிர் நிற்றலால வாளைத்த வடுக்கள் அழுந்திய

உம்பு னே தன்னைக் குறித்துக் கேட்கும் செவிக்கு இனியவனாகவும், காணும் கண்ணுக்கு இன்னாதவனாகவும் இருந்தான்; மறறு, இவன் பகைவரோ இவனைக் காணின் புறங்காட்டி ஓடிப்போவதால புண்ணறியாத உடம்பாகிய வடிவு னே தம்மைக்காணும் கண்ணுக்கு இனியராயும், கேட்கும் செவிக்கு இன்னாதவராயும் இருந்தனர். இவ்வாறு இவனும் இவன் பகைவரும் முறையே ஒவ்வொன்றில் இனியராய ஒத்திருந்தும் உலகம் இவனையே வியந்ததென்று இவனைப் பற்றிய அப்பாடலால் அறியலாம்.

6.1.2. மல்லிகிழான் காரியாதி

சேரநாட்டின் உட்பட்ட சிறுநாடுகளுள் ஒன்று குடநாடு அது சேர வேந்தரின் பேராட்சியிலேயே அடங்கியிருந்தது.

விசிபிணி முழவின் குட்டுவன் காப்ப,
பசியென அறியாப் பணைபயில் இருக்கை,
தடமருப்பு எருமை தாமரை முனையின்
முடமுதிர் பலவின் கொழுநிழல் வதியும்
குடநாடு (அகம்.91)

என்று குட்டுவனாகிய சேரவேந்தனே அக்குடநாட்டின் பெருங்காவல் மேற்கொண்டிருந்ததைப் பேசுவார் மாமூலனார்.

இவ்வாறு சேரவேந்தரின் பேராட்சியிலேயே அடங்கியிருந்த குடநாட்டை அவரது மேலாண்மைக்குக் கீழ்ப்பணிந்த குறுநில மன்னர் சிலரும் அவ்வக் காலங்களில் ஆண்டிருந்ததை அறிகிறோம். அம் முறையில் அக்குடநாட்டு மன்னராக அறியவருவோருள் ஒருவனே மல்லிகிழான காரியாதி. இவனையும் இவனுடைய குடநாட்டையும் குறித்து, 'பெரும்பெயர் ஆதி பிணங்கரில் குடநாடு' (புறம்.177) என்று பாடியுள்ளார் ஆவூர் மூலங்கிழார்.

'மல்லிகிழான் காரியாதி' எனறு காணப்படுகின்ற இவன் பெயர்த் தொடரினால், மல்லியென்பதே இவனூரென்று உணரப்படும். இவன், திங்களும் நுழையவியலாத எந்திரப் பொறிகள் அமைந்த அரண்கள் பலவறறை உடையவனாய் இருந்தானென்றும், அவ்வரண்களிலே மறவர் பலரை

அமர்த்திக் காவல் புரிவித்திருந்தானென்றும், மேற்கண்ட ஆவூர் மூலங்கிழாரின் பாடலால் அறிகிறோம். அப்பாடலில் இருந்து இவன் ஈகைப்பண்பும் விளங்குகின்றது.

6.113. ஏறைக்கோன்

'பெருங்கல் நாடு' எனக் குறிக்கப்பெறுகின்ற மலைநாட்டை ஆண்ட குறவர் பெருமகனாக அறியவருபவன் ஏறைக்கோன். இவன் காந்தளங்கண்ணி சூடுபவன். தன்னைச் சார்ந்தோர் பிழை செய்தால் அதனைப் பொறுத்தலும், பிறருடைய வறுமையைக் கண்டு தான் நாணுதலும், படையிடத்திலே பிறரால் பழிக்கப்படாத வலிமை உடையவனாதலும், அரசவையிலே மேம்பட்டு நடத்தலும், ஆகிய அரசியல் பண்புகளால் தக்கோனென்று இவன் தன்குலத்துப் பெண் புலவரான குறமகள் இளவெயினியாரால் பாராட்டிப் பாடப் பெறுகின்றான் (புறம்.157).

உயர்ந்த மலைவளமும் சிறந்த வனவளமும் சான்ற இவனது பெருங்கல்நாடு எதுவெனத் தெரிந்திலது. ஆயினும், 'வேந்துடை அவையத்து ஓங்குபு நடத்தல்' என்ற பண்புக்குரியோனாய் இவன் பாடப்பெறுகின்ற குறிப்பினை உடனகொண்டு காணுங்கால், இந்தப் பெருங்கல்நாடு மலைநாடான சேரநாட்டிற்குள் அடங்கியதென்பதும், இவன் அச்சேரவேந்தனது அவைக்களத்தில் இடம்பெறுகின்ற அணுக்கச் சிறப்புடையவனென்பதும் உய்த்துணரப்படும்.

6.114. பிட்டங்கொற்றன்

சேரநாட்டின் வடபால் அமைந்த குதிரைமலைக் கிழவனாய், அம்மலைசூழ்ந்த குறுநிலத்தை ஆண்டிருந்தவன் பிட்டங்கொற்றன். 'ஊராக் குதிரைக் கிழவ' (புறம்.168) என்று இவனை அக்குதிரைமலையோடே சார்த்தி உரிமைதோன்ற விளிப்பார் கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார்.

> பொய்யா வாய்வாள் புனைகழற் பிட்டன்
> மைதவழ் உயர்சிமைக் குதிரைக் கவாஅன்
> அகலறை நெடுஞ்சுணைத் துவலையின் மலர்ந்த
> தண்கமழ் நீலம்
> (அகம்.143)

எனறு, இவனோடு சாாததி அககுதிரைமலை வளததைப பாடுவாா ஆலமபேரி சாத்தனாா

இதே குதிரைமலை மறறொரு காலததில் அதியமான நெடுமானஞசியின ஆடசியில இருநததை,

ஊராது ஏநதிய குதிரைக கூாவேல
கூவிளங கண்ணிக கொடுமபூண எழினி (புறம 158)

நெடுநெறிக குதிரைக கூர்வேல அஞசி (அகம 372)

என்பனவறறால அறிகிறோம், ஆயினும, இபபிடடங் கொறறன அதியமான மரபினனலலன எனபது, அவனுககுச சேராகுடிச சாாபினால் பனமபூமாலையும (புறம 99,100), இவனுககு அதுவனறி, 'நறைநாாத தொடுதத வேங்கையஙகணணி' (புறம 168) எனறு, வேஙகைபபூமாலையும கூறபபடுமாறறால வெளிப்படும

இநதககுறுநில மனனனான குதிரைமலைக கிழவன பிடடங்கொறறன தன குறுநிலததை உடபடுத்திய பெருநில வேந்தனான சேரனுடைய பேராடசியினகீழ அடஙகி அரசாணடதோடு அசசேரனுககுப படைத்தலைவனாகவும விளங்கிச சிறபபுறறான,

வானவன் மறவன வணங்குவில தடககை
ஆனா நறவின வணமகிழப பிடடன (அகம 77)

எனறு மருதனிளநாகனாரும,

வசையில வெமபோா வானவன மறவன
நசையின வாழநாககு நனகலம சுரககும
பொயயா வாயவாள புனைகழற பிடடன (அகம 143)

என்று ஆலமபேரி சாததனாரும குறிபபிடுமாறறால இது கொளளபபடும இம்முறையில இவனுககு வேநதனாய விளஙகியவன சேரமான குடடுவன கோதையெனறும காணலாம,

வனபுல நாடன வயமான பிடடன
ஆரமா கடககும வேலும அவனிறை

மாவள ஈகைக கோதையும
மாறுகொள மனனரும வாழியா நெடிதே (புறம் 172)

எனவரும வடம வணணகக்ன தாமோதரனார பாடலில இவனும இவனுடைய வேந்தனான கோதையும ஒருங்கே குறிகக்பபெறுதல இதறகுச சானறாகும இதில இபபுலவரால, 'மாவள ஈகைக கோதை' எனறு பாராட்டப பெறுமாறே மறறொரு பாடலில,

வானம நாண வரையாது, செனறோாககு
ஆனாது ஈயும் கவிகை வணமைக
கடுமான் கோதை (புறம 54)

என்று அசசேரமான குடடுவனகோதை கோனாடடு எறிசசிலார மாடலன மதுரைக குமரனாரால பாராட்டபபெறுகினற ஒபபுமை இஙகே உணரதகுவதாம

மறறு, இபபிடடஙகொறறன போாவணமை, கைவணமைகளால சிறநதவனெனபதும இவனைப போறறிப பாடிய புலவா அனைவராலும புலபபடுதப பெறுகினறது

6115 பிண்டன்

பாரதது தலைவனான கொணகான நனனனால வெலலபபட்ட குறுநில மனனனாய அறிய வருபவன பிணடன இவனுடைய நாடு எதுவெனத தெரியவிலலை. ஆயினும, இவனை வெனற நனனனது கொண்கானதை ஒட்டியதாகவே இவனது குறுநிலம இருநததெனறு எணணலாம,

இந்தப பிண்டன மிகக படைவலிமையுடையவனாகவும பகைமுரணுடையவனாகவும குறிகக்ப பெறுகினறான,

இரஙகுநீாப பரபபின கானலம பெருநதுறைத
தனந்தரும நனகலம சிதையத தாககும
சிறுவெள இறவின குபபை அனன
உறுபகை தருஉம மொயமமுசு பிணடன
முனைமுரண உடையக கடநத வெனவேல
பாரதது தலைவன ஆர நனனன (அகம 152)

எனவரும பரணர பாடலால, இவன தன் படையுடன் சென்று நனனனமேல போரதொடுத்தானென்றும், அவன எதிரத்து வந்த இவனுடைய படை உடையுமாறு தாக்கி இவனை வென்றானென்றும அறிகிறோம் இவனைக் குறித்து வேறு செயதிகளும விளங்கவிலலை

6116 கொண்கானங்கிழான் நன்னன் உதியன்

கொணகான நாட பகுதிய குறுநிலததை ஆணடிருந்த நனனனே கொணகானங்கிழானென்றும, நனனன உதியனென்றும குறிப்பிட படுபெறறுப புலவாகளால பலவாறு பாராடடிப பாடபபெறறுளளான

பொனபடு கொணகான நனனன நனனாடடு
எழிற குனறம பெறினும பொருளவயின
யாரோ பிரிகிறபவரே (நற 391)

எனவரும தோழிகூறறு நறறிணைப பாடலில இவன கொணகான நனனனென்றே குறிக்கப பெறுவதும, இவனாடடு ஏழிறகுனறம பொனவிளையும மலையெனப புலபபடுததப பெறுவதும காணகிறோம 'நனனன நனனாடடு ஏழிற குனறம' (அகம 349) எனபதும இஙகே காணததகும

இனகளி நறவின இயலதேர நனனன
விணபொரு நெடுவரைக கவாஅன
பொனபடு மருங்கின மலை (அகம 173)

என்று இவனுடைய பொனவிளையும மலைவளததைப புலபபடுதுவார முளளியூர பூதியார

இககொணகான நனனனுகுப பாரமெனபதே தலைநகரென்றும அறிகிறோம

பாரத்துத் தலைவன் ஆர நனனன
ஏழில நெடுவரைப பாழிச் சிலம்பு (அகம 152)

என்று இவை குறிதது பாடுகினற பரணர, 'நனனன உதியன அருங்கடிப பாழி' (அகம 258) என்று இவனுடைய பாழியின காவறசிறபபையும கூடடுவார

சூழி யானைச சுடாபபூண நனனன
பாழி யனன கடியுடை வியனகா (அகம.15)

எனவரும மாமூலனார பாடலாலும இவனது மலையரணான பாழியின காவற சிறபபு விளஙகும

இநதக கொணகான நனனன முறையினறும வழுவாத அரசாடசி அமைநதவன (அகம 142); துலாக கோலையொதத குறறநதீரநத நடுவுநிலை அமைநத செமமொழியாளன (அகம 349), ஈகைபபணபுடையவன, களிறுகளை வழஙகும வணமையாளன (அகம 152), பகைநாடுகளை வெனறு கொணட பெருஙகலனகளைப பாடுவோரககு ஆராயாதே கொடுபபவன (அகம 349); அசசமிகக போரசெயலகள அமைநதவன (அகம 208) எனறெலலாம் புலவாகள பலராலும புகழசசியுறப பாடபபெறுகினறான

இவன தன நணபனான மிஞிலியொடு கூடிப புனனாடடின மீது படையெடுததபோது, அநநாடடு மனனனை அஞசவெனறு அமாததிய வெளியன வேணமான ஆய எயினன, பாழிப பறநதலையிலே (அகம 396) நணபகல் பொழுதில (அகம 208) மிஞிலியை எதிரதது பபோரிடடு அபபோரிலே அமமிஞிலியால கொலலபபடடு வீழநதான (அகம 142, 208, 396) அவவாறு வீழநத எயினனது உடலின மேல வெயிலபடாதவாறு, அவனால முனனாக காகபபடட பறவைகளெலலாம கூடித தம இறகுகளைக கோலி நிழல செயது வருநதிய அநநிலையில பகைமறநது அவனை அருளிக காணவேணடிய இநநனனன அவனிடதது வைதத பகையும சினமும மாறாதவனாய, 'அவனைக காணேன' எனறு அருளாது மறைநதிருநதான (அகம 208)

மறறொருகால இவன பிணடனுடன பொருது அவனைத தோறபோட செயது வெனறான (அகம 152)

இனனும சில செயதிகள பொதுபபட நனனனுடை யனவாயக காணபபடுகினறன அவறறினையும தகக ஏதுகளால இவனுடையனவாகவே எணணலாம

ஒருகாலததில தனனிடம போருககு வநது தனனை வெலல மாடடாமல போரொழிய நீஙகிபபோன

பகைவேநதனொருவன் மீண்டும பெருநதானையொடு வநது முற்றுகையிட்டானாக, நனனனொருவன் தனனையே பற்றுசுகோடாகப பெறற நிலைபெறற மதிலையுடைய தன அரண் அபபகைவேநதனை எதிரதது நிறறல ஆறறாமையால, தான மடடும் தபபிச சென்று காடடிலே பதுஙகியிருந்து, பினனாக காலமறிந்து அவவேநதனுடன போரிடடு வென்று, தன் பழம்புகழை மீடடுப பெறறான எனறொரு செயதி அறிய வருகினறது

வினைதவப பெயாநத வெனவேல வேநதன
முனைகொல் தானையொடு முனவநது இறுபப,
தன்வரம் பாகிய மனனெயில இருகைக
ஆறறா மையிற பிடிதத வேலவலித
தோறறம பிழையாத் தொலபுகழ பெறற
விழைதக ஓஙகிய கழைதுஞசு மருஙகில
கானமர் நனனன போல
யானா குவலநின நலனதரு வேனே (அகம 392)

என்று அகததிணைத தோழியின கூறறாக இவனது இவ்வெறறியைப பாராடடிக குறிபபிடுவார மோசிகீரனார, அவரால பாடப பெறுகினற இநநனனன கொணகான நனனனேயெனபதை, 'கொணபெருங் கானதது க கிழவன' (கொணகானஙகிழான) எனக குறிதது அவரே பாடியுளள புறநானூற்றுப பாடலகளால (154-156) கொளளலாம, அபபாடல்களுள ஒனறில கொண்பெருங்கானம பனை வேந்தரிடததே திறை பெறறுகொணடு அவரை மீடகும் தலைமையுடையதெனக குறிபபிடுவார (புறம 156) எனவே, அநதக் கொண்பெருங்கானதது க கிழவன வேநதரோடு பெறறிருநத போராத தொடாபு புலனாம ஆகவே, வேநதரை வென்ற வெறறியாளனாய அபபுலவர குறிபபிடும இநநனனனும கொணகானஙகிழானாகிய பாரதது த தலைவன ஆர நனனனே எனத தெளியலாம

இவவாறே, குதிரைப படையையுடைய பகைவேநதரைத தோறறோடச செயது, அவருரிமை மகளிரின கூநதலைக கொணடு திரிதத கயிறறினால அவருடைய யானைகளைப பிணிததோடடிய நனனன செயதியொனறையும அறிகிறோம

விரியுளைப பொலிந்த பரியுடை நனமான
வேநதர ஓடடிய ஏநதுவேல நனனன
கூந்தல முரறசியின கொடிதே (நற 270)

எனப் பரணர் இவனது இவ்வெற்றியைப் பாடியுள்ளார்.. அவரால் பிற பாடல்களில் இக்கொண்கான நன்னன் பாடப்பெறுதலாலும், இவன் வேந்தரை வென்றவனாதலாலும், இவ்வெற்றிக்குரிய நன்னனும் இவனேயென்று கொள்ளப்படும்.

இன்னும் பெரும்புகழையுடைய நன்னனொருவனின் பெயரைப் பெற்றதோர் பிறந்தநாள் விழாவொன்று மிக்க ஆரவாரத்தோடு நிகழ்ந்து வந்ததை மதுரைக்காஞ்சி (618-619) குறிப்பிடும். அதன்கண் அமைந்த, 'போரிசை நன்னன்' என்ற குறிப்பினால் அவனையும் இகுகொண்கான நன்னனேயெனக் கொள்ளலாம்.

இனி, ஓரிடத்தே இவன், 'நன்னன் உதியன்' (அகம்.258) எனக் குறிக்கப் பெற்றானென்று மேலே கண்டோம் உதியனென்பது சேரன் பெயர். ஆதலால்,

> "நன்னனுக்குச் சேரமன்னன் சார்பினால உதிய
> னென்பதோர் பெயர் எய்திற்றுப் போலும்"

என்று இதற்கு உரைவிளக்கம் காண்பர். அகநானூற்றின் வேங்கட விளக்கு உரையாளர். அம்முறையில் சேரர்க்குப் படைத்துணையாளனாய இவனைக் கருதலாம். கருதவே, சேரன் படைத்தலைவர்களாய்த் தன்னையொத்த ஏறறையென்பான் முதலிய ஏனை ஐவருடனும் கூடி, சோழன் பெரும்பூட்சென்னியின் படைதத்தலைவனான பழையனோடு போரிட்டு மாண்ட நன்னன் (அகம்.44) இவனேயென்பதும் இனிதே விளங்கும்

62 பாண்டி நாட்டுக் குறுநில மன்னர்கள்

அடுத்துப் பாண்டி நாட்டுக் குறுநில மன்னர்களாக அறுவர் சிறப்புற அறிய வருகினறனர். அவர்களுடைய குறுநிலங்களையும் அறிந்த மட்டில தெற்கு வடக்காக நோக்கி, அவர்களைப் பின்வருமாறு வரிசைப்படுததலாம்.

1. நாஞ்சில் பொருநன் வல்வேல் கந்தன்
2. மோகூர் மனனன் பழையன்
3. கண்டீரக்கோப் பெருநள்ளி
4. வேங்கை மாபன்

5. கடியநெடுவேட்டுவன்
6. அதிகன்

இதே வரிசையில் இவர்களின் வரலாறுகளையும் தொடரலாம்.

621. நாஞ்சில் பொருநன் வல்வேல் கந்தன்

தமிழகத்தின் தென்பால் குமரிமுனைக்கும் நாகர்கோவிலுக்கும் இடையே பொதிகைமலைத் தொடர்களுள் ஒன்றாய், இக்காலத்தே மருந்துவாழ் மலையென வழங்குகின்ற பண்டைய நாஞ்சில் மலையையும் அதனைச் சூழ்ந்த நாஞ்சில் நாட்டையும் ஆண்டிருந்தவனே நாஞ்சில் பொருநன் (புறம் 137, 139, 140; 380) என்ற வல்வேல் கந்தன் (புறம்.380). இவனே நாஞ்சில் வள்ளுவனென்றும் குறிக்கப் பெறுகின்றான் (புறம்.137-140; 380 அடிக்குறிப்பு). ஆதலால், இவனை வள்ளுவக்குடியில் வந்தவனாகக் கருதலாம்.

இக்காலத்துக் குமரி மாவட்டத்தில் அகத்தீசுவரம், தோவாளை ஆகிய இரு வட்டங்களும் சேர்ந்த நாடு இன்றும் நாஞ்சில் நாடென்றே வழங்குகின்றது.

நாஞ்சில் பொருநன் மறக்கொள்கை மிக்க குடிவரவு உடையவனாகக் கூறப்படுகின்றான்.

ஓடாப் பூட்கை உரவோர் மருக!
உயர்சிமைய உழாஅ நாஞ்சில் பொருந! (புறம்.139)

என்று முன்னோருடைய மறக்கொள்கையின் மாண்பேபோடே சார்த்தி இவனைப் பாடுவார் மருதனிளநாகனார்.

நாஞ்சில் நாட்டுக் குறுநில மனனனான இவ்வல்வேல் கந்தன் தனக்கு மேம்பட்ட பாண்டிய வேந்தனுக்குப் படைத்தலைவனாய் விளங்கிய முறையில், 'தென்னவர் வயமறவன்' (புறம்.380) எனக் கருவூர்க் கதப்பிள்ளையால் குறிப்பிடப் பெறுகின்றான். இவனும் இவன் வேந்தனான பாண்டியனும் ஒருவரோடொருவர் உரிமையுற்று நின்றதை,

ஈதல் ஆனான் வேந்தே வேந்தற்குச்
சாதல் அஞ்சாய் நீயே (புறம்.139)

என்ற மருதனிளநாகனார் பாடலடிகளால் அறியலாம்.

இநநாளுசில பொருநனான வலவேல் கந்தன் பகைவாகசு நினைகசவும் எடடாத போர்வனமையும், நண்பாகசு உளளங்கையில் உளளான்போலும உறவின அணுகசுமும உடையவன

துபபெதிாந் தோாகசே உள்ளாச சேய்மையன
நடபெதிாந தோர்கசே அங்கை நணமையன
வலவேல கநதன (புறம.380)

எனறு இவனுடைய இவவிரு பணபுகளையும் பாராடடுவார் கருவூர்க கதபபிளளை

மறறு, இவன மிகச சிறநத ஈகைமேம்பாடு வாயநதவனெனபது, இவனைப் பாடிய ஒருசிறைப பெரியனாா (புறம 137), மருதனிள நாகனார் (புறம 138, 139), ஔவையாா (புறம 140), கருவூர்க கதபபிள்ளை (புறம் 380) ஆகியோா பாடல்கள அனைததினாலும் அறியவருகின்றது

622 மோகூர் மன்னன் பழையன்

சேரநாடடில செங்குடடுவனுகசு சேயமையிடத்து நணபனாயிருநத அறுகையென்பானுக்கு அணடை நாடடான பாணடி நாடடுப பகைவன எனற முறையில அசசெங்குடடுவனால அழிகசபபட்டவனாக அறிய வருபவனே மோகூா மன்னன பழையன.

இபபழையன தனகசு அண்டை நாடடு மன்னனான அறுகையைத தாகசிப போா தொடுததானாக, இவனுகசு ஆறறாத அநத அறுகை தன் நாட்டை விடடே ஓடி ஒளிநதவனாயத தொலைதூரததில இருபபினும் தனகசுத துணையாகிக காததறகுரிய நண்பன சேரன் செங்குடடுவனே என மொழிநது அவனையே நம்பியிருநதான அதனையறிநத சேரன அவவறுகையின பொருடடுத் தானே முன்னின்று படையெடுதது வந்து, மோகூர் மனனனான இபபழையனைத் தாகசினான. இவனும தெய்வம் வருததுமாறு பகைவரை வருததுகினற தன ஆற்றலோடே அச்சேரனை எதிர்த்து வஞ்சினங்கூறிப போருகசுப் புறப்படடான இவன் புறபபடட அளவில சோழ பாண்டியராகிய இருபெரு வேந்தரோடு வேளிா சிலரும விரைந்துவநது இவனுகசுப

படைத்துணையாகி உதவினர் இவரெலலோரும் கூடிச சேரனொருவனை ஒழிபபதாக வஞ்சினங்கூறி நாற்படைகளையும நடத்தி எழுநதனராக, இவர்களுடைய கூட்டததின் நிலை நடுங்குமாறு தாககிக கொனறு குவிதது வெனறி கணட அசசெங்குடடுவனால இபபழையன வெடடுண்டு வீழநதான் தொடாநது இவனுடைய காவல்மரமான வேமபினையும வெடடி வீழததிய செங்குடடுவன், அதுகொண்டு தனககு வெறறி முரசு செய்யுமாறு அதனைத துணிதது, இவனுரிமை மகளிர கூந்தலைக கொணடு திரித்த கயிறறினால இவன யானைகளையே கடாகளாகப பூடடிய வணடியில ஏறறிக கொணடு செனறான என்று பதிறறுபபதில அசசெங்குடடுவனைப பாடிய பரணரின பாடலகளாலும் (பதி 44,49), அவறறிற்கு அமைநத பதிகததாலும், சிலப்பதிகாரத்தாலும (சிலமபு 27 124-126) அறிகிறோம

இனி, இம்மோகூர மன்னன பழையனுடைய காவல மரம் பாணடிய வேந்தனுககுரிய வேபபமரமே என்று விளங்குவதால, இவனை அபபாணடிய வேநதனின் மேலாணமைககுக கீழ்பபணிந்த குறுநில மனனனென்று கொள்ளலாம. ஆக, இவனுடைய மோகூர பாணடிய நாடடில இருந்ததென்பதும் இனிதே விளங்கும விளங்கவே, பாண்டியநாடடில மதுரைககு அணமையில பிறகாலத்து வைணவத திருபபதியாக விளங்கிய திருமோகூரே இபபழையனுடைய மோகூரனென்று அறிஞர மயிலை சீனி வேங்கடசாமி காடடுவதை[4] ஏறபுடையதாகவே காணலாம மறறு, இனறைய விழுபபுரம மாவடடக களளகுறிசசியை அடுததுளள மோகூரே இபபழையன மோகூர எனப புலவர கோவிநதன் கூறுவார[5] ஆயின், அது பாணடிய நாடாகாமையால பொருந்தாதாம

அடுதது, வடதிசைக கோசரெனபார வெறறிச செலவு மேற்கொண்டு, தென்றிசை நாடுகளையெலலாம வெனறு வந்தபோது, மோகூர பணியாமையாலஅதனைப பணிவிககும பொருடடு,அககோசாககுத் துணையாக வடநாடடு வமபமோரியர படையெடுத்து வநதனர என்ற கருததில,

வெலகொடித,
துணைகால் அனன புனைதேர்க கோசர
தொன்மூ தாலத்து அருமபணைப பொதியில

இனனிசை முரசம் கடிபபிகுதது இரஙகத
தெமமுனை சிதைதத ஞானறை மோகூ
பணியா மையின பகைதலை வநத
மாகெழு தானை வமப மோரியா (அகம 251)

எனவரும மாமூலனாா அகபபாடலில கூறபபடும மோகூ இபபழையனின மோகூர் எனபா பலரும ஆயின, வடபுலததுக கோசா தெனபுலத்துப பாணடிய நாடடு மோகூரளவு வெனறு வநதனராகக கொளளுதல கூடாமையாலும, இபபாடலில மோகூ என வநததேயனறிப பழையன பெயா வாராமையாலும, அமமோகூரைப பழையன மோகூ எனக கருதுதல இசையாதாம மறறு, மேலே புலவா கா கோவிநதன குறிபபிடட களளகுறிசசி மோகூரே, கோசரின படையெடுபபுககு உடபடடுப பணியாது நினறதெனக கருதலாம அமமோகூருகருகில கோசர் பாடி, ஆலம்பலம எனற பெயருடைய ஊாகள இருகினறனவாக அவா கூறுவதும[6] இவவரலாறறு நிகழசசிககு இசைநதனவாய இதனை உறுதிபபடுததலாமெனக அனறியும,

பழையன மோகூ அவையகம விளஙக
நானமொழிக கோசா தோனறி யனன (மது 508-509)

எனறு மதுரைககாஞசி கூறுதலால, பாணடி நாட்டுப பழையனுககுக கோசா நணபரேயனறிப பகைவரலலா எனபதும, இபபழையனுடைய மோகூமேல கோசா படையெடுததிருகக வாயபபிலலையெனபதும விளஙகும

623 கண்ஊரக்கோப் பெருநள்ளி

பாணடிய நாடடிலே அடுகஙகளோடு அமைநததும மேகஙகள தஙகுமாறு உயாநததுமான தோடடியென்ற மலையைச சூழநத காடடுநாடொனறு பணடைக காலததே கணஊரம எனப பெயாபெறறு விளஙகியது இதனை மதுரைககுத தெறகிலுளள மலைநடடின ஒரு பகுதி எனபா ஔவை துரைசாமிபபிளளை (புறம 150) இநதக கணஊரநாடடின மனனனே கடைசசஙக காலதது வளளலெழுவருள ஒருவனான கணஊரககோப பெருநளளி

இபபெருநளளி ஒருமுறை வேடடைமேல செனறிருநத காடடு வழியில தனககு அறிமுகமிலலாத வனபரணரையும

அவருடைய சுறறத்தையும் கண்டான் வழிநடை வருத்ததினால ஒரு பலாமரத்து நிழலிலே அமர்ந்திருந்த அவா தனனைக்கண்டு யாரோவொரு தலைவனென மதித்துத் தொழுதெழுந்தாராக, அவருடைய வருத்ததையும் வறுமையையும் உணர்ந்த இவன, அவா எழுவதையும் தடுத்துக் கையமாத்தி, அவரது பசிபோக்குதறகாக்த தான வேட்டையாடிய மானின இறைச்சியைப் பணியாட்கள வருதற்கும் காத்திராமல தானே தீக்கடைந்து சுட்டு அவாக்கு உணணக்கொடுத்தான உணடு களைப்பாறி அவா போகப் புறப்படுகையில பெறுதறகரிய நனகலம் பிறிதொனறிலலாத காட்டு நாட்டிலே அவரைக் கண்டமைக்கு இரங்கி, தான் மாாபிலே அணிந்திருந்த முத்தாரத்தைக் கைக்கடகங்க ளோடே அவருக்கு அளித்தான் அந்த ஈகைச் சிறப்பினைக் கண்ட புலவா, இவனுடைய ஊரையும் பேரையும் வினவியதறகு, இவன அவறறை விளம்பவும் விரும்பாதவனாய்த் தன வழியே போய விட்டான இவன போனபின இவனே தோட்டிமலைநாட்டன நளளியென்ப பிறா வாயிலாய்க் கேட்டறிந்த வனபரணா, இவனது கொடைப் பணபு குறித்து இயலபு நவிறசியாகவே ஒரு நீளப்பாடலைப் பாடிப் புகழந்துளளாா (புறம 150)

இதனைத் தொடாந்து அப்புலவா தம் சுறறத்துடனே வந்து, இவனை இருக்கையிலே கண்டு, இவனால் பினனும் பல பரிசிலகளைப் பெறறு, இவனுடனே இருந்து இவன ஈகைத் திறங்களைப் பாடினாா (புறம் 148, 149).

இவவாறு வனபரணரின வழிநடை வருத்தமும் வறுமையும் போக்கி அவாக்கு வழங்கிப் புகழ்கொண்ட வளளனமையே இந்நளளிக்கு நிலைத்த புகழை நிறுத்திப் பினவந்தோராலும பேசப்படுமாறு அமைந்தது வளளலெழுவரையும வரிசையுறப்பாடும சிறுபாணாற்றுப் படை இவனைக் குறிக்கையில,

> கரவாது, நடோ உவப்ப நடைப்பரி காரம
> முடாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத்
> துளிமழை பொழியும வளிதுஞ்சு நெடுங்கோட்டு
> நளிமலை நாட்ன நளளி (சிறுபாண 103-107)

எனறு, இந்த நடைப்பரிகாரத்தையே விதந்தெடுத்துப் பாடுதலைக் காண்கிறோம இதே முறையில எழுவரைக் குறிக்கினற புலவா பெருஞ்சித்திரனாரும,

ஆர்வமுற்று, உள்ளி வருநர் உலைவுநனி தீரத்
தள்ளாது ஈயும் தகைசால் வண்மைக்
கொள்ளார் ஓட்டிய நள்ளி (புறம்.158)

என்று இவனைக் குறிப்பிடுவார். இன்னும்,

. . . . . இரப்போர்க்கு,
இழையணி நெடுந்தேர் களிறொடு என்றும்
மழைசுரந் தன்ன ஈகை வண்மகிழ்க்
கழல்தொடித் தடக்கைக் கலிமான் நள்ளி (அகம்.238)

என இவன் ஈகையைக் குறித்த கபிலரின் பாராட்டும் இங்கே கருதப்படும்.

இனி, மன்னன் எவ்வழியோ மக்கள் அவ்வழியே என்ற பழமொழியின்படி இந்நள்ளியின் வள்ளன்மைக்கேற்ப இவனாட்டுக் குடிமக்களும் கொடைத்திறம் படைத்திருந்தனர். அவருள் ஆடவரேயன்றிப் பெண்டிரும் தம் பெண்மைக்கேற்ற வண்மைப்பண்பு உடையவராய் வாழ்ந்திருந்தனர் என்பதை,

பண்டும் பண்டும் பாடுநர் உவப்ப
விண்தோய் சிமைய விறல்வரைக் கவாஅன்
கிழவன் சேட்புலம் படரின் இழையணிந்து
புன்தலை மடப்பிடி பரிசில் ஆகப்
பெண்டிரும் தம்பதம் கொடுக்கும் வண்புகழ்க்
கண்ஊ ரகமோன் (புறம்.151)

எனவரும் பெருந்தலைச் சாத்தனார் பாடலடிகளால் அறியலாம். இப்பாடலில் மக்களின் ஈகைப்பண்பொடு சார்த்தி மன்னனின் ஈகைப் பண்பு எடுத்துப் பேசப்பெறுகின்றது.

இனி, இந்நள்ளியை. 'வல்வில் இளையர் பெருமகன் நள்ளி' (அகம்.152) என்பார் பரணர். எனவே, இவன் வில்லாற்றல் மிக்க படைமறவர் பலர்க்குத் தலைவனாய் விளங்கினமை தெளிவாம். அப்படைமறவர் திறத்தினால் இவன தன் பகைவரையும் வென்றோட்டி வீறுபெற்றதை 'கொள்ளார் ஓட்டிய நள்ளி' (புறம்.158) என்ற பெருஞ்சித்திரனாரின் பாடற்குறிப்பினால் அறியலாம்.

மற்றபடி இவன் அரசியல் வரலாறாக ஏதும் அறியவரவில்லை

இக்கண்டீரக்கோப் பெருநள்ளியின் தம்பியொருவன் இளங்கண்டீரக்கோ என்ற பெயரோடே பெருந்தலைச் சாத்தனாரால் பாராட்டப் பெற்றுள்ளான் (புறம்.151). அவனுடையஅரசியல் வரலாறுகளும் அறியுமாறில்லை.

624. வேங்கை மார்பன்

இக்காலத்துக் காளையார்கோயில் என வழங்கும் கானப்பேரெயிலைத் தலைநகராகக் கொண்டு அதனைச் சூழ்ந்த குறுநிலத்தை ஆண்டிருந்தவன் வேங்கை மார்பன். ஆழ்ந்த அகழியையும், உயர்ந்த மதிலையும், மரஞ்செறிந்த காவற்காட்டையும் உடையதாய், பகைவரால் நெருங்குதற்கரிய சிற்றரண்களால் சூழப்பட்டது இவனுடைய கானப்பேரெயில். அந்த அரண் வலிமையால் செருக்குற்ற இவன், தன் குறுநிலத்தின் மேலாண்மைக்குரிய பாண்டியன் உக்கிரப் பெருவழுதிக்குக் கீழ்ப்பணியாது அவனை எதிர்த்து நின்றான். அதனால் அப்பாண்டியன் சினந்து, இவன்மேல் போர் தொடுத்து வென்று, இவனுடைய கானப்பேரெயிலையும் கைப்பற்றிக் கொண்டானாக, கொல்லனால் செந்தீயிலே பழுக்கக் காய்ச்சப்பட்ட இரும்பினால் உறிஞ்சப்பட்ட நீரினும் மீட்டற்கரிது தன் கானப்பேரெயில் எனக்கருதி இவ்வேங்கை மார்பன் இரக்கமுற்று ஏங்கினான் என்பார் ஐயூர் மூலங்கிழார் (புறம்.21).

625. கடியநெடு வேட்டுவன் என்ற பண்ணி

இக்காலத்துக் கோடைக்கானல் (கொடைக்கானல்) என வழங்கும் கோடைமலையை ஆண்டிருந்த வேட்டுவக்குல மன்னனொருவன் கடியநெடுவேட்டுவன் எனக் குறித்து பாடப்பெறுகின்றான். அஞ்சி வந்து அடையும் பகைவர்க்குப் புகலிடமானவன்; போர் செய்யும் பகைவருடைய முயற்சியால் கிளர்ந்த ஊக்கத்தைக் கெடுக்கும் தானையையுடையவன் என்றெல்லாம் இவன் பெருந்தலைச் சாத்தனாரால் பாடப்பெற்றுள்ளான்.

வெள்வீ வேலிக் கோடைப் பொருந!
சிறியவும் பெரியவும் புழைகெட விலங்கிய
மான்கணம் தொலைச்சிய கடுவிசைக் கதநாய்
நோன்சிலை வேட்டுவ (புறம்.205)

என்று, இவன் தன் மனைவியொடும் குடியொடும் சார்த்தி அப்புலவரால் விளிக்கப் பெறுவதைக் காண்கிறோம்.

மற்று. அப்பெருந்தலைச் சாத்தனார் தாமே பண்ணியென்பான் ஒருவனையும் கோடைப் பொருநன் என்று குறித்துப் பாடியுள்ளார்.

திருவீழ் மார்பின் தென்னவன் மறவன்
குழியிற் கொண்ட மராஅ யானை
மொழியின் உணர்த்தும் சிறுவரை யல்லது
வரைநிலை யின்றி இரவலர்க்கு ஈயும்
வள்வாய் அம்பின் கோடைப் பொருநன்
பண்ணி தைஇய பயங்கெழு வேள்வியின்
விழுமிது ..... (அகம்.13)

எனவரும் இவ்வகப்பாடலடிகளில் அவர் குறிப்பிடும் பண்ணி என்பவனே மேற்கண்ட அவருடைய புறப்பாடலின்கீழ், கடியநெடுவேட்டுவன் எனக் குறிக்கப் பெற்றான் என்று கருத வாய்ப்பாகின்றது. காரணம், இப்பாடலில் பண்ணியென்று இவனது இயற்பெயர் பயின்று வந்ததுபோல், அப்பாடலில் இயற்பெயரேதும் பயின்று வரவில்லை. அடுத்து, அப்பாடலின் அடிக்குறிப்பிலே காணப்படுகின்ற கடியநெடு வேட்டுவனென்னும் பெயரும் இயற்பெயர் போலன்றிக் காரணப்பெயர் போலவும், பாடலில் பயின்ற, 'நோன்சிலை வேட்டுவ' என்ற தொடரடியாகத் தோன்றிய புனைபெயர் போலவுமே கருத வருகின்றது. ஆதலால், கோடைப் பொருநன் பண்ணியே கடிய நெடுவேட்டுவனென்று கருதலாம்.

இனி, இப்பண்ணியைத் தென்னவன் மறவனென்று தெரிவிப்பதால் இவன் பாண்டியனுக்குப் படைத் தலைவனாய், அவன் செய்யும் போர்ச் செயல்களில் துணைநின்று வினைபுரிந்தமை விளங்கும்.

6.2.6. அதிகன்

பாண்டி நாட்டில் வேங்கையென்னும் பெயரமைந்த மலையையும் அதனையொட்டிய நாட்டையும் ஆண்ட குறுநில மன்னனான அதிகன், பசும்பூண்பாண்டியன் என்ற தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன்

நெடுஞ்செழியனுக்குப் படைத்தலைவனாய் அறிய வருகின்றான். அப்பாண்டியனுடைய பட்டத்து யானைமேல் எடுக்கப்பட்ட வெற்றிக் கொடிபோல், இவ்வதிகனின் வேங்கைமலையின் உயரத்தே தோன்றுகின்ற அருவிகள் அழகுற ஒளிர்வனவாய் இழியுமென்றும், அவ்வருவிகளை யுடைய இவனது மலைச்சாரலிலே சூரரமகளிர் உறைந்திருந்தன ரென்றும் பாடுவார் பரணர்.

வாய்மொழி, நல்லிசை தருஉம் இரவலர்க்கு உள்ளிய
நசைபிழைப்பு அறியாக் கழல்தொடி அதிகன்
கோளறவு அறியாப் பயங்கெழு பலவின்
வேங்கை சேர்ந்த வெற்பகம் பொலிய
வில்கெழு தானைப் பசும்பூட் பாண்டியன்
களிறணி வெல்கொடி கடுப்பக் காண்வர
ஒளிறுவன இழிதரும் உயர்ந்துதோன்று அருவி
நேர்கொள் நெடுவரைக் கவாஅன்
சூரர மகளிரின் பெறற்கரி யோளே (அகம்.162)

எனவரும் இப்பாடலில், 'வேங்கை சேர்ந்த வெற்பகம்' எனக் குறிக்கப்பெறுவது இவனுடைய வேங்கைமலையேயாம். 'விறன்மலை, வேங்கை வெற்பின் விரிந்த கோங்கு' (புறம். 336) என்று இம்மலையின் பெயரை இப்புலவரே மற்றொரு பாடலிலும் குறிப்பிடக் காண்கிறோம். வேங்கைப் புலிகள் நிறைந்திருந்த சிறப்பினால் இம்மலைக்கு வேங்கை மலையென்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

பசும்பூண்பாண்டியனின் படைத்தலைவனான இவ்வதிகன், வாகைப் பறந்தலையில் கொங்கரொடு நிகழ்த்திய போரில், யானைமேலேறி முனைந்து பொருது முடிவில் தன் யானையோடே விழுப்புண் பட்டு வீழ்ந்து மாண்டான். இவனையெதிர்த்துப் பொருத கொங்கர். இவனது வீழ்ச்சியை அடுத்துப் பெரியதோர் வெற்றியாரவாரம் எடுத்தனர்.

கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்
பசும்பூண் பாண்டியன் வினைவல் அதிகன்
களிறொடு பட்ட ஞான்றை
ஒளிறுவாள் கொங்கர் ஆர்ப்பினும் பெரிதே (குறு.393)

என்று அக்கொங்கரின் ஆரவாரத்து அளவைச் சிறப்பிப்பார் பரணர்.

இவ்வாறு தன் படைத்தலைவனான அதிகன் பட்டுவீழ்ந்ததையும், இவனை வெட்டி வீழ்த்திக் கொங்கர் வெற்றியாரவாரம் எடுத்ததையும் அறிந்து வெஞ்சினம் கொண்ட பசும்பூண்பாண்டியன், தானே படை நடத்திச் சென்று அக்கொங்கரை வென்றோட்டி, அவர்தம் நாடுகளையும கைப்பற்றி வந்து, தன் கூடல் மாநகரில் தான் வெற்றியாரவாரம் எடுத்தான்.

அலரே, வாடாப பூவின் கொங்க ரோட்டி
நாடுபல தந்த பசும்பூட் பாண்டியன்
பொன்மலி நெடுநகர்க் கூடல் ஆடிய
இன்னிசை ஆர்ப்பினும் பெரிதே (அகம்.253)

எனறு இதனைப் பாடுவார் நக்கீரர்.

இனி, பசுமபூண்பாண்டியன் கொங்கரை வென்றோட்டிய போரையே முன்னிகழ்ச்சியாகக கொள்ளும் புலவர் கா. கோவிந்தன், அப்போரில் பாண்டியன் படைக்குத் தலைவனாயிருந்து அவனது வெற்றிக்குத் துணைபுரிந்தான் அதிகனென்றும், அதுபற்றியே இவனை வாகைப் பறந்தலைப் போரில கொன்றொழித்து வெற்றியாரவாரம் புரிந்தனர் கொங்கரென்றும் கூறி, இப்போரைப் பின்னிகழ்ச்சியாகக் காட்டுவார்.[7] ஆயின், அவ்வாறு கொளளுங்கால், தன் வெறறிக்குத் துணைபுரிந்த படைத்தலைவனைப் பகைவர் கொனறமை அறிந்தபின் அப்பகைவரை மீண்டும் வென்று பசும்பூண்பாண்டியன் பழிதீர்த்திருத்தல் வேண்டும். அவ்வாறேதும் அறியப்படவில்லை; ஆதலால், இவ்வாறு கொள்வதே ஏற்புடைத்தாம். குறுந்தொகை உரையாசிரியர் உ.வே. சாமிநாதையரும்,

"கொங்கரால் அதிகன் போரில் கொல்லப்பட்ட பின்னர்ப் பாண்டியன் மிடல்கொண்டு கொங்கரொடு பொருது அவரைத் தோல்வியுறச் செய்திருத்தல் கூடும்"
(குறு.393 உரை)

எனறு இவ்வாறே கருதியுள்ளமை காணலாம்.

63 சோழ நாட்டுக் குறுநில மன்னர்கள்

இனி, சோழநாடடுக் குறுநில மன்னர்களாகப் பதினெழுவர் தெளிவுற அறியவருகின்றனர். அவர்களுடைய

குறுநிலங்களையும் அறியுமளவு தெற்கு வடக்கிலே நோக்கி அவர்களைக் கீழ்க்காணுமாறு வரிசைப்படுத்தலாம்.

1. அழிசி
2. விச்சிக்கோ
3. விச்சிக்கோ நன்னன்
4. அன்னி
5. பொறையாற்றுகிழான் நற்றேர்ப்பொரியன்
6. பரதவர்கோமான் மத்தி
7. கண்ணனெழினி
8. அகுதை
9. அவியன்
10. கரும்பனூர் கிழான்
11. ஓய்மான் நல்லியக்கோடன்
12. ஓய்மான் வில்லியாதன்
13. தொண்டைமான் இளந்திரையன்
14. ஆதனுங்கன்
15. கள்வர் கோமான் புல்லி
16. கட்டி

இவ்வரிசையிலேயே இவர்களின் வரலாறுகளையும் காணலாம்.

6.31. அழிசி

சோழநாட்டில் காவிரிக்கரை சார்ந்த ஆர்க்காடு என்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டு அதனைச் சூழ்ந்த குறுநிலத்தை ஆண்டிருந்தவன் அழிசி. இவன் சோழவேந்தரோடு அணுக்கத் தொடர்பு உடையவன். ஆதலால், 'வெல்போர்ச் சோழர் அழிசி' (நற்.87) என்று நக்கண்ணையாரால் குறிக்கப் பெறுகின்றான்.

கள்ளையே உணவாகவுண்டு விலங்குக் கூட்டங்களை வேட்டையாடி வருகின்ற வாளேந்திய வீரர்களுக்குத் தலைவனென்ற முறையில், 'இளையர் பெருமகன்' (குறு.258) என்று இவ்வழிசியைக் குறிப்பார் பரணர்.

பகைவருடைய வெல்லுதற்கரிய அரண்கள் பலவற்றை வென்ற வெற்றிவேலை உடையவனும் பலரும் நீராடுகின்ற காவிரிப் பெருந்துறையின் மருத மரத்திலே கட்டப்பட்ட

களிற்றியானையை உடையவனுமான சேந்தனென்பானுக்குத் தந்தையென்று இவ்வழிசி இரு பாடல்களில் இயம்பப் பெறுகின்றான்.

மேவார், ஆரரண் கடந்த மாரி வண்மகிழ்த்
திதலை யெஃகின் சேந்தன் தந்தை
தேங்கமழ் விரிதார் இயல்தேர் அழிசி (நற்.190)

எனவும்,

காவிரி, பலராடு பெருந்துறை மருதொடு பிணித்த
ஏந்துகோட்டு யானைச் சேந்தன் தந்தை
அரியலம் புகவின் அந்தோட்டு வேட்டை
நிரைய ஒள்வாள் இளைர் பெருமகன்
அழிசி (குறு.258)

எனவும் வருவனவற்றில் இவன், மகன் பெயரோடு சார்த்திக் குறிக்கப்பெறுகின்ற மாண்பினைக காணலாம்.

இவனைக் குறித்த பாடல்களிலெல்லாம் இவனுடைய ஆர்க்காடு, வளமும் வனப்பும் வாய்ந்ததாகச் சிறப்பித்துச் செப்பப் பெறுகின்றது.

632. விச்சிக்கோ

விச்சியென்ற மலைக்கும் அம்மலை சூழ்ந்த நாட்டிற்கும் மன்னனாய் விளங்கியவன் விச்சிக்கோ. இவ்விச்சிமலை எதுவென்று விளங்கவில்லை. ஆயினும், சங்ககாலத்திற்குப்பின் இடைக்காலத்தே வந்த சுந்தரர் தம் தேவாரத்தில்,

பருவி விச்சி மலைச்சாரல் பட்டை
கொண்டு பகடாடிக்
குருவி யோப்பிக் கிளிகடிவார் குழல்மேல்
மாலை கொண்டோட்டம்
தரவந்து இரைகா விரிக்கோட்டத்து
ஐயாறு உடைய அடிகளோ (7:77:3)

என்று, விச்சிமலைச்சாரலில் குருவியோட்டிக் கிளிகடியும் மகளிர்தம் கூந்தலில் அணிந்திருந்த மாலையை

அடித்துக்கொண்டு, காவிரி இரைத்தோடும் இடமாகத் திருவையாற்றைப் புனைதலால், இந்தத் திருவையாற்று வட்டத்திலேயே காவிரிக்கரையை ஒட்டி விச்சிமலை விளங்கியிருந்து பிற்காலத்தே மறைந்தொழிந்ததாக அறியலாம். சங்க காலத்தே கண்ணனெழினிக்கு உரியதென்று மாமூலனாரால் குறிப்பிடப்பட்ட முதுகுன்றம் (அகம்.197), திருஞானசம்பந்தர் முதலிய நாயன்மார் காலத்தும் சிறந்து விளங்கிப் பிற்காலத்து மறைந்தொழிந்ததுபோல இவ்விச்சிமலையும் மறைந்ததென்று எண்ணலாம.

விச்சிமலை மன்னனான இவ்விச்சிக்கோவின் இயற்பெயரும் விளங்கவில்லை.

பறம்பிற்கோமான் பாரி மூவேந்தரால் வஞ்சித்துக் கொல்லப்பட்டபின் அவன் மகளிரைத் தக்கார்க்கு மணம்முடித்துக் கொடுக்கும் பொறுப்பினைத் தலைமேற்கொண்ட கபிலர், இந்த விச்சிக்கோவை அணுகி இவனிடம் அம்மகளிரை மணக்குமாறு வேண்டியதை அறிகிறோம் (புறம்.200). ஆயின், இவன் அதற்கு இசையாமையால் கபிலர் அம்மகளிரோடு திருக்கோவலூர் சென்றார்.

விச்சிக்கோ வேந்தரொடு பொருத போர் ஒன்று பரணரால் பாடப்படுகின்றது.

வில்கெழு தானை விச்சியர் பெருமகன்
வேந்தரொடு பொருத ஞான்றைப் பாணர்
புலிநோக்கு உறழ்நிலை கண்ட
கலிகெழு குறும்பூர் ஆர்ப்பினும் பெரிதே (குறு.328)

என்று இப்போர்க் குறிப்புப் புலனாயினும் இதன் வரலாறு தெளிவுறத் தெரிந்திலது.

முடிவில் சேரவேந்தன் இளஞ்சேரல் இரும்பொறையால் இவன் போரிலே கொல்லப்பட்டான் என்று அறிகிறோம்.

வெருவரு தானையொடு வெய்துறச் செய்துசென்று
இருபெரு வேந்தரும் விச்சியும் வீழ
அருமிளைக் கல்லகத்து ஐந்தெயில் எறிந்து (பதி.பதி.9)

என்று அச்சேரனின் வெற்றிகளைக் குறிக்கின்ற பதிற்றுப்பத்தின் பதிகத்தடிகளில் இவன் சோழ பாண்டியராகிய இருபெரு வேந்தரொடும் சேரனை எதிர்த்துப் பொருது மாண்டமை புலனாம்.

இவன் தம்பியொருவன் இளவிச்சிக்கோ என்ற பெயரினனாய்ப் பெருந்தலைச் சாத்தனாரால் இகழ்ந்து பாடப்பெற்றுள்ளான் (புறம்.151).

6.3.3 விச்சிக்கோ நன்னன்

பெண்கொலை புரிந்த நன்னனென்று பரணர் பாடலில் பழிக்கப் பெறுபவனே விச்சிக்கோ நன்னன் என்று விளங்கக் காணலாம்.

கண்ணூரக்கோப் பெருநள்ளியின் தம்பியாகிய இளங்கண்ணூரக்கோவும் விச்சிக்கோவின் தம்பி இளவிச்சிக்கோவும் ஒருங்கிருந்தபோது சென்ற பெருந்தலைச் சாத்தனார் கண்ணூரக்கோவைத் தழுவி, விச்சிக்கோவைத் தழுவாது விட்டுக் காரணம் கூறுகையில், அவனை நன்னன் மரபினனாகச் சுட்டி அதனையும் ஒரு காரணம்போல் காட்டுகின்றார் (புறம்.151). "பெண்கொலை புரிந்த நன்னன் போல, வரையா நிரயத்துச் செலீஇயரோ அன்னை" (குறு.292) என்பது இங்கே கருதுகோள் ஆகின்றது (புறம்.151-பழையவுரை). ஆகவே, இப்பெண்கொலை நன்னனை விச்சிக்கோவென்று விளங்கிக் கொள்ள இயலும்.

இந்நன்னன் பெண்கொலை புரிந்த வரலாறாவது: ஆற்றிலே நீராடச் சென்ற பெண்ணொருத்தி அந்நீரிலே அடித்து வரப்பட்ட மாங்காயொன்றை எடுத்துத் தின்ற தவற்றிற்காக அவள் தந்தை எண்பத்தொரு களிற்றியானைகளுடனே அவளது நிறையளவு பொன்னால் செய்த பாவையொன்றைக் கொடுப்பவும் கொள்ளானாய், இவன் அப்பெண்ணைக் கொலை புரிந்தான் என்பதாம்.

மண்ணிய சென்ற ஒண்ணுதல் அரிவை
புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு
ஒன்பதிற் றொன்பது களிற்றொடு அவள்நிறை
பொன்செய் பாவை கொடுப்பவும் கொள்ளான்

பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரயத்துச் செலீஇயரோ அன்னை
(குறு.292)

என்று இவ்வரலாற்றைத் தோழிகூற்று அகத்திணைப் பாடலில் அமைத்துக் காட்டுவார் பரணர்.

இனி, இப்பெண்கொலை புரிந்த நன்னன் செய்தியே என்று எண்ணத்தக்க மற்றொரு செய்தியையும் அப்பரணரே வேறொரு தோழிகூற்றுப் பாடலில் வைத்து விளக்குவார். நன்னனிடத்து ஏதோவொரு காரணம் பற்றிப் பகைமையுற்ற கோசர், தாம் கூறிய ஒன்றுமொழியாகிய வஞ்சினத்திற்கேற்ப வன்மைச் சூழ்ச்சி புரிந்து, அவனுடைய நறுமாமரத்தை வெட்டி அவனாட்டையும் கைப்பற்றி அதனுட் புகுந்தனர் என்று அவர் அப்பாடலில் (குறு.73) குறிப்பிடுவார். ஆக, இவ்விரு வரலாற்றுச் செய்திகளையும் ஒருங்கு வைத்துநோக்க, பெண் கொலை புரிந்த நன்னனே கோசரால் வெல்லப் பட்டவனுமாவான் எனக் கருதுவது எளிதாகின்றது. இதனால் அப்பெண்கொலை காரணமாகவே கோசர் இவனது மாமரத்தை வெட்டி இவனாட்டையும் கைப்பற்றினரெனக் கருதவும் வாய்ப்பாகின்றது. இந்த மாமரம் இவனுடைய காவல் மரமாகலாம்.

மற்று, கொண்கான நன்னனைப் பாடிய பரணரே இவனையும் பாடியுள்ளாராயினும், அவரால் பலபடப் பாராட்டிக் குறிக்கப்பெற்ற அவனும் நரகில் புகுவோனாய்ப் பழித்துக் கூறப்பெற்ற இவனும் தம்முள் வேறானவரென்பது விளங்கும்.

6.3.4. அன்னி

சோழநாட்டில் இக்காலத்து மயிலாடுதுறைக்கு அண்மையில் உள்ள தேரழுந்தூரை ஆண்ட அழுந்தூர்வேள் திதியனுக்குப் பகைவனாயும், மிழலைக்கூற்றத்து வேளெவ்விக்கும் பொறையாற்று கிழானாகிய நற்றேர்ப் பெரியனுக்கும் நண்பனாயும் அறிய வருபவன் அன்னி. இவனுடைய குறுநிலமும் தலைநகரும் குறிப்பாக எவையென்று கூறப்படவில்லை. ஆயினும், மேற்கண்ட மூவர் நாடுகளுக்கும் அண்மையில் அமைந்தனவென்றே அவற்றை அறியலாம்.

மற்று, சோழநாட்டுப் பாவநாசத்திற்கு அருகிலுள்ள அன்னிகுடியென்பதே இவனூரென்பார் நற்றிணை உரையாசிரியர் நாராயணசாமி ஐயர் (நற்.பாடப்பட்டோர் வரலாறு, ப.75). திதியனோடே இவன் போருடற்றிய இடமான குறுக்கையென்பதும் அருகிலேயே குடந்தைக்குத் தென்பால் இருகல் தொலைவில் அமைந்துள்ளமையால் அவர் குறிக்கும் அன்னிகுடியே இவனூராகலாம்..

அழுந்தூர்வேள் திதியனிடத்துப் பகைமையுற்ற இவ்வன்னி, அவனுடைய காவல் மரமான புன்னையை வெட்டி அவனோடே போர்புரியத் துடித்தான். இவனது துடிப்பையும் அரைகுறை ஆற்றலையும் அறிந்த வேளெவ்வி இவனைத் தடுத்து நயம்புரி நன்மொழிகளால் அறிவுரை கூறி, அத்திதியனோடு போர்புரிதல் இவனுக்கே தீதாய் முடியுமென்று எச்சரித்து, அடக்கவும் அடங்காத இவ்வன்னி, பொறையாற்று கிழானாகிய நற்றேர்ப் பெரியனைத் துணையாகக் கொண்டு படையோடே சென்றான். சென்று, திதியனுடைய குறுக்கையென்னும் ஊரிலிருந்த புன்னைபின் அடியை வெட்டி வீழ்த்தினான். அப்போது இவனைச் சார்ந்த பாணர் கூத்தர் பலரும் இன்னிசை ஆர்ப்பெடுத்தனர். அதனைத் தொடர்ந்து திதியன் தன் புன்னை வெட்டப்பட்டது பற்றிய சினத்தினால் பொங்கியெழுந்து போருக்கு வந்தான். குறுக்கைப் புறத்தே அவனை எதிர்த்துப் பொருத இவ்வன்னி அவனால் கொலையுண்டு மடிந்தான்.

அலரே, அன்னி குறுக்கைப் பறந்தலைத் திதியன்
தொன்னிலை முழுமுதல் தமியப் பண்ணிப்
புன்னை குறைத்த ஞான்றை வயிரியர்
இன்னிசை ஆர்ப்பினும் பெரிதே (அகம்.45)

பயங்கெழு வைப்பின் பல்வேல் எவ்வி
நயம்புரி நன்மொழி அடக்கவும் அடங்கான்
பொன்னிணர் நறுமலர்ப் புன்னை வெஃகித்
திதியனொடு பொருத அன்னி போல
விளிகுவை கொல்லோ நீயே (அகம்.126)

அன்னியும் பெரியன் அவனும் விழுமிய
இருபெரு வேந்தர் பொருகளத்து ஒழித்த
புன்னை விழுமம் போல (நற்.180)

என்றெல்லாம் வருகின்ற பாடலடிகள் இவ்வரலாற்றை உணர்த்துகின்றன.

6.3.5. பொறையாற்றுகிழான் நற்றேர்ப் பெரியன்

கீழைக் கடற்கரை நகரான பொறையாற்றையும் அதனைச் சூழ்ந்த குறுநிலத்தையும் ஆண்டிருந்தவன் பொறையாற்று கிழான். இவனைக் கண்டு கல்லாடனார் பரிசில் வேண்டிப் பாடிய பாடலொன்று புறநானூற்றிலே (391) இடம்பெற்றுள்ளது.

இப்பொறையாற்று கிழான் பெயர் நற்றேர்ப் பெரியன் என்பதாம். இதனை,

> பாடுநர்த் தொடுத்த கைவண் கோமான்
> பரியுடை நற்றேர்ப் பெரியன் விரியிணர்ப்
> புன்னையங் கானற் புறந்தை முன்றுறை (அகம்.100)

எனவும்,

> நறவுமகிழ் இருக்கை நற்றேர்ப் பெரியன்
> கட்கமழ் பொறையாறு (நற்.131)

எனவும் வருகின்ற உலோச்சனாரின் பாடலடிகளால் அறியலாம். இவற்றால் இவன் கைவண்மையும் விளங்கும்.

அழுந்தூர்வேள் திதியனிடத்துப் பகைமையுற்ற அன்னியென்னும் குறுநில மன்னன், மிழலைக் கூற்றத்து வேளெவ்வியின் நயம்புரி நன்மொழிகளையும் மீறி, அத்திதியனுடைய காவல் மரமான புன்னையை வெட்டி அவனுடன் போர்புரியத் துடித்தெழுந்தபோது, அவனுக்கு இந்த நற்றேர்ப் பெரியனே துணைபோனான். போய் அவனுடன் கூடித் திதியனுடைய புன்னை மரத்தை வெட்டினான்.

> அன்னியும் பெரியன் அவனும் விழுமிய
> இருபெரு வேந்தா பொருகளத்து ஒழித்த
> புனனை விழுமம் போல (நற்.180)

எனபதனால் இஃது அறியப்படும். உடனே தன் புன்னை மரம் வெட்டப்பட்டது பற்றி வெகுண்டெழுந்த திதியன் குறுகையென்னும் ஊர்பபுறத்தே போரிட்டு அன்னியைக் கொனறானாக அறிகிறோம். ஆயின், இப்பெரியனின் முடிவு பேசபபட வில்லை.

பொறையாற்று மன்னனான இந்நற்றேர்ப் பெரியனோடே தொடர்புடைய அன்னியின் செயதியை நககீரரும் பாடியுளளமையால் (அகம்.126), அவருக்கு ஒத்த காலத்தவராகிய கல்லாடனாரால் பாடப்பெற்ற பொறையாறறு கிழான் இபபெரியனேயென்பது புலனாகும்.

6.36 பரதவர்கோமான் மத்தி

சோழ நாட்டிலே மயிலாடுதுறைக்குக் கிழக்கே காவிரிக கரையையொட்டி அமைந்த கழாரென்ற ஊரையும் அதனைச் சூழ்ந்த குறுநிலத்தையும் ஆண்டிருந்தவன் பரதவர் கோமான மத்தி

கழாரென்ற ஊர் பொதுவாகச் சோழர்க்குரிய தெனறே சொல்லப்படும். கழார்க் கீரனெயிற்றியார் என்ற அவவூர்ப் புலவரும அதனை, 'வெல்போர்ச் சோழர் கழார்' (நற் 281) என்றே குறிபபிடக் காண்கிறோம். அவவூர் முனை அமைந்த காவிரித் துறையில் நடைபெறும் புனலவிழா, சோழவேந்தரும் வந்திருந்து கண்டுகளித்துக் கொண்டாடுகின்ற சிறப்பு வாய்ந்தது. ஒருமுறை சோழப் பெருவேந்தன் கரிகால் வளவனே தன் சுற்றத்தோடு வந்து கழார் முன்துறையில் நிகழும் காவிரிப் புனல்விழாவைக் கொண்டாடிய போதுதான் அவன்மகள ஆதிமந்தியின் காதலனான ஆட்டனததியைக் காவிரிப்புனல் கொண்டெ பளித்தது (அகம்.376) என்பார் பரணர். அவவாறு காவிரி வெள்ளத்தால் ஈர்த்துச் செல்லப்பட்ட காதலனைக் காணாது அலமந்து சென்ற ஆதிமந்திக்குக கடல் முகத்திலே அவனைக் காப்பாற்றிக் கொடுத்த மருதியென்பாள் அம்முயறசியில் தானே கடலால் கொள்ளப்பட்டாளென்றும் அபபரணரே பாடுவார் (அகம்.222).

இவவாறு சோழ வேந்தரின் பேராட்சிக்கு உட்பட்ட இநதக கழாரை அவர்களுக கீழ்ப்பணிந்து ஆண்டிருந்தான

மத்தி என்றே அறிய வருகின்றது. கரிகாலனொடு பயின்றிக கழார் முன்துறையைப் பாடிய பரணர் தாமே.

பல்வேல் மத்தி கழாஅர் (அகம்.6)

வல்வில் எறுழ்த்தோள் பரதவர் கோமான்
பல்வேல் மத்தி கழாஅர் முன்துறை
நெடுவெண் மருதொடு வஞ்சி சாஅய்
விடியல் வந்த பெருநீர்க் காவிரி (அகம.226)

என்றவாறு அதனை மத்தியொடும் பயின்றிப பாடியுள்ளவற்றைப் பார்க்கிறோம்.

கைவண் மத்தி கழாஅர் (ஐங்.61)

என்று ஓரம்போகியாரும் இவ்வூரை மத்திக்கு உரியதெனப் பாடுவார்.

இங்ஙனம் கழாரையாண்ட குறுநில மன்னன். பரதவர் கோமான் பல்வேல் மத்தி தனக்கு மேலாளனாய் விளங்கிய பெருநில வேந்தனான சோழனிடம் படைத்தலைவருள் ஒருவனாயும் திகழ்ந்தான். அக்காலத்துத் தன்போல் அச்சோழனிடம் பொறுப்பேற்றிருந்த மற்றொரு குறுநில மன்னனான எழினியென்பான் ஒருமுறை, யானைகளைப் பிடித்துவருமாறு அச்சோழன் மேற்கொண்ட வேட்டை வினைக்கு வாராதனாக, கடுஞ்சினமுற்ற வேந்தன் அவ்வெழினியைப் பிடித்து ஒறுத்து வருமாறு இம்மத்தியை ஏவினான்.

வேந்தனின் ஏவலையேற்ற மத்தி எழினியைத் தேடிப்போய்த் தொலைதூரத்து நாட்டிலே எதிர்ப்பட அவனைப் பற்றி, அவனது பல்லைப் பறித்துவந்து தன்னுடைய வெண்மணியென்னும் ஊர்வாயிலிடத்தே அமைந்த கதவில பதித்து, அவ்வாயிலருகே அமைந்த கடல்துறையில் ஒரு வெற்றித் தூணையும் நாட்டினான என்று அறிகிறோம்.

குழியிடைக் கொண்ட கன்றுடைப் பெருநிரை
பிடிபடு பூசலின் எய்தாது ஒழியக
கடுஞ்சின வேந்தன் ஏவலின் எயதி
நெடுஞ்சேண் நாட்டில் தலைத்தார்ப படட

கல்லா எழினி பல்லெறிந்து **அழுத்திய**
வண்கட் கதவின் வெண்மணி **வாயில்**
மத்தி நாட்டிய கலகெழு **பனித்துறை**
நீரொலித் தன்ன பேஎர்
அலர்நமக்கு ஒழிய அழப்பிரிந் தோரே (அகம்.211)

என்று இச்செய்தி குறித்துப் பாடுவார் மாமூலனார். இம் மத்தியின் அரசியல் வரலாறாக அறிய வருவது இஃதொனறேயாம்.

6.3.7 கண்ணன் எழினி

இக்காலத்து விருத்தாசலம என்று வடமொழிப் பெயரால் வழங்கப்படுகின்ற திருமுதுகுன்றத்தையும் அதனைச் சூழ்ந்த நாட்டையும் ஆண்டிருந்த குறுநில மன்னனாய் அறிய வருபவனே கண்ணன எழினி.

முனையெழ, முன்னுவர் ஓடடிய முரண்மிகு திருவின்
மறமிகு தானைக் கண்ணன் எழினி
தேமுது குன்றம் (அகம்.197)

என்று இவனையும் இவனது திருமுதுகுன்றத்தையும் குறித்துக் காட்டுவார் மாமூலனார். போர்முனைக்கு வருகின்ற பகை மன்னரை வென்றோட்டிய வலிமைமிக்க வெற்றித் திருவினையும், அதற்கேற்ற மறமிக்க தானையினையும் உடையவனென்பதால் இவனுடைய ஆற்றலும் படைவலிமையும் அறியப்படும்.

6.3.8. அகுதை

அஃதையென்றும் (அகம். 76, 113) அகுதையென்றும் (புறம்.233, 347; அகம்.208; குறு.298) குறிக்கப் பெறுகின்ற குறுநில மன்னன் கூடல்நகரை ஆண்டிருந்தோனாய் அறியவருகின்றான்.

மணம்நாறு மார்பின் மறப்போர் அகுதை
குண்டுநீர் வரைப்பின் கூடல (புறம்.347)

என்று இவனுடைய கூடல்நகரம் பாடப்பெறுகின்றது. 'குண்டுநீர் வரைப்பின் கூடல்' எனப்படுதலால் கடல் சூழ்ந்ததாகவுடைய இக்கூடல நகரம பாண்டியருடைய

தலைநகரான கூடல் மாநகர் அன்றென்பது விளங்கும். எனவே, மேற்காநாட்டுக் கூடலெனவும்[8] கூடல் மங்கலமெனவும்[9] கல்வெட்டுக்களிலே கூறப்படுகின்ற கூடலூராக இதனைக் கொள்ளலாம் என்பார் ஔவை துரைசாமிப் பிள்ளை (புறம்.347- உரை). இவ்வூர் இக்காலத்தே மாவட்டத் தலைநகராய்க் கீழைக்கடலோரத்தே கடலூரென விளங்குகின்றது. இதற்கு இன்றும் கூடலூர் என்ற பெயர் வழக்கமுண்டு.

இக்கூடல் நகரையாண்ட அகுதை ஆற்றலமைந்த பெரும்படையுடையவன் 'வசைவிடக கடக்கும் வயங்குபெருந் தானை அகுதை' (அகம்.208) எனவரும் பரணரின் பாடலடிகளால் இதனையறியலாம். 'எறிந்து இலைமுரிந்த கதுவாய் வேலின் . . மறப்போர் அகுதை' (புறம்.347) என்ற கபிலரின் பாடலடிகளால் இவனது போராற்றலும் புலனாகும்.

ஒருகால், வெளியன் வேண்மான் ஆய் எயினன் பாழி நகரையடுத்த போர்க்களத்தில் மிஞிலியை எதிர்த்துப் போரிட்டு மாண்ட போது, அவனுரிமை மகளிர் எய்திய துன்பத்தை இந்த அகுதையே களைந்தானென்று அறிகிறோம் (அகம்.208). ஆதலால், இவன் அந்த ஆய் எயினனுக்கு நட்புற்றுப் பழகியவனென்பது விளங்கும்.

மற்றொருகால், இவ்வகுதைக்குப் பகைவரால் துன்பம் நேர்ந்ததாக, இவனிடத்துக் கோடாத நட்புடைய கோசர் தம் வழிபாடு மாறாது இவனைக் காத்துநின்று நிலைநிறுத்தினர் என்றும் கல்லாடனார் பாடுவார் (அகம்.113).

வேறொருகால், இவன் மேற்கொண்ட போரில் பகைவரால் எறியப்பட்ட ஆழிப்படையினால் இவன் புண்பட்டு வீழ்ந்தானென்ற பொய்ம்மொழியொன்று எங்கும் பரவி மறைந்ததாகவும் காண்கிறோம் (புறம்.233).

இவன் ஈகைத்திறம் மிக்கவனென்றும் புலவர் பலரால் பாராட்டப் பெற்றுள்ளான்.

639. அவியன்

இக்காலத்துக் கடலூர் மாவட்டத்தில் தென் பெண்ணையாற்றின் தென்கரைச் சார்பிலே அவியனூர்

என்றோர் ஊர் உள்ளது. இடைக்காலத்தில் திருமுனைப்பாடி நாட்டிலே இவ்வூரைச் சூழ்ந்த சிறுநாடு இதன் பெயரால் அவியனூர் நாடென்றே வழங்கியதென்றும், அந்நாட்டிற்கு இந்த அவியனூரே தலைநகராயிருந்ததென்றும் திருவதிகைக் கல்வெட்டொன்று[10] தெரிவிக்கின்றது. இவ்வூரின் பெயரமைதிக்குக் காரணமாய், இதனை ஏற்படுத்தியவனே சங்க காலத்து அவியனென்று அறியலாம்.

'கான்கெழு நாடன் கடுந்தேர் அவியன்' (புறம்.383) என்று இவன் நாட்டொடு சார்த்திப் பாடப்பெறுகின்றான். இவனை இவ்வாறு பாடியவர் மாறோக்கத்து நப்பசலையார். அவரது பாடலால் இவனது ஈகைப்பண்பின் சிறப்பு விளங்கும்.

அடுத்து, 'களிமலி கள்ளின் நற்றேர் அவியன்' (அகம்.271) எனக் காவிரிப்பூம் பட்டினத்துச் செங்கண்ணனாரும் அகப்பாடலொன்றிலே இவனைக் குறித்துப பாடியுள்ளதைப் பார்க்கிறோம். ஆயினும், இவனைப் பற்றிய அரசியல் வரலாறாக ஏதும் அறியுமாறில்லை.

6.3.10 கரும்பனூர் கிழான்

தமிழகத்தின் வடபால் உள்ள வேங்கடமலையை ஒட்டிய குறுநிலத்தை ஆண்டிருந்தவன் கரும்பனூர் கிழான்.

ஒலிவெள் அருவி வேங்கட நாடன் . . .
கரும்ப னூரன் காதல் மகனே (புறம்.381)

என்று இவனைப் பாடுகின்ற புறத்திணை நன்னாகனாரின் புறப்பாடலால் இவனுடைய நாடு வேங்கட மலையைச் சார்ந்ததென்பதும், அந்நாட்டகப் பட்டதே கரும்பனூரென்பதும் அறியப்படுகின்றன. இந்தக் கரும்பனூர் தொண்டைநாட்டுத் திருவேங்கடக் கோட்டத்தில் உள்ளதென்றும், இதற்குச் சான்றாகத் திருக்கழுக்குன்றத்துக் கல்வெட்டொன்று[11] கரும்பனூர் வணிகன் ஆதித்தனென்ப வனைக் குறிக்கின்றதைக் கொள்ளலாமென்றும் கூறுவர் ஔவை துரைசாமிப்பிள்ளை (புறம் 381 முன்னுரை). அவரே, கரும்பனூர் என்னும் தொண்டை நாட்டூர் இப்போது கரும்பூர் என வழங்குகிறது என்று மேல்விளக்கமும் தருகின்றார்.

மற்று, மேலே அவியனென்பானுக்கு உரியதாகக் காணப்பட்ட அவியனூருக்கு மிகவும் அண்மையிலேயே, ஏறத்தாழ இருகல் தொலைவிலேயே, இக்காலத்துக் கடலூர் மாவட்டத்தில் தென்பெண்ணையாற்றின் தென்கரைச் சார்பிலேயே கரும்பூர் என்றொரு மூதூர் உள்ளது. புறத்திணை நன்னாகனாரின் பாடலில் காணுமாறும், தன் பெயருக்கேற்பவும் இந்தக் கரும்பூர் வயல்களில் கரும்பு மிக விளையக் காணலாம். வன்னிலத்திற்குரிய வகையவாய்ப் பாடலில் புனையப்பெறுகின்ற இருப்பை மரங்களையும் இவ்வூர் மன்றத்தில் முதுமரங்களாய்க் காண்கிறோம். கரும்பனூர் கிழான் மரபுக்கொத்த வேளாண் குடியினரும் இவ்வூரில் செல்வச் செழிப்போடே சிறந்து திகழ்கின்றனர். புறநானூற்றுத் தொகையின் பாடல் வரிசையில் அவியனைப் பற்றிய பாடலையடுத்துக் கரும்பனூர் கிழானைப் பற்றிய பாடல் அமைந்திருப்பதும், அவியனூரையடுத்து இந்தக் கரும்பனூர் நிலைத்திருப்பதும் ஒத்துநோக்கத் தக்கனவாய் உள்ளன. ஆயின், இந்தக் கரும்பூர் வேங்கட நாட்டைச் சேர்ந்ததாய் எண்ணத்தக்க அண்மையில் இல்லையென்பது ஒன்றே எதிர்க்கருத்தாய் எழுகின்றது. இது, மேலும் எண்ணத்தகுவதாம்.

இனி, இககரும்பனூர்கிழான், 'அறத்துறை அம்பி' (தரும ஓடம்) எனப் புகழப்படுமளவு ஈகையறத்திலே மேம்பட்டு விளங்கினானாக, இவனைப் பாடிய நன்னாகனார் பாடல்கள் இரண்டினாலும் (புறம்.381, 384) நன்கு அறியலாம் இவனது அரசியல் வரலாறேதும் அறியுமாறில்லை.

6.3.11. ஓய்மான் நல்லியக்கோடன்

பண்டைக்காலத் தமிழகத்துக் குறுநில மன்னர் குடிகளுள் ஒன்றாக ஓவியர்குடி விளங்கியது. இந்த ஓவியர்குடி மன்னன் ஓவிமான் எனப் பெயர்பெற்றான். ஓவிமான் என்னும் பெயரே நாளடைவில் ஓய்மான் என மருவி வழங்கியது. 'உறுபுலித் துப்பின் ஓவியர் பெருமகன்' (சிறுபாண்.122) எனப் பாடப்பெறுகின்ற நல்லியக்கோடனே ஓய்மான் நல்லியக்கோடனென்றும் (புறம்.176-அடிக்குறிப்பு) குறிக்கப் பெறுதலைக் காண்கிறோம்.

ஓய்மானாட்சிக்கு உட்பட்ட நாடு ஓய்மானாடு எனப்பெயர் பெற்றது. இக்காலத்துத் திண்டிவனம்

வட்டத்தையும் மதுராந்தக வட்டத்தில் தென்பாலையும் உள்ளடக்கியிருந்ததாய் இந்த ஓய்மானாடு உணரப்படுகின்றது.[12]

மற்று, இவ்வோய்மானாடே மாவிலங்கையென்றும் (புறம்.176, சிறுபாண்.120) இலங்கையென்றும் (புறம்.379) குறிக்கப பெறுகின்றது. ஆயின், மாவிலங்கையென்பது முதற்கண் ஓரூரின் பெயர். அஃது இக்காலத்தும் ஆழ்ந்த அகழியும் நீண்ட மதிலுமாகிய அறிகுறிகளோடே மேன்மாவிலங்கை, கீழ்மாவிலங்கை என்று இருகூறுற்றதாய் விழுப்புரம் மாவட்டத்துத் திண்டிவனம் வட்டத்தில் திகழ்கின்றது.[13] எனவே, ஊருக்குப் பெயரான மாவிலங்கையே பின்னர் அவ்வூரைச் சூழ்ந்த நாட்டிற்கும் பெயராயிற்றுப் போலும்

> "மாவிலங்கையென்பது புனல்நாட்டுக்கு வடக்குள்ள அருவா நாடு, அருவா வடதலைநாடு என்ற இரண்டும் சேர்ந்த இடமென்று கூறுவர்"
> (பத்து; புறம். பாடப்பட்டோர் வரலாறுகள்)

எனக குறித்த உ.வே. சாமிநாதையரின் குறிப்பும் இங்கே உணரத்தகும்.

ஓய்மானாட்டின் தலைநகராய் விளங்கியவூர் கிடங்கில் எனபதாம். இவ்வூர் இக்காலத்துக கிடங்கால் எனற மரூஉப் பெயரோடே திண்டிவனத்தைச் சார்ந்துள்ளது. ஆயினும், திண்டிவனத்திலுள்ள திண்டீசுவரமென்னும் சிவன்கோயில் கலவெட்டுக்களில இக்கோயிலிருக்கும் ஊரின் பெயர் கிடங்கிலெனக் குறிக்கப்பட்டுள்ளது கொண்டு, பண்டை யகிடங்கில் இன்றைய திண்டிவனத்தையும் உட்படுத்தியிருந்ததாய் உணரப்படுகிறது. இதில் சிதைந்த அகழியும இடிந்த கோட்டையும் இன்றும் காணப்படுகின்றன.

இந்தக கிடங்கிலேயன்றியும் எயிற்பட்டினம் (சிறுபாண் 152-153; வெண்பா.1), வேலூர் (சிறுபாண்.173), ஆமூர் (சிறுபாண்.188) ஆகிய ஊர்களும் ஓய்மானாட்டில் சிறந்து விளங்கின

மாவிலங்கை மன்னராகிய ஓய்மான்களுள் சிறந்தோனாய முதற்கண் அறியவருபவன் ஓயமான் நலலியக்

கோடன். இவனைக்குறித்து இடைக்கழிநாடடு நல்லூர் நத்தத்தனார் பாடிய சிறுபாணாற்றுப்படையும், புறத்திணை நன்னாகனார் பாடிய புறப்பாடலொன்றும் (புறம்.176) இவன் செய்திகள் மற்றும் இவனாட்டுச் செய்திகளை அறிவிக்கின்றன.

தொன்மா விலங்கைக் கருவொடு பெயரிய
நன்மா விலங்கை மன்ன ருள்ளும்
மறுவின்றி விளங்கிய வடுவில் வாய்வாள்
உறுபுலித் துப்பின் ஓவியர் பெருமகன்
களிற்றுத்தழும்பு இருந்த கழல்தயங்கு திருந்தடிப்
பிடிகணம் சிதறும் பெயல்மழைத் தடக்கைப்
பல்லியக் கோடியர் புரவலன் பேரிசை
நல்லியக் கோடன் (சிறுபாண்.119-126)

எனச் சிறுபாணாற்றுப்படை இவனை நாட்டொடும் குடியொடும் சார்த்தித் தாளாற்றலும் கைவண்மையும் விளங்க அறிமுகப்படுத்தக் காண்கிறோம். இம்முறையே,

பெருமா விலங்கைத் தலைவன் சீறியாழ்
இல்லோர் சொல்மலை நல்லியக் கோடன் (புறம்.176)

எனப் புறநானூற்றுப் பாடலும் இவனைப் புகழ்கின்றது.

இந்நல்லியகோடன், கிடங்கிலைத் தலைநகராகக் கொண்டு ஆண்டமையால், 'கிடங்கிற்கோமான்' (சிறுபாண்.160) எனவும், குறிஞ்சி நிலமான மலைநாடடை ஆண்டமையால், 'குறிஞ்சிக்கோமான்' (சிறுபாண்.267) எனவும் குறிக்கப் பெறுகின்றான்.

இவன் செய்ந்நன்றியறிதல், சிற்றினமின்மை, இன்முகமுடைமை, இனியனாதல், அஞ்சினார்க்கு அளித்தல், வெஞ்சினமின்மை, ஆணணி புகுதல், அழிபடை தாங்கல், கருதியது முடித்தல், காமுறப்படுதல், ஒருவழிப் பாடாமை, ஓடியது உணர்தல், அறிவுமடம்படுதல், அறிவுநன்குடைமை வரிசையறிதல், வரையாது கொடுத்தல ஆகிய பண்புகளின் சிறப்பினால் முறையே அறிஞர்களாலும் மறவர்களாலும் அரிவையராலும், பரிசிலராலும் பாராட்டப்பெற்று அவையின்கண்ணே அமர்ந்திருக்கும் மேம்பாடுடையோனாய் அறியவருகின்றான் (சிறுபாண் 207-220). அன்றியும் இவன்

தன்னால் வணங்கத் தக்க முதியோரை வணங்கி முகிழ்த்த கைகளையுடையவன்; தன்னை எதிர்த்து வேலெறிந்து போர்புரியும் வீரர்க்கு மகிழ்ச்சியோடே மலர்ந்து கொடுத்த மார்பினையுடையவன்; ஏரோராகிய குடிமக்களுக்கு நிழல்செய்த செங்கோலையுடையவன்; தேரோராகிய பகைமன்னர்க்கு வெம்மை செய்த வேலையுடையவன் (சிறுபாண்.231-234) என்றும் பாராட்டப் பெறுகின்றான்.

இந்த ஓய்மான் நல்லியக்கோடன் கடைச்சங்க காலத்து வள்ளல் எழுவருக்கும் காலத்தால் பிற்பட்டவன்.

ஓரிக் குதிரை ஓரியும் எனவாங்கு . . .
எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம் . . .
ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள் . . .
நல்லியக் கோடன் (சிறுபாண்.111-126)

எனவரும் சிறுபாணாற்றுப்படை அடிகளால் இது தெளிவாம்.

6.3.12. ஓய்மான் வில்லியாதன்

ஓய்மான் நல்லியக்கோடன் வழித்தோன்றலாய் அவனையடுத்து ஆட்சியேற்றவன் ஓய்மான் வில்லியாதன். முன்னர் நல்லியக்கோடனைப் பாடிய புறத்திணை நன்னாகனாராலேயே பின்னர் இவ்வில்லியாதனும் பாடப்பெற்றுள்ளான்.

நெல்லமல் புரவின் இலங்கை கிழவோன்
வில்லி யாதன் கிணையேம் பெரும! (புறம்.379)

என்று கிணைப்பொருநன் கூற்றில் அமைந்த பாடலால் இவனும் மாவிலங்கை மன்னனென்பது அறியப்படும். இவனது வேறு செய்தியேதும் விளங்கவில்லை.

6.3.13 தொண்டைமான் இளந்திரையன்

6.3.13.1. தொண்டையர் - வேங்கடம்

தமிழகத்து வடவெல்லையாய் விளங்கிய வேங்கட மலையை உள்ளிட்டு அதன் தென்பால் அமைந்த நிலத்தைத் தொன்றுதொட்டு ஆண்டுவந்த அரச மரபினராய் அறிய

வருபவர் தொண்டையர். இவருடைய வேங்கடத்தோடு தமிழகம் முடிவுற, அதற்கு அப்பால் வடுகர்நாடு அமைந்திருந்தது எனப் பாடுவார் தாயங்கண்ணனார்.

வினைநவில் யானை விறற்போர்த் தொண்டையர்
இனமழை தவழும் ஏற்றரும் நெடுங்கோட்டு
ஓங்குவெள் ளருவி வேங்கடத்து உம்பர் . . . .
வால்நிணப் புகவின் வடுகர் தேஎத்து (அகம்.213)

எனவரும் இவ்வகப்பாடலடிகளால் இத்தொண்டையர் போர்த் தொழில் பயின்ற யானைப்படைகளோடே தாமும் வெற்றி தரும் போரிலே வல்லவரென்பதையும் உணர்த்துவார் அப்புலவர். அவரைப் போலவே கல்லாடனாரும் இத்தொண்டையரைக் குறிக்கையில், இவர் தம்மை எதிர்த்துப் போரிடுவோராகிய பகைவர்தம் மண்ணை எடுத்துண்ணும் தலைமைத் தன்மையமைந்த யானைப்படையோடே பெரிய தேர்ப்படையையுமுடையவரென்றும் கூறுவார்.

. . . . . பொருவார்,
மண்ணெடுத் துண்ணும் அண்ணல் யானை
வண்தேர்த் தொண்டையர் வழையமல் அடுக்கத்துக்
கன்றில் ஓரா விலங்கிய
புன்தாள் ஓமைய சுரனிறந் தோரே (குறு.260)

என்று அவர் கூற்று அமைகின்றது. இவ்விரு புலவராலும் இத்தொண்டையர்தம் படையுடைமையும் போர்வலிமையும் நன்கு புலனாகின்றன. படையின்கண்ணும் யானைப் படையின் சிறப்பே எடுப்பாகக் கூறப்படுதல் காணலாம். அதற்குக் காரணம் இவருடைய வேங்கடமலை யானைகளால் சிறப்புடையது என்பதாம்.

புன்தலை மடப்பிடி இனையக் கன்றுதந்து
குன்றக நல்லூர் மன்றத்துப் பிணிக்கும்
கல்லிழி அருவி வேங்கடம் (புறம்.389)

செந்நுதல யானை வேங்கடம் (அகம்.265)

என்பன போன்று இன்னும் பல சான்றுகளால் (அகம்.27, 61, 83, 85, 209, 211, 213) இதனையுணரலாம்.

வடவயின், வேங்கடம் பயந்த வெண்கோட்டு யானை
மறப்போர்ப் பாண்டியர் (அகம்.27)

எனத் தென்தமிழ் வேந்தராகிய பாண்டியரும் வடவேங்கடத்து யானைகளையே தம் படையகத்துக் கொண்டு, அவற்றாலலேயே மறப்போரில் சிறந்து மாண்புற்றனராக மதுரைக் கணக்காயனாரும் மொழிவார்.

6.313.2. தொண்டையர் மருகன் திரையன்

இனி, இத்தொண்டையர் குடி மன்னன் தொண்டைமான் எனப் பெயர் பெறுகின்றான். அம்முறையில் அறியவருகின்ற ஒருவனே தொண்டைமான் இளந்திரையன். இவனிடத்தே கடியலூர் உருத்திரங்கண்ணனார் பெரும்பாணர்களை ஆற்றுப்படுத்தும் முறையில் பாடிய பெரும்பாணாற்றுப்படையினால் இவனைப் பற்றிய செய்திகளை அறியலாம்.

பகைவர், கடிமதில் எறிந்து குடுமி கொள்ளும்
வென்றி யல்லது வினையுடம் படிணும்
ஒன்றல் செல்லா உரவுவாள் தடக்கைக்
கொண்டி உண்டித் தொண்டையோர் மருக!
(பெரும்பாண்.450-454)

என்று அவ்வாற்றுப்படைப் பாடலிலே இவன் தன் குடியொடு சார்த்தி விளிக்கப் பெறுகின்றான். பகைவருடைய அரணையெறிந்து கோட்டையைக் கைப்பற்றிக் கொள்ளும் வெற்றியையன்றிப் போருக்கிடையே உடன்பாட்டினையும் ஒத்துக்கொள்ளாத மறச்செருக்கினையும் பகைவர் நாட்டை வென்று கொள்ளை கொள்ளும் உணவையுமுடைய தொண்டையோர் மரபினனாக இவனை இவ்வடிகள் காட்டுகின்றன. 'கச்சியோனே கைவண் தோன்றல்' (பெரும்பாண்.420) என்பதனால் இவன் கச்சியாகிய காஞ்சிமாநகரிலே இருந்து அரசாண்டமை அறியப்படும்.

6.313.3 பிறப்பு வரலாறு

இனி, இத்தொண்டைமான் இளந்திரையனின் பிறப்புமுறை குறித்து,

இருநிலம் கடந்த திருமறு மார்பின்
முந்நீர் வண்ணன் பிறங்கடை, அந்நீர்த்
திரைதரு மரபின் உரவோன் உம்பல்
மலர்தலை உலகத்து மன்னுயிர் காக்கும்
முரசுமுழங்கு தானை மூவ ருள்ளும்
இலங்குநீர்ப் பரப்பின் வளைமீக் கூறும்
வலம்புரி யன்ன வசைநீங்கு சிறப்பின்
அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்
பல்வேல் திரையன் (பெரும்பாண்.29-37)

எனப் பெரும்பாணாற்றுப்படை பேசுகின்றது. இதற்கு உரைவரைந்த நச்சினார்க்கினியர்,

"மூவேந்தருள்ளும் தலைமை வாய்ந்தோனும்
திருமாலின் பின்வந்தோனுமாகிய சோழன்
குடியிற் பிறந்தோன்; கடலின் திரை
கொண்டுவந்தமையால் திரையன்
என்னும் பெயரையுடையவன்"

என்று பொருள்வரைந்த பின்னும்,

"நாகபட்டினத்துச் சோழன் பிலத்துவாரத்தால்
நாகலோகத்தே சென்று நாககன்னியைப் புணர்ந்த
காலத்து அவள், 'யான் பெற்ற புதல்வனை என்
செய்வேன்' என்றபொழுது, 'தொண்டையை
அடையாளமாகக் கட்டிக் கடலிலே விட, அவன் வந்து
கரையேறின் அவற்கு யான் அரசவுரிமையை
எய்துவித்து நாடாட்சி கொடுப்பல்' என்று அவன்கூற,
அவளும் புதல்வனை அங்ஙனம் வரவிடத் திரை
தருதலின் திரையனென்று பெயர்பெற்ற கதை
கூறினார்"

என்றொரு வரலாறும் காட்டுவார். இதன்கண் திரையனென்ற பெயர்க்குக் காரணம் கூறுவதோடே தொண்டையை அடையாளமாகக் கட்டிவிட்ட குறிப்பினால் இவனுக்குத் தொண்டைமான் என்ற பெயர் ஏற்பட்டதென்னும் கருத்தையும் நச்சினார்க்கினியர் இணைத்துள்ளமை காண்கிறோம்.

இந்தக் கதையோடே ஓரளவு ஒட்டிய கதையை மணிமேகலை காப்பியமும் கூறுகின்றது (மணி. 24, 25, 29).

காவிரிப்பூம்பட்டினத்துக் கானற்சோலையில் இளவேனில் காலத்தே நெடுமுடிக்கிள்ளியென்ற சோழன் முன் தோன்றிய பீலிவளையென்ற நாகமகள் அவனோடே ஒரு திங்கள் முழுதும் உறைந்திருந்து மறைந்தனளென்றும், பின்னர் அப்பீலிவளை நாகநாடு சென்று தான் பெற்ற மகனை அவன் தந்தையான கிள்ளியிடம் சேர்ப்பிக்குமாறு கருதியிருக்கையில், அங்கு வந்த சோழநாட்டு வணிகனிடம் அம்மகனைக் கொடுத்து மன்னனிடம் சேர்க்கச் சொன்னாளென்றும், மன்னன் மகனை மகிழ்ந்தேற்ற வணிகன் அவனோடே கலத்திலேறி வந்தபோது கடலகத்தே கலமுடைந்து கவிழ்ந்ததாக அம்மகன் கடலால் கொள்ளப்பட்டானென்றும், இந்தமட்டிலேயே இக்கதையை அக்காப்பியம் எடுத்துக் கூறுகின்றது. அதில் சோழன் பெயர் நெடுமுடிக்கிள்ளியென்றும் நாககன்னியின் பெயர் பீலி வளையென்றும் அறியவருகின்றன. ஆயினும், தன் மகனைத் தன்னிடம் விடுத்தற்குரிய முறைகளை அக்கிள்ளி பீலி வளையிடத்தே அறிவித்த அறிவிப்போ, அதன்படி அவள் அம்மகனுக்குத் தொண்டைக்கொடியை அடையாளமாகக் கட்டிக் கடலில் விட்டதோ, அம்மகன் திரையினால் தரப்பட்டுத் திரையனானதோ எதுவும் அறியப்படாமையேயன்றி இயைபில்லாதவையாகவும் ஒழிகின்றன. ஆதலால், நச்சினார்க்கினியர் கூறுகின்ற கதை இம்மணிமேகலை காப்பியத்தில் கண்ட மூலக்கதையை ஓரளவு அடியொற்றி, அதன்மேல் தொண்டைமான் இளந்திரையனென்ற பெயருக்கேற்பவும், 'திரைதரு மரபின் உரவோன் உம்பல்' என்ற குறிப்பிற்கேற்பவும் புனைந்து வழங்கப்பட்டு வந்த போலிக்கதையே யென்பது புலனாம்.

தொண்டைமான் இளந்திரையன் தனக்கு அடையாளமாகத் தொண்டைக்கொடி கட்டிவிடப்பட்டும் கடலின் திரையினால் கரையின்கண் தரப்பட்டும் வந்தவனாயின், இவன் முதற்கொண்டு இவனுக்கும் இவன் பின்னோர்க்குமே தொண்டைமான் என்றபெயர் அமைதல் வேண்டும். மற்று, அதற்கு மாறாக இவன் முன்னோர் பலருமே தொண்டையரென்று தொன்றுதொட்டுப் பெயர்பெற்று வந்துள்ளனரென்பதை மேலே கண்டோம். அம்மரபு முறையே இவனும், 'தொண்டையோர் மருக' எனக் குறிப்பிட்டு விளிக்கப்பெறுதலையும் காண்கிறோம். ஆதலால், அக்கதை பொய்க்கதையே என்னலாம்.

இனி, இப்பொய்க்கதையின் வழிப்பட்ட நச்சினார்க்கினியருரையை நாவலர் ந.மு.வேங்கடசாமி

நாட்டாரும் மறுத்துக் கூறுவார். "முந்நீர் வண்ணன் பிறங்கடை அந்நீர்த், திரைதரு மரபின் உரவோன் உம்பல்" என்ற பெரும்பாணாற்றுப்படை அடிகளை நச்சினார்க்கினியர் முந்நீர் வண்ணன் பிறங்கடை உரவோனெனவும், அந்நீர்த் திரைதரு மரபின் உம்பலெனவும், அந்தக் கதைக்கேற்பப் பிரித்துக் கூட்டிப் பொருளுரைத்தது பொருந்தாதெனக் கருதும் நாவலர், உரவோனென்பது முடிய ஒரு தொடராகவே கொண்டு, அத்தொடர் முழுதும் சோழனையே குறிப்பதாகவும், அதன்பின் வரும் உம்பலென்ற ஒரு சொல்லே அவ்வுரவோன் மரபினனான இளந்திரையனைக் குறிப்பதாகவும் பொருள் காண்பார். கண்டு,

> கடல் வண்ணனாகிய திருமாலின் பின்வந்தோனும் கடல்நீர்த் திரையால் தரப்பட்ட மரபினையுடைய உரவோனுமாகிய சோழனது வழித்தோன்றல் என்பதே (இவ்வடிகளுக்குரிய) நேரிய பொருளாகும்[14]

என்பார் அவர். திரைதருமரபின் உரவோன் என்பதற்கேற்பத் திரையனென்பதைச் சோழனுக்குரியதோர் பெயரெனக் கொள்ள வேண்டுமெனவும் அவர் குறிப்பார்.[15] குறித்தபின் முடிபாகச் சோழனொருவன் தொண்டையர் மகளை மணந்து பெற்ற புதல்வனே இளந்திரையனென்றும், இவனே தாய்வழியுரிமையால் தொண்டைநாட்டுக்கு அரசன் ஆயினானென்றும், அத்தாய்வழியால் தொண்டைமானென்னும் பெயரும் தந்தை வழியால் திரையனென்னும் பெயரும் இவனுக்கு எய்தினவென்றும் கொள்ள வேண்டுமெனக் கூறுவார்.[16]

6.313.4. சிறப்புச் செய்திகள்

இத்தொண்டைமான் இளந்திரையனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பெரும்பாணாற்றுப்படை பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனாரேயன்றிக் காட்டூர் கிழார் மகனார் கண்ணனாரும் (அகம்.85), நக்கீரரும் (அகம்.340) தாம் தாம் பாடிய அகப்பாடல்களில் இவனையும் இவனாட்டு இடங்களையும் குறித்துள்ளனர்.

வென்வேல் திரையன் வேங்கட நெடுவரை (அகம்.85)

செல்லா நல்லிசைப் பொலம்பூண் திரையன்
(அகம்.340)
பல்பூங்கானல் பவத்திரி

என்று அவற்றைக் காணலாம்.

அடுத்து, அதியமான் நெடுமானஞ்சிக்குப் பகைவனாய் அவனால் ஔவையாரைத் தூதுவிடப்பெற்ற தொண்டைமான் என்பான் இவ்விளந்திரையனேயென்றும் எண்ணலாம். ஔவையாரால் பாடப்பெற்ற பாரியை (அகம்.303) தாமும் பாடிய நக்கீரரே (அகம்.78) இத்தொண்டைமான் இளந்திரையனையும் பாடியுள்ளமையால் (அகம்.340) இன்னோரெல்லாம் ஒத்த காலத்தவரென்பது உணரப்படும். ஆதலால், இவ்வாறு எண்ணுதல் இசையும். தன்னிடம் தூதுவந்த ஔவைக்கு இத்தொண்டைமான் தன் படைக்கலக் கொட்டிலைக் காட்டினனாக, அவர் அதியமானால் தூது விடுக்கப்பட்டவர் என்ற முறையில் அவனையும் அவனாற்றலையும் புகழ்ந்தும் அவனுக்குப் பகைவனென்ற முறையில் இவனாற்றலை இகழ்ந்தும் பாடினார். (புறம்.95).

இத்தொண்டைமான் இளந்திரையன் புலவரைப் போற்றும் புரவலனாக மட்டுமன்றி, தானுமோர் புலவனாய்த் திகழ்ந்து அகமும் புறமுமாகிய திணைப் பாடல்களை அழகுறப் பாடியுள்ளான் (நற்.94,99,106 புறம்,185).

கால்பார் கோத்து ஞாலத்து இயக்கும்
காவற் சாகாடு உகைப்போன் மாணின்
ஊறின் றாகி ஆறினிது படுமே;
உய்த்தல் தேற்றான் ஆயின், வைகலும்
பகைக்கூழ் அள்ளற் பட்டு
மிகப்பல் தீநோய் தலைத்தலைத் தருமே (புறம்.185)

எனப் பொருள்மொழிக் காஞ்சித் துறையில் இவன் பாடிய புறப்பாடல் இவனது அரசியலறிவின் தெளிவை வெளிப்படுத்துவதாய் உள்ளது காணலாம்.

6.3.14. ஆதனுங்கன்

தமிழகத்தின் வடபாலிலேயே வேங்கட நாட்டை ஆண்டிருந்த குறுநில மன்னனாய் அறிய வருபவன் ஆதனுங்கன்.

புன்தலை மடப்பிடி இனையக் கன்றுதந்து
குன்றக நல்லூர் மன்றத்துப் பிணிக்கும்
கல்லிழி அருவி வேங்கடங் கிழவோன் (புறம்.389)

என்று இவனைக் குறிப்பிடுவார் கள்ளில் ஆத்திரையனார். ஆயின், இவனுடைய அரசியல் வரலாறு அறியவரவில்லை.

மற்று, பிற்காலத்தே ஆந்திர நாட்டு அரசர் வரலாற்றில் வருகின்ற நுங்கதேவ மகாராயர், நுங்கராயர், வீரனுங்கன், நல்லனுங்கன் போன்றோர் பெயர்கள் இந்த ஆதனுங்கன் பெயரொடு ஒத்து நோக்கி உணரத் தகுவனவாய் உள்ளன.[17]

6.315. கள்வர்கோமான் புல்லி

வேங்கடமலையை உள்ளிட்டு அதன் தென்பால் அமைந்த தமிழகத்தின் வடபால் நாட்டையே ஆண்டிருந்தவனாய் அறிய வருகின்ற மற்றொருவன் கள்வர் கோமான் புல்லி,

கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான்
மழபுலம் வணக்கிய மாவண் புல்லி
விழவுடை விழுச்சீர் வேங்கடம் (அகம்.61)

என்று மாமூலனாரும்,

புல்லிய, வேங்கட விறல்வரை (புறம்.385)

கல்லா இளையர் பெருமகன் புல்லி
வியன்தலை நன்னாட்டு வேங்கடம் (அகம்.83)

மாஅல் யானை மறப்போர்ப் புல்லி
காம்புடை நெடுவரை வேங்கடம் (அகம்.209)

எனக் கல்லாடனாரும் வேங்கட மலையை இவனொடு சார்த்தி இவனுக்குரியதாகக் கூறியுள்ளவற்றைக் காணலாம். ஆயின்,

நிரைபல குழீஇய நெடுமொழிப் புல்லி
தேன்தூங்கு உயர்வரை நன்னாட்டு உம்பர்
வேங்கடம் (அகம்.393)

எனவரும் மாமூலனார் பாடலில், 'புல்லி நன்னாட்டு உம்பர் வேங்கடம்' என்றமைந்த தொடர் புல்லியின் நாட்டிற்கு அப்பாற்பட்ட வேங்கடம் என்று பொருள்படுவதுபோல் தோன்றினும், அதற்கு அது பொருளாகாதென்பதைப் புல்லியினுடைய வேங்கடமெனத் தெளிவுறத் தெரிவிப்பதாக மேலே காட்டப்பட்ட அப்புலவரின் பாடல்கொண்டே அறியலாம். ஆக, இத்தொடர்க்குப் புல்லி நாட்டின் கண்ணே அப்பக்கத்து எல்லையாய் அமைந்த வேங்கடமென்பதே பொருளாய் இசையும்.

இனி, புல்லியினுடைய குன்றமாகிய வேங்கடத்திற்கு அப்பாலேயே வடுகருடைய மொழிபெயர் தேயம் இருந்ததென்பதையும் மாமூலனாரின் மற்றொரு பாடற்குறிப்பிலிருந்து அறிகின்றோம்.

> புடையலங் கழற்கால் புல்லி குன்றத்து
> நடையருங் கானம் விலங்கி நோன்சிலைத்
> தொடையமைப் பகழித் துவன்றுநிலை வடுகர்
> பிழியார் மகிழூர் கலிசிறந்து ஆர்க்கும்
> மொழிபெயர் தேஎம் இறந்தன ராயினும்
> பழிதீர் மாணலம் தருகுவர் மாதோ (அகம்.295)

என்ற இப்பாடலடிகளில், புல்லி குன்றத்தைச் சார்ந்ததான நடத்தற்கரிய நாட்டை விட்டு விலகிப் போய் வடுகருடைய மொழிபெயர் தேயத்தைக் கடந்தனனாயினும் தலைவன் விரைந்து வருவான் என்பதே கருத்தாகக் காணப்படுதலால், அவ்வடுகரின் மொழிபெயர் தேயத்திற்கு முற்பட்டது புல்லியின் குன்றமான வேங்கடமென்பது புலனாம். ஆகவே, தமிழகத்திற்கும் தமிழகத்து வடகோடிக் குறுநிலமான இப்புல்லியின் நாட்டிற்கும் வடஎல்லையாய் வேங்கடமலை விளங்கியதை அறியலாம்.

இனி, இவ்வேங்கட நாட்டை ஆண்ட புல்லி, கள்வரென்றும் இளையரென்றும் குறிக்கப்பெறுகின்ற ஒரு குழுவினர்க்குத் தலைவனென்ற முறையில், 'கள்வர் கோமான்' (அகம்.61) எனவும். 'இளையர் பெருமகன்' (அகம்.83) எனவும் இயம்பப் பெறுகின்றான். இவன் மழபுலமென்ற பகுதியை வென்று தன் ஆட்சியின்கீழ்ப் பணிவித்தவன் என்பதை, 'மழபுலம் வணக்கிய மாவண் புல்லி' (அகம்.61) என்ற

மாமூலனார் பாடலடியால் அறியலாம். இவனுடைய அரசியல் வரலாறாக வேறேதும் விளங்கவில்லை.

6.3.16. கட்டி

தமிழகத்தின் வடவெல்லையை ஒட்டிய உள்நாட்டுக் குறுநிலத்தையாண்டவன் கட்டியென்பான். இக்கட்டியின் நாட்டிற்கு அப்பால் அமைந்ததே வடுகர் நாடாகிய மொழிபெயர் தேயம்.

குல்லைக் கண்ணி வடுகர் முனையது
பல்வேற் கட்டி நன்னாட்டு உம்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும் (குறு.11)

எனவரும் மாமூலனாரின் குறும்பாடலொன்று இக்குறிப்பைத் தருகின்றது. 'பல்வேற்கட்டி நன்னாட்டு உம்பர் மொழிபெயர் தேஎம்' என்பதனால் இவனது நன்னாடு மொழிபெயராத் தேயமே, தமிழ் வழங்கும் உள்நாடே என்ற உண்மை உணரப்படும்.

தமிழகத்தின் வடபகுதியிலேயே இந்தக் கட்டியின் அண்டை நாடான குறுநிலமொன்றை ஆண்டிருந்த பாணன் என்பான் இவனுடன் நண்பனாய்ப் பழகியிருந்தான். வலிமை மிக்க ஆற்றலமைந்த அவனது நட்பினைத் துணைவலியாக்கிக் கொண்ட துணிவிலே இந்தக் கட்டி அப்பாணனொடும் கூடி, சோழ வேந்தனான தித்தனுடைய உறையூரின்மேல் படையெடுத்தான். படையெடுத்துவந்து, அவ்வுறையூர் அரணை அணுகிய கட்டி, அவ்வரணுக்குள் தித்தன் வீற்றிருந்த நாளவைக்கண் எழுந்த மகிழ்ச்சியாரவாரத்தோடே கூடிய கிணையொலியைக் கேட்டவுடன், அதுகொண்டே அவன்து பெருமையையுணர்ந்து அஞ்சிப் போர்புரியாதே பின்வாங்கி இகழ்ச்சியாரவாரம் எழும்படி ஓடினான்.

முன்னாள் ஆடிய கவ்வை இந்நாள்
வலிமிகு முன்பின் பாணனொடு மலிதார்த்
தித்தன் வெளியன் உறந்தை நாளவைப்
பாடின் தெண்கிணைப் பாடுகேட்டு அஞ்சிப்
போரடு தானைக் கட்டி
பொராஅது ஓடிய ஆர்ப்பினும் பெரிதே (அகம்.226)

என்று இவன் செயலால் எழுந்த இகழ்ச்சியாரவாரத்தின் பேரளவைப் பாடுவார் பரணர்.

இந்தக் கட்டியின் செய்திகளாக வருவன இவையே. மற்று, சேரமான் கணைக்கால் இரும்பொறையின் படைத்தலைவர்களான நன்னன் முதலிய அறுவருள் ஒருவனாய், அவனுடைய பெரும்படையோடே சோழன் செங்கணானாகிய பெரும்பூட்சென்னியின்மேல் போருக்குப் போய், அச்சோழன் படைத்தலைவனான போர்கிழவோன் பழையனால் கொல்லப்பட்டுப் பருந்துகளுக்கு இரையான கட்டியொருவனைக் காண்கிறோம்.

நன்னன் ஏற்றை நறும்பூண் அத்தி
துன்னரும் சுடுந்திறல் கங்கன் கட்டி
பொன்னணி வல்வில் புன்றுறை என்றாங்கு
அன்றவர் குழீஇய அளப்பரும் சுட்டுர்ப்
பருந்துபடப் பண்ணிப் பழையன் பட்டென (அகம்.44)

எனவரும் குடவாயிற் கீரத்தனாரின் அகப்பாடலடிகள் அவன் உள்ளிட்டோர் செய்தியை அறிவிக்கின்றன.

ஆயின், தித்தன்மேல் படையெடுத்துவந்து போரிடாமலே அஞ்சியோடிய இக்கட்டியையும், செங்கணான்மேல் போருக்குவந்து அவன் படைத்தலைவனால் அழிவுண்ட அக்கட்டியையும் ஒருவனாகக் கருதுதற்கில்லை. காரணம், தித்தன் முதல் நூற்றாண்டின் முதலிலும் செங்கணான் இரண்டாம் நூற்றாண்டின் இறுதியிலுமாய் மிக இடையிட்ட காலத்தவராய்க் காணப்படுதலால், அவ்விருவர் காலத்தும் இவ்வொருவன் இருந்திருத்தல் இயலாதென்பதாம். ஆகவே, இக்கட்டியின் வழிவந்தோனாக, கூடியமட்டில் இவன் பெயரனாக அக்கட்டியை அறியலாம்.

அடிக்குறிப்புக்கள்

1. ஒளவை சு. துரைசாமிப்பிள்ளை - புறம் 158 முன்னுரை; புலவர் கா. கோவிந்தன்-சங்ககால அரசர் வரிசை-4, ப.92
2. ஒளவை சு. துரைசாமிப்பிள்ளை - புறம்.399 உரை; புலவர் கா. கோவிந்தன் - சங்ககால அரசர் வரிசை -5. ப.107.
3. ஒளவை சு. துரைசாமிப்பிள்ளை -பண்டை நாளைச் சேர மன்னர் வரலாறு, ப.15
4. மயிலை சீனி. வேங்கடசாமி - சேரன் செங்குட்டுவன், ப.31
   நோக்கு: சி. பாலசுப்பிரமணியன்- சேர நாட்டுச் செந்தமிழ் இலக்கியங்கள். ப.54
5. புலவர் கா. கோவிந்தன்- சங்ககால அரசர் வரிசை - 6, ப.50
6. மேலவர்- மேலது. ப.50
7. மேலவர் - மேலது
8. A.R. No.62 of 1918
9. S.I.I. Vol.VII, No.757
10. A.R. No.419 of 1921
11. A.R. No. 176 of 1932 - 33
12. புலவர் கா. கோவிந்தன் - சங்ககால அரசர் வரிசை - 5, ப.81
13. நோக்கு: ஒளவை சு. துரைசாமிப்பிள்ளை - புறம்.379 உரை
14. நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் - கள்ளர் சரித்திரம், ப.20
15. மேலவர் - மேலது, ப.20
16. மேலவர் - மேலது, ப.21
17. நோக்கு: ஒளவை சு. துரைசாமிப்பிள்ளை - புறம்.389 உரை.

7. சீறூர் மன்னர் வரலாறு

7.0 சீறூர் மன்னர்

வேந்தர், வேளிர், குறுநிலமன்னர் ஆகியோரை அடுத்த நிலையில் சங்க இலக்கியங்களில் சீறூர் மன்னர் என்ற அரசரை அறிகிறோம். தமிழகத்து அரச நிலையில் பெருநிலம் ஆளும் முடிவேந்தர் உச்சிப்படியின் மேலே நிற்க, சிறுநிலம் ஆளும் இச்சீறூர் மன்னர் முதற்படிமேல் நிற்கக் காண்கிறோம். இவ்விருசாராரின் நிலை வேறுபாட்டினைக் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனாரின் புறப்பாடலொன்று தெளிவாகப் புலப்படுத்துகின்றது.

வளிநடந் தன்ன வாச்செலல் இவுளியொடு
கொடிநுடங்கு மிசைய தேரினர் எனாஅ,
கடல்கண் டன்ன ஒண்படைத் தானையொடு
மலைமாறு மலைக்கும் களிற்றினர் எனாஅ,
உருமுரற்று அன்ன உட்குவரு முரசமொடு
செருமேம் படூஉம் வென்றியர் எனாஅ
மண்கெழு தானை ஒண்பூண் வேந்தர்
வெண்குடைச் செல்வம் வியத்தலோ இலமே
எம்மால் வியக்கப் படூஉ மோரே
இடுமுள் படப்பை மறிமேய்ந் தொழிந்த
குறுநறு முஞ்ஞைக் கொழுங்கண் குற்றடகு
புன்புல வரகின் சொன்றியொடு பொறூஉம்
சீறூர் மன்னர் ஆயினும் எம்வயின்
பாடறிந்து ஒழுகும் பண்பி னாரே (புறம்.197)

எனவரும் இப்பாடலடிகளில் வேந்தருடைய மிகமேம்பட்ட

அருமை நிலையும் சீறூர் மன்னருடைய மிகக் கீழ்ற்ற எளிமை நிலையும் எடுத்துக்காட்டப் படுகின்றமை காணலாம்.

ஆயினும், இச்சீறூர் மன்னர்கள் மறப்பண்பிலே பெருநில வேந்தரினும் மேம்பட்டு விளங்கினராகப் பாடல்கள் விளம்புகின்றன.

பருத்தி வேலிச் சீறூர் மன்னன்
உழுத்ததர் உண்ட ஓய்நடைப் புரவி
கடல்மண்டு தோணியின் படைமுகம் போழ,
நெய்ம்மிதி அருந்திய கொய்சுவல் எருத்தின்
தண்ணடை மன்னர் தாருடைப் புரவி
அணங்குடை முருகன் கோட்டத்துக
கலந்தொடா மகளிரின் இகந்துநின் றவ்வே (புறம்.299)

எனக் குதிரைமறம் குறித்துக் கூறுகின்ற இப்பாடலின் பின்னணியில் அக்குதிரைகளையுடைய சீறூர் மன்னரும் தண்ணடை மன்னரும் (வேந்தரும்) ஆகிய இருத்திறத்தாரின் ஆற்றலின் வேற்றுமை நன்கு அறியக்கிடக்கின்றன.

சீறூர் மன்னன் சிறியிலை எஃகம்
வேந்தூர் யானை ஏந்துமுகத் ததுவே;
வேந்துடன்று எறிந்த வேலே என்னை
சாந்தார் அகலம் உளங்கழிந் தன்றே;
உளங்கழி சுடர்ப்படை ஏந்திநம் பெருவிறல்
ஓச்சினன் துரந்த காலை, மற்றவன்
புன்தலை மடப்பிடி நாணக்
குஞ்சரம் எல்லாம் புறக்கொடுத் தனவே. (புறம்.308)

என்ற இப்பாடலில், வேந்தனுக்கெதிரே நின்று சீறூர் மன்னன் போர்புரிகையில் தன் கைவேலினை அவ்வேந்தன் ஏறியிருந்த யானையின் முகத்திலே பாய்ச்சிவிட்டு, தனது மார்பிலே அம்மாற்றான் எறிந்த வேலைப் பறித்து வீசியபோது, அவனுடைய யானைப்படைகள் எல்லாம் இரிந்தோடின என்றவாறு அவ்வேந்தனினும் மேம்பட்ட வெற்றியாளனாகச் சீறூர் மன்னன் சிறப்பித்து மொழியப் பெறுகின்றான்.

இவ்வாறு வெற்றிமேம்பாட்டிலே பெரிதும் வேந்தரை மீறிய இச்சீறூர் மன்னர்கள் ஒவ்வொரு காலத்தில் ஆட்சியளவிலே அவ்வேந்தர்களுக்கு அடங்கி, அவர்களுக்குப் போர்த்துணை புரிந்தமைக்குரிய சான்றும் புலப்படுகின்றது.

சீறூர் மன்னன் நெருநை ஞாங்கர்
வேந்துவிடு தொழிலொடு சென்றனன் (புறம்.319)

என்ற பாடலடிகள் இம்முறையில் காணப்படும்.

போர்வன்மை மிக்க இவர்கள் கைவண்மையிலும் மீக் கூறும்படி மேம்பட்டு விளங்கினர்.

. . . . . தருகுவன் மாதோ
தாளிமுதல் நீடிய சிறுநறு முஞ்ஞை
முயல்வந்து கறிக்கும் முன்றில்
சீறூர் மன்னனைப் பாடினை செலினே (புறம்.328)

எனவரும் பாணாற்றுப்படைப் பாடலடிகள் இந்தப் பண்பிற்கு ஏற்புடைய சான்றாகும்.

சீறூர் மன்னனொருவன் அவ்வூர்த் தலைவனென்ற பொருளிலேயே சீறூர் மதவலியென்றும் குறிக்கப் பெறுகின்றான். 'வில்லோர் வாழ்க்கைச் சீறூர் மதவலி' (புறம்.331) எனவரும் இதனில் இவனுடைய மறவாழ்க்கை நிலையும் மடுத்துக் கூறப்பட்டுள்ளது காணலாம்.

சீறூர் மன்னனுக்குத் தன் ஒற்றைச் சிற்றரணால் வந்த் பெயர், 'ஓரெயில் மன்னன்' (புறம்.338 அகம்.373) என்பதாம்.

7.01. முதுகுடி மன்னர்

சீறூர் மன்னர்கள் பலரையும் மறமாண்பு மிக்க முதுகுடி மன்னர்களாகவே புறநானூறு புலப்படுத்துகின்றது. மூதில் முல்லை (புறம். 308, 328), மற்றும் அதனோடொத்த வல்லாண் முல்லை (புறம்.319) ஆகிய புறத்துறைகளில் சீறூர் மன்னரென்ற பெயரோடே குறித்து இவர்களின் மறத்திறன்களை மாண்புறப் பாடுகின்ற முறையில் இந்தப் புலப்பாடு அமையக் காண்கிறோம்.

7.02. மகள் மறுக்கும் மாண்பினர்

பெருநில வேந்தர் பெண்கேட்டு வருங்கால் அவர்க்குத் தம் முதுகுடி முறைமை கடந்து பெண் கொடுத்தற்கு அஞ்சி,

மகள் மறுத்துப் போர் உடற்றும் மாண்பினராகவும் இந்தச் சீறூர் மன்னரை அறிகிறோம்.

> நிகர்த்து மேல்வந்த வேந்தனொடு முதுகுடி
> மகட்பாடு அஞ்சிய மகட்பால்[1]

எனத் தொல்காப்பியம் வகுத்துக் கூறுகின்ற மகட்பாற் காஞ்சி மன்னர்கள் இவர்களேயாவர். புறநானூற்றில் உள்ள மகட்பாற் காஞ்சிப் பாடல்களில் (புறம்.336-354) இன்னோர் மகள் மறுத்து, வேந்தரொடு மாறுபட்டு நிற்கும் மாண்பைக் காணலாம். 'தொல்குடி மன்னன்' (புறம்.353) என்று இப்பாடல்களுள் ஒன்றில் சீறூர் மன்னனொருவன் குறிக்கப் பெறுகின்றான்.

7.0.3. சங்ககாலச் சீறூர் மன்னர்கள்

சங்ககாலத் தமிழகத்தில் இத்தகைய சீறூர் மன்னர்களாகப் பதினறுவர் அறியவருகின்றனர். அவர்களில் பெரும்பாலோருடைய ஆட்சியிடங்கள் எங்கேயென்று அறியவராமையால், அம்முறையில் அவர்களை வரிசைப்படுத்த இயலவில்லை. ஆதலால், அவர்களை அகர வரிசையில் காண்போம்.

1. அம்பர் கிழான் அருவந்தை
2. அருமன்
3. அள்ளன்
4. ஈர்ந்தூர் கிழான் தோயன்மாறன்
5. ஒல்லையூர்கிழான் மகன் பெருஞ்சாத்தன்
6. கொடுமுடி
7. சிறுகுடிகிழான் பண்ணன்
8. தழும்பன்
9. நாலைகிழவன் நாகன்
10. போர்கிழவோன் பழையன்
11. முசுண்டை
12. வயவன்
13. வல்லங்கிழவோன் நல்லடி
14. வல்லார்கிழான் பண்ணன்
15. வாணன்
16. விரான்

இனி, மிகமிகக் குறைவாகவே காணப்படுகின்ற இவர்களின் வரலாறுகளைத் தொடர்ந்து காணலாம்.

71. ஆம்பர்கிழான் அருவந்தை

சோழநாட்டில் நாகை மாவட்டம் நன்னிலம் வட்டத்தில் அரிசிலாற்றங்கரையில் உள்ள அம்பரென்ற ஊரையாண்ட சீறூர் மன்னன் அருவந்தை. அரிசிலாறு காவிரியின் கிளையாறேயாதலால் அதனையும் காவிரியென்றே கொண்டு,

> காவிரி யணையும் தாழ்நீர்ப் படப்பை
> நெல்விளை கழனி அம்பர் கிழவோன்
> நல்லரு வந்தை வாழியர் (புறம்.385)

என்று இவனை அக்காவிரியொடும் சார்த்தி வாழ்த்திப் பாடுவார் கல்லாடனார். பொருநன் கூற்றிலே அமைந்த இப்பாடலில், இவனது எளிவந்த ஈகை முனைப்பினை அப்புலவர் எடுத்தியம்பக் காணலாம். இவனைப் பற்றிய வேறு செய்தியேதும் சங்க இலக்கியங்களால் விளங்கவில்லை.

மற்று, இவ்வம்பர் கிழான் அருவந்தையின் ஊரும் குடியும் சங்க காலத்திற்கு மிகவும் பிற்காலத்தில் கி.பி. எட்டாம் நூற்றாண்டளவிலும் சிறந்து விளங்கினமை அறியலாம். அக்காலத்தில் இவன் குடிவழியில் இவனது பெயரோடு விளங்கிய மற்றொருவனே சேந்தன் திவாகர நிகண்டினைச் செய்வித்தான்.[2] அந்நிகண்டின் ஒவ்வொரு பெயர்த்தொகுதியீற்றிலும், அமைந்த செய்யுட்கள் அவனைப் பற்றி அறிவிக்கின்றன.

72. அருமன்

ஆதியருமனென்று கள்ளில் ஆத்திரையனாராலும் (குறு.293), மூதிலருமனென்று நக்கீரராலும் (நற். 367) குறிக்கப்பெறுவோன் அருமன். இவனுடைய மூதூர் அப்புலவர் இருவராலும் எடுத்துக் கூறப்பெறுகின்றது.

> கள்ளிற் கேளிர், ஆத்திரை உள்ளூர்ப்
> பாளை தந்த பஞ்சியங் குறுங்காய்

ஓங்கிரும் பெண்ணை நுங்கொடு பெயரும்
ஆதி யருமன் மூதூர் (குறு.293)

என்று இவனூரைப் புனைந்து, அதனைத் தலைவனுடைய காதற் பரத்தையின் அழகு நலத்திற்கு உவமையாக்குவார் கள்ளில் ஆத்திரையனார்.

கொடுங்கண் காக்கைக் கூர்வாய்ப் பேடை
நடுங்குசிறைப் பிள்ளை தழிஇக் கிளைபயிர்ந்து
கருங்கண் கருணைச் செந்நெல் வெண்சோறு
சூருடைப் பலியொடு கவரிய குறுங்கால்
கூழுடை நன்மனைக் குழுவின இருக்கும்
மூதில் அருமன் போரிசைச் சிறுகுடி (நற்.367)

என்று இவனூரின் செல்வ நிலையைக் குறிப்பிடுவார் நக்கீரர். இருவருமே இவனூரைக் குறித்ததோடு அமைந்து, இவன் செய்தியெதனையும் குறியாதே விடுத்தனராதலால், அம்முறையில் இவன் வரலாறு அறியப்படாததாகவே உள்ளது. அதேபோல் இவனூரும் எதுவெனத் தெரிந்திலது.

73. அள்ளன்

அள்ளனென்பான் அதியனென்பானுக்குப் படைத் துணையாளனாய் இருந்து, அவனுக்குப் பகைவரிடத்தே வெற்றியை உண்டாக்கி உவகையளித்ததன் பயனாக, அவனால் ஒரு நாட்டினைப் பரிசிலாக அளிக்கப் பெற்றான் என்ற ஒரு செய்தி மட்டும் மாமூலனாரால் குறிப்பிடப்படுகின்றது.

ஆடுநடைப் பொலிந்த புகற்சியின் நாடுகோள்
அள்ளனைப் பணித்த அதியன் (அகம்.325)

என்ற அகப்பாடலடிகளில் இவன் செய்தியை அறியலாம். ஆயின், இந்த அதியன், அதியமான் நெடுமான் அஞ்சியோ அவன் மரபினனோ அன்றி வேறொருவனோ என்பது விளங்கவில்லை. அதேபோல் இந்த அள்ளனின் ஊரும் தெரியவில்லை.

7.4. ஈர்ந்தூர்கிழான் தோயன்மாறன்

ஈர்ந்தூர்கிழான் தோயன்மாறன் என்பவன் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனாரால் பாடப்பெற்றவன் (புறம்.180). தோயன் மாறனென்ற பெயரை நோக்க, இவனுடைய ஈர்ந்தூர் பாண்டி நாட்டிலே அமைந்திருந்ததாய் அறியலாம்.

மற்று, இவன் பெயரான தோயன்மாறன் என்பதற்குக் கோயமான் எனவும் பாடவேறுபாடு காணப்படுகின்றது. புறநானூற்றின் புத்துரையாசிரியர் ஒளவை. சு. துரைசாமிப் பிள்ளை அதனையே மேற்கொண்டுள்ளார். அதேபோல், இவனது ஊர்ப்பெயரான ஈர்ந்தூரென்பது ஈர்ந்தையெனப் பாடலில் மருவியமைந்து, அதற்கு ஈந்தையென்ற பாடவேறுபாடும் காணப்படுகின்றது. அம்முறையில் அஃது ஈந்தூரென்றும் விரிந்துவரும். ஈந்துமரப்பெயரடியாக அவ்வூர் ஈந்தூர் எனப் பெயர் பெற்றிருக்கலாம். அஃது இக்காலத்தே ஈஞ்சூரெனக் கொங்கு நாட்டிலே உள்ளதென்பார் ஒளவை துரைசாமிப்பிள்ளை (புறம்.180 முன்னுரை). அஃதுண்மை யாயின், இவன் பெயரான கோயமான் என்பதோடு கொங்குநாட்டு ஊரான கோயமுத்தூரையும் இணைத்து எண்ணுதல் கூடும்.

இனி, இச்சீறூர் மன்னனான ஈர்ந்தூர் கிழான் தன் வேந்தனுக்குப் பகைவர் செய்யும் போர்த்துன்பத்தைத் தானே முன்னின்று தாங்கிப் போர்க்களத்திலே அப்பகைவரின் படைக்கலங்கள் பாய்ந்தமையால் பெற்ற விழுப்புண் ஆறிய வடுக்கள் நிறைந்து, வசையில்லாத அழகு வாய்ந்த உடம்பையுடையவன்; இரவலர்க்குத் தொடர்ந்து கொடுக்கும் செல்வமில்லாதவன். ஆயினும் தன்னிடம் இரந்தோர்க்கு இல்லையெனச் சொல்லி மறுக்கும் சிறுமையுமில்லாதவன். இவ்வாறு கொடையை ஏற்றுக்கொண்டமையால் இவனைப் பாணரது பசிக்குப் பகைவனென்று பாராட்டுவார் மதுரைக்குமரனார்.

நிரப்பாது கொடுக்கும் செல்வமும் இலனே;
இல்லென மறுக்கும் சிறுமையும் இலனே;
இறையுறு விழுமம் தாங்கி, அமரகத்து
இரும்புசுவைக் கொண்ட விழுப்புண் நோய்தீர்ந்து,
மருந்துகொள் மரத்தின் வாள்வடு மயங்கி,

வடுவின்று வடிந்த யாக்கையன் கொடையெதிர்ந்து
ஈர்ந்தை யோனே பாண்பசிப் பகைஞன் (புறம்.180)

எனவரும் இப்பாடலடிகளில் அப்புலவர் இவன் பண்புகளை எடுத்துக் கூறிப் பாணனை ஆற்றுப்படுத்துவது அறியத்தகும்.

7.5. ஒல்லையூர்கிழான் மகன் பெருஞ்சாத்தன்

ஒல்லையூரென்பது கோனாட்டின்கண் இக்காலத்து ஒலியமங்கலமெனப் பெயர் வழங்கும் ஊரென்பார் உ.வே.சாமிநாதையர் (புறம்.242 அடிக்குறிப்பு). இந்த ஒல்லையூரைச் சூழ்ந்த நாடு ஒல்லையூர் நாடென்றே பெயர் பெற்று விளங்கியது. பாண்டிய நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் இடைப்பட்ட எல்லையாய் ஓடுகின்ற தென்வெள்ளாற்றின் தென்கரைக் கோனாட்டு மேலைப் பகுதியென்று இவ்வொல்லையூர் நாட்டினைக் குறிப்பிடுவார் ஔவை துரைசாமிப்பிள்ளை (புறம்.242 உரை).

ஒல்லையூரையாண்ட கிழானொருவன் ஒல்லையூர் கிழானெனப் பெயர்பெற்று விளங்கினான். அவனுக்குப் பின் அவன் மகன பெருஞ்சாத்தன் ஆட்சிபெற்றான். இவனது அரசியல் வரலாறேதும் அறியப்படவில்லை. ஆயினும், இவனிறப்பினையடுத்துக் குடவாயிற் கீரத்தனார் இரங்கிப் பாடிய பாடல் ஒன்றுமட்டும் இவனைக் குறித்ததாய்ப் புறநானூற்றிலே இடம் பெற்றுள்ளது.

இளையோர் சூடார்; வளையோர் கொய்யார்;
நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான்; பாடினி அணியாள்;
ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே? (புறம்.242)

எனவரும் இப்பாடலின் இரக்கவுணர்வு எடுத்து மொழியப்படக் கூடுவதன்று; உணர்ந்தே உருகத் தகுவதாம்.

7.6. கொடுமுடி

கொடுமுடியெனபவன் ஆமூரென்ற ஊருக்கு மன்னனாய் அறியவருகின்றான்.

வானளாவிய உயர்ந்த சிகரத்தையுடைய குறும்பொறையென்ற மலைக்குக் கிழக்கேயுள்ளதாகவும் நெடிய மதிலையுடையதாகவும் நெடுந்தொலைவிலும் சென்று விளங்கும் செல்வப்புகழ் அமைந்ததாகவும் இவ்வாமூர் குறிக்கப்பெறுகின்றது. இதன் காவலனான கொடுமுடியோ சேரமானுக்குப் பகைவனாய் அவனுடைய யானையின் பெரிய கொம்பொடியப் போர் உடற்றும் பெருமறவனாய்க் கூறப்பெறுகின்றான்.

விசும்பின் நல்லேறு சிலைக்கும் சேட்சிமை
நறும்பூஞ் சாரல் குறும்பொறைக் குணாஅது
வில்கெழு தடக்கை வெல்போர் வானவன்
மிஞிறுமூசு கவுள சிறுகண் யானைத்
தொடியுடைத் தடமருப்பு ஓடிய நூறிக்
கொடுமுடி காக்கும் குரூஉக்கண் நெடுமதில்
சேண்விளங்கு சிறப்பின் ஆமூர் எய்தினும்
ஆண்டமைந்து உறையுநர் அல்லர் (அகம்.159)

என்று இக்கொடுமுடியையும், இவனால் காக்கப்படும் ஆமூரையும் குறித்துப் பாடுவார், இதே ஆமூர்ப்புலவர் கவுதமன் சாதேவனார்.

இந்த ஆமூரை நல்லியக்கோடனுக்குரிய ஓய்மானாட்டு ஆமூராகக் கூறுவார் புலவர் கா. கோவிந்தன்.[3] அது பொருந்தாது. இவ்வாமூரைக் காக்கும் கொடுமுடி சேரமானுக்கு நெருங்கிய பகைவனாய்ப் பாடப்பெறுதலின், சேர நாட்டின் எல்லைப்புறத்திலேயே இவ்வூர் இருந்திருத்தல் வேண்டுமென்று எண்ணலாம். ஒருகால், உறையூர்ச் சோழன் போர்வைக்கோப்பெருநற் கிள்ளிக்குப் பகைவனாய், அவனால் மற்போரிலே கொல்லப்பட்ட மல்லனுக்குரியதென்று தெரியவருகின்ற முக்காவல் நாட்டு ஆமூராக (புறம்.80 அடிக்குறிப்பு) இவ்வூரை அறியலாம். ஆக, அந்த மல்லனும் இந்தக் கொடுமுடியும் ஒருகுடி உறவினராகவும் உணரவருவார்.

77. சிறுகுடிகிழான் பண்ணன்

சோழநாட்டில் காவிரியின் வடகரையில் அமைந்த சிறுகுடியென்னும் வளமிக்க சீறூர் மன்னன் பண்ணன். இச்சிறுகுடிகிழான் பண்ணன் ஈகையால் சிறப்புற்றவன்.

இவனை, 'கைவள் ஈகைப் பண்ணன்' (புறம்.70) என்பார் கோவூர் கிழார்; 'கொடைமேந் தோன்றல்' (புறம்.388) என்பார் மதுரை அளக்கர்ஞாழார் மகனார் மள்ளனார்; 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்' (அகம்.54) எனப் பாராட்டிக் குறிப்பிடுவார், மாற்றூர்கிழார் மகனார் கொற்றங் கொற்றனார்.

இத்தகைய கொடைப்புகழ்கொண்ட இப்பண்ணன் கொடைகளிலெல்லாம் சிறந்த கொடையாக,

நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம் (புறம்.18)

என்றவாறு, உணவுக்கொடை கொடுத்துப் பசிப்பிணி தீர்க்கும் மருத்துவனாய் விளங்கினான். அக்காலத்து இவனுக்குப் பெருவேந்தனாய் விளங்கிய சோழன் கிள்ளிவளவனே இவன் செய்யும் இவ்வரும் பெருங் கொடைச செயலைக் கண்டு இவனை மதித்து, 'யான்வாழும் நாளும் பண்ணன் வாழிய' என வாழ்த்தியும், 'பசிப்பிணி மருத்துவன்' எனப் பாராட்டியும் பாடியுள்ளான் (புறம்.173).

இவன் கொடைமேம்பாட்டினை இயன்மொழித் துறையிலே அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனாரும் சிறப்புறப் பாடியுள்ளார் (புறம்.388).

மற்றும், இப்பண்ணன் சிறுகுடி நீர்வள நிலவளங்களால் சிறந்து திகழ்ந்தமையால் அதில் செழிப்புற வளர்ந்த மாமரங்களும் (அகம்.177), சுவையுறக் காய்த்த நெல்லி மரங்களும் (அகம்.54), மணமுற மலர்ந்த பாதிரி மரங்களும் (புறம்.70) எல்லாம் இவனோடே சார்த்திப் புலவர்களால் புகழ்ந்து பாடப்பெற்றன.

இச்சிறுகுடி கிழான் பண்ணன் கைவண்மை மட்டுமன்றிப் போர் வன்மையிலும் மேம்பட்டவனென்பதை,

வென்வேல், இலைநிறம் பெயர ஓச்சி மாற்றோர்
மலைமருள் யானை மண்டமர் ஒழித்த
கழற்கால் பண்ணன் (அகம்.177)

என்ற செயலூர் இளம்பொன் சாத்தன் கொற்றனார் பாடலடிகளால் அறியலாம்.

78. தழும்பன்

கடற்கரை நகரான மருங்கூர்ப் பட்டினத்திற்கு முன்னுள்ள ஊனூரென்னும் சீறூரை ஆண்டிருந்தோன் தழும்பன். இவன் வாட்போர் புரிவதில் வல்லவனாய், வருவோர்க்கு வரையாது வழங்கும் வண்மையாளனாய், தமிழ்நாடு முழுவதும் தன்புகழ் பரக்கச் சிறந்து விளங்கினான். ஒருபோழ்து இவன் தன் பகைவரொடு மோதிய போரில் அப்பகைவருடைய பிடியானை மிதித்தமையால் உண்டான விழுப்புண்ணிலிருந்து வழுதுணங்காய் போலத் தோன்றிய தழும்பின் காரணமாகத் தழும்பனென்னும் பெயரைப் பெற்றான்.

வாய்வாள், தமிழகப் படுத்த இமிழிசை முரசின்
வருநர் வரையாப் பெருநாள் இருக்கைத்
தூங்கல் பாடிய ஓங்குபெரு நல்லிசைப்
பிடிமிதி வழுதுணைப் பெரும்பெயர்த் தழும்பன்
கூடிமதில் வரைப்பின் ஊணூர் உம்பர்
விழுநிதி துஞ்சும் வீறுபெறு திருநகர்
இருங்கழிப் படப்பை மருங்கூர்ப் பட்டினம் (அகம்.227)

எனவரும் நக்கீரரின் அகப்பாடலடிகளால் இவற்றை அறியலாம். போரிலே விழுப்புண் பெற்றதனால் உண்டாகிய புகழ்த் தழும்பாதலால், அதனடியாய் இவனுக்கு அமைந்த தழும்பனென்னும் சிறப்புப் பெயரே இயற்பெயரையும் மறைத்தொழித்து நிலைத்ததை உணரலாம். இவனது ஆணுருவிற்கு அழகளிக்கும் இத்தழும்பினால் இவனை, 'ஏர் தழும்பன்' (அழகிய தழும்பன்) எனக் குறிப்பிட்டுப் பாடுவார் பரணர்.

இரும்பாண் ஒக்கல் தலைவன் பெரும்புண்
ஏஎர் தழும்பன் ஊணூர் (நற்.300)

எனவரும் அவர் பாடலடிகளில் இத்தழும்பன் பாணரைப் பாதுகாக்கும் தலைவனாய்ப் பாராட்டப் பெறுவதும் காணத்தகும். அவரே மற்றொரு பாடலில் இவனை, 'வாய்மொழித் தழும்பன்' எனக் குறித்து, இவனுடைய ஊணூர் வளத்தையும் புனைவார் (புறம்.348).

மற்று, மேலே காட்டப்பட்ட நக்கீரரின் அகப் பாடலில் இவன், தூங்கல் பாடிய தழும்பன் எனக் குறிக்கப்

பெறுதலால், தூங்கலோரியார் என்ற புலவரும் இவனைப் பாடியுள்ளாரென்பது படுகின்றது. ஆயினும், அவர் இவனைப் பாடிய பாடலொன்றும் கிடைத்திலது.

79. நாலைகிழவன் நாகன்

பாண்டியநாட்டில் நாலையென்ற சீறூரை ஆண்டிருந்த மன்னன் நாலைகிழவன் நாகன். பாண்டியன் மறவனான இவன், அவனுக்குப் போர்க்காலங்களில் படைவேண்டும்போது தான் படையோடே போய் வாட்போரை உதவியும், அரசியல் சூழ்ச்சி வேண்டுமபோது அறிவினை உதவியும், இவ்வாறு வேண்டுவனவெல்லாம் உதவிபுரிந்தானாக வடநெடுந்தத்தனாரால் பாடப் பெற்றுள்ளான் (புறம்.179). அவர் பாடலால் இவனது வள்ளன்மையும் விளங்குகின்றது.

710. போர்கிழவோன் பழையன்

சோழநாட்டில் காவிரிக் கரைசார்ந்த போரென்னும் சீறூரை ஆண்டிருந்தோன் போர்கிழவோன் பழையன். சோழர்க்குப் படைத்தலைவனான இவன், குறிதவறாதே வேலெறிந்து போர்புரிந்து வெற்றிகாணும் சிறப்புடையோன்.

வென்வேல், இழையணி யானைச் சோழர் மறவன்
கழையளந் தறியாக் காவிரிப் படப்பைப்
புனல்மலி புதவின் போஒர் கிழவோன்
பழையன் ஒக்கிய வேல்போல்
பிழையல கண்ணவ'ள் நோக்கியோர் திறத்தே
(அகம்.326)

எனவரும் பரணரின் அகப் பாடலடிகளால் இவற்றை அறியலாம். சோழர் கொங்கரைப் பணிவித்தற்குச் செய்த போரிலே பழையனின் இந்த வேலெறியும் திறத்து வெளிப்பாட்டினைப் பெயரறியப்படாத புலவர் ஒருவர் பொருத்திப் பாடியுள்ளதும் இங்கே பார்க்கத்தகும்.

கொற்றச் சோழர் கொங்கர்ப் பணீஇயர்
வெண்கோட்டு யானைப் போஒர் கிழவோன்
பழையன் வேல்வாய்த் தன்னனின்
பிழையா நன்மொழி
(நற்.10)

என்று அவர் பாடலடிகள் அமையும்.

இப்பழையன் இவ்வாறு போரிலே குறிபிழையாது வேலெறிதல் மட்டுமன்றி மழைத்தாரை போல் நிறைந்த அம்புகளை விரைந்து எய்வதிலும் சிறந்து விளங்கினன். இதனை,

வென்வேல், மாரி அம்பின் மழைத்தோல் பழையன்
காவிரி வைப்பின் போஒர் (அகம்.186)

என்ற பரணரின் மற்றோர் அகப் பாடலின் அடிகள் அறிவிக்கக் காணலாம்.

இத்தகைய போர்த்திறன் வாய்ந்த படைத் தலைவனான இப்பழையன், இறுதியில் சோழன் பெரும்பூட் சென்னியாகிய செங்கணான், சேரமான் கணைக்கால் இரும்பொறையை எதிர்த்து, இவனுடைய ஊரான போரின் புறத்திலே புரிந்த போரில் அச்சோழனுடைய அணியிலே முன்னின்று முனைந்து, சேரமானின் படைத்தலைவர்களான நன்னன் முதலிய அறுவரும் குழுமியிருந்த பாசறையினுள் சென்று, அவரனைவரையும் கொன்று பருந்துகளுக்கு இரையாக்கி, அப்போரிலேயே தானும் புகழ்முடிவு பெற்றான். அவ்வாறு இவன் மாண்டது பொறாத சோழவேந்தன் பெரும்பூட் சென்னி, தானே சினந்தெழுந்துபோய்ச் சேரமான் கணைக்கால் இரும்பொறையை வென்றகப்படுத்தி, அவனுடைய நகரான கழுமலத்தையும் கவர்ந்துகொண்டான்.

நன்னன் ஏற்றை நறும்பூண் அத்தி
துன்னருங் கடுந்திறல் கங்கன் கட்டி
பொன்னணி வல்வில் புன்றுறை என்றாங்கு
அன்றவர் குழீஇய அளப்பருங் கட்டூர்ப்
பருந்துபடப் பண்ணிப் பழையன் பட்டெனக்
கண்டது நோனான் ஆகித் திண்டேர்க்
கணையன் அகப்படக் கழுமலம் தந்த
பிணையலங் கண்ணிப் பெரும்பூட் சென்னி (அகம்.44)

என்று இப்போர் நிகழ்ச்சியைப் புலப்படுத்திப் பாடுவார் குடவாயிற் கீரத்தனார். இதனால் இவனது போர்முனைப்பு நன்கு புலனாகும்.

7.11. முசுண்டை

வேம்பியென்ற சீறூர் மன்னன் முசுண்டை. வேம்பு என்ற மரப்பெயரடியாக இவ்வூர்ப் பெயர் ஏற்பட்டிருத்தல் இயலுமாதலால், வேம்பினைக் காவல் மரமாகவும் வேப்பம்

பூவை அடையாளப் பூவாகவும் கொண்ட பாண்டிய வேந்தரின் பேராட்சிக்கு உட்பட்ட பாண்டிநாட்டுச் சீறூராக இவ்வேம்பியை எண்ணிப் பார்க்கலாம்.

பல்வேல் முசுண்டையெனக் குறிக்கப் பெறுதலால் இவனுடைய படைவலி புலனாகின்றது. ஆயினும், இவன் அரசியல் செய்தியேதும் அறியவரவில்லை.

மற்று, கூத்தர் முதலிய இரவலர் இரப்பின் அவர்களுக்கு நாள்தோறும் ஏற்றினங்களையும் நெல் முதலான தானியக் குவியல்களையும் முன்னே கொடுத்து, களிறுகளோடே தேர்களைப் பின்னே கொடுக்கும் கொடையாளனென்று இவன் நக்கீரரால் நவிலப் பெறுகின்றான் (அகம்.249).

712. வயவன்

மருதவளம் சான்ற புனல்வாயிலென்னும் ஊரையடுத்த இருப்பையூரையாண்ட சீறூர் மன்னன் வயவன்.

> . . . . . முனையெழத்
> தெவ்வர்த் தேய்த்த செவ்வேல் வயவன்
> மலிபுனல் வாயில் இருப்பை (நற்.260)

என்று இவனொடு சார்த்தி இவனது இருப்பையூரைப் பாடியுள்ளார் பரணர். இவனைக் குறித்த இவ்வடைமொழிகளால் இவன் போராற்றல் மிக்கவனென்பது புலப்படக் காணலாம். ஆயினும், இவனுடைய அரசியல் வரலாறேதும் அறியப்படவில்லை.

713. வல்லங்கிழவோன் நல்லடி

சோழநாட்டில் தஞ்சைக்கு மேற்கிலுள்ள வல்லமென்னும் மூதூர் மன்னனாய் விளங்கியவன் வல்லங்கிழவோன் நல்லடி. இவன் சேழூர் குடியுள் மகட்கொடை கொண்டு அச்சோழூர் மருகனாய்த் திகழ்ந்தவன். நல்ல தேரினையும் கடும்பகட்டு யானையையுமுடைய இந்த நல்லடி ஆற்றல் சான்றவனாய்

வல்லத்தை ஆண்டிருந்தான். ஆயினும், இவனது ஆற்றலை மதியாதே இவன் பகைவர் இவனுடைய வல்லத்தைக் கைப்பற்ற முயன்றனரென்ற ஒரு செய்தியை மட்டும் பரணரின் அகப்பாடல் ஒன்றிலிருந்து அறிகிறோம்.

நற்றேர்க், கடும்பகட்டு யானைச் சோழர் மருகன்
நெடுங்கதிர் நெல்லின் வல்லங் கிழவோன்
நல்லடி உள்ளா னாகவும் ஒன்னார்
கதுவ முயறலும் முயல்ப (அகம்.356)

என்று இவன் செய்தியைக் கொண்ட அவ்வகப்பாடலின் அடிகள் அமைகின்றன.

714. வல்லார்கிழான் பண்ணன்

சிறுகுடிகிழான் பண்ணனினும் வேறானவன் வல்லார்கிழான் பண்ணன். இவனுடைய சீறூரான வல்லார், வன்புல இருக்கையாக வண்ணிக்கப் பெறுகின்றது. மன்றத்தில் நிற்கும் விளாமரத்திலிருந்து மனையிடத்தே வீழ்ந்த பழத்தைக் கருங்கண் எயிற்றியின் மகனாகிய சிறுவனோடே பிடியானையின கன்றும் போட்டியிட்டு ஓடியெடுத்தற்கு இடமான ஊராகப் புனையப் பெறுதலால் இவ்வல்லாரைக் காட்டுச் சார்புடையதாகக் கருதலாம்.

வண்மைப்புகழ் வாய்ந்த இவ்வல்லார்கிழான் பண்ணனிடம் பாணனை ஆற்றுப்பட்டுத்திப் பாடியுள்ளார் சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார் (புறம்.181).

715. வாணன்

பண்ணன் சிறுகுடிக்கு வேறான மற்றொரு சிறுகுடியின் மன்னனாய் அறிய வருபவன் வாணன். மதுரைக் காமக்கணி நப்பாலத்தனார் (அகம்.204), மதுரை மருதனிளநாகனார் (அகம்.269), மதுரை நக்கீரர் (நற்.340) ஆகிய மூவரோடு பெயர் தெரியப்படாத புலவரொருவர் (அகம்.117) ஆக நால்வரும் இவ்வாணனுடைய சிறுகுடி வளங்களைத் தனித்தனியே புனைந்து தலைவியின் அழகு நலங்களுக்கு உவமை கூறியுள்ளார்.

பண்ணன் சிறுகுடி போன்றே இவ்வாணன் சிறுகுடியும் நீர்நில வளங்களால் சிறந்து பொய்கையும் சோலையும் வயல்களும் ஆகியவற்றோடு கான்யாறும் கலந்து விளங்கியதாயினும், அச்சிறுகுடி சோழநாட்டில் காவிரியின் வடகரையில் இருந்ததற்கு வேறாக, இச்சிறுகுடி பாண்டிநாட்டில் கடற்கரை சார்ந்து திகழ்ந்ததாய்க் காணலாம். நக்கீரரின் நற்றிணைப் பாடலில் செழியன் குளத்து மடைநீர் இவ்வாணன் சிறுகுடி வயல்களில் பாய்வதாய் வண்ணிக்கப்படுவதனால், இது பாண்டிய நாட்டுச் சீறூரென்பதும், மருதனிளநாகனார் அகப்பாடலில் பெருநீர்க் கானல் தழுவிய இடமாகப் புனையப் பெறுதலால் இச்சிறுகுடி கடற்கரைச் சார்புடையதென்பதும் புலனாகின்றன.

மற்று, இவனுடைய அரசியல் செய்தியேதும் அறியவரவில்லை.

7.16. விரான்

வயவனுக்கு முன்னவனாகவோ பின்னவனாகவோ அதே இருப்பையூரை ஆண்ட சீறூர் மன்னன் விரான். வயவனொடும் சார்த்தி இருப்பையூரைப் பாடிய பரணரே இவ்விரானொடும் சார்த்தி அவ்வூரைப் பாடியுள்ளமையால் இருவர் காலத்து அண்மைநிலை அறியப்படும்.

இவன், 'தேர்வண் விரான்' (நற்.350) எனப் பரணராலும், 'கைவண் விரான்' (ஐங்.58) என்று ஓரம்போகியாராலும் குறிக்கப் பெறுகின்றான். இருவர் பாடல்களிலும் இவனொடு சார்த்தி இவனுடைய மருதவளம் சான்ற இருப்பையூரும் பாடப்பெறுகின்றது. வேறு செய்தியேதும் விளங்கவில்லை.

அடிக்குறிப்புக்கள்

1. தொல்காப்பியம், பொருளதிகாரம். நூ.77.
2. நோக்கு: ச. வையாபுரிப்பிள்ளை - நாமதீப நிகண்டு, முன்னுரை, ப.4
3. புலவர் கா. கோவிந்தன் -சங்க கால அரசர் வரிசை, 5. ப.92

8. முடிவுரை

சங்க கால அரச வரலாறு என்ற இந்த ஆய்விலே இதுகாறும் கண்ட முடிவுகளைத் தொகுத்து இங்கு முடிவுரையாகக் காணலாம்.

1. சங்க இலக்கியங்களில் புற இலக்கியங்கள் மட்டுமன்றி அக இலக்கியங்களும் வரலாற்று இலக்கியங்களாக வளர்ந்துள்ளன.

2. சங்க இலக்கியங்களால் பாடப்பெறும் அரசருள் சேரன் செங்குட்டுவன் காலம் மட்டும் இலங்கைக் கயவாகுவின் தொடர்பினால் தெளிவுறத் தெரிய வருகின்றதாதலின், அவனை மையமாக நிறுத்தி முன்னும் பின்னும் நோக்க, ஏனையோர் காலம் கி.மு. 50 முதல் கி.பி. 250 முடியவுள்ள கால இடைவெளிக்கு உட்பட்டதேயெனக் கணிக்கலாம். ஆகவே, அவர்களைப் பாடிய சங்க இலக்கியங்களின் காலமும் அதுவேயென்று அறுதியிடலாம்.

3. சங்கப் புலவர் மாமூலனார் கி.பி. முதல் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்து அக்காலத்து அரசர் பலரை நேரில் பாடியவர். அவர் பாடல்களில் பழைய செய்திகளாய்க் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிற்கும் இரண்டாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட நந்தர், மோரியர் குறிப்புக்கள் காணப்படுபவைகொண்டு அவரை அம்முந்தைய காலத்தவராக மொழிதல் முரணாகும்.

4. சங்ககாலத் தமிழகத்து நாலெல்லைகளுள் கீழ்கடல் மேல்கடல் என்ற நீரெல்லைகள் இரண்டும் தவிர வடவேங்கடமும் தென்குமரியுமாகிய நிலவெல்லைகள் இரண்டும் அகப்பாட்டு எல்லைகளாகத் தமிழக அரசர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன.

5. முத்தமிழ் நாட்டு எல்லைகள் குறிப்பிட்ட வரையறையின்றி அவ்வக்காலத்து மூவேந்தர்தம் வன்மைமென்மைகளுக்கேற்ப அகன்றும் குறுகியும் அமைந்திருந்தன.

6. கொங்குநாடு, மலையமானாடு, குடநாடு, துளுநாடு, கொண்கான நாடு, கட்டியநாடு ஆகிய நாடுகளையும் அகநாடுகளாகக் கொண்டிருந்த பண்டைத் தமிழ்ச் சேரநாடு, இன்றைய திருவாங்கூர், கொச்சி, மலபார் ஆகியவற்றோடே குடகு, மைசூர், தென்கன்னட நாடுகளையும் உள்ளடக்கியிருந்தது.

7. முடிகெழு வேந்தர், வேளிர், குறுநில மன்னர், சீறூர் மன்னர் ஆகிய நிலைகளில் விளங்கிய தமிழக அரசருள் வேந்தர்தம் பேராட்சியின்கீழ் வேளிர் முதலியோர் அடங்கி ஆண்டனர். ஆயினும், சிலர் அடங்காது தனியரசு செய்த தறுகண்மையையும் காண்கிறோம்.

8. அரச நிலைகளில் முடிவேந்தர் உச்சிப்படியிலும் சீறூர் மன்னர் கீழ்ப்படியிலும் நிற்கின்றனர்; ஆயினும், ஆற்றல் நிலைகளில் வேந்தரினும் சீறூர் மன்னர் வீறுடையவராய் விளங்குகின்றனர்.

9. சீறூர் மன்னரெல்லாம் முதுகுடி மன்னராயும் முடிகெழு வேந்தர்கு மகள் மறுத்துப் போருடற்றும் மாண்பினராயும் அமைகின்றனர்.

10. சேர வேந்தருள் இன்று அறியப்படும் அளவில் சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனே முன்னோனாவான்.

11. பாரத காலத்தவனான பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனையடுத்து நெடுங்காலம் கழித்த இடைவெளிக்குப்பின், சங்க காலத்து முதல்

சேரமானாய்க் கருவூரைத் தலைநகராகக் கொண்டு அரசு கட்டில் ஏறியவன் கருவூரேறிய ஒள்வாள் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை.

12. முதியரைப் பேணிய உதியஞ்சேரல் என்ற நாடுகண் அகற்றிய உதியஞ்சேரலே இமையவரம்பனின் தந்தையான இன்னிசை முரசின் உதியஞ்சேரல். இவன் முந்தைய பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனினும் வேறானவன்.

13. பல்யானைச் செல்கெழுகுட்டுவன் உம்பற்காட்டைத் தன் கோலில் நிறுத்தினான் என்பதற்குப் பிறராட்சியின்கீழ் இருந்ததனை வென்று தன்னாட்சியின்கீழ் அடிப்படுத்திச் சேர முடியரசில் சேர்த்தான் எனப் பொருள் காண்பது பொருந்தாது. முன்னமே சேரராட்சியில் சேர்ந்திருந்த அதனைத் தாயத்தார்க்குள் மண் வகுத்த பங்கீட்டிலே தானேற்று ஆண்டானென்பதே பொருந்தும். அதேபோல் அவனால் தழுவி ஒழுகலுற்ற முதியரென்பாரும் தனியொரு இனத்தவராகார். தன்குலத்தில் முதியவரான தாயத்தாரேயாவார்.

14. சேரவேந்தருள் மாந்தரனென்றும், மாந்தரம் பொறையன் கடுங்கோவென்றும், சேரன் மாந்தரஞ்சேரல்இரும்பொறையென்றும், சேரமான் யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை யென்றும், கோச்சேரமான் யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையென்றும் இங்ஙனம் வேறுபட்ட பெயர் வடிவங்களோடு விளங்குகின்ற மாந்தரன் ஒருவனே. இப்பெயர்களுக்குரியோர் இருவரென்றும் மூவரென்றும் எண்ணுதல் இசைந்தில.

15. செங்குட்டுவன் கடல்பிறக்கோட்டி வேலெறிந்த வெற்றி அவன் தந்தையான இமையவரம்பனின் கடற்போர் வெற்றிகளினும் வேறுபட்ட தனிவெற்றி. தான் பிறநாட்டு மன்னர்களையெல்லாம் வென்று உயர்ந்த மேம்பாட்டிலே, நிலவெல்லைக்குள் தனக்கு நிகரின்மை காட்டிக் கடலின் அலைப்பரப்பினூடே குதிரையூர்ந்து, நீர்ப்பரப்பை நோக்கி வேலெறிந்ததே இந்த வெற்றியின் வெளிப்பாடு. இது நிலந்தரு

திருவின் நெடியோனான வடிம்பலம்ப நின்ற பாண்டியன் வரலாற்றில் வருகின்ற வெற்றி வெளிப்பாட்டை ஒத்ததாம்.

16. ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் பெயரடை அவனது வெற்றிக் கோட்பாட்டினை விளக்குவதாகுமேயன்றி, தண்டாரணியத்துப் பகைவரால் கவர்ந்து செல்லப் பட்ட ஆட்டுநிரையை மீட்டு வந்ததை விளக்குவதாகாது. அதேபோல் அவனது தலைநகரும் தொண்டியாகுமேயன்றி, அவன் மகளிர் கூட்டத்தோடே மகிழ்ந்திருந்த நறவுநகராகாது.

17. தலைச்சங்க காலத்துப் பாண்டியர் எண்பத்தொன்-பதின்மரென்றும், இடைச்சங்க காலத்துப் பாண்டியர் ஐம்பத்தொன்பதின்மரென்றும், கடைச்சங்க காலத்துப் பாண்டியர் நாற்பத்தொன்பதின்மரென்றும் முச்சங்க வரலாறு மொழிந்தாலும், இப்போது கிடைத்துள்ள கடைச்சங்க இலக்கியங்களால் பெயரும் வரலாறும் அறியவருவோர் பதினறுவரே.

18. நிலந்தரு திருவின் பாண்டியனான முந்நீர் விழவின் நெடியோனென்ற வடிம்பலம்பநின்ற பாண்டியன் தலைச்சங்கத்து இறுதியிலும் இடைச்சங்கத்து முதலிலும் இருந்தவன்; அவன் காலத்தவனாய், கூடியமட்டில் அவன் மகனென்று மதிக்கத்தக்கவன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி.

19. முடத்திருமாறன் இடைச்சங்கத்து இறுதியிலும் கடைச்சங்கத்து முதலிலும் இருந்தவன்.

20. ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியனின் மகனென்று மதிக்கத்தக்க, தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனே முதலாம் நெடுஞ்செழியன்; அவனே, பெரியனென்றும் பசும்பூண் செழியனென்றும் பசும்பூண் பாண்டியனென்றும் பசும்பூண்வழுதி யென்றும் பாடப்பெற்றுள்ளான். அவனது கன்னிப் போரான தலையாலங்கானத்துப் போருக்கு முதற்கட்டமே கூடற்பறந்தலைப்போர். அஃதாவது, கூடற்பறந்தலைப் போரின் தொடர்ந்த கட்டமே ஆலங்கானத்துப் போர்.

21. கடைச்சங்கத்தைப் புரந்த பாண்டியருள் இறுதி வேந்தன் கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி; அவனை ஓட்டிய காலத்தவன் பன்னாடுதந்த பாண்டியன் மாறன் வழுதி; அவனே கடைச்சங்க காலத்து இறுதிவேந்தன்.

22. சங்க காலச் சோழ வேந்தராய் அறிய வருவோர் பதின்மூவர். அவருள் முன்னவனான தித்தனே தித்தன் வெளியனென்றும், வீரைவேண்மான் வெளியன் தித்தனென்றும் குறிக்கப் பெறுதலால், அவன் பிறப்பிலே வேளிர் குடியினனென்றும், பின் சிறப்பினால் சோழர் குடியிலே மகட்கொடை கொண்டு மருவிச் சோழவேந்தனாயினனென்றும் அறியவருகின்றான். அவன் மகனே போர்வைக்கோப் பெருநற்கிள்ளி.

23. உறையூரையாண்ட சோழருள் மூன்றாமவனாகக் கருதவருகின்ற முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளியின் காலத்திலேயே சோழநாட்டின் கீழைப்பகுதியை ஆண்டிருந்தவன் என்ற முறையில் அறிய வருபவன் சோழன் உருவப் பல்தேர் இளஞ்சேட்சென்னி. அவனே நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி யென்றும், செருப்பாழியெறிந்த இளஞ்சேட் சென்னியென்றும் சிறப்புப் பெயர்களைப் பெற்றான்.

24. உருவப்பல்தேர் இளஞ்சேட்சென்னியின் மகனான கரிகால்பெருவளத்தான் தாயப் பகையைக் கடந்து தன்னரசை அடைந்தான். தாயத்தார் இட்ட சிறையினின்றும் தப்பித் தன் ஆற்றலாலேயே அரசெய்திய அவன், கழுமலத்தினின்றும் கட்டவிழ்த்து விடப்பட்ட பட்டத்து யானையால் மாலையிடப் பெற்று அரசனாயினன் என்பது கட்டுக்கதை.

25. கரிகாலன் இயற்றிய வெண்ணிப்போர் இரண்டே. இருபெருவேந்தரோடு பதினொரு வேளிரை வென்றது ஒன்று. சேரமான் பெருஞ்சேரலாதனை எதிர்த்துப் பொருது அவன் மார்பிலே வேலெறிந்து வென்றது மற்றொன்று. இவையிரண்டையும் ஒருங்கிணைத்து ஒன்றாகக் காண்பதும் பிரித்து மூன்றாக முடிப்பதும் முற்றாக முடியாது.

26. சங்க காலத்துக் கரிகாலன் ஒருவனையே இருவராக எண்ணுதல் இசையாது. திருமாவளவனென்ற அவ்வொருவனே பெருந்திருமாவளவனென்றும் பேசப்பட்டான்.

27. கரிகால்பெருவளத்தானுக்கு ஓரளவு சம காலத்தவனாய், சோழநாட்டின் மற்றோர் இடத்தில் இருந்து அரசு புரிந்தவனாய் அறிய வருபவன் வேற்பல் தடக்கைப் பெருவிறற்கிள்ளி; அவனையடுத்த சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி.

28. கரிகால்பெருவளத்தானுக்குப் பின் அவன் மகனென்று மதிக்கத்தக்கவன் சோழன் நலங்கிள்ளி; இவனே இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னி; இவனுக்குத் தாயப்பகைவன் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி; சோழன் நலங்கிள்ளியின் தம்பி மாவளத்தான்.

29. சோழன் நலங்கிள்ளியை ஒட்டிய காலத்திலேயே உறையூரிலிருந்து ஆட்சி புரிந்தவன் கோப்பெருஞ்சோழன்.

30. நலங்கிள்ளியின் மகனென்று மதிக்கத்தக்கவன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்.

31. பெரும்பூட் சென்னியென்று பேசப்பெறுவோனே சோழன் செங்கணான்.

32. சங்க இலக்கியங்களில் முடிவேந்தரையடுத்து மொழியப் பெறுகின்ற வேளிர், தொன்மையும் பன்மையும் வாய்ந்தவர்கள். தமிழக வேளிரை வந்தேறிய வடவராகக் கொண்டு வரலாறு காண்பதும், பதினெண்குடி வேளிராகக் கொண்டு கண்ணன் குலத்து யாதவரென்று கருத்துக் கூறுவதும் பொருந்தாத புனைந்துரைகள். பண்டைத் தமிழ் நூல்களில் எங்கும் பதினெண்குடி வேளிரென்ற தொகைப் குறிப்புத் தோன்றவில்லை.

33. சேர நாட்டில் எழுவரும் பாண்டிய நாட்டில் நால்வரும் சோழ நாட்டில் ஒன்பதின்மரும் ஆக வேளிர்

இருபதின்மரின் பெயரும் வரலாறும் சங்க இலக்கியங்களில் விளங்குகின்றன.

34. வேளிரெல்லோரும் குறுநில மன்னரேயாயினும் குறுநில மன்னரெல்லோரும் வேளிராகார். எனவே, வேளிரைக் குறுநில மன்னரினும் மேம்பட்ட சிறப்புடையோராகக் காணலாம்.

35. குறுநில மன்னர் சேரநாட்டில் பதினறுவரும் பாண்டிய நாட்டில் அறுவரும் சோழநாட்டில் பதினறுவரும் ஆக முப்பத்தெண்மர் பெயர்களும் வரலாறுகளும் புலப்பட வருகின்றன.

36. சீறூர் மன்னர் பதினறுவர் செய்திகள் சிற்றளவிலேயே காணப்படுகின்றன.

நூலடைவு

அ. பழந்தமிழ் நூல்கள்: மூலமும் உரையும்

1. அகநானூறு- வேங்கட விளக்க உரை, பாகனேரி த.வை.இ. தமிழ்ச்சங்க வெளியீடு, கழகம், சென்னை-1, 1961.

2. இறையனார் அகப்பொருள் உரை-கழக வெளியீடு, சென்னை-1, மு.ப.1953.

3. ஐங்குறுநூறு மூலமும் பழையவுரையும் - உ.வே. சாமிநாதையர், தியாகராசவிலாச வெளியீடு, சென்னை, ஐந்தாம் பதிப்பு, 1957.

4. கலிங்கத்துப்பரணி மூலமும் ஆ.வீ. கன்னையநாயுடு உரையும், பாரதி அச்சுக்கூடம், சூளை, சென்னை, மூன்றாம் பதிப்பு, 1949.

5. கலித்தொகை மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் - இ.வை. அனந்தராமையர் பதிப்பு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1984.

6. குறுந்தொகை மூலமும் உரையும் - உ.வே. சா., தியாகராசவிலாச வெளியீடு, சென்னை, நான்காம் பதிப்பு, 1962.

7. சங்க இலக்கியம்- பேரா. ச. வையாபுரிப்பிள்ளை பதிப்பு, பாரிநிலையம், சென்னை- 1. இரண்டாம் பதிப்பு, 1967.

8. சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும் - உ.வே.சா., தியாகராசவிலாச வெளியீடு, சென்னை, ஆறாம்பதிப்பு, 1955.

9. சிலப்பதிகார மூலமும் ந.மு. வேங்கடசாமி நாட்டார் உரையும் - பாகனேரி த.வை. இ. தமிழ்ச்சங்க வெளியீடு, கழகம், சென்னை-1. 1968.

10. சூடாமணி நிகண்டு மூலமும் உரையும்- ஆறுமுகநாவலர் வித்தியாநுபாலன அச்சகம், சென்னை-1, 1966.

11. தகடூர் யாத்திரை- புலவர் இரா. இளங்குமரன் உரை, கழகம், சென்னை-1, 1967.

12. தனிப்பாடல் திரட்டு மூலமும் கா.சு.பிள்ளை உரையும்- பாகங்கள் 1, 2- இரத்தினநாயக்கர் சன்ஸ், சென்னை, மு.பா.1957, இ.பா.1955.

13. திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும் - ஸ்ரீமகள் கம்பெனி, சென்னை-1. மூன்றாம் பதிப்பு, 1968.

14. திருத்தொண்டர் புராணம்- திருவாவடுதுறை ஆதீனம், 1988.

15. திருப்புகழ் (அருணகிரிநாதர்) - முழுவதும் - திருப்புகழமிர்தம் காரியாலயம், சென்னை- 2, மூன்றாம் பதிப்பு, 1968.

16. திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம் - உ.வே. சா. பதிப்பு, தியாகராசவிலாச வெளியீடு, சென்னை, மூன்றாம்பதிப்பு, 1972.

17. தேவாரம் அடங்கன்முறை- மயிலைகிழார் இளமுருகனார் பதிப்பு, சென்னை, 1953.

18. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியம்- கழகம், சென்னை-1, 1974.

19. தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணம்- கழகம், சென்னை-1, 1974

20. தொல்காப்பியம், பொருளதிகாரம், நச்சினார்க்கினியம் - கழகம், சென்னை - 1, 1973.

21. நளவெண்பா (புகழேந்தியார்) - மூலமும் உரையும் இ.மா. கோபாலகிருட்டிணக் கோனார் வெளியீடு, மதுரை, 1956.

22. நற்றிணை மூலமும் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் உரையும் - கழகம், சென்னை-1. 1967.

23. நாமதீப நிகண்டு - ச. வையாபுரிப்பிள்ளை பதிப்பு, 1930, த.ப.க. வெளியீடு, 1985.

24. பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும் - உ.வே.சா. நூல் நிலைய வெளியீடு, திருவான்மியூர், சென்னை - 41, ஏழாம்பதிப்பு, 1974.

25. பதிற்றுப்பத்து மூலமும் பழையவுரையும் - உ.வே.சா., தியாகராசவிலாச வெளியீடு, சென்னை, ஆறாம் பதிப்பு, 1957

26. பதினெண்கீழ்க்கணக்கு (மர்ரே பதிப்பு) - நியூ செஞ்சுரி புக் அவுஸ், சென்னை - 98, இரண்டாம் பதிப்பு, 1981.

27. புறத்திரட்டு - புலவர் இரா. இளங்குமரன் பதிப்பு, கழகம், சென்னை, 1972.

28. புறநானூறு மூலமும் பழைய உரையும் - உ.வே.சா., தியாகராச விலாச வெளியீடு, சென்னை, ஆறாம் பதிப்பு, 1963.

29. புறநானூறு மூலமும் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை உரையும் - இரு பாகங்கள், கழகம், சென்னை-1. 1-1977, 2-1962.

30. புறப்பொருள் வெண்பாமாலை (ஐயனாரிதனார்) மூலமும் பழையவுரையும்- உ.வே.சா., வைஜயந்தி அச்சுக்கூடம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1915.

31. மகாபாரதம் (வில்லிபுத்தூராழ்வார்) - நா. கதிரைவேற்பிள்ளை, திருமகள் விலாச அச்சுக்கூடம், சென்னை, 1933.

32. மதுரையறுபத்து நான்கு திருவிளையாடற்புராணம் (பரஞ்சோதி முனிவர்) - கழகம், சென்னை-1, 1931.

33. மணிமேகலை மூலமும் குறிப்புரையும் - உ.வே.சா., தியாகராசவிலாச வெளியீடு, சென்னை, ஆறாம் பதிப்பு, 1965.

34. மூவருலா - பழையவுரை, குறிப்புரைகளுடன்- உ.வே.சா., நூல்நிலைய வெளியீடு, சென்னை, இரண்டாம் பதிப்பு, 1952.

35. யாப்பருங்கலக் காரிகை மூலமும் உரையும் - கழகம், சென்னை-1, 1985.

ஆ. வரலாற்று நூல்களும் திறனாய்வு நூல்களும்

36. அப்பாத்துரை, கா. - தென்னாட்டுப் போர்க்களங்கள், அலமேலு நிலையம், சென்னை -18, மூன்றாம் பதிப்பு, 1971.

37. இராகவையங்கார், மு. சேரன் செங்குட்டுவன், உரிமைப்பதிவு, நான்காம் பதிப்பு, 1937.

38. இராகவையங்கார், மு - வேளிர் வரலாறு, மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு, மதுரை, இரண்டாம் பதிப்பு, 1916.

39. இராகவையங்கார், ரா - தமிழ் வரலாறு, அண்ணா மலைப் பல்கலைக்கழகம், மூன்றாம் பதிப்பு, 1979.

40. இராசமாணிக்கனார், டாக்டர் மா. - சோழர் வரலாறு, எடுகேசனல் பப்ளிசிங் கம்பெனி, நுங்கம்பாக்கம், சென்னை, 1957.

41. இராமச்சந்திரன் செட்டியார், கோ.ம., - கொங்கு நாட்டு வரலாறு, தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி, பேரூர், கோவை, 1987.

42. இராமலிங்கம், டாக்டர். அரங்க. - சங்க இலக்கியத்தில் வேந்தர், ஐந்திணைப் பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை-5. முதற்பதிப்பு, 1987.

43. இராமலிங்கன், புலவர் பெ. - கருவூரே வஞ்சி, அசோகன் பதிப்பகம், தி.நகர், சென்னை-17, முதற்பதிப்பு, 1977.

44. உலகநாதப்பிள்ளை - முதலாம் கரிகாலன் என்ற சோழன் கரிகாற் பெருவளத்தான், விவேக போதினி காரியாலயம், மயிலாப்பூர், சென்னை. ஆண்டு இல்லை.

45. கந்தசாமி, டாக்டர். சோ.ந. - பரிபாடலின் காலம், அபிராமி பதிப்பகம், அண்ணாமலை நகர். மு.ப.1972.

46. கோவிந்தன், புலவர் கா. - சங்க கால அரசர் வரிசை-பகுதி 2, கழகம், சென்னை, 1956.

47. சதாசிவ பண்டாரத்தார், தி. வை. - பாண்டியர் வரலாறு, கழக வெளியீடு, சென்னை, 1977.

48. சதாசிவ பண்டாரத்தார், தி. வை. - பிற்காலச் சோழர் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், முதற்பதிப்பு, 1974.

49. சாமிநாதையர், உ.வே. - சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும், உ.வே.சா. நூல்நிலைய வெளியீடு, சென்னை 41, 1978.

50. சிதம்பரனார், துடிசைகிழார் அ. - சேரர் வரலாறு, கழகம், சென்னை, 1972.

51. தஞ்சை சுந்தரராசன் - தரணி ஆண்ட தமிழ் வள்ளல்கள், முதல் பாகம், மான்துயில் நிலையம், துவாரகா நகர், தஞ்சை-1, முதற் பதிப்பு, 1989.

52. தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு - தமிழ்நாட்டு வரலாறு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை-6, 1983.

53. துரை அரங்கசாமி, டாகடர் மொ. அ - சங்க காலச சிறபபுப பெயர்கள், பாரி நிலையம், சென்னை-1, முதறபதிபபு, 1960.

54 துரைசாமிபபிளளை, ஒளவை. சு. - பண்டைநாளைச் சேரமன்னா வரலாறு, திருவளர் பதிபபகம், தூதது்குகுடி, நானகாம பதிபபு, 1968.

55. துரைசாமிபபிளளை, ஒளவை. சு - மதுரைகுமரனார், கழக வெளியீடு - 439, ஆண்டு இலலை.

56 தேவநேயபபாவாணர், புலவர் ஞா - பழந்தமிழாட்சி, கழகம், 1972

57 பசுவலிங்கம், பேரா.ம. - சங்ககால வஞ்சி, சேகர் பதிபபகம, செனனை-78, முதறபதிபபு, 1984.

58 பாலசுபபிரமணியன, டாகடர் கு.வெ. - சங்க இலகியத்தில புறபபொருள, மீரா பதிபபகம, புதுகோட்டை-1, மு ப. 1986

59 பாலசுபபிரமணியன, டாகடர் சி. - சேரநாடடுச செந்தமிழ இலகியங்கள, நறுமலர்பபதிபபகம, செனனை-29, முதற்பதிபபு, 1985

60 புருஷோததம, வி பி - சங்க கால மன்னா காலநிலை வரலாறு, ஐந்திணைப பதிபபகம், திருவலலிகேணி, சென்னை-5, மு.ப 1989

61 ரங்காசசாரி, வித்துவான் வே. க. - சேரவேந்தர் நாலவர், மஙகளநூலகம், நுங்கமபாக்கம, செனனை-34, மூன்றாம் பதிபபு, 1963.

62. விததியானநதன, டாக்டர் சு. - தமிழாசால்பு (சங்ககாலம), பாரி புத்தகபபணணை, சென்னை-5, மூன்றாம பதிப்பு, 1985

63 வீராசாமி, முனைவா தா வே - பெரியபுராணச சிறபபுபபெயரகராதி - ஊர்பபெயர்கள், தமிழ்ப பல்கலைகழகம், 1986.

64 வெள்ளைவாரணனார, பேரா. க - தமிழ் இலகிய வரலாறு, - தொலகாப்பியம், அண்ணாமலைப பலகலைகழகம, மூன்றாம பதிப்பு, 1978

65 வேஙகடசாமி நாடடார், ந மு - கபிலா, கரந்தைத தமிழ்சசஙக வெளியீடு, இரணடாம பதிபபு, 1979

66 வேஙகடசாமி நாடடார, ந மு - நககீரா, கரந்தைத தமிழ்சசஙக வெளியீடு, இரணடாம் பதிபபு, 1978

67 வேங்கடசாமி நாடடார, ந மு -- கள்ளர் சரிததிரம, அ வடிவேலனார அறககடடளை, தஞ்சாவூர-9, மூன்றாம் பதிபபு, 1984

68 வேங்கடசாமி, மயிலை சீனி - சேரன செங்குடடுவன

69. ஸ்ரீமத வான்மீகி ராமாயணம - தமிழ் வசனம், பாகம-1, 2, உ.வே சி.ஆர சீனிவாசயயங்கார் (மொ.பெ), தி லிடடில பிளவர் கமபெனி, தியாகராயநகர, சென்னை, ஐநதாம் பதிபபு, 1984

70. John Ralston Marr- The Eight Anthologies, Institute of Asian Studies, Madras - 41, First Edition, 1985.

71 Kailasapathy, K.- Tamil Heroic poetry, Oxford University Press, London, W.I. 1968.

72. Kamil Zvelebil - The smile of Murugan, (copy right) E.J.Brill, Leiden, Netherlands, 1973

73. Kanakasabhai, V. - The Tamils Eighteen Hundred Years ago, S.I.S.S.W. Publishing society, Madras-1, 1966.

74. Krishnaswamy Aiyangar, Dr S - Seran Vanji, Printed by The Superintendent, Cochin Government, Ernakulam, 1940.

75. Mangala Murugesan, N K - Sangam Age, Thendral Pathippakam, Rayappettai, Madras-14, 1982

76. Ramachandra Dikshithar, V.R - War in Ancient India, Macmillan and Co., Madras, 1944.

77. Sathianathier, R. - History of India, Vol.I. S.Viswanathan Pvt Ltd., Madras - 31, 1964.

78. Sesha Aiyar, K. G. - Cera Kings of the Sangam period.

79. Sesha Ayengar, T. R. - Dravidian India, Asian Educational services, New Delhi , 1982.

80. Sivaraja Pillai, K. N. - The Chronology of the Early Tamils, Asian Educational Services, New Delhi, 1984.

81. Smith, V. A. - Early History of India.

82. Somasundaram Pillai, J.M. - Two thousand years of Tamil Literature, S.I.S.S.W. Publishing Society, Madras, 1959.

83. Srinivas Iyengar, P.T. - History of the Tamils, C. Coomaraswamy Naidu & Sons, Madras 1929.

84. Subrahmanya Aiyar, K.V. - Historical Sketches of Ancient Dekhan - I, The Modern Printing Works, Mount Road, Madras, 1917.

85. Subrahmanian, N. - Sangam Polity, Ennes Publications, Madurai, 1980.

86. Annual Report - 1918.

87. Annual Report - 1921.

88. Annual Report - 1932-33.

89. Epigraphia Carnatika, Vol.I.

90. South Indian Inscriptions, Vol.VII.



பெயரடைவு

அஃதை - அகுதை, *352*
அகுதை, *352-353*
அஞ்சி-அதியமான் நெடுமானஞ்சி, *304-316*
அண்டிரன்-ஆய்அண்டிரன், *268-269*
அதிகமான்-அதியமான், *315*
அதிகன்-அதியமான், *306*
அதிகன்-வெளியன்வேண்மான்ஆய் எயினன், *263-266*
அதிகன்-பாண்டிநாட்டுக்குறுநில மன்னன், *340-342*
அதியமான் நெடுமானஞ்சி, *304-316*
அதியமான் பொகுட்டெழினி, *316-317*
அதியர்கோமான் அஞ்சி-அதியமான் நெடுமானஞ்சி, *306*
அந்துவன்-அந்துவஞ்சேரல் இரும்பொறை, *68*
அம்பர்கிழவோன்-அருவந்தை, *375*
அம்பர்கிழான் அருவந்தை, *375*
அருமன்-ஆதியருமன், *375-376*
அவியன், *353-354*
அழிசி, *343-344*
அழுந்தூர்வேள் திதியன், *284-286*
அள்ளன், *376*
அறிவுடைநம்பி, *186-187*
அறுகை, *294-295*
அன்னி, *347-349*
ஆட்டனத்தி, *215*
ஆடுகோட்பாட்டுச்சேரலாதன், *124-128*
ஆதன், *60*
ஆதனவினி, *60*
ஆதனுங்கன், *364-365*
ஆதனெழினி, *281-283*
ஆதி-மல்லிகிழான் காரியாதி, *325-326*
ஆதியருமன், *375-376*
ஆமூர் மல்லன், *195*
ஆய் அண்டிரன், *268-269*
ஆய் எயினன்- வெளியன் வேண்மான், *263-266*
ஆவிக்கோ, *258*
ஆவியர், *258*
ஆவியர்கோ-பேகன், *260*
ஆவியர்பெருமகன்-பேகன், *260*
இமையவரம்பன் செங்குட்டுவன், *75-76*
இமையவரம்பன் நெடுஞ்சேரலாதன், *73-80*
இருங்கோவேண்மான், *171-172; 279*
இருங்கோவேள், *275-279*
இலங்கைகிழவோன்-ஒய்மான் வில்லியாதன், *358*
இளங்கண்ணரக்கோ, *339*
இளங்குமணன், *298*
இளஞ்சேட்சென்னி, *197-202*
இளஞ்சேரல் இரும்பொறை, *128-133*
இளம்பழையன் மாறன், *183-184*
இளம்பெருஞ்சென்னி, *198-199*
இளவிச்சிக்கோ, *346*
இளவெளிமான், *266*
இளையர் பெருமகன் அழிசி, *343-344*
இளையர்பெருமகன் நள்ளி, *338*

இளையர் பெருமகன் புல்லி, *365-366*
ஈர்ந்தூர்கிழான் தோயன்மாறன், *377-378*
உக்கிரப்பெருவழுதி, *188-189*
உதியன், *59*
உதியஞ்சேரல், *62-67*
உதியஞ்சேரலாதன், *60*
உருவப் பல்தேர் இளையோன் சிறுவன்- சோழன் கரிகால் பெருவளத்தான், *202*
எயினன்-வெளியன் வேண்மான் ஆய்எயினன், *263-266*
எருமை-எருமையூரன், *267*
எருமையூரன்-*267*
எவ்வி-வேளெவ்வி, *286-289*
எழினி-அதியமான் நெடுமானஞ்சி, *304-316*
எழினியாதன்-வாட்டாற்று எழினியாதன், *283-284*
எறைக்கோன், *326*
ஏனாதி திருக்கிள்ளி-மலையமான் சோழியவேனாதி, *324*
ஒல்லையூர்கிழான்மகன் பெருஞ்சாத்தன், *378*
ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், *160-162*
ஓய்மான் நல்லியக்கோடன், *355-358*
ஓய்மான் வில்லியாதன், *358*
ஓரி-வல்வில்ஓரி, *301-303*
ஓவியர்பெருமகன்-ஓய்மான் நல்லி யக்கோடன், *355-358*
கட்டி, *367-368*
கடம்பன், *60*
கடம்பின் பெருவாயில் நன்னன்-நன்னன்வேண்மான், *261-263*
கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன், *103-120*
கடலன், *295-296*
கடியநெடுவேட்டுவன் என்ற பண்ணி, *339-340*
கண்டீரக்கோப் பெருநள்ளி, *336-339*
கண்ணன்எழினி, *352*
கணையன்-கணைக்கால் இரும்பொறை, *137-138*
கரிகால்-கரிகால் பெருவளத்தான், *202-221*
கரிகால் வளவன், *216*
கரிகாலன், *202-221*
கரும்பனூர் கிழான், *354-355*
கருங்கைஒள்வாள் பெரும்பெயர்வழுதி, *157-158*
கழுவுள், *298-300*
கள்வர்கோமான்புல்லி, *365-367*
களங்காய்க்கண்ணி நார்முடிசேரல், *98-103*
காரி-மலையமான் திருமுடிக்காரி, *317-322*
காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி, *230-232*
கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி, *188-189*
கிடங்கிற்கோமான்-ஓய்மான் நல்லி யக்கோடன், *357*
கிள்ளி, *193*
கிள்ளிவளவன், *237-250*
குட்டுவன், *59*
குட்டுவன் இரும்பொறை- தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, *128*
குடக்கோ, *59*
குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை, *128-133*
குடக்கோ நெடுஞ்சேரலாதன், *73-80*
குடவர்கோ, *59*
குடவர்கோ-ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், *125*

குடவர்கோமான், 59
குடவர்கோமான் நெடுஞ்சேரலாதன்- இமையவரம்பன், 73-80
குடுமி, 153-157
குடுமிக்கோமான், 156
குமணன், 296-298
குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமா வளவன்-சோழன் கரிகால் பெருவளத்தான், 217-221
குறிஞ்சிக்கோமான்-ஓய்மான் நல்லியக்கோடன், 357
குறுநில மன்னர், 293
கொடுமுடி, 378-379
கொண்கானங்கிழான் நன்னன் உதியன், 329-332
கொண்கான நன்னன்-நன்னன் உதியன், 329-332
கொல்லிப்பொருநன்-ஓரி, 302
கோக்கோதை மார்பன், 133-134
கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை, 90-98
கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான், 71
கோடைப் பொருநன் பண்ணி-கடியநெடுவேட்டுவன், 339-340
கோதை-சேரமான் குட்டுவன் கோதை-133-134
கோதைமார்பன், 133-134
கோப்பெருஞ்சோழன், 232-236
கோவற்கோமான்- மலையமான் திருமுடிக்காரி, 318
சிறுகுடிகிழான் பண்ணன், 379-380
சீறூர் மன்னர், 371-375
சீறூர் மன்னன், 372-374
செல்லிக்கோமான் ஆதனெழினி, 281-283
செல்வக்கடுங்கோ வாழியாதன், 80-83
செழியன், 165-167
சென்னி, 193
சேட்சென்னி நலங்கிள்ளி-சோழன் நலங்கிள்ளி, 223-230
சேரநாட்டுக் குறுநில மன்னர்கள், 293-294
சேரநாட்டு வேளிர்கள், 258
சேரமான், 59
சேரமான் அந்துவஞ்சேரல் இரும்பொறை, 67-68
சேரமான் கடலோட்டிய வேல்கெழு குட்டுவன், 103-120
சேரமான் கணைக்கால் இரும்பொறை, 135-140
சேரமான் கருவூர்எறிய ஒள்வாள் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை, 61-62
சேரமான் குட்டுவன் கோதை, 133-134
சேரமான் குடக்கோச்சேரல் இரும்பொறை-128-133
சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன், 73-80
சேரமான் கோக்கோதைமார்பன், 133-134
சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை, 69-71
சேரமான் சிக்கற்பள்ளித் துஞ்சிய செல்வக்கடுங்கோ வாழியாதன், 80-83
சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதன், 80-83
சேரமான் பாழூர் எறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி, 197-202
சேரமான் பாலைபாடிய பெருங்கடுங்கோ, 123-124

சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை, *121-123*
சேரமான் பெருஞ்சேரலாதன், *71-73*
சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன், *60-61*
சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறை, *90-98*
சேரமான் முதியர்ப்பேணிய உதியஞ்சேரல், *62-67*
சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை, *90-98*
சேரர், *59*
சேரல், *59*
சேரன், *59*
சேரன் மாந்தரஞ்சேரல் இரும்பொறை, *90-98*
சோழநாட்டுக் குறுநில மன்னர்கள், *342-343*
சோழநாட்டுப் பிடவூர்கிழார்மகன் பெருஞ்சாத்தன், *281*
சோழநாட்டு வேளிர்கள், *279-280*
சோழர், *193*
சோழர் மறவன்-போர் கிழவோன் பழையன், *382-383*
சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, *222-223*
சோழன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னி, *223-230*
சோழன் உருவப் பல்தேர் இளஞ்சேட்சென்னி, *197-202*
சோழன் கரிகால் பெருவளத்தான், *202-221*
சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன்-கரிகால் பெருவளத்தான், *202-221*
சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன், *237-250*
சோழன் செங்கணான், *135-140; 250*
சோழன் செருப்பாழியெறிந்த இளஞ்சேட்சென்னி, *197-202*
சோழன் நலங்கிள்ளி, *223-230*
சோழன் நலங்கிள்ளி தம்பி மாவளத்தான், *236-237*
சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி, *197-202*
சோழன் போர்வைக்கோப் பெருநற்கிள்ளி, *195-196*
சோழன் முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளி, *196-197*
சோழன் வேற்பல்தடக்கைப் பெருவிறற்கிள்ளி, *221-222*
தகடூர்எறிந்த சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை, *121-123*
தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், *162-177*
தழும்பன், *381-382*
தாமான் தோன்றிக்கோன், *300-301*
தித்தன், *193-195*
தித்தன் வெளியன், *194*
திதியன்-அழுந்தூர்வேள், *284-286*
திதியன்-பொதியிற்செல்வன், *269*
திருமாவளவன், *202-221*
திரையன்-தொண்டைமான் இளந்திரையன், *360-364*
தென்னவன்மறவன்-கோடைப் பொருநன்பண்ணி, *340*
தேர்வண்கிள்ளி-கோப்பெருஞ் சோழன், *232*
தேர்வண்மலையன்-மலையமான் திருமுடிக்காரி, *317-322*
தொண்டைமான், *360*
தொண்டைமான் இளந்திரையன், *358-364*

தொண்டையர், *358-360*
தொண்டையோர், *360*
தொல்குடி மன்னன், *374*
தோன்றிக்கோ-தாமான் தோன்றிக்கோன், *300-301*
நந்தர், *6-9*
நந்தன், *8*
நல்லடி-வல்லங்கிழவோன், *384-385*
நல்லியக்கோடன்-ஓய்மான், *355-358*
நலங்கிள்ளி, *223-230*
நலங்கிள்ளி சேட்சென்னி-சோழன்நலங்கிள்ளி, *223-230*
நள்ளி-கண்டீரக்கோப்பெருநள்ளி, *336-339*
நற்றேர்ப்பெரியன்-பொறையாற்று கிழான், *349-350*
நன்னன்உதியன்-கொண்கானங் கிழான், *329-332*
நன்னன்சேய் நன்னன், *290-291*
நன்னன் வேண்மான், *261-263*
நாஞ்சில் பொருநன் வல்வேல் கந்தன், *333-334*
நாஞ்சில் வள்ளுவன்-வல்வேல் கந்தன், *333-334*
நார்முடிச் சேரல், *98-103*
நாலைகிழவன் நாகன், *382*
நிலந்தந்த பேருதவி நெடியோன், *151*
நிலந்தரு திருவின்நெடியோன், *145, 151*
நிலந்தரு திருவின் பாண்டியன், *143-153*
நீடூர் கிழவோன் எவ்வி-வேளெவ்வி, *286-289*
நெடியோன்-நிலந்தரு திருவின் பாண்டியன், *143-153*
நெடுங்கிள்ளி, *230-232*
நெடுங்கைவேண்மான், *280-281*
நெடுஞ்செழியன், *162-177*
நெடுஞ்சேரலாதன், *73-80*
நெடுந்தேர்ச் செழியன், *170*
நெடுமானஞ்சி-அதியமான், *304-316*
நெடுமிடல்-அதியமான் நெடுமிடல் அஞ்சி, *305*
நெடுவேளாதன், *281*
நெடுவேளாவி, *258-259*
நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி, *197-202*
பசும்பூட் செழியன், *166-167*
பசும்பூட் பாண்டியன், *166-167*
பசும்பூண் வழுதி, *166-167*
பண்ணன்-சிறுகுடிகிழான், *379-380*
பண்ணன்-வல்லார்கிழான், *385*
பரதவர் கோமான் மத்தி, *350-352*
பல்குன்றக் கோட்டத்துச் செங்கண்மாத்துவேள் நன்னன் சேய் நன்னன், *290-291*
பல்சாலை முதுகுடுமி, *157*
பல்யானைச் செல்கெழு குட்டுவன், *83-90*
பழையன்-போர்கிழவோன், *382-383*
பழையன்-மோகூர் மன்னன், *334-336*
பழையன்மாறன், *182-183*
பன்னாடு தந்த பாண்டியன் மாறன்வழுதி, *189-191*
பாண்டிநாட்டுக் குறுநில மன்னர்கள், *332-333*
பாண்டியநாட்டு வேளிர்கள், *267*
பாண்டியர், *143*
பாண்டியன் அறிவுடைநம்பி, *186-187*
பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், *184-185*
பாண்டியன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன், *179-182*
பாண்டியன் கருங்கை ஒள்வாள் பெரும்பெயர்வழுதி, *157-158*
பாண்டியன் கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி, *188-189*

பாண்டியன் கூடல்ஆரத்துத் துஞ்சிய மாறன்வழுதி, *185-186*
பாண்டியன சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன், *187*
பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், *162-177*
பாண்டியன் நெடுஞ்செழியன், *162-177*
பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி, *153-157*
பாண்டியன் பன்னாடுதந்த மாறன் வழுதி, *189-191*
பாண்டிபன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி, *177-178*
பாரி, *270-275*
பாரிவேள், *270-275*
பிட்டங்கொற்றன், *326-328*
பிட்டன், *326-328*
பிண்டன், *328-329*
புல்லி-கள்வர்கோமான், *365-367*
பூதப்பாண்டியன், *160-162*
பூழியர்கோ-பல்யானைச் செல்கெழுகுட்டுவன், *88*
பெண்கொலைபுரிந்த நன்னன்-விச்சிக்கோ, *346-347*
பெரியன்-பொறையாற்று கிழான் நற்றேர்ப் பெரியன், *349-350*
பெருங்கோக்கிள்ளி-கோப் பெருஞ்சோழன், *232-236*
பெருஞ்சேரல் இரும்பொறை, *121-123*
பெருஞ்சோழன்-கோப் பெருஞ்சோழன், *232-236*
பெருந்திருமாவளவன்-கரிகால் பெருவளத்தான், *217-221*
பெரும்பூட்சென்னி-சோழன் செங்கணான், *135-140; 250*
பெருமாவிலங்கைத் தலைவன்-ஓய்மான் நல்லியக் கோடன், *357*
பெருவழுதி, *177-178*
பேகன், *260-261*
பொகுட்டெழினி, *316-317*
பொதியிற்செல்வன் திதியன், *269*
பொருநன்-வேள், *291*
பொறையன், *59*
பொறையாற்றுகிழான் நற்றேர்ப்பெரியன், *349-350*
போர்கிழவோன் பழையன், *382-383*
மத்தி-பரதவர்கோமான், *350-352*
மருதம்பாடிய இளங்கடுங்கோ, *124*
மல்லிகிழான் காரியாதி, *325-326*
மலையமான்சோழியவேனாதி திருக்கண்ணன், *322-325*
மலையமான் சோழியவேனாதி திருக்கிள்ளி, *324*
மலையமான் திருமுடிக்காரி, *317-322*
மலையன்-மலையமான் திருமுடிக்காரி, *317-322*
மழவர்பெருமகன்-அதியமான், *307*
மழவர் பெருமகன்-ஓரி, *302*
மழவர் மெய்ம்மறை-ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், *127*
மழவர்மெய்ம்மறை-பல்யானைச் செல்கெழுகுட்டுவன், *88*
மாந்தரஞ்சேரல் இரும்பெறை, *90-98*
மாந்தரம் பொறையன் கடுங்கோ, *90-98*
மாந்தரன், *91*
மாவளத்தான், *236-237*
முக்காவல்நாட்டு ஆமூர்மல்லன், *195*
முசுண்டை, *383-384*
முடத்திருமாறன், *158-159*
முதுகுடிமன்னர், *373-374*
முந்நீர்விழவின் நெடியோன், *146-148*
முள்ளூர்ப்பொருநன்-மலையமான், *318*
முள்ளூர் மன்னன்-மலையமான், *318*

மூதிலருமன், 375-376
மூவன், 296
மோகூமன்னன் பழையன், 334-336
மோரியர், 6-10; 200
யவனர், 79-80
யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை, 90-98
வடிம்பலம்ப நின்ற பாண்டியன், 146-148
வடுகா, 10; 197-200
வடுகர்பெருமகன் எருமை, 267
வயவன், 384
வல்லங்கிழவோன் நல்லடி, 384-385
வல்லார்கிழான் பண்ணன், 385
வல்வில்ஓரி, 301-303
வல்வேலகந்தன்-நாஞ்சில்பொருநன், 333-334
வல்வேற்சாத்தன்-ஓலலையூர்கிழான் மகன் பெருஞ்சாத்தன், 378
வாட்டாற்று எழினியாதன், 283-284
வாணன், 385-386
வாழியாதன், 60
வானவரம்பன், 59
வானவன், 59
வானவன் மறவன்- பிட்டங் கொற்றன், 327
விச்சி-விச்சிக்கோ, 344-346
விச்சிக்கோ நன்னன், 346-347
விச்சியர் பெருமகன்-விச்சிககோ, 344-346
விரான், 386
வில்லியாதன்-ஓய்மான, 358
வீரைவேண்மான்வெளியன் தித்தன், 194-195; 289-290
வெளிமான், 266
வெளியன் வேணமான் ஆய் எயினன், 263-266
வேங்கடங்கிழவோன்-ஆதனுங்கன, 364-365
வேங்கைமார்பன், 339
வேள்பாரி, 270-275
வேளாவிக்கோ, 258
வேளாவிக்கோமான பதுமன், 259-260
வேளிர், 253-292
வேளெவ்வி, 286-289
வையாவிககோப பெருமபேகன், 260-261